POLITICAL SCIENCE

VADUVUR. K. DURAISWAMI AYYANGAR, B. A.
PRINCIPAL & FOUNDER.

THE ORIENTAL HOME UNIVERSITY
TRIPLICANE, MADRAS.

Accn no: 121160
Pages : 464

(All rights reserved)

1928.

அரசியல் தத்துவ : : : சாஸ்திரம்

வடுவூர். கே. துரைஸாமி ஐயங்கார் அவர்கள் பி. ஏ.
ஸ்தாபகர் & தலைவர்.
சுதேச மஹா சர்வகலாசாலை
திருவல்லிக்கேணி, சென்னை.

(எல்லா உரிமையும் ஆசிரியருடையது)

1928.

முக்கியக் குறிப்பு

தமிழ்ப் பாஷைக்கு வேண்டிய சில புதிய எழுத்துக்கள்.

ஸம்ஸ்கிருதம் முதலிய இதர பாஷைகளில் க, ச, ட த, ப என்ற ஐந்து எழுத்துக்களில் ஒவ்வொன்றுக்கும் நான்குவிதமான ஓசைகளும், நான்குவிதமான வெவ்வேறு எழுத்துக்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் கடின மான ஓசை, கடினத்தில் அழுத்தமான ஓசை, மிருதுவான ஓசை, மிருதுவில் அழுத்தமான ஓசை என்று அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆனல், தமிழில் 'க' முதலிய ஷை ஐந்து எழுத்துக்கள் பெரும்பாலும் அழுத்தமாகவே உச்ச ரிக்கப்படுகின்றன. அவைகளை மிருதுவாக உச்சரிப்பதற் குத் தனியான வேறு எழுத்துக்கள் இல்லை. இங்கிலீஷ் சாஸ்திரங்களில் உபயோகிக்கப்பட்டுள்ள பெயரெழுத்து கள் பலவற்றை நாம் தமிழில் அப்படியே எடுத்தாள நேரு மாதலாலும், அவைகளில் ஷை எழுத்துக்கள் மிருதுவாய் உபயோகிக்கப் பட்டிருக்கலாமாதலாலும், நாம் தமிழில் ஷை ஐந்து எழுத்துக்களுக்கும் மிருதுவான எழுத்து ஒவ்வொன்ருகிலும் ஏற்படுத்திக் கொள்ளாவிடில், தமிழ் உச்சரிப்பு கேட்பதற்கு விகாரமாயிருப்பதோடு, அர்த்த மாறுபாட்டிற்கும் இடங் கொடுக்குமாதலால், வடிவத்தில் அநேகமாய்த் தமிழ் எழுத்துக்களைப் போலவே இருக்கும் கிரந்த எழுத்துக்களிலிருந்து நாம், அடியில் குறிக்கப் படும் ஐந்தெழுத்துக்களை எடுத்து உபயோகிப்போம்:—

கடினமானது.	மிருதுவானது.
க (K)	ഗ (g)
ச (Ch,s)	ஜ (j) இது இப்போதே, உபயோகத்தில் இருக்கிறது.
ட (T)	ഡ (D)
த (Th)	ദ (Dh)
ப (P)	ബ (B)

(2) இன்னம், இங்கிலீஷ் பாஷையில் "எப்" (f) "ஸெட்" (z) என்று, தமிழில் இல்லாத பிரத்தியேகமான இரண்டு அக்ஷரங்கள் இருக்கின்றன. தமிழில் "ப்" என்ற எழுத்தை நாம் கடினமாய் உச்சரிக்கிறோம். அப்படி உச்சரிக்கையில், இரண்டு உதடுகளையும் அழுத்தமாய் ஒன்றாகச் சேர்த்து, வாயை மூடிப் பிறகு உதடுகளைத் திறந்து காற்றை வெளியில் விடுகிறோம். ஆனால் இந்த "எப்" (f) என்ற எழுத்தை உச்சரிப்பதற்கு, நாம் வாயை மூட வேண்டியதில்லை. இரண்டு உதடுகளையும் சேர்த்துச் சுருக்கி, நடுவில் ஏற்படும் இடைவெளியினால், காற்றை மாத்திரம் வெளியில் விட வேண்டும். அதை, "ப்" என்ற எழுத்தின் குறுக்கம் என்றே சொல்லவேண்டும். ஆகையால் நாம் எழுதுகையில், "ப்/2" என்ற குறிப்பை உபயோகித்தால், அதை "எப்" (f) என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

3. தமிழில் "ஸ்" என்ற எழுத்தை நாம் நடுநாவினால் உச்சரிக்கிறோம். ஆனால் "ஸெட்" (z) என்ற எழுத்தை நுனி நாவினால் உச்சரிக்க வேண்டுமாதலால், அதை, "ஸ்" என்ற எழுத்தின் குறுக்கமாக பாவிக்கவேண்டும்.

நாம் இனி எழுதுகையில் "ஸ்/2" என்ற குறிப்பை உபயோகித்தால், அதை, "ஸெட்" (z) என்று வைத்துக் கொள்ளவேண்டும்.

4. இவையன்றி, இன்னம், இங்கிலீஷில், உயிரெழுத்துக்களிலும் அதிகப்படியான ஓர் ஓசை இருக்கிறது. அது "அ" என்று குறுக்கிச் சொல்வதற்கும், "ஆ" என்று நீட்டிச் சொல்வதற்கும் நடுமத்தியான ஓசை. ஆடுமாடுகள் "மா" என்று கத்தும்பொழுது "ஆ" என்ற நீண்ட ஓசை குறைந்து துவனிக்கிறது. அதை "ஆ" என்பதன் குறுக்கமென்றே கருதவேண்டும். இனி நாம் எழுதுகையில் "ஆ/2" என்ற குறிப்பை உபயோகித்தல், அது "ஆ"வின் குறுக்கமென்று கருதவேண்டும்.

மேலே குறிக்கப்பட்ட எப், ஸெட், ஆவின்குறுக்கம் ஆகியவைகளை இங்கிலீஷ் கற்றவர்களிடம் கேட்டுத்தெரிந்து கொண்டால் அவை வெகுசுலபமாய் மனத்தில் பதிந்துபோம்.

நாம் புதியவையாய்ச் சேர்த்துள்ள மிருதுவான எழுத்துக்களின் உயிர் மெய்யெழுத்துக்களை அடியில் காண்க.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ௦௦.



விஷய அட்டவணை.

		பக்கம்.
முன்னுரை.		1
1.	அரசு	17
2.	அரசின் துவக்கம்; தவறான சில கொள்கைகள்	44
3.	அரசு உண்மையில் எப்படி உண்டாயிற்று	73
4.	அரசின் அதிகார வரம்பு	82
5.	பிரஜையின் சுதந்திரம்	115
6.	பல அரசுகளின் சம்பந்தம்	141
7.	அரசாங்கத்தின் வடிவம்	169
8.	அரசியல் அதிகாரப் பிரிவினை	190
9.	சட்ட சபை	208
10.	துரைத்தன நிர்வாகம்	243
11.	நீதி பரிபாலனம்	284
12.	ஓட்டுரிமையும் பிரதிநிதித்துவமும்	298
13.	இராஜீயக் கட்சிகள்	324
14.	பெடரால் அல்லது ஐக்கிய அரசாங்கம்	338
15.	குடியேற்ற நாடுகள்	354
16.	ஸ்தல சுய ஆட்சி	365
17.	இராஜ்ய பரிபாலனம்	372
18.	ஐரோப்பிய அரசியலின் சரித்திரம்	388
19.	இந்தியாவின் பரிபாலனம்	426

ஓம்!

அரசியல் தத்துவம்.

முன்னுரை

இக்காலத்தில் இந்தியா என்று குறிக்கப்படும் நமது நாடு, வடக்கிலுள்ள ஹிமாலய மலையிலிருந்து தெற்குக் கோடியிலுள்ள கன்னியாகுமரி வரையில் நீண்டதாயும், கிழக்கிலுள்ள வங்காளக் குடாக்கடலிலிருந்து மேற்கிலுள்ள அராபிக்கடல் வரையில் அகன்றதாயும் இருக்கின்றது. இந்த விசாலமான நாடு பழைய காலத்தில் ஐம்பத்தாறு தேசங்களாய்ப் பிரிந்திருந்து, வெவ்வேறு அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இத்தனை தேசங்களும் ஒன்று சேர்ந்த மொத்த பாகத்தையே நம் முன்னோர்கள் பூலோகமென்று குறிப்பிட்டு வந்ததன்றி, இதன்கீழ் ஆறு உலகங்களும், இதன்மேல் ஏழு உலகங்களும் இருந்து வருவதாகக் கூறியிருக்கின்றனர். அவர்களிருந்துவந்த காலத்தில் நமது நாடெங்கும் காடுகளும், ஆரணியங்களுமே மயமாக நிறைந்திருந்தன. இரஸ்தாக்கள் அநேகமாய் இல்லையென்றே கூற வேண்டும். இரயில் வண்டிகளும், மோட்டார் வண்டிகளும் உண்டாகவில்லை. கடல்களில் அதிக தூரம் சென்று வருவதற்கு அநுகூலமான நீராவியந்திரக் கப்பல்கள் முதலிய அரிய சாதனங்களும் அக்காலத்தில் தோன்றவில்லை. ஆகாயத்தில் பறந்து செல்லத்தக்க விமானங்கள் முதலியவை சாதாரணமாய்ப் பழக்கத்திலில்லை. ஒரு மனிதர் தமது ஊரை விட்டு பக்கத்திலுள்ள அயலூருக்குச் செல்வதே மகா பிரயாசையான காரியமாக இருந்தது. இன்னம் அதிக

தூரதேசங்களுக்குப் பிரயாணம் செய்ய வேண்டுமானல், மனிதர் மாட்டு வண்டிகளின் மூலமாயும், கால் நடையாக நடந்தும் நீண்டகாலம் செல்லவேண்டும். இவைபோன்ற விவரிக்க இயலாதவையான எத்தனையோ இடையூறுகளையும் அசௌகரியங்களையும் மேற்கொண்டு, நம் முன்னோர் அக்காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த வசதிகளுக்கு ஏற்றபடி, நிரம்பவும் ஆச்சரியகரமான திறமையோடும், வல்லமையோடும் எண்ணிறந்த சாஸ்திரங்களையும் புராணங்களையும் எழுதி நமக்கு உதவியிருக்கின்றனர். ஆயினும், நம் முன்னோர் தம்மால் கண்டு பிடிக்கப்பட்டவைகளே கடைசி முடிவானவைகள் என்ருவது, அவைகளைத் தவிர வேறு புதிய விஷயங்கள் உலகத்தில் இல்லையென்ருவது செருக்குடன் கூறவில்லை. நாம் இதுவரையில் கற்றுக் கொண் டிருப்பது எவ்வளவு, இன்னமும் நாம் கற்றுக் கொள்ள இருப்பது எவ்வளவு என்பதை நம் முன்னோர் எவ்வளவு அழகாகச் சொல்லி யிருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந்த உலகத்திலிருந்து நாம் ஒரு பிடி மண்ணை எடுத்தால், அது எவ்வளவாகுமோ, அவ்வளவே நாம் கற்றுக்கொண் டிருப்பது என்றும், ஒரு பிடி மண்ணைவிட இந்த உலகம் எத்தனை மடங்கு பெரியதோ, அத்தனை மடங்கு நமக்குத் தெரியாத விஷயங்கள் இருக்கின்றன வென்றும் நம் முன்னோர் கூறியிருக்கின்றனர். அதுவுமன்றி, "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகை யாற்றுனே" என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர். காலம் செல்லச் செல்ல, பழைய விஷயங்கள் மாறுபட்டுக் கொண்டே போவதும், புதிய விஷயங்கள் தோன்றுவதும் சகஜமானவைகளே யென்றும், அதை எவரும் குற்றமாகக் கொள்வது சரியல்லவென்றும் அவர்

கள் கூறியிருக்கின்றனர். எனவே, நம் முன்னோர் நமது பழைய நூல்களில் கூறியுள்ள விஷயங்களுள் பல இக்காலத்திற்குப் பொருந்தாதவையாய் இருக்கலாம்; அல்லது, காலக்கிரமத்தில் பல காரணங்களினால் மாறுபட்டுப் போயிருக்கலாம்; சில விஷயங்கள் இன்னமும் உண்மையாகவே நிலைத்திருக்கலாம். நமது முன்னோர் கூறியுள்ளவைகள் சரியானவைகளா யிருந்தாலும், தவறானவைகளா யிருந்தாலும் அவைகளையே இன்னமும் நாம் பின்பற்றி நடக்க வேண்டுமென்ற குருட்டபிமானம் கொண்டு பிடிவாதமாய் ஒழுகுவது நமக்கே பெருத்த நஷ்டமாக முடியும். அது வன்றி, இப்பொழுது நமக்குக் கிடைக்கும் அந்நிய நாட்டாருடைய நூதன நூல்களையும், கொள்கைகளையும் கண்டு நமது நூல்களையும் கொள்கைகளையும் நாம் அடியோடு வெறுத்துப் புறக்கணிப்பதும், அவைகளை உற்பத்தி செய்த நம் முன்னோரைச் சிறுமைப்படுத்தித் தூற்றுவதும் அக்கிரமச் செய்கைகளாகும். ஆகவே நாம், நம்மிடமுள்ள விசேஷமான பழைய அம்சங்களை விடாமல், புதிய நாகரிகத்தையும் அநுசரித்து முன்னேற்ற மடைந்துகொண்டே போவதுதான் உசிதமான கொள்கையாகும். அதுவே நமக்கு நன்மை பயக்கும் சாதனமுமாகும்.

இதற்கு முன் நம் இந்தியா ஐம்பத்தாறு தேசங்களாய்ப் பிரிந்திருந்த தென்று நாம் குறித்தோ மல்லவா. அந்தப் பிரிவுகளெல்லாம் இப்போது மாறுபட்டுப் போய் விட்டன. ஷை தேசங்களில் சிலவற்றைத் தவிர, மற்றவைகள் எவ்விடத்தில் இருந்தன என்ற குறிப்பே நமக்குத் தெரியாமல் போய்விட்டது. அதுவுமன்றி, இந்தியாவிற்கு வடக்கெல்லையாக அமைந்திருக்கும் ஹிமாலய மலைக்கு அப்புறத்தில், நம் இந்தியாவைப்போல இன்னமும் பல பெரிய

தேசங்க ளிருக்கின்றன வென்பதை நாம் இப்பொழுது தெரிந்து கொள்ளுகிறோம். இத்தனை பெரிய தேசங்களும் சேர்ந்த மொத்தத்தை ஆசியாகண்டமென்று குறிக்கிறோம். பிரம்மாண்டமாகப் பரவியிருப்பதான நம் ஆசியா கண்டத்தை ஒட்டினாற்போல இதற்கு மேற்கில் ஐரோப்பா என்ற பெரிய கண்டமும், தென்மேற்கில் ஆப்பிரிக்கா என்ற கண்டமும் இருக்கின்றன. நாம் இருக்கும் இந்த மண்ணுலகம் கோழிமுட்டையைப்போல அண்டாகாரமாய் இருப்பதோடு, இது ஆகாயவெளியில் அந்தரத்தில் அப்படியே நின்று கொண்டிருக்கிறது. இதன் எல்லாப் பக்கங்களிலும் சமுத்திரங்களும் பெரிய நிலபாகங்களான கண்டங்களும் நிறைந்திருக்கின்றன. நாம் மேலே குறித்த ஐரோப்பா, ஆப்பிரிக்கா என்ற கண்டங்களுக்கு அப்பாலுள்ள விசாலமான கடலைக் கடந்து நாம் இன்னம் வெகு தூரம் மேற்கில் சென்றால், அவ்விடத்தில் வட அமெரிக்கா தென் அமெரிக்கா என்ற இரண்டு கண்டங்கள் இருக்கின்றன. அவ்விடங்களிலிருந்து நாம் அப்படியே சென்றால் ஆஸ்டிரேலியா என்ற ஒரு கண்டமும் அதைச் சூழ்ந்த பல பெரிய தீவுகளும் இருப்பதைக் காணலாம். அவைகளிலிருந்து நாம் மேலும் பிரயாணம் செய்தால், முடிவில், நாம் நமது ஆசியா கண்டத்திற்கே வந்து சேர்ந்துவிடுவோம். ஆகவே, நாம் இதற்குமுன், ஐம்பத்தாறு தேசங்களைக் கொண்டதான நம் இந்தியாவோடு மண்ணுலகம் முடிந்து போவதாக எண்ணியதுபோக, இந்த இந்தியாவைப்போன்ற பல தேசங்களைக் கொண்டதான ஆசியா கண்டமும், இன்னமும், அதைப்போன்ற ஐந்து கண்டங்களும், இடையிடையில் அபாரமாகப் பரவியுள்ள மகா சமுத்திரங்களும் ஒன்று சேர்ந்த அண்டாகாரமான பிரதேசமே நமது

பூலோகமென்பதை நாம் இப்பொழுது தெரிந்துகொள்ளுகிறோம். இவ்வளவு பிரமாதமான புதிய விஷயங்களை நாம் தெரிந்து கொள்வதிலிருந்தே, நாம் உடனே நமது முன்னோர்கள் மூடர்களென்றுவது, இதற்குமுன் இந்தியா ஐம்பத்தாறு தேசங்களாய்ப் பிரிந்திருந்ததாக அவர்கள் கூறியிருப்பது பொய்யென்றுவது தீர்மானித்துக்கொள்வது சரியல்ல.

அது நிற்க, நாம், பண்டைக்காலத்திலிருந்த நமது தேசங்களின் ஜனப்பிரிவினைகளை ஆராய்ந்து பார்ப்போமானால், அவைகளும் அந்தக் காலத்து நிலைமைகளுக்குத் தகுந்தபடி நிரம்பவும் திறமையாகவும் சாமர்த்தியமாகவுமே அமைந்திருந்தன. ஒவ்வோர் ஊரிலும் ஏராளமான ஜனங்கள் இருப்பார்களாதலால், அத்தனை மனிதரது தேகபோஷணைக்கும் தேவையான தானியம் முதலியவற்றை உற்பத்தி செய்வதே பெரும்பாகமான முக்கிய காரியமாதலால், ஜனங்களுள் பெரும்பாலோர் பயிர்த்தொழில், கைத்தொழில் முதலியவற்றில் ஈடுபட்டனர். அந்தத் தொழிலே அவர்களுடைய கவனத்தையும், காலத்தையும் பூர்த்தியாகக் கவர்ந்துகொண்டது. ஒவ்வொருவரும் சிற்சில பொருள்களையே உற்பத்தி செய்தனராதலால், அவைகளில் தமக்குத் தேவையான பாகம் போக, அதிகமாய் மிஞ்சியதைப் பிறருக்குக் கொடுத்து, தமக்குத் தேவையான மற்ற பொருட்களை அவர்கள் பெற்றுக்கொண்டனர். இவ்வாறு பண்டங்களை உற்பத்தி செய்வதும் ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்வதும் அதிகரிக்க அதிகரிக்க, இன்னொரு வகுப்பார் தோன்றலாயினர். பற்பல பண்டங்களையும் உற்பத்தி செய்வோரிடம் அதிகமாய் மிஞ்சி நின்றவற்றை யெல்லாம் வாங்கிக் கொணர்ந்து கடை வைத்து அவற்றை விற்கும்

தொழிலை அந்த இரண்டாவது வகுப்பார் செய்யலாயினர். அதனால் எவரெவருக்கு எவ்வெப்பொருள் தேவையோ அவைகளுக்காக, உற்பத்தி செய்வோரான பலரிடம் போய் அலையாமல் ஓரிடத்திலேயே பொருள் கிடைப்பதற்கான வசதி ஏற்பட்டது. இவ்வாறு ஜனங்களுக்குப் பொருள்களும், வியாபாரமும் பெருகப்பெருக, வலியவர் எளியவர்களுடைய உடைமைகளையும் பொருள்களையும் அபகரிக்காமல் காப்பது, ஜனங்களுக்கு அவசியமான இரஸ்தாக்கள் குளங்கள் ஏரிகள் முதலியவற்றை ஏற்படுத்தி நல்ல நிலைமையில் வைப்பது, குற்றவாளிகளை தண்டிப்பது, பகையரசர்களால் ஜனங்களுக்குத் தீங்கு நேராமல் தடுப்பது முதலிய கடமைகள் உண்டாகவே, அவைகளைச் செய்வதற்கு ஒரு வகுப்பார் தோன்றினர். அவர்கள் பொது ஜனங்களுக்குச் செய்துவந்த உதவிகளுக்குப் பிரதிபலனாக, அவர்களுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் பொது ஜனங்கள் வீட்டிற்கு ஒரு சிறியபாகமாகக் கொடுத்து வரலாயினர். அதுவே பிற்காலத்தில் அரசாங்கத்தாருக்குக் குடிமக்கள் செலுத்தும்பகுதிப்பணம். இத்தனை வியவகாரங்களும் பெருகப் பெருக, ஒவ்வொருவரும் நடந்துகொள்ள வேண்டிய நீதிமார்க்கங்களடங்கிய சாஸ்திரங்கள், சட்டதிட்டங்கள் முதலியவை ஏராளமாய்ப் பெருகிப்போயின. அந்தக் காலத்தில் அச்சுயந்திரங்களும், காகிதங்களும் உண்டாகவில்லையாதலால், அவைகளைப் பனை ஓலைகளில் எழுதியோ மனப்பாடம் செய்தோ வைத்துக் காப்பாற்றுந் தொழிலைச் சிலர் செய்ய நேரிட்டது. அவர்கள் அந்த வேலையைச் செய்து, மதசம்பந்தமான நூல்கள், நீதி மார்க்கங்க ளடங்கிய கதைகள், புராணங்கள், காவியங்கள் முதலியவற்றை அபிவிருத்தி செய்துகொண்டே போனார்கள்.

முதல் வகுப்பாரான குடிமக்கள், அல்லது, கைத்தொழி லாளிகள் இரவு பகல் உழைத்துப் பாடுபட்டுத் தங்க ளுடைய அலுவல்களைச் செய்வதே அவர்களுடைய கவ னத்தையும் பொழுதையும் கவர்ந்து கொண்டதாகை யாலும், தங்களுடைய தொழிலை நடத்தும் திறமை அநுபவத்திலேயே ஏற்பட்டுப் போனமையாலும், அக் காலத்தில் கல்வி கற்போர் ஒரு குருவை அடுத்து வெகு காலம் அவருடனிருந்து பாடங்கேட்டுக்கொள்ள வேண்டு மாதலாலும், முதல் வகுப்பினர்களான வியவ சாயிகளுக்கும் கைத்தொழிலாளிகளுக்கும் கல்வி கற்க வேண்டுமென்ற அவசியமும், அவகாசமும், படிப்பில் கவர்ச்சியும் இல்லாமல் போயின. இரண்டாவது வகுப்பின ரான வணிகர்கள் அதே நிலைமையிலிருந்தன ராலும், அவர்கள் வரவு செலவு கணக்கு, கடன் கணக்கு முதலிய வற்றை எழுத வேண்டியவர்களா யிருந்தது பற்றி, அவர்கள் படிப்பிலும் கணக்கிலும் சிறிதளவு பயிர்ச்சி உண்டாக்கிக் கொண்டனர். மூன்றாவது வகுப்பாருக்கு மற்ற இரண்டு வகுப்பினருக்குக் கிடைத்ததைக் காட்டிலும் அதிகமான அவகாசம் கிடைத்தமையால், அவர்களுள் பலர் அதை ஓரளவு கல்வி கற்பதில் பயன் படுத்தினர். ஆனாலும், நான் காவது வகுப்பினரான அந்தணரோ தமது ஆயுட்காலம்முழு தையும் கல்வியாராய்ச்சியிலும், அதன் அபிவிருத்தியிலுமே செலவிட்டு, சமய சாஸ்திரங்கள், தர்ம சாஸ்திரங்கள் முத லிய சகலமான கலைகளையும் உற்பத்தி செய்து அழியாமல் காப்பாற்றி வந்ததோடு, துரைத்தன வியவகாரங்களை நடத் துதல், நீதி நியாங்களை எடுத்துக் கூறுதல் முதலிய முக்கிய மான விஷயங்களில் மூன்றாவதுவகுப்பாருக்கு இன்றியமை யாத துணைவர்களாகவும் குருவாகவும் இருந்ததோடு, தாங்

கள் போதித்த ஆசார ஒழுக்கங்களையும் நீதி நியாயங்களை யும் அநுபவத்திலேயே நடத்திக்காட்ட வேண்டியவர்களாக வும்இருந்தனர். ஆகவே அந்தக்காலத்தில் அந்தணர்* குற்றம் செய்வதென்பதே அரிதாக விருந்தமையால், அவர்களுக்கு தண்டனை ஏற்படாதிருந்தது. அவருக்கு மற்றவரால் துன் பம் நேரிட்டால், துன்ப மியற்றுவோருக்குக் கடுமையான தண்டனையும் கொடுக்கப்பட்டது. இவ்வாறு மனிதர் அவரவர் கள் பின்பற்றிய தொழிலிலிருந்து வெவ்வேறு வகுப்பின ராய் மாறிப் போயினர். ஒரு தொழிலைச் செய்தோர் அதற் குரிய வசதிகள் கருவிகள் முதலியவற்றை ஏராள மாகச் சேகரித்து வைத்திருந்திருப்ப ரென்பது நாம் கூறு மலே விளங்கும். ஒவ்வொரு குடும்பத்திலும் தகப்பனு டன் அவனுடைய பிள்ளைகளும் இளம்பிராயத்திலிருந்தே அவரவர்களுக்குரிய தொழிலைச் செய்து செய்து இயற் கையாகவும், காலக்கிரமத்திலும், சுலபத்தில் அந்தத் தொழிலில் தேர்ச்சிபெற்று வந்தனர். தமது தகப்பனால் அவரவருடைய தொழிலுக்குரிய வசதிகளும் சாதனங்க ளும் தேடி வைக்கப்பட்டிருக்கு மாதலால், எதையும் புதி தாய் உண்டாக்கிக் கொள்ளும் பிரயாசையின்றி பிள்ளைகள் தகப்பனது தொழிலையே காலிற்குக் காலாய்ச் செய்து வந் தனர். ஆகவே தொழிலிலிருந்து வகுப்புகள் உண்டா யின; ஒவ்வொரு வகுப்பாரும் ஒரே தொழிலைப் பரம்பரை யாகச் செய்து வந்தனர். ஆதலால், ஒவ்வொரு வகுப்பாரு டைய நடை உடை பாவனைகள், சாப்பாடு, கல்வி, அறிவு முதிர்ச்சி, ஒழுக்கத் தூய்மை, குணவேறு பாடு, தேக பலம் முதலிய முக்கியமான அம்சங்கள் வேறுபட்டு

---

* "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" திருவள்ளுவர்

நிலைத்துப் போயின. அந்தணருடைய வியவகாரங்கள் யாவும் அவர்களது மூளையின் பலத்தினாலேயே நடைபெற்றன. அரசர்கள் எதிரிகளையும் மற்றவர்களையும் அடக்கியாள்வது முதலிய தங்களது முக்கிய வியவகாரங்களையெல்லாம் தமது புஜபல பராக்கிரமத்தினால் நடத்தினர். வணிகர்கள் அநேகமாய் இரவு பகல் கடைகளில் உட்கார்ந்திருந்தபடி தமது வியாபாரங்களை நடத்தினராதலால், அவர்களுக்குத் தங்கள் இடுப்பின்பலமே அத்தியாவசியமாயிருந்தது. வியவசாயிகளும், கைத்தொழிலாளிகளும் முக்கியமாய் கை கால்களின் வன்மையினாலேயே தங்களது வியவகாரங்களை நிறைவேற்றினர். ஆகவே, நீண்ட பழக்கத்தினாலும், தகப்பனுடைய அங்கங்களின் அமைப்பையும், பலாபலத்தையும் போலவே, அநேகமாய்ப் பிள்ளைகளுக்கும் ஷை அங்கங்கள் அமைகின்றனவாதலால், ஒவ்வொரு வகுப்பாருக்கும் முக்கியமாகப் பயன்படும் அங்கம் மற்றவைகளைக் காட்டிலும் முதிர்ச்சியும், வல்லமையும் உடையவையாகவே இருந்துவந்தன. அதனாலேயே, நம் முன்னோர், படைக்கும் கடவுளாகிய பிரம்மதேவனுடைய தலையிலிருந்து அந்தணர்களும், புஜங்களிலிருந்து அரசர்களும், இடுப்பிலிருந்து வைசியர்களும், கால்கைகளிலிருந்து வியவசாயிகளும் தொழிலாளிகளும் உற்பத்தியாயிருப்பதாகக் கூறியிருக்கின்றனர். இவ்வாறு, ஆதிகாலந்தொட்டு நமது நாட்டில் தொழில் வேறுபாட்டினால், ஜனங்கள் வெவ்வேறு வகுப்பினராகவும் ஜாதியினராகவும் பிரிந்து இருந்து வந்திருக்கின்றனராலும், அந்த வேறுபாடு ஒருவர் மீது ஒருவர் கொண்ட பகைமையினால் ஏற்பட்டதன்று. ஒரு தேசத்திலுள்ள ஜன சமூகத்தார் தமது வியவகாரங்களில் இன்னின்னதை இன்னின்னார் செய்வதென்று ஏற்படுத்

திக் கொண்டு பரஸ்பரம் உதவி புரிந்து சுலபத்திலும், போட்டியில்லாமலும், சச்சரவில்லாமலும் அவைகள் நடப்பதற்கு அநுகூலமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதனால் பரஸ்பர ஒற்றுமையும், உதவியும், மரியாதையும், அன்பும், ஐக்கியமும் பெருகி வந்திருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பினரும் தம் தம் தொழிலையும், கலையையும் பரம்பரையாக அபிவிருத்தி செய்து அவற்றைச் சிறந்த நிலைமைக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். இக்காலத்திலோ அவ்விதமான தொழில் பாகுபாடு சீர்குலைந்து அழிந்து போகும் நிலைமை ஏற்பட்டுக் கொண்டே வருகிறது.

நமது தேசங்கள் வெள்ளைக்காரர்களுடைய ஆட்சியின் கீழ் வந்த பின், அவர்களது கல்வி முறைகளும், யந்திர முறைகளும், வர்த்தக முறைகளும், துரைத்தன முறைகளும் பெருகிக் கொண்டே போவதனால், இன்ன தொழிலாளர், அல்லது, இன்ன வகுப்பார்தான் இந்தத் தொழிலைச் செய்கிறது என்னும் கட்டுப்பாடு தளர்ச்சியடைந்து முற்றிலும் ஒழிந்து போகும் தருணத்திற்கு வந்து விட்டது. முன் காலத்தில் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவனே அரசனாக இருந்து வந்தான். சட்ட திட்டங்களைப்பற்றிய தர்மசாஸ்திரங்களை அவனுக்கு எடுத்துரைப்பதற்கு மந்திரி முதலிய சபையினர் அவனுடன் கூட இருந்தனர். மற்ற சாமானிய ஜனங்கள் துரைத்தனம் நடப்பதைப் பற்றியும், தங்களது பாதுகாப்பைப்பற்றியும் கவலையுறாமல், வரி செலுத்துவதொன்றையே தமது கடமையாக வைத்துக் கொண்டு தத்தம் புராதனத் தொழில்களைப் புரிவதையே தலைமையாக நினைத்துச் செய்து வந்தனர். அக்காலத்து அரசர்களுக்கு சுயேச்சையான அதிகாரம் ஏற்பட்டிருந்ததாயினும், அவர்கள் பொதுஜன அபிப்பிராயத்திற்குப்

பயந்து, தர்மசாஸ்திரங்களின்படி நடந்து, நன்மையையே செய்து வந்தனர். அரசனும் மந்திரியும் இரவில் மாறு வேஷங்களுடன் நகரத்திற்குள் சென்று கீழ்த்தர அதிகாரிகள் தம் தம் கடமைகளைத் தவறாமல் செய்கிறார்களாவென்பதையும், குடிமக்கள் தங்களது அரசாட்சியைப் பற்றி எவ்விதமாகப் பேசிக்கொள்ளுகிறார்களென்பதையும் தெரிந்துகொண்டனரென்றும் நமது பண்டைக்காலத்து நூல்கள் கூறுகின்றன. இக்காலத்தில் சட்ட திட்டங்கள் யாவும் வரையறுக்கப்பட்டு புஸ்தகங்களில் அச்சியற்றப் பெற்றுப் போயிருக்கின்றன. மனிதர் தங்களது சாமர்த்தியத்தினாலும் புத்தி நுட்பத்தினாலும், முக்கியமான அம்சங்களைப்பலவிதமாக வியாக்கியானம் செய்து, பகிரங்கமாகவே ஒன்றுக்கொன்று மாறுபடும் கொள்கைகளை நிர்த்தாரணம் செய்கிறார்கள். பழைய காலத்தில் சட்ட திட்டங்கள் சொற்பமாகவே இருந்தனவானாலும், அரசர் முதலியோர் நீதியையும் தர்மத்தையுமே கவனித்துக்கொண்டு போவார்களன்றி, வார்த்தைகளைக் கொண்டு, அதுவோ இதுவோ வென்ற தடுமாற்றமும் குழப்பமும் அடைந்து தவிக்கமாட்டார்கள். ஆனாலும் அவைகள் யாவும் பழைய காலத்துக் கதைகளாய் விட்டன. இப்பொழுது எல்லாத் துறைகளிலும் பெருத்த பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன; இன்னமும் ஏற்பட்டுக்கொண்டே போகின்றன. ஒருவரோ சிலரோ நாட்டைப் பரிபாலித்து வந்த காலம் சென்று விட்டது. நாட்டிற்கு அடிப்படையாயிருப்போரும் வரிகள் செலுத்துவோருமான பொது ஜனங்களாலேயே அரசாட்சி நடைபெறவேண்டுமென்ற கொள்கையே வெள்ளைக்காரர்களுடைய தேசங்களில் அபிவிர்த்தியாகி அநுபவத்தில் நடத்திச் காட்டப்படுகின்றமையால், அவைகளைப் போலவே நமது தேசத்து

அரசியலும் அமைக்கப்பட்டு வருகின்றது. பொது ஜனங்கள் தங்களுடைய உத்தமமான நன்மைகளைக் கருதித் தாங்களே அரசியலை நடத்த வேண்டுமென்பதும், துரைத்தனத்தை நடத்தும் உயர்தர உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் பொதுஜனங்களிடமிருந்து அதிகாரம் பெற்று அவர்களுடைய சேவகர்களாய் அதை நடத்துகிறார்களென்பதும் இப்போதைய கொள்கைகள். வெள்ளைக்காரர்களுடைய தேசங்களில், பரம்பரையாக அரசாட்சி புரிந்து வந்த அரசர்கள் அநேகமாய் எல்லாதேசங்களிலும் எடுபட்டுப்போய் விட்டனர். அவ்விடங்களில் இக்காலத்தில் அரசர் என்ற அதிகாரியே இல்லை. நமது இங்கிலாந்து முதலிய சில தேசங்களில் மாத்திரம் இன்னமும் அரசர் இருந்து வருகின்றனராலும், அவர்களுடைய அதிகாரங்களை யெல்லாம் ஜனங்கள் பிடுங்கிக் கொண்டனர். குடும்பங்களில் எண்பது தொண்ணூறு வயதடைந்து முற்றிலும் தளர்ந்துபோன பெரியவர்களை மரியாதையாகவும கௌரதையாகவும் பார்வைக்கு கம்பீரமாகவும் உன்னத ஸ்தானத்தில் உட்கார வைத்து, மற்றவர்களே சகலமான குடும்ப வியவகாரங்களையும் நடத்திக்கொண்டுபோவதுபோல இங்கிலாந்து முதலிய சில தேசங்களின் அரசர்கள் வெறும் மதிப்பிற்காகக் கொலுப்பதுமைகளைப்போல இருந்து வருகின்றனர். பொது ஜனங்கள் தமக்காகச் சிலரைத் தேர்ந்து எடுத்து அனுப்புகின்றனர். அவர்களில் சுமார் பத்து இருபது பிரதிநிதிகள் மந்திரிகளென்ற பெயர்களுடன் அதிகாரங்களைப் பிரித்துக் கொண்டு சகலமான வியவகாரங்களையும் நடத்திவருகின்றனராலும், உத்தரவுகள் பிறப்பிக்கும்பொழுது, அரசர் பெருமான் இவ்வாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார் என்று பகட்டாக எழுதுகிறதையே வழக்கத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நமது இந்தியா தேசத்தில் மைசூர் திருவாங்கூர் முத லிய சில தேசங்களில் பரம்பரையான அரசர்கள் இன்ன மும் இருந்து அரசாட்சி புரிந்து வருகின்றனரென்பது எல் லோரும் அறிந்த விஷயம். அவைகளைத் தவிர மற்ற பெரும்பாகமான இந்தியா, பிரிட்டிஷ் இந்தியா என்று குறிக்கப்பட்டு வருகிறது. இங்கிலாந்திலுள்ள நமது சக்கரவர்த்தியின் பெயரால், இராஜப் பிரதிநிதி, அல் லது, கவர்னர் ஜெனரல் என்பவர் இந்த பிரிட்டிஷ் இந்தி யாவை ஆண்டு வருவதோடு, மைசூர் முதலிய சிறிய சுதேசங்களின் அரசர்கள் தம் தம் தேசங்களை ஒழுங் காக ஆளுகிறார்களா வென்றும் ஏஜண்டுகளை வைத்து கவ னித்துக்கொண்டிருக்கிறார். இங்கிலாந்தில் ஜனங்களுடைய பிரதிநிதிகளே மந்திரிகளாயிருந்து அரசாட்சி புரிந்து வரு கிறார்களானாலும், நமது இந்தியாவில் மாத்திரம் அந்தக் கொள்கை இன்னம் அநுஷ்டானத்திற்குக்கொண்டுவரப்பட வில்லை. இங்கிலாந்திலுள்ள ஜனப்பிரதிநிதிகளான மந்திரிக ளின் முடிவான ஆதிக்கத்திற்குள்ளடங்கி நமது இராஜப் பிரதிநிதி சகலமான துரைத்தன வியவகாரங்களையும் நடத் திக்கொண்டு போகிறார். இங்கிலாந்தில் நடத்தப்படுவது போன்ற ஜனப்பிரதிநிதி ஆட்சியை நமது இந்தியாவிலும் ஏற்படுத்த வேண்டுமென்றும், இப்பொழுது ஏராளமான வெள்ளைக்காரர்களால் வகிக்கப்படும் மேல்தர உத்தியோகங் களிலெல்லாம் இந்தியரையே பூர்த்தியாய் நியமிக்கவேண்டு மென்றும் நமது தேசத்துத் தலைவர்கள் சுமார் நாற்பது வருஷகாலமாய்ப் போராடி வந்திருக்கிறார்கள். இந்தியாவில் எண்ணிறந்த ஜாதி வேறுபாடுகளும், மதச் சண்டைகளும் இருப்பது பற்றியும், வேறு பல காரணங்களினாலும், இந் தியர்கள் இங்கிலீஷ் காரர்களைப் போல ஜனப்பிரதிநிதி

ஆட்சி நடத்த திறமையும் யோக்கியதையும் அற்றவர்களா யிருக்கிறார்களென்று இங்கிலீஷ்காரர்கள் கூறி, அவர்களே இந்த தேசத்தை ஆண்டு வந்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன் பயங்கரமான ஜெர்மன் சண்டை நடந்த பொழுது, இங்கிலீஷ்காரருக்கு இந்தியர்களுடைய உதவியும் பொருளும் ஏராளமாய்த் தேவையாயிருந்த காலத்தில், அவர்கள் இந்தியருக்கும் சுயாதிகாரம் கொடுப்பதாக வாக்களித்து நம்மவர்களின் உதவியைப் பெற்றுக் கொண்டார்கள். அந்தப் போர் முடிந்த பின்னர் வெள்ளைக்காரர்கள் இந்தியருக்குச் செய்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமலே இருந்து வர, மகாத்மா காந்தி முதலிய நம் தலைவர்கள் இது விஷயமாய் மும்முரமான கிளர்ச்சிகள் செய்து, துரைத்தனத்தாரோடு எந்த விஷயத்திலும் ஜனங்கள் ஒத்துழைப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்ற முறையை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயற்சிகள் புரிந்தனர். அதைக் கண்டு கவலை கொண்ட இங்கிலீஷ்காரர்கள் சட்ட பூர்வமாக இந்தியருக்கு சொற்ப அதிகாரத்தை மாற்றலாயினர். அதுவே இரட்டையாட்சி என்று குறிக்கப்படுகிறது. அதன்படி, ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள வரி செலுத்தும் ஜனங்கள் தங்களில் திறமையான ஒருவரையோ சிலரையோ தேர்ந்து எடுத்து அவர்களை சட்டசபை அங்கத்தினர்களாய் அனுப்புவதென்றும், அவ்வாறு எல்லா ஜில்லாக்களிலுமிருந்து வரும் பிரதிநிதிகளில் சிலர் மந்திரிகளாய் நியமிக்கப்படுவதென்றும், இது வரையில் கவர்னரும், மற்ற இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களும் செலுத்தி வந்த அதிகாரங்களில் சிலவற்றை மேற்படி மந்திரிகள் ஏற்று நிர்வகித்து வருவதென்றும், ஆனால் கவர்னர் இச்சைப்பட்டால், அவர்களுடைய

உத்தரவுகளை மாற்றி விடலாமென்றும் ஒரு விதமான புதிய அரசியல் திட்டம் ஏற்படுத்தப் பட்டது. இவ் விதமாக சுய ஆட்சிக்கு நம் ஜனங்களைப் பழக்கி, பத்து வருஷ காலத்திற்குப் பிறகு, இந்த ஏற்பாடு எவ்வளவு தூரம் பலித்திருக்கிற தென்பதையும், இந்தியருக்கு இன்னம் அதிகமான அதிகாரத்தைக் கொடுக்கலாமா வென்பதையும் இங்கிலீஷ்காரர்கள் ஆராய்ந்து பார்த்து, தேவையானல், மறுபடி சட்ட மூலமாக மாறுதல்களை இயற்றுவ தென்றும் முந்திய சட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருகிறது. அந்த விசாரணையை நடத்தும் பொருட்டே இப்பொழுது சைமன் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் நமது தேசத்தில் பண்டைக் காலத்தில் இருந்து வந்த நிலைமை இப்பொழுது முற்றிலும் வேருக மாறிப் போய் விட்டது. இதற்கு முன் நம் பொது ஜனங்கள் "இராமன் ஆண்டால் நமக் கென்ன? இராவணன் ஆண்டால் நமக் கென்ன?" என்று கூறி, அரசியல் விஷயத்தை அசட்டை செய்திருந்தது போல இனியும் இருப்பது அவர்களுக்கே அநர்த்தமாகவும் நஷ்டமாகவும் முடியும். அரசியலை மாற்றும் விஷயமாக வெள்ளைக்காரரது நாடுகளில் அரசருக்கும் ஜனங்களுக்கும் நீண்ட காலமாகப் பெரும் போராட்டங்களும் சச்சரவுகளும் நடந்து வந்திருக்கின்றன. அதனுல் இராஜாங்க அமைப்புகள் பலவிதமாக மாறுபட்டும், அபிவிருத்தியடைந்தும் வந்திருக்கின்றன. இந்த விஷய சம்பந்தமாக வெள்ளைக்காரர்கள் எத்தனையோ புஸ்தகங்களை எழுதி அரசாட்சியின் தத்துவங்களை விளக்கி இருக்கிறுர்கள். இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசமும் என்ன விதமாய் ஆளப்படுகின்ற

தென்ற விவரங்களையும் கண்டு அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஆகவே ஒவ்வொரு இந்தியரும் வெளிதேசங்களில், முக்கியமாய், நமது சக்கரவர்த்தியின் தேசமாகிய இங்கிலாந்தில் அரசியல் எவ்வாறு அமைக்கப்பட்டு எவ்விதமாய் நடைபெறுகின்றது என்பதையும், அதில் ஜனங்களுக்கு எவ்விதமான கடமைகளும், உரிமைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் நன்றாகத் தெரிந்து கொண்டாலன்றி, இனி நமக்கு ஏற்படப் போகும் சுய ஆட்சியை நடத்துவது சிறிதும் பலியாத காரியமாதலால், பின் வரும் அதிகாரங்களில் விவரிக்கப்படும் முக்கியமான விஷயங்களையும் தத்துவங்களையும் நம் இந்தியர் தெரிந்து கொள்வது அத்தியாவசியமான கடமையாயிருக்கின்றது.

இங்கு இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நாம் குறிப்பிடுவது அவசியமாகத் தோன்றுகிறது. இப்பொழுது உலகமெங்கும் வியாபித்து வரும் புதிய ஜனப்பிரதிநிதியாட்சி முறையில், ஆண்மக்களைப் போலவே பெண்மக்களுக்கும் சமமான உரிமைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆங்காங்கு அவர்களும் இராஜீய விஷயங்களை நிர்வகிக்க முன் வரத் தொடங்கிவிட்டனர். பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து சட்ட சபைகளுக்கு அனுப்பும் ஓட்டுரிமை அவர்களுக்கும் பல தேசங்களில் கொடுக்கப்பட்டு விட்டது. நம் இந்தியாவில் அந்த உரிமை இப்பொழுது வரிகள் செலுத்தும் ஸ்திரீகளுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி வயது வந்த ஒவ்வொரு ஆண்பிள்ளைக்கும் பெண்பிள்ளைக்கும் ஓட்டுரிமை கொடுக்கப்பட்டுப் போகுமாதலால், இனி இருபாலாருக்கும் அரசியல் ஞானம் இருப்பது இன்றியமையாததாகி விட்டது.

முடிவாக நாம் குறிப்பிட வேண்டிய இன்னொரு விஷயம் இருக்கிறது. இந்தியர்கள் இங்கிலீஷ்காரர்களிடத்திலிருந்து பூர்த்தியான சுய ஆட்சியையும், அதிகார நிர்வாகத்தையும் பெறுவதற்கும், அவைகளை இனி எப்பொழுதும் திறமையாகவும் சாமர்த்தியமாகவும் பிரதிநிதிகள் மூலமாய் நடத்திக் கொண்டு போவதற்கும் ஆண் பெண் பாலார் அடங்கிய நம் பொது ஜனங்கள் அரசியல் தத்துவங்களையும் அமைப்பையும் நன்ருகத் தெரிந்து கொண்டு, ஒவ்வொரு விஷயத்திலும் ஒழுங்கான அபிப்பிராயங்களை வெளியிடுவது எல்லா வற்றிலும் முக்கியமான அம்சமாக இருக்கிறது. பொது ஜனங்களெல்லோரும் சரியான அரசியல் ஞானத்தை உண்டாக்கிக் கொண்டு சட்ட சம்மதமான முறைகளில் தங்களுடைய கட்சிகளை எடுத்து வெளியிடுவார்களானுல், அவர்களுடைய ஜீவாதாரமான உரிமைகளை அவர்களுக்கு இல்லை என்று மறுக்க, எத்தகைய சக்தி வாய்ந்தோராலும் இயலாது.

1-வது அதிகாரம்

அரசு.

1. அரசியல் தத்துவ சாஸ்திரமென்பது என்ன, அது என்ன விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறது, அதன் எல்லை எவ்வளவு என்பனவற்றை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்; அதுவுமன்றி இந்த சாஸ்திரத்திற்கும், இன்னம் இதைப்போலுள்ள மற்ற சாஸ்திரங்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதையும் நாம் தெரிந்து கொள்வது அவசியம். இந்த சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ள விஷயங்களை யெல்லாம் நாம் கடைசிவரையில் தெரிந்துகொண்ட

பிறகே இது எதைப்பற்றிச் சொல்லுகிறது என்பதை நாம் விஸ்தாரமாகவும், திருத்தமாகவும் எடுத்துக் கூறலாம். நாம் ஒரு விஷயத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு அநுகூலமாக, அரசியல் தத்துவ சாஸ்திரமென்பது, துரைத்தனம் நடத்தும் விஷயத்தைப் பற்றிச் சொல்வதென்று வைத்துக்கொண்டு ஆரம்பிப்போம். துரைத்தனம் நடத்துவதென்றால், அதற்கு அஸ்திவாரமான இன்னொரு விஷயம் உடனே நம்மனத்தில் தோன்றுகிறது. அதாவது, ஒருவர் அதிகாரம் செலுத்துவது, மற்றவர் கீழ்ப்படிவது என்ற கொள்கையே தோன்றுகிறது. துரைத்தனத்தார் அதிகாரம் செலுத்துவது, மற்றவர் கீழ்ப்படிவது என்ற கட்டுப்பாடு எந்தக் காலத்தில் தோன்றியது என்பதை நாம் நிச்சயிக்கப் புகுந்தால், அது பலியாத முயற்சியாகவே முடியும். இப்போதிருப்பதை விட்டு, நாம், பழைய சரித்திரங்களை எடுத்து, இறந்த காலத்தில் நடந்துள்ள விஷயங்களை வைத்துக்கொண்டு வெகுதூரம் பார்த்தால், துரைத்தனத்தாருக்கு மற்றவர் கீழ்ப்படிவதென்ற கட்டுப்பாடு எந்தக் காலத்தில் முதன் முதலில் உண்டாயிற்று என்பதை நாம் கண்டுபிடிப்பதே சாத்தியமற்ற விஷயமாக முடியும். மனிதன் ஆதியில் தோன்றிய பொழுதே, அநேகமாய் அதுவும் உற்பத்தியாயிருக்க வேண்டும்.

உலக ஆரம்பத்தில், மனிதர் நாகரிக மற்றவர்களாயிருந்தபொழுதும், இடைக்காலத்தில் வலியவர் எளியவரை அடக்கி வற்புறுத்தி முரட்டுத்தனமாக நடத்திய காலங்களிலும், நாகரிகம் பூர்த்தியாய்ப் பெருகி அபிவிருத்தி அடைந்திருக்கும் இந்தக் காலத்திலும், அந்த அதிகார தோரணை இருந்தே வந்திருக்கிறது. ஆனல், துரைத்தனத்தார் இன்னின்ன விஷயங்களைச் செய்கிறது, எந்த

வரம்பிற்கு உள்பட்டு அவைகளைச் செய்கிறதுஎன்கிற அம்சங்களும் ஆதிகாலத்திலிருந்து மாறுபட்டும் அபிவிருத்தியடைந்தும் வந்திருக்கின்றன. அதுவுமன்றி, துரைத்தனத்தை நடாத்தும் அதிகார வர்க்கங்களும் அபிவிருத்தியடைந்து அபாரமாக வளர்ந்து பெருத்த வலைப்பின்னல் போலப் பெருகியிருக்கின்றன. இவ்விதமாக துரைத்தனம் ஆதிகாலந்தொட்டு பலவகையான வடிவங்களோடு இருந்து வந்திருக்கிறதானாலும், அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல் என்ற ஜீவாதாரமான கட்டுப்பாடு நெடுகவே எல்லாவற்றிலும் இருந்து வந்திருக்கிறது. ஆகவே, நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டிய விஷயங்கள், அது பல காலங்களில் அடைந்து வந்திருக்கும் வேறுபாடுகளேயாம். துரைத்தனத்தின் பலகால வேறுபாடுகளை ஆராய்ச்சி செய்வது முக்கியமாய் இந்தத் தத்துவ சாஸ்திரத்தின் காரியமாகும். அது இந்த சாஸ்திரத்திற்கு மாத்திரம் ஏற்பட்டதல்ல. இந்த சிருஷ்டியில் உள்ள பிராணிகளும் வஸ்துக்களும் ஒரே மாதிரியாக இருந்திருக்குமானால், அது ஸர்வ சாதாரணமான விஷயமாகத் தோன்றும். சிருஷ்டியில் ஏற்பட்டுள்ள கணக்கற்ற வேற்றுமைகள் இருப்பதே பலவகைப்பட்ட சாஸ்திரங்கள் உண்டாவதற்கு இடம் கொடுத்திருக்கிறது. ஒரு வஸ்துவைப்போல இன்னொரு வஸ்து இல்லாதிருப்பதைக் கண்டே, மனிதன் அவைகளைப்பற்றிச் சிந்தனை செய்யவும், ஆராய்ச்சி செய்யவும், அவைகளைப் பலவகையாகப் பிரிக்கவும், அவைகளின் குணதிசயங்களைப் பாகுபாடு செய்யவும் ஆரம்பிக்கிறான். அப்படிச் செய்வதனாலேயே சாஸ்திரங்கள் தோன்றுகின்றன. அதுபோல, பலவகைப்பட்ட மனித சமூகத்தார் துரைத்தன அதிகாரத்திற்குக் குடி ஜனங்கள் அடங்கி நடக்க வேண்டு

மென்ற அதிகார தோரணையை ஜீவாதாரமாக வைத்துக் கொண்டு வெவ்வேறு வடிவத்தோடு ஏற்படுத்தியுள்ள அரசாட்சி முறைகளை யெல்லாம் ஆராய்ச்சி செய்து, அவைகளின் ஒற்றுமை வேற்றுமைகளை உணர்ந்து ஒழுங்குபடுத்திக் காட்டுவது இந்த அரசியல் தத்துவ சாஸ்திரத்தின் முக்கிய வேலையாகும்.

இங்கு இதற்குப் பொருத்தமாகத் தோன்றும் இன்னொரு முக்கியமான விஷயத்தை நாம் கூறவேண்டும். இந்த அரசியல் விஷயம் மாத்திரமே ஆதிகாலத்திலிருந்து பெருகி அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்று நாம் நினைத்துவிடக்கூடாது. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சகலமான ஜீவன்களும், வஸ்துக்களும் தமக்குத் தாமே பெருகி அபிவிருத்தி யடைந்து, திருத்தமும், திறமையும் பெற்று, முன்னிலும் அதிகமாய்ப் பிரயோசனப்படும் தன்மையைவளர்த்துக்கொண்டே வந்திருக்கின்றன; இன்னம் அப்படியே மாறிக்கொண்டு போகின்றன. ஆகையால், இந்தப் பிரபஞ்சத்தில் நாம் எந்த இலாகாவைப் பார்த்தாலும், அது நிலைத்து ஒரே நிலைமையில் இராமல், மாறுதலடைந்து கொண்டே வந்திருக்கிறது. மற்ற சாஸ்திரங்களிலும் சரி, இந்த அரசியல் தத்துவ சாஸ்திரத்திலும், சரி, இவ்விதமாக ஏற்படும் மாறுதல்களை ஒன்றோடொன்று ஒத்திட்டுப் பார்த்து, ஒற்றுமை வேற்றுமைகளைப் பாகுபாடு செய்தலே முதன்மையான காரியமாக இருக்கிறது. ஒரு குறித்த காலத்தில் ஓரிடத்தில், அரசாங்கம் எந்த வடிவத்தில் இருந்ததென்பதைச் சொல்வதோடு மாத்திரம் நாம் திருப்தியடைந்து விடுவது பூர்த்தியான சாஸ்திர ஆராய்ச்சி ஆகாது. காலக் கிரமத்தில் மனிதனுடைய அறிவு எப்படியெப்படி மாறி விசாலித்து அபிவிருத்தி

யடைந்துகொண்டு வந்திருக்கிறதென்பதையும், மனித சமூகத்தில் எப்படிப்பட்ட மாறுபாடுகளும், அபிவிருத்திகளும் ஏற்பட்டுக் கொண்டு வந்திருக்கின்றனவென்பதையும் இந்த சாஸ்திரம் ஆராய்ச்சி செய்யவேண்டும். இதனால்தான், அரசியல் தத்துவ சாஸ்திரத்தின் ஆராய்ச்சிகள் ஒரே மாதிரி நிலைத்திருப்பவை யல்லவென்றும், எப்பொழுதும் மாறுபட்டுக் கொண்டே இருப்பவை யென்றும் நூலோர் கூறுகின்றனர். ஆகவே, இந்த சாஸ்திரம், அந்தந்தக் காலத்தில் அரசாங்கம் எங்ஙெந்த வடிவத்தில் அமைந்திருந்தது என்பதையும், எவ்வெவ்விதமாகத் தனது காரியங்களை நடத்தியதென்பதையும் தெரிந்து கொள்வதோடு, ஒன்று மற்றொன்றாய் எப்படி மாறியது, அவ்வாறு மாறுவதற்கு என்ன காரணம் ஏற்பட்டது என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும். ஆகையால் நாம் ஒரு குறித்த காலத்தில் அமைந்துள்ள ஜனசமூக ஏற்பாடுகளையும் அரசியலையும் மாறுபடாமல் நிரந்தரமா யிருப்பவைகள் என்று எண்ணிக்கொள்ளாமல், அவை ஆதிகாலத்திலிருந்து சேர்ந்துகொண்டே வந்த அநுபவங்களின்ஸாரமென்றும், இனி ஏற்படப் போவதற்கு அஸ்திவார மென்றும் கருதவேண்டும்.

2. **அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கும் மற்ற சாஸ்திரங்களுக்குமுள்ள சம்பந்தம்.** நாம் மேலே கூறியவற்றிலிருந்து, இந்த சாஸ்திரந்தான், அந்தந்த தேசத்தின் சரித்திரமோ என்ற சந்தேகம் உண்டாகிவிடலாம். இந்துதேச சரித்திரம், இங்கிலந்து தேச சரித்திரம், உரோம்தேசச் சரித்திரம் முதலிய தேச சரித்திரங்களே அந்தந்த தேசத்தின் அரசியல் தத்துவ சாஸ்திரமோ என்ற ஐயம் தோன்றலாம். ஆனால், இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது; இருந்தாலும் இவை இரண்டில் ஒன்று விசேஷமானது,

மற்றது விசேஷக் குறைவானது என்று நாம் நினைத்துவிடுவது சரியல்ல. அரசியல் தத்துவ சாஸ்திரத்தில் அதிக அபிமானமுள்ளவர்கள் தேச சரித்திரம் ஒழுங்கற்றதும் சீர்படுத்தப் படாததுமான ஒரு பெருங் குவியல் என்று இளக்காரப்படுத்தியும், அரசியல் தத்துவமென்பது அவைகளின் ஸாரமென்று உயர்வு படுத்தியும் கூற விரும்புவர். தேச சரித்திரங்களில் அபிமான முடையவர்கள் தேச சரித்திரமே அடிப்படையான சிறந்த சாஸ்திரமென்றும், அரசியல் தத்துவ சாஸ்திரம் அதிலிருந்து தோன்றிய இரண்டாம் பக்ஷமான சாஸ்திரமென்றும் கூறுவர். நியாயமாகப் பார்க்கும் பட்சத்தில், இவ்விரண்டு சாஸ்திரங்களும் ஒன்றுக்கொன்று துணையாகப் பொருந்தி ஒன்றையொன்று வளர்க்க உதவி செய்கின்றனவென்றே நாம் கருதவேண்டும். தேச சரித்திரம் இல்லாவிட்டால், அரசியல் தத்துவ சாஸ்திரத்தை எதிலிருந்து நாம் எழுதுகிறது? தேச சரித்திரம் இல்லையானால், அரசியல் தத்துவ சாஸ்திரமும் இல்லை. அதுபோல, அரசியல் தத்துவங்களை நாம் கவனிக்காமல் அலட்சியம் செய்து, வெறும் தேச சரித்திரத்தை மாத்திரம் படித்துக்கொண்டு போவோமானால், அதன் மதிப்பில்பெரும் பாகமும் இல்லாமல் போவது நிச்சயம். தேச சரித்திரத்தில் விவரிக்கப்படும் முக்கியமான விஷயங்களைக் கொண்டே அரசியல் தத்துவ சாஸ்திரம் ஏற்படுகின்றதானாலும், அவைகள் மாத்திரமே போதுமானவையல்ல; அவைகளோடு, மனிதர்களுடைய மனோ தத்துவங்களும் தர்மசாஸ்திர முறைகளும் அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன. ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தமுள்ளவையான இந்த இரண்டு கலைகளின்பாந்தவ்வியத்தை, ஆசிரியர் ஸீலி என்பவர், "தேச சரித்திரத்தில் பழுத்துக்

கனிந்த பழமே அரசியல் தத்துவம்; அரசியல் தத்துவத்திற்கு தேசசரித்திரமே மூலாதாரமான வேர்'' என்று கூறி விளக்கியிருக்கிறார். அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்த, சமீப கால ஆசிரியர் ஒருவர் இவைகளின் சம்பந்தத்தை இன்னமும் தெளிவான ஒரு புதுமாதிரியில் கூறியிருக்கிறார். அதாவது, "தேசசரித்திரம் என்ற வஸ்துவில் நீளம், அகலம் ஆகிய இரண்டு அளவுகள் இருக்கின்றன. அதன் மூன்றாவது அளவாகிய கனம், அல்லது, ஆழமே அரசியல் தத்துவம்'' என ஷெ ஆசிரியர் கூறுகிறார்.

இந்த இரண்டு வகை நூல்களும் ஒன்றுக் கொன்று எப்படி உதவி செய்து கொள்ளுகின்றன என்பதை நாம் நுட்பமாக ஆராய்ந்து பார்த்துக் கொண்டே போவதில், அவைகள் இரண்டிற்கும் உள்ள முக்கியமான வித்தியாசத்தை அசட்டை செய்து விடுவது கூடாது. தேசசரித்திரத்திலுள்ள வெறும் வரலாறுகளுக்கும், அரசியல் தத்துவத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லை. பல அரசர்கள் ஆண்டார்கள், சண்டை யிட்டார்கள், மாண்டார்கள் என்று தேசசரித்திரம் வம்சாவளிகளை வரிசையாகக் கூறிக் கொண்டே போவதற்கும், அரசியல் தத்துவத்திற்கும் சம்பந்தமில்லை. இன்னம் அரசரிடம் இவ்வளவு படைகள் இருந்தன, அப்பொழுது அந்த தேசத்தில் வியாபார நிலைமை இன்ன மாதிரி இருந்தது, பொருளாதார நிலைமை இன்னமாதிரி இருந்தது என்பதைப் போன்ற வெறும் விஷயங்களில் அரசியல் சாஸ்திரம் சிரத்தை கொள்ள வேண்டியதில்லை; ஆனால் மேலே குறிக்கப்பட்ட விஷயங்கள் துரைத்தன அதிகாரத்தையோ, அல்லது, அதன் அமைப்பையோ எவ்வளவு தூரம் பாதிக்கின்றனவோ, அவ்வளவே அரசியல் தத்துவசாஸ்திர ஆராய்ச்சிக்காரர்களுக்குத் தேவையான அம்சங்கள். இத

ற்கு நாம் ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுவோம். இங்கிலந்து தேசசரித்திரத்தில், சில நூற்றுண்டுகளுக்கு முன் ஜனங்களுக்குள் மத விஷயமான சச்சரவுகள் நடந்துகொண்டிருந்தன. அவர்களுடைய கிரிஸ்துவமதத்தில் அப்பொழுது பல பிரிவுகள் ஏற்பட்டிருந்தன. உரோமன் காதலிக்ஸ், ப்ராடஸ்டேன்ட்ஸ்என்ற இரண்டு பிரிவுகளில், முதல் பிரிவினர் பெரும்பாலோராயும், இரண்டாவது பிரிவினர் சொற்பத் தொகையினராயும் இருந்தனர். அப்போதைய அரசனும் முதல் பிரிவை ஆதரிப்பவனு யிருந்தான். ஆகவே, அரசனும் பெரும்பாலோரான ஜனங்களும் சேர்ந்து ப்ராடஸ்டேன்ட்ஸ் வகுப்பாரில் புதிதாய்த் தோன்றிய பியூரிடன்ஸ் என்ற சிறிய வகுப்பாரை வதைத்துப் பலவகையில் துன்புறுத்தி ஒறுக்கவே, அவர்கள் அந்த தேசத்தை விட்டுப் பிரயாணம புறப்பட்டு, அமெரிக்கா என்னும் புதிய கண்டத்திற்குப் போய்க்குடியேறி நிலங்களைத் தம்முடைய தாக்கிக்கொண்டு, வீடுகள், ஊர்கள், பட்டணங்கள், வியாபாரங்கள் முதலியவற்றை உற்பத்திசெய்து கொண்டு, ஜனப்பிரதிநிதி ஆட்சியை ஏற்படுத்தி, பல தனித்த அரசாட்சிகளை ஒன்றுகப் பிணைத்து, மத்திய துரைத்தனத்தின் ஆதிக்கத்தையும் உண்டாக்கி,செழித்து ஓங்கி இப்பொழுது மகாஉன்னதமான நிலைமையில் இருந்து வருகிறுர்கள் என்ற விவரங்கள் யாவும் இஙகிலந்து தேச சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. மேற்படி சரித்திரத்தின் இந்தப் பாகத்தில் அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள் என்னென்ன இருக்கின்றன வென்று நாம் பார்க்கும் பட்சத்தில், துரைத்தனத்தாருக்கும் மதவிஷயத்திற்கும் உள்ள சம்பந்தம், ஜனப்பிரதிநிதிகளின் ஆட்சி வளர்ந்து பெருகிய விதம், பல தனித்த துரைத்தனங்கள்

தங்களுக்குள் ஏற்படும் பொது விஷயங்களை நிர்வகிப்ப தற்காக மத்திய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு அவ்வாறு ஒன்றுக்கொன்று பலமாக இருக்கும் மாதிரி, அதுவன்றி, எழுத்து மூலமான சட்ட திட்டங்களின்படி அரசியலை உற்பத்தி செய்துது ரைத்தனம் நடத்தும் வகை, ஆகிய அம்சங்கள்மாத்திரமே அரசியல் தத்துவ சாஸ்திரத் திற்குசம்பந்தப்பட்டவை. ஷை ஐக்கிய நாடுகளின் பொரு ளாதார நிலைமையைப்பற்றிய விவரங்களெல்லாம் இரண் டாம் பக்ஷமானவைகளே. அமெரிக்காவில் அதற்குமுன் இருந்த காட்டு மனிதர்களும், அவர்களுக்குள் நடந்த சச் சரவுகள், அவர்கள் பேசிய பாஷைகள், அவர்களுடைய நடையுடைபாவனைகள், ஆகாரங்கள், அவர்கள் அவ்விடத் தில் அநுபவித்த இன்பதுன்பங்கள், அவர்கள் கண்ட அதி சயமான புதிய காட்சிகள் முதலியவற்றிற்கும் அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கும் உள்ள சம்பந்தம் இன்னமும் அதிக தூரமானது. அரசியல் தத்துவ சாஸ்திரம் எப்படி ஒரு வரம்பிற்கு உள்பட்டதாக இருக்கிறதோ, அது போல தேச சரித்திரத்திற்கும், முக்கியமான வரம்புகள் ஏற்பட் டிருக்கின்றன. டாக்டர் ஜார்ஜ ஜெல்லிநெக் என்பவர் தேச சரித்திரம் இன்ன வரம்பில் அடங்கி இருக்க வேண்டுமென் பதை அடியில் வருமாறு திருத்தமாகக் கூறி விளக்கி இருக் கிறார். "தேசசரித்திரமென்பது ஒரு தேசத்தின் விருத் தாந்தங்களைச் சொல்வதோடு, இன்ன சம்பவம் நிகழ்ந்ததன் காரணமாய் அதிலிருந்து இன்னின்ன சம்பவம் அல்லது சம்பவங்கள் நிகழ்ந்தன என்பதையும் எடுத்துக் காட்டுகி றது. தேசசரித்திரத்திற்கும், மற்ற தத்துவ சாஸ்திரங்க ளுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் தேசசரித்திரம் எப்பொழுதும், காரணகாரியங்களாக இருக்கும் குறிப்பான

விஷயங்களை மாத்திரம் ஆராய்கின்றதே யன்றி, அவைகளுள் அடங்கிய சூட்சுமமான தத்துவங்களை ஆராய்ந்து ஒழுங்குப்படுத்தி, நீதி நெறிகளை ஸ்தாபித்துக் கொண்டே போவதில்லை. தேசசரித்திரம் எழுதுகிறவர் இந்த வரம்பை மீறி எழுதும் பட்சத்தில், அவர் தர்ம சாஸ்திரப் பிரசங்கியே யன்றி சரித்திரம் மாத்திரம் எழுதுகிறவர் அல்லர். ஒரு தேசசரித்திரத்தை எழுதுகிறவருக்கு சாதாரண சம்பவங்களுக்குள் அடங்கியுள்ள நீதிமார்க்க ஆராய்ச்சியை அடியோடு அசட்டை செய்ய மனம் வாராது என்பது உண்மையே. ஆனால், அம்மாதிரி எந்த சாஸ்திரமும் தனக்குள் சகலமான அம்சங்களையும் பூர்த்தியாக அடக்கிக் கொண்டிருக்க வில்லை." என்று டாக்டர் ஜார்ஜ் ஜெல்லிநெக் கூறுகிறார்.

தேசசரித்திரத்தை விட்டு, இனி நாம் பொருளாதார சாஸ்திரத்தை எடுத்துக் கொண்டு, அதற்கும் அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கும் உள்ள வித்தியாசத்தை ஆராய்ந்து பார்ப்போம். பொருளாதார சாஸ்திரத்தின் காரியம் "செல்வத்தைத் தேடிச் சேர்ப்பது சம்பந்தமான மனிதனுடைய நடவடிக்கைகளைப்" பற்றி ஆராய்ச்சி செய்வதே யாகும். இலௌகிக தர்மம், மனோபாவம் ஆகிய இரண்டு காரணங்களும் தூண்ட, அதனால் வஸ்து அல்லது பொருள் எப்படி உற்பத்தியாகிறது, எப்படிப் பரவுகின்றது என்பதையே பொருளாதார சாஸ்திரம் கூறுகிறது. பொருள் உற்பத்தியாகிப் பரவுவது, முக்கியமாக, ஒரு தேசத்தின் துரைத்தன அமைப்பையும், துரைத்தனத்தார் அது சம்பந்தமாக ஏற்படுத்தியுள்ள ஸ்தாபனங்களையும் பொருத்ததாக இருக்கின்றதாகையால், பொருளாதார சாஸ்திர ஆராய்ச்சிக்கும் அரசியல் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சிக்

கும் அதிக அன்னியோன்னியமான சம்பந்தம் உண்டு. அதுவன்றி, ஒரு தேசத்தின் பொருளாதார நிலைமையைப் பொருத்தே பெரும்பாலும் அதனுடைய துரைத்தனம் அமைகிறதென்றும் கூறலாம். உதாரணமாக, ஆடு மாடுகளைக் காடுகளிலும், மேய்ச்சல் தரைகளிலும் மேய்த்து அவைகளை அபிவிருத்தி செய்து ஜீவனம் நடத்தும் ஜாதியாரே அடங்கிய ஒரு தேசத்தின் துரைத்தனம் ஒரு விதமாக இருக்கும்; ஒரே இடத்தில் நிலைத்திருந்து உழுது பயிர் செய்யும் ஜனங்களை நிறைந்த ஒரு தேசத்தின் துரைத்தனம் இன்னொரு மாதிரியாக இருக்கும்; மூலப் பொருள்களைக் கொண்டு புதிய புதிய சாமான்களை உருவாக்குகிற கைத் தொழிலாளிகளை நிறைந்த பெரிய பட்டணங்களின் துரைத்தனம் வேறு மாதிரியாக இருக்கும். ஆகவே, ஓரிடத்திலுள்ள துரைத்தனமானது அதைச் சூழ்ந்துள்ள பொருளாதார நிலைமையையே பொருத்ததாக இருக்கிறது. பொருளாதார சாஸ்திரமும், அரசியல் தத்துவ சாஸ்திரமும் அடிப்படையாகவே ஒன்றிற்கொன்று சம்பந்தப்பட்டிருப்பதுடன் நிற்பதில்லை. இன்னம் சில குறிப்பான விஷயங்களும் இரண்டிற்கும் பொதுவாக இருக்கின்றன. உதாரணமாக, இரயில் பாதை நிர்வாகத்தை எடுத்துக்கொள்வோம். சில இரயில் பாதைகள் கம்பெனிக்காரர்களிடத்திலிருக்கின்றன. அதனால் ஏற்படும் பொருள் ஆதாயம் அவர்களைச்சேருகின்றது. சில இரயில் பாதைகளை துரைத்தனத்தாரே நேரில் தம்முடைய நிர்வாகத்தில் வைத்து இலாபம் சம்பாதிக்கின்றனர். இதை துரைத்தனத்தாரின் வர்த்தக இலாகா என்றே கருதவேண்டும். இது போல, தபால் இலாகாவை எடுத்துக் கொண்டால், அதுவும் வர்த்தக இலாகாவேயாகும். அதை துரைத்தனத்தாரே நேரில் நிர்வகித்து வரு

கின்றனவாயினும், அதை ஒரு விதமான வர்த்தகமென்றே நாம் கூற வேண்டும். ஆகையால், இவைகளைப் போன்ற குறிப்பான சில விஷயங்கள் இரண்டு சாஸ்திரங்களுக்கும் சம்பந்தப்படுகின்றன. பொருளாதார சாஸ்திர ஆராய்ச்சிக்காரர் இவற்றுள் அடங்கிய பொருள் வருவாயின் திறனையும், அதன் ஒழுங்கான பாகுபாட்டையுமே கவனிப்பர்; அரசியல் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சிக்காரர் அவற்றின் நிர்வாக அமைப்பையே கவனிப்பர்.

அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கும் இன்னம் வேறு சில சாஸ்திரங்களுக்குமுள்ள சம்பந்தத்தை நாம் சுருக்கமாக எடுத்துக் கூறுவோம். ஒரு குறித்த காலத்தில் ஒரு தேசத்தில் துரைத்தன அமைப்பைப்பற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள இராஜாங்க அமைப்புச் சட்டங்களெல்லாம் அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்குள்ளடங்கிய பகுதிகள் என்றே நாம் கொள்ளவேண்டும். அது நிற்க, சுதேச விதேச சம்பந்த சட்டம் என்று ஒரு வகையான சட்டம் உண்டு. அதாவது, ஒரு தேசத்திற்கும், இன்னொரு தேசத்திற்கும் வியாபாரங்கள், தந்திப் போக்கு வரத்து, தபால் போக்கு வரத்து, உலகத்தில் சண்டைகள் ஏற்படாமல் தடுப்பது, ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் சண்டை ஏற்படுமானால், அதில் ஒரு தேசத்தாருக்கு வேறு சில தேசத்தார் உதவி செய்வது என்பவைகளைக் குறித்து ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தங்களை யெல்லாம் அரசியல் தத்துவ சாஸ்திரத்தில் சேர்ப்பதா, சேர்ப்பதில்லையா என்ற விஷயத்தில் அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். ஆனால், ஷை ஒப்பந்தங்கள் சட்ட பூர்வமாக உண்டாக்கப் படுவனபோல நிலைத்து அநுபவத்திற்கு வந்திருக்குமானல்

அவைகளும் அரசியல் தத்துவ சாஸ்திரத்தில் அடங்கியவையாகின்றன.

வெள்ளைக்காரர் ஜன சமூக சாஸ்திரமென்று இன்னொரு சாஸ்திரத்தை ஏற்படுத்தி இருக்கின்றனர். ஷை ஜன சமூக சாஸ்திரத்திற்கும், அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கும் உள்ள சம்பந்தம் என்னவென்பதை நாம் ஆராய்வோம். ஜன சமூக சாஸ்திரமென்பது பூர்த்தியான நாகரிகம் அடைந்து சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் மனித சமூகத்தைக் குறித்து மாத்திரம் ஆராய்ச்சி செய்வதல்ல; நாகரிகம் கட்டுப்பாடு முதலியவை சொற்பமாக அமைந்துள்ள மனித வகுப்பைப் பற்றியும்கூட அந்த சாஸ்திரம் ஆராய்ச்சி செய்கிறது. ஒரு மனிதனுக்கும், மற்ற மனிதர்களுக்கும்சட்ட பூர்வமாகவும்,கட்டாயத்தின்மேலும் ஏற்பட்டுள்ள சம்பந்தத்தை மட்டுமன்றி, மனிதருடைய பழக்க வழக்கங்கள், ஒழுக்கம், மதம், பொருளபிவிர்த்தி இயக்கம் ஆகியவற்றின் நிலைமை, வளர்ச்சி முதலிய விஷயங்களையும் ஆராய்ச்சி செய்யும். முக்கியமான இன்னொரு வேறுபாடு என்னவென்றால், மனிதர் இராஜீய உணர்ச்சியையடைந்து, அது சம்பந்தமாக ஏற்பாடு செய்துள்ள ஸ்தாபனங்கள் அரசியல் தத்துவ சாஸ்திரத்தில் அடங்கியவை; இராஜீய உணர்வில்லாத மனித சமூகத்தாருடைய வியவகாரங்கள் யாவும் ஜன சமூக சாஸ்திரத்தில் அடங்கியவை. பால்ஜேனேட் என்பவர் இந்த இரண்டு சாஸ்திரங்களுக்குமுள்ள சம்பந்தத்தை அடியில் வருமாறு குறித்திருக்கிறார். "ஜன சமூக சாஸ்திரத்தில், அரசின் அடிப்படையான விஷயங்களையும், அதிகார தோரணைகளையும் பற்றி ஆராய்ச்சி செய்யும் பாகமே அரசியல் தத்துவ சாஸ்திரம்," என்று அவர் கூறியிருக்கிறார். அதாவது, ஜன சமூக

சாஸ்திரம் அதிக விரிவானது, அரசியல் தத்துவ சாஸ்திரம் அதன் ஒரு பாகமேயாகும். ஜே. கே. ப்ளன்ட்ஷ்லி என்பவர் இன்னொருவிதமாக இதை விவரித்துக் கூறியிருக்கிறார். அதில் முக்கியமாக, இது மாறுபட்டுக்கொண்டே போகும் தன்மையே சிரேஷ்டமாகக் காட்டப்பட்டிருக்கிறது. "அரசியல் தத்துவ சாஸ்திரமென்பது அரசாட்சியை கவனிப்பதோடு நிற்பது; அது அரசாட்சி நிலைத்திருப்பதற்கான அம்சங்கள், அதன் ஸாராம்சம், அதன் அங்கங்கள், ஆடம்பரங்கள், அதன் வளர்ச்சி ஆகியவற்றைத் தெரிந்து வரையறுக்கிறது" என்று அவர் கூறியிருக்கிறார்.

3. **அரசு என்பதன் கருத்தும் அதற்கு அத்யாவசியமான விசேஷணங்களும்.** மேலே விவரிக்கப்பட்டவைகளிலிருந்து, இராஜரீக அமைப்பையும், அங்கங்களையும், அவற்றின் வளர்ச்சியையும் குறிக்கும் நூலே அரசியல் தத்துவ சாஸ்திரமென்பது தெளிவுபட்டிருக்கும். அது சுருக்கமாய் அரசியல் தத்துவமென்றே குறிக்கப்படுகிறது. ஆனால் நாம் இதுவரையில் ஆராய்ச்சி செய்து வந்ததில், அரசு என்பதன் சரியான கருத்து இன்னதென்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே அதை உபயோகித்து வந்திருக்கிறோம். இனி, அதனுடைய கருத்தை இயன்றவரையில் பாகுபாடு செய்து பார்ப்பது அவசியமாகிறது. வெள்ளைக்காரர்கள் அரசு என்பதற்கு **ஸ்டேட்** என்ற சொல்லை உபயோகப் படுத்துகிறார்கள். அந்தச் சொல்லை அவர்கள் பலவிதமான அர்த்தங்களில் உபயோகப்படுத்துகிறார்கள். கிரிஸ்தவர் ஆதிக்க **ஸ்டேட்டுகள்**, ஜெர்மனி இட்டாலி முதலிய ஐரோப்பாவின் தலைமை **ஸ்டேட்டுகள்** என்று அவர்கள் குறிக்கையில், **ஸ்டேட்**, அல்லது, அரசு என்ற சொல் வெறும்

நாட்டை; அல்லது, தேசத்தை மாத்திரம் குறிக்கிறது. மதவிஷயமும், ஸ்டேட்டும் என்று அவர்கள் கூறுகையில், ஸ்டேட் என்பதற்கு நாடு என்ற அர்த்தம் உண்டாவதில்லை. ஒரு நாட்டில் துரைத்தனத்தாருக்கும் மத விஷயமான ஸ்தாபனங்களுக்கும் உள்ள சம்பந்தமென்னவென்பதை விளக்கும் சந்தர்ப்பத்தில் அந்த வார்த்தை உபயோகப்படுகிறது. ஸ்டேட்டும், மனிதனும் என்று அவர்கள் பிரயோகம் செய்யும்பொழுது, மனித சமூகத்தில் ஒரு தனித்த மனிதனுக்கும், எல்லா ஜனங்களுமடங்கிய தொகுதிக்கும் ஏற்பட்டுள்ள சம்பந்தத்தை விளக்கும் சந்தர்ப்பத்தில் அது உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. எளியவர்களுக்கு ஸ்டேட் உதவி, ரயில்பாதைகளின் ஸ்டேட் ஆதிக்கம் என்று அவர்கள் பிரயோகிக்கும் இடத்தில், ஸ்டேட் என்ற சொல் தேசத்தையாவது ஜனத் தொகுதியையாவது குறிக்கவில்லை; ஷைக் காரியங்களை நடத்த ஏற்பட்டுள்ள துரைத்தன அங்கங்களைக் குறிக்கிறது. இவ்வாறு ஸ்டேட், அல்லது, அரசு என்பது சாதாரண உபயோகத்தில் பலவிதமான அர்த்தங்களைத் தருகின்றதானாலும், அரசியல் தத்துவ சாஸ்திரப்படி அது எதைக் குறிக்கிறது, அதன் விசேஷணங்கள் என்னென்ன என்பதை நாம் திருத்தமாக நிர்ணயிக்கலாம். ஸ்டேட், அல்லது, அரசு என்பதில் நான்கு அம்சங்கள் அடங்கி இருக்கின்றன. (1) ஒரு நாடு, அல்லது, பிரதேசம், (2) ஜனத்தொகுதி, (3) தனித்தன்மை, (4) கட்டுப்பாடு என்பவை நான்கும் எந்த அரசுக்கும் அவசியம் இருக்க வேண்டிய இலக்ஷணங்கள். அரசு என்றால் அதன் அதிகாரத்தைச் செலுத்த ஒரு தேசம் இருக்கவேண்டும். அதாவது, இன்னின்ன எல்லைகளுக்குள் அடங்கிய இன்ன நிலப் பரப்பிற்குள் அந்த அரசின் அதிகாரம் செல்லுபடி

யாகிறது என்கிற ஒரு நிர்ணயம் ஏற்பட்டிருக்கும். உதாரணமாக ஒரு பிரதேசத்திலுள்ள ஜனங்கள் ஓரிடத்தில் நிலைத்து வசிக்காதவர்களா யிருப்பார்களானால், அவர்களுக்குள் அரசியல் அமையாது. ஆப்பிரிக்கா கண்டத்தில் நீகிரோ எனப்படும் ஜாதியார் ஓரிடத்தில் நிலைத்திராமல் கும்பல் கும்பலாய், காடுகளிலும் மலைகளிலும் சொற்பகாலம் தங்கியபடி ஊரூராய் அலைந்து காலங்கழிக்கின்றனர். அவர்களைப்போல, நமது தேசத்திலும், நரிக்குறவர்கள், குடுகுடுப்பாண்டிகள், கழைக்கூத்தாடிகள் முதலிய சில கூட்டத்தார் ஓரிடத்தில் நிலைத்திராமல் ஒவ்வோர் ஊரிலும் குடிசைகள் போட்டு சிற்சில தினங்கள் இருந்து தமது வித்தைகளை அவ்வூரில் காட்டியபின், தமது குடிசைகளையும் சட்டிபானைகளையும், மூட்டை முடிச்சுகளையும் கழுதைகளின்மேலோ, தங்கள் தலையிலோ சுமந்துகொண்டு இன்னோர் ஊருக்குப் போவதை நாம் காண்கிறோம். அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்குட்பட்ட தேசமென்பது இல்லையாகையால், அவர்களுக்குள் ஒரு தனியான அரசு ஏற்படுவது சாத்தியமற்ற விஷயம். அதுபோல, குடிஜனங்களே யற்றதான பாலைவனங்கள், காடுகள், நிர்மாநுஷ்யமான பூபாகங்கள் முதலிய இடங்களில் அரசு ஏற்படுவதும் அசம்பாவிதம். மூன்றாவது அம்சமாகிய தனித்தன்மையென்பது ஓர் அரசின் கீழ் உள்ள நாடும், அதன் ஜனங்களும் பூர்த்தியாக அதனுடைய ஆதிக்கத்திலேயே இருக்கவேண்டும்; வேறு ஒரு பெரிய அரசிற்குள்ளடங்கியதாக இருத்தல் கூடாது. நாம் நமது இலங்கைத்தீவை உதாரணமாக எடுத்துக்கொண்டு விளக்குவோம். பூகோள சாஸ்திரத்தின்படி, அது தனியாகப் பிரிந்து நிற்கும் ஒரு பிரதேசம். அதன் ஜனங்களான சிங்களர்கள் ஒரு தனி

யான தொகுதியினரே. ஆனாலும், அது இங்கிலந்து தேசத்தின் ஆதிக்கத்திற் குள்ளடங்கிய தாகையால், அது தனித்த அரசாகாது. அமெரிக்கா எனப்படும் கண்டத்தில், கனடா, பிரேஸில், ஐக்கிய நாடுகள் என்ற தேசங்கள் இருக்கின்றன; ஆனால் வெள்ளைக்காரர்கள் அமெரிக்க அரசு என்று ஐக்கிய நாடுகளையே குறிக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் என்பது பல தனித்த தேசங்கள் ஒன்றாய்ச் சேர்ந்த ஒரு தொகுதி. அதற்குள் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு தனியான தேசமும் தனது உள்நாட்டு அரசாட்சியைத் தானே நடத்திக்கொண்டு போகிறது. அதோடு தங்களை பலப்படுத்திக்கொள்வதற்கும், பரஸ்பர சம்பந்தமுள்ள பொதுவிஷயங்களை நடத்திக்கொண்டு போவதற்கும் அநுகூலமாக எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து கூட்டாக சில வியவகாரங்களை நடத்துகின்றன. அந்த ஏற்பாட்டில், சாஸ்திரப்படி பார்த்தால், மொத்தத் தொகுதியான ஐக்கிய அரசே தனிப்பட்ட அரசாகிறதன்றி, அதில் சேர்ந்துள்ள ஒவ்வொரு நாட்டின் அரசும் தனிப்பட்ட அரசாகாது. அரசு என்பதற்குப் பூர்த்தியான தனித்தன்மை இருத்தல் வேண்டும். அதுவே மூன்றாவது அம்சம். நான்காவது அம்சமான கட்டுப்பாடுதான் அரசு நிலைபெறுவதற்கான முக்கிய அம்சம். உதாரணமாக, நமது தேசத்தில் நிலைத்த வாசமில்லாமல் திரியும் நரிக்குறவர்கள், குடுகுடுப்பாண்டிகள் முதலியோரை நாம் ஒன்று சேர்த்து, கப்பலில் வைத்துக் கொண்டுபோய் நிர்மாநுஷ்யமான ஒரு தீவில் விட்டு விடுவதாக வைத்துக் கொள்வோம். அந்தத் தீவு ஒரு தனியான தேசமே. அவ்விடத்தில் தனியான ஜாதியாரும் இருக்கின்றனர். அது வேறெந்த அரசிற்கும் உள்பட்டதல்ல. எனவே, அரசுக்கு அவசியமான முதல் மூன்று இலக்ஷணங்

களும் அங்கே இருக்கின்றன. ஆனல் அவர்களிடம் நான்காவது அம்சம் இல்லை. எல்லோருடைய பொதுவான நன்மையையும் குறித்து ஒரு சிலர் அதிகாரம் செலுத்துவது, மற்றவர் எல்லோரும் அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பது என்கிற கட்டுப்பாடு அவர்களிடம் இல்லையாதலால், அங்கு அரசும் இல்லையென்றே கருதவேண்டும். ஆனல் அவர்கள் அரசியல் உணர்ச்சியடைந்து, ஒன்றுபட்டுத் தங்களில் சிலரை துரைத்தனத்தாராய் நியமித்து, அவர்களுடைய அதிகாரத்திற்குமற்றவர் அடங்கிநடப்பதென்ற ஏற்பாட்டைச்செய்து கொள்வார்களானல், அந்தத் தீவில் அரசு ஸ்தாபிக்கப்பட்டுப் போனதென்றே கொள்ள வேண்டும். அதை நாம் இன்னெரு விதமாகவும் கூறலாம். அங்கே குடியேறியவர்களில் சிலர் தங்களுடைய மேலான தேகபலத்தினலோ, தந்திரத்தினலோ மற்ற எல்லோரையும் அடக்கித் தமக்குக் கீழ்ப்படிபவர்களாகச் செய்து கொள்ள, அவ்விடத்தில் அதிகார தோரணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறது என்கிற ஏற்பாடும் அமைந்து போவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுதும், அங்கு அரசு ஸ்தாபிக்கப்பட்டுப் போனதாகவே கருதவேண்டும். அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு, எல்லோருடைய சம்மதமும் வேண்டுமென்பது மில்லை, அது நியாயமான வழியில்தான் ஏற்பட வேண்டு மென்பது மில்லை. நமது இஷ்டத்திற்கு மாருகவே, ஒரு பலிஷ்டன் நம்மை அடக்கியாளுவதென்பதும், அதற்கு நாம் உள்பட்டு நடப்பதென்பதும் ஏற்பட்டுப் போகுமானல், அதுவே போதுமானது. மேலே விவரிக்கப்பட்டநான்கு இலக்ஷணங்களும் பொருந்தி இருக்குமானல்,அது எவ்விதமான கொடுங்கோலரசாயிருந்தாலும், அது சர்வஜன சம்மதத்தின்மேல் ஏற்பட்ட அரசியலைப்போல ஸ்தாபிக்கப்பட்டதாகவே கருதவேண்டும்.

அரசு என்பதை சில நிபுணர்கள் எப்படி விவரித்து வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள் என்பதை நாம் கவனிப்போம்.

(1) "குறிக்கப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய ஒரு பிரதேசத்தில், சட்டபூர்வமான அதிகார தோரணையை ஏற்படுத்தி, அதற்குள்பட்டிருக்கும் ஜனத்தொகுதியே அரசெனப்படுவது" என்று உட்ரோ வில்ஸன் கூறியிருக்கிறார்.

(2) "இவ்வாறு ஒரு தொகுதியினரோ, அல்லது, ஜாதியாரோ தமது துரைத்தன அங்கங்களின் மூலமாய் நிரந்தரமான சட்டத்தின்படி, குறிப்பிட்ட ஒரு தேச எல்லைக்குள், நீதி செலுத்துவதே அரசெனப்படுவது" என்று தியடோர் உல்ஸி என்பவர் கூறி இருக்கிறார்.

(3) இதை இன்னமும் விரிவாக ஆசிரியர் ஹாலண்ட் என்பவர் அடியில் வருமாறு விவரித்திருக்கிறார்.

"சாதாரணமாக ஒரு பிரதேசத்தில் வசிக்கும் ஏராளமான ஜனத் தொகுதியினரில் பெரும்பாலோராயிருப்பவர்களோ, அல்லது, அவர்களில் குறிப்பான சில வகுப்பாரோ தங்களுடைய செல்வாக்கைக் கொண்டு, தமக்கு மாறான கொள்கை யுடையவர்களது அபிப்பிராயம் ஓங்காதபடி செய்து, தங்களுடைய கருத்தையே எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி செய்யின், அதுவே அரசெனப்படுவது." என்கிறார் ஷை ஆசிரியர்.

(4) ஸ்டேட் அல்லது அரசு, ஜன சமூகம், துரைத்தனம், ஜாதியார்:—ஸ்டேட் அல்லது அரசு என்கிற சொல்லுக்கும், சமூகம், துரைத்தனம், ஜாதியார் என்கிற சொற்களுக்கும் என்ன வித்தியாசம் என்பதை நாம் எடுத்துக் காட்டினால், ஸ்டேட் அல்லது அரசு என்கிற சொல்லின் கருத்து

இன்னமும் அதிக திட்டமாகத் தெரிந்துபோம். சமூகம் என்பது ஜனத் தொகுதியை மாத்திரம் குறிக்குமே யன்றி, அவர்கள் இருக்கும் பிரதேசத்தையாவது, அவர்களைச் சுற்றியுமுள்ளவைகளையாவது குறிக்காது. ஜனத் தொகுதி என்பதன் கருத்து, அரசு என்பதன் கருத்தை விட அதிக விசாலமானது. அது நாகரிகமும் கட்டுப்பாடு முடைய ஜனத் தொகுதியையும் குறிக்கும்; அநாகரிகமாய்க் கட்டுப்பாடில்லாமல் இருக்கும் ஜனத் தொகுதியையும் குறிக்கும். ஜனசமூகமென்பது மனிதர் ஒருவரோடொருவர் அரசியல் சம்பந்தமாய் எப்படி ஒன்றுபட்டிருக்கின்றன ரென்பதை மட்டும் விளக்குவதன்று. அவர்களுடைய சகல விதமானசம்பந்தங்களையும் கூட்டுப்பாடானசெய்கைகளையும் உள்ளடக்கியதாயிருக்கிறது. மனிதனுடைய மதம், குடும்ப ஏற்பாடுகள், கைத்தொழில் இயக்கங்கள், கல்விகற்றல், குற்றச் செய்கைகள் முதலியவை சமூகமென்பதின் ஆராய்ச்சியில் அடங்கி இருக்கின்றன. துரைத்தனம், அல்லது, கவர்ன்மேன்ட் என்பது, ஸ்டேட் அல்லது அரசு என்பதைவிடக் குறுகியது. ஒரு தேசத்தின் அரசியல் சம்பந்தமான அதிகாரத்தை ஒரு குறித்த காலத்தில் வகிக்கும் ஒரு மனிதரையோ, அல்லது, பல மனிதர்களையோ துரைத்தனம், அல்லது, கவர்ன்மென்ட் என்பது குறிக்கும். அது சில சமயங்களில் அம்மனிதர்களையே குறிக்கும்; சில சமயங்களில், அந்த அதிகாரத்தைச் செலுத்தும் தொகையினரின்அமைப்பையும், தன்மையையும் குறிக்கும். ஒரு தேசத்தின் சாதாரணமான பிரஜைகள் எல்லோரும் ஸ்டேட் அல்லது அரசு என்பதன் ஒரு பாகமாயிருப்பவர்களே. ஆனால், அவர்கள் துரைத்தனத்தாரில் ஒரு பாகமானவர்கள் அல்லர். துரைத்தனம் என்பது ஒரு

பிரதேசத்தைக் குறிக்காது, அரசு என்பது குறிக்கும். ஜாதியார், அரசு என்ற சொற்கள் முற்றிலும் வேறான அர்த்தமுடையவை. ஜாதி அல்லது சமுதாயம் என்பது அங்க இலக்ஷணப்படி இயற்கையிலேயே ஒரேவிதமான தோற்றங்கொண்டு, அதே மாதிரி பரம்பரையாக இருந்து வரும் தொகுதியாரையே குறிக்கிறது. அவர்கள் ஒரே பாஷையைப்பேசுகிறவர்களாயும் ஆதிகாலத்தில் ஒரே குடும்பத்திலிருந்து தோன்றிக் காலக்கிரமத்தில் பெருகி விசாலமாய்ப்பரவிப் போனவர்களாயும் இருப்பார்கள். ஜெர்மனியார், பிரஞ்சுக்காரர், ஹிந்துக்கள், முஸல்மான்கள் முதலிய தனித்த ஜாதியார்களை நாம் உதாரணமாகக் கூறலாம். ஆதிகாலத்தில் இருந்த இராஜ்ஜியங்களில், அந்தந்த ஜாதியாரே பூர்த்தியாக இருந்துவந்தனர். ஐரோப்பாக் கண்டத்தில் கிரீஸ் என்கிற தேசத்தில் ஆதிகாலத்தில் ஒவ்வொரு பட்டணமும் ஒவ்வொரு தனித்த அரசாக இருந்து வந்தது. அதை நகர அரசு என்று குறிப்பது வழக்கம். விஸ்தாரமான பிரதேசமும், அதற்குள்ளடங்கிய கிராமங்களும் அந்த நகர அரசுகளுக்கு இருந்ததில்லை. அப்பொழுது ஒவ்வொரு நகர அரசிலும் சம்பந்தப்பட்ட ஜனங்கள் எல்லோரும் ஒரே ஜாதியாராகவே இருந்தனர். அந்த ஜாதியைச் சேராதவரான அன்னியர் எவரேனும் ஒரு நகரத்தில் வந்து சேர்ந்தால், அவர்களுக்கு அந்த அரசில் சம்பந்தமில்லை. அக்காலத்தில் கிரீஸ் தேசத்தில் ஏதன்ஸ், ஸ்பார்ட்டா என்ற சிறப்பான இரண்டு நகரங்கள் இருந்தன. ஒவ்வொன்றும் தனியரசாக இருந்தது. அங்கு அன்னிய ஜாதியினர் அந்த அரசின் பிரஜைகளாகக் கருதப்படவில்லை. அந்தக் காலத்தில் கிரீஸ் தேசத்தாருடைய அபிப்பிராயம், அரசென்பது ஒரே ஜாதியினரின் ஸ்வாதீனத்தி

விருந்த ஒரு சிறிய விஸ்தீரணத்திற்குள் அடங்கியதென்பதே. கிரீஸ் நகர அரசுகள் அழிந்தபின், இட்டாலி எனப்படும் தேசத்தின் தலைமை நகரமான உரோம் என்பதில் இருந்த அரசு பிரமாதமாக ஓங்கித் தலையெடுத்தது. அந்த தேசத்து அரசர்கள் அன்னிய தேசங்களின்மேல் படையெடுத்துச் சென்று அவைகளை வென்று தமது ஆளுகைக்கு உட்படுத்தினர். அதிலிருந்தே பல ஜாதியார் ஒரு சக்கரவர்த்தியின் அரசியலுக்குள் ஒன்றுபட்டிருப்பதென்ற வழக்கம் அநுபவத்திற்கு வந்தது. ஒரு தேசத்தின் அரசியலை ஒரே ஜாதியார்தான் நடத்துவது என்ற சம்பிரதாயம் அதன்பிறகு மறைந்து போய்விட்டது. கிறிஸ்து சகாப்தம் 212-ம் வருஷத்தில், அந்த தேசததுச் சக்கரவர்த்தி ஸரஸல்லா என்பவர் ஒரு சட்ட மியற்றினார். அந்தச் சக்கரவர்த்தியின் ஆளுகைக்கு உட்பட்ட இதர தேசங்களிலிருந்த ஜாதியார் எல்லோரும் உரோம் இராஜ்ஜியத்தின் பிரஜைகள் என்ற உரிமை அவர்கள் எல்லோருக்கும் ஷை சட்டத்தினால் அளிக்கப்பட்டது. இக்காலத்தில் நமது இந்திய அரசுக்குள் வெள்ளைக்காரர்கள், இந்துக்கள், முஸல்மான்கள், பார்ஸிகள், கிறிஸ்தவர்கள் முதலிய பல ஜாதியார்கள் இருக்கின்றனர். இது போலவே, ஒரு ஜாதியைச் சேர்ந்த ஜனங்கள் பல அரசுகளின் ஆதிக்கங்களில் இருக்கின்றனர். உதாரணமாக, முஸல்மான்களுடைய விஷயத்தை ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் உலகத்தில் பல பாகங்களில் வெவ்வேறு அரசின்கீழ் இருந்து வருகிறார்கள். ஆப்பிரிக்கா கண்டத்திலும், ஐரோப்பா கண்டத்திலும் அவர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். ஆனாலும், அவர்கள் எங்கே இருந்தாலும் தாங்கள் ஒரே ஜாதியினரென்றும், சகோதரர்கள் என்றும் பாந்தவ்

வியம் கொண்டாடி ஒரே கட்டுப்பாட் டுடனிருந்து வரு கிறார்கள். ஆகவே அரசு என்றால் அதில் ஒரு ஜாதியார் தான் இருக்கலாம் என்ற ஆதிகாலக் கொள்கை போக, ஓர் அரசில் பல ஜாதியாரும், பல அரசுகளில் ஒரு ஜாதி யாரும் இருக்கலாமென்பது அநுபவத்திற்கு வந்தது. அரசுக்கும் ஜாதிக்கும் உள்ள சம்பந்தம் ஒரே மாதிரியாய் இராமல் மாறிக் கொண்டே வந்திருக்கிறது; இன்னம் பல விதமாய் மாறிக் கொண்டே போகின்றது. இப்பொ ழுது, அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளில் ஏற்பட்டுள்ள ஐக்கிய அரசாட்சியில் ஒரு புதிய கொள்கை ஏற்பட்டிருக் கிறது. அத்தனை நாடுகளிலும் இருப்போரான பிரஜைகள் எல்லோரும் அநேகமாய் இங்கிலீஷ்காரர்களே. ஆனாலும், பூகோள சாஸ்திரப்படி இயற்கையாகவே பிரிந்திருக்கும் ஒவ்வொரு நாடும் தனித்தனி யரசாகவே இருக்க வேண்டு மென்றும், அதன தன் உள்வியவகாரங்களில் அந்தந்த அரசே முடிவான அதிகாரமுடைய தென்றும், எல்லா நாடுகளையும் சேர்ந்த பொது விஷயங்களில் மாத்திரம் ஐக்கியநாட்டு அரசுக்கு ஆதிக்கம் உண்டென்றும் அந்த தேசத்தார் ஏற் பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரியான கொள் கையை நாம் இப்பொழுது இந்தியாவிலும் காணலாம். நம் சென்னை இராஜதானியின் வடபாகத்திலுள்ள தெலுங்கு பாஷை பேசும் ஜில்லாக்களின் பிரஜைகளான ஆந்திரர் கள் தங்களுடைய ஜில்லாக்களைத் தனியான ஒரு மாகாண மாய்ப் பிரித்து அதற்குத் தனியான துரைத்தனத்தை ஏற் படுத்த வேண்டுமென்று நெடுங்காலமாய்க் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இவ்வுதாரணங்களிலிருந்து, அரசுக்கும் ஜாதி யாருக்கும் உள்ள சம்பந்தம் ஆதிகாலத்திலிருந்து பல வகையாய் மாறுபட்டுக் கொண்டே வந்திருக்கிறதென்பதை நாம் தெரிந்து கொள்ளுகிறோம்.

5 அரசும், பொதுவான மதமும். ஆதிகாலத்தில் ஓர் அரசில் ஒரு ஜாதியினர் மட்டுமே சம்பந்தப்பட்டிருந்தகாலத்தில், அவர்களுடைய மதமும் ஒன்றாகவே இருந்தது. ஓர் அரசின் ஆதிக்கத்திற்குள்பட்ட பிரஜைகள் எல்லோரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாய் அவசியம் இருந்தே தீர வேண்டுமென்ற கட்டாயம் உலக சரித்திரத்தில் பல ஆட்சி காலங்களில் இருந்ததாக நாம் அறிகிறோம். மத்திய காலத்தில்,ஐரோப்பா கண்டத்தில் கிருஸ்துவ மதத்தில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டுப்போயின. அதற்கு முன் பிரஜைகள் எல்லோரும் உரோமன் கா/2தலிக்ஸ் என்ற ஒரே வகுப்பாராக இருந்தனர். அந்த மாறுபாட்டின் பின் கிருஸ்துவ மதத்தில் பிராடஸ்டேன்ட்ஸ் முதலிய பலவகைப்பட்ட புதிய வகுப்புகள் தோன்றலாயின. அக்காலத்திற்குப் பிறகு அங்கு கா/2தலிக்ஸ் வகுப்பைச் சேர்ந்தவர்களும் அரசு புரிந்திருக்கிறார்கள்; ப்ராடேஸ்டேன்ட்ஸ் வகுப்பைச் சேர்ந்தவர்களும் அரசு புரிந்திருக்கிறார்கள். அவரவர் ஆட்சி புரிந்த காலத்தில் தம்முடைய மதக் கொள்கை எதுவோ அதற்கு மாறான கொள்கையை எவரேனும் கொண்டிருந்தால், அதை அரசியலுக்கு சம்பந்தமான குற்றமாகக் கருதி அவரை தண்டித்திருக்கின்றனர். இங்கிலந்து தேச சரித்திரத்தை நாம் புரட்டிப் பார்த்தால், அக்காலத்தில் ஏற்பட்ட மதப் போர்களும்,தண்டனைகளும், கொலைகளும், கொடுங் கோன்மையும் மகா பயங்கரமாகவும் முற்றிலும் அருவருப்பைத் தருவனவாகவும் இருக்கும். ஆனால் காலக்கிரமத்தில், அவைகள் குறைவுபட்டுப் போயின. அவரவர் தம் தம் இச்சைப்படி எவ்விதமான மதக் கொள்கையை வேண்டுமானாலும் அநுஷ்டிக்கலாமென்ற அபிப்பிராயமும், அதற்கும் அரசியலுக்கும் எவ்

வித சம்பந்தமுமில்லை யென்ற கோட்பாடும் ஏற்பட்டன. ஒரு மதத்தைச் சேர்ந்தவர் மற்ற மதத்தாரை வெறுக்காமல் சகிப்புத் தன்மை காட்ட வேண்டுமென்ற விஷயமும் அநுஷ்டானத்திற்கு வந்தது. நம் இந்தியா தேசத்தை ஆண்டு வரும் இங்கிலீஷ்காரர்கள் அதே முறைப்படி இந்த தேசத்தை யாளுகின்றனர். நம் இந்தியாவில், ஹிந்து மதம், இஸ்லாம் மதம், கிருஸ்துவ மதம், பார்ஸீமதம், புத்த மதம் என்பன போன்ற பல மதங்களைத் தழுவும் ஜாதியார் இருக்கின்றனர். அந்த மதங்களுள் உட்பிரிவுகளும் பல இருக்கின்றன. ஆனாலும் ஜனங்களுடைய மதசம்பந்தமான காரியங்களில் துரைத்தனத்தார் தலையிடுவதில்லை யென்ற அடிப்படையான கொள்கையின் மேல் இங்கிலீஷ் அரசு ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது. ஆனாலும், இந்த அரசின் வருமானப் பணத்திலிருந்து, இங்கிலீஷ்காரர்கள் மாதா கோவில்களை ஸ்தாபித்து, பிஷப் முதலிய அதிபதிகளுக்கு சம்பளம், படிகள், மற்ற செலவுகள் முதலியவற்றைக் கொடுத்து, மத இலாகாவையும் அரசியல் இலாகாக்களுள் ஒன்ருக ஏற்படுத்திக்கொண்டிருக்கிருர்கள். ஆனல் அந்த இலாகாவை இங்கிலீஷ்காரர்கள் முக்கியமாய்த் தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக மாத்திரமே வைத்துக் கொண்டிருக்கிருர்கள். மற்ற மதத்தினரிடத்திலிருந்து வசூலிக்கப்படும் வரிப்பணத்தைக்கொண்டு, அந்தச் செலவு செய்யப்படுகிறது என்ற ஓர் ஆட்சேபனையைத் தவிர, மற்றபடி அதனல் இதர மதத்தினர் பாதிக்கப்படுவதில்லை. இது போலவே பல தேசங்களில், மத இலாகா இன்னமும் அரசாட்சியோடு கலந்தே நிர்வகிக்கப்படுகிறது. பழைய காலங்களில், அம்மாதிரி ஏற்பாடு அநுஷ்டானத்தி லிருந்ததென்பதையே இவைகள் நிரூபிக்கின்றன.

6. உத்தமமான அரசு:—மேலே வந்துள்ள பாகுபாடுகளிலெல்லாம், அரசு எப்படி யெப்படி உண்மையில் காணப்படுகிறதோ அப்படியே வைத்து, நாம் ஆராய்ந்திருக்கிறோமேயன்றி, அது, குற்றமற்ற பரிபூர்ணமான உத்கிருஷ்ட நிலைமையில் இருந்தால், எப்படியெப்படி இருந்திருக்குமென்று வைத்துக்கொண்டு அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவில்லை. உத்கிருஷ்டமான அரசு எது என்பதைப் பற்றி ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொருவிதமான அபிப்பிராயம் இருந்து வந்திருக்கின்றது. ஆதிகாலத்திய கிரீஸ் அரசாட்சியில் பரிபூர்ணமான நகர அரசே அவர்களுக்கு மகா உத்கிருஷ்டமான அரசாகத் தோன்றியது. இந்தியாவில் பண்டைக் காலங்களில் பிரஜைகளின் நன்மையைக் கோரும் அரசனும், பக்ஷபாதமின்றி தர்ம சாஸ்திரங்களை அவனுக்கு எடுத்துரைக்கும் அமைச்சர் முதலியோர் அடங்கிய சபையுமே மகா சிரேஷ்டமான அரசாகக் கருதப்பட்டு வந்தது. இப்பொழுதோ அந்தந்த தேசத்தின் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் மூலமாய் நடைபெறும் அரசாட்சியே மகா சிலாக்கியமானதென்று எல்லோரும் கருதுகின்றனர். இன்னம் சில மூதறிஞர்கள் தமது கற்பனைசக்தியின் வேகத்தால், உலகத்திலுள்ள சகலமான தேசங்களும் ஒரு குடும்பம் போல ஒன்றுபடுவதான அரசு எப்படியும் ஒரு காலத்தில் தோன்றுமென்றும், அதைவிட உத்தமமான அரசு வேறு இராதென்றும் தீர்க்க தரிசனம் கூறுகின்றனர். ஆனால் இப்பொழுது ஒவ்வொரு தேசத்தாரும பிறருடைய ஆதிக்கத்தி வில்லாமல் தமக்குத் தாமே சர்வாதிகாரமும் படைத்துத் தமது தேசத்தை ஆண்டு அபிவிருத்தி செய்து கொண்டுபோக வேண்டுமென்றும், ஆனால், பொது வியவ-

காரங்களில் மாத்திரம் ஒரு தேசத்திற்கு இன்னொரு தேசம் உதவியாயிருக்க வேண்டுமென்றும் விருப்பம் கொண்டு, அந்தத் துறையில் போராடி வருகின்றனர். சமீப காலத்தில் நடந்த ஜெர்மன் மகா யுத்தத்திற்குப் பிறகு உலகத்திற்கே அதனால் ஏற்பட்ட விவரிக்க இயலாத அபார மான அநர்த்தங்களைக் கண்டு பெருங்கவலை கொண்டு, பல தேசத்தார் ஒன்றுகூடி சர்வதேச மகா சங்கம் என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். இனி இந்த உலகத்தில் ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் சண்டையே கூடாதென்றும், ஒரு தேசத்திற்கும் இன்னொன்றிற்கும் ஏற் படும் சச்சரவுகளை எல்லாதேசத்துப் பிரதிநிதிகளுமடங்கிய அந்த சங்கத்தின் மூலம் தீர்த்துக் கொள்ளுகிறதென்றும் ஒரு கட்டுப்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அரசு கள் அந்தத் தீர்மானத்திற்குக் கீழ்ப்படிந்துதான் நடக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லையானாலும், பல அரசுகளின் அபிப்பிராயத்தை அசட்டை செய்து நிராகரிக்க எந்த அர சும் துணியாதாகையால், அது நியாயத்திற்குக் கட்டுப் பட்டே நடந்துகொள்ளவேண்டும். இந்த சர்வதேச சங்கம் உலகத்தை யெல்லாம் உள்ளடக்கிய தனிஅரசு அல்லவானா லும், இதனால் உலகத்தில் சமாதானமும், பரஸ்பர நட்பும், பரஸ்பர அபிவிருத்தியும், ஐக்கியமும் நிலைத்து வளரு மென்பதைப்பற்றி ஐயமே இல்லை.

2-வது அதிகாரம்

அரசின் துவக்கம். தவறான சில கோள்கைகள்.

1. ஜனசமூக ஒப்பந்தக் கோள்கை:—அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கு உரிய வரம்பு எவ்வளவு என்பதைப் பூர்வாங்கமாக நாம் இதுவரையில் ஆராய்ச்சி செய்தோம். அடுத்தாற்போல, நாம் அரசின் உற்பத்தி அல்லது துவக்கம் என்கிற விஷயத்தைப்பற்றி விசாரணை செய்வது அவசியமாகிறது. உலகத்தில் எங்கே பார்த்தாலும், மனிதர் ஏதோ ஒருவிதமான அதிகாரத்திற்கு உட்பட்டு வாழ்வதை நாம் காண்கிறோமே, அது ஏற்பட்ட விதமெப்படி? துரைத்தனம், சட்டம் என்பவை எதிலிருந்து உற்பத்தியாயின? துரைத்தனத்தார் சில விஷயங்களில் நன்மை புரிந்து வருகின்றனர்; சில சமயங்களில் குடிமக்களின் உரிமைகளை அடக்கி விடுகின்றனர்; மனிதன் பாடுபட்டுத் தேடும் பொருளில் ஒரு பாகத்தை கட்டாயப்படுத்திப் பிடுங்கிக் கொள்ளுகின்றனர். எந்த துரைத்தனத்தாரும் இல்லாமல் ஜனங்கள் சுயேச்சையாக வாழக் கூடாதா? இந்த உலகமோ அல்லது மனிதரோ முதன் முதலில் உற்பத்தியான காலத்தில் இந்த அரசும் கூடவே உண்டாயிற்றா? அல்லது, வெகு காலத்திற்குப் பிறகு மனிதர் ஒன்று கூடி இதைத் துவக்கினார்களா? அல்லது, சுயநலங் கருதிய சில பலிஷ்டர்கள் மற்றவர்களைத் தங்களுக்குள் அடக்கித் தாங்கள் அரசாட்சி புரிய ஆரம்பித்து விட்டார்களா? இதை நாம் ஆராய்ந்து பார்த்து உண்மையைத் தெரிந்து கொள்வது அதயாவசியமான காரியம். இந்த ஏற்பாடு, எந்த தேசத்தில், எந்தக் காலத்தில் எப்படி ஆரம்பமாயிற்று என்பதை வெறும் வேடிக்கையின் பொருட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையி

னால் மாத்திரம் நாம் சரித்திர ஆராய்ச்சி செய்வது போதாது. துரைத்தனம் அல்லது அரசாங்கம் என்ற ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டதற்கு என்ன அவசியம், அல்லது, என்ன நியாயம் இருந்தது, அரசு என்பதற்கு இவ்வளவு பிரமாதமான அதிகாரமும் பாத்தியதையும் கொடுத்திருப்பது எப்படிப் பொருந்தும் என்னும் விஷயங்களை நாம் விசாரித்துத் தெரிந்து கொள்வதும் அவசியமான அம்சமாயிருக்கிறது. ஆகவே, நாம் தேசசரித்திரங்களில் விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்களை ஆராய்ந்து பார்த்து, அரசு முதன்முதலில் தோன்றிய வகையையும் கண்டு பிடிக்க வேண்டும்; அது தோன்றியது நியாயமானதா, அநியாயமானதா என்ற தர்மாதர்மப் பொருத்தத்தையும் பார்க்க வேண்டும்.

உலகில் பத்திகூர்மை அதிகரிக்க அதிகரிக்க, சந்தேகங்களும், அபிபபிராய பேதங்களும் வளர்ந்து பெருகிக்கொண்டே போகின்றனவென்பது பிரத்தியக்ஷமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. எந்த சாஸ்திரத்திலும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கொள்கைகளை அறிஞர்கள் உற்பத்தி செய்து வைத்திருக்கிறார்கள். ஒரு விஷயத்தைப்பற்றி ஒரு நிபுணர் ஒரு விதமான அபிப்பிராயம் வெளியிட்டால், இன்னொரு நிபுணர் அதே விஷயத்தில் அதற்கு மாறாகவோ, எதிரிடையாகவோ அபிப்பிராயம் கொடுப்பதைக் காண்கிறோம். அது போலவே அரசின் உற்பத்தியைப் பற்றி, சில அறிஞர்கள், அவ்வக் காலங்களின் நிலைமைக்குத் தக்கபடி பல கொள்கைகளை நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள். அவைகள் பெரும்பாலும் தவறான கொள்கைகளாகவே இப்பொழுதும் தோன்றுகின்றன. நாம் விசாரணை செய்வதில் தவறானவைகளைத் தவறானவை யென்று மெய்ப்பித்து,

விலக்கிக் கொண்டே போவது, முடிவில் உண்மையைக் கண்டு பிடிக்க அநுகூலமாக இருக்கும். இவ்வாறு முன் காலத்தில் தோன்றிய தவறான அபிப்பிராயங்களின் பலனாக சில தேசங்களின் அரசுகள் அமைந்து இப்பொழுதும் இருந்து வருகின்றமையால், அடி அபிப்பிராயங்களை யெல்லாம், நாம் நன்றாகத் தெரிந்து கொண்டால், அவை எப்படி இக் காலத்து அரசாங்கங்களை அமைத்து வளர்த்தன என்பதை நாம் திருப்திகரமாகக் கண்டு பிடித்து விடலாம். ஆகவே அவற்றை ஆராய்வோம். அரசு முதன் முதலில் எப்படி யுண்டாயிற்று என்பதைப்பற்றி ஏற்பட்டுள்ள எல்லாக் கொள்கைகளிலும் சரித்திரத்தின்படி முதன்மை யடைந் துள்ளகொள்கைஜனசமூக ஒப்பந்தக்கோள்கை என்பதாகும். அதை இங்கிலீஷில் தியரி ஆப் காண்ட்ரு/2க்ட் Theory of contract) என்று குறிக்கிறார்கள். முதன் முதலில் மனிதர் அரசென்பது எப்படி உண்டாயிற்று என்று எந்தக் காலத் தில் ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினார்களோ, அப்பொ ழுது முதலேஇந்தக் கொள்கை உண்டாகி விட்டதுபோலும். இதனால் பிற்காலங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளும் அபார னவை. இது தோன்றியது முதல் இந்த விஷயமாப் பல தத்துவக்ஞானிகளால் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகளி லெல்லாம் இந்த ஜனசமூக ஒப்பந்தக் கொள்கையே பிர தானமாக எடுத்தாளப் பட்டிருக்கிறது. அரசு எப்படி உண்டாயிற்று, அது உண்டாவதற்கு என்ன நியாயம் இருந் தது என்பவற்றை விளக்குவதே இந்தக் கொள்கையின் கருத்து. இதைக் கற்பித்தவர்கள், மனிதர் இந்த உலகத்தில் வசித்துவந்ததன் சம்பந்தமான சரித்திரத்தைஇரண்டுபாகங் களாகப் பிரித்திருக்கிறார்கள். மனிதருக்குள் அரசுதோன்று வதற்கு முந்தியபாக மென்றும், பிந்தியபாக மென்றும்

இரண்டாய்ப் பிரித்து, முந்திய பாகத்தில், மனிதன் தன்னுடைய மனம் போனபடி சுயேச்சையாக வாழ்ந்து வந்தானென்றும், அப்பொழுது சமூகக் கட்டுப்பாடே இல்லையாதலால், அவன் பிறந்த மேனியாய் மிருகத்தைப் போலப் பசி உண்டானால் கையிலகப்பட்டதைத் தின்றும், நினைத்த விடத்தில் படுத்தும், தன்னரசாய்த் திரிந்து கொண்டிருந்தானென்றும், நாகரிக மற்ற அந்த மிருக வாழ்க்கையைப் பின்காலத்தில் அவன் கட்டாயமாய் விலக்கிவிட நேர்ந்தது என்றும் இந்தக் கொள்கையை உண்டாக்கியவர்கள் கூறுகிறார்கள். ஆனால் என்ன காரணத்தினால் மனிதன் தன்னுடைய பூர்விகமான சுயேச்சை நிலைமையை மாற்றிக் கொண்டான் என்பதைப் பற்றி ஷை கொள்கையை உண்டாக்கியவர்களே ஒருவருக்கொருவர் மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கூறுகின்றனர். கேவலம் அநாகரிகமான காட்டு மிருக வாழ்க்கை சிறிதும் சுவை யற்றுத் தோன்றியது பற்றி மனிதன் அதை விட்டு மாறிவிட்டான் என்பது ஒரு சாராருடைய வாதம். மனிதன் பேராசையினால் தூண்டப் பட்டொருவனிடத்திலிருந்த பொருளைமற்றவன் அபகரித்துக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கவேண்டும், அந்த நிலைமை காலக்கிரமத்தில்சகிக்கமுடியாதபடி அவ்வளவு துன்பமாய்ப் பெருகி இருக்கவேண்டும், அதனாலேயே மனிதர்கள் ஒன்று சேர்ந்து அரசை உண்டாக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பது இன்னொரு சாராருடைய வாதம். இவ்விருவகைகளில் ஒன்றை அநுசரித்து, மனிதன் தன்னுடைய பூர்விகமான தனித்த நிலைமையை விலக்கி விட்டு, வேறு பல மனிதருடன் ஒன்றாகச் சேர்ந்து, திருந்திய ஜனத்தொகுதியை அல்லது கட்டுப்பட்ட ஜனசமூகத்தை உண்டாக்கிக் கொண்டான், இவ்வாறு ஒன்று சேர்ந்த சமூகத்தில் ஒரு

வருக்கொருவர் ஒரு புதிய சம்பந்தம் உண்டாயிற்று, சமூகத்தின் மொத்தமான கட்டுப்பாட்டிற்கு ஒவ்வொருவனும் அடங்கி நடப்பதற்குப் பிரதிபலனாக, ஒவ்வொருவனுக்கும் எவ்விதமான துன்பமும் நேராமல் சமூகத்தார் அக்கரை காட்டினர், இவ்வாறு ஏற்பட்ட கட்டுப்பாடே அரசெனப்படுவது; சமூகத்திலுள்ள ஒவ்வொருவரது உரிமையையும், மற்றவர் அபகரிக்காமல் தடுப்பதற்குப் பலவிதமான கட்டுப்பாடுகள் அல்லது சட்டதிட்டங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன, இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் தனது ஆதிநிலைமையில் அநுபவித்து வந்த சுதந்தரத்தை விட்டுக் கொடுத்து அதற்குப் பிரதிபலனாக தன்னைச் சேர்ந்த ஜனசமூகத்தார் ஒப்பந்தத்தின் மூலமாய்ச் செய்து கொடுக்கும் பாதுகாப்பைப் பெறுகிறான், மனிதன் இயற்கைக் கிரமப்படி நடந்துகொண்டது போக செயற்கைக் கிரமம் அநுஷ்டானத்திற்கு வரலாயிற்று, அல்லது, இயற்கைச் சட்டம் கழிய, மனிதச் சட்டம் வழக்கத்தில் வந்தது, மனிதன் ஜனசமூக சம்பந்தமாய் சில கடமைகளைச் செய்வதாய் ஏற்றுக்கொண்டு அதற்கு மாறாகச் சில உரிமைகளைப் பெறுகிறான், இவ்வாறுதான் அரசு என்பது தோன்றியது என்று மேலே குறிக்கப்பட்ட கொள்கையினர் கூறுகின்றனர். இந்த ஏற்பாட்டை, அல்லது, இதனால் ஏற்படும் பலனை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால், மனிதன் தன்னுடைய சுயநலத்தைக் கருதி, மற்றவர்களுடன் ஒப்பந்தமோ, அல்லது, வியாபாரமோ செய்வது, கடமைகளை விற்று உரிமைகளை வாங்கிக்கொள்வது போலவே தோன்றுகிறது. இந்தக் கொள்கையை உற்பத்தி செய்தவர்கள், உலகத்தில் ஏற்பட்ட எல்லா அரசுகளும் தனித்தனியாக இதே மாதிரியான ஒப்பந்தத்

தின்மேல் ஏற்பட்டதா, அல்லது, காலக்கிரமத்தில் ஒன்றி லிருந்து மற்றொன்றுக்கு இந்த ஏற்பாடு பாவியதா என்ற முக்கியமான விஷயத்தை அடியோடு கவனிக்காமலேயே விட்டுவிட்டனர். இம்மாதிரிதான் அரசு உண்டாயிற்று என்பதை அவர்கள் ஏதேனும் ஒரு தேச சரித்திரத்தி லிருந்து கண்டு பிடித்தார்களா, அல்லது, இப்படித்தான் நடந்திருக்க வேண்டுமென்ற யூகத்தின்மேல் இதை ஸ்தா பித்தார்களா என்பதையும் நாம் கண்டுபிடிக்க இயலவில்லை. ஆதிகாலத்து தேச சரித்திரங்களை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால், இவ்விதமான ஒப்பந்த முறையினாலேயே அரசு ஏற்பட்டதென்று சொல்வதற்கு ஆதாரமே இல்லை. ஆதியில் காட்டு மனிதராக இருந்துவந்த மனிதர்கள் திடீரென்று ஒருநாள் விழித்துக்கொண்டு புத்திசாலிகளாய் மாறி ஒன்றுய்க் கூடி இந்த ஏற்பாட்டைச் செய்துகொண்டு சில நாழிகையில் அரசையும் ஸ்தாபித்துக்கொண்டு ஒழுங் காக நடக்கத் தொடங்கிவிட்டனர் என்று கூறுவது அசம் பாவிதமான செய்தியாகும். நாகரிகத்தின் உற்பத்தி ஸ்தானமாகிய கிரீஸ் தேசத்தில் இருந்த தத்துவக்ஞானி களான பிளேடோ, அரிஸ்டாடில் என்பவர்களால் எழுதப்பட் டுள்ள நூல்களை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் அரசு என்பது இம்மாதிரியான ஒப்பந்தத்தின் மேல்தான் உண் டாயிற்றென்று கூறுவதற்கு இடமே இல்லை. கிரீஸ் தேசத் தில் மனிதசமூகமே பிரதானமாகக் கருதப்பட்டதன்றி தனிப்பட்ட மனிதன் இரண்டாம் பக்ஷமாகவேமதிக்கப்பட் டான். குடிமக்கள் கஷ்டப் பட்டாலும், அரசு திறமை யாக இருக்க வேண்டு மென்பதே அவர்களது நோக்கம். மேலே குறிக்கப்பட்ட அரிஸ்டாடில் எனப்படும் தத்து வக்ஞானி "மனிதன் இராஜீய உணர்ச்சியுடைய பிராணி"

என்று ஓரிடத்தில் கூறியிருக்கிறார். சமூகத்தாரின் கட்டுப் பாட்டுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற உணர்ச்சி மனி தனுடைய மனத்தில் இயற்கையாகவே உண்டாகிறது என் பது அதன் கருத்து. இதன்படி பார்த்தால், முதலில் மனி தன் கட்டுப்பாடின்றித் திரிந்து பிறகு சமூகத்தை உண் டாக்கிக் கொண்டான் என்பது தவறாகிறது. சமூகக் கட்டுப் பாடே முதன்மையானதென்பதும், அதின்றி மனிதன் தனித்திருந்தானென்பது சாத்தியமற்றதென்பதும், மனி தன் பிறந்தபொழுதே அரசும் இருந்திருக்க வேண்டு மென்பதும் கிரீஸ் தேசத்தாருடைய கொள்கைகளாதலால், ஒவ்வொரு மனிதனும் சமூகத்தாருடன், கடமைகளைக் கொடுத்து உரிமைகளைப் பெற்றுக் கொள்வதாக, ஒப்பந்தம் செய்து கொண்டானென்பது அவர்களுடைய அபிப்பிரா யத்திற்கு முற்றிலும் எதிரிடையானதென்றே கொள்ள வேண்டும்.

பல நூற்றாண்டுகளுக்குப் பின், கிரீஸ் தேசத்தின் அரசியலில் மாறுதல்கள் ஏற்பட்டன. மாஸிடோனியா, உரோம் ஆகிய தேசத்தார் கிரீஸ் தேசத்தைப் பிடித்துத் தமதாக்கிக் கொண்ட காலத்தில், அவர்களுடைய அரசியல் கொள்கைகள் கிரீஸ் தேசத்தாருடைய பழைய கொள் கையை மாற்றிவிட்டன. அந்தக் காலத்தில் அரசியல் சம்பந்தமாக எழுதப்பட்டுள்ள நூல்களில், ஒரு தேசத் தில் அன்னியருடைய ஆட்சியிலும் சரி, சுதேசத் தாரின் ஆட்சியிலும் சரி, துரைத்தனத்தாரால் ஏற் படுத்தப்படும் சட்டங்களையும் கடமைகளையும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சுய நன்மையைக் கருதி ஏற்றுக் கொண்டு அதன் மூலமாய் அரசாட்சி நடத்துகிற வர்களோடு தான் ஒரு மாதிரியான ஒப்பந்தம் செய்து

கொண்டவனுகின்ருனென்றும் சிலர் எழுதியிருக்கிருர்கள். இந்த ஆதாரத்திலிருந்தே மனித சமூக பரஸ்பர ஒப்பந்தக் கொள்கை உற்பத்தியாயிற்று. ஒவ்வொரு தனித்த மனிதனும் அரசோடு ஒப்பந்த மூலமாய்க் கட்டுப்பட்டவன், இன்னின்ன கடமைகளைச் செய்ய வேண்டியவன் என்ற விஷயங்கள் உரோம் தேச சட்டங்களில் நிரம்பவும் தெளிவாகக் காட்டப்பட்டிருப்பதிலிருந்து பல ஸ்தாபனங்கள் பெருகியதன்றி, இந்தப்பரஸ்பர ஒப்பந்தக்கொள்கையினர் இதையே பூர்த்தி செய்து கொள்ளவும் ஆதாரமாக இருந்தன. கிருஸ்துவ மதத்தினர் அவர்களுடைய அக்காலத்து போதனைகளில், மனிதர்கள் ஆதியில் பாவகரமான செய்கைகளைச் செய்ததன் பலனுகவே, சீர் திருந்திக் கட்டுப்பாடடைந்த ஜனசமூகம் ஏற்பட்டதென்று உபதேசித்ததன்றி, கிருஸ்துவ மதத்தை யநுசரிப்பவர் இகலோக அரசின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது அவர்களுடைய கடமையென்றும், அது மனிதருடைய அகங்கார மமகாரங்கள் ஒழிவதற்கு ஒரு சாதனமாயிருக்குமென்றும் கூறினர். அவர்கள் கூறிய அந்தக் கொள்கை மனித சமூக பரஸ்பர ஒப்பந்தக் கொள்கைக்கு நேர்விரோதமாக இருந்து வந்தது. ஆனல் இடைக் காலங்களில் ஐரோப்பிய தேசங்களில், கிருஸ்துவ மதத்தினர் எல்லோருக்கும் மேலான தலைமை குருவான போப் என்பவருடைய அதிகாரம் மேலானதா, அந்தந்த தேசத்தின் அரசர்களுடைய அதிகாரம் மேலானதா என்பதைப்பற்றி பிரமாதமான சச்சரவுகளும், கலகங்களும், போர்களும் நடந்த காலத்தில், போப் குருவை ஆதரித்தவர்கள் இன்னெரு புது மாதிரியான கொள்கையை நிர்த்தாரணம் செய்தனர். அரசர்களும், சக்கரவர்த்திகளும் கடவுளின் அநுமதியின் மேலேதான்

அந்தப் பதவியை அடைந்திருக்கிறார்களென்றும், தாங்கள் நீதி நெறிப்படி அரசாட்சி புரிவதாய் அவர்கள் ஜனங்களுக்கு உடன்படிக்கை செய்து கொடுத்தே ஆளுகின்றன ரென்றும் அவர்கள் ஒரு புது மாதிரியான வியாக்கியானத்தை உற்பத்தி செய்தனர். அதாவது ஜனங்களுக்கும் அரசனுகிய ஒரு தனிப்பட்ட மனிதனுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டதென்பது இந்தப் பிரத்தியேகமான கொள்கையின் கருத்து.

2. ஜன சமூக ஒப்பந்தக் கோள்கையை ஹாப்ஸ், லாக், ரூஸோ என்பவர்கள் உபயோகித்த விதம். நாம் மேலே குறித்தபடி, அரசாட்சி புரிவோருக்கும், மதகுருவிற்கும் ஏற்பட்ட சச்சரவுகளின் பயனுக, பதினேழு பதினெட்டாவது நூற்றுண்டுகளில், ஜனசமூக ஒப்பந்தக் கொள்கை முன்னிருந்ததைவிட அதிகமாய்ப் பிரசித்தமடைந்து ஓங்கியது; இங்கிலந்து தேசத்தைச் சேர்ந்த ஹாப்ஸ் என்பவரும், லாக் என்பவரும், பி/ரான்ஸ் தேசத்தினரான ஜீன் ஜேக்ஸ் ரூஸோ என்பவருமே இந்தக் கொள்கையே அபாரமாகப் பிரசித்தப் படுத்தியவர்கள். இவர்களுள் ஹாப்ஸ் என்பவர் இங்கிலந்து தேசத்தை ஆண்ட சார்லஸ் என்ற மன்னருக்கு உபாத்தியாயராயிருந்தவர். அவர் 1651-ம் வருஷத்தில் லெவியதன் என்ற தமது நூலில் இந்தக் கொள்கையை வற்புறுத்தி விளக்கிக் காட்டி இருக்கிறார்; மனிதன் ஜெனிக்கும் பொழுதே அவனுடன் தோன்றும் இயற்கையான குணத்திலிருந்தே இந்தக் கொள்கை உற்பத்தியாகிறது, இயற்கையாகவே மனிதன் தனது சொந்த விஷயங்களில் நாட்டமுள்ளவன், சுய நலத்தையே விரும்புகிறவன், மனிதன் செய்யும் ஒவ்வொரு காரியமும், நாம் கவனித்துப் பார்த்தால், அவன் தன்னுடைய தேவைகளேயும், வேட்கைகளேயும் பூர்த்தி

செய்து கொள்ளும் கருத்துடனேயே செய்யப்படுவதாகவே இருக்கிறது, தன்னை மற்றவர் அதிக வல்லமையுடையவனென்று துதிக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலும், அதனால் தனக்கு ஏற்படும் இன்பத்தைக் கருதியுமே மனிதன் பிறரிடம் தயாள குணத்தோடு நடந்து கொள்ளுகிறான், பிறர் ஒரு துன்பத்தை யநுபவித்தால், தனக்கும் ஒருகால் அந்தத் துன்பம் நேரலாமென்று பாவித்தே அவன் பிறருடைய விஷயத்தில் இரக்கம் காட்டுகிறான், ஆகையால் மனிதனுடைய சுபாவகுணம் தன்னுடைய சொந்த விஷயத்தை முதன்மையாக கவனிப்பதேயன்றி, மற்றவர்களுடையநன்மையை முதன்மையாகக்கருதுகிறதேயல்ல, அவனைச் சுற்றிலுமிருக்கும் மற்ற எல்லா மனிதரும் அவனைப் போலவே சுய நலம் கருதுகிறவர்களாயும், பேராவாக் கொண்டு பிறருடைய பொருள்களை அபகரிப்பவர்களாயும் இருப்பதனால், ஜனசமூகத்தில் இருந்து வாழ்வதில் ஒவ்வொரு மனிதனுக்கும் துன்பமும் துயரமுமே உண்டாகின்றன, ஆகையால் மனிதன் பிறந்த மேனியாயிருப்பதில், ஒவ்வொருவனும் மற்ற எல்லோருடனும் சச்சரவிட நேருகின்றதாகையால், அது பெருத்த அமர்க்களமாகவே முடிகிறது, மனிதன் ஒவ்வொருவனும் சதாகாலமும் பிறருக்கு அஞ்சிக்கிடப்பதும், கொடுமையான அபாயங்களினால் உயிரை இழப்பதுமே அதன் இயற்கையாக இருக்கின்றன, மனிதன் ஏகாங்கியாகவும், எளியவனாகவும், அசங்கியமாகவும், மிருகத்தன்மை யுடையவனாகவும், அற்பாயுள் படைத்தவனாகவும் இருந்து தன் ஜீவனைப் போக்குகிறான், இந்த பயங்கரமான நிலைமையை விட்டு மனிதன் மற்ற மனிதர்களோடு சேர்ந்து பொதுவான ஓர் அதிகாரத்தை ஸ்தாபிக்கிறான், அதன் கட்டுப்பாட்டிற்கு எல்

லோரும் அடங்கி நடப்பது இயற்கை நிலைமையில் ஒருவரோ டொருவர் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைவிட சிலாக்கியமானதாகத் தோன்றுகிறது, அவ்வாறு ஏற்படுத்தப் பட்ட பொதுவான ஆதிக்கம் கொடுங் கோன்மையாக நடத்தப் பட்டால் கூட அதுவே சிரேஷ்டமானது, இவ்வாறு மனிதர்கள் எந்த ஓர் அதிகாரிக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார்களோ அவனே அரசன், அல்லது, ஏதேச்சாதிகாரம் பெற்ற சக்கரவர்த்தி என்று ஹாப்ஸ் என்பவர் இந்தக் கொள்கைக்கு வியாக்கியானம் செய்திருக்கிறார். இவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தினால், அரசருக்கும் நன்மை ஏற்படுவதென்பது உண்மையானாலும், அவர்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர், அவர்கள் தங்களை அரசராய் ஏற்படுத்தும்படி எவரிடமும் போய் வேண்டவில்லை, அவர்களுடைய சௌரியத்தையோ மேம்பாட்டையோ கருதி மற்றவரே அவர்களைத் தேர்ந்தெடுத்து அதிகாரத்தை யளித்துஅவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கலாயினர், அந்த ஏற்பாட்டில் அரசர் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை யாதலால், அவர்கள் கொடுங்கோன்மையாக அரசு நடத்தினாலும், அந்த ஒப்பந்தத்தை அவர்கள் மீறியதாகச் சொல்ல இயலாதுஎன்றும் ஹாப்ஸ் என்பவர் வியாக்கியானம் செய்திருக்கிறார். அவர் இரண்டாம் சார்லஸ் அரசருக்கு உபாத்தியாயராயிருந்தவரென்று முன்னரே நாம் குறித்தோமல்லவா. அந்த வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் கொடுங்கோலரசர்களாகவே இருந்தவர்கள். அவர்களது நடத்தைகள் நியாயமானவைகளே என்று ஸ்தாபிப்பதற்கு ஆதாரமாக ஷெ உபாத்தியாயர் இந்த வியாக்கியானத்தைக் கூறினர்.

அந்த நூலாசிரியரது காலத்தில் இருந்த கீர்த்தி பெற்ற இன்னொரு நூலாசிரியரான லாக்ஸ் எனப்படுபவர் இதே கொள்கையை முற்றிலும் வேறு வகையாக எடுத்துக் கூறியிருக்கிறார். ஆதிகாலத்தில் மனிதருக்குள் ஓரே சண்டையாக இருந்திருக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால், அக்காலத்தில் மனிதருடைய வாழ்க்கை அசௌகரியமாகவும், அதிருப்திகரமாகவும் இருந்திருக்க வேண்டும், உருப்படியான நிலைத்த சட்டமென்பது வெகு காலமாக அவர்களிடம் இல்லாமையே முதன்மையான காரணம், மனிதர்கள் சுய நலப் பிரியர்களாகையால் அவர்கள் தாம் தாம் செய்வதேசரியானதென்ற எண்ணத்துடனிருப்பது பற்றி, இயற்கைக் கிரமங்கள் தெளிவாக இல்லாமல் மறைந்து போயிருக்கின்றன, மனிதர் அவைகளைக் கற்றுணராத அக்ஞானிகளாக இருந்தார்கள், அவர்களினிடையில் எல்லாவற்றையும் அறிந்த பக்ஷபாத மற்ற நீதிபதியும் ஏற்படவில்லை, இயற்கைக் கிரமங்களை மீறி நடப்போரை தண்டிப்பதற்குரிய அதிகாரியும் இல்லை, இத்தியாதி காரணங்களினால் மனிதர் தமக்கு இயற்கையில் ஏற்பட்ட சுதந்தரத்தை விட்டுக் கொடுத்து, நாகரிக மடைந்து திருந்தி ஒரு சமூகமாகச் சேர்ந்து எல்லோரும் அதன் அதிகாரத்திற்கு அடங்கி நடப்பதென்ற ஏற்பாட்டைச் செய்து கொண்டனர், இவ்வாறு மனிதர் பரஸ்பரம் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் அரசரும் சேர்ந்தவர்களே, அவர்களும் இதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர்களே என்பது லாக் என்ற நூலாசிரியருடைய வியாக்கியானம். இவருடைய வியாக்கியானத்தின் படி, இந்த ஒப்பந்தம் அரசருடைய அதிகாரத்தை நிலைநாட்டுவதோடு மட்டும் நில்லாமல், ஜனங்களுள் ஒவ்வொரு

வரையும் பரஸ்பர சம்பந்தத்தினுல் ஒரு சமூகமாகப் பிணைப்பதாகிறது. மேலே குறித்த ஹாப்ஸ் என்பவருடைய வியாக்கியானத்திற்கும் இவருடைய வியாக்கியானத்திற்கும் முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தில் அரசர் சம்பந்தப்படவில்லை யாகையால், அவர்கள் எப்படி நடந்தாலும், அந்த ஒப்பந்தத்தை அவர்கள் மீறியதாகக் கூற இயலாது என்பது ஹாப்ஸ் என்பவருடைய அபிப்பிராயம். அரசரும் அந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டவர், அதன்படி நடந்து கொள்ளுகிற தென்கிற நிபந்தனையின் ஆதரவை வைத்துக் கொண்டே அரசர் தமது அதிகாரத்தை நடத்துகிருர், அவர் அதன் வரம்பை மீறி நடந்தால், அந்த ஒப்பந்தம் தீர்ந்து போனதாகவே கருதப்பட வேண்டும், ஜனங்கள் அவர்களுடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டு மென்ற நியதியும் இல்லாமல் போகும் என்பது லாக் என்பவரின் அபிப்பிராயம். ஹாப்ஸ் என்பவருடைய வியாக்கியானத்தின்படி பார்த்தால், அரசன் கொடுங்கோலனு யிருந்தாலும், ஜனங்கள் அவனைக் கண்டிக்கும் அதிகார மற்றவர்கள், அப்பொழுதும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவே கடமைப்பட்டவர்கள் என்ற நியதியே ஏற்படுகிறது. லாக் என்பவரின் வியாக்கியானத்தின்படி பார்த்தால், அரசன் கொடுங்கோலனுய் இருப்பதற்கு அவனுக்கு உரிமையே இல்லை, அவனுடைய அதிகாரம் ஒரு வரம்பிற்குள் அடங்கியது, அவன் அந்த வரம்பை மீறி நடந்தால், அவனை விலக்கிவிட ஜனங்களுக்கு அதிகார முண்டு என்ற கருத்தையே அவர் ஸ்தாபிக்கிருரென்பது தெளிவாக விளங்குகிறது. அக்காலத்தில் இருந்த கொடுங்கோல் மன்னரை ஜனங்கள் ஒழித்து, வரம்பிற்குள் அடங்கிய அரசை ஸ்தாபித்தது நியாயமான

செய்கைதா னென்று ஆதரிப்போரில் இவரே தலைமை யானவர்.

இவர்கள் இருவரும் பதினேழாவது நூற்றாண்டில் இருந்தவர்கள். அதற்கடுத்ததான பதினெட்டாவது நூற்றாண்டில், பி/2ரான்ஸ் தேசத்தில் இருந்த நூலாசிரியரான ஜீன் ஜேக்ஸ் ரூஸோ என்பவர் இதே ஒப்பந்தக் கொள்கையை இவர்கள் கூறியுள்ளதற்கு மாறாகக் கூறியிருக்கிறார். 1762-ம் வருடத்தில் அவரால் எழுதப்பட்டுள்ள கான்ட்ரா/2ட் ஸோஷியல் என்ற நூலை அந்த நூற்றாண்டில் பிரதானமாக ஓங்கி நின்ற கொள்கையை விளக்குவதாக நாம் கருத வேண்டும். உலகத்தில் அரசு தோன்றுவதற்கு முன் மனிதர்கள் சுயநலத்தைக் கருதிப் பேராசை கொண்டு சதாகாலமும் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டு உலகத்தை அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தனவென்று ஹாப³ஸ் கூறினார். லாக் என்பவர் அப்படி இராது, மனிதர் சாதாரணமாய் அசௌகரியமும் அதிருப்தியுமான நிலைமையில் வாழ்ந்திருக்கலா மென்று கூறினார்.

ஜீன் ஜேக்ஸ் ரூஸோ என்பவர் அடியில் வருமாறு வியாக்கியானம் செய்கிறார். அரசு தோன்றுவதற்கு முன்னால் மனிதர் சொற்பத் தேவைகளையே உடையவர்களாய் சுயேச்சையாகவும் ஆநந்தமாகவும் வனம் வனாந்தரங்களில் இருந்து வாழ்க்கை நடத்தி இருக்க வேண்டும், நாகரிகம் அதிகமாய்ப் பெருகப் பெருக மனிதருடைய கவலைகளும் தேவைகளும் வளர்ந்து அவர்களை உருக்குலைத்து துர்ப்பலத்தை உண்டு பண்ணிவிடுகிறது, அந்த அவகேட்டிற்கு இலக்காகாத பூர்விக காலத்து அநாகரிக மனிதர்கள் அபாரமான பலமும் தேகாரோக்கியமும் உடையவர்களா யிருந்தார்களாதலால், அவர்களுடைய சொற்ப தேவைகள் வெகு சுலபத்தில்

திருப்தியாகக் கூடியவையாய் இருந்தன, நாகரிக முதிர்ச்சியின் பயனாய் கல்வி, நீதி நியாயங்கள் முதலிய விஷயங்களில் ஜனங்கள் முரண்பாடான கொள்கைகளையும் சந்தேகத்தின்மேல் சந்தேகங்களையும் வைத்துக் கொண்டு, ஒருவிதமான முடிவிற்கும் வரமாட்டாமல் தவிக்கும் இக்காலத்து ஜனசமூகத்தார், ஆதிகாலத்து மனிதருடைய ஸர்வ ஸாதாரணமும் ஸுலபமுமான வாழ்க்கையை நோக்கியே தம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும், ஆரம்பத்தில் சொற்பத் தொகையினராயிருந்த பூர்விகர்கள் மேலே கூறியபடி இயற்கையிலேயே ஏற்பட்ட தமது கிரமகிருத்தியங்களை நடத்திக்கொண்டு ஆநந்தமாகக் காலங்கழித்தனர். ஆனல், காலக்கிரமத்தில், அவர்களுடைய ஜனசங்கியை அதிகரிக்க அதிகரிக்க, ஆதிகாலத்து நிலைமை அவ்வளவு சௌகரியமானதாகத் தோன்றவில்லை, அவர்கள் தங்களுடைய பழைய சுயேச்சையான நிலைமையிலேயே இருப்பதற்கு இயலாதபடி அவர்களுக்குப் பலமான இடைஞ்சல்கள் தோன்றுகின்றன, மனிதன், தான் சம்பாதிக்கக் கூடிய எந்தப் பொருளையும் பிறருடைய உபத்திரவமின்றி வரம்பில்லாமல் அநுபவிப்பதான சுயேச்சாதிகாரத்தை விட்டு, பிறருடன் சேருவதால், தனது இயற்கை சுதந்தரத்திற்குப் பிரதியாக ஜனசமூகத்தாரால் அளிக்கப்படும் சுதந்தரத்தை அடைகிறன், அதை அடைவதற்காக அவன் ஒரு கூட்டத்தாரை உற்பத்தி செய்து கொள்ள நேருகிறது, அந்தக் கூட்டத்தார் தங்களுடைய மொத்தமான பலத்தினல், தங்களுள் ஒவ்வொருவருடைய உயிரையும், உடைமைகளையும் காப்பாற்ற வேண்டும், அந்தக் கூட்டத்தில் அடங்கியுள்ள ஒவ்வொருவனும் மற்றவர்களோடு ஐக்கியப்பட் டிருந்தாலும், தன்னுடைய விருப்பப்படியே

நடந்து, முன் போலவே, சுதந்தர முடையவனாக இருக்க வேண்டும், இதுவே ஜனசமூக பரஸ்பர ஒப்பந்தம், இது ஒவ்வொருவனும் மற்ற எல்லோருடனும் செய்து கொள்ளும் உடன்படிக்கை, அரசனோ சக்கரவர்த்தியோ, அல்லது, துரைத்தனம் நடாத்தும் தொகுதியினரோ, இந்த உடன் படிக்கைக்கு சம்பந்தப்பட்ட ஒரு சாரார் அல்லர், ஆளுகிற வர், அல்லது, ஆளுகிறவர்கள் உத்தியோகம் வகிப்பதற் குரிய நிபந்தனைகளும் ஷை உடன்படிக்கையின் நிபந்தனைக ளல்ல, ஷை உடன்படிக்கையின் பயனாய்க் கூடியுள்ள ஜன சமூகத்தார் எல்லோரும் ஒன்று சேர்ந்து வெளியிடும் அபிப் பிராயமே, எல்லாவற்றிற்கும் மேலான சக்கரவர்த்தி ஸ்தா னத்திற்குரிய அதிகாரம், அதன் உத்தரவிற்குக் கீழ்ப் படிந்து தமது உத்தியோகத்தை வகிப்பவரே அரசர், ஜன சமூகத்தார்எல்லோரும்இச்சைப்பட்டால், தங்கள் அரசனை விலக்கிவிட உரிமையுண்டு என்று ஜீன் ஜேக்ஸ் ரூஸோ என் னும் ஆசிரியர் இந்த கொள்கைக்கு வியாக்கியானம் செய்தி ருக்கிறார். ஜன சமூக பரஸ்பர ஒப்பந்தக் கொள்கையையே ஹாப்ஸ், லாக்,ஜீன் ஜேக்ஸ் ரூஸோ ஆகியமூவரும்ஸ்தாபிக் கிறார்களானாலும், ஜனங்களுக்கும் அரசருக்கும் உள்ள சம் பந்த விஷயத்தில் மூவரும் மூன்று விதமான வியாக்கியா னங்களைக் கூறியிருக்கின்றனர். ஒப்பந்தக் கொள்கையை ஏற்படுத்தியதில் அரசர்கள் அதற்கு உட்பட்டவ ரல்லரென் றும், அவர்கள் கொடுங்கோன்மையாக அரசு புரிந்தாலும், அவர்களை விலக்க ஜனங்களுக்கு அதிகாரமில்லை,அவர்களைக் கட்டுப்படுத்தும் சட்டமுமில்லை, அவர்கள் சட்டத்தை மீறி னார்களென்று சொல்லவும் இயலாது, அவர்கள் எல்லா வரம் பையும் கடந்துநிற்பவர்கள் என்றும்ஹாப்ஸ்கூறினார்.லாக் என்பவர் அரசர்கள் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டவர்க-

ளுள் ஒரு சாரார்தான், அவர்கள் வரம்பிற்குள் அடங்கி நடக்கவேண்டியவர்கள், ஜனசமூகத்தின் நன்மைக்கு மாருக நடப்பார்களானால், அவர்களை ஜனசமூகத்தார் விலக்கி விடலாம் என்கிறார். ஜீன் ஜேக்ஸ் ரூஸோ வோ சக்கரவர்த்திஸ்தானத்திற்குரிய சர்வஅதிகாரமும் ஜனசமூகத்தாரிடத்திலேயே இருக்கிறது, அவர்களுடைய இச்சையின்படி அடங்கி வேலை பார்க்கவேண்டியவர்களே அரசர்கள், அவர்களுக்கும் ஜன சமூக ஒப்பந்தத்திற்கும் சம்பந்தமில்லை யென்கிறார். ஒரே கொள்கையை வைத்துக் கொண்டு ஒருவர் கட்டிலடங்காதகொடுங்கோலரசருக்கு ஆதரவுகொடுக்கிறார்; இன்னொருவர் சட்ட வரம்பிற்குள் அடங்கி நடக்க வேண்டியவர்களே அரசர்கள் என்கிறார், மற்றவர் ஜனங்களே அரசர்கள், அரசரெனப்படுவோர் ஜன சேவகர்களே, சர்வ அதிகாரமும் ஜனங்களுடையதே என்று கூறுகிறார்.

3. ஜனசமூக ஒப்பந்தக் கொள்கை சரியானதா, தவருனதா? இதுவரையில் நாம் ஜன சமூகத்தினர் தங்களுக்குள் உடன்படிக்கை செய்துகொண்டு அரசை உற்பத்தி செய்தனர் என்பதான கொள்கையையும், அதற்குப் பலர் பலவிதமாக வியாக்கியானம் செய்திருப்பதையும் ஆராய்ந்தோம். இனி அந்தக் கொள்கையை அவர்களுக்குப் பின்னால் தோன்றிய நூலாசிரியர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்களா வென்பதை கவனிப்போம். அது சரியான கொள்கை யல்லவே அல்லவென்று பதினெட்டாவது நூற்றாண்டிலேயே வேவிட் ஹியூம் என்பவர் அதைத் தாக்கி எழுதத் தொடங்கிவிட்டார். அதன் பிறகு பத்தொன்பதாவது நூற்றாண்டில் தோன்றிய நூலாசிரியர்கள் ஒருவர்பின் னொருவராய்த் தொடர்ச்சியாக அந்தக் கொள்கையை தகர்த்தெறிந்து கொண்டே வந்திருக்கிறார்கள். அது அசாத்தியமானதென்றும், அசம்பாவித

மானதென்றும் அவர்கள் கூறி, அதனுடைய கௌரவத்தையே பிடுங்கி விட்டனர். அந்தக் கொள்கை பெரிய அபாயத்தை உண்டுபண்ணக் கூடியது எனவும் சிலர் அச்சுறுத்துகின்றனர். ஜெரிமி பெந்தம் என்பவர், "ஆதியில் ஒப்பந்தம் செய்யப்பட்டதென்னும் கொள்கைக்கு நான் சலாம் செய்து விடைகொடுத் தனுப்புகிறேன். அந்தக் கொள்கை இருக்கத்தான் வேண்டுமென்று கூறி வைத்துக் கொள்ள விரும்புவோர் உளறிக் கொண்டு திரியட்டும்" என்று கூறுகிறார். ஸ்விஸ் ஜாதியைச் சேர்ந்தவரும் ஜெர்மன் பாஷையில் அரசியல் தத்துவ சாஸ்திரமெழுதி யிருப்பவரும் பிரக்யாதி பெற்ற நூலாசிரியருமான ஜே. கே. ப்ளண்ட்ஷ்லி, "ஜனங்கள் இந்த மாதிரி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்று எந்த தேச சரித்திரமும் சொல்லவில்லை யாகையால், இதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இது முற்றிலும் பொருத்தமற்ற வெறும் யூகமே. அதுவுமன்றி, அரசும் துரைத்தனமும் சாதாரண மனிதனுடைய விருப்பு வெறுப்பைப் பொருத்து நடப்பதென்று வைத்துக் கொள்வோமானால், அதனால் பிரமாதமான அபாயம் நேர்ந்துவிடும்" என்று கூறுகிறார். அதனால், அரசனுடைய ஆக்ஞைகளுக்கு மதிப்பும் ஏற்படாது, அதை மீறும் துணிவும் ஜனங்களுக்கு ஏற்பட்டுவிடும், அரசாட்சி ஒழுங்கீனப்பட்டுப்போம், அவனுடைய ஆதிக்கமும் நிலைத்திருக்காது என்பது அவரது சித்தாந்தம்.

ஜனசமூக ஒப்பந்தக் கொள்கைக்கு விரோதமாகக் கூறப்பட்ட காரணங்கள் எல்லாவற்றிலும் முக்கியமானதும் மறுக்க முடியாததும், அந்தக் கொள்கையை ஜனங்கள் ஏற்படுத்திக் கொண்டதாக எந்த தேச சரித்திரமும் கூறவில்லை என்பதேயாகும். அதற்கு முன் அரசின் கீழ்

வாழாதவரும், அரசு என்றால் என்னவென்பதையே அறியாதவருமான காட்டு மனிதரில் ஒரு கூட்டத்தார் ஒன்று கூடி திடீரென்று ஒப்பந்தம் செய்து கொண்டு அரசை உண்டாக்கிவிட்டார்களென்று எந்த தேச சரித்திரமும் கூறவில்லை, துரைத்தனம் என்பதே என்ன வென்பதை யறியாதவர்கள், அதை ஏற்படுத்தினால் நன்மை உண்டாகுமென்று முன்னதாகவே எதிர்பார்த்து அதை ஸ்தாபித்தார்களென்று கூறுவது அசம்பாவிதமானது. அவர்கள் ஓர் அரசாட்சியை உற்பத்தி செய்வதற்கு முன்னமே, அரசாட்சி யென்ன வென்று தெரிந்து கொண்டிருந்ததாக நாம் எண்ண இடங்கொடுக்கிற தாகையால், அந்தக் கொள்கை பொருத்த மற்றதாக இருக்கிறது. ஆனால் அதற்கு முன்பே ஓர் அரசாட்சியின் கீழிருந்து பழகிய சில ஜனங்கள் ஒன்று கூடி வேறொரு புதிய அரசை நிலை நாட்டினார்கள் என்பதற்கு தேச சரித்திரத்தில் ஆதாரமிருக்கிறது. அப்படி அரசு தோன்றுவது பொருத்தமானதே. இதற்கு உதாரணமாக நாம் முன்னேரிடத்தில் கூறிய அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தைக் குறிக்கலாம். இங்கிலந்தில் அரசராலும் அவரைச் சேர்ந்தோராலும் ஏற்பட்ட மதக் கொடுமைகளை சகித்திருக்க மாட்டாமல் பியூரிடன்ஸ் என்ற வகுப்பார் 1620ம்வருஷத்தில் அந்த தேசததை விட்டுக் கப்பலேறி,அக்காலத்தில் வேறுஎவராலும் கைப்பற்றப் படாதிருந்ததான அமெரிக்காக் கண்டத்திற்குப் போய்க் குடியேறினர். அவர்கள் சென்ற பொழுதே நடுவழியில் கப்பலிலேயே தங்களுக்குள் எழுத்து மூலமான ஓர் உடன்படிக்கையை உண்டாக்கி, தாங்கள் அதன் மூலமாய் ஒன்றுபட்டு தங்களுக்குத் தாங்களே அரசை ஏற்படுத்துவதென்று எழுதி ஒப்பந்தம் செய்து கொண்டனர். பிற்காலத்திலும்

அவர்களுடைய ஐக்கியநாடுகளில் இதைப்போன்ற எழுத்து மூலமான ஜன சமூக ஒப்பந்தங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் எல்லோரும் அதற்குமுன் வேறோர் அரசின் கீழிருந்து அநுபவமும், பழக்கமும் அடைந்தவர்கள். அவர்கள் அரசை உற்பத்தி செய்து கொள்வது சுலபமே. ஆதிகாலத்தில் அரசே இன்னதென்பதைப் பற்றிக் கனவிலும் நினைத்தறியாத அநாகரிக மனிதர்கள் திடீரென்று ஒன்று கூடி ஒப்பந்தம் செய்து கொண்டு அரசை உற்பத்தி செய்தார்களென்பதே அசம்பாவிதமான காரியம். அதற்கு சரித்திர பூர்வமான ஆதாரமுமில்லை. எந்தக் காலத்தில் அல்லது வருஷத்தில் அவர்கள் அதைச் செய்து கொண்டார்களென்றும் இந்தக் கொள்கையினர் கூறவில்லை.

ஆனால், இக்கொள்கையானது அரசாங்கத்திற்கும் பிரஜைகளுக்கும் உள்ள உறவைத் தெளிவாக விவரிக்கிறது. பிரஜைகள் சில விதங்களில் அரசுக்கு உதவவேண்டும்; அதற்கு பதிலாக அரசு பிரஜைகளுக்கு நன்மை புரிய வேண்டும்; இங்ஙனம் பரஸ்பரம் உதவுவதே சிறந்த முறை என்பதை இக்கொள்கை விளக்குகிறது. பிரஜைகள் அரசின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து அதற்கு பதிலுபகாரமாகப் பாதுகாப்பைப் பெறுகின்றனர். இங்ஙனம் வியாக்கியானம் செய்யப்பட்டால் சமூக ஏற்பாட்டுக் கொள்கை ஒரு சரித்திர சம்பவத்தைக் குறிக்காமல் ஒரு கருத்தையே தெரியப் படுத்துவதாகும்.

இவ்வழியில் இக்கொள்கைக்குப் ஒரு புதிய பொருளை நாம் அளித்தபோதிலும் அதைப் பலர் இன்னும் தாக்குவதற்கு இடமிருக்கிறது. இக்கொள்கையானது அரசாங்கத்தையும் பிரஜைகளையும் தனித்தனியான இரு வஸ்துக்

களாகப் பிரித்தன்றோ வைக்கிறது? அங்ஙனம் பிரஜைகள் தனியானவர்களல்லர்; அவர்கள் அரசினின்றும் பிரிக்க முடியாத ஓர் அம்சத்தினரே யாவர் என்று சிலர் கூறுகின்றனர். நாம் இஷ்டப்பட்டால் அரசை விட்டுப் பழைய இயற்கைச் சுயேச்சையை அடைந்துவிட முடியாது. பிரஜைகளும் அரசும் இணைபிரியாது பிணைக்கப்பட்டிருக்கின்றனர்; இஷ்டப்பட்டவர்கள் சேர்ந்து கொள்ளலாம் என்ற விதியைப்பெற்ற ஒரு சபையல்ல; அது அநாதிகாலம் தொட்டு வழங்கிவரும் ஸ்தாபனமாதலால் வெகு நாளைக்குப் பின் மனிதர்களினால் நிர்மாணிக்கப்பட்டதன்று. இரண்டாவதாக, இவ்வேற்பாடு வியாபார முறையில் நடந்தது என்றும், நாம் சில கடமைகளை அரசுக்குச் செய்துவிட்டு அதன் பிரதியுபகாரமாகச் சில உரிமைகளை யடைகிறோம் என்பதும் தவறு. ஏனெனில் பிரஜைகளனைவரும் சமமான உரிமைகளையே பெறுவதில்லை; அல்லது, பெறும் உரிமைகளுக் கேற்றவாறு மட்டுமே கடமைகளைச் செய்து முடிக்கின்றன ரென்பதுமில்லை. ஒரு மனிதன் சகல சௌகரியங்களையும் அநுபவித்துக் கொண்டு தன்னுடைய நன்மையை மட்டும் கோருகிறான்; இன்னும் சிலர் தம்முடைய கஷ்டத்தை கவனியாமல் தேசபக்தி மிகுந்து நிற்கின்றனர்.

ஆதலால் எதையோ விற்றுவிட்டு அதற்குச் சமமான வேறெதையோ பிரஜைகள் வாங்கிக் கொண்டதாகக் கூறுவது பொருத்தமற்றுப் போகிறது. மூன்றாவதாக எளியாரையும் பலஹீனரையும் அரசே பாதுகாக்க வேண்டுமென்று நாம் கூச்சலிடுகிறோம். மக்களுக்குக் கல்வியையளித்து ஆரோக்கிய வசதிகள் செய்து தர வேண்டுமெனவும்வேண்டுகிறோம். இக்காரியங்களை யெல்லாம்செய்துதரும் அரசானது ஒரு சமூகத்தினருடைய ஒன்று கூடிய முயற்-

சியையே குறிக்கிறது. அங்ஙனமாயின் அது மனிதப் பிரயத்தனத்தால் மட்டும் ஏற்பட்ட ஒரு நூதன ஸ்தாபனமாகாது; ஆதியிலிருந்து படிப்படியாக வளர்ந்து விருத்தியடைந்துள்ள ஒரு பூர்த்தியான ஸ்தாபனமே யாகும்; இது முக்கியமாய் ஜீவகாருண்யம், நீதிநெறி முதலியவற்றின் ஆதாரத்தைக் கொண்டதாயும், நிகழ்காலத்துப் பிரஜைகளையன்றி எதிர்காலத்துப் பிரஜைகளின் நன்மையையும் கருதுவதாயும் இருக்கிறது என்ற கொள்கையையே இக்காலத்து விற்பன்னர்கள் கூறி வருகின்றனர். அரசும் ஜனத்தொகுதியும் ஒன்றுக்கொன்று அவசியமான உறுப்புகளென்றும், இரண்டும் ஒன்றுசேர்ந்து ஒரு தேகத்தைப்போல அமைகின்றன வென்றும் கருதவேண்டும். இந்த உறுப்புக் கொள்கையை நாம் பின்னால் விஸ்தாரமாக ஆராய்வோம்.

4. அரசு தெய்வாம்சம் பொருந்தியது என்னும் கொள்கை:- ஜனசமூக ஒப்பந்தக் கொள்கை யென்பதன் விசேஷத்தன்மையைக் கருதி அதை நாம் இதுவரையில் விஸ்தாரமாகக் கூறிவந்தோம். அரசைப்பற்றி வேறு சில தவறான கொள்கைகளும் இருக்கின்றன. அவைகளுள் முக்கியமான இரண்டு கொள்கைகளை மாத்திரம் நாம் சுருக்கமாக ஆராய்வோம். அவற்றுள் ஒன்று, அரசன் தன்னுடைய அதிகாரத்தை தெய்வத்தினிட மிருந்து பெற்றவன் என்பதாகும். அந்தக் கொள்கை இப்பொழுது எடுபட்டுப் போய்விட்டதாகவே கருதப்படுகிறது. அது 16, 17-வது நூற்றாண்டுகளில் இருந்து வந்தது. அதிகாரமெல்லாம் பொது ஜனங்களுக்கே உரியதென்ற அபிப்பிராயம் மேலோங்கி வரத் தொடங்கவே, அதைக் கண்டு அஞ்சிய அரசர்களும் அவர்களுக்கு ஆதாரமளித்த நூலாசிரியர்களும் இந்தக் கொள்கையை ஏற்படுத்தினார்கள். அரசன் ஆதியிலிருந்து தெய்

வத்தினாலேயே நியமிக்கப்பட்டவன் என்பதே இக்கொள்கையின் சாராம்சம். இக்கொள்கையின்படி, ஒரு தேசத்தின் பிரஜை, அரசின்மீதோ அல்லது அரசைப் பற்றியோ குறை கூறுவதற்கு உரிமையற்றவனாகிறான். ஊன்றிப் பார்க்கும் பட்சத்தில் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் எந்த ஸ்தாபனமும் அடிப்படையாக தெய்வத்தின் அநுக்கிரகமின்றி நடவாதென்பது உண்மையே. ஆனால் மேலே குறிக்கப்பட்டுள்ள அரசர்களின் கொள்கையோ இந்த வரம்பை வெகுதூரம் மீறியதாக இருந்தது. அவர்கள் கூறியபடி கடவுள் அரசாங்க அதிகாரத்தையெல்லாம் ஒரு நூதன முறையில் அரசருக்கே கொடுத்து குடிமக்களுக்கு இல்லையென்று நிராகரித்து விட்டதாக எண்ண இடமுண்டாகிறது. இத்தகைய நூதனமான கொள்கையை ஸ்தாபித்தவர்களுள் ஸர் ராவர்ட் பி/2ல்மர் என்பவர் முக்கியமானவர். அவர் 1681-ம் வருஷத்தில் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அக்காலத்தில் இங்கிலந்து தேசத்தை ஆண்டு வந்த ஸ்டேவர்ட் வம்ச அரசர்கள் கொடுங்கோன் மன்னராக இருந்தமையால், அவர்களுக்கு ஆதாரமளிப்பதற்காக ஷெ நூலாசிரியர் இக்கொள்கையை நிர்த்தாரணம் செய்தார். உலகாரம்பத்தில் தோன்றிய முதல் மனிதனை ஆதாம் என்பவருக்கு ஆதியில் கடவுளால் அளிக்கப்பட்ட குடும்பத்தலைவரென்ற அதிகாரப்பதவி படிப்படியாக இறங்கி ஐரோப்பா தேசத்து அரசர்களுக்கும் அரச குமாரர்களுக்கும் வந்து சேர்ந்திருக்கிறது என்ற விபரீதமான அபிப்பிராயத்தை அவர் ஷெ நூலில் தெரிவித்திருக்கிறார். இந்தக் கொள்கை தவறானதென்பது நாம் கூறாமலே விளங்கும். ஆனாலும் இந்தக் கொள்கையினால் ஐரோப்பா தேசத்தின் பல அரசியல்களும் வெகுதூரம் மாறுபட்டுப் போயி

ருக்கின்றன வென்பது உண்மையென்பதை இக்காலத்து விற்பன்னர்கள் ஒப்புக் கொள்கின்றனர். பிரிட்டன் தேசத்திலும் மற்றுமுள்ள ஐரோப்பாக்கண்டத்து இதர தேசங்களிலும் அரசு என்பது ஓரளவு தெய்வாம்சம்பொருந்தியிருக்கிறது என்ற அபிப்பிராயம் இன்னமும் இருந்து வருகிறது.

5. பலவந்தக் கோள்கை :—இன்னும் சிலமேதாவிகள் பலவந்தத்தின் மூலமாகவே அரசு தோன்றிற்று என்று அபிப்பிராயப் படுகின்றனர். அதாவது மனிதர்கள் ஒருவரோ டொருவர் சச்சரவிட்டுக் கொள்ள, முடிவில் வலியார் எளியாரை யடக்கி அதன் பயனாக அக்கிரமமான அரசை ஸ்தாபித்தனர் என்பதே அதன் கருத்து. ஒரு மனிதனை இன்னொரு மனிதன் அடக்கி அடிமையாக்குவது, பலஹீனமான வகுப்பாரை முரட்டுத்தனமான இன்னொரு வகுப்பார் வதைத்துத் தமது ஆதீனத்திற் குட்படுத்துவது, அதன்பிறகு ஓர் இராஜ்ஜியம் தனது படைகள் முதலிய மேம்பட்ட பலத்தைக் கொண்டு பல சிறிய தேசங்களை ஜயிப்பது ஆகிய இவ்வாறான அக்கிரமமான முறைகளிலேயே இந்த உலகத்தில் அரசியல் உற்பத்தியா யிருக்கிறது என்று கிரிஸ்துவப் பாதிரிமார்கள் கூறியதன்றி, அக்காரணம் பற்றி அரசுகள் மதஸ்தாபனங்களின் ஆதிக்கத்தை யேற்றுக்கொண்டு தங்களுடைய பாவத்தைப் போக்கிக்கொள்ள வழி தேடவேண்டும் என்றும் கூறிவந்தனர். உதாரணமாக, ஏழாவது கிரிகரி எனப்படும் ஒரு கிரிஸ்துவ மதத்தலைவர் 1080-ம் வருஷத்தில் அடியில் வருமாறு எழுதியிருக்கிறார். "உலகத்தில் அக்கிரமப்பேய் தலையெடுத்து இராஜ்ஜியபாரம் செய்த காலத்தில், அகங்காரம், கொள்ளை, அநீதி, கொலை முதலிய கொடுமைகளைப் புரிந்து, கடவுள் இருக்கிறாரென்பதையே தெரிந்து கொள்ளாமல்

இருந்தோரது வம்சத்தில் உதித்தவர்களான அந்த அரசர்களும் சீமான்களும் சகிக்க முடியாத கர்வம் படைத்துப் பேராசையினுல் தமது மதியை இழந்து தமது சகோதர மனிதர்களை அநியாயமாய் அடக்கி ஆளுகிருர்கள் என்பதை நம்மில் யார் அறியாதவர்கள்?" என்று ஷெியார் கூறியிருக்கின்ருர். இக்காலத்திலும் அதேவிதமான அபிப்பிராயத்தை வேறு கருத்தோடு ஹேர்பர்ட் ஸ்பென்ஸர் என்பவரும் அடியில் வருமாறு எழுதியிருக்கிருர் :— "அரசென்பது அக்கிரமத்தி லிருந்து ஜனித்தது; அதில் உற்பத்தி ஸ்தானத்தின் அடையாளம் இன்னமும் இருந்து கொண்டேவருகிறது." என்கிருர் அந்த ஆசிரியர். மதத்தலைவர்கள் தங்களுடைய ஆதிக்கம் அரசருடையதைவிட ஓங்கி நிற்க வேண்டுமென்ற கருத்துடன் அரசின் உற்பத்தியை இளக்கரப்படுத்திக் கூறினுர்கள். ஸ்பென்ஸரும் மற்றும் சிலரும் அராஜகக் கொள்கையுடையவர்களாதலால், தனிப்பட்ட மனிதனுடைய உரிமைகளை மேன்மைப்படுத்தும் பொருட்டே அவர்கள் அரசின் ஆரம்பத்தைப்பற்றி தூஷணையாக எழுதினுர்கள்.

ஜெர்மனி தேசத்தைச் சேர்ந்தவர்களும், ஜனசமூக ஆதிக்கக் கொள்கையை ஆதரிப்பவர்களுமான சில நூலாசிரியர்களும், மார்க்ஸ், எங்கேல்ஸ் என்போரும் இந்தப் பலவந்தக் கொள்கையை நிரம்பவும் விஸ்தாரமாக விவரித்து எழுதியிருக்கிருர்கள். இதை அவர்கள் சிறிதளவு மாறுபடுத்தி விளக்கி இருக்கிருர்கள். ஜனசமூகத்தைச் சேர்ந்த ஒரு பகுதியார் முன் விழுந்து தம்முடனிருந்த சகா ஜனங்களுடைய உடமைகளையும் உரிமைகளையும் பலவந்தமாக அபகரித்து, அவர்களுடைய நியாயமான உழைப்பினுல் ஏற்படக்கூடிய பலனை அவர்கள் அடை-

யாமல் தடுத்து ஏமாற்றி, அதைத் தங்களுடைய தாக்கிக் கொள்ளும் வழக்கத்திலிருந்தே அரசு தோன்றி வளர்ந்திருக்கிறது, உழைத்து வேலை செய்வோரை அடக்கித் தமது வசப்படுத்தி வைப்பதற்காக ஏற்பட்ட பலிஷ்டர்களின் தொகுதியே இக்காலத்து அரசெனப்படுவது என்று ஷை நூலாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். அரசு, அல்லது, அடக்கியாளும் அதிகாரம் என்பதில் அடங்கியுள்ள தத்துவத்தில் யாதொரு தவறுமில்லையாகுலும். அதை இக்காலத்தவர் கையாளும் முறையே ஆதிகாலத்து அக்கிரம ஆர்ஜிதத்தைத் தொடர்ந்து அதுபோல நடத்திக்கொண்டு போவதாக இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் அவர்களுடைய கொள்கையை நாம் ஊன்றிப் பார்க்கும் பக்ஷத்தில், அவர்கள் பலவந்தம் என்னும் அம்சத்தை நிரம்பவும் மிகைப்படுத்திக் கூறுவதாகவே தோன்றும். அரசாங்கத்திற்கு வலுக்கட்டாயமாகக் காரியங்களை நடத்துவதென்ற ஓர் அம்சம் இருந்து வருவதென்பதையும், அதனாலேயே அது நிலைத்து நிற்கிறதென்பதையும் எவரும் மறுக்க இயலாது. ஆனால், அரசாங்கம் பெருகி வளர்ந்து நிலைத்திருப்பதற்கு பலவந்தத்தைத் தவிர, நாம் கீழே குறிப்பதுபோல, வேறு பல முக்கியமான முகாந்தரங்களும் இருக்கின்றனவென்பது பிரத்தியக்ஷமான விஷயம். கா/2ண்ட் என்னும் ஆசிரியர், "ஒரு தேசத்தின் ஜனங்களெல்லோரும் பேய் பிசாசுகளாகவே இருந்தாலும் கூட, எல்லோருடைய பொது சம்மதத்தின்மேல் அடக்கியாளும் ஓர் அரசை உற்பத்தி செய்துகொள்வது நிரம்பவும் அநுகூலமானதென்று அவர்களே தெரிந்து கொள்வார்கள்," என்று கூறியிருக்கிறார்.

அரசென்பது பலவந்தமாக ஒருவரை மற்றவர் அடக்கியதிலிருந்து ஆதியில் உற்பத்தியாயிற்று என்கிற வரலாறு தவறானதாக இருந்தாலும், அதிலடங்கியுள்ள அரசாங்க அமைப்பை ஓரளவு பாதித்திருக்கிறது. இந்தக் கொள்கையின்படி பலம் எவரிடத்திலிருக்கிறதோ, அவருக்கே அதிகாரம் உரியது என்ற நியாயம் த்வனிக்கிறது. நாம் மேலே குறித்த ஜேல்லிநேக், "தன்னால் தடுக்கமுடியாதபடி அரசு என்பது ஒவ்வொருவனையும் அடக்குகிறதாகையால், அவன் நிராவகையாய் அதற்கு உட்படுகிறான்" என்று கூறித் தமது கொள்கையை விளக்கியிருக்கிறார். மேலே குறிக்கப்பட்ட ப்ளண்ட்ஷ்லி என்பவர், "ஜனசமூக ஒப்பந்தக் கொள்கையின்படி ஒவ்வொருவரும் சம்மதித்து அரசை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகக் கூறுவதில் பலவந்தமென்ற அம்சமே இல்லாமல் போகிறதாகையால், அதன்படி அரசாங்கத்திற்கு கேவலம் பேடித் தன்மையே ஏற்படுகிறது. ஆகையால் இந்தக் கொள்கையை விட பலவந்தக் கொள்கையே ஒருவிதத்தில் சிலாக்கியமானதாக இருக்கிறது. அரசாங்கம் நிலைத்திருந்து தனது கடமைகளைத் திறமையாக நடத்திக்கொண்டு போவதற்குப் பலவந்தமாகத் தனது உத்தரவுகளை நிறைவேற்றுவதென்பது இன்றியமையாத அம்சமாதலால், பலவந்தக் கொள்கையின் அந்த பாகம் உண்மையானதே" என்று கூறுகிறார். பலமுள்ளவர்களுடைய கட்சியே நியாயமானது என்கிற கொள்கைக்கு ஜீன் ஜேக்ஸ் ரூஸோ என்பவர் ஜனசமூகத்தாரே பலமுள்ளவர்களென்றும், அவர்களால் அரசாங்கத்தாருக்கு சில உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், ஜனங்கள் பலசாலிகளாயிருக்கிறவரையில், ஷை உரிமைகளை எடுக்கவும் கொடுக்கவும் அவர்

களுக்கு அதிகாரமுண்டென்றும் வியாக்கியானம் கூறியிருக்கிறார். இதிலிருந்து, அரசாங்கத்தாரை அடக்கும் வல்லமை ஜனங்களுக்கு இல்லாமல் போகுமானால், அவர்கள் அரசாங்கத்தாருக்கு அடங்கிப் போவதே நீதியென்பது த்வனிக்கிறது. ஆனால், அது நீதியில் சேர்ந்ததே ஆகாது.

அரசாங்க அதிகாரத்திற்கு அநுகூலமாக பலவந்தக் கொள்கையை வியாக்கியானம் செய்வதில், லுட்விக் வான் ஹாலர் எனப்படும் ஜெர்மன் ஆசிரியர் அதை அடியோடு வேருக மாற்றிவிடுகிறார். நெப்போலியன் சக்கரவர்த்தியால் நடத்தப்பட்ட பிரமாதமான யுத்த காலத்திற்குப் பிறகும், ஐரோப்பா கண்டத்தில் அக்காலத்தில் பல இராஜீய மாறுபாடுகள் உண்டாக்கப்பட்டதற்கு அடுத்தாற்போலும் இந்த ஆசிரியர் தமது நூலை எழுதினராதலால், ஜன நாயக ஆட்சியே தெய்வசம்மதமான ஆட்சி என்ற கொள்கையில் வெறுப்புக் கொண்டு அரசர்களுடைய அதிகார தத்துவங்களைக் குறித்து அவர் எழுதியிருக்கிறார். அவருடைய அபிப்பிராயத்தில் துரைத்தனம் என்பது பலசாலியாய் இருப்போரே ஆட்சி நடத்துவது என்னும் இயற்கைக் கிரமத்தைப் பொருத்ததாக இருக்கிறது. ஆனால் மனிதனை அவர்களது விருப்பத்திற்கு மாறுக ஒடுக்கி யாள்வதென்பதில்லாமல் காருண்ய குணத்தோடு ஆளவேண்டுமென்பதே அதன் முக்கிய அம்சம். மனிதருக்கு மனிதர் ஏற்படும் அடிப்படையான சம்பந்தமும், ஜன சமூக ஒற்றுமையும், எளியவர் வலியவரை அடுத்திருப்பதனல் மட்டுமே உண்டாகின்றன. ஒருவர் கீழ்ப்படிகிறார்; மற்றவர் காப்பாற்றுகிறார். பெற்றோருக்கும் பிள்ளைக்கும், புருஷனுக்கும் பெண்ஜாதிக்கும், எஜமானனுக்கும் வேலைக்காரனுக்கும் உள்ள சம்பந்தம் எதுவோ, அதுவே அரசருக்கும் பிரஜை

களுக்கும் உள்ள சம்பந்தமுமாகும். இந்த நிலைமை ஒருவர் வேண்டுமென்றே தானாக உற்பத்தி செய்து கொண்டதல்ல; இது ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தினுலு மேற்படுவதல்ல. இது உலக சிருஷ்டியில் இயற்கையாகவே ஏற்பட்ட அடிப்படையான ஓர் அம்சமாகும். "இது, தான் வெயிலை அநுபவித்துக் கொள்வதென்று, தனக்கும் சூரியனுக்கும் ஓர் ஒப்பந்த மேற்பட்டிருக்கிறது என்று ஒரு மனிதன் சொல்லுவதைப் போலவே இருக்கிறது" என ஹாலர் வாதிக்கிறுர். இவ்வாறு கூறுவதினின்றும், இயற்கைக் கிரமப்படி எளியவர் வலியவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறுர்கள் என்பது, அரசர் கொடுங் கோன்மை செலுத்துவதற்கும் அதற்கு வரம்பில்லாமல் மற்றவர் கீழ்ப்படிந்து கொண்டே இருக்க வேண்டுமென்பதற்கும் ஆதாரமாகக் காட்டப்படுகிறது. அரசருடைய இராஜ்ஜியாதிகாரம் தயாளத்தோடு கூடியது என்ற ஒரு தோற்றத்தை அதற்குக் கொடுத்தாலும், அதை சுயேச்சையாய்த் தம்மிஷ்டம்போல துஷ்பிரயோகம்செய்யலாம் என்ற உரிமை அரசர்களுக்கு ஏற்பட்டுப் போகிறதாகையால் இக்கொள்கை தவறென்பதைக் காட்ட நாம் அதிகமாய்ப் பிரயாசைப்பட வேண்டியதில்லை.

3-வது அதிகாரம்.

அரசு உண்மையில் எப்படி உண்டாயிற்று?

(1) சரித்திரப்படி அரசு காலக்கிரமத்தில் வளர்ச்சியடைந்த விதம்:—சென்ற அதிகாரத்தில் நாம் பல தவறான கொள்கைகளை ஆராய்ச்சி செய்ததிலிருந்தே உண்மையான கொள்கை இன்னதென்பதை நிச்சயிக்க ஒரு வழி ஏற்பட்டது போலாகும். இக்காலத்திலுள்ள சிறந்த நூலாசிரியர்கள் கூறியுள்ள கொள்கையோ "சரித்திரப்படி, காலக்கிரமத்தில் அரசு வளர்ச்சியடைந்தது" என்ற கொள்கையாகும். இக்கொள்கையின்படி அரசு ஏதோ ஒரு காலத்தில் ஒரு குறித்த நேரத்தில் ஏற்பட்ட ஒரு ஸ்தாபனமல்ல. யாரோ சிலர் சேர்ந்து கிளர்ச்சி செய்தோ, திட்டம்போட்டோ அதை உடனே உற்பத்தி செய்துவிடவில்லை. அதை திடீரென்று புதிதாய் எவரும் சிருஷ்டித்து விடவில்லை. அது இயற்கையாகவே காலக் கிரமத்தில் படிப்படியாக வளர்ந்து பெருகித் தற்காலத்திலுள்ள நிலைமைக்கு வந்திருக்கிறது. நாம் தெரிந்து கொண்டிருக்கும் மனிதருடைய சரித்திர காலம் முழுதும், அதற்கு முன் நாம் தெரிந்து கொள்ள முடியாத நீண்ட காலத்திலும் அது வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. மிகவும் புராதன காலங்களிலும் அரசு ஒன்று இருந்தது, ஆனால் அப்பொழுது அது திருத்தமடையாமலும்பரிபூரணமாகாமலும் குழந்தைப் பருவத்தில் இருந்து நாளடைவில் வளர்ந்து பெருகி முடிவில் இப்போதைய நிலைமையையடைந்திருக்கிறது. அதை அப்போதைக்கப்போது பலர் பலவிதமாகத் திருத்தி மாற்றியமைத் திருக்கலாமேயன்றி மனிதர் பலர் சேர்ந்து, இல்லாத ஒரு வஸ்துவை திடீரென்று சிருஷ்டித்து விட்டதாக நினைப்பது சரியல்ல. மனிதனு

டைய அறிவும் நாகரிகமும் அநுபவமும் எப்படி காலக் கிரமத்தில் முதிர்ச்சியடைந்து கொண்டு வந்திருக்கின்றனவோ, அங்ஙனமேதான் அரசும் ஆதிகாலத்திலிருந்து ஏற்பட்டு வளர்ந்து தற்கால நிலைமைக்கு வந்திருக்கிறது.

2. தாய்தந்தையர் ஆதிக்கத்தினின்றும் அரசு தோன்றியதென்னும் கொள்கைகள்:—நாம் ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டால், அதில் தந்தையே மற்றவரை அடக்கியாண்டும், அவர்களை இரக்ஷித்தும் வருகிறார். அங்ஙனமாயின் ஒவ்வொரு குடும்பமும் ஒரு சிறிய அரசாகும்; பிறகு பல குடும்பங்களை ஒரு கிராமத்தலைவன் ஆளத்தொடங்குகிறான். அதினின்றும் பல கிராமங்கள் ஓர் அரசனுடைய வசப்பட்டு ஓர் இராஜ்ஜியமாக அமைந்திருக்க வேண்டும். இங்ஙனம் அரசாங்கம் அமைவதற்கு மூலமாக இருந்தது குடும்பமே யென்றும், அக்குடும்பம் படிப்படியாக விரிந்து இராஜ்ஜியமாக மாறியிருக்கிறது என்றும், இது இயற்கையான வளர்ச்சியே யென்றும் சிலர் கூறுவர். மற்றும் சிலர் இக்கொள்கையைக் கண்டிக்கத் தொடங்கி, ஆதிகாலத்தில் ஒரு குடும்பத்தினுடைய தலைமை ஸ்தானத்தைத் தந்தையே வகித்து வந்தார் என்பதை மறுக்கின்றனர். இப்பொழுதும் கூட சில நாடுகளில் ஸ்திரீகளே குடும்பத்தின் அதிகாரத்தை வகித்து வருகின்றனராதலால் (உதாரணமாக, மலையாள தேசத்தின் 'மருமக்கத்தாயம்' என்ற முறையை கவனிக்க) மிகப்புராதன காலங்களில், குடும்பங்கள் கூட சரியாக அமையாத காலத்தில் மாதர்களே சமூகத்தின் முக்கிய ஸ்தானத்தை வகித்தனர் என்பது முற்றிலும் திண்ணம் என இக்கட்சியினர் கூறுவர். அக்காலத்தில் விவாக முறை சரியாக ஏற்படாததாலும், காட்டு மிருகங்களை யொத்தே மனிதர் வாழ்ந்து வந்ததாலும், ஜனங்

கள் தம்தம் தாய்களின் மூலமே குலவிருத்தியைக் கணக்கிட்டு வந்தனராம். அதன் பின்னரே மனிதர் வியவசாயத்தில் சிரத்தை கொண்டு ஓரிடத்திலேயே ஸ்திரமாக வசிக்கத் தொடங்கினராதலால் குடும்பங்கள் தோன்றியதென்றும் அதினின்றும் தந்தைக்கு முக்கிய பதவி கிடைத்ததெனவும் இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் ஒரு தேசத்தில் தாய் முறை வழியாகவும், மற்றொன்றில் தந்தை முறை வழியாகவும் குலங்கள் விருத்தியடைந்திருப்பதும் கூடும். இந்த விஷயத்தில் உலகம் முழுவதும் ஒரே விதியை யநுசரிக்கவுமில்லை. குடும்பங்களில் தாயோ, தகப்பனோ அதிகாரஸ்தராயிருந்தாரென்பதைக்கொண்டு அதிலிருந்து அரசும் ஏற்பட்டிருக்க வேண்டுமென்ற கட்டாயமுமில்லை.

3. அரசின் வளர்ச்சிமுறை. அரிஸ்டாடில் என்பவர் குறிக்கும் காலச்சக்கரம்:—ஆதிகாலந்தொட்டு இதுவரையில் அரசானது எண்ணிறந்த மாறுதல்களை அடைந்து வந்ததென்றும், அது பல படிகளைத் தாண்டியே இப்போதைய நிலைமையை நெருங்கி யிருக்கிறதென்றும் கூறினோம். பொதுவாக ஷை மத்தியகால நிலைமைகள் யாதென ஆராய்தல் அவசியம். எல்லா தேசங்களிலும் இம்மாறுதல்கள் ஒரே மாதிரியாக ஏற்பட்டன வென்று நாம் கூற முடியாது; தேசங்கள் பலவற்றிலும் வெவ்வேறான முறையில் இது நடந்தேறி யிருக்கிறது. பலர் பலவேறு வழிகளில் ஒரே முடிவை அடைந்திருக்கின்றனர். சில தேசங்களில் பல யுத்தங்களும் இராஜீயப்புரட்சிகளும் நேர்ந்தபின்னர் ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது; மற்றும் சில நாடுகளில் படிப்படியாக சட்டங்கள் இயற்றி அதே ஆட்சியை ஸ்தாபித்திருக்கின்றனர்; சில தேசத்தினர் மற்ற நாடுகளைக்

கண்டு அவைகளுடைய ஆட்சிமுறையை அப்படியே எடுத்துக்கொண்டிருக்கின்றனர்; ஆனாலும், நாம் பொதுவாக, ஆதிகாலந்தொட்டு இதுவரை அரசியல் முறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை ஒருவாறு வகுத்துக் கூறலாம். கிரேக்க நூலாசிரியரான பிளேடோஎன்பவர் அரசியல் முறையில் ஒரு சக்கரத்தைப் போல, வந்ததே திரும்பத் திரும்ப வந்துகொண்டிருக்கிறது எனக் கூறியிருக்கின்றார். முதன் முதலாக, தனவந்தர்களான சில மேதாவிகள் ஒன்று சேர்ந்து அரசியலை நடத்தி வந்ததாகவும், பிறகு சில போர்வீரர்கள் தம்முடைய தேக பலத்தினால் கொடுங் கோன்மையை ஸ்தாபித்ததாகவும், அதன்பின்னர் ஜனங்கள் தாமாகவே அரசை வகித்ததாகவும், கடைசியாக ஒரேயொருவன் எல்லோரையும் தன் வசப்படுத்தித் தனியரசு செலுத்தியதாகவும் பிளேடோ எழுதியிருக்கின்றார். ஆனால் அரிஸ்டாடில் என்ற ஆசிரியரோ பிளேடோவினது சித்தாந்தம் எல்லா தேசங்களுக்கும் ஒத்துவராது என்று காட்டிவிட்டு, வேறொரு முறையைப் புகுத்தியிருக்கிறார். அவருடைய சித்தாந்தம் முதலில் மன்னவனும், பிறகு சில கனவான்களும், அதன்பின் கொடுங்கோன்மை செலுத்திய ஓர் அதிகாரியும், பிறகு அவ்வதிகாரியைத் துரத்திவிட்டு கட்டுக்கடங்காத ஜனசமூகத்தினரும் ஆட்சியை நடத்தி வந்ததாகவும் கூறுகிறது. ஆனால் இந்த அரசாட்சி முறைகள் தேசத்தின் நலத்தையும் அதிகப்படுத்தலாம்; அல்லது ஏராளமான தீமைகளையும் உண்டாக்கலாம். ஒரு மன்னன் தன்னுடைய ஜனங்களை மிக்க ஆதரவுடனும் போஷித்து வரலாம், அல்லது, அவர்களை தண்டித்தும் ஒறுக்கலாம். அங்ஙனமே சில கனவான்களினது வசத்தில் அரசு இருந்தால், அவர்கள் சுயநலப் பிரியர்கள் ஆகிவிடலாம், அல்லது,

பரோபகாரச்சிந்தை மிகுந்தும் நடந்துகொள்ளலாம். அங்ஙனமே, ஜனங்கள் நேராக ஆட்சியை நடத்துவது மிகச் சிறந்த ஜனநாயகமாகவும் இருக்கலாம், அல்லது, வெறும் பைத்தியக்காரக் கும்பலின் கூத்தாகவும் இருக்கலாம். ஆனால் முன்பே எல்லா தேசங்களிலும், பிளேடோவும், அரிஸ்டாடிலும் குறித்துள்ள முறைப்படியேதான் அரசியலின் அமைப்பு மாறி வந்திருக்கிறதென்பது தேச சரித்ரத்தினால் உறுதிப்படவில்லை. ஆனால் கிரேக்க நகர அரசுகளில இந்த முறைமையே அமைந்து வந்ததாக நாம்கூறலாம்.

(4) இராணுவ முறைகளாலும் பொருளாதார நிலைமையாலும் அரசு தோன்றியதென்ற கொள்கைகள்:— அரசு தோன்றியதற்கு இம்மாதிரியான உபயோகமற்ற இரண்டு கொள்கைகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஜேன்க்ஸ் என்னும் நூலாசிரியர், "அரசு அல்லது இராஜீய சமூகம் ஆதியில் தோன்றியது, போர் செய்யும் முறைகளின் வளர்ச்சியினாலேயே; தற்காலத்தில் ஏற்பட்டுள்ள இராஜீய சமூகங்கள் ஒருவரோடொருவர் யுத்தம் செய்து வென்றதனாலேயே தங்களை ஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் சிரமமில்லாமல் மெய்ப்பிக்கலாம்" என்று கூறுகிறார். அவர் கூறுகிறபடி இக்காலத்து இராஜீய ஜனசமூகங்கள் தங்களை நிலைக்க வைத்துக் கொள்வதற்காக யுத்தம் புரிந்திருக்கின்றன வென்பது உண்மையே. அதுவுமன்றி அவர்கள் தங்கள் தங்கள் தேசத்தில் நிரந்தரமான இராணுவப் படைகளை வைத்திருப்பதையும், சண்டைக் காலங்களில் கட்டாயமாய் எல்லோரையும் இராணுவத்தில் சேர்க்கும் முறைகளைக் கையாளுவதையும், இன்னம் இவை போன்ற அம்சங்களையும் நாம் கவனித்துப் பார்த்தால், அந்நிய நாட்டார் தம்மீது படையெடுத்து வராமல் தம்மைப்

பாதுகாத்துக் கொள்ளுவதை எவ்வளவு முக்கியமாக அவர்கள் கருதுகிறார்கள் என்பது தெற்றென விளங்கும். ஆனால் இவற்றிலிருந்து ஒரு தேசத்தாரின் இராணுவமுறைகளினாலேயே அந்த தேசத்தின் தற்கால அரசின் வடிவம் அமைந்தது என்று நாம் கூறமுடியாது. இந்த இராணுவமுறைக் கொள்கைக்கு நேர்விரோதமாக ஜெர்மனியைச் சேர்ந்த சிலர் வேறொரு விதமான கொள்கையை வெளியிட்டிருக்கின்றனர். அவர்கள் ஜனசமூகத்தில் உழைத்து வேலை செய்யும் ஏழைத் தொழிலாளிகளும் தனவந்தர்களாயிருக்கும் முதலாளிகளும் சமமானவர்களே என்ற கொள்கையைக் கொண்டவர்கள். அவர்கள் தற்காலத்து அரசாட்சி முறைகளும் ஜனசமூக ஸ்தாபனங்களும் அந்தந்த தேசத்தின் பொருளாதார அம்சங்களைப் பொருத்தே தோன்றியிருக்கின்றன என்றும், ஏழைகளும் எளியவர்களும் பாடுபட்டு உழைப்பதினால் ஏற்படும் பயன்களை, சொத்துக்கள் படைத்துள்ள தனவந்தர்கள் அநுபவிக்கும் பொருட்டே அரசு முதலிய அதிகார தோரணைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் கூறுகிறார்கள். இவ்வாறு கூறப்பட்டுள்ள இரண்டு கொள்கைகளிலும், தற்கால அரசுகள் இப்பொழுது இருக்கும் நிலைமையை அடைவதற்குக் காரணமாயமைந்த அம்சங்களில் ஒன்றையே எடுத்துக்கொண்டு அதை அபாரமாக மிகைப்படுத்திக் கூறுகிறார்கள் என்பது பிரத்தியட்சமான விஷயம்.

(5) **தற்கால அரசில் தோன்றியுள்ள சில முக்கியமான மாறுபாடுகள்** :—நாம் பொதுவாகப் பேசும் பட்சத்தில் ஒரு தேசத்தின் அரசு காலக்கிரமத்தில் இந்த விதமாகத்தான் வளர்ந்து கொண்டுபோகும் என்பதை நாம் முதலிலேயே நிச்சயிக்க முடியாது. ஆனால் தற்காலத்து அரசுகளில்

காணப்படும் இலக்ஷணங்களை நாம் ஆராய்ந்துபார்த்து இவை களுக்கும், ஆதிகாலத்திலிருந்த அநாகரிகமான அரசுகளுக் கும் உள்ள மாறுபாடுகளை ஓரளவு தெரிந்துகொள்ளலாம். அவ்வாறு ஆராய்ச்சி செய்வதில் கீழே குறிக்கப்படும் ஐந்து அம்சங்களில் வேறுபாடுகள் தெரிகின்றன:—

(1) ஆதிகாலத்தில் சிறிய சிறிய இராஜீய ஜனசமூகங் கள் தனித்தனியாக அரசாட்சி புரிந்த தொகுதிகள் ஏராள மாக இருந்தன. இக்காலத்திலோ ஓர் அரசின் ஆளுகைக் குட்பட்டுள்ள பிரதேசம் நிரம்பவும் விஸ்தாரமாக இருக் கிறது. நமது பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட இராஜ் ஜியத்தைப்போல அவ்வளவு விசாலமான இராஜ்ஜியம் இதற்குமுன் ஏற்பட்டதேயில்லை. இந்த மண்ணுலகத்தி னுடைய நிலப்பரப்பு ஏறக்குறைய 52,300,000 சதுர மைல் இருக்கிறது. அதில் 12,780,381 சதுர மைல் பரப்பு பிரிட்டிஷ் இராஜ்ஜியத்திற்கும், 3,913,560 சதுர மைல் சீனர்களுடைய குடியரசுக்கும், 3,574, 658 சதுர மைல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராஜ்ஜியத்திற் கும் சொந்தமாயிருக்கின்றன. இவ்வாறு உலகம் முழு வதும் பெரிய பெரிய இராஜ்ஜியங்களாகப் பிரிந்து சில அரசுகளின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது.

(2) இப்பொழுது ஒவ்வோர் அரசும் ஸ்திரமான முறை களை அநுசரித்துத் தீர்மானமான வழியில் நடத்தப்படு கிறது; ஒரே விதமாய் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்டங் களைத் தழுவியே காரியங்களைச் செய்கிறது. பழைய காலத் தில் அரசுகள் இவ்வளவு ஒழுங்கான திட்டமான முறை களில் நடத்தப்படவில்லை. மேலும் பழைய காலத்தில் விஸ்தாரமாகப் பரவியிருந்த சில அரசுகளின் ஆட்சி நிச்சய மற்றதாயும் ஒழுங்கற்றதாயும் இருந்து வந்தது. அக்காலத்

தில் குற்றங்கள் செய்வோர் தண்டனை பெறுவதும் உண்டு, தண்டனை பெறுமல் தப்பித்துக்கொள்வதும் சகஜமே. தண்டனைகளோ நிரம்பவும் கொடுமையாக இருக்கும். சில அரசுகளின் ஆதிக்கமும் பெயருக்குமாத்திரமே இருந்து வந்தது. ஆனல் இக்காலத்திலோ ஒவ்வொரு இலாகாவிற்கும் ஒழுங்கான ஸ்தாபனங்கள் ஏற்பட்டுப் போயிருக்கின்றமையால் அதனதன் காரியம் திறமையாகவும் ஒழுங்காகவும் நடத்தப்படுகிறது.

3. புராதன காலத்தில் ஏற்பட்டிருந்ததை விட இக்காலத்தில் ஜனங்களின் மனத்தில் இராஜீய உணர்ச்சியும் இராஜீய ஞானமும் அதிகமாய்த் தோன்றியிருக்கின்றன. ஆதிகாலத்தில் இராஜீய உணர்ச்சியில்லாமல் இயற்கையான ஒரு பற்றினல் மாத்திரம் ஜனங்கள் ஒன்று சேர்ந்து சமூகமாக இருந்தார்கள்; அக்காலத்தில் ஜனங்களெல்லோரும் இராஜீய உணர்ச்சியைக் கொண்டு அரசாட்சி சம்பந்தமான எந்தக் காரியத்தையும் செய்து விடவில்லை. இப்பொழுதோ ஜனங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்று, தேர்தல்களிலும் இராஜீய விஷயங்களிலும் அக்கறை காட்டி வருகின்றனர். இதன் பயனுகப் பொது ஜன இராஜீய அபிப்பிராயம் பலப்பட்டுப் பெருகி வருகிறது. அந்த அபிப்பிராயத்தையும் அரசாங்கத்தார் மதித்து எச்சரிப்பாக நடந்து வருகின்றனர்.

4. முன்காலத்தில் இராஜீய அதிகாரமும் மத விஷயங்களின் அதிகாரமும் ஒன்றுகவே இருந்தன. மத குருவின் காரியங்களும் அரசனுடைய காரியங்களும் ஒன்ருேடொன்று ஒற்றுமைப்பட்டு இருந்து வந்தன. மத சம்பந்தமான கிரமங்களைக் கொண்டே அரசின் சட்ட திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. ஆனல் இக்காலத்

திலோ மத சம்பந்தமான காரியங்களும் அரசாங்கத்தின் காரியங்களும் வெவ்வேருனவை என்று பிரிக்கப்பட்டுப் போயிருக்கின்றன; அரசாங்கத்தார் மத விஷயங்களில் அதிகமாகத் தலையிடுவதையே விட்டு விட்டனர்.

5. கடைசியாக, இக்காலத்து அரசியல் அமைப்பின் முக்கியமான அம்சம், ஏராளமாகப் பரவியுள்ள பொதுஜனங்களும் இராஜ்ஜியாதிகாரம் நடத்துவதில் கலந்து கொள்வதேயாகும். ஆனல் நாகரிக மடைந்துள்ள எல்லா தேசங்களிலும் ஜன நாயக ஆட்சி ஏற்படவில்லையானுலும், முக்கியமான பெரிய தேசங்களில் ஜனப் பிரதிநிதிகள் நேராகவோ, அல்லது, பெயருக்கு மாத்திரம் அரசரென்று ஒருவரை வைத்துக் கொண்டோ ஆட்சி நடத்தி வருகிருர்கள். ஜனப் பிரதிநிதி ஆட்சி முறைதான் சிறந்த முறை யென்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆனல் இந்த ஜனப் பிரதிநிதி யாட்சி இடையிடையில் மாறுபட்டு வந்திருக்கிறதே யன்றித் தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டேவர வில்லை. ஆனுலும் ஜனநாயக தத்துவம் இப்பொழுது அரசியலின் ஒரு நிரந்தரமான அம்சமாகி விட்டது. அந்த அஸ்திவாரத்தின்மேல்தான் இனி எதிர்காலத்தில் அரசியல் நிர்வாகம் அபிவிருத்தியடையும் என்பதை நாம் நிச்சயமாகக் கூறலாம்.

4-வது அதிகாரம்

அரசின் அதிகார வரம்பு.

(1) **அதிகாரப் பாகுபாடு. சட்டம், உரிமை என்பவற்றின் கருத்து.** முதல் மூன்று அதிகாரங்களிலும் அரசினுடைய இலக்ஷணங்களையும், அது தோன்றி வளர்ச்சியடைந்ததைப் பற்றிய கொள்கைகளையும், ஆதிகாலத்து அரசுகளுக்கும் இக்காலத்து அரசுகளுக்கும் ஏற்பட்டுள்ள முக்கியமான மாறுபாடுகளையும் நாம் விவரித்தோம்; இனி அரசின் அமைப்பை மேலும் ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதாவது, அரசின் மொத்தத் தொகுதிக்கும், அதற்குள்ளடங்கிய ஒவ்வொரு தனித்த பிரஜைக்கும் ஏற்பட்டுள்ள சம்பந்தங்களை அறியவேண்டும். அரசினுடைய அதிகாரம் என்பது என்ன, பிரஜைகளுடைய உரிமை என்பது என்ன என்பதையும் நாம் நிர்ணயிப்பது அவசியமாகும். முதற் பார்வைக்கு, அரசின் அதிகாரம், பிரஜையின் உரிமை என்பவை ஒன்றிற்கொன்று விரோதமானதும் பொருத்த மற்றதுமான விஷயங்கள்போலத் தோன்றலாம். ஆனால் ஆழ்ந்து பார்ப்போமானால் அவை இரண்டும் ஒன்றுக்கொன்று பொருத்தமாகவும் விரோதமற்றவையாகவும் ஒன்றையொன்று சார்ந்தவையாகவும் இருக்கின்றன என்பதும், அரசின் அதிகாரத்தினாலேயே பிரஜையின் உரிமை காக்கப்படுகிறது என்பதும் விளங்கும்.

அரசினுடைய அதிகார வரம்பு எவ்வளவு என்பதைப் பற்றிப் பலர் பல விதமான அபிப்பிராயங்களைக் கூறியிருக்கின்றனர். அவற்றுள், அரசிற்கு பிரஜைகளின்மீது சர்வாதிகாரமும் இருக்கிறது என்ற கொள்கை ஒன்று. அதாவது அரசு எவ்வித நிபந்தனையும் வரம்புமின்றி

தனது அதிகாரத்தைச் செலுத்த உரிமையுடையது என்பதே அதன் கருத்து. பார்வைக்கு, இந்தக் கொள்கை கட்டிற் கடங்காத கொடுங் கோன்மைக்கு ஆதரவளிப்பது போலவும், பிரஜைகளின் உரிமைகளை அடியோடு எடுத்து விடுவது போலவும் தோன்றுகிறது. ஆனால், அரசென்பதன் கருத்தை நாம் ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்போமானால், அது அநீதியானது, அல்லது, அக்கிரமமானது என்னும் குற்றம் இல்லாமல் போகும். அதன் உண்மையான கருத்து அடியில் வருவதே. அரசு என்பது கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய ஒரு தொகுதி. அது ஒவ்வொரு பிரஜையின் மீதும் அதிகாரம் செலுத்துவது, அதற்கு அவன் கீழ்ப் படிந்து நடப்பது என்ற நியதி ஸ்தாபிக்கப்பட்டுப் போனால், அதிலிருந்தே அதன் அதிகாரம் அமுலுக்கு வருகிறது. அந்த அதிகாரத்திற்குக் கீழ்ப்படிவதற்கு பிரஜைக்கு மனப்பூர்த்தியான சம்மதமிருந்தாலும், இல்லையானாலும் அதைப்பற்றி அக்கரையில்லை. கீழ்ப்படிவது என்ற செய்கை மாத்திரம், அரசு நிலைப்பதற்கு அத்தியாவசியமானதாக இருக்கிறது. அதாவது அரசு என்னும் ஸ்தாபனத்தில், எவ்விடத்திலோ இருக்கும் ஒரு மனிதன், அல்லது, மனிதர்களின் கட்டளைகளுக்கு பிரஜைகள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். தர்ம நியாயப்படி பார்க்கும் பக்ஷத்தில் அந்தக் கட்டளை கிரமமானதாக இருந்தாலும் இருக்கலாம், அக்கிரமமானதாக இருந்தாலும் இருக்கலாம். அரசு பிரஜைகளின் மனத்திற் கியைந்த செங்கோலரசாக இருந்தாலும் இருக்கலாம், ஊரைக் கொள்ளை கொள்ளும் கொடுங்கோலரசாக இருந்தாலும் இருக்கலாம். அந்த அரசு பொது ஜன சம்மதத்தின் மேலோ, அல்லது, பலவந்தத்தினாலோ ஸ்தாபிக்கப்பட்டதாக இருந்தாலும்

இருக்கலாம். இரண்டு வகைகளில் எவ்விதமாக அரசு ஏற்பட்டிருந்தாலும், அது தனது கட்டளைகளை பலவந்தத்தின்மேல் நிறைவேற்றிக் கொள்ளுகிறது. இத்தகைய அதிகாரம் வாய்ந்த ஸ்தாபனம் இல்லாவிடில், அரசென்பதும் இல்லை. இவ்வாறு பிறப்பிக்கப்படும் கட்டளைகளே சட்டங்கள் எனப்படுவன. ஆகவே, சட்டமென்பது அரசினால் வெளியிடப்படும் கட்டளை. அதற்கு ஒரு வரம்போ, அல்லது, ஒரு பிரஜை அதைப்பற்றி ஆட்சேபனை செய்வது என்ற தோஷங்களோ ஏற்படுமானால் அது பெருத்த குழப்பத்திலும் சச்சரவுகளிலும் போய் முடியும். அரசுகளின் கட்டளைக்கு மதிப்பென்பதே இல்லாமல் போய்விடும். அரசினுடைய கட்டளைக்கு வரம்பு ஏற்படுமானால், அதற்கு சர்வாதிகாரமும் உண்டு என்பது போலவும், இல்லை என்பது போலவும், ஒன்றுக் கொன்று எதிரிடையான கொள்கையாக முடியும். ஆகையால் அரசென்பதன் கட்டளைக்கு வரம்பென்பது இல்லை யென்றே கொள்ள வேண்டும். ஆனால், அந்தக் கட்டளைக்கு சட்ட பூர்வமான வரம்பு ஏற்படலாம். அதாவது, சட்டங்களை இயற்றும் அதிகாரத்தைப் பெற்றிருப்பதான அரசே சில விஷயங்களில் தனக்குத்தானே சட்டத்தின் மூலமாய் ஒரு வரம்பை உண்டாக்கிக் கொள்ளலாம்; அதை எப்பொழுது வேண்டுமானாலும் தானே விலக்கிக் கொள்ளலாம்; இவ்வாறு சட்டங்களை உற்பத்தி செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருக்கும் ஸ்தாபனமே அரசெனப்படுவது. அது தனக்குத்தானே சட்ட பூர்வமான வரம்புகளை உண்டாக்கிக் கொள்ளலாம்; தனக்கு யுக்தமாகத் தோன்றும் பொழுது அவற்றை நிவர்த்தித்துக் கொள்ளலாம். ஆகவே, சட்டங்களை இயற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ள அரசு பிற

ரால் ஏற்படுத்தப்படும் வரம்பிற்குக் கட்டுப் பட்டதல்ல. அரசே சட்டப்படி சர்வாதிகாரமும் படைத்திருப்பது. இவ்விதமாகப் பார்த்தால், இதுவே அது, அதுவே இது என முடியும்.

சட்டம், இராஜ்ஜியாதிகாரம் என்பவற்றைப் பற்றி இங்கிலந்து தேசச் சட்ட நிபுணரான ஜான் ஆஸ்டின் என்பவருடைய மிக முககியமான விளக்கமொன்றை நாம் ஆராய்வோமானால், முற்கூறிய விஷயம் இன்னும் தெளிவாய்விடும். "ஒரு குறித்த மேலதிகாரியானவன், தன்னைப் போன்ற வேறொரு மேலதிகாரிக்குக் கீழ்ப்படியும் வழக்கமில்லாமல், ஒரு குறித்த சமூகத் தொகுதியினரிடமிருந்து வழக்கமாகப் பணிவைப்பெற்று வருவானாகில், அந்தச் சமூகத்தில் அந்தக் குறிப்பிட்ட மேலதிகாரியே சர்வாதிகாரத்தைப் பெற்றவனாவான்; அந்த மேலதிகாரி உள்பட அச்சமூகமே இராஜீய இலக்ஷணங்களைக் கொண்டதும் தன்னரசு பெற்றதுமான சமூகமாகும்." என்று ஆஸ்டின் கூறுகிறார். எனவே இதன்படி, ஓர் அரசு (அல்லது இராஜீய இலக்ஷணங்களையும் தன்னரசையும் கொண்ட ஜனத் தொகுதி) என்பது அவ்விதமான கீழ்ப்படிதலும் அதை மற்றொருவர் பெற்றுக் கொள்வதுமாக இருந்துவரும் சமூகமேயாகும் என அறிகிறோம். அதிகார தோரணையும் அதற்குக் கீழ்ப்படிதலும் இருப்பதே ஓர் அரசு இருக்கிறதென்பதற்கு அறிகுறியாகும். அவ்விதமான கீழ்ப்படிதலைக் கோரும் கட்டளையே சட்டம் எனப்படுகிறது. ஆனால் இவ்வாறு கூறியதிலிருந்து விளங்குகின்ற இன்னொரு விஷயத்தையும் நாம் ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும்; அதாவது, சட்டபூர்வமான உரிமை என்றால் என்ன என்பதை நாம் அறியவேண்டும். சட்டபூர்வமான

உரிமையென்பது சர்வ வல்லமைபெற்ற அரசினல் அளிக்கப்படுவதும், அவ்வரசினுலேயே காக்கப்படுவதும், மற்ற பிரஜைகளால் ஆக்கிரமிக்கப்படாமலும், பாதிக்கப்படாமலும் இருப்பதுமான உரிமையை ஒரு பிரஜை பெற்றிருப்பதாகும். ஆனல் இவ்விதமாக ஏற்படும் சட்டபூர்வமான உரிமையும் தர்மத்தை யொட்டிய அல்லது நியாய வரம்பிற்குள்பட்ட உரிமையும் முற்றிலும் வேருனவை. உதாரணமாக, பிரான்ஸ் தேசத்தில் பதினெட்டாவது நூற்ருண்டில், பெருத்த இராஜீயப் புரட்சி ஏற்பட்டது; அதன் பயனக ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப் படுவதற்கு முன் இருந்த அரசியல் நிலைமையில், பல பாளையக்காரர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்க ளிடமிருந்து மிகக் கொடுமையான வரிகளை வசூல் செய்யும் "உரிமை"யைப் பெற்றிருந்தனர். அவ்வாறே யதேச்சாதிகாரம் செலுத்தும் ஓர் அரசன் தன்னுல் ஜயிக்கப்பட்ட ஒரு மாகாண ஜனங்களை இஷ்டப்படி நடத்தி ஹதம் செய்யும் 'உரிமை'யைத் தன்னுடைய சேனவீரன் ஒருவனுக்கு அளித்துவிடலாம். இதிலிருந்து, அரசியல் அமைப்பில், எந்தப் பிரஜைக்கும் அரசையே பாதிக்கக்கூடிய எவ்வித உரிமையும் இல்லை என்பது ஏற்படும். ஏனெனில் சட்ட பூர்வமான உரிமையை சிருஷ்டித்துப் பிரஜைகளுக்கு அளிப்பது அரசேயாதலால், தன்னையே பாதிக்கக்கூடிய உரிமையை அது உண்டாக்கிக் கொடுத்ததென்பது முரண்பட்ட செய்கையாகும்.

மேலே கூறியபடி நோக்குமிடத்து, அரசியலதிகாரம், சட்டம், உரிமைகள் என்பவை தர்மசாஸ்திரம் அல்லது அறநெறி ஆகியவற்றிற்கு முற்றிலும் வேருனவை எனத் தோன்றும். இவ்வாறு அரசுக்கு சர்வ வல்லமையுமுண்டு; அதனுடைய சட்டங்களுக்கு எவ்விதமான வரம்பும் இல்லை;

என்று பொதுவாக ஒரு நிர்ணயத்திற்குட்பட்ட கருத்துடன் கூறுவதைச் சிலர் தவறாக அர்த்தம் செய்துகொண்டு ஓர் உபயோகமற்ற வாதத்தைச் செய்யத் தொடங்குகின்றனர். பிரஜைகளுடைய மதவிஷயங்களிலும், சொந்த விஷயங்களிலும் அரசாங்கத்தார் தலையிடுவதற்கு எவ்வித நியாயமும் இல்லை என்றும், அரசினுடைய கட்டளைகளுக்கும் நிச்சயமாக ஒரு வரம்பு இருந்தேயாக வேண்டுமென்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தர்ம நியாயப்படி பார்ப்போமானால், அரசிற்கும் அவ்விதமான கட்டுப்பாடுகளும் வரம்புகளும் உண்டு என்பது உண்மைதான்; மனிதருடைய மதக்கொள்கைகளும் நம்பிக்கைகளும் இன்னின்ன விதமாகத்தான் இருக்கவேண்டுமென்று அரசாங்கத்தார் தீர்மானம் செய்துவிடுவது முற்றிலும் அதர்மமான செய்கையென்பதை அநேகமாக எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள். ஆனால் இதிலிருந்து, அரசின் அதிகாரத்திற்கு சட்ட பூர்வமான எல்லை ஏற்பட்டதாக ஆகிவிடாது. ஓர் அரசில் சர்வாதிகாரமும் பெற்றதொகுதியினர், மதவிஷயங்களிலோ அல்லது பிரஜைகளுடைய சொந்த வியவகாரங்களிலோ தலையிடுதல் கூடாதென்ற சட்டபூர்வமான விதிக்குட்பட்டிருப்பது அசம்பாவிதமாகும். அவ்விதமான வரம்பிற்குட் பட்டிருந்தால் அத்தொகுதியினர் சர்வ வல்லமை பெற்றவர்களாக மாட்டார்கள்; அவ்வாறு அரசின் அதிகாரத்திற்கு ஒரு வரம்பை உண்டாக்கிக் கொள்ள வேண்டுவானால், அந்த அதிகாரமும் அத்தொகுதியினருக்குத்தான் உரியது. இவ்வாறே அரசின் அதிகாரத்திற்கு ஒரு வரம்பை வேறுவகையில் உண்டுபண்ணக் கருதும் வாதங்களுக்கும் நாம் இதே விடையைத்தான் அளிக்கவேண்டும். உதாரணமாக, ப்ளண்ட்ஷ்லி என்ப

வர் "பூர்த்தியான அரசை எடுத்துக்கொண்டு பார்த்தால், அது சர்வ வல்லமையுடையது எனக் கூறமுடியாது; ஏனெனில் அதற்குப் புறம்பாயுள்ள அன்னிய நாடுகளின் அரச உரிமைகளினாலும், உள்நாட்டில் தன்னுடைய சுய இயற்கையினாலும், தனது பிரஜைகளின் உரிமைகளாலும் அது பாதிக்கப்பட்டிருக்கிறது." என்று கூறுகிறார். அவ்வாறே லேந்தம் என்பவர் "மற்ற அரசுகளுடன் செய்துகொள்ளப் பட்டிருக்கும் உடன்படிக்கைகளால் ஓர் அரசின் சர்வாதிகாரம் ஒரு வரம்பிற்குட்படுத்தப் பட்டிருக்கிறது" என எழுதியிருக்கிறார். ஆனால், இவ்விதமான வரம்புகளும் எல்லைகளும் நியாய முறைப்படி ஏற்பட்டவையேயன்றி சட்ட பூர்வமான கட்டுப்பாடுகள் ஆகா. ஆகவே, சட்டப்படி, அரசு சர்வ வல்லமை யுடையதேயாகும்.

மேலே விவரிக்கப்பட்ட, அரசின் அதிகாரத்தைப்பற்றிய தவறான வியாக்கியானங்கள் எளிதில் தோன்றுவதற்கு, இது சம்பந்தமாக உபயோகிக்கப்படும் சில வார்த்தைகளுக்குத் தெளிவாக அர்த்தம் செய்துகொள்ளப் படாமையே காரணமாக இருந்து வந்திருக்கிறது. 'உரிமை' என்பதை தர்மநெறி சம்பந்தமான உரிமை என்றும், சட்ட பூர்வமான உரிமை என்றும் நாம் பிரிக்கவேண்டும். தர்மநெறிசம்பந்தமான உரிமை நம்முடைய வாழ்க்கைக்குள் அடங்கிய, நாம் செய்யவேண்டிய செய்யத்தகாத சகலமான விஷயங்களையும் குறிக்கிறது. சட்டபூர்வமான உரிமை அரசினுடைய அதிகார வல்லமையினால் உண்டாக்கப்படும் விஷயங்களை மட்டுமே குறிக்கிறது. இவ்வாறு, 'உரிமை' என்ற பதத்திற்கு இருவிதமான கருத்துகள் இருப்பதைப் போலவே, 'இராஜ்ஜியாதிகாரம்' என்ற வார்த்தையும் சட்டபூர்வமான அதிகாரம் என்ற அர்த்தத்துடனும், கேவலம் பெயருக்கு மாத்திரம்

அரசனாக இருப்பவனுடைய அதிகாரத்தையும் குறிக்கும். இங்ஙனம் நோக்கும்பொழுது, கிரேட்பிரிட்டன் (இங்கிலந்தும் ஸ்காட்லந்தும் சேர்ந்த) தேசத்திற்கு ஒரு சக்கரவர்த்தி இருக்கின்றாராலும், அவருடைய அதிகாரம் கேவலம் பெயருக்கு மாத்திரம் இருப்பதேயன்றி உண்மையானதல்லவாதலால், சட்டப்படியுள்ள இராஜ்ஜியாதிகாரத்திற்கும், பெயருக்கு மாத்திரம் ஏற்பட்டுள்ள அதிகாரத்திற்கும் வித்தியாசம் தெளிவாக விளங்கும்.

2. **தற்கால துரைத்தனங்களின் அதிகார நிலை அல்லது இருப்பிடம்:**—இவ்வாறு அரசுக்கு உள்ள சர்வாதிகாரத்தின் இயற்கையையும் அதனுடைய சட்டங்களை எவரும் மீறமுடியாது என்பதையும் சில தேசங்களின் உதாரணத்தைக் கொண்டு நன்கு காணலாம். முதலாவது நம்மையாளும் இங்கிலீஷ்காரரது நாடாகிய இங்கிலந்தை எடுத்துக் கொள்வோம். இராஜீய விஷயங்களிலும், ஜனநாயக ஆட்சியிலும் இங்கிலந்து தேசமே முதன்மை பெற்றுள்ளது; அதை யநுசரித்தே ஏனைய நாடுகள் தங்கள் அரசியல் முறைகளை யமைத்துள்ளன. அநேக நூற்றாண்டுகளாக இராஜீயப் போர்புரிந்தே இங்கிலீஷ்காரர்கள் ஜனநாயக ஆட்சியை ஸ்தாபித்தனர். அவர்களுடைய முறையே சிறந்ததென அனைவரும் கூறுவர்; இங்கிலந்திலுள்ள பார்லிமெண்ட் என்கிற ஜனப்பிரதிநிதி சபையைச் **'சட்டசபைகளின் தாய்'** என்று பெருமைப்படுத்திக் கூறுவதுண்டு. ஆதலால் அரசியல் சம்பந்தமாக ஏதாகிலும் உதாரணம் வேண்டுமாயின், இங்கிலந்தையே எடுத்துக் காட்டுவது வழக்கம். பார்லிமெண்ட் என்ற அந்த சபைக்கு சர்வாதிகாரமும் உண்டு. அது எந்தச் சட்டத்தை இயற்றினாலும், ஜனங்கள் அதற்குக் கீழ்ப்படிந்தே யாகவேண்டும்.

அதனுடைய எல்லையைக் கட்டுப்படுத்தும் உரிமை எவருக்கும் இல்லை. அதனுடைய சட்டங்களை எதிர்க்க எந்த நியாய ஸ்தலத்திற்கும் அதிகாரம் இல்லை. அது பழைய சட்டங்களை விலக்கவோ, புதிய சட்டங்களை உற்பத்தி செய்யவோ வல்லமை யுடையது. ஜனங்களுடைய உரிமைகளைப் பிடுங்கிவிடவும் அதனால் இயலும். இங்கிலந்தின் அரசியலில் சர்வாதிகாரமும் பார்லிமென்ட் சபையினிடமே இருக்கின்றது.

அமெரிக்காவின் அரசியல் முறையோ வேறுவிதமானது. அமெரிக்காவில் 'காங்கிரஸ்' என்ற பெயரே சட்ட சபைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கு நிர்வாகத் தலைமை வகிக்கும் அதிபதிக்கு பிரஸிடெண்ட் என்பது பெயர். ஆனால் காங்கிரஸ் என்ற சட்டசபைக்கோ, அதி அதிபதிக்கோ சர்வ வல்லமையும் இல்லை. தங்கள் இச்சைப் படி அவர்கள் சட்டமியற்ற இயலாது. அவர்கள் இயற்றும் சட்டங்கள் வரம்புக்கு மீறியவையானால் அங்குள்ள நியாய ஸ்தலங்கள் அதி சட்டங்களை அலட்சியம் செய்துவிடும். அமெரிக்காவின் அரசியல் அமைப்பைப்பற்றி ஏற்படுத்தப் பட்டுள்ள இராஜீயப் பத்திரத்தில் இவ்வாறு காங்கிரஸினுடைய அதிகாரத்திற்கு ஓர் எல்லையை ஏற்படுத்தி இருக்கின்றனர். அந்த எல்லைக்குப் புறம்பான காரியம் எதையும் அந்த சபை செய்ய இயலாது. அப்படியானால், அமெரிக்காவில் சர்வாதிகாரமும் பெற்றவர் யார் என்ற கேள்வி உண்டாவது சகஜமே. இப்பொழுதிருக்கும் அரசியல் அமைப்பைமாற்றும் வல்லமை எவருக்கு உண்டோ அவரே சர்வாதிகாரம் கொண்டவர். இங்கிலந்தில் பார்லிமென்ட் சபைக்கே அந்த அதிகாரம் உண்டு. பார்லிமென்ட் மகா சபையானது, "இனி நம் தேசத்திற்குப் பொதுத் தேர்தல்

களே வேண்டாம். நாமே ஸ்திரமான சபையாக இருந்து விடலாம்'' என்று சட்ட மியற்றிவிட்டால் (அச்சட்டத்தை அரசனும் அங்கீகரிக்க வேண்டும்), அதைச் சட்டபூர்வமாக எதிர்க்கும் உரிமை பொது மக்களுக்குக் கிடையாது. கலகம் செய்தோ பலவந்தத்திலோதான் பொது மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க முடியும். அமெரிக்காவில் அவ்வாறு அரசியல் அமைப்பையே தலைகீழாய்க் கவிழ்த்து விடும் உரிமை காங்கிரஸ் மகாசபைக்குக் கிடையாது. காங்கிரஸ் சபையில் மூன்றில் இரண்டுபங்கு அங்கத்தினர்களும், ஐக்கிய நாடுகளிலுள்ள சட்டசபைகளில் 100-க்கு 75 சட்ட சபைகள் வீதமும் அநுமதித்தால்தான் அங்கு அரசியல் அமைப்பை மாற்றுவது சாத்தியமாகும். ஆனால் அங்கு இத்தகைய சபையொன்று ஸ்திரமாக உட்கார்ந்து வேலை செய்வதில்லை. இருந்தபோதிலும் அமெரிக்காவின் அரசியலில் சர்வாதிகாரம் படைத்தது இந்தக் கூட்டுசபையேயாகும். இக் கூட்டுசபை பிரத்யட்சமாக வேலை செய்யாது போனாலும், அது கொள்கையில் இருந்தே வருகிறது. அங்ஙனமே பிரான்ஸ் தேசத்திலும் பிரதிநிதிசபையும் ஸெனட் என்ற இராஜாங்க சபையும் சேர்ந்து உட்கார்ந்து ஒரு சட்டமியற்றினால்தான் அரசியல் முறையை மாற்றுவது சாத்தியம். இந்தக் கொள்கையைக் கொண்டு பார்த்தால் இந்தியா சட்டசபையோ, இந்தியா கவர்ன்மெண்டோ சர்வ வல்லமை கொண்டவைகளாகா. ஏனெனில், இந்திய தேசத்தின் அரசியலமைப்பை மாற்றியமைக்கும் உரிமை அவைகளுக்குக் கிடையாது. அந்த சக்தியை பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபையே பெற்றிருக்கிறது.

3. அரசின் சர்வாதிகாரக்கோள்கையைப்பற்றிய கண்டனம்; ஸர்ஹென்றிமேயின் என்பவருடைய ஆட்சேபனைகள்:-அரசிய

லதிகாரத்தைக் குறித்த சட்டத்தைப் பற்றியும் மேலே கூறியுள்ள விஷயங்களே மிக முக்கியமானவை; நவீன காலத்திய இங்கிலந்து தேசச் சட்டநிபுணர்களிற் பலர் அவ்விஷயங்களையே ஆதரித்து வருகின்றனர். அரசினுடைய தன்மையைப் பாகுபாடு செய்வதற்கு மேலே கூறப்பட்ட விஷயங்களே மிகவும் திருப்திகரமான அஸ்திவாரமாகும் என நாம் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் இக்கொள்கையைப் பலர் வெகு மும்முரமாகவும் வெகு நுட்பமாகவும் ஆட்சேபித்திருக்கின்றனர். எனவே இதை எல்லோரும் அங்கீகரித்து விட்டதாகக் கூற இயலாது. ஆதலால், இக்கொள்கையை நாம் ஆராயும்பொழுது அதைக் கண்டிப்பவருடைய சில முக்கியமான ஆட்சேபனைகளையும் எடுத்து விளக்குவதே ஒழுங்காகும். இந்த ஆட்சேபனைகளின் சாராம்சம், இக்கொள்கையானது பெயருக்குமாத்திர முள்ளதும் ஸ்வரூபமில்லாததுமாக இருக்கிறது, அது இராஜ்ஜியாதிகாரத்தின் உண்மையான உற்பத்தி ஸ்தானம் எவ்விடத்தில்தான் இருக்கிறதென்பதை திட்டமாகக் காட்டவில்லையாதலால், அது குன்றக் கூறியது; அது சட்டத்தினுடைய இயற்கையைப்பற்றித் தவறான கருத்தை வெளியிடுகிறதென்பதுமே யாகும்.

ஜான் ஆஸ்டின் என்பவர் அரசின் இயற்கையைப் பற்றிக் கூறியுள்ள விருத்தாந்தத்தை முன்பே ஆராய்ந்தோமல்லவா? ஆஸ்டினினுடைய கொள்கையைக் கண்டித்துக் கூறும் பல ஆட்சேபனைகளில் முதலாவதாக ஸர் ஹென்றி மெயின் என்கிற இங்கிலந்து தேசச் சட்ட நிபுணருடைய வாதத்தைக் கூறலாம். "அரசியல் ஸ்தாபனங்களின் பூர்வ சரித்திரம்" என்ற விஷயத்தைப் பற்றி இங்கிலந்திலுள்ள ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் செய்த பிரசங்கத்தில்

ஸர்ஹேன்ரி மேயின், ஆஸ்டினினுடைய முடிவைத் தாக்கியிருக்கிறார். மேயின் என்பவர் இந்தியாவில் ஏழு வருஷ காலம் உத்தியோகம் வகித்திருந்தவராதால் அவர், ஆஸ்டினினுடைய நூலுக்கு ஆதாரமாயிருந்த இங்கிலந்து தேச இராஜ்ய ஸ்தாபனங்களுக்கு முற்றிலும் வேறான ஸ்தாபனங்களைக் கொண்டிருந்த கிழக்கு நாட்டு நாகரிகத்துடன் சம்பந்தப்பட நேர்ந்தது; ஆதலால் மேயின் கிழக்கு நாடுகளின் உதாரணத்தைக் கொண்டு தம்முடைய அபிப்பிராயங்களை அமைத்து வாதம் செய்யலானார். கிழக்கு நாடுகளில் புராதனமாக இருந்துவரும் பழக்க வழக்கங்களின்படியே அரசு நடத்தப்படுகிறது. கிழக்கு நாடுகளில் தாமாகவே முயன்று சட்டங்களை இயற்றுவதென்பது ஜனங்களுக்குத் தெரியாத விஷயம். அத்தேசங்களில் கடுமையான யதேச்சாதிகாரம் செலுத்தும் மன்னர்களும்கூட புராதன வழக்கங்களினாலும், அதர்மமாக நடந்து கொள்வதால் நேரிடக்கூடிய பலன்களை நினைத்து அஞ்சியுமே கட்டுப்பாட்டிற்குள்ளடங்கி நடந்து கொள்கின்றனர் என்ற விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு மேயின் ஒவ்வொரு தனியான, சுதந்தரமான இராஜ்ய சமூகத்திலும், மற்றவரைத் தமதிஷ்டப்படியெல்லாம் நடக்கும்படி வற்புறுத்தக் கூடிய வல்லமையைப் பெற்ற ஒரு மனிதரோ, அல்லது, ஒரு தொகுதியினரோ உண்மையில் இருக்கிறார்களா என்று கேட்கிறார். ஏதோ காரணத்தினால் தேசத்தில் அமைதிக்குறைவும் குழப்பமும் ஏற்படும் காலங்கள் தவிர, மற்ற காலங்களில் இத்தகைய சர்வாதிகாரம் பெற்ற மனிதனோ அல்லது தொகுதியினரோ ஒவ்வொரு சமூகத்திலும் நிச்சயமாக இருந்தேயாக வேண்டுமென்று சிலர் கூறுவது அவருக்குச் சரித்திர மூலமாகவோ

அல்லது பிரத்தியட்சமான சம்பவங்களாலோ ஸ்தாபிக்கக் கூடியதாகத் தோன்றவில்லை. அதிலும் முக்கியமாகக் கிழக்கு தேச சமூகங்களின் விஷயங்களிலிருந்து இந்தக் கொள்கையின் தவறு நன்கு விளங்கிவிடுகிறது. உதாரணமாக, பஞ்சாப் தேசத்தில் தன்னுடைய உத்தரவைச் சிறிதளவாவது மீறி நடந்தவரைக் கொன்றோ வதைத்தோ தண்டிக்கும் சக்தியைப்பெற்று யதேச்சையாக ஆண்டுவந்த இரஞ்சிட் ஸிங் என்னும் அரசனுடைய உதாரணத்தை மேயின் நிதரிசனமாக எடுத்துக் காட்டுகிறார். இத்தகைய எல்லையற்ற சக்தியைப் பெற்றிருந்த இரஞ்சிட் ஸிங் ஒரு தடவை யேனும் ஆஸ்டினினுடைய கொள்கைப்படி சட்டமென்று கூறக் கூடிய கட்டளையை உற்பத்தி செய்யவில்லை, அவருடைய குடிமக்களின் வாழ்க்கையை ஒழுங்கு படுத்திய விதிகள்யாவும் வெகு புராதனமான வழக்கங்களிலிருந்தே ஏற்பட்டிருந்தன, அவ்விதிகளின்படி நிர்வாகம் நடத்தியவர்களும் உள்நாட்டு அதிகாரிகளேயாவர் என்றுமேயின் நிரூபித்திருக்கிறார். இதிலிருந்து நாம் செய்துகொள்ள வேண்டிய முடிவு என்னவென்றால், ஆஸ்டின் முதலியோரால் விவரிக்கப்பட்டுள்ள அரசு, அரசியலதிகாரம், சட்டம் என்பவை சம்பந்தமான கொள்கைகள், முற்கூறியவை போன்ற புராதன அநுஷ்டானங்களைப் பின்பற்றும் சமூகங்களுக்குப் பொருத்தமாக இல்லை என்பதே. ஆனால் கிழக்கு நாட்டு சமூகங்களின் விஷயத்தில் மட்டுமே ஆஸ்டினினுடைய வியாக்கியானம் திருப்திகரமாகப் பொருந்துவதில்லை என்று மேயின் கூறவில்லை. மேனாட்டு நாகரிகம் பரவியுள்ள தேசங்களிலும் இதே உண்மை பொருத்தமாக இருக்கிறது. மேனாடுகளிலும் கூட ஒவ்வொரு சமூகத்தினுடைய பழைய சரித்திர சம்பவங்களும், புராதன அநுஷ்டானங்க

ளும், அரசு எவராலும் எதிர்க்க இயலாத தன்னுடைய சர்வாதிகாரத்தை இன்னவிதத்தில்தான் உபயோகிக்க வேண்டும், இன்னவிதத்தில் உபயோகித்தல் கூடாது என்பதை நிர்ணயம் செய்திருக்கின்றன.

தமது சொள்கையைப்பற்றி மெயின் கூறும் ஆட்சேபனைகளை ஆஸ்டினே ஓரளவு முன்னதாகவே கண்டெழுதியிருக்கிறார். அரசினுடைய நேரான கட்டளையினாலன்றிப் புராதன வழக்கத்தின் மூலம் ஏற்பட்ட நிபந்தனைகளை யொட்டி நிர்வகிக்கப்படும் விஷயங்களையும் தமது விவரணத்திற்கு உள்படுத்த எண்ணியே ஆஸ்டின் "அரசன் எதை அநுமதிக்கிறானோ, அதை அவன் கட்டளையிடுவது போலவே யாகும்" என்று கூறியுள்ளார். உதாரணமாக, இங்கிலந்து தேச நிர்வாகத்தில் சில புராதனப் பழக்க வழக்கங்கள் அநுபவத்திலிருந்து வருகின்றன; அவைகள், சர்வாதிகாரமும் பெற்ற பார்லிமென்ட் சபையினால் சட்ட பூர்வமாய் இயற்றப் பட்டவையல்ல. ஆனால், அவை வெகு காலமாக வழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. நியாயஸ்தலத் தீர்ப்புகளினால் அவைகள் காலக்கிரமத்தில் மாறுபட்டும் பெருகியும் போயிருக்கின்றன. ஆகவே, சட்டம் என்பது அரசின் நேரான கட்டளையை மட்டும் குறிக்காமல், அரசியல் நிர்வாகத்தை எவ்விதத்திலாவது கட்டுப்படுத்தும் வழக்கம், ஆசாரம், அநுஷ்டானம், நம்பிக்கை ஆகியவைகளையும் குறிப்பதாகிறது. ஆனால் இங்கிலந்து தேசத்தில் இத்தகைய புராதன அநுஷ்டானரூபமான விதிகள் இருப்பது, பார்லிமென்ட் சபையினுடைய சர்வாதிகாரத்தை எவ்விதத்திலும் குறைக்கக் கூடியதென நினைப்பது தவறாகும் என்று ஆஸ்டின் கூறுகிறார். ஏனெனில் இப்புராதன விதிகளைத் தன்னிஷ்டப்படி அழிக்கவோ மாற்றவோ பார்லி

மென்டிற்கு அதிகாரம் இருப்பதனால், அப்பழக்க வழக்கங்கள் தொடர்ச்சியாக இருந்து வருவது பார்லிமென்டினுடைய உத்திரவின்மேலேயே யாகும் என நாம் கருதவேண்டும். இவ்வாறு ஆஸ்டின் வாதம் செய்வது பிரிட்டிஷ் பார்லிமென்டும் அங்குள்ள புராதன நியதிகளும் சம்பந்தப்பட்ட வரையில் உண்மையே யானாலும், அதை இரஞ்சிட் ஸிங் போன்ற யதேச்சாதிபதிகளின் விஷயத்திலும் பிரயோகிப்பது தவருகும்; ஏனெனில் தன்னால் மாற்ற முடியாத விதியையோ, வழக்கத்தையோ அவ்வரசன் அநுமதித்தே யாக வேண்டும். இவ்வாறு தன்னால் தடுக்கமுடியாதபடி ஒரு வழக்கத்தை அரசன் அநுமதிப்பதை அவனுடைய இராஜீய சட்டமென்பது அவனுடைய அதிகாரத்தை மிகைப்படுத்திக் கூறுவது போன்றதாகும். அது எவ்வாறு இருக்கிறதென்ருல், "சூரியன் பிரகாசிப்பதை நான் அநுமதிக்கிறேன்" என்று கூறி நாமும் சூரியனின் மேல் ஆதிக்கம் வகிப்பது போல இருக்கிறது.

ஒருகால், ஆஸ்டினினுடைய கொள்கையானது நாகரிக அபிவிருத்தியடைந்துள்ள தற்கால சமூகங்களின் விஷயத்தில் மட்டுமே பொருத்தமாகும் எனவும், அறைகுறையான கட்டுப்பாடுகளுடனிருக்கும் சமூகங்களுக்கும் ஆதிகால அநாகரிக சமூகங்களுக்கும் அது பொருந்தாது எனவும் எண்ணுவது சரியாக இருக்கலாம். ஆனல் நாகரிக அபிவிருத்தியடைந்த அரசுகள் சம்பந்தப்பட்ட வரையிலுங்கூட, ஆஸ்டினினுடைய கொள்கையானது ஒரு விதத்தில் வெறும் மனோபாவனையே என்பது உண்மையாகும். அரசின் சர்வாதிகாரக் கொள்கையைப் பற்றி ஸர் ஜேம்ஸ் ஸ்டீப/2ன் என்பவர் பின் வருமாறு எழுதியிருக்கிருர்- "கணித சாஸ்திரம், பொருளாதார சாஸ்திரம் ஆகிய வற்றின்

சித்தாந்தங்களைப் போல வெறும் மனோபாவ நிலைமையி லேயே இந்தக் கொள்கையும் உண்மையாகும். அதாவது, இக் கொள்கையினால் விவரிக்கப்படும் சித்தாந்தங்கள், அங்கங்கு நடந்தேறிவரும் முறைகளிலிருந்து கற்பனை செய் யப்பட்டவைகளே யாகையால், அவைகளைப் பூர்த்தியாகக் காட்டும் உதாரணங்கள் எங்குமில்லை. பிரபஞ்சதத்துவ சாஸ்திரத்தில் நாம் பாவனை செய்து கொள்ளுகிறபடி, சம் பூர்ணமான வட்டமும், சற்றும் வளையாத வஸ்துவும், அணுக்கள் பரஸ்பரம் உராய்ந்து கொள்ளாமல் இருக்கும் பொருளும் பிரபஞ்சத்தில் எப்படி இல்லையோ, கேவலம் இலாபத்தை மாத்திரம்கருதும் ஜனங்களைக் கொண்ட சமூக நிலைமை இயற்கையில் எப்படி அமைவதில்லையோ, அப்ப டியே இயற்கையில் சர்வாதிகாரமும் பூர்த்தியாகப்பெற்ற அரசென்பதே இராது” என்று அவர் கூறுகிறார். இங்ஙனம் ஸ்டீபன் கூறிய வரம்புகளிற் குட்பட்டு ஆஸ்டினுடைய கொள்கை ஸாராம்சத்தில் சரியானதென்றே நாம் கொள்ள வேண்டும். ஆனால் நிச்சயமான கட்டுப்பாட்டுக் குட்படுத் தப்பட்ட சமூகங்களுக்கு மட்டுமே அக்கொள்கை பொருந் தும் என்றும் நாம் கருத வேண்டும். இராஜ்ஜியாதிகாரப் பாகுபாட்டைப் பற்றி அக்கொள்கையில் கூறப்பட்டுள் ளது, அவ்வதிகாரத்தினுடைய அடிப்படையான உற்பத்தி ஸ்தானத்தையோ அல்லது அவ்வதிகாரத்தின் முக்கிய மான அங்கத்தையோ விளக்குவதன் பொருட்டல்லாமல், தற்கால உலகில் அது வேலை செய்யும் முறையைக் குறிப் பிடுகின்றதும், மனோபாவனையிலுதித்ததுமான ஒரு பொது வான விதியையே தெரியப்படுத்துகிறது. இக்கொள்கையை இந்த அர்த்தத்தில் ஒப்புக்கொள்வது, அரசு, சட்டம் என்ற வார்த்தைகளின் பொருளை ஒருவாறு சுருக்கி விடுவதே

யாகும். அதாவது அரசு என்ற சொல், அவசியமான கட்டுப்பாட்டைப் பூர்ணமாகப் பெற்றும், அதிகார தோரணையையும் அதற்குக் கீழ்ப்படிவதையும் நிச்சயமாக அடைந்தும் உள்ள சமூகங்களை மட்டுமே குறிப்பதாகும். சட்டம் என்பது, அரசில் சர்வாதிகாரம் படைத்த தொகுதியினரால் நேராகவோ, அல்லது, வெகு காலமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு வழக்கத்தை எதிர்க்காமல் அநுமதித்து விடுவதாலோ, இடப்படும் கட்டளையை மட்டுமே தெரிவிக்கும். இங்ஙனம் கூறுவதில் அரசு, சட்டம் என்ற சொற்களுடைய விரிவான கருத்து சுருங்கி விட்டாலும், அச்சுருங்கிய கருத்து அதிக தெளிவும் திருத்தமும் அடைகிறது. ஆனால் ஆஸ்டினினுடைய அரசியல் கொள்கையைப் பற்றி மேயின் என்பவர் கூறியுள்ள ஆட்சேபங்கள் உண்டாகா வண்ணம் செய்யும் பொருட்டுப் பல நூலாசிரியர்கள் அரசு, சட்டம் என்ற சொற்களை விரிவுபடுத்தி, ஆஸ்டினினுடைய பாகுபாட்டிற்குள்ளடங்காத இராஜீய வளர்ச்சியைப் பெற்ற சமூகங்களையும் இதனுள் சேர்த்து விடுவதே சிறந்த முறையென எண்ணுகின்றனர். உதாரணமாக உட்ரோ வில்ஸன் என்பவர் சட்டத்தை விளக்கிக் கூறுவதில், அதை ஒரு பிரத்தியட்சமான சட்டத்துடன் மட்டும் சம்பந்தப்படுத்தாமல், மீற முடியாத தன்மையை யடைந்துள்ள புராதன வழக்கங்களையும் அதற்குட் படுத்த முயற்சிக்கிறார். "அரசாங்கத்தினுடைய அதிகாரத்தாலும் சக்தியாலும் பலப்படுத்தப் பெற்று, ஒரே மாதிரியான விதிகளென்ற உருவத்தில் யாவராலும் தெளிவாக அங்கீகரிக்கப் பட்டுள்ள, நிலையான கருத்துகளும் வழக்கங்களுமே சட்டமாகும்" என்று அவர் கூறியிருக்கிறார். நாமே பிரயத்தன பூர்வமாகச் சட்டமியற்றுவதென்பது இத்தகைய விதிகள் ஏற்படுவதற்குக்

காரணமாயுள்ள பல அம்சங்களில் ஒன்றேயாகும். அரசனுடைய உத்தரவினாலோ அல்லது சட்டரூபமான கட்டளையினாலோ வன்றி, அவ்விதிகள், சமூகத்தினரனைவரும் கூட்டாகச் சேர்ந்து செய்யும் காரியங்களாலும் ஓரளவு அமைக்கப்படுகின்றன. அங்ஙனமே இவ்விதிகள் தோன்றக் காரணமாய் நிற்கும் இன்னும் சில அம்சங்களுள், மதநம்பிக்கையைச் சார்ந்துள்ள ஒழுக்க முறைகளையும், ஏற்கெனவே நிலைத்துள்ள சட்டங்களையும் ஆராய்ந்து, அதனுடைய நியாய அநியாயத்தைத் தீர்மானித்து அதன் கருத்தை விரிவுபடுத்தும் மனிதருடைய அபிப்பிராயங்களையும் கூறலாம். இவ்விதம், உட்ரோ வில்ஸனுடைய அபிப்பிராயமானது ஆஸ்டினுடைய பாகுபாட்டையும், அதை மெயின் கண்டித்துக் கூறியதையும் சமரஸப்படுத்தி விடுகிறது.

(4) சட்டபூர்வமான இராஜ்ஜியாதிகாரமும், உண்மையான இராஜ்ஜியாதிகாரமும்:— ஆஸ்டினுடைய அரசியலதிகாரக் கொள்கையைப் பற்றி மேற்கூறிய ஆட்சேபனைகள் ஒருபுற மிருக்க, அதை இன்னொரு காரணத்தாலும் சிலர் கண்டிக்கின்றனர். சட்டபூர்வமான இராஜ்ஜியாதிகாரக் கொள்கை மறுக்கவொண்ணாத உண்மையையே தெரிவிப்பதானாலும், அது விஷயங்களைப் பூர்த்தியாகத் தெரிவிப்பதில்லை என்று சிலர் கூறுகின்றனர்; சமூகத்தின் ஏனையோர்மீது மீறமுடியாத உத்தரவுகளைப் பிறப்பிக்கும் சக்தியை சட்டத்தின் மூலமாகக் கொண்ட மனிதனையோ அல்லது தொகுதியினரையோ மட்டும் இக்கொள்கை குறிக்கிறதேயன்றி, உண்மையில் இராஜ்ஜியாதிகாரம் அடிப்படையாகத் தங்கியிருக்கும் இடத்தை அது ஆராய்வதில்லை. ஒரு யதேச்சாதிபதியான அரசனுடைய தேசத்தில், அந்த அரசனுடைய இஷ்டம் ஒன்றே சட்ட பூர்வ

மான இராஜ்ஜியாதிகாரமாகும்; ஆனால் இவ்வரசனே, தந்திரம் நிறைந்த ஒரு மதகுருவினிடமோ, அல்லது, சாமர்த்தியசாலியான ஒரு மந்திரியினிடமோ சிக்கி, அவர்கள் வளைத்தபடியெல்லாம் வளையக் கூடிய வெறும் பதுமையாக இருக்கலாம். அங்ஙனமானால் இராஜ்ஜியச் சட்டங்கள் வெளிப் பார்வைக்கு அரசனிடமிருந்தே உற்பத்தியாவதாகத் தோன்றினாலும், உண்மையில் அவை மதகுருவினாலோ அல்லது மந்திரியினாலோதான் இயற்றப்பட்டிருக்கும்; அதாவது சட்டபூர்வமான அல்லது பிரத்தியட்சமான அதிகாரம் அரசனுடையதேயாயினும் அது உண்மையில் மந்திரியினாலோ மதகுருவினாலோதான் வகிக்கப்பட்டு வரும். ஜனப் பிரதிநிதி ஆட்சியைப் பெற்றுள்ள தேசங்களில், பிரஜைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு இராஜ்ஜிய நிர்வாகத்தை ஒப்புக்கொண்டுள்ள தொகுதியினரே தற்காலிகமாக இராஜ்ஜியாதிகாரத்தைச் சட்டமூலமாகப் பெற்றிருக்கலாம்; அல்லது, பெற்றிருப்பதாகத் தோன்றலாம்; ஆனால் அந்த ஜனப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, தங்களுடைய அபிப்பிராயத்தையே அவர்கள் பிரதி பலிக்கவேண்டுமென்று கூறி, அவர்களுக்கு அதிகாரத்தை அளிக்கும் ஓட்டர்களின் தொகுதியைப் பற்றி நாம் என்ன கூறுவது? பெயருக்கு மாத்திரம், பொய்த் தோற்றமான ஓர் அதிகாரத்தைப் பிறரிடமிருந்து பெற்றுள்ள ஓர் அரசனுடையதோ, அல்லது, சபையினதோவான சட்டபூர்வமான இராஜ்ஜியாதிகாரத்தை மட்டும் ஆராய்ந்துவிட்டு, அவைகளுக்குப் பின்னால் தங்கியிருக்கும், அந்த இராஜ்ஜியாதிகாரத்திற்கு உண்மையான மூலஸ்தானத்தை அங்கீகரிக்க மறுத்துவிடுவது, அரசியலமைப்பையும் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியும் வழக்கத்தையும் திருப்தியாக விளக்குவது ஆகாது.

இக்காரணங்களைக் கொண்டு நவீனகால நூலாசிரியர்களிற் பலர் ஆஸ்டினினுடைய கொள்கையைத் திருத்தியமைத்து, அவருடைய சட்ட பூர்வமான இராஜ்ஜியாதிகாரக் கொள்கையுடன் "உண்மையான இராஜ்ஜியாதிகாரச் கொள்கை"யொன்றைச் சேர்த்திருக்கின்றனர். ஆஸ்டினினுடைய பாகுபாட்டைக் கண்டித்து நிராகரித்து விடவேண்டுமென்பது அந்நூலாசிரியர்களுடைய கருத்தல்ல; ஆனால் அடிப்படையான அரசியலதிகாரத்தினுடைய இயற்கையையும் அதனுடைய மூலஸ்தானத்தையும் ஆஸ்டினினுடைய கொள்கை பூர்த்தியாக விளக்கவில்லை என்பதைக் காண்பிப்பதே அவர்களுடைய நோக்கமாகும்; "சட்ட நிபுணர் அங்கீகரிக்கும் அரசுக்குப் பின்னால், அந்த அரசும் தலை பணியவேண்டிய இன்னோர் அரசு இருக்கிறது" என்று ஆசிரியர் டைஸி கூறியிருக்கிறார். இதே உண்மையை ஆசிரியர் ஸிட்ஜ்விக் என்பவர் பல உதாரணங்களைக் கொண்டு, பகிரங்கமாக அதிகாரம் பெற்றவன் ஒருவனாகவும் உண்மையில் அடிப்படையான அதிகாரம் பெற்றவன் வேறொருவனாகவும் இருப்பதை விளக்கி யிருக்கிறார். பொது ஜன சபையொன்றினால் ஒரு குறித்த காலத்திற்கு, பொறுப்பற்ற யதேச்சாதிபதியாய் நியமனம் செய்யப்பட்ட ஒருவன் தனக்கு மறுபடியும் அதே பதவி கிடைக்க வேண்டுமென்ற இஷ்டமில்லாவிடில், தானே சட்டபூர்வமாகவும் உண்மையிலும் சர்வாதிகாரியாக நடந்துகொள்ளலாம். ஆனால் மறுபடி அப்பதவியைப் பெறுவதற்கு ஆசைகொண்டால், அவன் தன்னை நியமிக்கும் சக்திவாய்ந்த பொது ஜன சபையினுடைய இஷ்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்; அப்பொழுது அந்தப் பொதுஜன சபையே அடிப்படையான இராஜீய அதிகாரத்தை நடத்தும் சக்

தியைப் பெற்று விடுகிறதாகையால், அந்த யதேச்சாதிபதியினுடைய ஸ்தானமானது உண்மையான அதிகாரத்தின் மூலஸ்தானமாக இல்லாது போய்விடுகிறது. அல்லது ஒரு மதகுருவினுடைய இஷ்டத்திற்கு வழக்கமாகக் கீழ்ப் படிந்து நடக்கும் ஓர் அரசனை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்; அந்த மதகுருவினால் பரலோகத்தில் ஏற்பட்ப் போவதாகச் சொல்லப்படும் தண்டனைகளைக் கண்டல்லாமல், தன்னுடைய பிரஜைகள் தன்னை ஒரு மதப்பிரஷ்டனாகக் கருதிவிட்டால் அவர்களிடமிருந்து பணிவையும் அடக்கத்தையும் எதிர்பார்ப்பது கடினமாய்விடுமென்ற பயத்தால் அவ்வரசன் மதகுருவுக்குட்பட்டு நடந்தால், அவன் பூர்த்தியான சர்வாதிகாரம் பெற்றவனல்லன் என நாம் ஒப்புக்கொண்டுவிடலாம். இங்ஙனம் வாதம் செய்து கொண்டே போனால் நமக்கு ஓர் உண்மை விளங்கும்; அதாவது சட்டபூர்வமான அரசியலதிகாரமும், உண்மையான அரசியலதிகாரமும் ஒரே இடத்தில் சேர்ந்திருப்பது மிக மிக அருமையாய்விடும். அரசியல் நிர்வாகத்தைக் கட்டுப் படுத்தும் பல அம்சங்களில் ஒரு தேசத்தில் மத குருமார் களும், இன்னொரு தேசத்தில் போர்வீரர்களும் அல்லது தனவந்தர்களும், வேறொரு நாட்டில் அரசனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவரும் அல்லது இராஜ்ஜியத்தின் தலைநகரத்தின் பிரஜைகளுமாக இருப்பார்கள்.

அநேக தேசங்களில் இத்தகைய பூர்த்தியான அரசியலதிகாரம் பொது ஜனங்களிடத்திலோ அல்லது ஓட்டுரிமை பெற்ற தொகுதியினரிடத்திலோ இருப்பதாக நமக்குத் தோன்றலாம்; ஜனநாயக ஆட்சியைப் பெற்றுள்ள நாடுகளில் அநேகமாக எல்லாப் புருஷர்களுக்கும் இவ்வோட்டுரிமை யளிக்கப்பட்டிருக்கும். இவ்விஷயத்தை விவரிக்கையில்

ஆஸ்டின் என்பவரே ஒரு விநோதமான தவறைச் செய்து விட்டார்; அதாவது ஓட்டுரிமை பெற்ற தொகுதியினரிடம் உண்மையான இராஜ்ஜியாதிகாரம் இருப்பதுடன் சட்ட பூர்வமான இராஜ்ஜியாதிகாரமும் அவர்களிடமே இருக்கிற தென அவர் கூறியிருக்கிறார். அதாவது முன்பு நாம் உண்மை யான இராஜ்ஜியாதிகாரமும் சட்டபூர்வமான இராஜ்ஜியா திகாரமும் ஒரே இடத்தில் இருப்பது மிக அருமையெனக் கூறியதற்கு இது விரோதமாக இருக்கிறது. ஆனால் ஆஸ்டினினுடைய வாதத்தின் பொருத்தமற்ற தன்மையை நாம் தெளிவாகக் காணலாம். ஏனெனில் குறித்த காலங் களுக்கு ஒரு தடவை சட்டசபையின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பிரஜைகள் சட்டத்தின்படி பெற்றிருந்தாலும், தேர்தல் நடந்த பின் அவர்களுக்கு எவ்விதமான இராஜீய நிர்வாகக் காரியமும் (சட்டப்படி) கிடையாது. உலகின் அரசுகளிற் பெரும்பாலானவைக ளில் ஓட்டர்கள் தாமாக ஒரு சட்டமியற்றவும் முடிவ தில்லை; சட்டசபையின் தீர்மானங்களை நிராகரிக்கவும் அவர் களுக்கு சக்தி இல்லை. உதாரணமாக, கிரேட் பிரிட்டனை எடுத்துக்கொண்டு, சட்டத்தின் மூலமாக மட்டும் விஷயங் களை கவனிப்போமானால் அங்குள்ள பார்லிமெண்டு சபை யார், ஐந்து வருஷங்களுக் கொருமுறை சபையைக் கலைத்து புதுத்தேர்தலை நடத்தும் வழக்கத்தை ஒழித்துத் தம்மையே சாசுவதமான சபையாகச் செய்துகொண்டு பிரஜைகளுடைய ஓட்டுரிமைகளை யெல்லாம் அபகரிப்ப தான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் சக்தியைப் பூரண மாகப் பெற்றிருக்கின்றனர். ஆனாலும் ஸ்விட்ஜர்லந்த் முதலான தேசங்களில் பிரஜைகள் தாமாகவே ஒரு சட் டத்தை இயற்றும் அதிகாரத்தையும் சட்டசபையின் தீர்

மானத்தை நிராகரிக்கும் அதிகாரத்தையும் ஓரளவு பெற்றிருக்கின்றனர். இந்த முறையானது பரிபூர்ணமாகச் செய்யப்பட்டால் அப்பொழுது ஓட்டர்கள் சட்டபூர்வமான இராஜ்ஜியாதிகாரத்தையும் உண்மையான இராஜ்ஜியாதிகாரத்தையும் பெற்றிருப்பதாகக் கூறலாம். ஆஸ்டினினுடைய தெளிவான சித்தாந்தம் இவ்வாறு குழப்பப்படுவதை நாம் அகற்றவேண்டுமானல், பொதுவாக, அடிப்படையான இராஜ்ஜியாதிகாரம் ஓட்டர்களடங்கிய தொகுதியினரிடமே தங்கியிருப்பதாகக் கூறலாம்.

இவ்விதம் நாம் சொல்லுவதையும் பலவிதங்களில் கண்டிக்க இடமுண்டு. இராஜ்ஜியாதிகாரத்தைப் பெற்ற ஓட்டர்களே ஏதோ சில மதகுருமார்களுடைய ஆதிக்கத்திற் குட்பட்டோ, அல்லது, தனவந்தர்களுடைய கட்டளைகளின்படியோ, அல்லது, வேறு எந்த வகுப்பாருடைய விருப்பத்தின்படியோ நடந்து கொள்வது முற்றிலும் சாத்தியமேயாகும். அப்பொழுது உண்மையான இராஜ்ஜியாதிகாரமானது ஓட்டர் தொகுதியையும் தாண்டி அதற்குமப்பாலுள்ள சிலரிடம் போய்ச் சேர்ந்து விடுகிறது. மேலும் தேசத்தின் பிரஜைகளில் சிலருக்கு மட்டும் ஓட்டுரிமையளிக்கப்பட்டிருக்கும் பொழுது (உதாரணமாக, ஸ்திரீகளுக்கின்றி புருஷர்களுக்கு மட்டும் இருக்கலாம்)¹ ஓட்டுரிமையை வகிப்போர், அவ்வுரிமையைப் பெருதவர்களுடைய விருப்பத்தினல் பாதிக்கப் படுவதும் முற்றிலும் சாத்தியமேயாகும். எனவே, ஜன நாயக ஆட்சி நடந்துவரும் தேசத்திலுள்ள ஓட்டர்களே கட்டாயமாகவும், எப்பொழுதும் அடிப்படையான இராஜ்ஜியாதிகாரத்தின் மூலஸ்தானமாக இருக்கத்தான் வேண்டுமென்ற அவசியமிருப்பதாகத் தோன்றவில்லை.

(5) ஆஸ்டி கொள்கைகளின் கண்டனம்:—இவ்விதமாக நாம் அடிப்படையான இராஜ்ஜியாதிகாரத்தின் மூலஸ்தானத்தைத் தேடியலைய அலைய, அது நம்மிடமகப்படாது தூரதூரப் போய்க் கொண்டே இருக்கிறது. சட்ட பூர்வமான இராஜ்ஜியாதிகாரத்திற்கு மாருக உண்மையான இராஜ்ஜியாதிகாரம் வேறொருவரிடம் இருக்கலாம் என்று கூறும் பொழுது அது தெளிவான விஷயமாகவே தோன்றுகிறது. ஆனுல் அதை நாம் கூர்ந்து நோக்கி ஆராயும் பொழுது, அக்கொள்கை இராஜ்ஜியாதிகாரத்தின் முக்கிய காரணங்களுள் ஒரே அம்சத்தை மட்டும் குறிப்பதாய், பிரத்தியட்சமாகத் தெரியாத விஷயமாய் விடுகிறது. ஆஸ்டினுடைய அதிகாரக் கொள்கையை விட்டு அதற்கடியில் ஆழ்ந்து நோக்கினுல் யாவும் குழப்பமாய் விடுகின்றன. சட்டத்தை இயற்றும் அதிகாரத்தை எல்லையின்றிப் பெற்றுள்ள தொகையினரை நவீன அரசுகளில் நாம் பிரத்தியட்சமாகக் குறித்துக் காட்டி விடலாம்; ஆனுல் தம்முடைய இஷ்டத்தின்படியே யாவையும் நடத்தி வைககும் சக்தியை உண்மையாகப் பெற்றுள்ள மனிதனேயோ தொகுதியினரையோ நாம் சுட்டிக் காட்டப் புகுந்தால், அது பெரும் சிக்கலானதும் தெளிவற்றதுமான விஷயம் ஆய் விடுகிறது. இப்படி வெகு சிக்கலாயுள்ள விஷயத்தைத் தெளிவு படுத்தும் நோக்கத்துடன் ஆசிரியர் ரிட்சி முதலானவர்கள் இராஜ்ஜியாதிகாரத்தினுடைய மூலஸ்தானம் பொது ஜனங்களினிடையிலேயே எப்பொழுதும் காணப்படுகிறது என்ற கொள்கையை நிர்த்தாரணம் செய்திருக்கின்றனர். இவ்வாறு பொது ஜனங்களிடம் இராஜ்ஜியாதிகாரம் இருக்கிறதென்பதை நாம் பல வழிகளில் காணலாம்; பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் நேரான முறையினுலோ, அல்லது,

அரசை வகிப்பவரைப் பல வழிகளில் இயக்குவதாலோ, பயமுறுத்துவதாலோ, கலகம் செய்து குழப்பத்தை விளைவிக்கும் சக்தியைக் கொண்டிருப்பதால் அவரை அச்சுறுத்தியோ, பொது ஜனங்களே இராஜ்ஜியாதிகாரத்தைச் செலுத்தி வருகின்றனர் என்று ஷை கொள்கையினர் கூறுகிறார்கள். மேலும் பொது ஜனங்களே எவராலும் எதிர்க்கமுடியாத சரீரபலத்தையும் கொண்டிருக்கின்றனர்; அதாவது இராஜ்ஜியாதிகாரத்தைப் பெறுவதற்குக் கடைசி மார்க்கமாகப் போர் நேர்ந்தாலும் கூடப் பொது ஜனங்களே வெற்றி பெறுவார்கள். ஆதலால் பொது ஜனங்கள் கீழ்ப் படிந்து நடக்கும் எந்த அரசியல் முறையும் அவர்களுடைய அந்தரங்கமான சம்மதியைப் பெற்றே இருந்து வருகிறது என்று கருத வேண்டும். இக்கொள்கையின்படி பொதுஜனங்களே எவ்விதத்திலும் இராஜ்ஜியாதிகாரம் பெற்றவர்கள் என்பது நிச்சயம் ஆய்விடுகிறது. ஆனால் இதில் ஒரு விசேஷத்தை நாம் கவனிக்க வேண்டும். இக்கொள்கையினர் பொது ஜனங்களோ அல்லது அவர்களிற் பெரும் பாலோரோதான் முழு இராஜ்ஜியாதிகாரத்தையும் வகிக்க வேண்டும் என்று கூறுவதுடன் நிற்காமல், தற்கால அரசுகள் யாவற்றிலும் பொது ஜனங்கள் அவ்வதிகாரத்தை உண்மையில் ஏற்கனவே பெற்றிருக்கின்றனர் என்றும் வாதம் செய்கின்றனர். ஏதோ காரணமாகக் கோப மூட்டப் பெற்றால், இப்பொழு திருக்கும் அரசாங்கத்தையே அழித்து விடுவதற்கும் போதிய அளவு சரீர பலத்தைப் பொது ஜனங்கள் பெற்றிருப்பதால், அவர்கள் அரசாங்கத்தாருடைய கட்டுப்பாடுகளை ஓர் எல்லை வரையிலுமே பொறுத்துக் கொண்டிருப்பார்கள். அந்த எல்லைக் குட்பட்டு அரசாங்கத்தாரால் இடப்படும் கட்டளைகளுக்கு

அவர்கள் கீழ்ப்படிந்து வந்தாலும், அவ்வெல்லையின் வரம்பைமீறி விட்டால் முடிவில் அவர்களே எஜமானர்களாய் விடுவார்கள். ஆனால் ரூஸோ முதலான ஆசிரியர்களுடைய சமூக ஒப்பந்தக் கொள்கைக்கும் இக்கொள்கைக்கும் வித்தியாசம் உண்டு. சமூக ஒப்பந்தக்கொள்கையை ரூஸோ வியாக்கியானம் செய்தபடி பொது ஜனங்கள் ஒன்றுகூடி பகிரங்கமாக ஓர் அரசாங்கத்தை ஸ்தாபித்துத் தங்களுடைய இராஜ்ஜியாதிகாரத்திற்கு அவ்வரசாங்கம் உட்பட்டு நடக்கவேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்தது போல ஆகிறது. ஆனால் பொது ஜனங்கள் அரசினுடைய இருப்பை அங்கீகரித்து அதற்குத் தமது சம்மதியை யளிப்பது பகிரங்கமானதாக இன்றி, மௌனமாகவும் தம்மை யறியாமலேயும் அளித்துள்ள சம்மதியாகவே இருக்கிறது. அது எப்படி யிருந்தாலும் அரசினுடைய இருப்பிற்கே அவர்கள் சம்மதி யளிப்பது வாஸ்தவமேயாகும்; அந்தப் பொதுஜன சம்மதியே இராஜ்ஜியாதிகாரத்தினுடைய அஸ்திவாரமாகும். ஜனநாயக ஆட்சிமுறை பரவியிருக்கும் தேசத்திலும் சரி, ஏதேச்சாதிபத்தியம் நடத்தப்படும் தேசத்திலும் சரி, அரசு நடப்பது பொது ஜனங்களுடைய சம்மதியையும் இஷ்டத்தையும் பெற்றதேயாகும் என்று ரிட்சி நிரூபித்திருக்கிறார்.

இவ்வாறு பொது ஜனங்களுக்கு இராஜ்ஜியாதிகாரத்தை முற்றிலும் அளித்து விடும் கொள்கை பார்வைக்கு வசீகரமாகத் தோன்றினாலும், அது வெகுவாகத் தவறுயுள்ள சில ஆதாரங்களைச் சார்ந்து நிற்கிறது. பொது ஜனங்களிடமோ, அல்லது, அவர்களுள் பெரும்பாலோரான வரிடமோதான் சரீரபலம் அதிகமாக இருக்கிறதென அக்கொள்கையில் கூறப்பட்டுள்ளது உண்மையல்ல; அரசாங்

கத்தினுடைய உறுப்புகளான இராணுவம், கட்டுப்பாடு, பரஸ்பர அன்னியோன்னியத் தன்மை ஆகிய இவைகளை அக் கொள்கை அநாதரவு செய்து விடுகிறது. யுத்தப் பயிற்சியில்லாத கோடிக்கணக்கான ஜனங்களை, இக்காலத்து நூதன ஆயுதங்களைக் கொண்டு, ஒரு கட்டுப்பாடான வழியில் பழக்கப்பட்ட பதினாயிரம் போர் வீரர்கள் வெகு சுலபத்தில் அடக்கி விடுவார்கள். நூறு கைதிகள் ஒன்று சேர்ந்து பத்துப் பன்னிரண்டு காவலாளிகளினுடைய ஆதிக்கத்தை மௌனமாக அங்கீகரித் திருப்பதால், அக்காவலாளர்களினுடைய அதிகாரம், நேராகவோ அல்லது அடிப்படையாகவோ, அந்தக் கைதிகளினுடைய சம்மதத்தினின்றுமே தோன்றுகிறது எனக் கூற முடியாது. ஏதேச்சாதிபதியாக ஆண்டுவரும் அரசனுடைய அதிகாரம் ஓரளவில் பொது ஜனங்களுடைய சம்மதத்தையே சார்ந்து இருப்பது உண்மையானாலும், அவ்வரசனிடமிருந்து சம்பளம் பெற்று அவனது வசத்தில் இருக்கும் திறமையான சேனைகளும் அவ்வதிகாரம் நிலைத்திருப்பதற்கு முக்கியமான ஆதாரம் என்பதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும். ஆதலால், ஆழ்ந்து பார்க்கும் பொழுது எண்ணிக்கையில் அதிகமாக உள்ள தொகுதியினரே அதிக பலத்தைக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை என்பது தெளிவாய் விடுகிறது. அதிகமான எண்ணிக்கையைப் பெற்றிருப்பதுடன், கட்டுப்பாடு, நவீன ஆயுதங்கள், முன்னரே பயிற்றுவிக்கப் பட்டுள்ள முறைப்படி எல்லோரும் ஒரே மாதிரியாய் நடந்து கொள்ளும் திறமை முதலான வசதிகளையும் பெற்றிருப்பதற் கேற்றபடி ஒரு தொகுதியினருடைய சக்தியும் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். எனவே, இராஜ்ஜியாதிகாரக் கொள்கையைப்

பூர்த்தியாகச் செய்யும் பொருட்டு இன்னம் ஆழ்ந்து நாம் ஆராய்ந்து பார்த்தால், அடிப்படையான இராஜ்ஜியாதிகாரம் பொது ஜனங்களிடமோ அல்லது அதிகமான எண்ணிக்கையைக் கொண்ட கூட்டத்தினரிடமோ இல்லையெனவும், எல்லோரும் ஒருவர் போலவே நடந்துகொள்ளும்படி பயிற்சி செய்விக்கப்பட்டுள்ள போர் வீரர்களான ஒரு தொகுதியினரிடமே அது இருக்கிறதெனவும் கூற வேண்டிவரும். ஆனால் இந்தத் தொகுதியினரும் ஒரு மேலதிகாரியுடைய (அல்லது சில மேலதிகாரிகளுடைய) கட்டளையை அநுசரித்தும் ஒரு குறித்த வழியில் நடந்து கொள்ளும்படியும் பயிற்சி செய்விக்கப்படுவதே சாதாரண வழக்கமாதலால், அந்தத் தொகுதியினருடைய கூட்டுறவிலேயே இராஜ்ஜியாதிகாரம் இருக்கிறதெனக் கூறுவதும் அசம்பாவிதமென்பதும், அவர்கள் யாருக்குக் கீழ்ப்படிகிறார்களோ அந்த மேல்திகாரியிடமோ, அல்லது, மேலதிகாரிகளிடமோதான் இராஜ்ஜியாதிகாரத்தின் மூலஸ்தானம் இருக்க வேண்டிவருமென்பதும் தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறு இராஜ்ஜியாதிகாரத்தின் மூலஸ்தானத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சி மறுபடியும் முன் போலவே குழப்பமடைந்து விடுகிறது.

(6) **இரண்டுபட்ட இராஜ்ஜியாதிகாரம்:—** அமெரிக்க ஐக்கிய அரசானது பல சிறு சிறு அரசுகளைத் தன்னுள் கொண்ட அரசு என முன்பே கூறினோம். அதாவது, தனித்தனியான பல சிறு சிறு நாடுகள் தங்களுடைய தனித் தன்மையையும், உள் நாட்டு வியவகாரங்களின் அதிகாரத்தையும் சிறிதும் இழக்காமல், சில பொதுவான காரியங்களை நிறைவேற்றும் பொருட்டு மாத்திரம் ஓர் ஐக்கிய அரசாங்கத்தை ஸ்தாபித்து, அதன் ஆதிக்கத்-

திற் குட்பட்டு இருந்து வருகின்றன. இப்படி ஐக்கிய அரசு ஒன்றும், பல சிறு அரசுகளும் உள்ள அமெரிக்காவில் அடிப்படையானதும் வரம்பற்றதுமான இராஜ்ஜியாதிகாரத்தை யார் நிர்வகிப்பதென்ற சந்தேகம் உண்டாகிவிட்டது. இதுவரையில் ஒருதேசத்தில்இராஜ்ஜியாதிகாரத்தைப் பெற்றுள்ள தொகுதி ஒன்றேயாகும் எனக்கூறி வந்த கொள்கையை மாற்றித் திருத்தி யமைக்க முயற்சி செய்யப்பட்டது. அமெரிக்காவில் ஐக்கிய அரசோ அல்லது அதற்குள்பட்ட ஒரு தனியான நாட்டு அரசோ வரம்பற்ற இராஜ்ஜியாதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை; இவ்விரண்டு அரசுகளுடைய அரசியலதிகாரமும் எவ்வளவு என்பதைத் தெளிவாக நிர்ணயம் செய்வதைப்பற்றி வெகுகாலம் உக்கிரமான விவாதம் நடந்து வந்தது. அந்த விவாதத்திலிருந்து மேற் கூறிய இரண்டுபட்ட இராஜ்ஜியாதிகாரக் கொள்கை தோன்றி வளரலாயிற்று. அக்கொள்கையின்படி மொத்த இராஜ்ஜியாதிகாரமும், ஐக்கிய அரசுக்கு ஒரு பாகமும், மாகாண அரசுகளுக்கு ஒரு பாகமுமாகப் பிரிக்கப்பட்டு இரண்டுபட்டுப் போயிற்று. அதாவது, தம் தம் உள்விவகாரங்களைப் பொருத்த மட்டில், ஒவ்வொரு நாட்டின் அரசும் சர்வ வல்லமையும் வாய்ந்தது. ஆனால் தன்னுடைய தேசத்திற்கு வெளியிலுள்ளவைகளை பாதிக்கக் கூடிய விஷயங்களில் ஒவ்வோர் அரசும் மற்றோர் அரசினுடைய சுதந்திரத்தன்மையால் கட்டுப் படுத்தப்பட்டு ஐக்கிய அரசின் அதிகாரத்திற்கு சட்டப்படி உட்பட்டதாக இருக்கிறது. அரசினுடைய சர்வ வல்லமையைப் பற்றி மேலேகூறியுள்ள கொள்கைக்கும் அமெரிக்கதேசக் கொள்கைக்கும் ஒன்றுக்கொன்று சிறிதும் பொருத்தம் இல்லை. ஏனெனில் எவ்விதத்திலாவது பிறருடைய ஆதிக்கத்தால் கட்டுப் படுத்தப் பட்

டால், அது அரசின் நான்கு இலக்ஷணங்களையும் பெற்றதா காது என முன்பு கூறியுள்ளோம். ஐக்கிய அரசாங்கத்தின் அமைப்பைப் பற்றிப் பின்னோர் அதிகாரத்தில் விவரிக்கும் பொழுது, ஐக்கிய அரசுகளில் இராஜ்ஜியாதிகாரம் எவ்விதம் நடத்தப்படுகிற தென்பதை ஆராய்வோம்.

7. இராஜ்ஜியாதிகாரக் கோள்கையைப் பற்றிய சமீபகாலக் கண்டனம்:-சமீபகாலங்களில்இராஜ்ஜியாதிகாரக்கொள்கையை வேறொரு விதமாகச் சில நூலாசிரியர்கள் கண்டித்திருக்கின்றனர். ஒரு ஜன சமூகமானது ஒன்றாகப் பிணைக்கப்பட்டு நிலைத்திருப்பதற்குக் காரணமாயுள்ள பல சக்திகளுள் அரசு என்ற ஸ்தாபனம் ஒருச்க்தியேயாகும் என்று அவர்கள் கூறுகின்றனர். மேனாடுகளிலுள்ள மதஸ்தாபனங்களும் தொழிலாளர் சங்கங்களும் இவை போன்ற மனிதரை ஒன்று சேர்த்து வைக்கும் இன்னம் பல ஸ்தாபனங்களும், அரசைப் போலவே, தனிமனிதனுடைய வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் வெகுவாகத் திருத்தியமைக்கவும் பலவிதங்களில் இயக்கவும் தேவையான சக்தியை ஏராளமாய்ப் பெற்றிருப்பதால், அவைகளை அநாதரவு செய்து விடும் எந்த சமூக ஏற்பாட்டுக் கொள்கையும் அர்த்தமற்றதும் பயனற்றதும் ஆய்விடுகிறது. டாக்டர் ஜே. என் பி/2ம்மிஸ் என்பவர் ஆஸ்டினினுடைய கொள்கையைப் பற்றிப் பின் வருமாறு கூறுகிறார்:—"ஆஸ்டினினுடைய கொள்கையை ஆராயத் தொடங்கும் பொழுது, அது சுபாவத்திலேயே தெளிவாக இருக்குமென நாம் எண்ணுகிறோம்; பிறகு அக்கொள்கைக்குப் பல வரம்புகளையும் விசேஷணங்களையும் ஏற்படுத்துவது அவசியமெனத் தெரிந்து கொள்ளுகிறோம். கடைசியிலோ, அவருடைய கொள்கை முழுவதும் வெறும் மனோபாவனையேயென்றும் வியவகாரத்தில்காண முடியாத

விஷயமே எனவும் நாம் முடிவு செய்து கொள்ள வேண்டி வருகிறது" என்று அவர் எழுதியிருக்கிறார். இதன்படி பார்த்தால், அதிகார தோரணையும் அதற்குக் கீழ்ப்படிவதும் எவ்விதமேனும் சீர்கேடில்லாமல் இருந்து வருமானால் அங்கு பூர்த்தியான இலக்ஷணங்களைக் கொண்ட அரசு இருப்பதாகவே எண்ண வேண்டும் என்று கூறும் ஆஸ்டினினுடைய ஸாரமற்ற கொள்கையுடன் நின்று விடாமல், சமூகத்திற்கே ஜீவ ரஸத்தையும் உணர்ச்சியையும் அளிக்கும் மற்றும் பல மனித சங்கங்களையும் நாம் ஆராய்வது அவசியமாகிறது. ஜெர்மன் தேசத்துச் சட்ட நிபுணரான ஓட்டோகிர்க் என்பவரும் ஜெர்மனியில் நடந்த ஆராய்ச்சியை யநுசரித்து வந்த மெயிட்லண்ட் என்ற இங்கிலீஷ்காரரும் தம்முடைய நூல்களாலும் பிரசங்கங்களாலும் மேற் கூறிய உண்மையை வெகு பிரபலமாகச் செய்து விட்டனர். தற்காலத்திலும் கூட ஆஸ்டினினுடைய கொள்கையே எல்லா விஷயங்களையும் பூர்த்தியாக விளக்கி விடுகிறது என்பதைப் பொய்யாக்கப் பல இயக்கங்கள் இருந்து வருகின்றன. தொழிலாளர் சங்கங்கள் வரவர அதிகமான சக்தியைப் பெற்று தங்களுடைய வேலையை மிக விசாலமாக்கி வருவதும், அரசை அநுசரிக்காமல் அதற்கு நேர் விரோதமாகவே வேலை செய்யும் பல இயக்கங்களும் சக்திகளும் சமூக அமைப்பை அதிகமாய்ப் பாதித்து வருவதும் இதற்கு நிதரிசனங்களாகும். பொது வேலை நிறுத்தம், ஏராளமான தொழிலாளர் ஓட்டுகளின் மூலம் ஒரு விஷயத்தில் தமக்குள்ள அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது, தொழிலாளிகளும் முதலாளிகளும் அரசின் உதவியை நாடாமல் தாமே தம்முடைய சாமர்த்தியத்தினால் தமது சச்சரவுகளைத் தீர்த்து கொள்வது, கிரிஸ்துவமத குருவான

போப் என்பவர் சில சமூக இயக்கங்களைப்பற்றித் தாமே முடிவான அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கிரிஸ்துவர்களைக் கட்டுப்படுத்துவது— இவை போன்ற விஷயங்கள் விரிவான சமூக வாழ்க்கையில் அரசு ஒன்றே முக்கிய ஸ்தாபனம் என்பதைப் பொய்யாக்கி விடுகின்றன. ஆதலால், புராதன காலத்திலிருந்து தொடர்ச்சியாக வந்துள்ள ஸ்தாபனங்களும், நவீனகாலத்தில் ஏற்படும் சங்கங்களும் முக்கிய நிலைமையை அடைய அடைய, அரசும் சட்டமும் தமது கௌரவத்தையும் முக்கியத் தன்மையையும் சிறுகச் சிறுக இழந்து வருகின்றன. எர்னஸ்ட் பார்க்கர் என்பவர் இதே விஷயத்தைப் பின் வருமாறு விளக்குகிறார்: "மற்ற மனித சங்கங்களை முக்கியப்படுத்திக் கூறுவதொன்றே நம்முடைய அரசைப் பற்றிய சித்தாந்தத்தை பாதிக்கிற விஷயமாகும். இப்பொழுது அரசை ஒரு பொதுவான வாழ்க்கையின் பொருட்டு ஒன்று சேர்ந்த தனியான மனிதர்களின் கூட்டமாகக் கருதுவது அருமையாய் விட்டது; ஆனால், ஏற்கெனவே பல சங்கங்களாக ஒன்று சேர்ந்து, ஒவ்வொரு சங்கத்தின் மூலமும் பொதுவான வாழ்க்கை முறையைத் தழுவி வரும் ஜனங்கள் அதைக் காட்டிலும் உயர்ந்ததும், இன்னும் விசாலமுமான நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு அச்சிறு சங்கங்களைக் காட்டிலும் உயர்ந்த ஒரு சங்கமாக ஒன்று சேருவதே அரசென நாம் கருதுகிறோம்." என்று ஷெயார் கூறுகிறார். ஆனால் ஆஸ்டினினுடைய கொள்கை சமூக வாழ்க்கையின் ஒரேயொரு அம்சத்தையே முக்கியப்படுத்திக் கூறுகிறது, அது மற்ற முக்கியமான பல அம்சங்களை அநாதரவு செய்து விடுகிறது என்று நவீன ஆசிரியர்கள் செய்யும் கண்டனத்திற்கு ஆஸ்டினினுடைய கொள்கையை ஆதரிப்பவர்கள்

ஏற்ற விடையை யளிக்கலாம்; இந்த நவீன நூலாசிரியர்கள் ஆஸ்டினினுடைய கொள்கையின் உத்தேச மென்ன என்பதை கவனிக்காமல் அதை ஒரே குழப்பமாகக் குழப்பி விடுகிறார்கள். மனித சமூகத்தினுடைய எல்லா அம்சங்களையும் பற்றிக் கூறுவது ஆஸ்டினினுடைய நோக்கமல்ல; ஒரே அம்சத்தைப் பற்றியே அவர் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். ஒரு பெரிய நூல்கண்டிலிருந்து ஒரே யொரு நூலை அவர் பிரித்தெடுத்து அதைப் பூர்த்தியாக ஆராய்ந்தாரென்பதே அவருடைய கொள்கைக்கு கௌரவத்தை யளிப்பதாகும், அவருடைய கொள்கை வெறும் மனோ பாவனையாயிருப்பதே அதற்கு பலத்தை யளிக்கிறது, இப்பொழுது இருந்து வரும் சட்ட பூர்வமான உரிமைகளின் தன்மையை ஆஸ்டின் தெளிவாகக் கூற முற்பட்டாரேயன்றி, சரித்திர சம்பந்தமான வளர்ச்சியையோ, அல்லது, சட்ட பூர்வமான உரிமைகளுக்கும், பொது ஜன அபிப்பிராயத்திற்கும் அறநெறிக்கும் உள்ள சம்பந்தத்தையோ அவர் ஆராய உத்தேசிக்கவே இல்லை என்று ஆஸ்டினின் கொள்கையை ஆதரிப்பவர்கள் வாதம் செய்ய இடமிருக்கிறது. இந்தப் புதிய வாதத்தைப் பற்றி அரசியல் தத்துவப் பிரமுகர்கள் என்ன கூறுவார்களென்பது, தற்காலத்தில் உலகில் காணப்படும் பல இயக்கங்களின்பலனாக, நவீன அரசுகளுடைய இராஜ்ஜியாதிகாரம் இனி வருங் காலத்தில் மாறுவதை யொட்டியே இருக்கும்.

———

5-வது அதிகாரம்

பிரஜையின் சுதந்திரம்

(1) பிரஜையின் சுதந்திரம் என்பதன் தெளிவான விளக்கம்:—அரசின் பலவந்த அதிகாரத்தினாலேயே சுதந்தரம் நிலைக்கிறது, அரசு சர்வ வல்லமை பெற்றது, என்கிற கொள்கையை ஆராய்ந்து பார்த்தோம். இனி அரசுக்கும் தனிமனிதன் அல்லது ஒரு பிரஜைக்கும் உள்ள சம்பந்தத்தை நாம் தெளிவாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒரு கட்டுப்பாட்டிற்குட்பட்ட இராஜ்ஜியாதிகார நிர்வாகத்தில் ஒரு பிரஜையினுடைய நிலைமை என்ன வென்பதையும், அவனுடைய சுதந்தர மென்பதென்ன, அதன் வரம்பு எவ்வளவு என்பதையும் நாம்இவ்வதிகாரத்தில் விளக்கிக் காட்டுவோம். முதல் பார்வைக்கு, அரசினுடைய சர்வாதிகாரமும் பிரஜையினுடைய சுதந்திரமும் ஒன்றிற் கொன்று நேர் விரோதமானதாகவே தோன்றும். அரசே சட்டத்தின் படி சர்வவல்லமை படைத்தது, அதன் அதிகாரத்திற்கு எல்லையே கிடையாது, அதன் உரிமைக்கு விரோதமாக பிரஜைகள் எவ்வித உரிமையையும் சட்ட மூலமாகப் பெற முடியாது என்று நாம் கூறிய பொழுது, பிரஜைகளுக்கு சுதந்திர மென்பதே இல்லை யென்று நாம் கருதியதாகத் தோன்றலாம். ஆனால் சர்வ வல்லமை, சுதந்திரம் என்ற வார்த்தைகளுக்கு அளிக்கப் பட்டுள்ள அர்த்தத்தை நாம் சிறிது ஆழ்ந்து கவனித்துப் பார்த்தால் ஷை சந்தேகம் நிவர்த்தியாகிவிடும். மேலும் அரசின் சர்வாதிகாரத் தன்மையும் பிரஜைகளின் சுதந்திரமும் ஒன்றுக் கொன்று விரோதமான விஷயங்கள் அல்லவென்பது மட்டு மன்றி, அவை ஒன்றுக் கொன்று துணைபாகவும் சம்பந்தமாகவும்

இருப்பவை. பிரஜைகள் சட்ட சம்மதமான உரிமைகளைப் பெறுவதென்பது, சர்வாதிகாரம் பெற்ற ஓர் அரசு இல்லையானால் சாத்தியமே யாகாது.

உலகத்தில் சாதாரணமாக, 'சுதந்திரம்' 'சுயேச்சை' 'சுயாதீனம்' என்ற வார்த்தைகள் வெவ்வேறு அர்த்தங்களில் வழங்கப்படுகின்றன. 16, 17 வது நூற்றூண்டுகளில் இங்கிலந்திலும், ஐரோப்பாவிலும் இருந்த அரசர்களும் நூலாசிரியர்களும் 'சுதந்திரமான அரசன்' என்றால் யதேச்சாதிபதியான அரசன் என்றே கருதி வந்தார்கள்; ஆதலால் அவர்களுடைய அர்த்தப்படி சுதந்திர அரசு என்பதும் நமது தற்கால 'சுதந்திர கவர்ன்மென்ட்' என்பதும் ஒன்றிற் கொன்று விரோதமான விஷயங்களாகும்; ஏனெனில் சுதந்திர கவர்ன்மென்ட் என்றால் நாம் யதேச்சையாக நடக்கக் கூடியது என்று கொள்வதே இல்லை; மற்ற அரசுகளுக்கு உட்பட்டுப் பராதீனமாகாமல் தனியாக இருக்கும் கவர்ன்மென்டையே குறிக்கிறோம். மேலும் பல சங்கங்களுக்கும், வகுப்புகளுக்கும், சில பிரஜைகளுக்கும் அளிக்கப்படும் 'சுதந்திரங்கள்' என்றால் அவர்களுடைய விசேஷ பாத்தியதைகளாகும். அவைகள் மற்றவர்களுடைய சுதந்திரத்தை வெகுவாக பாதிக்கின்றன. சில சமயங்களில் இருகட்சியினர் 'சுதந்திரமாகச் செய்து கொள்ளக் கூடிய உடன்படிக்கை' யென்பதால், ஒருவர் மற்றவருக்கு அடிமை போலாகிவிடலாம்; அதாவது சுதந்திரமான உடன்படிக்கையின் மூலம் ஒருவருடைய சுதந்திரம் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு வந்துவிடலாம். அரசின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுள்ள 'சுதந்தரமான மதஸ்தாபனங்கள்' தமக்குக்கீழ் உள்ள ஜனங்களுக்கு அபிப்பிராய 'சுதந்திரம்' அதாவது அவரவருடைய புத்தி விசேஷப்படி மதவிஷயங்களில் அபிப்பிராயம்

கொள்ளும் உரிமை இல்லை யென்று செய்து விடலாம்; அரசினின்றும் விடுபட்டுச் சுதந்திரத்தை அடையாத சில மதஸ்தாபனங்கள் அத்தகைய அபிப்பிராய 'சுதந்திரத்தை' தம் சிஷ்யர்களுக்கு அளிக்கலாம். இவ்வாறு 'சுதந்திரம்' என்ற வார்த்தைக்கு வெவ்வேறு கருத்துகள் இருப்பதால் ஏற்படும் குழப்பம் ஒருபுறம் இருக்க, 'சுதந்திரம்' என்பது நமக்கு மிகவும் அவசியமாக இருக்க வேண்டியதும், இன்னதென்று தெளிவாக வரையறுத்துக் குறிக்க முடியாததுமானது. ஆனால் அது எல்லோருக்கும் அத்யாவசியமானது என்பது மாத்திரம் சர்வசாதாரணமாய்த் தெரிகிறது. ஒவ்வொருவருக்கும் சம்பூர்ணமான சுதந்திரம் இருக்கவேண்டும் என்றும், அதற்கு எவ்விதமாயாவது பங்கம் நேர்ந்தால், அது அநியாயமே என்றும் எல்லோரும் தாராளமாகக் கூறி வருகின்றனரேயன்றி 'சுதந்திரம்' என்ற வார்த்தையின் சரியான அர்த்தம் என்ன என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்பதை எவரும் அவசியமாக உணருவதில்லை. அதன் கருத்தை ஆராய்ந்து அதனுடைய சரியான அர்த்தத்தைத் தீர்மானமாக நாம் அறிந்து கொண்டால், பிரஜையின் சுதந்திரம் என்பது ஒவ்வொருவனும் தன் விருப்பப்படியெல்லாம் நடந்து கொள்ளும் உரிமையைப் பெற்றிருப்பதே யாதலால், அரசு சர்வவல்லமையைப் பெற்றிருப்பது அக்கிரமம் என்றும் கூறுகின்ற சாத்தியமற்ற கொள்கையிலுள்ள தவறைத் தெரிந்து கொண்டு அதை நிராகரித்து விடலாம். எந்த அரசினுடைய ஆதிக்கத்திற்கும் உட்படாமல், அதாவது, அரசு உண்டானதற்கு முன், வாழ்ந்திருந்த மனிதர்கள் இயற்கைச் சுதந்திரத்தை அநுபவித்து வந்தனரென்றும், அரசு தோன்றியதன்

காரணமாக அந்த சுதந்திரம் குறைக்கப்பட்டுப் போயிற்று என்றும் ஷ்டி கொள்கையை ஆதரிப்பவர்களே கூறுகின்றனர். சமூக ஒப்பந்தக் கொள்கையை ஆராய்ந்தபொழுது இந்தக் கொள்கையையும் விளக்கி யிருக்கிறோம். "சமூக ஒப்பந்தம் ஏற்படுவதன் காரணமாக, ஒவ்வொரு மனிதனும் தனது இயற்கைச் சுதந்திரத்தையும், தனக்குக் கிடைக்கக் கூடியவற்றைத் தான் தன் இச்சைப்படி அநுபவிப்பதான வரம்பில்லாத பாத்தியதையையும் இழந்து விடுகிறான்" என்று ரூஸோ கூறியிருக்கிறார். இன்னும் சில புரட்சிக்காரர்கள் அரசுக்குப் பிறரைக் கட்டுப்படுத்தும் உரிமையே கிடையாதென்று கூறி அராஜகவாதம் செய்து வருவதற்கும் அடிப்படையான காரணம், பிரஜா சுதந்திரம் என்பதை அவர்கள் இம்மாதிரியே தவறாக அர்த்தம் செய்துகொண்டு அதனுடைய கருத்தைக் குழப்பி விடுவதே என்று கூற வேண்டும்.

நாம் நன்றாக ஆராய்ந்து பார்த்தால், மேற் கூறிய வியாக்கியானத்தைக் கொண்ட சுதந்திரம் என்பது (அதாவது மனிதன் தான் நினைத்தபடி நடக்கும் உரிமை) எல்லோருக்கும் கிடைக்க முடியாத விஷயம் என்பதும், சர்வ வல்லமையைப் பெற்று அதிகாரம் வகிக்கும் ஒருவனுக்கே அது சாத்தியமாயிருக்கலாம் என்பதும் தெரியவரும். மனிதன் இயற்கையான சுதந்திரத்தை யநுபவித்து வந்த பண்டைக் காலத்தில், ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பிய எதையும் பெறுவதற்கு வரம்பில்லாத பாத்தியத்தைக் கொண்டிருந்தான் எனக் கூறுவதிலிருந்து, ஒரு மனிதன் இச்சிக்கிற ஒரே பொருளைப் பெறுவதற்கு இன்னம் பலரும் ஆசை கொள்ளலாம், அவர்களைக் கட்டுப்படுத்த எவருக்கும் உரிமையில்லை என்பதையும் நாம் எண்ணவேண்டும். உதாரணமாக,

பண்டைக்காலத்தில் ஒரு செழுமையான நிலத்தை உழுவதற்கு ஒரு மனிதன் இஷ்டப்பட்டால், அதைச் செய்ய அவனுக்குப் பூர்ண சுதந்திரம் உண்டு; ஆனால் இன்னம் நூறு பேர்கள் அதே நிலத்தை உழுவதற்கு எண்ணங் கொண்டால், அவர்களுக்கும் பூர்ண சுதந்திரம் உண்டென்பதை கவனிக்கவேண்டும். இவ்வாறு ரூஸோ முதலியோர்களது அபிப்பிராயப்படி, 'சுதந்திரம்' என்பதும் 'உரிமை' என்பதும் வாதத்திற்கு நிற்காமல் ஒன்றுக்கொன்று விரோதப் பட்டுப் போகின்றன. கீர்த்தி வாய்ந்த அமெரிக்க நூலாசிரியரான லீவர் என்பவர் பின்வருமாறு எழுதி யிருக்கிறார்: "சுதந்திரம் என்ற சொல்லின் அர்த்தத்தை மாத்திரம் நாம் எடுத்துக்கொண்டு பார்த்தால், ஒரு விஷயத்தைச் செய்ய விரும்புவது, அந்த விருப்பத்தை, மற்றவரது ஆதங்கமில்லாமல், நிறைவேற்றுவது என்ற கருத்துகளே அந்த வார்த்தையில் அடங்கி யிருக்கின்றன. இந்த அர்த்தப் படி பார்த்தால், பிறரால் பாதிக்கப்படாமல் தமது சுயேச்சையையும், அதை நிறை வேற்றும் வல்லமையையும் ஒரே ஒருவர்தான் பெற்றிருக்க முடியுமாதலால், அவரே சர்வாதிகாரமும் பெற்றவர்." என்கிறார் ஷை ஆசிரியர். எனவே, சிறிதும் பிறரால் கட்டுப்படுத்தப்படாத சுதந்திரத்தை ஒரே சமயத்தில் ஒவ்வொருவரும் பெற்றிருப்பது சாத்தியமான தல்லவென்பது தெளிவாகிறது. அரசின் மூலமாகக்கூட, அல்லது அரசு இல்லாத காலத்திலும் கூட இவ்வித அசாத்தியமான சுதந்தரத்தை ஏற்படுத்த முடியாது. ஒரே விஷயத்தில் ஒரே காலத்தில் ஒரு விதமான உரிமை பல பிரஜைகளுக்கிருப்பதாக வைத்துக் கொள்வோம். அதை ஒவ்வொருவரும் மற்றவரால் தடுக்கப்படாமல் சுயேச்சையாக அநுபவித்துக் கொள்ளலாம்.

ஆனால் அப்படி அநுபவிக்கும் ஒவ்வொருவரும், அவருக்கிருப்பதைப் போல மற்றவருக்கும் அந்த விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் உரிமைக்கு எவ்வித இடையூறும் விளைவிக்காதபடி, அதை ஒவ்வொருவரும் அநுபவிக்கலாம். உதாரணமாக, நாம் ஒரு ரஸ்தாவை எடுத்துக் கொள்ளலாம். அதில் மனிதரும் நடக்க உரிமையுண்டு. மோட்டார் வண்டிகளும் போக உரிமை உண்டு. அந்த உரிமையை ஒவ்வொருவரும் சுயேச்சையாக அநுபவிக்கலாம். ஆனால், பக்கத்தில் போகும் மனிதரைக் கொல்ல, மோட்டார் வண்டிக்கு உரிமை கிடையாது. அல்லது மோட்டார் போவதைத் தடுக்க மனிதனுக்கு உரிமை உண்டாகாது. இவ்வாறு சுதந்திரத்திற்கு வியாக்கியானம் செய்வதால், அதற்கு ஓர் எல்லையும் நிர்ணயமும் ஏற்பட்டாலும் கூட, அதுவே முற்றிலும் பொருத்தமானதாகும். ஒவ்வொருவனுக்கும் பூர்ணமான சுதந்திரம் உண்டு; ஆனால் அது மற்றவனுடைய சுதந்திரத்திற்கு எதிரிடையானதாகாது. பி/2ரான்ஸ் தேசத்தில் அரசருடைய ஆட்சியை ஜனங்கள் ஒழித்து தங்களுடைய சொந்த ஆட்சியை 1789 வது வருஷத்தில் ஸ்தாபித்தார்கள். அப்பொழுது அவர்கள் செய்து வெளியிட்ட பிரஜா உரிமைப் பத்திரத்தில் சுதந்திரம் என்ற பதத்திற்கு மேலே வரும் வியாக்கியானத்தையே செய்திருக்கிறார்கள். "மற்ற மனிதருக்குக் கெடுதல் செய்யாமல் எந்தக் காரியத்தையும் நடத்தும் அதிகாரமே சுதந்திரமென்பதன் உள் கருத்து" என்று ஷை பத்திரத்தில் எழுதி இருக்கிறார்கள். ஹேர்பர்ட் ஸ்பென்ஸர் என்பவரும் இதே கருத்தைப் பின்வருமாறு விளக்கியிருக்கிறார். "தான் இஷ்டப்படுவதைச் செய்ய ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்தரம் உண்டு; ஆனால் அப்படிச் செய்வதில், அவனுக்கிருப்பதற்கு சமமாக மற்றவருக்கும் ஏற்பட்டிருக்கும் சுதந்தி

ரத்தைப் பாதிக்காமல் அவன் நடந்துகொள்ள வேண்டும்" என்று மேற்படியார் கூறி, அதற்கு "நியாய சித்தாந்தம்" என்று பெயர் கொடுத்திருக்கிறார்.

இவ்வாறு நாம் அர்த்தம் செய்யும் பட்சத்தில், அரசின் பலவந்த அதிகாரமும் பிரஜையின் சுதந்திரமும் ஒன்றுக்கொன்று எதிரிடையானவையல்ல வென்பது விளங்கும். அதுவுமன்றி, ஒரு பிரஜையின் உரிமையை மற்றவர் அபகரிக்காமல் தடுப்பதற்கு அரசின் பலவந்த அதிகாரம் அத்தியாவசியமா யிருப்பதால், பிரஜையின் உரிமைக்கு அரசின் அதிகாரமே ஆதாரமானது. அரசே இவ்விதமான பாதுகாப்பைப் பிரஜைகளுக்குஉறுதிசெய்து கொடுக்கிறது. அவ்வாறு அரசு தனது அதிகார வல்லமையைக் கொண்டு ஷை பாதுகாப்பைப் பிரஜைகளுக்கு உறுதிப்படுத்திக் கொடுப்பதிலிருந்தே, பிரஜைகளின் உரிமைகளுக்கு சட்டபூர்வமான அந்தஸ்து ஏற்படுகிறது. அரசின் சர்வாதிகாரத் தன்மையும், பிரஜையின் உரிமையும் முதல் பார்வையில் ஒன்றுக்கொன்று விரோதமாகத் தோன்றினவானுலும், உண்மையில் அவ்விதமிருக்கவில்லை யென்பது மேலே கூறியவற்ருல் தெளிவுபட்டது. எதனுலும் கட்டுப்படாத சம்பூரணமான அதிகாரம் ஒரேயொருவரைத் தவிர மற்றவருக்கு அமைவது சாத்தியமல்ல. எல்லோரும் சமமான சுதந்திரத்தை அநுபவிக்க வேண்டுமானுல், ஒவ்வொருவரும் தாம் தாம் செய்யும் காரியங்களில் ஒருவித வரம்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு நடந்தாலன்றி, அது சாத்தியமாகாது. அந்த வரம்பை, அல்லது, கட்டுப்பாட்டை எவரும் மீருமல் பாதுகாத்து, அதனுல் ஜனங்களின் சுதந்திரம் நிலைக்குமாறு செய்வதே அரசின் வேலை. இவ்வாறு அரசின் பலவந்த அதிகாரத்தால் பாதுகாக்கப்

படும் குடிமக்களின் உரிமையே "சமூக சுதந்திரம்" அல்லது "இராஜீய சுதந்திரம்" எனப்படுவது.

இது சம்பந்தமாக, இன்னுமொரு முக்கியமான விஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். நாம் மேலே விவரித்ததான சுதந்திரத்தை அரசின் பாதுகாப்பினுலேயே ஒவ்வொரு பிரஜையும் அநுபவிப்பது சாத்தியமாகிறது என்பது உண்மையானாலும், அரசினுடைய கடமையெல்லாம் பிரஜைகளுடைய சுதந்திரத்தைப் பாதுகாப்பது மட்டுமே என்றும், அதாவது, ஒருவருடைய சுதந்திரத்தில் மற்றவர் தலையிடாமல் செய்வதோடு மட்டும் அது நிற்கவேண்டுமென்றும், அதற்குமேல் அதிகமாக எதையும் செய்யக்கூடாதென்றும் கூறுவது சரியாகாது. மேனுட்டு நூலாசிரியர் பலரும், முக்கியமாக, 19-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இருந்த பிரஜா உரிமைக் கக்ஷிக்காரர்களும், அரசின் கடமை, பிரஜைகள் ஒருவருடைய சுதந்திரத்தை மற்றவர் அபகரிக்காமல் பாதுகாப்பது மட்டுமே என்று கூறியிருக்கின்றனர். அரசானது அந்த வரம்பை மீறித் தனது அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கினுல், அது பிரஜைகளின் சுதந்திரத்திற்குப் பங்கம் விளைவிப்பதேயாகும் என்று அவர்கள் கருதினர்கள். இதிலிருந்து இன்னெரு சந்தேகம் உண்டாகிறது. ஒரு பிரஜையின் சுதந்திரத்தை மற்றவர் அபகரிக்காமல் தடுப்பது மாத்திரந்தான் அரசின் வேலையா? அந்தப் பிரஜையின் நன்மையையோ, பொதுஜனங்களின் நன்மையையோ கருதி அந்தப் பிரஜையின் உரிமையில் தலையிட அரசிற்கு அதிகாரமுண்டா இல்லையா என்ற சந்தேகம் தோன்றுகின்றது. இவ்விஷயத்தைப் பற்றிப் பின்னுல், அரசின் அதிகார வரம்பு எவ்வளவு என்பதை கவனிக்கும் பொழுது நாம்

விரிவாக ஆராய்வோம். இப்பொழுது கவனிக்க வேண்டிய விஷயம் அடியில் வருவது மட்டுமே. ஒரு பிரஜையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதே அரசின் வேலை யென்று வைத்துக் கொண்டாலும் சரியே, அல்லது, ஒரு பிரஜையின் சுதந்திரத்தில் அது தலையிட்டு நன்மை செய்வதும் உசிதமானதென்று எண்ணினாலும் சரியே, பிரஜைகளின் சுதந்திரம் நிலைத்திருப்பதற்கும், அரசிற்கு பலவந்த அதிகாரம் இருப்பதற்கும் முரண்பாடு ஒன்றுமே இல்லை. அரசின் அதிகாரம் இல்லையானால் பிரஜைக்கு சுதந்திரம் இருக்குமென்று நாம் மனதால் எண்ணவும் இடமில்லை.

(2) **சுதந்திரம் என்ற சொல்லுக்கு அளிக்கப்படும் சில விசேஷ அர்த்தங்கள்:—** முன் சென்ற பக்கங்களில், சுதந்திரம் என்ற சொல்லுக்கு நினைத்த விதமெல்லாம் நடந்து கொள்ளும் உரிமை என்ற பொதுவான அர்த்தத்தை ஒப்புக்கொள்ளாமல் நாம் கண்டித்து விலக்கிவிட்டு, நியாயசித்தாந்தம் எனப்படும் உண்மையான பிரஜா உரிமை எந்த வரம்பிற்குள் அடங்கியது என்பதையும் நாம் ஆராய்ந்து, பின்னதே சரியானதென்று ஒப்புக் கொண்டோம். ஆனால் இராஜீய நூல்களில் சுதந்திரம் என்ற வார்த்தை வேறு சில அர்த்தங்களிலும் உபயோகிக்கப் படுகிறது. பிறதேசத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட தேசங்களையும், அவ்வாறு பராதீனத்திலிருந்து விடுபட விருப்பங் கொண்டுள்ள தேசங்களையும் குறிக்கையில் 'தேசீய சுதந்திரம்' என்ற சொல் உபயோகப் படுத்தப்படுகிறது. சமீபகாலத்தில் நடந்த மகா யுத்தத்தின் பயனாக போலண்டு தேசத்தினர் சுதந்திரம் பெற்றனர் என்று சொல்லும் பொழுது, நாம் முன்பு விளக்கியுள்ள பிரஜா உரிமைகளைக் குறிக்காமல் பராதீனத்திலிருந்து அது விடுதலை பெற்றதையே குறிக்

கிறோம். இத்தகைய சுதந்திரத்தை நாம் குறித்துப் பேசும் பொழுது தேசிய சுதந்திரம் என்று கூறுவதே உசிதமானது. இன்னோர் அர்த்தத்திலும் அது உபயோகப்படுத்தப் படுகிறது. இங்கிலந்து, அமெரிக்கா, பி/2ரான்ஸ் முதலான நாடுகளில் சுதந்திரமான அரசாங்கம் இருந்து வருகிற தென்று நாம் கூறுகையில், பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொது ஜனங்களுக்கு உத்தரவாதியாக உள்ள துரைத்தனத்தையே அது குறிக்கிறது. இவ்விதமான சுதந்திரத்தை 'அரசியல் ஸ்தாபன சுதந்திரம்' என்று கூறலாம். அவ்வாறு குறிக்கப்படும் அரசு ஒழுங்கான முறையில் ஸ்தாபிக்கப்பட்ட ஜன நாயக அரசு என்ற அர்த்தத்தைத் தரும். ஆனால் தேசசரித்திரங்களில் விவரிக்கப்பட்டுள்ள வரலாறுகளை எடுத்து நாம் ஆராய்ந்து பார்த்தால், ஒரு தேசத்திலுள்ள எல்லா ஜனங்களும் ஒருவர்கூட பாக்கியில்லாமல் ஓட்டுக்கொடுத்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களால் அரசியலை நடத்தினதாகத் தெரியவில்லை. ஜனங்களில் சிறுபான்மையோரே ஓட்டுக்கொடுக்கும் உரிமை பெற்று அதன் மூலம் ஆட்சியை நடத்துகிறார்கள். இங்கிலந்தில் 1832-வது வருஷம் முதற்கொண்டே ஏராளமான ஜனங்களுக்கு ஓட்டுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன், தேசஜனங்களில் ஒரு சிறு தொகுதியாருக்கே ஓட்டுரிமை இருந்தது. அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலமாகவே துரைத்தனத்தின் அதிகாரம் நடந்து வந்தது. ஆனாலும் மற்ற பெரும்பாலோரும் அந்தச் சிறு தொகுதியினரையே பின்பற்றி நடந்து கொண்ட தன்றி, அரசரின் கொடுங்கோன்மையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள மேற்படி சிறு தொகுதியினருடைய தயவையே எதிர்பார்த்து நின்றனர்.

அவ்வாறு நடத்தப்பட்ட குறுகிய ஜனநாயக ஆட்சியும் அரசியல் ஸ்தாபன சுதந்தரம் பெற்றதென்றே குறிக்கப் பட்டது. ஆனால் கண்டிப்பாகப் பார்க்குமிடத்து, ஜனங்க ளெல்லோரும் சேர்ந்து துரைத்தனம் நடாத்தும் தேசங் களில் மட்டுமே இந்த அரசியல் சுதந்தரம் வழங்கிவருகிற தென்று கூறலாமேயன்றி மேலே குறித்த குறுகிய ஜன நாயக ஆட்சிக்கு அந்தச் சொல்லை உபயோகிப்பது பொருத் தமான தல்ல. சிறுபான்மையோரா யிருப்போரால் நட தப்படும் துரைத்தனத்தையே அவ்வாறு குறித்தால், மிகு தியுள்ள பெரும்பாலோரான ஜனங்களின் இராஜீய உரிமை களை அகாரணமாய்ப் புறக்கணித்து அவமதித்து விட் டதாகவே பொருள் படும்.

அமெரிக்கா தேசத்து நூலாசிரியர்களில் சிலர் பிரஜா சுதந்திரம் என்பதற்கு, நாம் மேலே செய்த அர்த்தத் திற்கு மாறான இன்னோர் அர்த்தத்தை உண்டாக்க முயற் சித்திருக்கிறார்கள். அவர்கள் ஷெ வார்த்தைகளை ஸிவில் லிபர்டி என்று குறித்திருக்கிறார்கள். ஐரோப்பா கண்டத்து நூலாசிரியர்கள் அரசு, துரைத்தனம் ஆகிய இரண்டிற்கும் உள்ளவித்தியாசத்தை நன்றாக எடுத்துக்காட்டாமல் குளறி இருப்பதாக ஷெ அமெரிக்க நூலாசிரியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். துரைத்தனத்தை உற்பத்திசெய்து, அதற்கு அதிகாரவரம்பை ஏற்படுத்தும் மூலாதாரமான அதிகாரஸ் தானமே அரசெனப்படுவது, அரசின் காரிய நிர்வாகங்களை நடத்தும் சாதாரணமான அங்கமே துரைத்தனம் எனப் படுவது, மேலே குறிக்கப் பட்டபடி ஏற்பட்டுள்ள அரசா னது, பிரஜைகளுக்கு சில உரிமைகளையும் பாதுகாப்புகளை யும்அளித்து, துரைத்தனம் நடத்துவோர் ஷெ உரிமைகளில் தலையிடக் கூடாதென்று அதன் அதிகாரத்திற்கு ஒரு

வரம்பை ஏற்படுத்துகிறது, அவ்வாறு பிரஜைகளுக்கு அரசினல் உண்டாக்கிக் கொடுக்கப்படும் உரிமைகளும் பாதுகாப்புகளுமே ஸிவில் லிபர்டி என்று ஷை அமெரிக்க நூலாசிரியர்கள் குறிக்கிறார்கள். அமெரிக்கா கண்டத்து ஐக்கிய நாடுகளில் அந்த தேசத்து அரசியலை ஆதியில் அவர்கள் எந்த உடன்படிக்கையின் மூலமாக உற்பத்தி செய்தார்களோ, அந்த உடன்படிக்கைப் பத்திரத்தை மாற்றவோ, திருத்தவோ எவர்களுக்கு அதிகாரம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதோ அவர்களே ஷை ஐக்கிய நாடுகளுக்கு அரசெனப்படுபவர்கள். அவர்களிடமே முடிவான அதிகாரம் இருந்து வருகிறது. அதுவன்றி, காங்கிரஸ் என்ற மகா சபையொன்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. அந்த ஸபையோர், பிரஸிடேன்ட் என்னும் ஐக்கிய நாட்டுத்தலைவர் முதலியோரே சாதாரணமாய் அரசியல் நிர்வாகத்தை நடத்துகிறவர்கள். அந்த தேசத்தில் பிரஜைகளுக்கு சில உரிமைகளும் பாதுகாப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. சாதாரணமாக அரசியல் நிர்வாகத்தை நடத்துவோர் ஷை உரிமைகளில் தலையிடக் கூடாதென்று, சர்வாதிகாரமும் படைத்த அரசு உத்தரவு செய்து தடுத்திருக்கிறது. உதாரணமாக, மேற்படி தேசத்துக் குடிமக்களுடைய மத சம்பந்தமான விஷயங்களிலோ, பொது விஷயங்களில் அவர்கள் தாராளமாகத் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிடுவதான வாக்குரிமையிலோ, அரைத்தனத்தார் தலையிடக்கூடாது; அந்த தேசத்திலிருந்து வியாபாரச் சரக்குகளை வெளியூருக்கு ஏற்றுமதி செய்வதற்கு அவர்கள் வரி விதித்தல் கூடாது; குடிமக்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதில் தலையிடுதல் கூடாது; இங்கிலந்து தேசத்தில் பிரபுக்கள்

என்ற ஒரு வகுப்பாரிருப்பது போல அமெரிக்கா தேசத்தில், பிரபுக்களை உற்பத்தி செய்தல் கூடாது. இவ்வாறு மூலாதாரமான அரசினல் பிரஜைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளையே மேற்படி அமெரிக்க நூலாசிரியர்கள் ஸிவில் லிபர்டி என்கிருர்கள். ஆனல், அந்த தேசத்தில், அரசு, துரைத்தனம் முதலியவை அமைந்திருப்பது போலவே, மற்ற எல்லா தேசங்களிலும் அமைந்திருந்தால், இந்த ஸிவில் லிபர்டி, அல்லது, பிரஜா உரிமை என்னும் சொற்கள் எல்லாவற்றிற்கும் பொருத்தமாக இருந்து உபயோகத்திற்கு வந்திருக்கும். இங்கிலந்து, பி/2ரான்ஸ், இற்ருலி முதலிய மற்ற தேசங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால், இந்தச் சொற்கள் அவைகளுக்குப் பொருந்துகிறதில்லை. இங்கிலந்து தேசத்தில் பிரபுக்களின் சபை, (ஹவுஸ் ஆப்/2லார்஡ஸ்) ஜனப்பிரதிநிதிகள் சபை (ஹவுஸ் ஆப்/2காமன்ஸ்) ஆகிய இரண்டு சபைகளும் அரசரும் சேர்ந்த மொத்தத் தொகுதியையே பார்லிமென்ட் என்று குறிக்கிருர்கள். மேற்படி பார்லிமென்டே சர்வாதிகாரமும் வாய்ந்த மூலாதாரமான அரசாயிருப்பதோடு, சாதாரண துரைத்தன நிர்வாகமும் அதனிடத்திலேயே இருந்து வருகிறது. சர்வாதிகாரம், நிர்வாகம் ஆகிய இரண்டும் வெவ்வேருய்ப் பிரிக்கப்படாமல் ஒன்ருகவே பார்லிமென்டினிடத்தில் இருக்கின்றன. ஆகவே, அமெரிக்க அரசு பிரஜைகளுக்கு உரிமைகளை உண்டாக்கி துரைத்தனத்தார் தலையிடுதல் கூடாதென்று உத்தரவிட்டிருப்பதைப் போல, இங்கிலந்தில் செய்வது சாத்தியமானதல்ல. இங்கிலந்தின் பார்லிமேண்ட் தன் உத்தரவினல் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வதும், தன்னல் தலையிட இயலாததான உரிமைகளை பிரஜைகளுக்கு உண்டாக்கிக் கொடுப்பதும்

சாத்தியமான விஷயங்களல்ல. இதிலிருந்து மேற்படி அமெரிக்க நூலாசிரியர்கள், இங்கிலந்து தேசத்துக் குடி மக்களுக்குப் பிரஜா உரிமையே இல்லையென்று கூறிவிட்டனர். அவர்கள் கூறியது தவறென்பதை நாம் விளக்க வேண்டிய அவசியமில்லை. பிரஜா உரிமை அமெரிக்காவில் இருப்பது போலவே இங்கிலந்திலும் இருக்கிறது. அந்த உரிமையை எடுத்துவிடுவதற்கோ, அதில் தலையிடுவதற்கோ இங்கிலந்தில் பார்லிமென்டுக்கு அதிகாரம் இருப்பது போல, அமெரிக்காவிலும், மூலதாரமான அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த தேசத்தில், துரைத்தன நிர்வாகத்தை நடத்துவோர் வேறொரு தொகுதியினராதலால், அவர்கள் பிரஜைகளின் உரிமையில் தலையிடுதல் கூடாதென்ற கட்டளையை மூலஸ்தான அரசு செய்திருக்கிறது. இங்கிலந்தில், மூலஸ்தான அரசும், நிர்வாகம் நடத்தும் துரைத்தனமும் ஒன்றாயிருப்பதனால், அவ்வாறு உத்தரவு பிறப்பிக்க அவசியம் ஏற்படவில்லை. அவ்வளவே வித்தியாசம். இரண்டு தேசங்களிலும் பிரஜா உரிமையென்பது இருந்தே வருகிறது.

3. **அரசு ஒரு தேகம்போல பல உறுப்புகளாலானது என்னும் கொள்கை**:-இவ்வாறு ஒரு கொள்கை இருப்பதாக நாம் முன்னேரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இந்தக்கொள்கை ஆதிகாலத்தில் கிரீஸ் தேசத்தில் ஆரம்பமாயிற்றென்றே கூறலாம். அந்த தேசத்து நூலாசிரியரான அரிஸ்டாடில் என்பவர் "மனிதன் இராஜீய உணர்ச்சியுள்ள பிராணி" என்று எழுதி இருக்கிறார். அரசே முதன்மையானதென்பதும், அதன் சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற உணர்ச்சி மனிதனுக்கு இயற்கையிலேயே உண்டாகிறதென்பதும், மனிதனது நன்மை இரண்டாம் பக்ஷமானதென்ப-

தும், அரசின் நன்மையே பிரதானமானதென்பதும் அந்த தேசத்தாருடைய அபிப்பிராயம். அந்த தேசத்து மனித சமூகத்தார் எல்லோரும் ஒரு தேகத்திற்கு சமமாகவும், ஒவ்வொரு மனிதனும், அதன் ஒவ்வோர் உறுப்பாகவும் கருதப்பட்டனர். உதாரணமாக, ஒரு கூலியாளை எடுத்துக் கொள்வோம். அவன் இரவு பகல் தனது கைகளையே வதைத்து உழைத்துப் பாடுபட்டு, மொத்த தேகத்தையும் காப்பாற்றுகிறான். அவனுடைய தேகத்தில் எத்தனையோ உறுப்புகள் இருக்கின்றனவானாலும், எல்லாம் சமமாக உழைக்கிறதில்லை. எந்த உறுப்பு உழைத்தாலும், எந்த உறுப்பு உழைப்பின்றி இருந்தாலும், மொத்தமான தேகத்தின் போஷணையே பிரதானமான விஷயம். அதுபோல, கிரீஸ் தேசத்தார் அரசையே முதன்மையாகவும், பிரஜையை இரண்டாம் பக்ஷமாகவும் மதித்து வந்தனர். இதுதான் உறுப்புக் கொள்கை எனப்படுவது. பத்தொன்பதாவது நூற்றாண்டில் இருந்த பல ஜெர்மன் நூலாசிரியர்கள் இந்தக் கொள்கையைப் பலப் படுத்தி எழுதி இருக்கிறார்கள். அதே தேசத்திலிருந்த வேறு சிலர், ஏழைத் தொழிலாளரின் உழைப்பையும், அதனால் ஏற்படும் பலன்களையும் கொள்ளை கொள்ளும் பொருட்டு, பேராசை கொண்ட தனவந்தர்கள் அரசென்பதை ஏற்படுத்தி இருக்கிறார்களென்று வெளியிட்டு வந்த கொள்கையைக் கண்டிக்கும் பொருட்டு, மேலே குறிக்கப்பட்ட உறுப்புக் கொள்கையைப் பலர் பிரசித்தமாக்கினர். ஓர் அரசின் கீழுள்ள ஒவ்வொரு பிரஜையின் நன்மையையும் கோரியே அரசு ஸ்தாபிக்கப் பட்டிருப்பதனால், அரசின் நன்மை வேறானது, பிரஜையின் நன்மை வேறானது என்பது சரியல்லவென்பதும், இரண்டும் ஒன்றே என்பதும்

இந்த உறுப்புக் கொள்கையின் முக்கியமான சாராம்சம். ஒருவருக் கொருவர் ஒப்பந்தம் செய்து கொண்டார்களென்பது, ஒருவருக்கொருவர் கடமைகளைச் செய்வது, தலையிட முடியாத பாதுகாப்புகள் என்பன வெல்லாம் வீண் விவாதங்களென்று உறுப்புக் கொள்கைக்காரர்கள் அவற்றை முற்றிலும் அசட்டை செய்து விலக்குகின்றனர். அரசு, பிரஜை என்பவை ஜனசமூக மென்னும் ஒரு பெரிய தேகத்தில் அடங்கிய பாகங்கள், ஒரு மரத்திற்கும் அதன் இலைக்கும் என்ன சம்பந்தமோ, ஒரு தேகத்திற்கும் அதிலுள்ள ஒரு கைக்கும் என்ன சம்பந்தமோ, அதே சம்பந்தம்தான் மனிதனுக்கும் ஜன சமூகத்திற்கும் இருந்து வருகிறது, மனிதன் ஜனசமூகத்திற்குள் அடங்கினவன், ஜன சமூகம் மனிதர்களின் கூட்டத்தினுல் உண்டானது, அவன் அதில் இருக்கிறுன், அது அவனிடம் இருக்கிறது என்று அந்தக் கொள்கையினர் வியாக்கியானம் செய்கின்றனர். உடம்பின் சம்பந்த மில்லாமல் கை தனிப்பட்டிருப்பது எப்படி சாத்தியமற்றதோ, அதுபோல, மனிதனும் ஜன சமூகத்திற்கு வேருனவனல்லன் என்பது அதன் கருத்து.

4. **இந்தக் கொள்கையின் கண்டனம்:**—இந்த உறுப்புக் கொள்கை ஜனசமூகத்திற்கும், அதற்குள்ளடங்கிய ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை நன்ருய்த் தெளிவுபடுத்துவதற்கான ஓர் உவமானமாக நாம் வைத்துக் கொண்டால், அது பொருத்தமாக இருக்குமன்றி, அதை ஆழ்ந்து அலசிப் பார்க்க முயன்ருல், அந்தப் பொருத்தம் வெறும் பொய்த் தோற்றமாகவே முடியும். மனித சரீரத்தில் உறுப்புகள் ஒன்ருகப் பிணைபட்டு ஒரே வடிவமாயிருக்கின்றன. சமூகத்தில் அடங்கிய மனிதர் ஒவ்வொருவரும் தனித் தனியாக இருக்கிறுர்கள். மனித சரீரத்தின் மொத்

தத்திற்கும் ஒரே ஒரு மனதுதான் இருக்கிறது. ஜனசமூகத்திலோ, ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு மனது இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய ஆசாபாசங்களும், திறமையும், சாமர்த்தியமும், உரிமைகளும், சொத்துக்களும், உறவு முறைகளும் வெவ்வேறானவை. ஒரு மனிதனுக்கும் மற்றொருவனுக்கும் ஒரே சொத்தைப்பற்றி சச்சரவு ஏற்படலாம். அதுபோலவே, ஒரு மனிதன் ஒரு குறித்த நிலம் தன்னுடையதென்று உரிமை கொண்டாடலாம். அது அவனுடைய அநுபவத்திலிருந்தால் அவன் அதில் நெல் சாகுபடி செய்து தன் குடும்பத்தை சவரக்ஷிப்பான். அதே நிலத்தை துரைத்தனத்தார் தங்களுக்குச் சொந்தமென்று உரிமைகொண்டாடுவதாக வைத்துக்கொள்வோம். அது அவர்களிடம் போய் விட்டால், அவர்கள் அதை பகிரங்க ஏலத்தில் விற்று, அதனால் கிடைக்கும் விக்கிரயத் தொகையை சர்க்கார் கஜானாவில் சேர்த்துவிடுகிறார்கள்; அல்லது, வேறே ஏதோ ஒரு ஜில்லாவில் ஒரு புதிய அதிகாரியை நியமித்து அவனுடைய சம்பளத்திற்காக அந்தப் பணத்தைச் செலவிடுகிறார்கள். அப்பொழுது அந்த நிலமோ, அதன் விக்கிரயப்பணமோ அந்த மனிதனுக்கு சிறிதும் பயன்படாமல் போகிறது. இதுபோலவே அரசுக்கும், பிரஜைக்குமோ, அல்லது ஒரு பிரஜைக்கும் இன்னொரு பிரஜைக்குமோ வெவ்வேறான சொந்த உரிமைகளும் உடமைகளும் எவ்வளவோ இருக்கின்றன. மனித தேகத்திலுள்ள உறுப்புகளை எடுத்துக் கொண்டு பார்த்தால், ஒன்றுக்கொன்று உதவியாக இருக்கும் தன்மையே அமைந்திருக்கிறதன்றி ஒன்றுக்கொன்று விரோதமான ஆசாபாசங்களும், சொந்தமான உரிமைகளும் சொந்தமான உடமைகளும், சொந்தமான உறவுமுறைகளும், மற்றவருக்கில்லாமல் தானே உபயோகிப்பதென்

னும் சுயநன்மையும் இல்லை. ஆகவே, நாம் ஆழ்ந்து பார்க்கப் புகுந்தால் ஜன சமூகத்திற்கும், மனித தேகத்திற்கும் காட்டப்பட்ட உவமானம் கவிதாலக்ஷணமாய் வர்ணிப்பதற்கு அழகாய்த் தோன்றுகிறதே யன்றி உண்மையான மனித வாழ்க்கையில் வியவகாரங்களை நடத்தும்பொழுது, அது சிறிதும் சாத்தியமாயிராதென்பது நாம் கூறுமலே விளங்கும். ஆகையால், அரசின் சர்வாதிகாரத்திற்கும் பிரஜையின் உரிமைக்கும் இருக்கவேண்டிய சம்பந்தம், இம்மாதிரியான உறுப்பு சம்பந்தமே என்னும் கொள்கை சரியானதல்ல வென்றே கொள்ளவேண்டும்.

5. ஸ்பென்ஸர் முதலான ஆசிரியர்களால் காட்டப்படும் விரிவான ஒற்றுமைகள் ; அரசின் ஸ்வரூபம்:—சில நூலாசிரியர்கள் மேற்படி உறுப்புக் கொள்கையை ஓரளவு நன்மை பயக்கும் வெறும் உவமையாக மட்டும் கருதாமல், உண்மை போலவே மதித்து எழுதி இருக்கிருர்கள். தங்களுடைய அபிப்பிராயத்தை ஸ்திரப்படுத்தும் பொருட்டு, அவர்கள் மனித சமூகத்தின் இராஜீய ஏற்பாட்டையும், கைத்தொழிலமைப்பையும் விஸ்தாரமாக ஆராய்ந்து, அது சாதாரணமாக ஒரு பிராணியினுடைய அமைப்பையே ஒத்திருப்பதாகக் காட்டுகின்றனர் ; ஆதலால் மனித சமூகம் உண்மையில் ஒரு ஜீவப்பிராணியின் அமைப்பேயாகும் என்று அவர்கள் உறுதியாகக் கூறுகின்றனர். இவ்வாறு சொல்லும் ஆசிரியர்களுள் ஹெர்வேர்ட் ஸ்பென்ஸர் என்பவருடைய வாதமே நிரம்பவும் முக்கியமானது. ஆனல் ஸ்பென்ஸர் கூட சமூக அமைப்பையும் ஜீவப்பிராணியின் தேக அமைப்பையும் முற்றிலும் ஒன்ருக்கி ஐக்கியப்படுத்திவிடவில்லை. சமூகம் என்பது ஜீவவர்க்கத்தை அநுசரிக்கும் வஸ்துவேயானுலும், அதை ஸ்தாவர வர்க்கத்திலோ

ஜங்கம வர்க்கத்திலோ உள்ள எந்தக் குறித்த ஜீவனுடனும் ஒப்பிட்டுக் கூறமுடியாது என்று ஸ்பேன்ஸர் கூறியிருக்கிறார். ஆனாலும் அவர் சமூக அமைப்பை விஸ்தரித்துக் கூறுவதைப் பார்த்தால், அதற்கும் ஜீவ ஜெந்துவிற்கும் எவ்வித வித்தியாசமும் இருப்பதாகத் தோன்றாது. அவருடைய உவமை அவ்வளவு நெருங்கிய உவமையாக இருக்கிறது. முதன் முதலில் ஜீவன்கள் எப்படி மிகச் சிறு வித்தாகவே தமது வாழ்க்கையைத் தொடங்குகின்றனவோ, அவ்விதமே ஆதியில் ஊரூராய்த் திரிந்த சிறு சிறு ஜனக் கூட்டத்தினரென்ற வித்திலிருந்தே சமூகங்களும் தோன்றி, வரவரப் பரிமாணத்திலும் அமைப்பு முறையிலும் வளர்ச்சி யடைந்து வந்திருக்கின்றன, ஜீவ வர்க்கத்தில் ஒரு ஜெந்துவானது மாறுபட்டு விருத்தி யடைவது இரண்டு வழியில் நேரலாம், பல அணுக்கள் வர வரப் பெருகுவதனால் அது வேறுபட்டுப் பெருகலாம், அல்லது, அணுக்களின் கூட்டங்கள் பல ஒன்று சேருவதாலும் அது விருத்தியடையலாம், அவ்வாறேதான் மனித சமூகமும் இரண்டுவிதமாய்ப் பெருகியிருக்கிறது. ஜீவவர்க்கத்தில் மிகத் தாழ்ந்த நிலைமையில் உள்ள சில செடி வகைகள் சிறிது காலம் ஒன்றாகச் சேர்ந்து இருப்பதால் நாளடைவில் ஒரே அமைப்பைப் பெற்ற செடியாக வளர்ந்து உருவத்திலும் பருமனிலும் விருத்தியாவதைப் போலவே, நாகரிக மற்று வாழ்ந்து வந்த ஆதிக்குடிகளும் ஒன்று சேர்ந்து ஒரே சமூகமாக மாறியிருக்கின்றனர், ஆதியில் தனியாக இருந்த சமூகங்கள் ஒன்றுடனொன்று சேர்ந்து வந்த சமயத்திலேயே, ஒவ்வொரு சமூகமும் வேகமாய்ப் பெருகிக் கொண்டும் வந்திருக்கலாம், செடிகளும் பிராணிகளும் வளரவளர அவைகளுக்குப் பல உறுப்புகளும் அவயவங்களும்

தோன்றி, ஒவ்வோர் அவயவமும் ஒரு தனியான வேலையைச் செய்யத் தொடங்குவதைப் போலவே, சமூக அமைப்பு பூர்த்தியாக வளர வளர, அதுவும் தனித்தனியான வேலையைச் செய்ய வெவ்வேறு உறுப்புகளைப் பெறுகிறது. ஒரு பிராணியினுடைய சரீரம் நன்றாக வளர்ந்து முதிர்ச்சியடைவதற்கு முன், அது ஒரே பிண்டமாக இருப்பதனால், எல்லா வேலைகளையும் அந்த அவயவமே செய்து வருவதைப் போலத் தோன்றுகிறது. பிறகு படிப்படியாக வெவ்வேறு அவயவங்கள் தோன்றி, ஒவ்வொன்றும் ஒரு குறித்த வேலையாகப் பிரித்துக் கொண்டு செய்யத் தொடங்குகின்றன. முதலில் வெறும் பிண்டமாக இருந்தது சிறுகச் சிறுகப் பிரிவுபட்டுக் கடைசியில் தலை வேறாகவும் முதுகெலும்பு வேறாகவும், மூளை வேறாகவும், மண்டையோடு வேறாகவும் பிரிவதால் மாறுபட்டுப் போகிறது. அதைப் போலவே, ஆதியில் ஒரே பிண்டம் போல் இருந்த ஜன சமூகத்திலும் அரசர்கள், மதகுருமார்கள், வைத்தியர்கள் என்ற பல பிரிவுகள் தோன்றி, ஒவ்வொரு வகுப்பினரும் தமக்கென ஒரு தனித்தொழிலை ஏற்றுக் கொள்கின்றனர். ஒரு பிராணியினுடைய விஷயத்தில், பல அவயவங்களும் தம்தம் வேலையைச் சரிவரச் செய்வதாலேயே, அது ஜீவித்திருப்பதையொத்து, சமூகத்திலும் இவ்விதமான தொழிற் பிரிவினை ஏற்படுவதாலேயே அது பரிபூர்ணமான ஆரோக்கியத்தைப் பெற்ற வஸ்துவாகிறது. கைக்கோளர்களும், கம்மாளர்களும், உழவர்களும் சமூகத்தினுடைய வேலையைத் தமக்குள் பிரித்துக் கொண்டு செய்வதானது பிராணிகளுடைய சரீரத்தில் வயிறு, ஹிருதயம், சுவாஸப்பைகள் முதலிய உறுப்புகள் தம்தம் சொந்த வேலையைச் செய்வது போலாகும். சமூகத்தினுடைய அமைப்புகளை இன்னும்

நன்றாக ஆராய்ந்து பார்த்தால், அவைகள் பிராணியினுடைய சரீர அமைப்பையே வெகுவாக ஒத்திருப்பது தெரியவரும், பிராணியினுடைய சரீரத்திற்குள் போகும் உணவுப் பொருளிலிருந்து இரத்தம் முதலியவை பிரித்து பரவுவது போல, ஒரு தேசத்தில் உள்ள பண்டங்களைக் கைத்தொழிற்சாலைகள் பிரித்தெடுத்து உபயோகமாகும் வஸ்துக்களாகச் செய்கின்றன, சரீரத்தின் தோலிலுள்ள துவாரங்கள் அவசியமான பொருளை உள்ளுக்கிழுத்து அநாவசியமான வஸ்துக்களை வெளியில் தள்ளிவிடுவது போலவே, தேசத்திலுள்ள துறைமுகங்கள் தேவையான பண்டங்களை இறக்குமதி செய்வதும் தேவையற்றவைகளை வெளியிலனுப்பி விடுவதுமாக இருக்கின்றன, தேகத்தில் உணவைப் பெற்று அதை ஜீரணிக்கும் கருவிகள் இருப்பதைப் போலவே சமூகத்திற்கும் ஜீவரஸத்தை யளிக்கின்ற உறுப்புகள் இருக்கின்றன, வியவசாய நிலங்களும், இரும்புச் சுரங்கங்களும், இரும்புத் தொழிற்சாலைகளும், இன்னம் இவை போன்ற உற்பத்திஸ்தலங்களுமே சமூகத்திற்கு ஜீவரஸத்தை யளித்து வருகின்றன. சரீரத்திலுள்ள பல இரத்தக் குழாய்களும் ஹிருதயத்திலிருந்து இரத்தத்தை எல்லா அவயவங்களுக்கும் எடுத்துச் சென்று பரப்புவதைப் போலவே, ஒவ்வொரு சமூகத்திலும் இரஸ்தாக்களும், இரயில் மார்க்கங்களும், ஆறுகளும் பல ஜீவாதாரமான சாமான்களை எல்லாப் பக்கங்களிலும் பரப்புவதற்கநுகூலமாக இருக்கின்றன, மூளையினுடைய ஆக்ஞைகளை நரம்பு ஸ்தானங்களுக்கு எடுத்துச்சென்று அவைகளை வேலை செய்யுமாறு ஏவுவதற்கு வசதிகள் இருப்பதைப் போலவே சமூகத்திலும், தினசரிப் பத்திரிகை, தந்தி, டெலிபோன் முத

லான வசதிகள் இருக்கின்றன, கடைசியாக, பிராணியினுடைய சரீரத்தில் உள்ள பல உறுப்புகளையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கும், அவற்றின் வேலை ஒழுங்காக நடைபெறுவதற்கும் இயற்கையான ஏற்பாடு இருப்பதைப் போலவே சமூகத்தின் விஷயத்திலும் இவ்வித ஒழுக்க முறை யிருக்கிறது, சரீரத்தில், அது சுறு சுறுப்பான நரம்புகளாலும், சமூகத்தில் துரைத்தனத்தாருடைய வசத்தில் உள்ள சேனையாலும் நடைபெற்று வருகிறது, அன்னியருடைய பேராசைக்கும் பலவந்தத்திற்கும் உட்படாமல் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் உத்தேசத்துடனேயே சமூகத்தில் சேனை யொன்றை வைத்துக் கொண்டிருக்கின்றனர், ஆதிகாலத்தில் சமூகங்கள் ஒன்றுடனென்று சச்சரவிட்டுக் கொண்டதாலேயே துரைத்தனங்கள் ஏற்பட்டன, அக்காரணத்தைக் கொண்டே, அண்டையிலுள்ள விரோதமான சமூகங்கள் தம்மை ஆக்கிரமித்ததனுல்அவைகளை எதிர்க்கும் சக்தியையும்துரைத்தனத்தார் வரவர அதிகப்படுத்திக் கொண்டு,அதற்கவசியமான வசதிகளை யெல்லாம் செய்து கொள்ளுகின்றனர், இவ்வாறு அன்னிய சமூகங்களை எதிர்த்துத் தமக்குக் கீழ் உள்ள பிரஜைகளை இரக்ஷித்து வருவதொன்றே துரைத்தனத்தாருடைய நியாயமான காரியமென்றும், அந்த வரம்பை மீறி ஜனங்களுடைய வியவகாரங்களில் துரைத்தனத்தார் பிரவேசிப்பது அக்கிரமமென்றும் ஸ்பென்ஸர் அபிப்பிராயப் படுகிறார்; தமது அபிப்பிராயத்தை ஸ்திரப்படுத்தும் பொருட்டே அவர் மேலே கடைசியாகக் கூறிய உவமைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஆனல் நாம் முன்பே குறித்தபடி,ஸ்பென்ஸர் ஜீவவர்க்கத்தைச் சேர்ந்த செடியுடனே பிராணியுடனேசமூகம் முழு

தையும் ஐக்கியப்படுத்தி விடவில்லை. இவை இரண்டிற்கும் ஒரு முக்கிய வித்தியாசமும் உண்டு; ஒரு பிராணியினுடைய பல உறுப்புகளும் ஒன்று சேர்ந்து ஒரே ஸ்தூல சரீர மாகியிருக்கின்றன. ஆனல், சமூகத்தினுடைய பற்பல உறுப்புகள் ஒன்ருகப் பிணைக்கப்படாமல் தனித்தனியாக இருப்பதுடன் விசாலமாகப் பரவிக் கிடக்கின்றன. ஆதலால், ஒரு பிராணியினுடைய தகத்தில் ஒரே இடத்தில் உணர்ச்சி நிலை இருப்பதற்கு மாருக, சமூகமானது தன்னுடைய தனித் தனி உறுப்புகளின் மூலமே உணர்ச்சியைப் பெற்றிருக்கிறது. ஆனல் பிராணியினுடைய தேக அமைப்பிற்கும், சமூக அமைப்பிற்கும் இந்த ஒரு வேற்றுமை இருப்பதைக்கூட ஸ்பென்ஸர் அதிகமாக வற்புறுத்திக் கூறவில்லை. சமூகத்தின் பல உறுப்புகளும் ஸ்தூலமான ஒற்றுமையைப் பெருமல் போனுலும், பேசுவதாலோ அல்லது எழுத்து மூலமாகவோ மனிதர்கள் ஒருவரையொருவர் இயக்கி வருகின்றனர்; இவ்வாறு ஸ்தூலரூபமான ஐக்கியபாவம் இல்லாதவிடத்து சூட்சுமமான, அல்லது, மானஸீகமான ஒற்றுமை ஊடுருவி இருக்கிறது என்று ஸ்பென்ஸர் கூறுகிருர்.

ஆஸ்திரியா தேச இராஜ தந்திரியும் பொருளாதார சாஸ்திர விற்பன்னருமான ஆல்பர்ட் ஷாபி/$_2$ள் என்பவர் சமூகத்தை ஒரு பிராணியின் சரீர அமைப்பிற்கு ஒப்பிட்டுக் கூறும் கொள்கையை இன்னம் பூர்த்தியாகத் தமது நூலில் விளக்கிக் காட்டியிருக்கிருர். அவர் பிராணியினுடைய சரீரத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள ஒற்றுமையை வெகு தூரம் வரையில் விவரித்துக் கூறியிருக்கிருர்; அவைகளுக்கிடையே உள்ள வேற்றுமையைத் தாம் அநாதரவு செய்யவில்லையென்று அவர் உறுதி கூறுகிருராயினும் அவரு

டைய வியாக்கியானத்தைப் பார்த்தால், அவ்விரண்டையும் ஒன்ருகவே செய்து விடுவதாகத் தோன்றுகிறது. 'சமூகத்தின் தேகதத்துவம்' என்ற சொல்லேக்கூட அவர் ஓரிடத்தில் உபயோகிக்கிருர். ஆனல் ஷாபி/2ள் ஒப்புக்கொள்வதைப் போலவே, அவருடைய விஸ்தாரமான நூல் முழுதும் ஓர் உவமானத்தையே விரித்துரைப்பதாகக் கொண்டாலும், அவ்வளவு விரிவான உவமானம் சற்றும் பயனற்றதும் சுவையற்றதும் ஆய்விடுகிறது. ஐரோப்பாக் கண்டத்தின் நவீனகாலநூலாசிரியர்களிற் சிலர் (போலண்ட் தேசத்தைச் சேர்ந்த மம்ப்ளோவிட்ஸ் என்பவரைப் போன்றவர்கள்) சமூகத்தை ஒரு ஜீவனுக்கு ஒப்பிட்டுக் கூறுவது வெறும் உவமையாக மட்டுமல்ல. சமூகத்தையும் ஒரு பிராணியாகவே கருதி அவர்கள் எழுதி இருக்கிருர்கள். இன்னும் ஜெர்மனி தேச ஆசிரியர்கள் சிலர் இத்துடன் நின்றுவிடாமல் அரசும் ஒரு மனிதனே என்று கூறுகின்றனர். சட்டபூர்வமாகப் பார்க்கும் பட்சத்தில் அரசு அல்லது துரைத்தனம் என்பது ஒரு மனிதனைப் போன்றதே என்பதை எவரும் மறுத்துரைக்க மாட்டார்கள். ஏனெனில் துரைத்தனத்தாருக்குச் சொத்துக்களும் உடமைகளும் இருக்கின்றன, அது வரி வசூலிக்கிறது, கடன் வாங்குகிறது, இன்னம் எத்தனேயோ விஷயங்களேச் செய்கிறது, ஆதலால் அரசுக்கும், ஒரு தனிரூபம் உண்டு என்று அவர்கள் கூறுகிருர்கள். ப்ளண்ட்ஷ்லி என்பவர் இவ்வாறுதோன்றிய அரசாகிய ஜெந்து ஆணு, பெண்ணு என்பதைக் கூடத் தீர்மானித்து, அரசு ஆண் என்றும், மதஸ்தாபனம் பெண் என்றும் கூறுகிருர்.

6. **ஷெ கோள்கையின் கண்டனம்**:—மேலே விவரித்த கொள்கை அசம்பாவிதமானதென்பது கூருமலே விளங்கு.

மாதலால், அதைக் கண்டிக்க வேண்டிய அவசியமே இல்லை. கற்பனுசக்தியால் அது நிரம்பவும் அழகாய் விளக்கப் டிருப்பதென்பது உண்மையே. அதை ஆதியில் உற்பத்தி செய்த தேசத்தினருக்கு அது மிக முக்கியமான கருத்து களைக் கொண்டிருந்திருக்கலாம்; ஆனுல் பிற்காலத்திய ஆசிரியர்கள் அதை ஆராய்ந்து சோதனை செய்யும்பொழுது அது மாயையாக மறைந்து விடுகிறது. இருந்தாலும் மேலே கூறிய உறுப்புக் கொள்கையை நாம் சற்று நன்ருக ஆராய்ந்து பார்ப்பது நலம். மனித சமூகத்தினுடைய தன்மைக்கும் ஒரு ஜீவனுடைய வாழ்க்கைக்கும் உள்ள ஒற்றுமையை விரித்துக் கூறுவது மிக அழகாக இருந்தாலும், நாம் பட்சபாதமின்றி யோசித்தால் அவை இரண்டிற்கும் உள்ள வேற்றுமைகளநேகம் என்பது புலப்படும். எனவே, அக்கொள்கையானது சமூக வாழ்க்கைக்குச் சரியான வழிகாட்டியாகவும் இல்லை; மனிதனுக்கும் அவனைச் சுற்றியுள்ள விஷயங்களுக்கும் இருக்கவேண்டிய சம்பந்தத்தையும் அது சரியாகத் தெரிவிப்பதில்லை. பிராணியினுடைய உறுப்புகள் ஒரே தொகுதியா யிருப்பதாகவும், சரீரத்தினுடைய உறுப்புகள் அவ்வாறின்றித் தனித்தனியாக இருப்பதால் இவைகளுக்குள் வேற்றுமை இருப்பதாகவும் ஸ்பேன்ஸர் கூறியதை முன்பே ஆராய்ந்தோம். அவ்வேற்றுமையை ஸ்பேன்ஸர் அவ்வளவு முக்கியமாக வற்புறுத்த வில்லையாஞலும், அது அடிப்படையான வித்தியாசமேயாகும். ஸ்தூலமாகவும் சரியே, சூட்சுமமாகவும் சரியே, ஒரு மனிதன் சமூகத்தினுடைய உறுப்பாக மாட்டான்; ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் பிரத்தியேகமாகவும் பிரத்தியக்ஷமாகவும் இருப்பவன். சமூகமென்பது வெறும் மனேபாவனையே. அதற்கு தனியான சரீரம் கிடை

யாது. பிராணியின் சரீரத்திற்கும் சமூக அமைப்பிற்கும் உள்ள வேற்றுமை அற்ப சொற்பமல்ல; அவ்வேற்றுமை அடிப்படையானது; பூர்த்தியானது; கறுப்புக்கும் வெள்ளைக்கும் எவ்வளவு தெளிவான வேற்றுமை இருக்கிறதோ அவ்வளவு வேற்றுமை இருக்கிறது. மேலும் முன் கூறியபடி, இக்கொள்கையை ஒரு சௌகரியமான உவமையெனவே வைத்துக் கொண்டாலும் கூட, அது நமக்கு அதிகமாய்ப் பயன்படுவதாக இல்லை. ஏனெனில் மனிதனை சமூகத்தினுடைய உறுப்பாகவே செய்து அவ்விருவரையும் மிகவும் நெருங்கிய சம்பந்தமுடையவர்களாகச் செய்வது, மனிதனை சமூகத்தினின்றும் முற்றிலும் வேறாகப் பிரித்து வைக்கும் கொள்கையைப் போலவே அபாயகரமாகும். மனிதர்கள் பரஸ்பரம் ஒத்துழைத்துக் கூட்டுறவாக வேலை செய்வது பொது நலத்தை விருத்தி செய்வதற்கு எவ்வளவு இன்றியமையாததோ, அவ்விதமே மனிதர்கள் பரஸ்பரம் வேறுபடுவதும், வித்தியாசப் படுவதும், தனித்தனியாக முயற்சி செய்வதும் அவசியமாகும். சமூகஉறுப்புக்கொள்கையிலிருந்து, அதை ஜீவப்பிராணிக்கு ஒப்பிட்டுக் கூறும் பாகத்தை எடுத்து விட்டால், அப்பொழுதும் அது பூர்த்தியான உண்மையையும் காட்டுவதாக இல்லை. ஒரு மனிதனுக்கும் மற்ற மனிதனுக்கும் சிறிதும் சம்பந்தமே இல்லையென்று ஒரு வகையான அபிப்பிராயம் உண்டு. அதற்கு முற்றிலும் எதிரிடையானது இந்த உறுப்புக் கொள்கை.

6-வது அதிகாரம்

பல அரசுகளின் சம்பந்தம்.

1. அரசின் வெளி நாட்டு சம்பந்தம். இதர அரசுகளுடன் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்கு முறைகள்:—சாஸ்திரத்தின்படி கண்டிப்பாய்ப் பார்க்கும் பட்சத்தில், ஒவ்வோர் அரசும் வேறு எதற்கும் கட்டுப்படாமல் தனக்குத்தானே சர்வாதிகாரமும் வாய்ந்திருப்பதென்றே கூற வேண்டும். ஓர் அரசை இன்னோர் அரசு பலவந்தத்தின்மேல் அடக்கி வைத்திருப்ப தென்பதே கிடையாது. நாம் மேலே விவரித்த அரசின் நான்கு இலக்ஷணங்களில். தனித்தன்மையென்பதும் ஒன்றாதலால், ஓர் அரசு இன்னொன்றின் அதிகாரத்திற்கு அடங்குவதென்றால், அது அரசாகாது. சுயேச்சையான அதிகாரத்தை வகித்துள்ள அரசே, பிறந்தமேனியாய் இயற்கை நிலைமையில் இருக்கும் அரசு என்று ஹாப்ஸ் என்பவர் குறிப்பது இதுவே. பெயருக்கு மாத்திரம் சட்டப்படி ஒவ்வோர் அரசும் தனித்தன்மை யுடையது என்று நாம் கருத வேண்டுமே யன்றி, அநுபவத்தில் பார்த்தால், அரசுகள் ஒன்றுக் கொன்று பல வகைகளில் சம்பந்தப்பட்டே இருக்கின்றன. ஒரு தேசத்திலிருப்பவன், இன்னொரு தேசத்திற்குப் போக நேருகிறது; கடிதம் எழுதநேருகிறது; சரக்குகளை ஏற்றுமதி செய்யநேருகிறது; இவைகளாலும் இன்னும் பல பொதுப்படையான காரியங்களாலும் ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் நிரந்தரமான சம்பந்தம் ஏற்படுகிறதாகையால், இவைகள் சரியாய் நடக்கும் பொருட்டு வெவ்வேறுயிருக்கும் அரசுகள் தமக்குள் ஒருவிதமான ஒழுங்கை ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. உலகம் எவ்வளவோ நாகரிக

மடைந்துள்ள இந்த நிலைமையில் ஜனங்களுடைய கொள்கைகள், கைத்தொழில்கள், இலக்கிய நூல்கள் முதலியவை ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்திற்குப் பரவுகின்றனவாதலால், அவை எங்கும் ஒரே மாதிரி ஆவதை கவனித்துப் பார்த்தால், எந்த தேச அரசும் மற்ற அரசுகளினால் பாதிக்கப்படாமல் முற்றிலும் பிரத்தியேகமாயிருக்க வேண்டுமென்று நினைப்பது அசம்பாவிதமாகவே முடியும். பல தேசங்களின் இராஜரீக முறைகளாலும், ஜனசார முறைகளாலும், கல்வி முறைகளாலும் ஒவ்வொரு தேசமும் பாதிக்கப்பட்டு வருகின்றன. பல தேசங்களில் பல அரசுகளின் கீழ் இருந்துவாழும் ஒரே பாஷையைப் பேசும் ஒரே ஜாதியாரின் விஷயத்தில், அவைகள் மிகவும் அதிகமாய்ப் பாதிக்கின்றன. அவர்கள் பொதுவான பாஷையின் மூலமாய்த் தங்கள் புராதன சரித்திரங்களையும், பழக்க வழக்கங்களையும் தெரிந்துகொண்டு ஒரேவிதமான மனப்பான்மையோடிருக்கின்றனர். ஆதலால், ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் பலவகைகளில் ஏற்படும் சம்பந்தங்களும் ஒப்பந்தங்களும் நிர்ணயமான ஒரே வழியைப் பின்பற்றி அமைந்து அபிவிருத்தி அடைந்துகொண்டேபோவதும் நிதரிசனமாகத் தெரிகிறது. பல தேசங்களுக்குள் போர் நடந்தால்கூட அதுவும் நிலைத்த ஒரு முறையை அநுசரித்தே நடக்கிறது. தேசங்கள் ஒன்றுக்கொன்று வியாபாரம் முதலியவை நடத்துவதை, போர்கள் நிரம்பவும் சொற்பமாய் பாதிக்கும்படி அவை நடத்தப்படுகின்றன. ஆனாலும், சுயாதிகாரம் வாய்ந்த தனித்தனியான அரசுகள் ஒன்றோடொன்று சிநேகபாவமாய் சகலமான வியவகாரங்களையும் நடத்துவதற்காகப் பல ஒழுங்கு முறைகளும், பழக்கவழக்

கங்களும் ஏற்பட்டு அநுபவத்தில் இருந்து வருகின்றன வானாலும், அவைகள் எப்பொழுதும் நிரந்தரமாகவும் நிர்ண யித்திலடங்கியவையாகவும் இருப்பதில்லை. அவைஇன்னமும் அறைகுறையாகவும், மாறி இப்பொழுதே ஒருவிதமான ஸ்வ ரூபமடைந்து வருபவையாகவும் இருக்கின்றன. ஆனாலும், ஒரு தேசத்தின் அரசியலை நாம் ஆராயும்பொழுது, அதற் கும் மற்ற தேசங்களுக்குமுள்ள கட்டுப்பாடு, அது நிறை வேற்றவேண்டிய கடமைகள், முக்கியமாய் பிற்காலத்தில் இந்த ஏற்பாட்டினால் உண்டாகக்கூடிய பலா பலன்கள் ஆகிய விஷயங்களையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். எனவே அரசியல் தத்துவசாஸ்திரம் ஓர் அரசின் உள்நாட்டு வியவகாரங்களை விளக்குவதோடு நில்லாமல், அதற்கும்வெளி நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ள உருவான நிலைத்த சம்பந்தங் களையும் ஆராய்ச்சி செய்யவேண்டும். நாகரிக மடைந் துள்ள அரசுகள் ஒன்றுக்கொன்று நடந்துகொள்ளவேண் டிய ஒழுங்குமுறைகளும் கட்டுப்பாடுகளும் இன்னமும் அறைகுறையாகவே இருக்கின்றனவானாலும், அவைகளை இன்டர் நா/$_2$ஷனல் லா என்று குறிக்கிறார்கள். அதை, சர்வதேச சட்டம் என்று நாம் குறிக்கலாம். இதிலிருந்து எவருக்கும் உடனே ஒரு சந்தேகம் உண்டாகலாம். இப்படி சட்டங்களின் மூலமாய் ஒரு தேசமும் இன் னொரு தேசமும் கட்டுப்பட்டிருக்கையில், ஒவ்வொன்றும் சர்வாதிகாரமும் பெற்றிருக்கிறது என்று நாம் சொல் வது எப்படிப் பொருந்தும் என்ற சந்தேகம் உதிப் பது சகஜமே. ஆனால், சட்டம் என்பது என்ன வென்பதை ஓரளவு நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். அதாவது, நேர்முகமாகவோ, நேர்முகமல்லாத சம்மதத்தி னாலோ பிறப்பிக்கப்படும், சர்வாதிகாரமும் வாய்ந்த ஒரு

மேலதிகாரியின் கட்டளையையே சட்டமென்று சொல்ல வேண்டுமென நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால் அரசினால் சாதாரணமாய்த் தலையிட இயலாதவையாய், நெடுங்காலமாய் அநுபவத்திலிருந்துவரும் பழக்க வழக்கங்களை சட்டம் என்பதில் சேர்ப்பது உசிதமானதல்ல வென்றும் நாம் தெரிந்துகொண்டோம். சட்டமென்பது அரசின் கட்டளையை மாத்திரமே குறிக்கிறது. அரசில்லாவிடில் சட்டமில்லை, சட்டமில்லாவிடில் அரசில்லை; எனவே, இரண்டும் பரஸ்பர சம்பந்தத்தினால் இருப்பவை. அப்படி இருக்க, இன்டர் நா/2ஷனல் லா என்று குறிக்கப்படும் சட்டத்தை எந்த அரசின் சட்டமென்று நாம் எண்ணுகிறது? அவைகளை பலவந்தமாய் நிறைவேற்றி வைப்பது சாத்தியமானதா? ஓர் அரசில் அடங்கிய குடிமக்கள் விஷயத்தில் அது பொருந்தும். ஏனென்றால், ஒரு சட்டத்தின்படி அவர்கள் நடக்காவிடில் பலவந்தமாய் அதை நிறைவேற்ற அரசுக்கு அதிகாரமுண்டு. ஓர் அரசு இதர அரசுகளின்மேல் பலவந்தமாய் அதிகாரம் செலுத்துவதெப்படி? எனவே, ஓர் அரசிற்கும் இன்னொன்றிற்கும் ஏற்பட்டுள்ள நியதிகளை சட்டமென்று குறிப்பது பொருத்தமானதா என்ற சந்தேகம் உடனே உதிக்கிறது. இந்த விஷயங்களை நாம் சந்தேகமறத் தெரிந்து கொள்வதற்கு, ஆதிகாலத்திலிருந்து, பல தேசங்களுக்குள் பரஸ்பர சம்பந்தங்கள் எப்படி வளர்ந்து உருவடைந்து வந்திருக்கின்றன வென்பதையும், அவைகளுக்கு எவ்விதமான வியாக்கியானங்கள் ஏற்பட்டிருக்கின்றவென்பதையும், தற்காலத்தில் ஏற்பட்டுள்ள இன்டர்நா/2ஷனல் லா என்னும் நியதிகள்என்னென்ன வென்பதையும், அவைகளின் வரம்பு எவ்வளவு என்பதையும் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வது முதல் காரியமாகிறது.

2. **வெளிநாட்டு சம்பந்தம் வளர்ந்து உருவான விதம். முதலாவது, இரண்டாவது, மூன்றாவது காலங்கள்:**—பல தேச அரசுகளுக்குள் ஒன்றுக் கொன்று சம்பந்தம் பெருகி உருவானதை நாம் மூன்று படிகளாய், அல்லது, மூன்று காலப் பிரிவுகளாய் எடுத்துக் கொண்டு ஆராய வேண்டும். ஐரோப்பிய தேச ஜனங்களின் நாகரிகம் முதன் முதலில் ஆரம்பமானது முதல், இற்றலி தேசம் தலை யெடுத்துப் பல தேசங்களை ஜெயித்து சக்கரவர்த்தி ஸ்தானத்தை அடைந்த காலம் வரையில் உள்ள காலத்தை முதல் பிரிவாகவும், அதன் பிறகு வெஸ்ட்பே/2லியா என்ற இடத்தில் 1648-ம் வருஷத்தில் உடன்படிக்கை செய்யப்பட்ட வரையில் உள்ள காலத்தை இரண்டாவது பிரிவாகவும், அது முதல் தற்காலம் வரையிலுள்ள காலத்தை மூன்றாவது பிரிவாகவும் நாம் வைத்துக் கொண்டு ஆராய்வோம். முதல் காலத்தில் ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் கட்டுப்பாடு ஏற்படுத்திக் கொள்வது என்ற விஷயமே ஜனங்களுக்குத் தெரிந்திருந்ததாகத் தோன்றவில்லை. ஒரே மூலபுருஷனுடைய பாரம்பரையில் உதித்து, ஒரே பாஷையைப் பேசி வந்தோர் காலக்கிரமத்தில் பெருகிப் பல வகுப்பினராய்ப் பிரிந்திருந்த இடங்களில் ஆதி உறவு முறைமை போய்விடா திருப்பதைக் கருதி ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பாருக்கு சில கடமைகளைச் செய்வதென்பதையும் சில உரிமைகளைப் பெறுவ தென்பதையும் பழக்கத்தில் வைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் வெவ்வேறு மூலபுருஷனுடைய பரம்பரையைச் சேர்ந்த அன்னிய வகுப்பாரோ, அல்லது, வெவ்வேறு தேசத்து ஜனங்களோ ஒருவருக் கொருவர் சிநேகபாவமாய், சச்சரவில்லாமல் வியவகாரங்களை நடத்துவதற்கான நிலையான

ஒழுங்கு முறைகளையும், நீதிக்கிரமப்படி தர்ம யுத்தம் செய்வதையும் தெரிந்து கொண்டிருக்கவில்லை. உதாரண மாக, இஸ்ரேயில் என்ற மூல புருஷருடைய வம் சத்தில் உதித்துப் பெருகிப் பிரிந்து பல வகுப்பாராய் இருந்தவர்கள் அந்த இரத்த பாந்தவ்வியத்தைப் பாராட்டி வந்தனர். அரசியல் விஷயங்களில் அவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டே நடந்து கொண்டனர். அவர்கள் ஒருவருக் கொருவர் இன்னதென்று விவரிக்க இயலாதபடி கட்டுப் பட்டு பற்றுடன் நடந்து கொண்டனர். ஆனால் மற்றவகுப்பா ருக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமு மில்லையென்றே அவர் கள் மதித்து வந்தனர். இது போலவே கிரீஸ் தேசத் தாரும் செய்து வந்தனர். அந்த தேசத்தில் ஒவ்வொரு பட் டணமும் தனக்குள் தனியரசு நடத்திவந்ததாக முன்னரே கூறினோமல்லவா. ஒரு பட்டணத்தில் அல்லது நகரத்தி லிருந்த ஜனங்கள் தங்கள் தங்கள் அரசாட்சியில் மாத்தி ரம் பிறருக்கு இடங்கொடாமல், தங்களுக்குள்ளாகவே வைத்துக்கொண்டு அதை நிரம்பவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தனராலும், இதர பட்டணங்களிலிருந்த தங்கள் ஜாதியாரான இதர கிரேக்கர்களிடம் சுயஜாதி அபி மானம் பாராட்டி வந்தனர். கிரீஸ் தேசத்திற்குப் புறம் பான மற்ற தேசத்து ஜனங்களை அவர்களெல்லோரும் அநாகரிகமான காட்டு மனிதர்களென்று இழிவாக மதித்து அவர்களிடம் எவ்விதமான பற்றுமில்லாமல் ஒழுகி வந்தனர். ஆனால் கிரீஸ் தேசத்திலிருந்த ஒவ்வொரு நகர அரசும் பூர்த்தியான சுயாதிகாரம் வகித்திருந்ததாலும், பல நகரங்களின் அரசுகளுக்குள் போர் நடந்தால், சில ஒழுங்கு முறைகளை அநுசரிப்பதென்ற நிபந்தனை வைத்துக் கொண் டிருந்தனர். சிற்சில சமயங்களில் எல்லா நகரங்களின்

பிரதிநிதிகள் சேர்ந்த மகா நாடுகளும் கூடி வந்தன. சில பொது விஷயங்களைக் கருதி நகர அரசுகள் ஒன்று கூடியும் சிற்சில வியவகாரங்களை நடத்தின. இவ்வாறு ஒரு நகர அரசுக்கும், இன்னொரு நகர அரசுக்கும் சில சம்பந்தங்கள் ஏற்பட்டிருந்தன வானாலும், அவை கிரீஸ் தேச ஜனங்களுக்குள் மாத்திரமே இருந்தன.

உரோம் அரசு பல தேசங்களை வென்று சக்கரவர்த்தி நிலைமையை அடைய வேட்கை கொண்ட காலத்திற்குமுன், அதுவும் ஒரு சிறிய தனித்த அரசாகவே இருந்தது. அதன் அரசு ஜனநாயக ஆட்சியாய் நடத்தப்பட்ட காலத்தில் இற்றுலி தேசத்திற்குள்ளடங்கிய பல வகுப்பாருடன் அது உடன்படிக்கைகள் செய்து கொண்டிருந்தது. அதுவுமன்றி உரோம் அரசுக்கும், மற்ற அரசுகளுக்கும் சிற்சில நியதிகள் பழக்கத்தில் இருந்து வந்ததாகவேதெரிகின்றன. போர் தொடங்குவதற்கு முன்னும், உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முன்னும், இவைபோன்ற இன்னம் சில சந்தர்ப்பங்களிலும் ஒருவருக்கொருவர் சில சடங்குகளை அநுசரிப்பதென்ற ஒழுங்கை வைத்துக் கொண்டிருந்தனர். அதுவன்றி, பல தேசங்களின் பிரஜைகள் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றியும் சில கிரமங்கள் ஏற்பட்டிருந்தன. ஆனலும், அவைகளெல்லாம் ஓர் அரசிற்கும், இன்னென்றிற்கும் இருக்கவேண்டிய சம்பந்தங்களைக் குறித்த நிரந்தரமான கொள்கைகளாக இல்லை. அப்பொழுது, மதப்பற்றினலும் சிநேகத்தினலும், வேறு அநுகூலங்களைக் கொண்டும் அரசுகளுக்குள் சம்பந்தா சம்பந்தங்கள் ஏற்பட்டு வந்தன. ஆனல் இக்காலத்தில் ஏற்பட்டுள்ளது போல, அரசுகள் ஒன்றுக்கொன்று கடமைகளைச் செய்து உரிமைகளை யடை

வதென்ற நிர்ணயமான நிலைத்த கிரமங்களுக்கு சமதை யாகச் சொல்லக்கூடிய வியவஸ்தைகள் அக்காலத்தில் இல்லை யென்றே கூறவேண்டும்.

பிறகு இரண்டாவது காலம் ஆரம்பமாகிறது. உரோம் அரசு விஸ்தாரமான பல தேசங்களை வென்று தனது ஆளுகைக்குக் கீழ்ப்படுத்தி சக்கரவர்த்தி ஸ்தானத்தை வகித்த காலத்திலிருந்து அந்த அரசின் கோட்பாடுகளில் மாறுதல் தோன்றலாயிற்று. இந்த மண்ணுலகில் அப்பொழுது அவ்விடத்து மனிதர்களுக்குத் தெரிந்திருந்த பூபாகம் முழுதுக்கும் உரோம் தேசத்தார் தங்களையே எஜமான ராக்கிக் கொண்டனர். அவ்வாறு மகோன்னத ஸ்தானம் வகித்ததனால், அவர்கள் அபாரமான செருக்கடைந்து அதை நிலைநாட்டிக் கொள்ளும் பொருட்டு தங்களுக்கும் மற்ற தேசங்களுக்கும் அரசியல் சம்பந்தங்களை ஏற்படுத்தினர். வெவ்வேறு அரசியலின் கீழிருந்த தேசங்களை யெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு குடைக்கீழ் ஆள்வதென்ற பேரவாவே அக்காலத்தில் தலையெடுத்து நின்றது. உரோம் தேசத்தார் தாங்கள் பிடித்த தேசங்களில் தங்களுடைய மேல் அதிகாரத்தைச் செலுத்தி ஷை சிற்றரசுகளுடன் அரசியல் சம்பந்தங்களை உண்டாக்கிக் கொண்டது இயற்கை முறையாகவும் இருந்தது. உள்நாட்டில் அரசியலை விசேஷத் திறமையோடு நடத்தும் விஷயத்தில் அவர்களுக்கு இருந் ததைவிட, விஸ்தாரமான பிரதேசங்களைத் தமது ஆளுகைக்குள்படுத்தி, மண்டலாதிபதியாயிருக்க வேண்டு மென்ற ஆசை முற்றி, கி.பி. 98 முதல் 117ம் வருஷம் வரையில் அந்த தேசத்தை ஆண்ட ட்ராஜன் என்னும் சக்கரவர்த்தி காலத்தில் உச்சநிலையிலிருந்தது. உரோம் தேசத்துச் சக்கரவர்த்திகளுக்கு ஸீஸர் என்ற பெயரே பெரும்பா

லும் இருந்து வந்தது. அந்த அரசிற்குள்ளடங்கிய தேசத்தின் பிரஜைகளிடம் கீழதிகாரிகள் அக்கிரமமாக நடந்து கொண்டால், ஸீஸரிடம் முறையிட்டுக் கோள்வது என்ற உரிமை அவர்களுக்கிருந்து வந்தது. அதிலிருக்கு அப்பீல் டு ஸீஸர் என்ற சொற்கள் சாதாரணப் பழக்கத்திற்கே வந்துவிட்டன. அவ்வாறு உரோம் அரசின் ஆதிக்கம் விஸ்தாரமான பல தேசங்களில் நிலைத்து நிற்க, இன்னொரு முக்கியமான அநுகூலமும் இருந்தது. அந்தக் காலத்தில் தொடங்கிய கிருஸ்துவ மதம் அபிவிருத்தியடைந்து அந்த அரசிற் குள்ளடங்கிய எல்லா தேசங்களிலும் பரவிப் போய் எங்கும் பொதுமதமாக அமைந்து போனதனால், ஓர் ஐக்கிய பாவம் உண்டாகிவிட்டது. அந்த தேசத்தை ஆண்ட கான்ஸ்டன்டைன் என்கிற சக்கரவர்த்தியே கி. பி. 312-ம் வருஷத்தில் முதன்முதலாகக் கிருஸ்துவ மதத்தைத் தழுவத் தொடங்கினார். அதுமுதல் கிருஸ்துவமதமே அரசின் மதம் என்பது ஏற்பட்டது. உரோம் தேச சக்கரவர்த்திகளின் ஆளுகைக்குள்பட்ட தேசங்கள் முழுமையும் கிருஸ்துமதம் பரவிவிட்டது. உரோம் தேசத்திலிருந்த தலைமை மதகுருவான போப் என்பவர் எல்லோருக்கும் ஜகத்குருவாகக் கருதப்பட்டார். சக்கரவர்த்தியின் அதிகாரத்திலும் மேலான பதவியை அந்த ஜெகத்குரு வகித்து வந்தார். பிற்காலங்களில், உரோம் தேசத்தின் மேல் சில அநாகரிக ஜனங்கள் படை எடுத்து வந்து அதைச் சின்னபின்னமாக்கி விட்டனர். அதைச் சேர்ந்த தேசங்களெல்லாம் பலவகையாய்ப் பிரிந்து உருக்குலைந்து போய்விட்டன. முடிவில் உரோம் இராஜ்ஜியம் சீர்கெட்டு தன்னுடைய பழைய நிலைமைக்கு வந்து சேர்ந்துவிட்டது. அரசினால் ஏற்பட்ட சம்பந்தம்போன பிறகும்,

மத குருவின் ஏகசக்ராதிபத்யம் வெகுகாலம் வரையில் இருந்துகொண்டே வந்தது. கி. பி. 800-ம் வருஷத்தில் உரோம் தேசத்தை ஆண்ட சார்ல்மேன் என்பவர் உரோம் ஆட்சியை மறுபடியும் விஸ்தாரப்படுத்திப் பழைய பெருமையை நிலைநாட்டினார். ஆனாலும் அது முதல் அரசுக்கும் அவர்கள் ஜகத்குருவிற்குமே சச்சரவு ஏற்பட்டுப்போயிற்று. ஜகத்குருவான போப் தமது அதிகாரமே மேலானதென்றும் அதற்குள்ளடங்கியே அரசர்கள் அரசாட்சி புரிய வேண்டுமென்றும் உரிமை கொண்டாடினார். அதனால் சக்ரவர்த்திகளுக்கும் மதகுருக்களுக்கும் போராட்டம் ஏற்படவே, இராஜ்ஜியத்தில் ஒரே ஒருவர்தான் முடிவான அதிகாரியாயிருப்பதென்ற கொள்கை அழியத் தொடங்கியது. அரசென்பது ஒரு ஜாதியாரைப் பொருத்து ஏற்படாமல் ஒரு நிலப்பரப்பைப் பொருத்து ஏற்படத் தொடங்கியதும் அக்காலத்திலிருந்துதான். இயற்கையாக ஒரு தனிப்பிரதேசமாக அமைந்திருந்த நிலப்பரப்பில் ஓர் அரசு ஆட்சி புரிந்ததன்றி, ஜனங்கள் ஒரே மதத்தினர், அல்லது, வகுப்பார் என்ற காரணத்தில் அரசு ஆட்சி புரியவில்லை. அதிலிருந்துதான் தற்காலத்திலும், அரசுகள் நிலப்பரப்பைப்பொருத்தே அமைந்திருக்கின்றன. அக்காலத்தில் ஒரே மதகுருவின் ஆதிக்கத்தில் அடங்கி இருந்த கிருஸ்துவ மதம் பிற்காலத்தில் இரண்டுபட்டுப் போயிற்று. ஜனங்கள் உரோமன்கா/2த லிக்ஸ், பிராடஸ்டேன்ட்ஸ் என்ற வகுப்பாராய்ப் பிரிந்து போயினர். அதிலிருந்து ஐரோப்பிய நாடுகளில் கலகங்களும், போர்களும், கொலைகளும் கணக்கிலடங்காமல் நடந்து வந்தன. அவ்வக்காலத்தில் அந்தந்த தேசத்து அரசர் எந்தப் பிரிவைச் சேர்ந்தவராயிருந்தாரோ, அவர் இன்னொரு பிரிவினரைக் கொடுமையாக நடத்தி வதைப்பதென்

பதே கிரமம் ஆயிற்று. மத்திய ஐரோப்பா கண்டத்தில் கடைசியாக மேற்படி இரண்டு மத வகுப்பாருக்கும் முப்பது வருஷகாலம் ஒரே தொடர்ச்சியாகச் சண்டை நடந்தது. அது முப்பது வருஷப் போர் என்றே குறிக்கப்படுகிறது. முடிவில் 1648-ம் வருஷத்தில் வெஸ்ட்பேலியா என்ற இடத்தில், அவர்கள் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டனர். அதோடு மதச்சண்டை நின்று போய்விட்டது. அரசர்கள் மதவிஷயங்களில் தலையிடுதல் கூடாதென்ற நிர்ணயம் அதிலிருந்தே தொடங்கியது. அதுவுமன்றி, உலகம் முழுவதும் ஒருவருடைய ஆதிக்கத்தின் கீழேயே இருக்கவேண்டுமென்னும் கொள்கையும் மறைந்து போய்விட்டது.

அதோடு இரண்டாவது காலம் முடிய, மூன்றாவது தொடங்குகிறது. அது 1648-ம் வருஷம் முதல் தற்காலம் வரையில் உள்ள காலத்தைக் குறிக்கிறது. அது முதற்கொண்டுதான் சர்வதேசங்களும் சமமான அந்தஸ்துடன் உறவாட ஆரம்பித்ததாகக் கூறலாம். தங்களுக்குள் இடைவிடாது போர் நேருவதையும், அதன் பயனாக ஏற்படும் சேதத்தையும் அவர்கள் உணர்ந்து அதைத் தடுக்க முற்பட்டனர். சர்வதேசச் சட்டம் என்று நவீனகாலத்தில் முக்கியமாகக் கூறப்படும் விதிகள் பதினேழாவது நூற்றாண்டிலேயே சிறிதளவு தோன்றலாயின. ஐரோப்பாக் கண்டத்தில், இங்கிலந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹாலண்ட், ஸ்பெயின், போர்ச்சுகல், துருக்கி, இற்றலி, பெல்ஜியம், போலண்ட், உருஷியா—முதலான பல தனித்தனி அரசுகள் பெரியவையாயும் சிறியவையாயும் நிறைந்து கிடந்தமையால் அத்தனை அரசுகளும் சமரஸமாக நடந்துகொள்வதற்கு வழி என்ன என்பதைப்பற்றிப்

பலர் ஆலோசிக்கத் தொடங்கினர். முக்கியமாய் ஹாலண்ட் தேசத்தில் சட்ட நிபுணராயிருந்த ஹியூகோ ஃடீரோஷியஸ் என்பவர் சர்வதேச சம்பந்தங்களைப் பற்றி அடியில் வருமாறு எழுதியிருக்கிறார். மனிதன் அறிவும், விவேகமும், விசால ஹிருதயமும் படைத்தவன்; ஆதலால் இயற்கையாகவே மனிதர்களுக்குள் ஒருவிதமான ஒற்றுமையுண்டு; தன்னுடைய சகோதரர்களுக்குத் தான் செய்யவேண்டிய கடமையை அவன் செய்தே தீருவான். அதைச் செய்யும்படி தூண்ட எந்தச் சட்டமும் அவசியமில்லை. அரசாங்கமே அழிந்து போனாலும், மனிதர் ஒருவருடைய கழுத்தை மற்றவர் வெட்டி எறிந்துவிட மாட்டார்கள். கூடியவரையில் விவேகத்துடனும் தயாள மனத்துடனும் நடக்கும் குணம் சுபாவமாகவே மனிதர்களிடம் அமைந்திருக்கிறது. இப்படி இயற்கையாகவே மனிதர்களுக்குள் இருந்துவரும் பாசத்தையும் பாந்தவ்விபத்தையும் நாம் பிரத்தியட்சமாகவே காண்கிறோம். தெருவில் வரும் பிச்சைக்காரனுக்குப் பிச்சையிட வேண்டுமென எந்தச் சட்டமும் நம்மைக் கட்டுப்படுத்தவில்லை. ஆனாலும் இயற்கையாகவே நாம் தர்மம் செய்வதில்லையா? இது மிகவும் சாமானியமான விதியாகும். இதுபோலவே உலகத்திலுள்ள அரசுகளும் ஒன்றோடொன்று சுபாவமான பாந்தவ்வியத்தைக் கொண்டாடக் கூடியவை. அதாவது, எல்லா அரசுகளையும் தன் வசப்படுத்தியிருக்கும் ஒரு சர்வதேசச் சட்டம் இல்லையானாலும் இயற்கையின் விதிகளே நிரம்பவும் உறுதியான சட்டங்களைப் போல வேலை செய்கின்றன. உதாரணமாக, அமெரிக்க அரசாங்கத்தாரே இப்பொழுது உலகில் பொருளையும் சேனைகளையும் அதிகமாகப் படைத்தவர்கள். அவர்களது தேசத்திற்குப் பக்கத்தில் சுயேச்சையாய் இருக்கும்

ஒரு சிறு தீவைப் போரில் வென்று தம் வசப்படுத்துவது அவர்களுக்கு வெகு சுலபமான காரியம். ஆனாலும் அங்ஙனம் செய்யாமல் அவர்களைத் தடுத்துவரும் சக்தி ஒன்றிருக்கிறது. அப்படியே நமது நாட்டில் இராஜீயக் கிளர்ச்சி செய்வோரனைவரையும் ஒரு நிமிஷத்தில் கட்டிப் பிடித்துக் கண்காணாத இடத்திற்கு அனுப்பிவிடுவது இங்கிலீஷ் அரசாங்கத்தாருக்கும் இந்தியாவிலுள்ள சேனைகளுக்கும் வெகு இலேசான வேலை; ஏன் அவர்கள் அப்படிச்செய்ய முடிவதில்லை? மனிதர்களுக்கு இருப்பதைப் போலவே அரசாங்கத்தாருக்கும் மனோசாக்ஷியும் இயற்கையாகவே தர்மத்தினிடத்தில் மரியாதையும் உண்டெனவே கூற வேண்டும். ஆகவே, சர்வதேசச் சட்டங்களை இயற்றும் ஒரு வல்லரசு இல்லாமற் போனாலும், உலகத்திலுள்ள பல அரசாங்கங்களும் ஒன்றுடனொன்று கூடியவரையில் நியாயமாகவே நடந்துகொள்ளும்என்பது மசரோஷியஸ் என்பவருடைய கொள்கை. ஆனால் இந்தக் கொள்கையை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால், அது புதைமண்ணில் கட்டிய வீடு போலச் சிதைவுண்டு போகும். ஏனெனில் ஒரு மனிதன் ஸ்வயமாகவே பிச்சைக்காரனுக்கு தர்மம் செய்வது பரோபகார சிந்தையால் மட்டுமே என்று நாம்கூறமுடியாது. புகழை உத்தேசித்தோ அல்லது மற்றவருடைய மதிப்பைப் பெற விரும்பியோ அவன் அதைச்செய்யலாம். அப்படியே வல்லரசுகள் சேர்ந்துகொண்டு ஒரு சிறு தேசத்தின் மீது படையெடுக்காமல் இருப்பது உயர்ந்த நற்குணத்தினாலேயே என்று கூற முடியாது. உலகத்தில் தனக்கு இருக்கும் நற்பெயர் கெட்டுப் போகாமலிருக்கவும், அதனால் தனக்குத் தீங்குவராமல் பாதுகாத்துக் கொள்ளவுமே வல்லரசுகள் தமது வாலைச்சுருட்டி வைத்துக் கொண்டு மிருக்கலாம். இவ்

விதத்தில் மிஸ்டர் ரோஷியஸினுடைய சித்தாந்தத்தைக் கண்டிக்க இடமிருக்கிறதாலும், அது ஒரு பெருத்த உண்மையையே நமக்கு விளக்குகிறது. அதாவது, பிரஜைகள் எப்படித் தமது உரிமைகளை கவனமாகக் காத்துக் கொண்டே மற்றவருக்குச் சில கடமைகளையும் செய்து வருகின்றனரோ, அப்படியே உலகிலுள்ள பல அரசுகளும் பரஸ்பரம் உரிமைகளையும் கடமைகளையும் அடைந்திருக்கின்றன என்பதாம். ஒருவர் பிறருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடித்தாலன்றித் தம்முடைய உரிமைகளை அநுபவிக்க முடியாதென்பது இயற்கை விதியாகும். ஐரோப்பாக் கண்டத்தில் சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக எத்தனையோ யுத்தங்கள் நடந்திருக்கின்றன. அவற்றின் முடிவில் பல உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் கையொப்பமிட்ட தேசங்கள் பரஸ்பரம் எவ்விதம் நடந்து கொள்வதென்பதை நிர்ணயித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் யுத்தங்கள் நேரிடும்பொழுது ஒவ்வொரு தேசத்தாரும் யுத்தம் நடக்கவேண்டிய முறையைப்பற்றிப்பிரகடனப்பத்திரங்கள் வெளியிடுவதும் வழக்கம். அவைகளில் இன்னின்ன வேளைகளில் மட்டுமே யுத்தம் நடக்கவேண்டும், சிறையாளர்களை இன்னபடி நடத்தவேண்டும் என்பவைபோன்ற பொதுவான விஷயங்கள் கூறப்பட்டிருக்கும். சமீபகாலத்தில் நடந்த ஜெர்மன் மகா யுத்தத்திற்குப் பின் சர்வ தேச மகா சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிப் பின்னர் கூறுவோம்.

3. **சர்வதேச சட்டங்களில் அடங்கிய விஷயங்களும், அவற்றின் வரம்பும்:**—இவ்வித முறைகளில் ஆதிகாலம் தொட்டு இக்காலம் வரை, பல அரசாங்கத்தாரும் தம்முடைய பரஸ்பர நடவடிக்கைகளை நடத்தி வருவதைப்பற்றி

சமரஸமாகச் செய்துகொண்ட தீர்மானங்களும், ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் சேர்ந்ததே சர்வ தேசச் சட்டமெனப்படுவது. இனி சர்வ தேசச் சட்டத்தில் விவரிக்கப்படும் விஷயங்களைப் பற்றி ஆராய்வோம். இந்தப் பொதுவான சட்டத்தின்படி உலகத்திலுள்ள பல அரசுகளும் பூர்ண சுதந்திரத்தையும் சமஅந்தஸ்தையும் உடையவைகள் என்பது நிச்சயமாகக் கொள்ளப்படுகிறது. சமமான அந்தஸ்துடையவர்களே ஒன்று கூடி ஆலோசித்துத் தீர்மானிக்க முடியும்; மேலோர் கீழோராயின் அது ஒருவர் கட்டளையிடுவதும் மற்றவர் கீழ்ப்படிவதுமாகவே முடியும். "அரசுகள் சம அந்தஸ்தைக் கொண்டவை என்ற விதியை எல்லோரும் அங்கீகரிக்க வேண்டும். உருஷியாவானாலும் சரியே, வேறெந்த நாடானாலும் சரியே, யாவும் சமமான பாத்தியதையையே கொண்டவைகள். இதிலிருந்து ஓர் அரசை மற்றவர் எவ்விதத்திலும் நிர்ப்பந்திக்கக் கூடாதென்பது தெரியவரும். ஒவ்வோர் அரசும் தனக்குத்தானே சட்டமியற்றிக் கொள்ளவேண்டும்; ஓர் அரசின் சட்டங்கள் மற்றவைகளைக் கட்டுப்படுத்தா," என நீதிபதி மார்ஷல் கூறியிருக்கிறார். அதனுல் ஓர் அரசின் இராஜ்ஜிய விஸ்தீரணத்திற்கு ஏதாவது வரம்பு உண்டா என்ற கேள்வியுண்டாகும். பிறகு ஒரு தேசத்திற்குப் பக்கத்திலுள்ள கடல் அந்த தேசத்தின் அரசுக்குச் சொந்தமானதா அல்லது எல்லோருக்கும் பொதுவானதா என்ற கேள்வி உண்டாகலாம். இப்பொழுது இங்கிலந்து தேசமே அதிகமான கப்பற்படையைப் பெற்றிருப்பதனுல், அதுவே கடல்களின் அரசியாய் இருந்து வருகிறது. இது சர்வ தேசச் சட்டத்திற்கு ஏற்றதுதானு? அது தன்னுடைய இராஜ்ஜியத்தின் எல்லையை

விருத்தி செய்துகொள்ள விரும்புவது நியாயமா? யுத்தத்தில் தோற்றவரை தண்டிப்பது எப்படி? யுத்தத்தில் சம்பாதித்த பொருளை விநியோகம் செய்வது எப்படி? சிறை பிடிக்கப்பட்டோரை என்ன செய்வது? வேறுதேசத்தில் சென்று குடியேறியிருக்கும் நம் நாட்டினரை எப்படிப் பாதுகாப்பது? யுத்தத்தை எப்படி ஒழிப்பது? அதை ஒழிக்க முடியாமற் போனாலும், அதன் கொடுமையையாகிலும் குறைப்பதெவ்வாறு? யுத்த சமயத்தில் ஒரு கட்சியையும் சேராமல் தனித்து நிற்கும் அரசுகளைத் தாக்குவதா, கூடாதா? யுத்த சமயத்தில் சாமானிய யாத்திரிகர்களையும் வியாபாரிகளையும் எப்படிக் காப்பாற்றுவது? இவைபோன்ற விஷயங்களையே சர்வ தேசச் சட்டங்கள் ஆராய்கின்றன.

யுத்த சமயத்திலும், சமாதான காலங்களிலும் பல தேசங்களும் ஒன்றுக்கொன்று நடந்துகொள்ளவேண்டிய கிரமங்களை ஒழுங்குபடுத்தி அவைகளை ஒரு நிச்சயமான உருவுள்ளதாகச் செய்யும் சர்வ தேசச் சட்டங்களை கவனிக்கும்பொழுது நமக்கு ஒரு முனிசிபாலிடியின் நிர்வாகம் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு ஜாதியினர் இன்னொரு வகுப்பினரைத் தாக்கக்கூடாது எனவும், ஆற்றங்கரை, குளம், கிணறு முதலிய இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமெனவும், இன்னின்ன வரிகள் செலுத்த வேண்டுமெனவும், மார்க்கட், கடைகள் முதலிய இடங்களில் வியாபாரம்இன்னவிதமாய் நடத்தப்பட வேண்டுமெனவும் முனிசிபாலிடியினர் விதிகளைச் செய்து நகரத்தை இரக்ஷிப்பதைப் போலவே, சர்வ தேசச் சட்டங்கள் உலகமெனும் பெரிய பட்டணத்தைப் பரிபாலிக்கும் விதிகளாயிருக்கின்றன. ஆனால் முனிசிபாலிடியின் விதிகளுக்கும்

சர்வ தேசச் சட்டங்களுக்கும் முக்கியமான ஒரு வித்தியாசமுண்டு. முனிசிபாலிடியின் விதிகளை மீறும் உரிமை பிரஜைகளுக்குக் கிடையாது; அவர்கள் கட்டாயமாக அவைகளுக்குக் கீழ்ப்படிந்தே யாகவேண்டும்; அவைகளை மீறி நடக்க முயன்றால் அவசியம் அவர்கள் தடுக்கப்படுவார்கள்; அல்லது மீறி நடந்துவிட்டால், அதன் பின்னராவது தண்டனையை யடைவார்கள். ஆதலால் சட்டபூர்வமான சர்வாதிகாரமும் முனிசிபாலிடியினது விதிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சர்வதேசச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டுமென்று எந்த அரசையும் சட்ட பூர்வமாகக் கட்டுப்படுத்தும் உரிமை யாருக்கும் இல்லை. அதை மீறி நடக்கும் அரசைத் தண்டிப்பதும் சிரமமான காரியம். உதாரணமாக, வேறு தேசத்திலிருந்து வரும் உணவுப் பொருள்களுக்கு இறக்குமதித் தீர்வை விதிக்கக் கூடாதென றெல்லோராலும்அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வ தேசச் சட்டம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். உலகில் பெரும் பொருளும் பலமும் படைத்த அமெரிக்க அரசாங்கத்தார் இச்சட்டத்தை மீறுவதாகவும் வைத்துக்கொள்வோம். முதலாக, அவர்கள் மீறி நடப்பதே பகிரங்கமாய் எல்லோருக்கும் தெரியாமல் இருக்கலாம். இலஞ்சம் வாங்குவது பெருங் குற்றமானாலும் அது இரகசியத்தில் நடந்து கொண்டிருப்பதைப் போலவே, அமெரிக்க அரசாங்கத்தார் இறக்குமதித் தீர்வை விதிப்பது வெளிவராமலேயே இருந்துவிடலாம். இரண்டாவது, அது வெளியில் தெரிந்தாலும் அவ்வல்லரசை தண்டிக்கும் அதிகாரம்உலகத்தில் மற்றெந்த நாட்டிற்கும் இல்லை. எனவே, அமெரிக்கா முதலான அரசுகள் தாமாகவே மனப்பூர்வமாய் விரும்பினால்தான் சர்வதேசச் சட்டம் சட்டமாக நிற்கும்; இல்லா

விடில் அந்தச் சட்டம் வெறும் காகிதத் தீர்மானமாகி விடும். சர்வ தேசச் சட்டத்தை அனைவரும் தவறாமல் பின்பற்றும்படி வற்புறுத்தக்கூடிய பெரிய அதிகாரிஎவருமில்லை.

4. சர்வதேசச் சட்டமென்ற பெயர் பொருத்தமானதா?:- இதை வைத்துக்கொண்டே பலர் சர்வதேசச் சட்டத்திற்குச் சட்டமென்ற பெயரளிப்பதே தவறெனக் கூறுகின்றனர். சர்வதேசச் சட்டம் என்ற வார்த்தைகளை மிகவும் தாராளமாக நாம் உபயோகித்து விடுகிறோம். ஆனால் சாதாரணமாய் அரசியல் சட்டம் ஒன்றிருப்பதைப் போலவே சர்வதேசச் சட்டமென்பது கிடையாது. பலருடைய தயவினால் கௌரவத்தை அடைந்துவரும் ஒரு பொதுவான நியதிகளுக்கு 'சட்டம்' என்ற பெயரை யளிப்பதே தவறாகும் என்பர் சிலர். சட்டத்தினுடைய முக்கிய அம்சம் அதனுடைய சர்வாதிகாரமேயாகும். ஆகவே இது உண்மையான 'சட்டம்' ஆகாது; பலருடைய அங்கீகாரத்தைப் பெற்ற ஒரு வழக்கமேயாகும். உலகின் அரசுகளுக்கெல்லாம் மேலான அதிகாரம் எவருக்காகிலும் இருந்து, இச்சர்வ தேசத் தீர்மானங்களைமீறுவோரை அது தண்டிக்குமானால், அப்பொழுதே இவைகளைச் சட்டமென்று குறிக்கலாம். அத்தகைய அதிகாரமோ எவருக்கும் இல்லை. ஆகவே சர்வ தேசச் சட்டமென்பது பொருத்தமற்ற வார்த்தைகளாம் என்பது சிலருடைய சித்தாந்தம்.

சர்வதேச சட்டத்திற்கு இந்தப் பெரிய அந்தஸ்து இல்லாமல் போனாலும், அதற்கு மற்ற சட்டங்களைக் காட்டிலும் மதிப்புக் குறைவு ஏற்பட்டுவிடாது. ஒரு மசோதாவைப் பிரேரணை செய்து சட்டசபை மூலம் நிறைவேற்றினால்தான் அது சட்டமாகுமென்பதில்லை. ஒரு தேசத்தின் ஆசாரமும் வழக்கமும் எவ்வளவோ பெரிய

சட்டங்களை உண்டுபண்ணி விடுகின்றன. இங்கிலந்தில் பார்லிமெண்ட் மகாசபைக்குத் தேர்தல்கள் நடந்தவுடன், எந்தக் கட்சியினருக்குப் பெரும்பாலான ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றனவோ, அந்தக்கட்சியின் தலைவரை அரசர் அழைத்து அவரை முதல் மந்திரியாக நியமிப்பது வழக்கம். ஆனால் அரசர் இவ்விதம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்த சட்டம் ஒன்றும் கிடையாது. ஆனாலும் இத்தனை வருஷங்களாக அநுஷ்டானத்தி லிருந்து வரும் வழக்கத்திற்கு விரோதமாய் நடப்பது அரசருக்கும் கூடாத காரியமாகும். அந்த வழக்கம் சட்டத்தைவிட அதிகரித்த உறுதியைப் பெற்றுவிட்டது. ஒரு சட்டத்தைத் தள்ளுபடி செய்வதாவதுபார்லிமெண்டாருக்குச்சாத்தியமான காரியம். இந்த வழக்கத்தை மீறுவதென்பது சுலபமாக முடியக் கூடியதல்ல. அதைப் போலவே நீண்டகால அநுஷ்டானத்தாலோ, பல அரசுகளின் அங்கீகாரதின் பயனாகவோ, சர்வதேசச் சட்டமும் மிகுந்த கௌரவத்தை யடையக் கூடும். மேலும், பொதுஜன அபிப்பிராயமும், தினசரி சமாசாரப் பத்திரிகைகளும், இராஜீய உலகில் பெரும் கிளர்ச்சி செய்துவரும் இந்நாளில் சகல தேசத்தாராலும் நியாயமென அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு சர்வதேசச் சட்டத்தை மீறும் அரசை அனைவரும் கண்டித்து, அதற்கு அவமானத்தை விளைவித்து விடுவார்கள். உலகத்தோரது அதிருப்தியைப் பெறும் அரசுக்குப் பணத்திலும் பலத்திலும் புகழிலும் பெருத்த நஷ்டமேற்பட்டு விடுவது நிச்சயம்.

5. **சர்வ தேச மத்தியஸ்தம்:**—சர்வதேசச் சட்டத்தை மீறுவது துர்லபமான விஷயமானாலும், ஒரே சட்டத்திற்குப் பலவாறு வியாக்கியானம் செய்வது சுலபமான விஷயம். உதாரணமாக, வேறு தேசத்தார் படையெடுத்து

வருவரென்ற பயமிருந்தாலன்றி எந்த அரசாங்கத்தாரும் தமது சேனையை அதிகப்படுத்தக் கூடாது என்ற சர்வ தேசச் சட்டமொன்று இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஒரு சமயத்தில் பெல்ஜியம் என்கிற சிறிய இராஜ்ஜியத்தின் அரசாங்கத்தார் சேனையை அதிகப்படுத்துவதாக வைத்துக் கொள்வோம். அவர்கள் அதற்கு ஒரு காரணம் கூற எண்ணி, பிரான்ஸ் தேசத்தார் தங்களிடம்பொறாமை கொண்டு தம்மீது படையெடுக்கப் பிரயத்தனம் செய்து வருவதாக இரகசியமாய்த் தங்களுக்குச் செய்தி கிடைத்திருப்பதாகவும், சுயரக்ஷணையின் பொருட்டு தாங்கள் சேனபலத்தை அதிகப்படுத்த வேண்டியிருந்தது என்றும் சொல்லுவார்கள். ஆனால் பிரெஞ்சுக்காரர்களோ அது எள்ளளவும் ஆதாரமற்ற செய்தி என மறுப்புரை அனுப்புவார்கள். இதில் அடங்கிய உண்மையை,யார் எப்படிக் கண்டு பிடிப்பது? முனிஸிபாலிடி நிர்வாகத்தில் சச்சரவு நேர்ந்தால், நாம் நியாயாதிபதியிடம் சென்று நீதிபெறுவது போலவே, சர்வதேச நியாயஸ்தலம் ஒன்றிருந்தால், அது நலமாக இருக்கும். சர்வதேசச் சட்டம் எல்லோராலும் அநுஷ்டிக்கப்பட வேண்டுமானால், அதைப் பிரயோகம் செய்வதில் நேரிடும் அபிப்பிராய பேதங்களையும் சச்சரவுகளையும் தீர்ப்பதற்கு ஒரு சர்வதேச நீதி பதி இருக்கவேண்டும். அந்த நீதிபதியின் தீர்மானத்தை எல்லோரும் சரியென ஒப்புக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் உபயகக்ஷி அரசுகளும் தாம் தாம் சட்டத்தை மீறவில்லையென்றே உறுதி கூறி, உண்மையில் அதற்கு மாறுகவே நடந்துகொண்டிருக்கும்.

ஒரு கிராமத்தில் இரு குடும்பங்களுக்குள் சச்சரவேற்பட்டால், இருவரும் பரஸ்பரம் மண்டையை யுடைத்துக் கொள்ளாமல் இருவருக்கும் நம்பிக்கையுள்ள பஞ்சாயத்

தாரை ஏற்படுத்தித் தங்களுடைய சச்சரவை சமாதான மாகத் தீர்த்துகொள்வது சாதாரணமான வழக்கமாயிருக் கிறது. அப்படியே இரு தேசங்களுக்குள் சச்சரவு ஏற்பட் டால், யுத்தம் செய்யாமல், பட்சபாதமற்ற ஒரு பஞ்சா யத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தங்கள் மனஸ்தாபத் தைத் தீர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்தால் யுத்தத் தினால் ஏற்படும் சேதங்கள் நேர இடமில்லை. யுத்தம் நேர்ந் தால் எத்தனையோ ஜனங்களுடைய உயிருக்கு அபாயம் நேருவதுடன், பொதுவாக உலகத்திலுள்ள மற்றவர்களுக் கஷ்டநஷ்டங்கள் உண்டாகும். வர்த்தகம் தாராளமாக நடைபெறுது. இந்த துன்பங்களை யகற்றும் பொருட்டுச் சில வல்லரசுகள் ஒன்றுசேர்ந்து 1899-ம் வருஷத்தில் ஹேமு என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு சர்வதேசப் பஞ்சாயத்து ஒன்றை நியமித்தனர். ஆனாலும் எல்லா அரசுகளுக்கும் யுத்தத்தை ஒழிக்க வேண்டுமென்ற உண்மையான அவா இருந்தாலன்றி அந்தப் பஞ்சாயத்தின் வேலை பயனற்று விடும்.

6. சர்வதேச மகா சங்கம்:-1914-ம் வருஷத்திலிருந்து தொடங்கி நான்கு வருஷம் நடைபெற்ற ஜெர்மன் மகா யுத்தத்திற்குப் பின்னர் மேனுட்டிலுள்ள அரசுகள் ஒன்று கூடி இனியாவது இத்தகைய மாபெரும் போர்கள் நேரிடா வண்ணம் தடுக்க வேண்டுமென எண்ணி சர்வதேச மகா சங்கமொன்றை ஸ்தாபித்தன. அச்சங்கத்தில் உலகத்தின் பெரும்பாலான அரசுகளும் சேர்ந்திருக்கின்றன. அடிக்கடி இச்சங்கத்தின் கூட்டம் நடைபெறுகின்றது. அங்கு யாவ ரும் கூடி பல பொதுவான வியவகாரங்களைப் பற்றி விவா தம் செய்கின்றனர்; இச்சங்கம் ஜினிவா என்ற நகரத்தில் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. மேலும், இச்சங்கம் இராஜீ

யத் துறையில் மட்டும் வேலை செய்வதோடு நிற்கவில்லை. தொழிலாளரின் உரிமைகள், சுகாதாரம், வர்த்தகம், கல்வி முதலான எல்லாத் துறைகளிலும் உலகினரிடையே சமரஸத் தன்மையும் ஒற்றுமையும் வளருமாறு செய்ய முற்படுகிறது. இச்சங்கத்தின் நோக்கம் மிக உயர்ந்ததாகவே இருக்கிறது. ஆனால் அநுஷ்டானத்தில் இந்த நோக்கம் முழுவதும் பின்பற்றப்படுவதில்லை. முக்கியமான சில வல்லரசுகள் ஒன்றுகூடி அச்சங்கத்தைத் தமது விருப்பம்போல ஆட்டிவருகின்றன என்று பலர் குறைகூறுகின்றனர். எல்லா தேசங்களும் சம அந்தஸ்துடையவை என்பது சங்கத்தின் விதிகளில் கூறப்பட்டிருந்தாலும், உண்மையில் சிறுதேசங்களுக்கு அங்கு நியாயம் கிடைப்பதில்லையாம். மேலும் இப்பொழுது இங்கிலீஷ் சாம்ராஜ்யத்தின் கீழும், மற்ற ஏகாதிபத்தியத்தின் கீழும் இருந்துவரும் பலநாட்டினர் ஒன்றுகூடி ஏகாதிபத்தியத்தை ஒழிக்க ஓர் உலக காங்கிரஸை ஸ்தாபித்திருக்கின்றனர். இவ்வாறு படிப்படியாக தேசங்கள் ஒன்றுகூடித் தங்கள் சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்வது அதிகமாய்ப் பெருகுகிறது. இப்பொழுதுகூட அமெரிக்க மந்திரியான கெல்லாக் என்பவர் யுத்தத்தை ஒழிப்பதன் பொருட்டு மற்ற பல நாட்டினருடன் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். உலகத்திலுள்ள வல்லரசுகள் தம்முடைய பேராசையை விட்டொழித்து அமைதியை நிலைநிறுத்த மனப்பூர்வமாக உழைப்பார்களானால், உலகம் பெருத்த நன்மையை அடையும். முதலில், தேசங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கை வேண்டும். அதில்லாமற் போனால் எந்தக் காரியமும் நடைபெறாது. தற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சர்வதேச சங்கம் பின்

வருமாறு அமைக்கப்பட்டிருக்கிறது. சங்கத்தில் சேர்ந்திருக்கும் தேசங்களுடைய பிரதிநிதிகளது மகா சபை ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதைத் தவிர மகாசபையாரால் அப்பொழுதப்பொழுது தேர்ந்தெடுக்கப் படும் நான்கு அங்கத்தினர்களும், முக்கியமான வல்லரசுகளின் சாசுவதமான பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு சிறு சபை உண்டு; அந்த சபையால் நியமிக்கப்படும் பிரதான காரியதரிசி ஒருவர் சர்வ தேச சங்கத்தின் வேலையை கவனித்துவருகிறார். அவருக்குக்கீழ் பல உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள். சர்வதேச சங்கத்தின் செலவுக்கு வேண்டிய தொகையை அதில் சேர்ந்துள்ள தேசங்கள் வீதாசாரப்படி கொடுத்து விடுகின்றன. நமது இந்தியா தேசமும் அச்செலவு தொகையில் ஒரு பெரும் பாகத்தை வருஷந்தோறும் ஏற்று அளித்து வருகிறது. அந்தக் காரணத்தினால் ஷை காரியாலயத்தில் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் எல்லா தேசங்களிலிருந்தும் பொறுக்கி எடுக்கப்படுகின்றனர். சர்வ தேச சங்கத்தின் ஆதரவில் ஒரு நீதிஸ்தலமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; சர்வதேச வியவகாரங்களில் இரு அரசாங்கத்தாருக்குள் ஏதேனும் மனஸ்தாபம் ஏற்பட்டு, அவர்கள் அந்த நீதிஸ்தலத்தின் உதவியை நாடினால், ஷை நீதிஸ்தலத்தார் அதைத் தீர்த்து வைப்பார்கள்; அல்லது, சர்வதேச சங்க மகா சபையார் ஏதாவதொரு விஷயத்தைப்பற்றி ஷை நீதி ஸ்தலத்தாருடைய அபிப்பிராயத்தையும் கேட்பார்கள். அந்த நீதி ஸ்தலத்தை நியமிப்பது மேலே குறிக்கப்பட்ட சிறிய சபையேயாகும்.

சர்வ தேச சங்கத்தினுடைய பிரகடனப் பத்திரிகையில் அதன் உத்தேசங்கள் என்னென்னவென்பதும், அவை

கள் நிறைவேறும் விதம் என்னவென்பதும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. முக்கியமாக சர்வதேச சங்கத்தினுடைய நோக்கங்கள் மூன்றுகும் (1) யுத்தத்தைத் தடுப்பது (2) யுத்த ஆயுதங்களைக் குறைப்பது (3) பல தேசங்களுடைய சுதந்திரத்திற்கும் அவைகளுடைய இராஜ்ஜிய எல்லைக்கும் பாதக மேற்படாமல் பார்த்துக் கொள்வது. இந் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குள்ள வழிகளை சங்கத்தார் பின் வருமாறு கூறியிருக்கிறார்கள்.

உலகத்தில் சமாதானம் ஏற்பட வேண்டுமானுல், கூடிய வரையில் எல்லா அரசுகளும் தங்களது யுத்த ஆயுதங்களைக் குறைத்து விட வேண்டியது அவசியமாகும்; அதாவது தங்களைப் பாதுகாத்துக் கொள்ள எவ்வளவு இராணுவ முஸ்தீபுகள் அவசியமோ அதற்குமேல் சிறிதளவும் வைத்துக் கொள்ளக் கூடாது. மேலும் சர்வ தேச சங்கத்தால் ஒப்புக் கொள்ளப்படும் நிபந்தனைகளை எல்லோரும் அநுசரித்துவர வேண்டும். இவ்விதம் யுத்த ஆயுதங்களைக் குறைக்கும் பொருட்டு சர்வ தேசசங்கத்தார் பல வழிகளைக் கையாண்டு வந்திருக்கின்றனர். யுத்தத்தில் உபயோகிக்கப்படும் ஆயுதங்களையும் சரக்குகளையும் துரைத்தனத்தாரல்லாத வேறு யாராவது உற்பத்தி செய்வது பெரும் தீங்கை விளைவிக்குமாதலால், அவ்விதம் ஆபத்து நேருவதைத் தடுக்க சங்கத்தார் வழிதேட வேண்டும். சர்வ தேச சங்கத்தில் சேர்ந்துள்ள அரசுகள், ஒருவர் மற்றவருடைய பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொள்வதும், மற்றவருடைய சுதந்திரத்தில் தலையிடுவதும் அக்கிரமம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறன. உலகத்தில் அவ்விதம் ஓர் அரசு மற்ற அரசின் வியவகாரங்களில் அக்கிரமமாகத் தலையிட்டால், சர்வ தேசசங்கம் சமயோசிதப்படி தனது கடமை

ணைச் செய்ய முற்படும். உலகத்தில் எவ்விடத்தில் யுத்தம் நேர்ந்தாலும், அதனல் சர்வ தேச சங்கத்தில் சேர்ந்துள்ள அரசுகளுக்குக் கஷ்டம் உண்டானலும் உண்டாகாது போனலும், உடனே ஷை சங்கம் அவ்விஷயத்தில் முயற்சி யெடுத்து உலகின் அமைதியைக் காக்க வேண்டும். சங்கத்தின் அங்கத்தினரில் இருவருக்குள் ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டு, அது முற்றிவிடும்போலத் தோன்றினல், அவ்விருவரும் தமது கட்சியின் நியாயத்தை சங்கத்தின் சபைக்கு எடுத்துரைக்க வேண்டும். அச்சபை செய்யும் தீர்மானத்திற்கு அவர்கள் கட்டுப்படுவதாக ஒப்புக் கொள்ளலாம். அல்லது அவ்வாறு ஒப்புக்கொள்ளாமற் போனலும் சர்வ தேச சங்கத்தின் சபையார் அவர்களுக்குள் சமாதானம் உண்டுபண்ண முயற்சி செய்வார்கள். அந்த சமாதானத்திற்கு இரு அரசுகளும் ஒத்து வராமல் போனல், சமாதானத்தினுடைய நிபந்தனைகளை சங்கத்தார் வெளியிடுவார்கள். அந்த நிபந்தனைகள் நியாயமே என்று ஒப்புக் கொள்ளும் மற்ற அரசுகள், சச்சரவிட்டுக் கொள்ளும் கட்சிகளில் எந்த அரசு அதற்கு ஒத்து வராமல் தனித்து நிற்கிறதோ அதனுடன் விரோத பாவனை காட்டத் தொடங்குவார்கள். அதாவது தனித்து நிற்கும் அரசுடன் வர்த்தக சம்பந்தம், பணசம்பந்தம் முதலியவைகளை நீக்கி, அதை பகிஷ்காரம் செய்து விடுவார்கள். அவ்விதம் செய்தாலாவது அந்த அரசு வழிக்கு வந்துவிடும் என்பதே அவர்களுடைய நோக்கம்.

ஜெர்மன் யுத்தத்திற்குமுன் வேறு அரசாங்கத்தாரின் வசம் இருந்து வந்த சில தேசங்கள் அந்த யுத்தத்தின் பயனை ஷை அரசாங்கத்தாருடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுநின்றன; ஆனல் அவ்விதம் பராதீனத்திலிருந்து விடு

பட்டு நின்றும், அவை சுதந்திரத்தைப் பெற முடியவில்லை. ஏனெனில் அத்தேச ஜனங்கள் தம்மையே ஆண்டு கொள்ளும் திறமையை யடையவில்லை என்று ஐரோப்பிய வல்லரசுகள் கருதின. ஆதலால் அந்த தேசங்களைக் காப்பாற்றி அபிவிருத்தியடையும்படி செய்வது, நாகரிகமடைந்துள்ள வல்லரசுகளின் முதன்மையான கடமையெனக் கருதப்பட்டது. எனவே அறைகுறையாக நாகரிகம் அடைந்திருந்த தேசங்கள், ஷ்டி வல்லரசுகளில் சிலவற்றின் ஆதிக்கத்தில் விடப்பட்டன. உதாரணமாக, இராக் என்ற தேசம் இங்கிலந்துக்கு வந்து சேர்ந்தது; அதாவது இராக் தேசத்தைக் காப்பாற்றி அதைப் படிப்படியாக அபிவிருத்தி செய்து கடைசியில் அது தன்னைத்தானே ஆண்டு கொள்ளும் திறமையைப் பெறும்படி செய்வது இங்கிலந்தினுடைய பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்விதம் பிற தேசங்களை வலுக்கட்டாயமாகத் தமது வசப்படுத்திக் கொண்டது, வல்லரசுகளின் ஏகாதிபத்தியப் பேராசையையே தெரிவிக்கின்றது என்றும், அது ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறதைப் போலவேயாகும் என்றும் சிலர் கண்டனம் செய்கின்றனர்.

இவ்வாறு சர்வதேச சங்கம் ஏற்பட்டது இதுவரை உலகத்தில் நடந்திராத விசேஷ சம்பவமாயிருந்தாலும், உலகத்தில் ஒற்றுமை வளர்ந்து வருவதை அது தெளிவாகக் காட்டுகிறதானாலும், ஷ்டி யுத்தத்திற்குப் பின்னுவது உலகத்தில் அமைதி நிலைத்துவிடும் என்ற நம்பிக்கையை அது பூர்த்தி செய்யவில்லை. உலகில் உள்ள பல தேசங்கள் பொருளாதாரத் துறையிலும், வேறு பல காரணங்களாலும் ஒன்றையொன்று சார்ந்து நிற்கின்றன வானாலும், அதனாலேயே யுத்தங்கள் நின்றுபோய் விடுமென்று

எண்ண இடமில்லை. நாகரிக முதிர்ச்சி யடைந்துள்ள அரசுகள் கூட, யுத்தகாலங்களில் முரட்டுத்தனமாகவும், மிக அநாகரிகமாகவும் நடந்துகொள்ளாமல் தடுக்க வழியே இல்லை. மேலும் சர்வதேச சங்கத்திற்கு உலகின் அரசுகளை பலவந்தத்தினல் அடக்கும் அதிகாரம் எள்ளளவும் கிடையாது. சென்ற மகா யுத்தசமயத்தில் பல நூலாசிரியர்களும் கவிகளும் உலகம் முழுமைக்கும் ஐக்கியமான ஓர் அரசும், மனித ஜாதியார் எல்லோருக்கும் ஒரே சட்டசபையும் அமைக்கப்படுமெனப் பகற் கனவு கண்டு அழகாய்க் காகிதங்களில் எழுதிவந்தனர். ஆனல் அவர்களுடைய நம்பிக்கை பலிதமாகவில்லை.

சர்வதேச சங்கத்தைச் சேர்ந்த மகாசபையின்முன் யோசனைக்கு வரும் விஷயங்களை எல்லோரும் ஏகமனதாகத் தீர்மானம் செய்வது அரிதான காரியம். அதற்குள்ளடங்கிய சிறிய சபையிலோ வெவ்வேறு அபிப்பிராயங்களையும் நோக்கங்களையும் கொண்ட பல தேசப் பிரதிநிதிகள் இருக்கிறார்களாகையால் அங்கும் ஒற்றுமை இருப்பதில்லை; வல்லரசுகள் கூறுவதை மற்றவர் ஒப்புக்கொள்ள முடிவதில்லை. சர்வ தேச சங்கத்தின் கட்டிடத்திற்குள் இருக்கும் வரை எல்லோரும் ஆயுதங்களைக் குறைத்துவிடுவதாக வாக்களித்துவிட்டு, வெளியிற் சென்று புதிய புதிய கப்பற்படைகளையும் ஆகாயப்படைகளையும் தயாரிக்கின்றனர். யுத்தம் நேரிடும்பொழுதெல்லாம் சமயோசிதப்படி நடந்துகொள்வதாகவும், யுத்தம் செய்யும் அரசை பகிஷ்கரித்து விடுவதாகவும் சங்கத்தின் பிரகடனப் பத்திரிகையில் கூறியிருந்தாலும், அவ்வாறு செய்வதற்கும் எல்லா அங்கத்தினர்களுடைய மனப்பூர்வமான ஒற்றுமையும் அவசியமாகும். ஆதலால் இப்பொழுது சர்வ தேச

சங்கத்தால் விளையக்கூடிய நன்மை ஒன்றேயாகும்; சண்டை செய்யும் உத்தேசமின்றி தமது சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்ள விரும்பும் அரசுகளுக்கு அச்சங்கம் நிரம்பவும் உதவியாக இருக்கிறது; ஆனால் இராஜ்ஜியப் பேராசை மிகப் பிடித்த வல்லரசுகளின் கொடுமையிலிருந்து எளிய அரசுகளைப் பாதுகாக்கும் திறமை அச்சங்கத்திற்கு கிடையாது. அச்சங்கமே நாலைந்து வல்லரசுகளின் செல்வாக்கினால் இப்பொழுது ஆட்டிவைக்கப் படுகிறது. ஆதலால் ஒவ்வொரு தேசமும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவசியமான வசதிகளைத் தானே செய்துகொள்வதே உசிதமெனத் தோன்றுகிறது. ஐரோப்பிய மகா யுத்தம் நமக்கு அறிவுறுத்திய நீதி அதுவேயாகும். உலகம் முழுவதும் பேதாபேதமின்றி ஏகோபித்து வாழ்ந்துவரும் என்ற எண்ணம் பலிதமாவதற்கு இன்னும் வெகு காலம் ஆகவேண்டும். அவ்வெண்ணமும் ஆசையும் மனிதருக்குள் நன்றாய்ப் பரவுவதுதான் ஒரு பெரிய இலாபமாக இருக்கிறது. அதனால் உலகின் அமைதி அதிகப்பட வழி ஏற்படும். ஆனால் அவ்வெண்ணம் முற்றிலும் பலிதமாகும் காலம் வரையிலும் ஒவ்வொரு தேசமும் தன்னுடைய க்ஷேமத்தைத் தனக்குத் தானே கவனித்துக் கொள்ளவேண்டும். ஒருகிராமத்தில் பல குடும்பங்கள் மிக ஒற்றுமையாக வாழ்ந்துகொண்டு, தன் தன் வீட்டைப்பற்றிய வரையில் பூரண சுதந்திரத்தைப் பெற்று, கிராமத்தின் பொதுவான நலத்திற்கும் உழைத்து வருவதைப் போலவே, உலகத்திலுள்ள பல ஜாதியினரும் கடவுளுடைய குடும்பத்தின் பல உறவினர்போல வாழும் நாளை எல்லோரும் எதிர் பார்க்கின்றனர். உலக சரித்திரத்தைக் கொண்டு பார்த்தால் அந்த எண்ணம் பலிதமாவது அசாத்தியமானதெனத் தோன்றவில்லை. ஆனால் முன்னரே கூறியபடி, அது சாத்தியமாவதற்கு வெகுகாலம் ஆகும் என்பது நிச்சயம்.

7-ம் அதிகாரம்.

அரசாங்கத்தின் வடிவம்.

(1) வடிவத்தினல் அரசுகளைப் பிரித்தல்; அரிஸ்டாடில் செய்த பிரிவினை:— இதுவரையில், ஒவ்வோர் அரசுக்கும் இருக்கவேண்டிய முக்கியமான குணங்கள் என்னென்னவென்று ஆராய்ந்து பார்த்தோம். தேச எல்லை, ஜனத்தொகை, தனித்தன்மை, கட்டுப்பாடு ஆகிய இலக்ஷணங்களை ஒவ்வோர் அரசும் பெற்றிருக்க வேண்டுமெனவும் விளக்கினேம்; ஆனல் இந்நான்கு அம்சங்களையும் பெற்றுள்ள அரசுகள் உலகில் அநேகமிருந்தாலும், அவை ஒவ்வொன்றும் எவ்வளவோ வேற்றுமைப் படுகின்றன. ஒரு தேசத்தின் எல்லை பெரியதாயும், மற்றென்று சிறியதாயும் இருக்கலாம். ஓர் அரசில் ஜனத்தொகை அதிகமாகவும், மற்றென்றில் குறைவாகவும் இருக்கலாம். ஆதலால் அரசுகள் எவ்வளவு வகையானவை, ஒவ்வொன்றினுடைய விசேஷம் என்ன என்பதை நாம் அறியவேண்டும். கிரேக்க நூலாசிரியரான அரிஸ்டாடிலின் காலம் தொடங்கிப் பலர் பலவிதமாக அரசுகளை வகுத்துக் காட்டியிருக்கின்றனர். ஒரு தேசத்தின் பரப்பைக் கொண்டோ, அல்லது, ஜனத் தொகையைக் கொண்டோ அரசுகளைப் பிரிப்பது அசம்பாவிதமாகும். ஆதலால் அரசாங்கத்தின் அமைப்பு முறையை வைத்துக் கொண்டே அவைகளை வகுத்துக் கூறவேண்டும்.

அரிஸ்டாடில் என்கிற கிரேக்க நூலாசிரியர் தமது அரசியல் சாஸ்திரம் என்கிற நூலில் அரசாங்க நிர்வாகத்தை நடத்துவோரின் எண்ணிக்கையைக் கொண்டு அரசுகளை வகுத்திருக்கிறர். உதாரணமாக, ஒரே யொருவன் அரசை

நடத்தி வந்தால், அது 'ஏகாதிபத்தியம்' (அதாவது அரசனைத் தலைமையாகக் கொண்டது) எனக் கூறப்படும். பல மனிதர்கள் அரசை நிர்வகித்தால் அது பிரபுக்களின் ஆட்சியாகும். பொது ஜனங்களே நேராக ஆண்டு வந்தால், அது பொது ஜன ஆட்சி ஆகிறது. இம்மூன்று வகைக்குள் எல்லா அரசுகளும் அநேகமாய் அடங்கிவிட்டன. ஆனால் இவ்வித ஆட்சி நியாயமாகவும் இருக்கலாம், அல்லது விபரீதமான அநியாயமான ஆட்சியாகவும் ஆய்விடலாம் என்று அரிஸ்டாடில் கூறுகிறார். நியாயமான ஆட்சியென்றால் ஜனங்களுக்கு நன்மையையே கோரும் செங்கோன்மையாகும்; விபரீதமான ஆட்சியென்பது ஆளுவோரின் சுய நன்மையைக் கருதுவது. அதனால் பொது ஜனங்களுக்குத் துன்பமே யுண்டாம். ஓர் அரசன் செங்கோல் செலுத்துவோனாகவும் இருக்கலாம்; அல்லது, சுயநலம் கருதும் கொடுங்கோன் மன்னனாகவும் இருத்தல் கூடும். பிரபுக்கள் வசத்தில் ஆட்சி அகப்பட்டுவிட்டால் அவர்கள் தம்முடைய பொருளையும் அறிவையும் கொண்டு ஏழை மக்களின் துன்பத்தை அகற்றினாலும் அகற்றலாம்; அல்லது, அதைப் பெருக்கினாலும் பெருக்கலாம். அங்ஙனமே ஜனங்களே நேராக ஆட்சியை வகித்தால் தங்களுடைய நலத்தை விருத்தி செய்து கொள்வதும் சாத்தியமே; அல்லது தம் தலையிலேயே மண்ணைப் போட்டுக் கொள்வதும் சாத்தியமே.

இங்ஙனம் அரசுகளைப் பலவகைகளாகப் பிரித்ததுடன் நில்லாமல், அரிஸ்டாடில் அரசாங்க முறை ஒரே விதமாக வளர வேண்டுமெனவும் கூறியுள்ளார். அவருடைய சித்தாந்தப்படி எந்த தேசத்தை எடுத்துக்கொண்டாலும் முதலில் மன்னனுடைய ஆட்சியும், பிறகு பிரபுக்களின் ஆட்சியும், பிறகு ஜனங்களின் ஆட்சியுமே தொடர்ச்சியாக நடைபெற

வேண்டுமாம். பழைய காலத்தில் இராஜ்ஜியங்கள் மிகச் சிறியவையாயிருந்தமையால் அதிகத் திறமையும் புத்தி நுட்பமும் கொண்டவர்கள் சொற்பமாக இருந்தனர். அவர்களாலேயே தங்களுக்கு நன்மை விளையக் கூடுமென்று ஜனங்கள் அவர்களை அரசனாக்கிவிட்டனர். பிறகு காலக்கிரமத்தில் அரசனைப் போன்ற திறமையைப் பெற்றவர் இன்னும் பலர் தோன்றிவிடவே, பிறகு பல பிரபுக்களின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இப்பிரபுக்கள் முதலில் பரோபகார புத்தியுடன் அரசாண்டு வந்தாலும், கடைசியில் ஜனங்களைக் கொள்ளையிடும் பேய்களாக மாறிவிட்டனர். பிறகு மறுபடியும் இப்பிரபுக்களை யடக்கி ஒருவனே கொடுங்கோன்மை செலுத்தி வந்தான்; காலக்கிரமத்தில் அவனது அக்கிரமத்தைச் சகிக்க இயலாத ஜனங்கள் அவனைத் துரத்திவிட்டுத் தாமே ஆட்சி புரிய வாரம்பித்தனர். இதுவே அரசு மாறுபட்டுவரும் முறையென்பது அரிஸ்டாடிலின் கொள்கையாகும்.

வேறு சில நிபுணர்கள் அரசு முறை வேறு விதத்தில் விருத்தி யடைவது என்று காண்பித்திருக்கின்றனர். அதாவது, செங்கோன் மன்னனின் ஆட்சி, கொடுங்கோன்மை, பிரபுக்களின் நியாயமான ஆட்சி, பிரபுக்களின் சுயநலம் மிகுந்த ஆட்சி, பூர்ணமான ஜனநாயக ஆட்சி, அதன்பின் சில வகுப்பாருடைய ஆட்சி ஆகிய வரிசைக் கிரமப்படியே அரசு முறை மாறி மாறி வருகிறதென்பது அவர்களுடைய கூற்று. இவ்வரிசைக் கிரமத்தைப் பின்வருமாறு விளக்கலாம்.

முதன் முதலாக ஒரு தேசத்தில் அரச குலமொன்று நிலைத்திருக்கிறது. ஆனால் காலக்கிரமத்தில் அவ்வுத்தம அரசகுலத்தின் சந்ததிகள் துர்க்குண மேலீட்டினால் ஜனங்களை ஹிம்ஸிக்கத் தொடங்குகின்றனர். அதைக் கண்டு

சகியாத பிரபுக்கள் கலகம் செய்து அவ்வரசனைத் துரத்தி விட்டுப் பொது நலத்தை யுத்தேசித்துத் தாங்களே அரசை நிர்வகிக்க ஒப்புக்கொள்ளுகின்றனர். மறுபடியும்நாளடைவில் அப்பிரபுக்களின் சந்ததியார் பரோபகாரச் சிந்தை யற்று ஜனங்களை உபத்திரவிக்கிறார்கள். ஜனங்கள் அதைப் பொறுக்காமல் கலகம் செய்து ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிக்கின்றனர். சிறிதுகாலம் அவ்வாட்சி நன்றாக நடைபெறுகிறது; அதன்பின் சில பணக்காரர்கள் எல்லா அதிகாரத்தையும் வகித்துக்கொண்டு ஜனங்களைக் கொள்ளையிடுகின்றனர். அதன் பயனாகப் பெரும் குழப்பமும் அமைதியின்மையும் ஏற்படவே, அதை யடக்க ஒரு சேனாவீரன் தோன்றி சுயேச்சையாய் அதிகாரம்செலுத்தி முடிவில் அவனே அரசனாய் விடுகிறான். இதுவே அரசியல் முறைச் சக்கரம் சுழன்று செல்லும் வழி என்பதே அவர்களது கொள்கை.

இங்ஙனம் அரிஸ்டாடிலும் மற்ற வரும் கூறியுள்ள முறைப்படியே பண்டைக் காலத்தில் கிரேக்க தேசங்களில் அது நடைபெற்று வந்தது. பிற்காலத்திலும் கூட பிரான்ஸ் தேசத்தில் அது இவ்விதமே நடந்திருக்கிறது. பிரான்ஸ் தேசமானது 18-வது நூற்றாண்டில் ஓர் அரசனுடைய ஆட்சிக்குட் பட்டேயிருந்தது. அவ்வரச குலத்தார் முதலில் திறமையுடன் அரசாண்டு வந்தாலும், 18-வது நூற்றாண்டில் ஜனங்களுடைய அதிருப்தியைப் பெற்று விட்டனர். கோபம் கொண்ட ஜனங்கள் பெரும் புரட்சி செய்து அரசனைக் கொன்று போட்டு விட்டுத் தங்களுடைய தலைவர்களைக் கொண்டே ஆட்சி நடத்தத் தொடங்கினர். அத்தலைவர்கள் செருக்கடைந்து தமது இச்சைப்படி நடந்தனராதலால், ஜனங்கள் மறுபடியும் கல

கம் செய்து, எல்லோருக்கும் ஓட்டுரிமை உண்டென்று சட்டமியற்றி ஜனநாயக ஆட்சியை ஸ்தாபித்தனர். அவ் வாட்சி சொற்ப காலம் நடக்க, பிறகு நாட்டில் குழப்பம் அதிகரித்ததாகையால், நெப்போலியன் என்ற பெரிய வீரன் எல்லோரையும் அடக்கித் தன் வசப்படுத்தி ஏகாதிபத்தியம் செலுத்தலானான். திரும்பவும் ஜனங்கள் நெப்போலியனை அடித்துத் துரத்திவிட்டு நிரம்பவும் பாடுபட்டு ஸ்திரமான ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டினார்கள்.

இவ்வாறு பி/2ரான்ஸ் தேசத்தில் அரசியல் மாறுபாடுகள் உண்டாயினவானாலும் எல்லா நாடுகளிலும் அரிஸ்டாடில் கூறியபடியே அரசியல் அமைப்பு மாறவில்லை. அவருடைய சித்தாந்தம் நவீன காலத்திற்கும் ஒத்ததாக இல்லை. மேலும் அரசனுடைய ஆட்சி, பிரபுக்களின் ஆட்சி, ஜனங்களின் ஆட்சி என்று மூன்று பிரிவாக அரசாங்கங்களைப் பிரித்துவிடுவதும் இக்காலத்திற்குச் சரியாகத் தோன்ற. வில்லை. இதைச் சில உதாரணங்களால் நாம் விளக்கலாம். இங்கிலந்திலும் ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது; அமெரிக்காவிலும் ஜனநாயக ஆட்சியே பரவியிருக்கிறது. அரிஸ்டாடிலினுடைய சித்தாந்தப்படி பார்த்தால் அமெரிக்காவும் இங்கிலந்தும் ஒரே மாதிரியான அரசென நாம் கூறவேண்டும். ஆனால் உண்மையிலோ, இரண்டும் வெவ்வேறான அரசு முறைகளைக் கொண்டவை. அல்லது, இங்கிலந்தில் அரசர் இருக்கிறார் என்னும் காரணத்தைக் கொண்டு இங்கிலந்தையும் இற்றலியையும் ஒரே வகையிற் சேர்ப்பதும் அர்த்தமற்றதாகிவிடும். ஜனங்களுடைய பிரதிநிதி சபையின் ஆலோசனையுடன் அரசு செலுத்தும் அரசனைப்பற்றி அரிஸ்டாடில் ஒன்றும் கூறவே இல்லை. மேலும் இக்காலத்தில் பல சிறிய அரசுகள் ஒன்று சேர்ந்து ஓர் ஐக்கிய அரசாங்கத்தை

ஸ்தாபித்துக்கொண் டிருக்கின்றன. அமெரிக்காவின் ஐக்கிய அரசாங்கத்தில் பதின்மூன்று சிறிய குடியரசு நாடுகள் அடங்கியிருக்கின்றன. இத்தகைய ஐக்கிய அரசாங்கங்களைப்பற்றி அரிஸ்டாடில் பிரஸ்தாபிக்கவே இல்லை.

2. பிற்காலத்தோர் வகுத்த விதங்கள்:—அரிஸ்டாடிலுக்குப் பிறகு பலர் பலவிதமாக அரசுகளை வகுத்துக் கூறியிருக்கின்றனர். ஆனால் அவர்களெல்லோரும் அரசியலை நடத்திச் செல்லும் அதிகாரம் யாருடையதென்பதை மட்டுமே கவனித்தனரன்றி, மற்றவகையில் அரசியலின் அமைப்பிலுள்ள விசேஷங்களைக் கருதவில்லை. இப்பொழுது உலகில் இருவித அரசுகள் இருக்கின்றன. இங்கிலந்தில் ஒரே அரசாங்கம் இருக்கிறது; அமெரிக்காவிலோ பல சிறு சிறு அரசுகளை உள்ளடக்கிய ஓர் ஐக்கிய அரசாங்கம்இருக்கிறது.ஐக்கிய அரசாங்கத்தை இன்னும் விரிவாகப் பின்னொரு அத்தியாயத்தில் நாம் ஆராய்வோம். இங்கிலந்தில் ஒரே அரசாங்கத்தார் ஆண்டு வருகின்றனர்; அவர்களுக்குக் கீழ் பல முனிசிபாலிடிகளும், கார்ப்போரேஷன்களும் இருக்கின்றன.ஷெ நகரசபைகளை இங்கிலந்து தேசத்துரைத்தனத்தார் அழிக்கவும் கூடும்; மாற்றவும் கூடும். இங்கிலந்திலுள்ள மத்திய அரசாங்கம் சர்வவல்லமை யுடையது. ஆனால் அமெரிக்காவின் ஐக்கியஅரசாங்கமோ அவ்விதமானதல்ல. அது, தன் கீழ் உள்ள சிறிய அரசுகளைத் தன்னுடைய இஷ்டப்படி யெல்லாம் ஆட்ட முடியாது. சிறிய அரசுகள் பல ஒன்றுசேர்ந்த மொத்தமே ஐக்கிய அரசு. ஐக்கிய அரசாங்கத்தாருடைய அதிகாரம் ஒரு வரம்பிற்குள் பட்டது. இன்னொரு விதமாகவும் அரசாங்கங்களைப் பிரித்துக் கூறலாம். சில தேசங்களில் நிர்வாகஸ்தர்கள் ஜனப்பிரதிநிதிக ளடங்கிய சட்டசபைக்கு ஜவாப்தாரியாக

இருக்கிறார்கள். இங்கிலந்திலுள்ள காபினட் (Cabinet) என்னும் மந்திரி சபையார் பார்லிமெண்ட் சபைக்கு உத்தரவாதியானவர்கள். இந்தியா கவர்ன்மென்டின் நிர்வாக சபையோ அவ்விதமானதல்ல.

3. தற்கால அரசுகளைப் பிரிக்கும் மாதிரி:—பழையகால அரசாங்கங்களின் அமைப்பை விட்டு, நாம் இக்காலத்தில் உள்ள அரசுகளை எவ்வாறு பிரிக்கலாமென்பதை கவனிப்போம். முதலாவதாக, அரசுகளை ஜனநாயக அரசுகள், என்றும் ஏகநாயக அரசுகள் என்றும் பிரிக்கலாம். அதன்படி பார்த்தால், இங்கிலந்து அமெரிக்கா முதலிய நாடுகள் முதல் வகுப்பிலும், துருக்கி, பாரசீகம் முதலான தேசங்கள் இரண்டாவது வகுப்பிலும் சேரும். ஜனநாயக ஆட்சி முறையிலும் அரசனொருவன் இருக்கக் கூடும். அதற்கு உதாரணமாய் இங்கிலந்தைக் குறிக்கலாம். ஆனால் அந்த அரசன் சுயேச்சையாக நடக்க முடியாது. அமெரிக்காவில் அரசன் இல்லை. ஆனால் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரஸிடேண்ட் என்ற அதிபதியே நிர்வாகத்தை நடத்தி வருகிறார். இங்கிலந்தின் அரசருக்கு இராஜகௌரவம் மாத்திரம் உண்டு. ஆனால் அதிகாரம் கிடையாது; அமெரிக்காவின் அதிபதிக்கோ நிர்வாக அதிகாரம் உண்டு; இராஜ கௌரவம் கிடையாது. லீகாக் என்னும் நூலாசிரியர் தற்கால அரசுகளை, 178, 179-வது பக்கங்களில் உள்ள அட்டவணைப் படி பிரித்திருக்கிறார்.

(4) அரசாங்க அமைப்புப் பத்திரம். எழுத்து மூலமானது; எழுதப்படாதது:—இங்கிலீஷில் கான்ஸ்டிட்யூஷன் (Constitution) என்று ஒரு வார்த்தையுண்டு. அதற்குப் பொதுவாக அரசியல் முறை என்றர்த்தம். சிலர் அரசியல் முறையை விவரித்துள்ள தஸ்தாவேஜையோ பத்திரத்

தையோ அவ்வார்த்தையினுல் குறிப்பர். ஆனுல் பத்திர மொன்று எழுதப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒரு தேசத்தினுடைய ஸ்திரமான அரசியல் முறைக்கும் அரசியல் பழக்க வழக்கங்களுக்கும் கான்ஸ்டிட்யூஷன் என ஒரு சாரார் கூறுவர். அரசாங்கத்தாருடைய அதிகார வரம்புகளேயும், குடிமக்களின் உரிமைகளேயும், இருவருக்கும் உள்ள சம்பந்தங்களேயும் தெளிவாக நிர்ணயிக்கும் விதிகள் எத்தனேயோ இருக்கின்றன. அவைகளில் சில எழுதப்பட்டிருக்கும்; அதாவது அவை தீர்மான வடிவமாய் சட்ட புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும்; சில விதிகளோ அவ்வாறின்றிப் புராதன அநுஷ்டானமாக மட்டும் இருந்துவரும். ஆனுல் பழைய காலம் முதற் கொண்டு அநுஷ்டிக்கப்படும் வழக்கங்களே மீறுவதும் மிக கடினமான காரியம். சட்டங்களே மீறினுல் எப்படி அவமானமும் பொது ஜன விரோதமும் நேரிடுமோ, அப்படியே புராதன வழக்கங்களே மீறுவதனுலும் ஏற்படும். ஒரு தேசத்தில் பழைய காலம் முதல் ஆறிலொரு பங்கு வரி வசூலிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம்; அதைவிட அதிக வரி வசூலிக்கக் கூடாதென்று சட்ட புஸ்தகத்தில் தீர்மானம் எழுதப்பட்டிராது. அதைக் காரணமாக வைத்துக் கொண்டு ஓர் அரசன் அதிக வரி விதித்தால் உடனே ஜனங்கள் எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் தொடங்கிவிடுவார்கள். சட்ட புஸ்தகத்திலுள்ள சட்டத்தையாவது மாற்றலாம்; புராதன அநுஷ்டானத்தை திடீரென மாற்றியமைப்பது முடியாது. பல ஆண்டுகள் பிரசாரம் செய்தால் ஒரு கால் அந்த அநுஷ்டானத்தை மாற்றலாம். இத்தகைய புராதன அநுஷ்டானங்களே "எழுதப்படாத சட்டங்கள்" என்றும் குறிப்பதுண்டு. ஓர் அரசாங்கத்தாரின் நடிவடிக்கையானது

எழுதப்பட்ட சட்டங்களின்படியும், எழுதப்படாத சட்டங்களான புராதன அநுஷ்டானங்களின் படியுமே நடத்தப்படுகிறது. அரசியலை யொட்டிய எல்லா விஷயங்களையும் சட்டபூர்வமாக எழுதிவைக்க முடியாது. இங்கிலந்தின் அரசியல் முறையில் எழுதப்பட்டுள்ள சட்டங்கள் மிகமிகக் குறைவு. ஆனால் வெகு நாளைய அநுபவத்தில் படிப்படியாக விருத்தியடைந்து வந்திருக்கும் பல அநுஷ்டானங்களும் கொள்கைகளுமே அங்கு நிரம்பவும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. அரசனும் மற்றவரும் இவ்வநுஷ்டானங்களை மீறி நடக்கத் துணியவே மாட்டார்கள். அங்கு பொதுத்தேர்தல் நடந்தவுடன், பார்லிமேண்ட் சபை கூடுகையில், எந்தக் கட்சியின் பிரதிநிதிகள் பெரும்பாலோராக வந்திருக்கின்றனரோ, அதன் தலைவரை அரசர் அழைத்து அவரை முதன் மந்திரியாக நியமித்து, அவருடைய கட்சியிலிருந்து மற்ற உபமந்திரிகளையும் பொறுக்கிக் கொள்ளுமாறு கட்டளையிடுவது வழக்கமாக இருந்துவருகிறது. அவ்வாறு, மந்திரி சபை அமைக்கப்பட வேண்டுமென எந்தச் சட்டத்திலும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனாலும் அந்த வழக்கத்தை மீறுவதென்பது கனவிலும் நினைப்பதற்கு இயலாத காரியம். அது போலவே பார்லிமேண்ட் சபை இயற்றும் சட்டங்களுக்கடியில் முடிவாக அரசர் கையெழுத்திட்டாலன்றி அவை செல்லா; அரசர் அதில் கையெழுத்திடாமல் இருக்க சட்டபூர்வமாக அவருக்கு அதிகாரமிருந்தாலும், அவர் பார்லிமேண்ட் சபையார் நிறைவேற்றும் எந்தச் சட்டத்தையும் தள்ளுபடி செய்யவே மாட்டார்; தள்ளுபடி செய்யவும் முடியாது. இதுவே அங்கு அநுஷ்டானமாக நடந்து வருகிறது.

5. எழுத்துமூலமான கான்ஸ்டிட்யூஷன் அல்லது துரைத்தன அமைப்புப் பத்திரம் எப்படி ஆரம்பமாயிற்று:—

தற்கால அரசுகள்

- அரசர்களால் சுயேச்சையாய் ஆளப் படுபவை.
  - அபிஸீனியா
  - ஆப்கானிஸ்தானம்
  - மொனாகோ
  - மொராக்கோ
  - பாரசீகம்* }
  - துருக்கி }
  - உருஷியா }
  - முதலியவை
- ஜனநாயகத்திற்குட்பட்டவை
  - ஜனநாயக ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டிருப்பதோடு இன்னம் அரசரையும் பெற்றிருப்பவை
    - யூனிடரி அல்லது சகல விஷயங்களிலும் மத்திய துரைத் தனத்தின் அதிகாரப்படி நடப்பவை
      - பார்லிமெண்டரி அல்லது சட்ட சபைக்கு நிர்வாகஸ்தர் கட்டுப்பட்டவை
        - பெல்ஜியம்
        - டென்மார்க்
        - கிரீஸ்
        - இற்றலி
        - ஜப்பான்
        - நெதர்லண்ஸ்*
        - நார்வே
        - போர்ச்சுகல்
        - ருமேனியா
        - ஸ்பெயின்
        - ஸ்வீடன்
        - கிரேட் பிரிட்டன்
      - நான் பார்லிமெண்டரி அல்லது சட்ட சபைக்கு நிர்வாகஸ்தர் கட்டுப்படாதவை
        - லக்ஸம்பர்க்*
        - மகாயுத்தத்திற்கு முன் }
        - பிரஷ்யா
        - ஸயாம்
        - ஸெர்பியா
        - (இந்தியா இப்பொழு திருப்பதை யொத்து)
    - பெடரல் அல்லது உள்நாட்டு வியவகாரங்களை அதனதனிடம் விட்டு பொது வியவகாரங்களில் மாத்திரம் மத்திய துரைத் தனத்தார் தலையிடும் அரசுகள்
      - பார்லிமெண்டரி
        - ஆஸ்திரேலியா
        - கனடா

* இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தபடி

- (1914-ம் வருஷத்திய) ஜர்மன் இராஜ்யம். ஆஸ்திரியா-ஹங்கேரி
  - நாந் பார்லிமெண்டரி
    - (1914-ம் வருஷத்திய) ஜர்மன் இராஜ்யம்.
    - ஆஸ்திரியா-ஹங்கேரி

- ரிபப்ளிக் அல்லது அரச னில்லாமல் ஜனப்பிரதிநிதிகளே ஆட்சி புரிபவை
  - யூனிடரி
    - பார்லிமெண்டரி
      - பிரான்ஸ்
      - சீனா
      - போலண்டு
    - நாந் பார்லிமெண்டரி
      - பொலிவியா, சிலி, கொலம்பியா, க்யூபா, ஈகுவேடார், குவாதமாலா, ஹெய்டி, ஹாண்டுராஸ், லைபீரியா, நிகராகுவா, பனமா, பராகுவே, பெரு, ஸால்வடார், ஸான்டோ டாமின்கொ, உருகுவே
  - பெடரல்
    - பார்லிமெண்டரி
      - ஸ்விட்ஜர்லந்து
    - நாந் பார்லிமெண்டரி
      - ஆர்ஜெண்டைன்
      - பிரேஸில்
      - மெக்ஸிகோ
      - அமெரிக்க ஐக்கிய நாடுகள்
      - வெனெஸுலா

ஆனால், தற்காலத்தில் எழுதப்பட்ட கான்ஸ்டிட்யூஷனைப் பெறாத அரசுகள் வெகு சொற்பமேயாகும். சென்ற 150 வருஷங்களாகப் பல அரசுகள் தங்கள் உள்ளமைப்பை விவரித்துக் கூறும் இராஜீயப் பத்திரங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவில் இங்கிலீஷ்காரர்கள் சென்று குடியேறியிருந்த தேசங்களே முதன்முதலாக 18-வது நூற்றாண்டில் துரைத்தன அமைப்புப் பத்திரங்களைத் தயாரித்து அரசுகளை ஸ்தாபித்தன. 18-ம் நூற்றாண்டின் முடிவில் பிரான்ஸ் தேசத்தில் இராஜீயப் புரட்சிகள் அடிக்கடி ஏற்பட்டன. கடைசியாக அங்கு ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது; அந்த ஆட்சிமுறை பூர்த்தியாக ஒரே பத்திரத்தின் மூலமாய் அமைக்கப்படவில்லையானாலும், சில துரைத்தன அமைப்புச் சட்டங்களையொட்டியே அது நடந்து வருகிறது. 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலும், முக்கியமாக 1848-ம் வருஷத்தில் ஐரோப்பா முழுமையும் ஏற்பட்ட பெரும் இராஜீயப் புரட்சிகளுக்குப் பின்னும், ஐரோப்பா முழுவதும் எழுத்து மூலமான கான்ஸ்டிட்யூஷன்கள் ஏராளமாய் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. அதற்குப் பிறகு அவைகளில் சில தள்ளப்பட்டும் போயின. ஆனாலும் கிரேட் பிரிட்டனைத் தவிர மற்ற தேசங்களில் எழுத்துமூலமான கான்ஸ்டிட்யூஷன்களே இப்பொழுது இருந்து வருகின்றன. ஜெர்மன் மகாயுத்தத்திற்குப் பிறகு 1919ஆு ஜனவரி மாதத்தில் ஜெர்மனி தேசத்திலும் ஒரு கான்ஸ்டிட்யூஷனைத் தயாரித்து வெளியிட்டு, அரசனில்லாத ஜனநாயக ஆட்சியை ஸ்தாபித்தனர்.

18-வது நூற்றாண்டிலேயே அமெரிக்காவில் கான்ஸ்டிட்யூஷன் தயாரிக்கும் வழக்கம் தோன்றி விட்டதாகை

யால், அதையொட்டி மற்ற அரசுகளும் பிற்காலத்தில் அதைத் தயாரிப்பது சாதாரணமாகி விட்டது. அமெரிக்காவில் கான்ஸ்டிட்யூஷன் தயாரிக்கும் வழக்கம் எவ்விதம் தோன்றியது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இங்கிலீஷ்காரர்கள் அமெரிக்காவில் வர்த்தகத்தின் பொருட்டுச் சென்று குடியேறுவார்களானால் அவர்களுக்கு இங்கிலந்தின் அரசன் ஓர் உரிமைப் பத்திரத்தை அளித்துவிடுவான்; உதாரணமாக, அமெரிக்காவில் பருத்தி பயிரிடும் பாத்தியதை முழுவதையும் ஒரு கம்பெனிக்கு அளித்துவிட்டு மற்றவர்கள் அக்கம்பெனியாருடன் போட்டி போடக் கூடாது என்று அரசன் அப்பத்திரத்தில் ஆக்ஞையிட்டிருப்பான். அவ்விதம், 16-ம் நூற்றாண்டின் கடைசியில் இங்கிலந்தில் அரசுபுரிந்த எலிஜபெத்மகாராணியார் இந்தியாவுடன் வர்த்தகம் செய்யும் உரிமையைக் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு அளித்தார். இதுபோலவே உரிமைப் பத்திரங்களைப் பெற்று, அமெரிக்காவில் குடியேறிய கூட்டத்தார் வர்த்தகர்களாக இருப்பதுடன் நிற்காமல் தங்களுடைய பொதுவான இராஜீய வியவகாரங்களையும் தாங்களே நிர்வகிக்கத் தொடங்கினர். அதாவது வர்த்தகக் கூட்டத்தார் இராஜீய சமூகமாக மாறிவிட்டனர்.

நாளடைவில் அவ்வர்த்தகக் கூட்டத்தார் தங்களுக்குள் இராஜீய சம்பந்தமான உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளலாயினர். தங்களை ஆண்டுவந்த அரசன் வெகு தூரத்திற்கப்பால் இங்கிலந்தில் இருந்ததை உத்தேசித்து அமெரிக்காவில் இருந்த இங்கிலீஷ்காரர்கள் தம்முடைய வியவகாரங்களைத் தாமே கவனிப்பது அவசியமாயிற்று. 17-ம் நூற்றாண்டில் இங்கிலந்தில் மதக் கொடுமையைப் பொறுக்க முடியாமல் அந்த தேசத்தை விட்டு வெளியேறிய

சில இங்கிலீஷ்காரர்களைப் பற்றி முன்பே கூறியுள்ளோம். அவர்கள் மேப்ளவர் என்ற கப்பலில் அமெரிக்காவுக்குப் பிரயாணமாயினர். மதவிஷயங்களில் தங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று தாய் நாட்டையும் விட்டு வெளியேறிய அவ்வீர புருஷர்கள் கப்பலிலேயே ஓர் உடன்படிக்கையைத் தயாரித்து அமெரிக்காவில் தாங்கள் நடந்து கொள்ளவேண்டிய முறையைத் தீர்மானித்தனர். அந்த உடன்படிக்கையும் ஓரளவுக்கு கான்ஸ்டிட்யூஷன் போன்றதேயாகும். 17-ம் நூற்றாண்டில் தாய்நாடாகிய இங்கிலந்துக்கும் அமெரிக்காவில் குடியேறியிருந்த இங்கிலீஷ்காரருக்கும் பலமான மனஸ்தாபம் ஏற்பட, அதிலிருந்து போர் விளைய, அதன் பயனாக அமெரிக்கர்கள் இங்கிலந்தின் ஆதிக்கத்தை உதறி எறிந்துவிட்டுத் தங்களுடைய சுயாட்சியை ஏற்படுத்திக் கொண்டனர்; பதின்மூன்று நாடுகள் ஒன்று சேர்ந்து ஓர் உடன்படிக்கையைச் செய்து அதன்மூலம் ஓர் ஐக்கிய அரசை ஸ்தாபித்தனர். அவ்வாறு எழுத்துமூலமான கான்ஸ்டிட்யூஷனை அமெரிக்காவே முதன் முதலில் பூர்த்தியாகத் தயாரித்தது.

6. எழுத்துமூலமாய் ஏற்பட்டதற்கும், அது இல்லாமல் ஏற்பட்டதற்கும் வித்தியாசம் இல்லை:—இங்கிலந்து எழுதப்படாத சட்டத்தைக்கொண்டே அரசியல் நடத்தி வருவதற்கு நேர்விரோதமாகஅமெரிக்காஎழுத்துமூலமான அரசை ஸ்தாபித்துக் கொண்டது. அரசியல் பத்திரத்தில் அவ்வரசைப்பற்றிய சகலமான விஷயங்களும் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. அப்பத்திரத்தில் கண்டபடியே அரசியல் நிர்வாகம் நடைபெறுகிறது. அதிலிருந்தே, அமெரிக்கா எழுதப்பட்ட பத்திரத்தின்படி அரசியல் நடத்துவது என்றுகுறிக்கப்படுகிறது. இந்தியாவும் எழுதப்பட்ட அரசியல் முறை

யையே அநுசரிக்கிறது. 1919-ம் வருஷத்திய மாண்டேகு செம்ஸ்போர்டு யாதாஸ்தின்படியும் அதை யொட்டித் தயாரிக்கப்பட்ட பார்லிமெண்ட் ஆக்ட்படியுமே நமது தற்கால அரசாங்கம் நடைபெறுகிறது. மேற்படி வித்தியாசங்களை வைத்துக்கொண்டு, நூலாசிரியர்கள் உலகத்திலுள்ள அரசுகளை இருவிதமாகப் பிரிப்பது வழக்கம். அதாவது ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள ஓர் அரசியல் பத்திரத்தின்படி அரசு செலுத்தும் தேசங்கள் ஒருவகை. அத்தகைய பத்திரங்களையொட்டி நடவாமல் புராதன அநுஷ்டானங்களைக் கொண்டு நடக்கும் அரசுகள் வேறுவகை. இங்ஙனம் வேற்றுமைப் படுத்துவது சில சமயங்களில் அர்த்தமற்றுப்போய் விடும். ஏனெனில் எந்த தேசத்தின் அரசியல் முறையும் முற்றிலும் எழுதப்படாமல் இல்லை. இங்கிலந்திலும் பார்லிமெண்ட் சபையைப் பற்றியும் ஓட்டுரிமையைப் பற்றியும் எத்தனையோ சட்டங்கள் இயற்றப்பட்டுச் சட்டபுஸ்தகத்தில் எழுதி வைக்கப் பட்டிருக்கின்றன. அங்ஙனமே எழுதப்பட்ட அரசியல் முறையைக் கொண்ட அமெரிக்காவிலும் எவ்வளவோ பழக்க வழக்கங்களும் அநுஷ்டானங்களும் தோன்றி நிலைத்துப்போயிருக்கின்றன. அரசியலைப் பற்றிய எல்லா விஷயங்களையும் காகிதத்தில் எழுதிவைப்பது எங்ஙனம் சாத்தியமாகும்? அரசியலை நடத்திவரும்பொழுது எத்தனையோ விஷயங்களும், சந்தேகங்களும் தோன்றிக் கொண்டேயிருக்கும். அவைகளை சமயத்திற்கேற்றபடி அர்த்தம் செய்துகொண்டு வழி காட்டவேண்டியது நிர்வாக உத்தியோகஸ்தர்களின் கடமையாகும். அரசியல் பத்திரத்தில் அவ்விஷயத்தைப் பற்றி பிரஸ்தாபம் செய்யவில்லை என்று கையைக் கட்டிக்கொண்டிருந்தால்காரியம் நடவாது. மேலும் அமெரிக்காவின் அரசியல் பத்திரம் பல ஆண்டு

களுக்கு முன் தயாரிக்கப்பட்டது; அதன் பின்னர் உலகில் எத்தனையோ மாறுதல்களும் சீர்திருத்தங்களும் தோன்றி யிருக்கின்றன. அவையெல்லாம் அமெரிக்காவின் அரசியல் முறையை எவ்வளவோ மாற்றி யமைத்திருக்கும். எனவே, அரசியல் பத்திரத்தில் உள்ள கொள்கைக்கும் அநுஷ்டா னத்திற்கும் வேற்றுமை இருக்கலாம். உதாரணமாக, நமது மாகாண சட்டசபையின் விதிகளில் சில ஸ்தானங்களுக்கு அங்கத்தினரை நியமனம் செய்யும் அதிகாரம் கவர்னருக்கு உண்டெனக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னின்னா ரைத்தான் நியமனம் செய்ய வேண்டுமென்று அங்கு குறிக்கப்படவில்லை. சமீபத்தில் நம் நாட்டுப் பெண்மக்க ளின் அபிப்பிராயத்திற்கிணங்கச் சென்னை சட்டசபை யில் ஒரு ஸ்திரீயை கவர்னர் நியமனம் செய்தார். அது சட்டபூர்வமான விதியல்லவானாலும், இனிப் பிற்காலத்தில் அதை எந்த கவர்னரும் மாற்றமாட்டார். சென்னை மாகாண துரைத்தனம், எழுதப்பட்ட அரசியல் முறையையே சேர்ந்ததாயினும், அது பழைய அநுஷ்டானங்களையும் பின்பற்ற வேண்டிய தவசியமாகும். இதிலிருந்து நாம் அறிவதென்ன? எழுதப்பட்ட அரசியலைக் கொண்டிருந் தாலும் எழுதப்படாத அரசியலைக் கொண்டிருந்தாலும், பூர்விக அநுஷ்டானங்களும் வழக்கங்களும் ஒவ்வொரு தேசத்திலும் இருந்தே வருகின்றன.

அரசியல் முறையை விவரித்துக் கூறும் தஸ்தாவேஜி ஒன்று இருந்தால் அரசாங்கத்தார் அக்கிரமமாக நடக்க வழி இராது என்று சிலர் கூறுவர். எழுத்து மூலமான ஆதாரத்தை மீறிச்செல்வது கஷ்டம்தான். அமெரிக்க அர சாங்கத்தார் இவ்விதத்தில் கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்ற னர். அங்குள்ள காங்கிரஸ் சட்டசபைக்கோ, அதிபதிக்கோ

அரசியல் பத்திரத்தை அதிக்கிரமித்துச் செல்லும் அதிகாரம் கிடையாது. ஆனல் எழுத்து மூலமான அரசியல் பத்திரம் இருந்தால் உடனே முற்றிலும் நியாயமான ஆட்சி ஏற்பட்டு விடுமெனக் கூறமுடியாது. இங்கிலந்தில் பூர்த்தியான எழுத்துமூலமான அரசியல் தஸ்தாவேஜி இருப்பதாகவும், அதன்படியே மந்திரிகள் வரம்புக்குட்பட்டு நடந்து கொள்வதாயும் வைத்துக் கொள்வோம். அந்த தஸ்தாவேஜியில் மந்திரிகள் மூன்று வருஷத்திற்குமேல் உத்தியோகம் வகிக்கக் கூடாதென்றும் கூறப்பட்டிருப்பதாக எண்ணிக் கொள்வோம். ஆனல் பிரிட்டிஷ் பார்லிமென்ட் சபை சர்வ வல்லமை யுடையதென்று முன்பு கூறினேம். அதற்கு எந்தச் சட்டத்தையும் இயற்றவும் தள்ளவும் அதிகாரம் உண்டு. மந்திரிகள் மூன்று வருஷம் மட்டுமே உத்தியோகம் வகிக்கவேண்டுமென்ற சட்டத்தை அதுமாற்றி உத்தியோக காலத்தை எட்டு வருஷமாகச் செய்துவிடலாம். இங்ஙனம், வெகு சுலபத்தில் அரசிய லமைப்பையே மாற்றும் வசதி இங்கிலந்தில் உண்டு. இத்தகைய அரசியல் முறைகள் சுலபத்தில் வளைந்துகொடுக்கக்கூடியவை என்றுகுறிக்கப்படும். அமெரிக்காவின் அரசியல் முறையோ சுலபத்தில் வளைந்து கொடுக்காது. அது இறுகலான அரசியல் முறையாகும். அரசியல் முறையின் ஒரு சிறு அம்சத்தையேனும் மாற்றுவ தென்றல் அங்கு பகீரதப் பிரயத்தனம் செய்தாக வேண்டும். ஜனப்பிரதிநிதிசபையான காங்கிரஸிஞலும் அதைச்செய்ய முடியாது. காங்கிரஸ் சபையும், ஐக்கிய அரசாங்கத்தில் அடங்கியுள்ள பல தேசங்களாலும் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதிகளும் ஒன்று சேர்ந்தே அதை மாற்றி யமைக்க வேண்டும். இக்கூட்டு சபையில் பெரும்பான்மையோர் அதற்குச் சாதகமாக இருக்கவேண்டும்.

இங்கிலந்திலோ சாதாரண சட்டசபையான பார்லிமென்டுக்கே அந்த அதிகாரம் உண்டு. நாட்டில் ஏதோ கிளர்ச்சி தோன்ற, அதை யடக்கும் பொருட்டுப் புதிய சட்டங்கள் நிறைவேற்றுவதென்றாலும், மந்திரிகளின் அதிகாரத்தை அதிகப்படுத்த வேண்டுமானாலும், குறைக்கவேண்டுமானாலும், இங்கிலந்தில் அது ஒரு நிமிஷத்தில் நிறைவேறி விடும். அமெரிக்காவிலோ கூட்டுச் சபை எனப்படும் அப்பெரும் இயந்திரத்தைத் தட்டிக்கிளப்ப வேண்டும். அது மகாஅபாரமானவேலையாதலால் அந்தத்தேரைச்சிங்காரித்து ஓட்டிநிலைக்குக் கொண்டுவருவதற்குள் பட்டணம் கொள்ளை போனாலும் போய்விடும். எனவே அது அவசரத்திற்கு உதாவது போனாலும் போகும். அவசரத்தில் சுறுசுறுப்பாக வேலைசெய்யும் வசதியை 'வளையக்கூடிய' அரசியல் முறையிலேயே காணலாமானாலும், அந்த வசதியினால் கேடு விளையவும் இடமுண்டு. பார்லிமென்ட் சபையார் ஏதோ பெரும் அபாய சமயத்தில் பயவெறிகொண்டு தேசத்திற்கு நாளடைவில் கெடுதல் விளைவிக்கக்கூடிய ஒரு சட்டத்தை வெகு துடியாக இயற்றிவிடலாம். ஆதலால் எழுத்துமூலமான அரசியல் முறையைப் பெற்றுவிட்டால் துரைத்தனத்தார் அதிக்கிரமமாக நடந்து கொள்ளமாட்டார்கள் எனப் பொதுவாகக் கூறமுடியாது.

மேலும் அமெரிக்காவில் பிரஜைகளின் உரிமைகள் வேறு ஒரு விதத்தில் காக்கப்படுகின்றன. காங்கிரஸ் சபையாரோ அல்லது அதிபதியோ தங்களுடைய நியாயமான வரம்பைமீறிப் போய்விட்டால்அமெரிக்காவின ஹைகோர்ட்டார் அவர்களைக் கண்டிக்கலாம். உதாரணமாக, அரசாங்கத்தார் எற்றுமதித் தீர்வையையே விதிக்கக்கூடாது என்று அரசியல் தஸ்தாவேஜியில் தெளிவாகக் கூறியிருந்தாலும்,

துரைத்தனத்தார் அவ்வரியை விதித்தால், பிரஜைகளோ அல்லது அவ்வரியினுல் பாதிக்கப்படுவோர்களோ நியாயஸ்தலங்களின் மூலம் அவ்வரியைத் தள்ளுபடிசெய்துகொண்டு விடலாம். அதாவது அமெரிக்க அரசாங்கத்தாரையும் சிக்ஷிக்கும் உரிமை அந்த நியாயஸ்தலத்திற்கு உண்டு. இது அரசியல் பத்திரத்திலேயே தெளிவாக எழுதப்பட்டிருப்பதாகையால், அமெரிக்கர்களின் சுதந்திரத்திற்கும் சுயேச்சைக்கும் எவ்வித ஹானியும் ஏற்படுவதில்லை. ஆனுல் எல்லா தேசங்களிலும் நியாயஸ்தலத்தாருக்கு அவ்வித அதிகாரம் கிடையாது. இங்கிலந்து தேச பார்லிமென்ட் சபையினர் அக்கிரமமான ஒரு சட்டமியற்றினுலும் எந்த நியாயஸ்தலத்தாரும் அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள இயலாது. எனவே, உலகத்திலுள்ள அரசுகளை எழுத்து மூலமான பத்திரங்களினுல் உண்டானவை என்றும் அவை இல்லாதவை என்றும் பிரிப்பது உண்மையான வேற்றுமையாகாது. ஏனெனில் (1) எந்த தேசத்தின் அரசியலும் அடியோடு எழுதப்பட்டிருக்கவில்லை; எந்த அரசியலும் அடியோடு எழுதப்படாமலும் இல்லை. (2) எழுத்து மூலமான அரசைப் பெற்றிருந்தாலும் அதனுடைய பல முக்கிய அம்சங்கள் சாலக்கிரமத்தில் மாறுதலடையலாம்.

7. பத்திரங்களின் வரம்பு:—அரசியல் பத்திரத்தில் மூன்று விஷயங்களைப்பற்றி ஆராயவேண்டும். (1) அரசினுடைய அதிகார எல்லை (2) ஆளப்படும் ஜனங்களின் உரிமை (3) அரசுக்கும் பிரஜைகளுக்கும் உள்ள சம்பந்தம். சில தேசப் பத்திரங்களில் இம்மூன்று விஷயங்களுக்கு மதிகமான சில்லரைச் சங்கதிகளும் காணப்படும். சில அரசியல் பத்திரஙகள் நீண்டும் மற்றும் சில சுருக்கமாயும் இருக்கும்.

'அரசியல் ஸ்தாபனச்சட்டம்' என்றால் என்ன என்பதற்கு ஒரு தேசத்தினுடைய எழுத்துமூலமான அரசியல் பத்திரத்தில் காணப்படும் தீர்மானங்களே என்று சிலர் விடை கூறுவர். அங்ஙனமாயின் எழுத்துமூலமாக இன்றி அநுஷ்டானத்தில் இருந்துவரும் விதிகளை என்னவெனக் கூறுவது எனச் சிலர் கேட்பர். ஆதலால் பொதுவாக அரசியல் நிர்வாக சம்பந்தமான எழுத்து மூலமான சட்டங்களும் அநுஷ்டானங்களும் 'அரசியல் ஸ்தாபனச் சட்ட' மெனவே கருதப்பட வேண்டும்.

8. அரசியல் திருத்தம்:—ஒரு தேசத்தினுடைய தற்கால அரசியல் முறையை மாற்றி யமைப்பது எப்படியென கவனிப்போம். இந்தியாவில் இப்பொழுது நடந்துவரும் அரசியலை மாற்றுவது இங்கிலந்திலுள்ள பார்லிமேன்டாரால்தான் முடியும். பார்லிமென்டார் ஒரு சட்டமியற்றி விடுவதே போதுமானது. அப்படியே இங்கிலந்தின் அரசை மாற்றுவதும் அதன் கையிலேயே இருக்கிறது. இது நிரம்பவும் சுலபமான வழி; ஆனால் மற்ற எல்லா தேசங்களிலும் இது இவ்வளவு சுலபமாக இராது. அரசிய லமைப்பையே மாற்றிவிடும் அதிகாரத்தை சட்ட சபைகளுக்குக் கொடுத்துவிட்டால் கடைசியில் அவைகள் அவசரப்பட்டுக் காரியம் செய்து குடியையே கவிழ்த்து விடுமெனச் சிலர் அஞ்சி, அரசியலமைப்பை மாற்றும் முறையை சிறிது கடினமானதாகச் செய்து வைத்திருக்கின்றனர். பி/ரான்ஸ் தேசத்தில் சட்ட சபைகளுக்குத் தனியாக இவ்வதிகாரம் கிடையாது. ஆனால் பொது ஜனப் பிரதிநிதிகளடங்கிய கீழ்ச் சபையும், பிரபுக்களும் கனவான்களும் நிறைந்த மேல் சபையும் ஒன்றுகூடி ஒரு தேசீயக் கூட்டமாக மாறி, அதில் தீர்மானத்தை நிறை

வேற்றி, அதனுல் அரசியலை மாற்றவேண்டும். அதுவும் சுலபமான வழியேயாகும். அமெரிக்காவிலோ இம்முறை மிகக் கடினமானது. சட்ட சபைகளில் பெரும்பான்மையோரும், ஐக்கிய அரசாங்கத்தில் அடங்கியிருக்கும் பல சிறிய அரசுகளில் அதிகப்படியான அரசுகளும் ஏகோபித்து ஒரு தீர்மானம் செய்தால்தான் அமெரிக்காவின் அரசியலில் திருத்தம் செய்யலாம். சில தேசத்தில் அரசியல் சீர் திருத்தம் செய்ய வேண்டுமென்ற கிளர்ச்சியுண்டானுல், சட்ட சபையைக் கலைத்துவிட்டு அந்தக் காரணம்பற்றியே புதுத் தேர்தல் நடைபெறும்படி உத்தரவிடுவார்கள். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து வருவார்களென்பது அதன் கருத்து. ஸ்விட்ஜர்லந்து போன்ற சில சிறு தேசங்களில் சட்ட சபையினர் அரசியல் திருத்தத் தீர்மானத்தை நிறைவேற்றியபின் அதைப் பொது ஜனங்களின் ஓட்டுக்கும் விடுவது வழக்கம். ஆஸ்திரேலியாவிலும் இம்முறை அநுஷ்டிக்கப்படுகிறது. அவ்வழக்கத்தை இந்தியா போன்ற பெரிய தேசங்களில் அநுசரிப்பது கடினம். சிறு தேசங்களில் அவ்வழியைப் பின்பற்றினுல் அங்கு பூர்ணமான ஜனநாயக ஆட்சி நடப்பதாகக் கூறலாம்.

8-வது அதிகாரம்

அரசியல் அதிகாரப் பிரிவினை.

(1) துரைத்தன நிர்வாகம், சட்ட நிர்மாணம், நீதிசெலுத்துதல்:—சென்ற எழு அத்தியாயங்களில் அரசியல் தத்துவத்தைப் பற்றிய பொதுவான விஷயங்களைக் கூறிவந்தோம். அரசின் முக்கியமான இலக்ஷணங்கள், அதன் உற்பத்தி, அதன் அதிகாரம், அதன் வடிவம், பிரஜைகளின் உரிமை, பலதேச சம்பந்தங்கள் முதலியவற்றை ஆராய்ந்தோம். இனி அரசியலை உண்மையில் நிர்வகிக்கும் துரைத்தனத்தின் இயற்கையை நாம் கவனிக்கவேண்டும். சென்னை துரைத்தனத்தை நாம் உதாரணமாக எடுத்துக்கொண்டால், அதில் பல பாகங்கள் இருக்கின்றன. முதன் முதலாக சட்டசபை யிருக்கிறது; அதாவது நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், நியமனம் செய்யப்பட்டவர்களும் அடங்கிய சபை; இரண்டாவதாக, துரைத்தன நிர்வாகஸ்தர்கள், அதாவது கவர்னர், சட்டமெம்பர், ரெவினியூ மெம்பர், உள்நாட்டு மெம்பர், மூன்று மந்திரிகள் ஆகியோரும், அவர்களின் கீழுள்ள சிப்பந்திகளும் சேர்ந்தவர்கள். மூன்றாவதாக, நீதிசெலுத்தும் நியாயாதிபதிகள். இங்ஙனமே இந்திய துரைத்தனத்தையும் பிரிக்கலாம். ஆனால் சென்னை முதலிய மாகாணங்களில் ஒரேயொரு சட்டசபைதானுண்டு; இந்திய துரைத்தனத்திலோ இரண்டு சபைகள் இருக்கின்றன; (Legislative Assembly லெஜிஸ்லேடிவ் அஸ்ஸெம்஬ிளி யெனப்படும்) இந்தியா சட்டசபை; (Council of State கவுன்ஸில் ஆப்/²ஸ்டேட் எனப்படும்) இராஜாங்க சபை ஆக இரண்டு சபைகள் இருக்கின்றன. இக்காலத்தில் எந்த அரசும் மூன்றுவிதமான காரியங்களைச் செய்ய

வேண்டும். முதலாக, சட்டமியற்ற வேண்டும், இரண்டாவது, அச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து நிர்வாகம் நடத்தவேண்டும், மூன்றாவது, அச்சட்டத்தை மீறுவோரை விசாரித்துத் தண்டிக்க வேண்டும். சட்டசபை அங்கத்தினரும், நிர்வாக உத்தியோகஸ்தரும், நியாயாதிபதியும் வெவ்வேறான வேலைகளைச் செய்ய வேண்டும். முன் காலங்களில் அரசனே சகலவிதமான காரியங்களையும் நேராக நடத்தி வந்தமையால், சட்டத்தைச் செய்யும் சபையொன்று அப்பொழுது அவசியமாகத் தோன்றவில்லை. அரசனே சட்டசபையின் வேலையையும் நீதிபதியின் வேலையையும் நிர்வாக வேலையையும் செய்துவந்தான். இக்காலத்திலோ ஜனநாயக ஆட்சி பரவிவிட்டதாகையால், ஜனப்பிரதிநிதிகளடங்கிய சட்டசபைக்கே சட்டமியற்றும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடமையே மிகவும் முக்கியமானதாகும். சட்டசபை நிறைவேற்றிய தீர்மானங்களை யொட்டியே அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நிர்வாகம் நடத்தவேண்டும். ஆதலால் அரசின் பல பாகங்களில் சட்டசபையே முதன்மை ஸ்தானமும் அதிகமான அதிகாரத்தையும் கொண்டதெனச் சிலர் கூறுவர். "ஒவ்வொரு சுதந்திரமான அரசிலும் சட்டமியற்றும் அதிகாரமே மிக உத்தமமாயும் மேலோங்கி நிற்பதாயும் இருக்கிறது" என்று ஜட்ஜ் ஸ்டோரி எழுதியிருக்கிறார். நிர்வாக உத்தியோகஸ்தர்கள் சட்டசபைக்கு அடுத்தபடியே யாகின்றனர் என்பது ஓரளவு உண்மையே யானாலும், நிர்வாக உத்தியோகஸ்தர்களுடைய கடமைகளே நிரம்பவும் முக்கியமானவை. சட்டசபையார், சட்டத்தை எவ்வளவு தெளிவாகச் செய்து கொடுத்தாலும், அதை நிறைவேற்றுவதே மிகவும் கடினமான வேலை. அவ்வேலை நிர்வாகஸ்த

மையே சேர்ந்தது. அவர்கள் தங்களுடைய சுய விவேகத்தின் படியே சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் வருமானம் உடையவர்களுக்கு வருமானவரி விதிக்கலாமென்று சட்டசபை சட்டமியற்றி இருக்கிறது. ஆனால் இன்னின்னாருக்கு அந்த வருமானம் வருகிறது என்பதைக் கண்டுபிடித்து வரியை விதிப்பவர்கள் நிர்வாக உத்தியோகஸ்தர்களே. அக்காரியங்களையெல்லாம் சட்டசபை யங்கத்தினர்கள் கவனிக்க இயலாது. அடிப்படையான கொள்கைகளை மட்டும் அவர்கள் நிர்ணயம் செய்யலாம். மேலும், யுத்தம் நேரும் பொழுதும், அன்னிய நாடுகளுடன் உறவாடும்பொழுதும் நிர்வாகஸ்தர் தமது யுக்திப்படியே நடந்துகொள்ள வேண்டும்; சட்டசபை அவர்களுக்கு வழிகாட்டாது. சேனை, கப்பற்படை, போலீஸ் ஆகிய இலாகாக்களெல்லாம் நிர்வாகஸ்தருக்கே உள்பட்டவை. பிரஜைகள் தினந்தோறும் நிர்வாக உத்தியோகஸ்தர்களிடமே வரியைப்பற்றியும் மற்ற அரசியல் சம்பந்தமான காரியங்களைப் பற்றியும் வாதாடவேண்டியிருக்கிறது. சட்டசபை வருஷத்திற்கு ஐந்தாறு தடவைகள் கூடிக் கலைந்து விடுகிறது. நிர்வாஸ்தர்களோ என்றும் ஸ்திரமாக இருந்து வருகிறார்கள். சென்னை சட்டசபை அங்கத்தினர்கள் ஏறக்குறைய 120 பேர்களேயாவர். ஆனால் நிர்வாக சபையில் ஏழுபேர்களே இருக்கின்றனரானாலும், அவர்களுடைய காரியதரிசிகளையும், பல இலாகாக்களின் தலைவர்களையும், அவர்களுக்குள் அடங்கியுள்ள மற்ற உத்தியோகஸ்தர்களையும் கணக்கெடுத்தால், அது பெரிய சமுத்திரமா யிருக்கும். சட்டசபைக்கு மூலாதாரமான சகல அதிகாரமு மிருக்கிறதானாலும், அரசியலில் ஈடுபட்டு துரைத்தனத் தேரை ஓட்டுகிறவர்கள் நிர்வாகஸ்தர்களே. சட்ட சபையாரோ, நிர்வாகஸ்தர்களோ அதிக்கிரமமாக

நடந்துகொண்டால், அவைகளைச் சரிப்படுத்தவே நீதிபதிகள் இருக்கின்றனர்.

2. **அதிகாரப் பிரிவினையைக் குறித்த சித்தாந்தங்கள்:—** துரைத்தனக் காரியத்தை இப்படி மூன்றாக ஏன் பிரிக்க வேண்டும்? ஒரு சபையாரே சட்டத்தையும் செய்து அதை நிறைவேற்றுவதும் ஏன் கூடாது? சட்டசபை, நிர்வாகஸ்தர், நீதிஸ்தலம் ஆகிய மூன்றும் சமமான அந்தஸ்துடனும் ஒன்றிற்கொன்று கீழ்ப்படியாமலும் ஏன் இருக்கவேண்டும்? ஆகிய விஷயங்களை நாம் ஆராயவேண்டும். பதினெட்டாவது நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்தில் இவ்வித அதிகாரப் பிரிவினைக்கொள்கைபிரபலமாயிற்று. அதாவதுசட்டமியற்றுவதும், நிர்வாகம் நடத்துவதும், நீதி செலுத்துவதும் தனித்தனியாக மூவர் கையிலேயே இருக்கவேண்டும், அம்மூவரும் சமமான அந்தஸ்துடன் ஒருவருக்கொருவர் கீழ்ப்படாதவர்களாக இருந்து வேலைசெய்ய வேண்டுமென்பதே அச் சித்தாந்தம். அப்படி இருந்தாலன்றி அரசாட்சி கிரமமாக நடைபெறுதென்பது அக்கொள்கையை ஆதரிப்பவர்களின் அபிப்பிராயம். மான்டேஸ்க்யூ என்ற நிபுணர் அக்கொள்கையை மிகவும் நன்றாக வற்புறுத்திப் பிரசித்தப்படுத்தியிருக்கிறார். அவர் பின்வருமாறு வாதம் செய்கிறார். "சட்டமியற்றும்அதிகாரமும் நிர்வாகஅதிகாரமும்ஒரே மனிதனிடமோ அல்லது ஒரே சபையினிடமோ இருந்தால், நாட்டின் சுதந்திரமே அழிந்துபோம்; ஏனெனில் இரண்டு அதிகாரங்களையும் பெற்ற மனிதனோ சபையோ அக்கிரமமான சட்டங்களை இயற்றியும் அவைகளையே கொடுமையாக நிறைவேற்றியும் வரலாம். அவ்விதமே, சட்டசபை, நிர்வாகசபை இரண்டின் கையிலும் அகப்படாமல், நீதிபதி தனித்து நின்றாலன்றி, பிரஜைகளின் சுதந்திரத்திற்கு பங்கம் ஏற்படு

விடும். நீதிசெலுத்தும் நியாயாதிபதிகள் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்ருல் பிரஜைகளுடைய உயிரும் சுதந்திரமும் கட்டுப்பாடில்லாத அதிகாரிகளின் வசம் போய்ச் சேர்ந்துவிடும். ஏனெனில் நீதி செலுத்துவோனே சட்டமியற்றுகிருன். நீதிபதிகள் நிர்வாக அதிகாரத்தைப் பெற்ருல் அது கொடுங்கோன்மைக்கு இடமளிக்கும்'' என்று ஷை நூலாசிரியர் எழுதியிருக்கிருர்.

ஷை கருத்தையே இங்கிலந்து தேசச் சட்ட நிபுணரான விளாக்ஸ்டன் என்பவர், "கொடுங்கோன்மை செலுத்தும் துரைத்தனங்கள் எல்லாவற்றிலும், சட்டமியற்றி அதை நிறைவேற்றி வைக்கும் உயர்ந்த அதிகாரம் ஒரே மனிதனிடம், அல்லது, ஒரே தொகுதியினரிடம் இருக்கிறது. அதனுலேயே அங்கு பிரஜா சுதந்திரம் இல்லை'' என்று தெரிவித்திருக்கிருர். மான்டேஸ்க்யூ, விளாக்ஸ்டன் என்ற இரு ஆசிரியர்களும் 18-வது நூற்ருண்டில் இங்கிலந்தின் துரைத்தன அமைப்பை ஆதாரமாகக் கொண்டே தங்களுடைய கொள்கையை நிர்த்தாரணம் செய்தனர். இப்பொழுது இங்கிலந்தில் பார்லிமென்டினுடைய அங்கத்தினரில் சிலரே மந்திரி சபையாக அமைந்து அரசியல் நிர்வாகத்தை நடத்திவரும் வழக்கம் அப்பொழுது தெளிவுபடாமல் ஆரம்ப நிலையிலேயே இருந்தது. மான்டேஸ்க்யூவின் காலத்தில் இங்கிலந்தில் மந்திரிசபை ஒரே ஒற்றுமையான தொகுதியாக இல்லை; மந்திரிகள் எல்லோரும் ஒரே காலத்தில் உத்தியோகம் வகித்து ஒரே காலத்தில் கூட்டமாக வெளியேறும் முறையும் அப்பொழுது ஸ்திரப்படவில்லை. இப்பொழுது அவைகள் மாறிப்போயின. காபினட் என்ற முறை நிலைத்துவிட்டது; அதாவது, சட்டமியற்றுவதான பார்லிமென்ட் சபையில் ஒரு

சிலரே நிர்வாக வேலையைச் செய்துவருகின்றனர். ஆனால் மான்டேஸ்க்யூ தமது காலத்தில் இங்கிலந்திலேயே அதிகாரப்பிரிவினை முறை பூர்த்தியாக ஏற்பட்டிருந்தது என்று எண்ணினர். அரசரும், பார்லிமென்ட் சபையும், நியாயாதிபதிகளும், கூடியவரையில், ஒருவர் மற்றவருடைய ஆதிக்கத்திற்குட்படாமல் இருந்து வந்ததை அவர் கண்டார். ப்ளாக்ஸ்டன் என்பவரோ சட்ட நிபுணராதலால் அவர் சட்டத்தின் வழியாகவே விஷயங்களை ஆராய்ந்தார். இப்பொழுதும்கூட இங்கிலந்தின் மந்திரிகள் சட்டப்படி அரசருடைய சேவகர்களேயாவர். ஷை மந்திரிகள் பார்லிமென்டின் அங்கத்தினராகவே இருப்பதும், அவர்களுக்குள் ஒற்றுமை இருப்பது காலக்கிரமத்தில் அநுபவ பூர்வமாக நிலைத்து வந்தவைகளேயன்றி, சட்டபூர்வமாக உண்டானவையல்ல. ஆதலால் இங்கிலந்தில் சட்டசபை, நிர்வாகம், நீதிபரிபாலனம் ஆகிய மூன்றும் தனித்தனியாக இருப்பதாகவே ப்ளாக்ஸ்டன் கருதினர்.

(3) ஷை கொள்கை அமெரிக்காவிலும், பி/2ரான்ஸிலும் பரவியவிதம்:—இவ்விதம் மான்டேஸ்க்யூ சித்தாந்தப்படுத்திய கொள்கையைப் பதினெட்டாவது நூற்றாண்டில் இராஜீய நூலாசிரியர்கள் நிரம்பவும் கொண்டாடி வந்தார்கள். முக்கியமாக அமெரிக்காவில் பல அரசுகள் அந்தக் கொள்கையை அநுஷ்டானத்தில் பின்பற்றலாயின. கூடியவரையில் அவைகள் சட்டமியற்றும் அதிகாரமும், நிர்வாக அதிகாரமும், நீதிசெலுத்தும் அதிகாரமும் ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாதவர்களிடம் அளிக்கப்பட்டுவிட்டன. அமெரிக்காவில் உள்ள சிறு அரசுகளில் சட்டசபை யங்கத்தினரை ஜனங்கள் தேர்ந்தெடுப்பது போலவே, நிர்வாக அதிகாரியான கவர்னரையும் ஜனங்களே தேர்ந்தெடுக்கின்றனர்.

சட்டசபையைக் கலைக்கும் அதிகாரம் கவர்னருக்குக் கிடையாது. உதாரணமாக, 1780-ம் வருஷத்தில் மஸ்ஸாசூஸெட்ஸ் என்ற நாட்டின் துரைத்தன அமைப்புப் பத்திரத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது: "இந்த நாட்டு துரைத்தனத்தில் சட்ட இலாகா ஒருகாலும் நிர்வாக வேலையையோ, நீதி வேலையையோ செய்யக் கூடாது; அவ்விதமே நீதி இலாகா ஒருபொழுதும் சட்டமியற்றும் அதிகாரத்தையும் செலுத்தக்கூடாது. அவ்விதம் செய்வதன் நோக்கம், துரைத்தனம் சட்டங்களை யொட்டி நடப்பதாக இருக்கவேண்டுமேயன்றி சில மனிதருடைய துரைத்தனமாயிருத்தல் கூடாது என்பதுதான்." என்று எழுதப்பட்டிருக்கிறது. இதே கொள்கையையே அமெரிக்க ஐக்கிய சர்க்கார் அமைப்பிலும் பின்பற்றப்பட்டிருக்கிறது. அக் கொள்கையைத் தாங்கி எழுதியுள்ள ஹாமில்டன் முதலான சில நூலாசிரியர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள். "சட்டமியற்றுவது, சட்டத்தை நிறைவேற்றுவது, நீதி செலுத்துவது என்ற அதிகாரங்கள் சிறு தொகுதியினரிடமோ அல்லது பெருந்தொகுதியினரிடமோ அளிக்கப்பட்டால், (அத்தொகுதியினர் பரம்பரையாக அதிகாரம் வகித்தாலும் அல்லது அதிகாரத்தைத் தாமே அபகரித்துக் கொண்டாலும் அல்லது பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டாலும், எவ்விதமானாலும் சரியே,) அதுவே கொடுங்கோன்மை என்ற சொல்லின் தெளிவான விளக்கமாகும்." என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்விதம் அதிகாரத்தை மூவரிடம் பிரித்து வைத்தால்தான், பொது ஜன உரிமைகளைப் பாதுகாக்கலாமென்பது அவர்களுடைய நம்பிக்கை. உதாரணமாக, ஒரு வீட்டை ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வரும்படி மூன்று தனித்தனியான காவலாளி

களை ஏற்படுத்தி வைத்து விட்டால், ஒவ்வொருவனும் மற்ற இருவரும் துரோகம் செய்யாதபடி பார்த்துக் கொள் வான். ஒருவனே காவலாளியா யிருந்தால், அவன் வீட்டு சாமான்களைத் திருடிவிடலாம். மூவர் இருக்கும் பொழுதோ, மற்ற இருவரிடமுள்ள பயத்தினால், எவனும் தவறான வழியில் செல்ல அஞ்சுவான். எவனும் தனது அதிகாரத்தையும் அந்தஸ்தையும் மற்றவன் அபகரிக்க விடவும் மாட்டான். முடிவில் வீடு நன்றாகப் பாதுகாக்கப் படும். அவ்விதமே அரசாங்கமென்னும் வீட்டை ஜாக்கி ரதையாகக் காப்பாற்ற வேண்டுமானால், பரஸ்பர அபி மானமற்ற மூன்று தனித்தனியான அதிகாரிகள் இருப் பது அவசியமாகும். மற்றவர்கள் தவறு செய்கின்றனரா என்பதை ஒவ்வொருவனும் இமைகொட்டாமல் கவனித் துக் கொண்டிருப்பான்; தவறு நடக்குமானால், உடனே அவன் பொது மக்களிடம் அதை வெளியிட்டு விடுவான்.

காகிதத்தில் வரையும்பொழுது மான்டேஸ்க்யூவி னுடைய அரசியலதிகாரப் பிரிவினைக் கொள்கை மிக அழ காகவே இருந்தாலும், அதை அநுபவத்தில் பரிபூரண மாக நடத்திக் காட்டுவது நிரம்பவும் துர்லபமானது. அங் ஙனம் அதைப் பரிபூரணமாக அநுஷ்டிக்க வேண்டுமானால் அரசியலைப் பின்வருமாறு அமைக்கவேண்டும்; (1) ஜனங்க ளால் நேராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாலான சட்டசபை (2) ஜனங்களால் நியமிக்கப்படும் நிர்வாகஸ்தர் கள். (இவர்களை நியமிப்பதோ உத்தியோகத்தை விட்டுத் துரத்துவதோ சட்ட சபையின் வசத்தில் இருக்கக் கூடாது.) (3) ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நியாயாதி பதிகள். (இவர்களுடைய சம்பளமோ உத்தியோக காலமோ ஜனங்களால் தீர்மானிக்கப்பட வேண்டுமே யல்லாது நிர்

வாக சபையினர் கையில் இருக்கக்கூடாது.) இவ்வழியில் ஒரு துரைத்தனத்தை அமைத்துக் கொண்டாலும், அதிலும் ஏராளமான துன்பங்கள் நேருவது நிச்சயம். நிர்வாக சபை யங்கத்தினரொருவர் உத்தியோக விஷயமான தவறைச் செய்வதாக வைத்துக் கொள்வோம். இந்த அதிகாரியை நியாயாதிபதிகள் தண்டிப்பதா, கூடாதா என்ற கேள்வி உண்டாகும். நியாயாதிபதிகள் அவனை தண்டித்தால் நீதி செலுத்துவோர் உயர்ந்தவரென்றும் நிர்வாகஸ்தர் தாழ்ந்தவரென்றும் ஆய்விடுவர். அவனை தண்டிக்காவிட்டாலோ பிரஜைகளின்சுதந்திரத்திற்குத்தீங்கு வந்துவிடும். இந்தச் சிக்கலான விஷயத்தைப் பல தேசங்களில் பலவிதமாகத் தீர்த்திருக்கின்றனர். சில இடங்களில் தவறு செய்யும் உத்தியோகஸ்தனை தண்டிக்கும் அதிகாரம் நியாயாதிபதிக்கு உண்டு; சில இடத்தில் இல்லை. முதலில் கூறியபடியானல், அரசின் மூன்று பாகங்களுடைய சம அந்தஸ்து வெறும்பேச்சாகவே ஆய்விடுகிறது; இரண்டாவது கூறியபடியானல், பிரஜைகளின் உரிமை காக்கப் படுவதில்லை. மேலும் நிர்வாகஸ்தர் நிறைவேற்றும் சட்டமும், நியாயாதிபதிகள்நீதிசெலுத்த உபயோகிக்கும் சட்டமும்,சட்டசபையாரால் உற்பத்தி செய்யப்பட்டவைகளே. அப்படியானல் நிர்வாகஸ்தரும் நீதிபதிகளும் சட்டசபைக்கு உட்பட்டவர்கள் ஆய்விடுகின்றனர். சட்டசபை ஒரு கொடுமையான சட்டத்தை இயற்றினுலும், நிர்வாகஸ்தர் அதை அங்கீகரித்தே அதன்படி காரியத்தை நடத்தவேண்டும். நீதிபதிகள் அதையொட்டியே நீதி செலுத்தவேண்டும். சட்டசபை செய்தது தவறெனக் கண்டிக்கும் அதிகாரம் மற்ற இருவகுப்பாருக்கும் இல்லை.

(4) தற்கால அரசுகளில் ஷை கொள்கை அநுஷ்டிக்கப்படும் வரம்பு:—எனவே மான்டேஸ்க்யூவினுடைய கொள்கையைப் பூர்த்தியாக அநுஷ்டிப்பது அசாத்தியமானதென்பதைப் பத்தொன்பதாம் நூற்றுண்டில் எல்லோரும் கண்டு கொண்டனர். இங்கிலந்து தேசத்திலேயே ஜன சுதந்திரம் பொங்கி வழிகிறதென எல்லோரும் பறைசாற்றுகின்றனர். மான்டேஸ்க்யூவும் கூட இங்கிலந்தின் அரசியல் முறையைக் கண்டு வெகுவாக அதை சிலாகித்துக் கொண்டதை முன்பே கூறியுள்ளோம். ஆனல் இங்கிலந்தில் சட்டமியற்றும் அதிகாரமும் நிர்வாக அதிகாரமும் ஒரே சபையினர் கையிலேயே இருந்து வருகின்றன. அதாவது காபினட் எனப்படும் மந்திரி சபையாரே சட்டமும் இயற்றுகிறுர்கள்; அவைகளை நிறைவேற்றி நிர்வாகம் நடத்துகிறவர்களும் அவர்களே. அதனல் இங்கிலந்தில் பிரஜா சுதந்திரம் அற்றுப்போய் விட்டதெனக் கூறமுடியுமா? இருபதின்மர் அடங்கிய ஷை மந்திரிசபையார் பார்லிமென்டின் அங்கத்தினரே யாவர். அவர்களுடைய கக்ஷியே பார்லிமென்டின் பெரும்பாலோரான அங்கத்தினர்களைக் கொண்டது. அந்தக் கக்ஷியினர் அதிகமான ஸ்தானங்களைப் பெற்றிருப்பதால் எந்தச் சட்டத்தை வேண்டுமாலும் அவர்கள் இயற்றி நிறைவேற்றி விடலாம். மந்திரிமார் கொண்டு வரும் சட்டம் ஒப்புக் கொள்ளப்படாமல் போனல் அவர்களுடைய கக்ஷியினரே அதை ஒப்புக்கொள்ளவில்லையென்பதும், அவர்கள் செய்யும் காரியத்தில் அவர்களுடைய கக்ஷியாருக்கே நம்பிக்கை இல்லையென்பதும் தெரிந்து போகின்றனவாதலால், உடனே மந்திரி சபையார் இராஜிநாமாச் செய்து விடவேண்டும். அதாவது ப்ரிட்டிஷ் மந்திரி சபையார் பூர்த்தியாகப் பார்லிமேன்டின் ஆதரவை நம்பியேவேலை

பார்க்கிறார்கள், சட்டசபை அவர்களை ஆக்கவும் ஆக்கலாம், அழிக்கவும் அழிக்கலாம். இது மான்டெஸ்க்யூவினுடைய கொள்கைக்கு நேர்விரோதமானது. நிர்வாகஸ்தர் எவ்விதத்திலும் சட்ட சபையின் வசப்பட்டிருக்கக் கூடாது என்பது அவருடைய கொள்கை. இங்கிலந்திலோ சட்ட சபையின் ஒரு பாகமான சிலரே நிர்வாக சபையினராய் மாறிச் சட்ட சபையின் அபிப்பிராயத்தை அநுசரித்துக் காரியங்களை நடத்திக்கொண்டு போகின்றனர். அந்த ஏற்பாடு வெகு நன்றாக நடந்துவருகிறது. ஆனால் இங்கிலந்திலுள்ள நியாயாதிபதிகள் சுயேச்சையானவர்கள்; அவர்களை ஆக்கவும் அழிக்கவும் சட்ட சபையினரால் சுலபத்தில் முடியாது. எதுவரை நியாயாதிபதிகள் நன்னடக்கையுடனிருக்கின்றனரோ அதுவரை அவர்களுக்கு உத்தியோகம் இருப்பது நிச்சயம். இவ்விதம் மான்டெஸ்க்யூவினுடைய கொள்கைக்கு ஆதாரமிருந்த இங்கிலந்திலேயே அக்கொள்கை நியாயாதிபதிகளைப் பொருத்தமட்டிலேயே அநுஷ்டிக்கப்படுகிறது. சட்ட சபைக்கும் நிர்வாகஸ்தருக்கும் உள்ள சம்பந்தம் அக்கொள்கைக்கு நேர்விரோதமாக இருக்கிறது.

பி/2ரான்ஸ் தேசத்திலும் மான்டெஸ்க்யூவினுடைய கொள்கையை யொட்டியே அரசியல் அமைக்கப்பட்டது; ஆனால் அங்கும் அது பூர்த்தியாகப் பின்பற்றப்படவில்லை. உதாரணமாக, பி/2ரான்ஸ் தேசத்தின் தலைவரான பிரசிடென்டை சட்ட சபையே தேர்ந்தெடுக்கிறது. பி/2ரான்ஸ் தேச பிரசிடென்டுக்கு மிக சொற்பமான அதிகாரமே இருந்து வருகிறது. அப்படியே நிர்வாக உத்தியோகஸ்தர்களான மந்திரிகள் சட்ட சபையிலிருந்து பொறுக்கப்படுகின்றனர். இற்றலி தேசத்தில் ஓர் அரசன் இருக்-

கிறுன். அவன் சட்ட சபையில் அதிகமான ஸ்தானம் பெற்ற கக்ஷியிலிருந்தே தனது மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பான். அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்திலும் இக்கொள்கை பூர்ணமாக அநுஷ்டிக்கப்படுவதில்லை. அங்கு சட்டசபையும் நிர்வாக இலாகாவும் தனித்தனியாகவே இருக்கின்றன. சட்டசபை யங்கத்தினரை ஜனங்களே நேராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். அங்ஙனமே அமெரிக்காவின் அதிபதியை ஜனங்களே தேர்ந்தெடுக்கவேண்டும். அதிபதியே நிர்வாகத்தலைவர். அவர் தமக்கு உதவியாகச் சில மந்திரிகளை நியமித்துக் கொள்வார். ஷை மந்திரிகள் சட்டசபையின் அங்கத்தினர்களாக இருக்கவேண்டுமென்பதில்லை. சட்ட சபைக்குச் சட்டமியற்றும் அதிகாரம் மாத்திரம் உண்டு; நிர்வாகஸ்தருக்கு அவைகளைப் பிரயோகிக்கும் வேலை மாத்திரமே. இவ்வாறு சட்டசபையாரும் நிர்வாகஸ்தரும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், இருவகுப்பாருக்கும் சம்பந்தம் உண்டு. நிர்வாகத்தலைவரான அதிபதி சட்ட சபையினுல் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைச் சில சந்தர்ப்பங்களில் நிராகரிக்கலாமென அவருக்குச் சட்ட அதிகாரமும் சிறிதளவுண்டு. அங்ஙனமே அறிக்கைகளின் மூலம் அதிபதி புதிய சட்டங்களை உண்டாக்கவும் வழி செய்யலாம். மேலும் சட்டசபைக்கு சட்டமியற்றும் அதிகாரத்துடன் நிர்வாக அதிகாரமும் சிறிதளவு இருக்கிறது. அதிபதி செய்யும் உடன்படிக்கைகளையும் உத்தியோக நியமனங்களையும் சட்டசபை அங்கீகரிக்கும் வழக்கமும் உண்டு. நீதி இலாகாவைச் சேர்ந்த நியாயாதிபதிகள் நிர்வாகஸ்தர்களாலேயே நியமிக்கப் படுகின்றனர். ஆனுல் சட்ட சபையும் நிர்வாகஸ்தர்களும் செய்யும் காரியங்கள் சரியானவைதாஞ என்பதை ஆராய்ந்துபார்க்கும் அதிகாரம் நீதிபதி

களுக்கு உண்டு. இவ்வாறு அரசியலதிகாரப் பிரிவினையில் ஒன்றையொன்று கண்டிக்கும் உரிமையிருப்பதனால் துஷ்பிரயோசனத்தின் கெடுதல் குறைகிறது. இன்னும் ஒரு விசேஷத்தையும் நாம் கவனிக்கவேண்டும். இக்காலத்தில் ஒவ்வொரு தேசத்திலும் அநேக அரசியல் கட்சிகள் இருக்கின்றன. சட்டசபையில் எந்தக் கட்சியார் பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறார்களோ அந்தக் கட்சியின் விருப்பப்படியே சட்டங்கள் நிறைவேறிவிடும். அமெரிக்க சட்டசபையில், முற்போக்கான நோக்க முடையவர்கள் நிறைந்த கட்சியே பெரும்பான்மைக் கட்சியாய் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் அதிபதியும் அவரால் நியமிக்கப்படும் மந்திரிகளும் அதே கட்சியைச் சேர்ந்தவர்களாய் இருக்கலாம். சட்டசபையின் தயவை ஷை மந்திரிகள் நாட வேண்டாமாயினும், அவர்களும் முற்போக்குக் கட்சியையே சேர்ந்தவராதலால் சட்டசபையில் அதிகமாகப் பரவியிருக்கும் கொள்கையையே அநுசரிப்பர். முற்போக்குக் கட்சி மகாநாடுகளில் சட்டசபை யங்கத்தினரும் மந்திரிகளும் ஒருவரோடொருவர் கலந்து ஆலோசனை செய்துகொள்வர். இங்ஙனமெல்லாம், ஆதியில் அமெரிக்கர் அக்கரையுடன் மான்டேஸ்க்யூவினுடைய கொள்கையைப் பின்பற்றினராலும், நாளடைவில் அவ்விடத்து அரசியல் முறை வேறுவிதமாக அமைந்துவிட்டது. பல உயர்ந்த கொள்கைகளையும் கம்பீரமான சித்தாந்தங்களையும் அழகாகப் பேசிவிடலாம். அவைகளை அநுபவ சாத்தியமாகச் செய்யும் பொழுதே அநேக உபத்திரவங்கள் நேரிடுகின்றன. காலக்கிரமத்தில் ஒவ்வொரு தேசத்தினரும் தம் தம் அநுபவ ஞானப்படி அவைகளை மாற்றிக்கொண்டே போகவேண்டியதாகிறது

(5) ஐரோப்பாக் கண்டத்து நாடுகளில் நிர்வாகச்சட்டம்:- அமெரிக்க அரசாங்க முறையில் சட்டசபையினரோ நிர்வாக உத்தியோகஸ்தர்களோ தமது நியாயமான வரம்பை மீறிச் சென்றால், நியாயஸ்தலத்தார் அவர்களை விசாரணை செய்து தண்டிக்கலாம் என முன்பு கூறினோம். அப்படிச் செய்தாலன்றி பொதுஜன சுதந்திரத்திற்கு பங்கமேற்படுமென்பது அவர்களின் துணிபு. நிர்வாக உத்தியோகஸ்தர்களை அப்படி அடக்கி வைக்காவிடில் அவர்கள் பொதுமக்களை வருத்தத் தொடங்குவார்கள். இங்கிலந்திலும், இங்கிலீஷ் சாம்ராஜ்ஜியத்திலுள்ள நாடுகளிலும் இதே வழக்கம் கையாளப்படுகிறது. பிரதம மந்திரியானாலும், சாமானிய மனிதனானாலும் சட்டத்தின்முன் இருவரும் சமமே என்பது அவர்களுடைய சித்தாந்தம். மந்திரிகள் தமது உத்தியோக காரியங்களில் குற்றம் செய்து விட்டால் அவர்களும் நியாயாதிபதியின் முன் வந்து கூண்டில் ஏறவேண்டியவர்களே. இங்ஙனம் தமது பதவியையும் அதிகாரத்தையும் துஷ்பிரயோகப் படுத்தாமல் உத்தியோகஸ்தர்கள் நியாயஸ்தலத்தாராலேயே தடுக்கப்படுகின்றனர். ஆனால் ஐரோப்பாக்கண்டத்தில் பி/ராான்ஸ் முதலிய சில தேசங்களில் இதற்கு நேர்விரோதமான முறை அநுஷ்டிக்கப்படுகிறது. மாண்டேஸ்க்யூவினுடைய கொள்கையைப் பின்பற்றிய அவர்கள் அதனுடைய முக்கிய அம்சத்தை (அதாவது பிரஜைகளின் சுதந்திரத்தைக் காப்பதை) அசட்டை செய்துவிட்டு அதனுடைய வெளியர்த்தத்தை மட்டும் கிரகித்துக் கொண்டனர். அரசாங்கத்தின் மூன்று பாகங்களும் தனித்தனியாயும் சம அந்தஸ்துடனும் இருக்கவேண்டுமாயின், நிர்வாக உத்தியோகஸ்தர்களை அடக்கும் அதிகாரத்தை மற்றொரு அம்சத்தினராகிய நீதிபதிகளிடம் கொடுத்தல் கூடாதென்பதுதான் அவர்களது வியாக்கியானம்.

எனவே பி/2ரான்ஸ் தேசத்தில் ஓர் உத்தியோகஸ்தன் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வானாகில் அவனை சாதாரணச் சட்டத்தைக் கொண்டு விசாரணை செய்ய இயலாது. அவர்களுக்கென ஒரு தனியான சட்டம் உண்டு. அதன்படி அவர்களுக்கு தண்டனையே கிடைக்காது போய்விடும்; அல்லது சொற்ப தண்டனை கிடைத்தாலும் கிடைக்கலாம். சட்டப்படி தண்டிக்கப்படுவோம் என்ற பயமிருந்தாலே நிர்வாக அதிகாரிகள் ஜனங்களை ஏமாற்றி விடுகின்றனர்; பி/2ரான்ஸ் தேசத்திலோ கேட்க வேண்டியதில்லை. எங்கு பார்த்தாலும் நிர்வாக உத்தியோகஸ்தர்களின் தாண்டவம்தான் காணப்படும். இங்கிலந்து முதலான தேசங்களில் சட்டத்திற்கும் நீதிக்குமே அதிக மேம்பாடு அளிக்கப்படுகிறது; பி/2ரான்ஸ் முதலான தேசங்களிலோ நிர்வாகம் சரியாக நடைபெறுவதற்கு எவ்விதமான இடைஞ்சலும் இருத்தல்கூடாது என்ற கொள்கையே வேரூன்றி யிருக்கிறது.

நமது தேசமாகிய இந்தியாவில் இவ்வதிகாரப் பிரிவினை எவ்விதமிருக்கிறது என்பதைப் பார்ப்போம். இந்தியாவின் அரசியல் நிலைமையே வெகு புதுமையானது. இதன் அரசியல் முறையே இன்னும் ஸ்திரமாக அமைக்கப்படவில்லை. சிறுகச் சிறுக இது மாறிக்கொண்டும் வருகிறது. நாம் ஓர் அன்னிய நாட்டின் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கிறோம். அவர்களிடமிருந்து விடுதலை பெற்று நம் வீட்டிற்கு நாமே எஜமானர்களாவதற்கு நாம் போராடி வருகிறோம். நமக்களிக்கப்பட்டிருக்கும் அரசியல் சீர்திருத்தப்படி துரைத்தன நிர்வாகஸ்தர்களுக்கே எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. நம் நாட்டில் சட்டசபைகளுக்கு இப்பொழுது உண்மையான அதிகாரமே கிடை

யாது. எல்லாம் நிர்வாகஸ்தர்களின் விருப்பத்தின்படியே நடந்து வருகின்றது. நிர்வாகஸ்தர் சட்ட சபைக்கு உத்தரவாதமுடையவர்களாகவும் இல்லை. அதுவுமன்றி, சட்ட சபைகளில் பல ஸ்தானங்கள் நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கும், அவர்களால் நியமிக்கப்படும் சில போலிப் பிரதிநிதிகளுக்கும் கிடைக்கின்றன. அவர்களின் ஓட்டு பலத்தினால் நிர்வாகஸ்தர் தங்களிஷ்டப்படி யெல்லாம் சட்டமியற்றிவிடலாம். அவர்களுக்குப் பக்கபலம் அதிகம். இந்தியா துரைத்தனத்தார் செய்யும் காரியங்களைக் கண்டிக்கும் உரிமைகூட இந்திய சட்ட சபைக்குக் கிடையாது. சேனைகளின் செலவைக் குறைக்கவோ, மாற்றவோ சட்ட சபைக்கு அதிகாரமில்லை. இந்திய சட்டசபை நிறைவேற்றும் தீர்மானங்கள், அநுஷ்டானத்திற்கு வராமல் தள்ளிவிடுவதற்கு இராஜாங்க சபை (கவுன்ஸில் ஆப் ஸ்டேட் Council of State) ஒன்றிருக்கிறது. துரைத்தனத்தாருக்கு அநுசரணையாக இருப்பவர்களே அநேகமாய் அந்த சபையில் நிறைந்திருப்பதால், அங்கு துரைத்தன நிர்வாகஸ்தரின் கோரிக்கையே நிறைவேறிப் போகிறது. நம் நாட்டில் நியாயாதிபதிகளுக்குக் கூட பூர்த்தியான சுதந்திரம் கிடையாது. அவர்களைப் பலவிதங்களில் துரைத்தனத்தார் அடக்கித் தமக்குள்பட்டவர்களாய்ச் செய்து கொண்டிருக்கின்றனர். சில நீதிபதிகளை நிர்வாகசபை அங்கத்தினராய் உயர்த்திவிடும் வழக்கமே இதற்குப் போதிய திருஷ்டாந்தமாகும். எல்லா நீதிபதிகளும் இவ்வுத்தியோக பதவிக்காசைப்பட்டு அநீதியாய் நடந்துகொள்ள மாட்டார்கள் என்பது உண்மையானாலும், இது துரைத்தனத்தாருடைய மனப்பான்மையை நன்றாகக் காட்டுகிறது. ஆதலால் பராதீனமாக இருக்கும் நம் நாட்டில் துரைத்தன நிர்வாகிகளே

பிரதானமாக இருக்கிறார்கள். இங்கு சட்ட சபைக்கும் நிர்வாகஸ்தருக்கும் சமமான அதிகாரப் பிரிவினையைக் கூடக் காணோம். மான்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி மாகாண துரைத்தனங்களின் நிர்வாக சபைக்குள்ளேயே அதிகாரம் இரண்டாக்கப்பட்டது. இது எந்நாட்டிலும் இல்லாத புதுமையான விஷயம். அவ்வாறு உற்பத்தியாக்கப்பட்ட இரட்டை யாட்சி ஒரு பெரும் மாயக் கோட்டையென்று எல்லோராலும் கண்டிக்கப்படுகிறது. இரட்டையாட்சி பொருத்தமற்ற அரசியல் முறை என்பது தெளிவாகவும்விளங்கிவிட்டது. இனிக் கூடிய சீக்கிரத்தில்—அதாவது அடுத்தபடியாக—நம் நாட்டிலும் ஏனைய சுதந்திர நாடுகளிற் இருப்பதுபோலவே ஜனநாயக ஆட்சி பூர்ணமாக ஸ்தாபிக்கப்படவேண்டும். அப்பொழுதே ஜனப் பிரதிநிதிகளுக்கு உண்மையான அதிகாரம் கிடைக்கும்.

(6) அதிகாரப் பிரிவினையைப்பற்றிய பொதுவான சில குறிப்புகள்:—இதுவரை கூறிய திருஷ்டாந்தங்களிலிருந்து நாம் சில உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம். மான்டெஸ்க்யூவினுடைய கொள்கை முற்றிலும் உண்மையானதல்ல. சட்டமியற்றுவதும் சட்டத்தை நிறைவேற்றுவதும் ஒரே சபையினரிடம் சேர்ந்திருந்தால், பிரஜைகளின் சுதந்திரத்திற்கு நிச்சயமாக பங்கமேற்படத்தான் வேண்டுமென்ற அவசியம் இல்லை. இங்கிலந்தின் உதாரணமே இதற்குப் போதிய சான்றாகும். அல்லது அதிகாரப் பிரிவினையை சம்பூர்ணமாக்கிவிட்டால், உடனே செங்கோலாட்சி ஏற்பட்டுப் போவது நிச்சயமெனவும் நாம் கூறமுடியாது. மூன்றுவித அதிகாரங்களை ஒரு தொகுதியினரே பெற்றிருந்தாலும் அவர்கள் பொது நன்மையை அதிகப்படுத்தலாம். அந்த அதிகாரங்கள் தனித் தனியாகப் பிரிந்திருந்தாலும் அக்

கிரமமான ஆட்சி நடைபெறலாம். பொதுவாக, மான்டேஸ்க்யூவினுடைய சித்தாந்தப்படி, எல்லா அதிகாரங்களையும் ஒருவரே வைத்துக்கொள்வதை விட அது மூவரிடம் பிரிந்திருக்குமானால், அரசாங்கம் ஓரளவு செவ்வையாக நடைபெறும். ஆனாலும் நியாயாதிபதிகள் மாத்திரம் எவருடைய ஆதிக்கத்திலும் இல்லாமல் சுதந்திரமாக இருந்தால்தான் நீதிபரிபாலனம் நன்றாக நடைபெறும். இக்காலத்தில் நிர்வாகஸ்தர் சட்டசபைக்குக் கீழ்ப்பட்டிருப்பதே நல்லதெனப் பலர் கூறுவர். ஆனால் அமெரிக்கா தேசத்தவர்களோ தங்களுடைய முறையே சிறந்ததென்பர். இராஜீய முறையைக் கேவலம் பல கொள்கைகளையும்சித்தாந்தங்களையும் வைத்துக்கொண்டு அமைத்துவிட முடியாது. தேசத்தின் பழைய சரித்திரம், தேச ஜனங்களுடைய குண விசேஷங்கள் ஆகிய இவை வேறுபடுவதற்கேற்ப அரசியல் வளர்ச்சியும் வேறுபடும். கேவலம் வெளியுருவத்தைக் கொண்டு மட்டும் ஓர் அரசாட்சியைப் புகழ்வதோ கண்டனம் செய்வதோ மதியீனம். அது வாஸ்தவத்தில் எங்ஙனம் நடைபெறுகிறது என்ற விஷயமே மிகவும் முக்கியமானது. அதை நாம் நிச்சயமாக அறிந்துகொண்ட பின்னரே ஓர் அரசியல் முறையைப் பற்றிய முடிவான அபிப்பிராயத்தைக் கூறமுடியும்.

9-வது அதிகாரம்

சட்ட சபை.

(1) பொதுவான இலக்ஷணங்கள் முதலியவை:— சட்டசபையார், நிர்வாகஸ்தர், நீதிபதிகள் ஆகிய மூன்று வகுப்பாரும் தனித்தனியான காரியங்களைச் செய்வோரென்று முன்பு கூறினோம். நிர்வாகஸ்தருக்குச் சுறுசுறுப்பாகக் காரியம் செய்யும் திறமையும் சமயோசித புத்தியும் விவேகமும் அவசியமானவை; ஏதோ ஓர் அபாயமான சமயத்தில் அவர்கள் உடனே தீர்மானத்திற்கு வராமல் கோழை மனதுடன் தயங்கித் தயங்கி நின்றால் தேசத்திற்குத் தீங்கு நேர்ந்துபோகும். நீதிபரிபாலனத்தை வகிக்கும் நியாயாதிபதிகளுக்குச் சட்டத்தில் நல்ல பயிற்சியும், சமயத்திற்கேற்றவாறு சட்டத்தைப் பிரயோகம் செய்யும் திறமையும் அவசியமாகும். அதிநுட்பமான புத்தியையும் ஞாபக சக்தியையும் பெற்றிருந்தாலன்றி அவர்கள் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றமுடியாது. ஆனால் சட்ட சபைக்கு அவசியமான குணங்கள் வேறு மாதிரியானவை. சட்டசபை யென்பது அடிப்படையான சித்தாந்தங்களைப் பற்றி விவாதங்கள் நடக்குமிடம். அத்தகைய விவாதங்கள் சீக்கிரத்தில் முடிந்துவிடா. அங்கு எவ்வளவுக்கெவ்வளவு அறிவாளிகள் அதிகமாக இருக்கின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு, நன்மை உண்டாகும். ஏனெனில் "தவம் செய்ய ஒருவன், கல்விக்கிருவன்" என்பதைப் போலவே, ஒரு விஷயத்தைப்பற்றிய எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து பார்க்கப் பல நிபுணர்கள் ஒன்று கூடுவதே சிறந்த பயனைத் தரக்கூடியது. ஆதலால் சட்ட சபையில் பலதரப்பட்ட மனிதர்கள் இருக்கவேண்டும்.

தொழிலாளிகள், முதலாளிகள், வியவசாயிகள், உயர்ஜாதியினர், தாழ்ந்த ஜாதியினர் ஆகிய எல்லோருக்கும் அங்கு பிரதிநிதித்துவம் ஏற்படவேண்டும். மேலும், பொது ஜனங்களினிடையே பரஸ்பர விரோதமான அபிப்பிராயத்தைக் கொண்டவரும் இருப்பர். இவ்விரு கட்சியினருக்கும் அங்கு ஸ்தானம் கிடைக்கவேண்டும். நமது நாட்டிற்குள் இறக்குமதி யாக்கப்படும் சாமான்களுக்குத் தீர்வை விதிக்கக்கூடாது என்று ஒரு கட்சியினர் கூறலாம். மற்றொரு கட்சியினர் தீர்வை விதித்தே யாகவேண்டும் என்று மறுத்துக் கூறுவர். அவ்விருவருக்கும் சட்ட சபையில் இடமளிக்கப்பட வேண்டும். அப்படி இருந்தால், சட்ட சபையின் முன் கொண்டுவரப்படும் தீர்மானங்களின் சாதகங்களை ஒரு கட்சியினரும், பாதகங்களை விரோதக் கட்சியினரும் எடுத்து விளக்குவார்கள். அதிலிருந்து சாமானிய ஜனங்களுக்கு மேற்படி தீர்மானத்தினால் விளையக்கூடிய நன்மை தீமைகள் நன்றாகத் தெரிந்துபோம். சட்ட சபைக்கு இத்தனை அங்கத்தினர்கள்தான் இருக்கலாம், என நாம் கணக்கிட்டுக் கூறமுடியாது. ஒவ்வொரு தேசத்திலும் ஒருவிதமான வழக்கம் இருந்து வருகிறது. 1789-ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்தில் கூடிய தேசீய சபையில் 1200 அங்கத்தினர் இருந்தனர். அதுவே உலகில் மிகப் பெரிய சபையாக இருந்தது. அதை சமாளிப்பது முற்றிலும் கடினமாகப் போய்விட்டது. இங்கிலந்திலுள்ள காமன்ஸ் மகாசபை (ஜனப் பிரதிநிதி சபை) 700 அங்கத்தினர்களைக் கொண்டது. இப்பொழுது பிரான்ஸ் தேசத்தின் ஜனப் பிரதிநிதி சபைக்கு ஏறக்குறைய 600 பேர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். அமெரிக்காவில் ஏறக்குறைய 400 ஜனப்பிரதிநிதிகளடங்

கிய சபையே இருக்கிறது, இந்திய சட்டசபையிலோ 140 அங்கத்தினர்களே இருக்கின்றனர்! மிகச் சிறிய தேசமான இங்கிலந்தின் சட்டசபையில் 700 ஜனப்பிரதிநிதிகளிருக்கையில், இப்பெரிய பரதகண்டத்தின் சட்டசபையில் 150 பேர்கள் கூட இல்லாமற் போனது விநோதமேயாகும். ஆனால் சுயராஜ்யம் வருங்காலையில் ஏற்படும் உண்மையான ஜனப்பிரதிநிதி சபைக்கு சுமார் 500 அங்கத்தினர்களாவது தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஜனப் பிரதிநிதிகள் மிகவும் குறைவாக இருந்தால் சட்டசபையின் விவாதங்கள் அவ்வளவு சுவாரஸ்யமாக இராது. பல நிபுணர்கள் ஒன்று சேர்ந்தால் சட்டசபையின் விவாதங்கள் அறிவைப் பெருக்கத் தக்கவையாயிருக்கும். ஆனால் அங்கத்தினரின் எண்ணிக்கை மிக அதிகமாய்ப் போய்விட்டாலோ அங்கு குழப்பம் ஏற்படும். 700 நிபுணர்களடங்கிய சபையில் ஒரு தீர்மானத்தைக் குறித்து ஒவ்வொருவரும் பேச வேண்டுமென விரும்பினால் அது சாத்தியமான காரியமே யாகாது. அவ்வளவு பெரிய சபையில், கூடிய வரையில் [illegible] காரியம் நடக்க வேண்டுமானால், ஓர் ஒழுங்குமுறை அவசியமாகும். நினைத்தவர் நினைத்தபடி பேசினால் ஒழுங்காக விவாதம் நடைபெறாமல் குழப்பமும் இரைச்சலுமே அதிகமாய்விடும். ஆதலால் எந்த தேசத்திலும் சட்டசபையின் காரியங்கள் சரிவர நடைபெறும் பொருட்டு ஒரு நிச்சயமான முறையைப் பின்பற்றி வருகின்றனர். சட்டசபையின் விதிகளெனப்படுபவை அந்த முறையையே விவரிக்கின்றன. ஷை விதிகள் சட்ட சபையினாலேயே இயற்றப் பட்டவையாகும். அதாவது தன்னுடைய காரியம் சுறுசுறுப்பாக நடைபெறும் பொருட்டுச் சட்ட சபை தன்னையே ஓர் ஒழுங்கு முறைக்குக் கட்டுப்

படுத்திக் கொள்கின்றது. சட்ட மியற்றுவதில் அதிகத் தாமதமும் ஏற்படக் கூடாது; அவசரப்பட்டுக் கொண்டும் சட்டம் இயற்றிவிடக் கூடாது. இவ்விரு நோக்கங்களையும் கொண்டே சட்ட சபையின் விதிகள் செய்யப்படுகின்றன. மேலும் இக்காலத்தில் சட்ட சபைகளுக்கு எல்லா தேசங்களிலும் வேலை அதிகப்பட்டுக் குவிந்து கொண்டே போகின்றதாகையால், அதற்கேற்றபடி சட்டசபைகளின் நடவடிக்கையைப் பற்றிய விதிகளும் மிகச் சிக்கலாய் விட்டன. சட்டசபைக்கு முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர் ஒருவர் இந்த விதிகளைப் பூர்த்தியாய்த் தெரிந்து கொள்வதற்கு அநேக நாட்கள் பிடிக்கும்.

சட்ட சபையின் விதிகள் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு மாதிரியாயிருக்கும். ஆனால் அவைகள் யாவற்றிற்கும் பொதுவாயுள்ள சில விஷயங்களை மாத்திரம் நாம் இங்கு கவனிக்கலாம்.(1)முதலாக சட்டசபையில் ஒரு சட்டமியற்ற வேண்டுமானால் அது ஒரு முறை நிறைவேறுவது போதாது. மூன்று முறை அது சட்ட சபைக்கு முன் வந்து நிறைவேறியாக வேண்டும். ஓர் அங்கத்தினர் ஒரு மசோதா கொண்டுவர வேண்டுமானால், முதன் முதலாக அதைப்பற்றி சட்ட சபைத் தலைவருக்கு அவர் அறிவித்துவிட வேண்டும். பிறகு தலைவரால் குறிக்கப்பட்ட நாளில், முதலாக சபையின் உத்தரவைப்பெற்ற பின்னர் அந்த மசோதா படிக்கப்பட வேண்டும். அந்த மசோதாவுக்குச் சிலர் திருத்தப் பிரேரணைகள் கொண்டுவரலாம். மற்றொரு நாளில் அது இரண்டாம் முறை படிக்கப்பட்டு சட்ட சபையில் உள்ள ஒரு கமிட்டியின் ஆராய்ச்சிக்கு அனுப்பப்படும். அந்தக் கமிட்டியில் அதைச் செவ்வையாக ஆராய்ந்து பார்த்து, திருத்தங்கள் அவசியமாயிருக்

தால் செய்து அனுப்புவார்கள். பிறகு மூன்றும் முறை அம்மசோதா படிக்கப்பட்டுச் சட்ட சபையின் ஓட்டுக்கு விடப்படும். அது அங்கு நிறைவேறிய பின்னர் மேல் சபையில் (உதாரணமாக இராஜாங்க சபையில்) இதே விதமாக நிறைவேறியாக வேண்டும். இதுதான் பொதுவாக எல்லா தேசங்களிலும் அநுசரிக்கப்படும் முறை. (2) சட்ட சபையிலுள்ள அங்கத்தினர் எல்லோரும் ஒன்றாய்க் கூடி ஒவ்வொரு விஷயத்தையும் விஸ்தாரமாக ஆலோசிப்ப தென்றால் வேலை சுறுசுறுப்பாக நடவாதென முன்பே கூறினோம். ஆதலால் சட்டசபை அங்கத்தினரில் சிலர் சிறுசிறு கமிட்டிகளாய்ப் பிரிந்து வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்வதே இப்பொழுது வழக்கமாக இருந்து வருகிறது. நூறு மனிதர்கள் கூடி ஒரு விஷயத்தை ஆலோசிப்பதைவிட, இருபது மனிதர்கள் அடங்கிய ஒரு சிறு கமிட்டியார் இன்னும் திறமையாக அவ்விஷயத்தை ஆலோசித்து முடிவுக்குக் கொண்டு வரக்கூடும். சட்டசபையின் முன் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டால், அது மூன்று முறை படிக்கப்பட வேண்டுமென்று கூறினோமல்லவா? அது வெறும் மாமூலான செய்கையேயாகும். அந்த மசோதாவை அதற்கென அமைக்கப்பட்ட சிறு கமிட்டியினரே தீர ஆராய்ந்து பார்த்து அதன் சாதக பாதகங்களை எடுத்து விளக்குவார்கள். அவ்வாறு நியமிக்கப்படும் கமிட்டியில் சபையிலிருக்கும் எல்லாக் கட்சியிலிருந்தும் அங்கத்தினர்கள் நியமிக்கப்படுவார்கள். அமெரிக்காவின் சட்டசபையில் இத்தகைய கமிட்டிகள் ஐம்பதுக்கு அதிகமாகவே இருக்கின்றன. இந்திய சட்டசபையிலும் ரெவினியூ இலாகாவை மேல்பார்வைப் பார்ப்பதற்கும், வரவு செலவுகளை ஆராய்ச்சி செய்வதற்கும் நிரந்தரமான

கமிட்டிகள் இருக்கின்றன. அவைகளைத் தவிர தனிப்பட்ட மசோதாக்களை ஆராய்ச்சி செய்வதற்கும், அவ்வப்பொழுது தனிக் கமிட்டிகள் நியமிக்கப்படும். ஷை கமிட்டிகள் ஒரு மசோதாவை ஆக்கவும் ஆக்கலாம்; அல்லது, அதற்கு விரோதமாகவே தங்களது முடிவை எழுதி அதை அழித்தும் விடலாம். இவ்வாறு சட்டசபை தனித்தனிக் கமிட்டிகளாகப் பிரிந்து கொள்வதால் அதனுடைய வேலைத்திறம் அதிகமாகிறது. ஆனால் இந்த முறையில் ஓர் அபாயமும் உண்டு. சட்ட வியவகாரங்கள் எல்லாவற்றையும் கமிட்டிகளே செய்ய ஆரம்பித்து விட்டால், கமிட்டியில் உட்படாமல் வெளியிலிருக்கும் மற்ற அங்கத்தினர்களுக்கு எவ்விதமான செல்வாக்கும் இல்லாமற் போய்விடுகிறது. (3) சட்ட சபையின் விதிகளில் இன்னொரு முக்கிய அம்சத்தையும் நாம் கவனிக்கவேண்டும். அதாவது, சபையில் நடக்கும் விவாதத்தை உடனே முடிவுக்குக் கொண்டுவருவதற்குள்ள வழியாகும். ஒரு தீர்மானத்தைப்பற்றிச் சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களில் பலர் பேச ஆவல் கொள்வதாக வைத்துக் கொள்வோம். அந்தத் தீர்மானம் மிகவும் முக்கியமான சந்தேகங்களை எழுப்பினாலாவது, அங்கத்தினர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்து விடலாம். அது ரொம்பவும் சாதாரணமான விஷயமாக இருந்தால், அதற்காக அநாவசியமாகக் காலத்தைச் செலவழிப்பது மதியீனமாகும். ஆதலால் அத்தீர்மானத்தைப் பற்றி நடக்கும் விவாதத்தை நிறுத்தி விட்டு, அதைச் சபையின் ஓட்டுக்கு விட்டு, அடுத்த விஷயத்திற்குச் செல்வதற்கு ஒரு வழி இருக்க வேண்டும். ஒரு மசோதாவைப் பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கும்பொழுதே யாராகிலும் ஓர் அங்கத்தினர் எழுந்திருந்து, "இதன்மீது இனி விவாதம் வேண்

டாம்; இதை ஒட்டுக்கு விடலாம்'', என்று பிரேரணை செய்ய லாம். அதற்கு சபையிலுள்ள பெரும்பான்மையோர் தமது சம்மதியை அளித்தால், உடனே விவாதம் நிறுத்தப் பட்டு விடும். இங்ஙனம் சுறு சுறுப்பாக வேலை முடிய வேறொரு வழியும் உண்டு. ஒரு மசோதாவில் பல உப விதிகள் இருக்குமல்லவா. சட்டசபைத் தலைவர், சபையினுடைய அநுமதியின்மேல் இன்னின்ன விதிகளைப்பற்றி இவ்வளவு காலமே விவாதம் நடக்கவேண்டுமென முதலிலேயே தீர் மானித்து விடுவார். ஒரு மசோதாவில் 100-உபவிதிகள் இருக்குமானல், முதல் நாளில் முதல் 25-வது விதிகள் வரை யில் விவாதிக்கப் படவேண்டு மென அவர் முதலிலேயே நிச்சயம் செய்து விடுவார். முதல்நாள் கூட்டத்தில் எதுவரை யில் விவாதம் நடந்திருந்தாலும் அக்கரையில்லை. மறு நாளில் 26-வது விதி முதல் விவாதம் தொடங்கும். இங்ங னம் அதைப்பற்றிய விவாதம் நான்கு தினங்களில் முடிந்து விடும். இதை Guillotine கிலோடீன் அல்லது பாகம் பாகமாக விவாதம் நடத்துவது என்று குறிப்பார்கள்.

எந்த தேசத்திலும் சட்டசபையின் நிர்வாகத்தை ஒழுங் காக நடத்தும் பொருட்டு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். ஷ தலைவரும் சட்டசபை அங்கத்தினரேயாவர். சட்டசபையிலுள்ளவர்களே அவரைத் தேர்ந்தெடுக்கின்ற னர். தலைவர் ஸ்தானத்தை வகிப்பவர் முதலில் எந்தக் கட் சியைச் சேர்ந்தவரா யிருந்தாலும், அந்தப் பதவியைப் பெற்ற பிறகு, அவர் பொது மனிதர் ஆய்விடுகிறார். அவர் எள்ளளவும் பட்சபாத மின்றியே அதன் பிறகு நடந்து வரவேண்டும். சபையின் உரிமைகளை அவரே பாதுகாக்க வேண்டும். அவர் கூறுவதைச் சட்டசபை யங்கத்தினர்கள் கேட்டுக் கீழ்ப்படிந்தே யாகவேண்டும். இங்கிலந்தில் சபைத்

தலைவருக்கு அதிக கௌரவம் உண்டு. ஒரு தடவை ஒரு தலைவர் பட்சபாதமின்றி நடந்து கொண்டு ஜனங்களின் பிரீதியைப் பெற்று விட்டால், அடுத்த பொதுத் தேர்தலில் அவருக்குப் போட்டியாக எந்த அபேக்ஷகரும் நிற்க மாட்டார்கள். சட்டசபை ஸ்தானமும், தலைவர் பதவியும் அவருக்கு மீண்டும் கிடைப்பது நிச்சயத்திலும் நிச்சயம். சட்டசபைத் தலைவர் சபையின் சேவகரும் எஜமானரும் ஆவார். சட்டசபை யங்கத்தினரின் உரிமையைப் பாதுகாப்பதும், சட்டசபையின் நடவடிக்கைகளை ஒழுங்காக நடத்துவதும், துரைத்தனத்தாரோ வேறு கட்சியினரோ நியாயமான விதிகளை மீறி நடவாமல் கவனித்துக் கொள்வதும் சட்டசபைத் தலைவருடைய கடமைகளாகும்.

(2) இரட்டைச் சபைகளும் அவை ஏற்பட்டதன் காரணமும்:—இந்தியா முழுவதற்கும் சட்ட மியற்றும் மத்திய சபை இருபிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று இந்தியா சட்டசபை; இரண்டாவது இராஜாங்க சபை. முந்திய சபையிலேயே ஜனப்பிரதிநிதிகள் அதிகமாயிருக்கிறார்கள். அங்குதான் தீவிரமான மனப்போக்குடைய இராஜீயவாதிகள் அநேகர் இருக்கின்றனர். ஜன முன்னேற்றத்திற்குரிய தீர்மானங்கள் அவ்விடத்திலேயே நிறைவேறுகின்றன. இராஜாங்க சபையோ மற்றதைவிடச் சிறியது. அதில் பிற்போக்கான அபிப்பிராயங்களைக் கொண்டவர் சிலரும், துரைத்தனஉத்தியோகஸ்தர்கள் பலருமே அங்கத்தினராய் இருக்கின்றனர். ஆனல் நமது மாகாணங்களில் இவ்விதமான இரு சட்ட சபைகள் இல்லை. ஒரே யொரு சபையே இருக்கிறது. இந்தியா சட்டசபையை 'கீழ்ச்சபை' யென்றும்; இராஜாங்கசபையை, 'மேல் சபை' என்றும் குறிப்பார்கள். இதனல் மேல்சபைக்கு அதிகாரம் அதிகம்

என எண்ணிவிடக் கூடாது. எல்லா தேசங்களிலும் கீழ்ச் சபைக்கே அதிகாரம் அதிகம். மேனாடுகளில் இந்தப்பெயர்கள் வெகுகாலமாகவழக்கத்திலிருந்துவருவதாலேயேநாமும் அவைகளையே உபயோகிக்கிறோம். உலகத்தில் எல்லா தேசங்களிலும் சட்டசபைகள் இரண்டாகவே பிரிக்கப்பட்டிருக்கின்றன. இங்கிலந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், இந்தியா முதலிய எல்லா நாடுகளிலும் இரண்டிரண்டு சபைகளே இருக்கின்றன. இங்ஙனம் சட்டசபையை இரண்டு தனித்தனி பாகங்களாகப் பிரித்து வைப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளுள், மிக முக்கியமாக அவசரப்பட்டுச் சட்டம் செய்வதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கமே முதல் காரணம். ஒரே யொரு சட்டசபை மட்டும் இருக்குமானால்,அது எந்தச் சட்டத்தையும் ஒரு நிமிஷத்தில் நிறைவேற்றி விடலாம். உதாரணமாக, இங்கிலந்தில் ஒரே யொரு சபை இருப்பதாக எண்ணிக் கொள்வோம். அச்சபையில் ஜனப்பிரதிநிதிகளே நிறைந்திருப்பர். ஒரு சமயத்தில் ஜெர்மனி தேசத்து ஆசிரியரொருவர் இங்கிலந்தை தூஷித்து ஒரு நூல் இயற்றி விடுவதாகவோ அல்லது ஜெர்மனி தேச மந்திரியொருவர் இங்கிலீஷ்காரரை தூஷித்துப் பேசிவிடுவதாகவோ வைத்துக் கொள்வோம். அச்சம்பவம இங்கிலந்தின் பத்திரிகைகளின் மூலம் ஜனங்களிடையே பரவி அவர்களுக்குள் ஓர் ஆவேசத்தை உண்டுபண்ணி விடலாம். இதே ஆவேசமும் வெறியும் ஜனப்பிரதிநிதிகளான சட்டசபை அங்கத்தினர்களுக்கும் உண்டாய் விட்டால், அவர்கள் அந்த வெறியில் தம்மை மறந்து, உடனே ஜெர்மனியுடன் யுத்தம் நடத்தவேண்டுமென ஒரு தீர்மானம் செய்து விடலாம். அது ஒரே தினத்தில் முடிந்துவிடக் கூடிய விஷயம். உடனே சேனைத்தலைவர்

மறுபேச்சுப் பேசாமல் தமது படைகளுடன் ஜெர்மனியை நோக்கிச் செல்ல வேண்டும். உண்மையில் ஜெர்மன் அரசாங்கத்தாருக்கும் இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்கும் எவ்வித மனஸ்தாபமும் இருந்திருக்காது. ஆனால் இரண்டு சட்டசபைகள் இருக்குமானால், ஒரு சட்டசபையில் ஷை தீர்மானம் நிறை வேறி விட்டாலும், இன்னொரு சபையினராவது அதை அமைதியாக ஆராய்ச்சி செய்து தங்கள் சம்மதியை யளிக்காமல் அதைத் தள்ளிவிடலாம். ஒரே சட்டசபை இருக்கு மிடங்களில் சட்டசபையினர் சில சமயங்களில் பொறுப்பின்றி ஆவேசத்துடன் சட்டமியற்றி விடக்கூடும்; ஒரு சமயத்தில் மேலோங்கியிருக்கும் கோபத்தைக் கொண்டோ, அல்லது, அச்சத்தினால் தூண்டப்பட்டோ அவர்கள், பிற்காலத்தில் பெருந் தீங்கை விளைவிக்கக்கூடிய சட்டங்களைச் செய்து விடுவார்கள். அல்லது வெகு அழகாகவும் உருக்கமாகவும் பிரசங்கம் செய்கிற சில தலைவர்களுடைய சொல்லைக் கேட்டு மதிமயக்கமடைந்தும் மற்ற அங்கத்தினர்கள் ஒரு சமயம் துடிதுடித்து நாட்டின் அமைதியைக் குலைக்கும் சட்டங்களைச் செய்து விடுவர். ஆகவே, ஒரே சட்டசபை பயனற்றது என்பதற்கு இது முதல் காரணம். "மனிதரிடையே தோன்றியுள்ள எல்லா துரைத்தனங்களிலும, சர்வாதிகாரமும் பெற்ற ஜனப்பிரதிநிதிக ளடங்கிய ஒரே சட்டசபையின் ஆட்சியைக் காட்டிலும் மோசமான துரைத்தனத்தை நான் அறியேன்" என்று லேகி என்ற சரித்திர நூலாசிரியர் கூறியிருக்கிறார். ஒரே சட்டசபை தீங்கைத் தரக்கூடியது என்பதற்கு இரண்டாவது காரணம் அடியில் வருவது. ஷை சட்டசபை யங்கத்தினர் எல்லோரும் ஒரே காலத்தில் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள். அதாவது ஒரு

குறித்த சமயத்தில் பொது ஜனங்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களை அவர்கள் பின்பற்றுகிறவர்கள் என்பதே அதன் கருத்து. 1926-ம் வருஷத்தில் நமது நாட்டில் பொதுத் தேர்தல் நடந்தது. அப்பொழுது சர்க்கார் உத்தியோக பதவியை வகிக்கக்கூடாது என்ற கொள்கையைக் கொண்ட சுயராஜ்யக் கட்சியினர் பலர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அதிலிருந்து நாம் அறிய வேண்டியது, பொதுமக்களிற் பலர் உத்தியோக பதவியை ஏற்கக் கூடாது என்ற அபிப்பிராயத்தையே கொண்டிருந்தனர் என்பதே. அதன் படியே, சுயராஜ்யக் கட்சியினர் உத்தியோக பதவியை வகிக்காமல் இருந்து வரலாம். நமது தேசத்து சட்டசபை மூன்று வருஷத்திற் கொருமுறையே புதுப்பிக்கப் படுகிறது. ஒரு தேர்தல் நடந்தபின் ஒரு வருஷத்தில் பல காரணங்களினால், பொதுஜன அபிப்பிராயம் மாறி விடலாம். நாளடைவில் உத்தியோகங்களை சுயராஜ்யக் கட்சியினர் வகிக்க வேண்டும் என்ற அபிப்பிராயமே பொது ஜனங்களிடம் பரவி விடலாம். ஆனால் சுயராஜ்யக் கட்சியினரோ பழைய முறையையே அநுஷ்டித்து வருவார்கள். அங்ஙனமாய் விட்டால், சட்டசபையில் உண்மையான பொது ஜனப் பிரதிநிதிகள் எவரும் இருக்கவே மாட்டார்கள். ஏனெனில், பொதுஜன அபிப்பிராயம் அங்கு பிரதிபலிக்கப் படுவதில்லை. எனவே, ஒரு சட்டசபையின் காலம் முடிவதற்குள்ளாகவே அதனுடைய பிரதிநிதிகள் பொது ஜன அபிப்பிராயத்தை யொட்டி நடவாதவர்கள் ஆய் விடலாம். அவர்கள் செய்யும் சட்டங்கள் பொது ஜனங்களுக்குச் சம்மதியானவையாய் இல்லாமல் போய்விடலாம். ஆனால் பொதுமக்கள் அப்பொழுது எதையும் செய்ய இயலாது. பத்திரிகைகளின் மூலமும் பிரசங்க

மேடையிலிருந்தும் அவர்கள் சிறிதளவு ஆடம்பரம் செய்யலாம். அதனால் அதிக பிரயோசனம் ஏற்படாது. அடுத்த பொதுத் தேர்தல் வரும் வரை அவர்கள் காத்திருப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. இரண்டாவது சட்டசபை யொன்றிருந்தால் அச்சபையினராவது பொது ஜன அபிப்பிராயத்தை யொட்டி நடக்க இடமேற்படும். 'கீழ்ச்சபை'யில் அவசரமாக இயற்றப்படும் சட்டங்களை ஆய்ந்தோய்ந்து பார்த்து அவைகளைத் திருத்துவதே 'மேல்சபை'யாரின் வேலை. மேற்கூறிய காரணங்களாலேயே எல்லா தேசங்களிலும் இரண்டு சட்டசபைகளை அமைத்திருக்கின்றனர். இவ்வாறு மேல்சபையினால் நன்மை உண்டாகும். ஆனால் அதனால் சிற்சில சமயங்களில் கெடுதலும் ஏற்படலாம். ஜனப்பிரதிநிதி சபை தேசத்திற்கு நன்மையான ஒரு காரியத்தைச் செய்தால், அதைக்கூடத் தடுத்துவிடும் அதிகாரம் மேல்சபைக்கு உண்டாய்விடும். கீழ்ச்சபையில் அவசரப் பிரேரணைகள் நிறைவேறிவிட்டால் அதை மேல்சபையினர் தடுப்பது நன்றுதான். ஆனால் மேல்சபையில் இருப்பவர்கள் அநேகமாய்ப் பிற்போக்கான அபிப்பிராயங்களைக் கொண்டவர்களாதலால், ஜனப் பிரதிநிதிகள் முற்போக்காகச் செய்யும் சட்டங்களையும் அவர்கள் தள்ளுபடி செய்துகொண்டே வரலாம். இந்தியாவின் தற்கால அரசியல் முறையில் காரியம் அது போலவேதான் நடந்து வருகிறது. இந்தியா சட்டசபையார் இயற்றும் சட்டங்களை இராஜாங்க சபை தள்ளுபடி செய்துகொண்டே வருகிறது. ஒரு மசோதா, இரண்டிடங்களிலும் நிறைவேறினாலன்றி, சட்டமாகாது; அதனாலேயே பல அரசியல் சாஸ்திர விற்பன்னர்கள் இரண்டு சட்டசபைகள் இருந்தால் ஜனநாயக ஆட்சி நடைபெறாது

என்று முன்பு வாதம் செய்தனர். அவர்கள் இங்கிலந்தி லுள்ள மேல்சபையில் பிற்போக்கான அபிப்பிராயங்களைக் கொண்ட பிரபுக்கள் நிறைந்திருந்ததால் அவ்விதம் கூறினர். அவர்களுடைய அபிப்பிராயம் முற்றிலும் உண்மையாகாது. மேல்சபை இருப்பதனால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. அதை முற்றிலும் அழித்துவிட்டால் அந்தத் தீமை யுடன் நன்மையும் இல்லாமல் போய்விடும். அங்ஙனம் செய்யாமல் மேல் சபையை மாற்றி யமைத்து விட்டால் அதனுடைய விஷப்பல்லை எடுத்துவிடலாம். உதாரணமாக மேல்சபையிலும் ஜனப் பிரதிநிதிகளே அங்கத்தினர் களாக இருக்குமாறு செய்துவிடலாம். அல்லது மேல் சபையினருடைய அதிகாரத்தைக்குறைத்தும்விடலாம். இக் காலத்தில் பல அறிஞர்கள் இரு சட்டசபைகள் இருப்பது அவசியமே என்றும், ஆனால் மேல் சபையை வேறு மாதி ரியா யமைக்கவேண்டுமெனவும் கூறுகின்றனர். அப்படிச் செய்தால் ஜனநாயக ஆட்சிக்கு பங்க மேற்படாது.

(3) மேல்சபைகளின் அமைப்பு:—மேல்சபை இருப் பது அவசியமானல், அதைத் தீங்கில்லாமல் எப்படி அமைப் பது என்பதே அடுத்த கேள்வி. கீழ்ச்சபையின் பிரதி நிதிகள் ஜனங்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற னர், மேல்சபையை அமைப்பதில் அநேக முறைகள் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக, பரம் பரையாய் ஒரே குலத்தினரோ, வம்சத்தினரோ, ஜாதியினரோ ஸ்தானம் வகிப்பது; நியமனம் செய்வது; ஜனங்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்படுவது; இவை மூன் றும் கலந்தது — என்ற நான்கு முறைகளில் மேல்சபை அமைக்கப்படலாம். அவைகளை ஒவ்வொன்றாய் ஆராய் வோம். பரம்பரையாய் ஒரு குலத்தினர் ஸ்தானம் வகிப்

பதை இக்காலத்தில் எவரும் ஆதரிக்கமாட்டார்கள். இங்கிலந்தில் உள்ள மேல்சபை, பிரபுக்களின் சபை (ஹவுஸ் ஆப்/2லார்ஃஸ் House of Lords) என்று குறிக்கப்படுகிறது. அச்சபையில் பலசீமான்கள் பரம்பரையாக ஸ்தானம் வகித்து வருகின்றனர். வெகு காலமாக அந்த வழக்கம் இங்கிலந்தில் இருந்து வருகிறது. புதிதாக அமைக்கப்படும் அரசியல் முறையில் எவரும் பரம்பரையான இந்த வழக்கத்தை அநுஷ்டிக்கமாட்டார்கள். ஒரு நியாயாதிபதியின் பிள்ளை நியாயாதிபதியாகவும், கவியினுடைய பிள்ளை கவியாகவும், அறிஞனுடைய பிள்ளை அறிஞனாகவும் எப்படி எவ்விடத்திலும் இருக்க முடியாதோ, அப்படியே அரசியல் நிபுணனுடைய புத்திரனும் அரசியல் நிபுணனாக இருக்கவேண்டுமென்கிற கட்டாயமே இல்லை. லார்ஃ சபையில் உள்ள 680 அங்கத்தினர்களுள் 500-க்கு மேற்பட்டவர்கள் பரம்பரையாக ஸ்தானம் வகிக்கும் பிரபுக்கள். அவர்களில் பலருக்கு வேட்டையாடுவதிலும், மற்ற தமாஷுகளிலும் சிரத்தையிருக்குமேயன்றி இராஜாங்க விஷயங்களில் கவனமே இராது. ஆனால் இங்கிலந்தில் பரம்பரையாக ஸ்தானம் வகிப்பதான அந்த வழக்கத்தை ஒழித்துவிடவேண்டுமென வெகு சிலரே கிளர்ச்சிசெய்து வருகின்றனர். மற்றவர்கள் அந்த சபையின் அதிகாரத்தைக் குறைத்துவிடுவதே போதுமென்பதோடு திருப்தியடைகின்றனர். ஒரு தேசத்தில் வெகுகாலமாக நிலைத்து வந்திருக்கும் ஒரு ஸ்தாபனத்தை அழித்துவிடுவது அவ்வளவு சுலபமானதல்ல. அதை சாமானிய ஜனங்கள் சீக்கிரத்தில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பிரபுக்கள் சபையில் பரம்பரையான கனவான்களைத் தவிர அரசரால் லார்ஃ பட்டம் அளிக்கப்பட்ட சிலரும் இருக்கின்றனர். மதகுரு

வின் ஸ்தானத்தை வகிக்கும் இருபத்தாறு அங்கத்தினர்களும், ஸ்காட்லந்து தேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பதினறு அங்கத்தினர்களும் அதில் இருக்கின்றனர். அவர்களைத் தவிர சட்ட ஞானமுடைய அறுவர் அரசரால் நியமிக்கப்படுகிறார்கள். அதுபோலவே, ஐரோப்பாக் கண்டத்தில் வேறு சில தேசங்களிலும் மேல் சபையில் ஒரு பாகம் பரம்பரையாக சில குலத்தினருக்கு ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. இம்முறை அநுஷ்டிக்கப்படும் இடங்களில்அதுபுராதன வழக்கமாக இருந்து வருகிறதேயன்றிப் புதிதாய் உண்டாக்கப் படவில்லை. அரசகுலத்தைச் சேர்ந்தவர்களும் சிற்சில மேல்சபைகளில் ஸ்தானம் வகித்து வருகின்றனர். பிரான்ஸ், ஸ்விட்ஜர்லாந்து, பெல்ஜியம் முதலான இடங்களில் இந்த வழக்கமே இல்லை.

இரண்டாவதாக, சில மேல் சபைகளின் எல்லா ஸ்தானங்களுக்கும் (அல்லது ஒரு பாகத்திற்கு மட்டும்) பொதுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களோ, பரம்பரையாய்ப் பதவி வகித்துவரும் பிரபுக்களோ இல்லாமல், பலபுதியஅங்கத்தினர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். அந்த நியமனத்தை துரைத்தனத்தாரே (அதாவது நிர்வாகஸ்தரே) செய்வது வழக்கம். அது ஜனநாயக தத்துவத்திற்கு விரோதமாகத் தோன்றலாம். ஆனாலும் அதனால் நன்மைகள் பல உண்டாகின்றன. பொதுத் தேர்தல்கள் நடக்கும்பொழுது அதில் வெற்றி பெறுவோர் அனைவரும் மிகவும் திறமை வாய்ந்தவர்களாகவோ அல்லது இராஜீய அநுபவம் உடையவர்களாகவோ இருப்பதில்லை. அழகாகப் பிரசங்கம் செய்வோரும், மற்ற கட்சியினரை நன்றாகத் தூற்றுவோரும், பொதுஜன அபிப்பிராயத்தை இலக்ஷியம் செய்யாதவரும் சில சமயங்களில் தேர்தல்களில் வெற்றி

யடைந்து விடுகின்றனர். அவர்கள் சரியான ஜனப்பிரதிநிதிகள் ஆகமாட்டார்கள். பொதுத் தேர்தல் நடக்கும்பொழுது ஏதோ ஒரு தர்மத்தைச் செய்து, பல சிற்றுண்டிகளை வைத்துக்கொண்டு தனது புகழைப் பரப்பிவிட்டு வெற்றி பெறுகிறவர்கள் பலர். அவர்கள் தேர்தல் ஆனபின் ஓட்டர்களிருக்கும் பக்கம்கூடத் திரும்பிப் பார்ப்பதில்லை; தம்மைப் பிரதிநிதியாக அனுப்பிவைத்த மகாஜனங்களை அவர்கள் உடனே மறந்து சுயநலத்தையே நாடிச் செல்கின்றனர். உண்மையாக உழைக்கக் கூடியவர்களை ஜனங்கள் தேர்ந்தெடுக்காமல் உதறி எறிந்துவிடுகின்றனர். மேலும் பல நிபுணர்களும் அறிவாளிகளும் அநுபவம்பெற்ற உத்தியோகஸ்தர்களும் ஓட்டர்களுடைய மனோ நிலைமையை நன்கு அறிந்தோ அல்லது தேர்தல் தேவதைக்குச் சமர்ப்பிக்கவேண்டிய திரவியம் இல்லாமையாலோ சட்டசபைக்கு அபேக்ஷகர்களாய் நிற்பதே இல்லை. இதை நம் நாட்டிலும் நன்கு காணலாம். நம் தேசத்தில் அநுபவ ஞானமும் அறிவுமுதிர்ச்சியும் வாய்ந்தவர்களே சட்டசபைக்குப்போயிருக்கின்றனரென நாம் கூறவே முடியாது. பல நிபுணர்களும் பிரமுகர்களும் சட்டசபைக்கு வெளியிலேயே இருக்கின்றனர். அவர்களையும் துரைத்தனத்தார் தம்மிடமிழுத்துக்கொண்டு அவர்களுடைய மேலான புத்திமதியைக் கோருவது அவசியம். அதை யுத்தேசித்தே மேல் சபைக்கு சிலரை நேராக நியமனம் செய்யும் அதிகாரம் துரைத்தன நிர்வாகிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் இருக்கும் உயர்ந்த அறிவுடைய ஆசிரியர்கள், கவிகள், அரிய தேச சேவை செய்திருக்கும் வீரர்கள், பெரிய முதலாளிகள், இராஜதந்திரம் அறிந்த பிரமுகர்கள் முதலியவர்களை நியமனம் செய்வது சட்ட சபைக்குப் பெருத்த உதவி

யாகும். கீழ் சபையில் உள்ள அங்கத்தினர்களில் சிலரைத் தவிர ஏனையோர் நிரம்பவும் சாமானியமானவர்கள்; அதிக புத்தி நுட்பம் பெருதவர்கள்; சட்டசபையின் நடவடிக்கை முறைகள்கூட அவர்களுக்கு விளங்கா. அத்தகைய அங்கத்தினர்கள் அரசியல் நிர்வாகத்திற்கு எப்படி உதவி செய்யக் கூடும்? அவர்களனைவரும் சேர்ந்து செய்யும் தேச ஊழியத்தைக் காட்டிலும் ஓர் அறிவாளி செய்யக்கூடிய சேவை எத்தனையோ மடங்கு சிறந்தது. ஆனல் மேல் சபைக்கு அங்கத்தினர்களை நியமனம் செய்யும் முறை விவரிப்பதற்கு வெகு அழகாக இருந்தாலும், அநுஷ்டானத்தில் அது அவ்வளவு ஒழுங்காக நடப்பதில்லை. அதற்கு மூலகாரணம் மேல் சபைகளுக்குக் குறைவான அதிகாரம் கொடுத்திருப்பதேதான். அங்கு எத்தனையோ மேதாவிகள் வீற்றிருந்தாலும் அவர்களுக்கு வெறும் பிரசங்கம் செய்யும் உரிமையே யுண்டு. கீழ்ச் சபையினர் ஒரு விஷயத்தில் பிடிவாதமாக இருந்தால் மேல் சபையினர் தலைபணிந்தே போகவேண்டும். இந்தக் காரணத்தால் பல பிரமுகர்கள் நியமனத்தை ஒப்புக்கொள்ளாமல் மறுத்துவிடலாம். மேல் சபையில் அழகாக வீற்றிருந்து தமது உயர்ந்த விவேகத்தை யெடுத்து எல்லோருக்கும் அளந்துவிட்டாலும், அது விழலுக்கிறைத்த நீர் ஆய்விட்டால், அங்கு எந்த அறிஞன் மறுபடி காலை வைப்பான்? இவ்வுண்மை ஒருபுறமிருக்க, இன்னொரு விதத்தில் அந்த நியமன அதிகாரத்தை அரசாங்கத்தார் துர்விநியோகம் செய்து விடலாம். நிபுணர்களையும் பிரமுகர்களையும் நியமிப்பதற்குப் பதிலாகத் தங்களுக்கு என்றும் சாதகமாய் ஒட்செய்யக்கூடிய சில தலையாட்டிப் பதுமைகளை மேல்சபைக்கு நியமித்துவிடலாம். கீழ்ச்சபையில், தாம் தோல்வியடைந்தாலும் மேல் சபையின்மூலம் அதைச் சரிப்

படுத்திக்கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் துரைத்தனத்தார்மேல்சபைக்குத் தங்களுடைய சுவீகாரப்புத்திரர்களைப் போன்ற சில போலி கனவான்களையே நியமித்து வரலாம். ஒரு காலத்தில் பிரசங்கமேடைகளில் வாய்ச்சண்டைபுரிந்து பிறகு பெட்டிப் பாம்பாய் அடங்கி யொடுங்கி யிருப்பவர்களும், பிற்போக்கானவர்களும், அரசாங்கத்தைச் சரணுகதியடைந்தவர்களுமே அங்கு நியமிக்கப்படலாம். நாட்டில் எத்தனையோ மேதாவிகளும், சட்ட நிபுணர்களும், நிர்வாக சபையில் ஸ்தானம் வகித்தவரும் இருக்கையில், அவர்களை விட்டு அநாமதேயப் பிரபுக்களை ஏன் நியமனம் செய்யவேண்டும்? அதற்குக் காரணம் வெளிப்படையானதே. கீழ்ச்சபை அவசரப்பட்டுச் சட்டமியற்றினல் அதை மறுபடி ஆலோசனை செய்யவே மேல்சபை இருக்கவேண்டும்; ஆனல் சிலவேளைகளில் கீழ்ச்சபை இயற்றும் முற்போக்கான சட்டங்களைத் தள்ளுபடி செய்யவே மேல் சபையானது ஒரு கருவியாய் உபயோகிக்கப்படலாம். ஆனாலும் இப்பொழுது அநேகமாய் எல்லா தேசங்களிலும் இரு சபைகளுக்கும் சட்டப்படி சம அந்தஸ்து இருந்தாலும், மேல் சபையானது கீழ்ச் சபைக்கு அடங்கியே நடந்துவருகிறது.

இதுவரையில் பரம்பரை முறையாகவும் நியமன முறையாகவும் அமைக்கப்படும் மேல்சபையைப்பற்றிக் கூறினேம். இனி, தேர்தல் வழியாகவே அமைக்கப்படும் மேல்சபையைப்பற்றி ஆராய்வோம். கீழ்ச் சபையில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரே ஸ்தானம் வகிப்பதைப்போல, மேல் சபைக்கும் ஜனங்களே தங்களுடைய பிரதிநிதிகளை யனுப்பலாம். அமெரிக்காவிலும், பிரான்ஸ் தேசத்திலும் மேல்சபை அங்கத்தினர்களும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற

னர். ஆனல் ஜனங்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப் படாமல், அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சில பிரதி நிதிகளால் மட்டுமே தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். கீழ்ச் சபைக்கு நடப்பதைப் போலவே மேல் சபைக்கும் நேராகத் தேர்தல் நடக்குமானல் இவ்விரு சபைக்கும் எவ் வித வித்தியாசமும் இராது. கீழ்ச் சபையிலுள்ள பிரதி நிதிகளுக்கும், மேல் சபையிலுள்ள பிரதிநிதிகளுக்கும் எவ்வித தாரதம்மியமும் இராது. அவர்கள் ஒரே அபிப் பிராயத்தையும் ஒரே கொள்கையையுமே ஆதரிப்பவர் களாய் இருப்பர். கீழ்ச்சபை இயற்றும் அவசரச் சட்டங் களை உண்மையாகவே புனராலோசனை செய்யும் மனப் பான்மை மேல்சபைக்கு இல்லாமல் போய்விடும். அல்லது ஒவ்வொரு சபையும் தானே பொது ஜனங்களின் சரியான பிரதிநிதியென்று கூறி இறுமாப்படைந்து, ஒன்றுக் கொன்று கட்டுப்படாமல் சதாகாலமும்முரண்பட்டுக்கொண் டே இருக்கலாம். அப்பொழுதும் அரசியல் நிர்வாகம் தடைப் பட்டுவிடும். சட்ட மியற்றுவதற்கோ இருசபைகளின் சம்மதியும் வேண்டும். ஒரு சபையில் நிறைவேறும் தீர்மா னத்தை மற்ற சபை அங்கீகரிக்க மறுத்துக்கொண்டே இருந்தாலும், நிர்வாகம் தடைப்பட்டுவிடும். இதனல் மேல் சபையையும் ஜனப்பிரதிநிதிக ளடங்கியதாகவே செய்யலா மானுலும், அதை வேறு வழியில் செய்வது நல்லது. அதற்காக, கீழ்ச்சட்ட சபைக்குத் தேர்தல் நடக்கும் முறையும் மேல் சபைக்குத் தேர்தல் நடக்கும் முறையும் வெவ்வேறு விதமாயிருக்கும்படி செய்துவிடலாம். அமெரிக்க அரசாங்கம் பல சிறு தனி அரசுகள் சேர்ந்த ஐக்கிய அரசு என முன்னரே கூறினேம். அதாவது, இந்தியாவிலுள்ள பல மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் தனியான அரசாங்கம் இருந்தாலும், அவை யாவும் இந்

திய துரைத்தனத்திற்கு உட்பட்டிருப்பதைப் போலவே அமெரிக்காக் கண்டத்தில் உள்ள பல சிறு அரசுகள் ஐக்கிய அரசாங்கத்தின்கீழ் இருந்து வருகின்றன. அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் இருசபைகளுக்கும் தேர்தல்கள் வெவ்வேறு விதமாக நடைபெறுகின்றன. கீழ்ச் சபைக்கு ஐக்கிய நாடுகள் முழுமையும் பல மாகாணங்களிலும் உள்ள ஜனங்கள் ஜனத்தொகைக் கேற்றவாறு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றனர். மேல் சபைக்கோ ஒவ்வொரு மாகாணமும் சமமான பிரதிநிதிகளையே அனுப்பி வருகிறது. ஒரு மாகாணத்தில் 20000 ஜனங்களுக்கு 20 பிரதிநிதிகளைக் கீழ்ச்சபைக்கு அனுப்பினார்களானால், அதைப்போல் இருமடங்கு (40000) ஜனத்தொகையைக் கொண்ட இன்னொரு மாகாணம் 40 பிரதிநிதிகளை யனுப்பும். அதாவது அமெரிக்காவிலுள்ள பொது ஜனங்க ளனைவரையும் ஒரே தேசத்தினராகக் கணக்கிட்டு அந்த விகிதப்படி கீழ்ச்சபைத் தேர்தல் நடைபெறுகிறது. மேல் சபைக்கோ இவ்விரு மாகாணங்களும் சமமான பிரதிநிதிகளையே அனுப்பும். ஒரு பெரிய மாகாணம் மேல் சபைக்கு இரண்டு பிரதிநிதிகளை அனுப்பினால் சிறியமாகாணமும் இருவர்களையே அனுப்பும். இதனால் ஐக்கிய அரசி லடங்கிய பல மாகாணங்களுக்கும் சமத்துவம் ஏற்படுகிறது. அமெரிக்கா முழுவதையும் பாதிக்கின்ற விஷயங்களைச் சரிவர ஆராயும் பொருட்டு கீழ்ச்சபை அவ்வாறு அமைக்கப்படுகிறது; பல மாகாணங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு மேல்சபை வேறுவிதமாக அமைக்கப்பெறுகிறது.

பிரான்ஸ் தேசத்தில் வேறொருமுறை அநுஷ்டிக்கப் படுகிறது. அங்கு கீழ்ச்சபைக்கு ஜனங்கள் நேராகப் பிரதி

நிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றனர்; ஆனால் மேல்சபைக்கு வேறுவிதமாகத் தேர்தல் நடைபெறுகிறது; ஒருஜில்லாவிலுள்ள முனிசிபல்சபையின் மெம்பர்கள், ஸ்தல சுய ஆட்சியை நிர்வகிக்கும் உத்தியோகஸ்தர்கள் முதலியோர் சேர்ந்துகொண்டு ஒரு தேர்ந்தெடுக்கும் சபையாய் மாறி மேல்ச... அங்கத்தினர்களைப் பொறுக்கி யனுப்புகின்றனர். அதாவது ஜனங்களுக்குப் பதிலாக ஜனங்களுடைய நம்பிக்கையைப் பெற்ற சிலர் அத்தேர்தலைச் செய்துவிடுகின்றனர்.

இவ்விரு சட்டசபைகளுக்கும் இன்னும் சில விஷயங்களிலும் வேற்றுமை ஏற்படலாம். உதாரணமாக, தேர்தல் பிரதேசத்தினுடைய எல்லையை மாற்றிவிடலாம். இந்தியா சட்டசபைக்கு இரண்டு ஜில்லாக்களுக்கு ஓர் அங்கத்தினரை நாம் அனுப்பினால், அவ்விரண்டு ஜில்லாக்களும் ஒரு தேர்தல் பிரதேசமாகும். ஆனால் மேல் சபையான இராஜாங்க சபைக்கோ ஐந்தாறு ஜில்லாக்களுக்கு ஒரு மெம்பரே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இன்னம் சில இடங்களில் இவ்விரு சபைகளின் உத்தியோக காலங்களிலும் வேற்றுமைஇருப்பதுஉண்டு. அமெரிக்காவில்கீழ்ச்சபையங்கத்தினர்கள் இரண்டு வருஷமே வேலைபார்க்கலாம். இரண்டிரண்டு வருஷத்திற்கொரு முறை புதிய தேர்தல் நடக்கவேண்டும்; ஆனால் மேல் சபையான ஸெனட்சபை ஆறு வருஷ காலத்திற்கொரு முறையே கலைக்கப்படும். அங்ஙனமே பிரான்ஸ் தேசத்தில் கீழ்ச்சபையினர் நான்கு வருஷமும், மேல் சபையினர் ஒன்பது வருஷமும் உத்தியோகம் வகிக்கின்றனர். சில இடங்களில் மேல் சபையைப் பூராவும் ஒரே யடியாகக் கலைத்து விடுவதில்லை. மேல்சபையில் 90 அங்கத்தினர்கள் இருந்தால், அவர்கள் எல்லோருக்

கும் ஒரே சமயத்தில் உத்தியோக காலம் முடிந்து போவதில்லை. ஒவ்வொரு வருஷத்தில் முப்பது அங்கத்தினர்கள் நீங்கிக்கொண்டே போவதும், அவர்களது ஸ்தானங்களுக்கு மட்டும் புதுத் தேர்தல் நடப்பதுமாக இருக்கும். நமது சென்னை கார்ப்பொரேஷன் சபையும் இவ்விதமே நிரப்பப் படுகிறது. இதில் ஓர் அநுகூலம் இருக்கிறது. மேற்படி சபையானது பூர்த்தியாக ஒவ்வொரு தடவையும் கலைந்து அடியோடு காலியாய்ப் போகாமல் இருப்பதனால் அதற்கு ஒரு தொடர்ச்சியும், ஸ்திரபுத்தியும் ஏற்படுகின்றன. மேலும் புதிய புதிய அங்கத்தினர்கள் வருஷந்தோறும் வருவதனால், அப்போதைய பொதுஜன அபிப்பிராயமும் நன்ருய்க் கலந்துகொள்ள இடமேற்படுகிறது. கீழ்ச் சபையோ அவ்விதமில்லாது ஒரு பொதுத்தேர்தல் ஆனவுடன் பழைய உருத் தெரியாமல் முற்றிலும் புதிதாய் மாறிப்போய்விடலாம். தேர்தலுக்கு முன் அதிகாரம் வகித்த கட்சியினர் இப்பால் பலமிழந்து க்ஷீணித்துப் போகலாம். அவர்களுடைய கொள்கையும் அவர்கள் பின்பற்றிய வழியும் அடியோடு மாற்றப்பட்டுப் போகலாம். அதைத் தடுப்பதற்குத் தொடர்ச்சியாக இருந்துகொண்டே வரும் மேல்சபை நிரம்பவும் உபகாரமாயிருக்கும். சாதாரணமாக சட்டசபையின் உத்தியோக காலம் எவ்வளவு இருக்க வேண்டுமென்பது ஒரு முக்கிய விஷயமாகும். அதற்கு சுலபமான விடை கூறமுடியாது. முதலாக ஒவ்வொரு தேசத்தின் பூர்வ சரித்திரத்தை யொட்டியும் பூர்விக வழக்கத்தை யொட்டியுமே அது தீர்மானிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, உத்தியோக காலத்தை அதிகமாய்ச் சுருக்கினாலும் அல்லது அதிகமாய் வளர்த்துவிட்டாலும் துன்பமே நேரிடும். அது சொற்ப காலமாயிருந்தால், அடிக்கடி பொதுத் தேர்

தல்கள் நடைபெறும்; அதற்காக செலவழிக்கப்படும் பணமோ ஏராளமாகும். அதனால் எல்லோருக்கும் பிரயாசையும் பண நஷ்டமும் ஏற்படுகின்றன. அதை யோசித்தால், பொதுத் தேர்தல் அடிக்கடி ஏற்படாமல் செய்வதே நல்லது எனத் தோன்றும். ஆனால் சட்டசபையின் காலத்தை அதிகமாக்கிவிட்டால், ஜனப் பிரதிநிதிகளுக்கு ஓட்டர்களிடத்தில் மதிப்புக் குறைந்துவிடும். அநேக வருஷங்கள் வரையில் தமக்கு பயமில்லை என அவர்கள் நினைத்து செருக்கடைந்து தேச மகாஜனங்களின் அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாமல் நடந்து கொள்வார்கள். மேலும் சட்டசபைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் சபையினுடைய நடவடிக்கை முறையையும், தீர்மானம் இயற்றும் விதத்தையும், கேள்வி கேட்கும் முறையையும் அறிந்துகொள்வதற்கே ஒரு வருஷ காலம் பிடிக்கும். அதுவரை அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. ஒரு வருஷத்திற்குப் பின்னரே அவர்கள் சிறிது தைரியத்துடன் தலைதூக்க ஆரம்பிப்பார்கள். அதற்குள் அவர்களுடைய உத்தியோக காலமே முடிவடையும் சமயமாய்விட்டால், அவர்களால் என்ன பயன் விளையக்கூடும்? ஆதலால் சட்டசபையின் உத்தியோக காலத்தை அதிகமாகக் குறைத்துவிடக்கூடாது; அல்லது, மிக நீண்டதாகவும் செய்துவிடக் கூடாது. முன்பே கூறியபடி, அதை நிர்ணயிக்க நிச்சயமான ஒரு விதி கிடையாது. அந்தந்த தேசத்தின் சௌகரியப்படி அதைச் செய்துகொள்ள வேண்டியதாகவே இருந்து வருகிறது.

(4) இரண்டு சபைகளும் அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்ளுதல்:—மேல்சபையை எவ்வாறு அமைப்பதென்பதை ஆராய்ந்த பின்னர், அதன் அதிகாரம் எவ்வளவென்,

பதைப் பார்ப்போம். மேல்சபை, கீழ்ச்சபை ஆகிய இரண்டிற்கும் சட்டப்படி சம அந்தஸ்தும் சமஉரிமையும் உண்டு. எந்த சபையிலும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரலாம்; அந்தப் பிரேரணை அங்கு நிறைவேறியபின் மற்ற சபையிலும் நிறைவேற வேண்டும். இருசபைகளின் சம்மதியையும் பெறும் மசோதாக்களே (திருத்தங்களுடன்) சட்டமாகின்றன. ஆனால் இக்காலத்தில் எல்லா தேசங்களிலும் ஒரு முக்கியமான விஷயத்தில் மேல்சபைக்கு அதிகாரமில்லையென்று செய்து விட்டனர். அதாவது பண சம்பந்தமான தீர்மானங்கள் (வரி விதிப்பது, கடன்வாங்குவது,வருமானத்தைச் செலவு செய்வது ஆகியவற்றைப்)பற்றிய வரையில் மேல்சபைக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. கீழ்ச்சபையின் விருப்பப்படி ஷை தீர்மானங்கள் நிறைவேறிவிடும். மேல்சபை அங்கீகரித்தாலும் நிராகரித்தாலும் சாதகபாதகமொன்றுமில்லை. இங்ஙனம் எல்லா தேசங்களிலும் ஒரே அடியாக மேல்சபையின் அதிகாரத்தைக் குறைப்பதற்குக் காரணம் என்ன? கீழ்ச் சபையே ஜனப்பிரதிநிதி சபையாகும். மேல்சபையோ சாதாரணமாக, பிற்போக்கான கொள்கையினராலேயே நிரப்பப் படுகிறது. ஜனப்பிரதிநிதிகள் செய்யும் காரியத்தை மேல் சபையினர் அநேகமாய் எதிர்த்துக்கொண்டே வருவார்கள். சாதாரண மசோதாவாயிருந்து, மேல்சபையினருடைய நிராகரிப்பினல் அது சட்டமாகாமற்போனாலும், தேசத்திற்கு அதனல் பெ[illegible] தீங்கு விளையாது. உதாரணமாக, 21-வயதுக்கு மே[illegible]வர்களுக் கெல்லாம் ஓட்டுரிமை அளிக்கப்படவேண்டுமெ[illegible]ன்று கீழ்ச் சபையினர் செய்யும் ஒரு தீர்மானத்தை மே[illegible] சபையானது நிராகரித்து விட்டால், அதனல் அதிகமான கெடுதல் விளையாது. அதற்கு

முன் இருந்தபடியே வியவகாரங்கள் நடைபெறும். ஆனால் ஒரு வருஷத்தின் வரவு செலவு கணக்கையோ, அல்லது யுத்தத்திற்காக ஒதுக்கி வைக்கப்படும் பணத்தொகையையோ மேல்சபையார் நிராகரித்து விட்டால் அரசாங்கம் நடைபெறுமல் உயிரற்று நின்றுவிடவேண்டியதாகி விடும். ஆதலால் எப்பொழுதும் ஒன்றையொன்று விரோதப்பார்வையுடனேயே பார்த்துக்கொண்டிருக்கும் இருசபைகளுக்கும் பண சம்பந்தமான அதிகாரத்தைத் தருவதைக்காட்டிலும், ஏதாவதொரு சபைக்கு மட்டும் அதை அளிப்பதே சிறந்த வழி. கீழ்ச் சபையே ஜனப்பிரதிநிதிகளடங்கியதாகையாலும், ஜனங்களே வரிகள் செலுத்துவோராகையாலும், அதற்கே அந்த விசேஷ உரிமை அளிக்கப்படுவது நியாயமாகும். இங்கிலந்தின்மேல்சபையான பிரபுக்கள் சபையினர் பண சம்பந்தமான மசோதாக்களைப் பிரேரணை செய்யவும் முடியாது, திருத்தியமைக்கவும் முடியாது, நிராகரித்துவிடவும்முடியாது. அமெரிக்காவிலும் பண சம்பந்தமான மசோதாக்களைக் கீழ்ச் சபையினரே பிரேரணை செய்யலாம்; மேல் சபையினர் சில திருத்தங்கள் வேண்டுமாயின் செய்யலாம். இந்தியாவிலோ இராஜாங்க சபைக்குப் பண விஷயங்களையும் நிராகரித்து விடும் உரிமை உண்டு. எனவே, இதரதேசங்களில் பண சம்பந்தமான மசோதாக்களில் மேல்சபையினர் செய்யக்கூடியதெல்லாம் பிரசங்கம் மட்டுமேயாம். மற்றபடி பண சம்பந்தமில்லாத சாமானிய விஷயங்களில் இரண்டு சபைகளுக்கும் சம உரிமை உண்டெனச் சட்டம் கூறும். ஆனால் உண்மையில் இரண்டு சபைகளுக்கும் தீவிரமான அபிப்பிராயபேதம் ஏற்பட்டால் கீழ்ச் சபை கூறுவதே கடைசியில் நிலைத்து நிற்கும். கீழ்ச் சபைக்குத்தான் ஜனங்களிடம் அதிகமான செல்வாக்கு உண்டு. மேல்சபையி

புதியதேர்தல் நடக்கும்படி அரசர் உத்தர விடுவார். புதிய தேர்தல் நடந்த பின்னரும் காமன்ஸ் சபையினர் அதேவிஷயத்தில் பிடிவாதமாக இருந்து, லார்ஸ் சபையினரும் பிடிவாதமாக இருந்தால், புதிய லார்ஸ்களை அரசர் நியமித்து விடலாம். 600-அங்கத்தினர்களடங்கிய லார்ஸ் சபையில் 250-பேர்கள் காமன்ஸ் சபைக்குச் சாதகமாயும் 350-பேர்கள் விரோதமாயும் இருந்தால், அரசர் 100-அல்லது 102-புதிய லார்ஸ்களை நியமித்து காமன்ஸ் சபையினருடைய தீர்மானத்திற்கு மேல்சபையின் அநுமதியையும் பெற்றுவிடுவார். இது பலவந்தமே யாகும். ஆனால் அதற்கு வேறு வழி இல்லை. இங்கிலந்தில் 1911-ம் வருஷத்திய பார்லிமேன்டின் சட்டப்படி லார்ஸ் சபையினருடைய அதிகாரம் இன்னும் வெகுவாகக் குறைக்கப்பட்டுப் போய்விட்டது. 1909-ம் வருஷத்தில் காமன்ஸ் சபையார் நிறைவேற்றிய வரவுசெலவு கணக்கை லார்ஸ் சபையார் நிராகரித்து விட்டனர். அதனால் கோபமூண்டு காமன்ஸ் சபையார் ஒரு சட்ட மியற்றி மேல்சபையை ஒடுச்கிவிட்டனர். அச்சட்டத்தின்படி காமன்ஸ் சபையார் நிறைவேற்றும் பணசம்பந்தமான எந்தத் தீர்மானத்தையேனும், அவ்விதமே நிறைவேற்ற லார்ஸ் சபையினர் மறுத்து விட்டால் அவர்களுடைய நிராகரிப்பை உதறி எறிந்து விட்டு அந்தத் தீர்மானததை அரசருடைய கையெழுத்துக்காக நேரில் அனுப்பி விடுவார்கள். ஒரு மசோதா பணசம்பந்தமானதா அல்லவா என்பதை காமன்ஸ் சபையின் தலைவர் தீர்மானிப்பார். பணசம்பந்தமில்லாத பொதுத் தீர்மானங்களோ அல்லது காமன்ஸ் சபையின் உத்தியோக காலத்தை அதிகப்படுத்தும் தீர்மானங்களோ லார்ஸ் சபையினரால் நிராகரிக்கப்பட்டுப்போனால், அது உடனே அரசருடைய

கையெழுத்துக்கு அனுப்பப்படமாட்டாது; ஆனால் மறுபடி காமன்ஸ் சபைக்குத் திரும்பிவரும். காமன்ஸ் சபையினர் அதே தீர்மானத்தை அடுத்தடுத்த கூட்டங்களில் மூன்று தடவை நிறைவேற்ற, முதன் முதலாக அந்தத் தீர்மானம் பிரேரணை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாவது தடவை நிறைவேறிய நாள்வரை இரண்டு வருஷகாலமும் கடந்திருந்தால், லார்஡ஸ் சபையினருடைய நிராகரிப்பும் அநாதரவு செய்யப்படும்; அதுவும் சட்டமாய்விடும். இதிலிருந்து லார்ட்ஸ் சபையினருடைய அதிகாரம் எவ்வளவென்பது விளங்கும். (1) பண சம்பந்தமான விஷயங்களில் அவர்களுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அவைகளை ஆக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது, மாற்றவும் முடியாது. (2) பண சம்பந்தமில்லாத வேறு விஷயங்களை அவர்கள் முற்றிலும் நிராகரிக்க முடியாது. இரண்டு வருஷம் வரை ஒத்திப் போட்டுவிடலாம். அதற்குள் பொதுஜன அபிப்பிராயம் மாறினாலும் மாறிவிடலாம். காமன்ஸ் சபையினர் அவசரப்பட்டுச் சட்டமியற்ற முற்பட்டால், லார்ட்ஸ் சபையினர் அதை இரண்டுவருஷகாலம் வரையில் நிராகரித்து வரலாம். அதற்குள் காமன்ஸ் சபையினருக்கும் தாங்கள் செய்யும் காரியம் தீங்கைத் தரும் என்பது விளங்கலாம். (3) லார்ட்ஸ் சபையானது சுவாரஸ்யமான விவாதங்கள் நடக்குமிடம். முன்பே கூறியபடி பல நிபுணர்களையும் மேதாவிகளையும் லார்ட்ஸ் சபைக்கு அரசர் நியமிக்கலாம். காமன்ஸ் சபையில் என்றைக்கும் அவசரமே. பேசக்கூட அவகாசமிராது. லார்ட்ஸ் சபையிலோ பல நிபுணர்கள் தம்முடைய உயர்ந்த அநுபவத்தின் பயனாகப் பலவிஷயங்களை விரித்துரைப்பார்கள். பத்திரிகைகளின் மூலம் பொதுஜனங்கள் அவைகளைப் படித்து அறிவுப்பெருக்கை அடைவார்கள்.

பலதேசங்களிலும் மேல்சபையினருடைய அதிகாரத்தைக் குறைத்திருப்பது வாஸ்தவமே யானாலும் சில சமயங்களில் இருசபைகளுக்கும் பெருத்த அபிப்பிராயபேதம் ஏற்படலாம். இங்கிலந்தைத் தவிர வேறு சில தேசங்களில் சட்டபூர்வமாக இவ்விரு சபைகளுக்கும் ஒரே அந்தஸ்து இருப்பதால், மேல்சபையும் சில தடவைகளில் வளையாமல் நிற்பதுண்டு. அப்பொழுது அரசாங்கமே ஓடாமல் நின்று போகும் நிலைமையை யடைந்துவிடும். அதைத் தடுப்பதற்கு ஒரு வழியை அமெரிக்கர்கள் பின்பற்றுகின்றனர். இருசபைகளுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படும்போதெல்லாம் கீழ்ச் சபையிலிருந்து மூவரும் ஸெனட்சபையிலிருந்து மூவரும் ஒன்றுகூடி ஆலோசித்து ஒரு சமாதானத்திற்கு வருவது வழக்கம். ஒவ்வொருவரும் தமது பிடியை ஓரளவு நழுவவிட்டு மற்றவருடைய அபிப்பிராயத்தையும் சற்று சாவதானமாகக் காதில் வாங்கிக்கொண்டால் சமரஸ நிலைமை ஏற்படுவது நிச்சயம். ஆஸ்திரேலியாவில் வேறொரு முறை அநுஷ்டானத்திலிருந்து வருகிறது. இருசபைகளுக்கும் வேற்றுமை அதிகரித்துவிட்டால் உடனே ஗வர்னர் அவ்விரு சபையினரையும் கூட்டி ஒரே சபையாக உட்காரச்செய்து அந்தக் கூட்டத்தில் தீர்மானத்தைப் பிரரேபிக்கச் செய்வார். அவ்விடத்தில் நிறைவேறிவிட்டால் அது சட்டமாய்விடும்.

5. ஜனங்களே நேராக சட்டமியற்றுதல் : உற்பத்தி செய்தல், அபிப்பிராயத்திற்கு விடுதல்:—ஜனநாயக ஆட்சியொன்றே நியாயமான ஆட்சி என இக்காலத்தில் எல்லோரும் கூறுகிறார்கள். ஜனநாயக ஆட்சி என்றால் ஜனங்கள் தாமாகவே தமது வியவகாரங்களை நேராக நடத்திக்கொள்ளும்முறையெனவே பொருள்படும். ஆனால்இந்தியாபோன்ற

பெரிய கண்டத்தில் ஜனங்களெல்லோரும் ஒன்றுகூடிச் சட்டமியற்றுவது சாத்தியமானதல்ல. அதனாலேயே ஜனங்கள் தமது பிரதிநிதிகளை யனுப்பி நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர். ஜனநாயக ஆட்சி எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதைப் பின்னோர் அத்தியாயத்தில் விவரிப்போம். இப்பொழுது ஜனங்களாகவே சட்டமியற்றும் வேலையைப் பகிர்ந்துகொள்ளும் முறையைப்பற்றிப் பேசுவோம். ஜனங்களனைவரும் பேதா பேதமின்றி சட்டமியற்றும் வேலையில் சம்பந்தப்படாமல் போனாலும் ஓட்டுரிமை பெற்றவர்களாவது அதில் சிறிதளவு சம்பந்தப்பட வேண்டியது ந்யாயமாகும். அப்பொழுதுதான் சிறிதளவு ஜனநாயக ஆட்சியாவது நடைபெறுகிறதெனக் கூறலாம். கிரீஸ், உரோம் முதலான பண்டைக்கால இராஜ்ஜியங்களில் ஜனங்கள் தாமாகவே ஒன்றுகூடிச் சட்டமியற்றுவது வழக்கமாக இருந்தது. ஸ்விட்ஜர்லந்து தேசத்தில் உள்ள சிறிய ஜில்லாக்களில் இத்தகைய மகாஜன சபை வெகு காலமாய் இருந்துவருகிறது. ஒரு சிறிய ஜில்லாவில் பதினாயிரம் ஜனங்கள் இருந்தால் அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி விஷயங்களை ஆலோசிக்கலாம். ஆனால் இக்காலத்தில் பெரிய இராஜ்ஜியங்களிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்கள் எவ்விதம் ஒன்றுகூட முடியும்? ஒருகால் தந்தி, தபால் முதலான நவீனவசதிகளின் மூலம் ஜனங்கள் ஸ்தூலமாகப் பிரிந்திருந்த போதிலும் ஒரே கூட்டத்தினர் போல நடந்துகொள்ளலாம். மேலும் பிரதிநிதி சபைகளில் இப்பொழுது பலருக்கு நம்பிக்கை யற்றுப்போய்விட்டது. பொதுஜன அபிப்பிராயத்தை யநுசரித்துச் சட்டசபை நடந்துகொள்வதில்லை என்பதை எல்லோரும் உணர்ந்து வருகின்றனர். ஆகவே சில முக்கியமான விஷயங்களை

யாவது (சட்டசபையில் நிறைவேறியதற்குப் பின்னர்) ஜனங்களுடைய ஓட்டுக்குவிடுவது சிலாக்கியமெனத் தோன்றுகிறது. சட்டசபையில் கட்சித் தலைவர்களுக்கடங்கியோ அல்லது வேறு காரணத்தாலோ பிரதிநிதிகள் ஒரு தீர்மானத்தை ஆதரிக்கலாம். பொது ஜனங்களோ எவருக்கும் அஞ்சாமல் தம்முடைய மனப்போக்கின்படி ஓட் செய்து அதே தீர்மானத்தைத் தள்ளுபடி செய்துவிடலாம். இதனால் முக்கியமான விஷயங்களையாவது ஜனங்களின் ஓட்டுக்கு விடலாமெனச் சிலர் கூறுகின்றனர். மற்றும் சிலர் இதற்கு விரோதமாகக் கூறுவர். சட்டமியற்றுவதற்கும், இராஜீய [illegible]ங்களைத் தீர்மானிப்பதற்கும், அநுபவமும் [illegible]றிவும் அத்தியாவசியமானவை. இராஜதந்திரிகளையே பிரமிக்கச்செய்யும் பெரிய விஷயங்களை சாதாரண ஓட்டர்கள் எவ்விதமாகத் தீர்மானிக்க இயலும். அவைகளைத் தீர ஆராய்ந்து பார்க்கும் அவகாசமே ஓட்டர்களுக்கு இராது. ஆனால் சரியாகவோ, தவறாகவோ சில தேசங்களில் இப்பொழுதும் ஜனங்களே நேராகவே சட்டமியற்றி வருகின்றனர். (1) உதாரணமாகச் சில தேசங்களில் அரசியல் முறையை மாற்றும் மசோதாவையோ அல்லது விசேஷத் தீர்மானங்களையோ பிரஜைகளின் நேர்முகமான ஓட்டுக்கு விடுவது வழக்கம். ஜனங்களில் பெரும்பான்மையோர் அதை ஆதரித்தால்தான் அது சட்டமாகும். இது "பொதுஜன அநுமதியைக் கோரும் முறை"யெனப்படும். அதாவது துரைத்தனத்தாரே பொது ஜனங்களை நாடுவதாகும். (2) ஒருகால் துரைத்தனத்தார் ஓர் அவசியமான தீர்மானத்தை நிறைவேற்றத் தவறிவிட்டால், ஜனங்களே பல பேர்கள் சேர்ந்து துரைத்தனத்தாருக்கு ஒரு மனு எழுதிக்கொண்டால், அவர்கள் அந்தச் சட்டத்-

தைச் செய்யத் துவக்கவேண்டும். அவ்வழியில் ஜனங்களுக்கே ஒரு புதிய சட்டத்தைப் பிரேரணைசெய்யும் உரிமை உண்டாகும். இது "பொது ஜனங்களே சட்டத்தைத் துவக்கும் முறை"யாகும். (3) பொது ஜனங்களுக்குச் சில தேசங்களில் இன்னொரு அதிகாரமும் உண்டு. அக்கிரமமாக நடந்துகொள்ளும் உத்தியோகஸ்தரையோ நீதிபதியையோ நீக்கும் உரிமை அவர்களுக்களிக்கப்பட்டிருக்கிறது. பொது ஜனங்கள் தங்களுடைய ஓட்டுமூலம் ஓர் உத்தியோகஸ்தரை நீக்கிவிடலாம். பொது ஜனங்களே நேராகச் சட்டம் இயற்றும் முறை ஸ்விட்ஜர்லந்து தேசத்திலேதான் மிக நன்றாகவும் வெகு காலமாகவும் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதைத் தெளிவாகத் தெரிந்துகொள்வ தவசியமாகும். ஸ்விஸ் ஜாதியார் ஜனநாயக ஊக்கம் ததும்பியவர்கள். ஸ்விட்ஜர்லந்து ஓர் ஐக்கிய நாடாகும். அதன்கீழ் 22 சிறு மாகாணங்கள் இருக்கின்றன. ஷை 22 மாகாணங்களுள் நான்கில் சகல ஜனங்களையும் அங்கத்தினராகக் கொண்ட மகா சபை யொன்று பண்டைக் காலம் முதல் இருந்து வருகிறது. யூரி என்ற ஒரு மாகாணத்தில் 24000 ஜனங்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் வருஷந்தோறும் ஒரு பெரிய மைதானத்தில் சபைகூடி வரி விதிப்பது, சட்டமியற்றுவது, உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பது முதலான காரியங்களைச் செய்கின்றனர். அங்குதான் பூர்ணமான ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகக் கூறவேண்டும். மற்ற மாகாணங்கள் அளவில் பெரியவை யாகையால், அவைகள் பிரதிநிதிசபைகளையேபெற்றிருக்கின்றன. ஆனால்அம்மாகாணங்களிலும் கூட, சட்டசபை நிறைவேற்றும் தீர்மானங்களைப் பொது ஜனங்களின் ஓட்டுக்கு விடுவது வழக்கம்.

அவைகளில் எட்டு அல்லது ஒன்பது மாகாணங்களில் எல்லா முக்கியமான தீர்மானங்களேயும் பொது ஜனங்களின் ஓட்டுக்கு விடுவது அவசியமா யிருந்து வருகிறது. மற்ற மாகாணங்களில் சட்டசபையின் தீர்மானங்க ளெல்லாம் பொதுஜன ஓட்டுக்கு அனுப்பப் படுவதில்லே. பொது ஜனங் கள் ஏதாவது ஒரு சட்டத்தைக் குறித்து விண்ணப்பம் செய்துகொண்டால், அதை மட்டும் பொதுஜன ஓட்டுக்கு அனுப்புவார்கள். எல்லா மாகாணஙகளிலும் அரசியல் முறையில் மாறுதல்களேச் செய்யும் தீர்மானங்கள் யாவும் பொது ஜனங்களின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரே சட்டமாகும். சட்டசபையில் நிறைவேறும் தீர்மானங்களே அங்கீகரிக்கவும் நிராகரிக்கவும் பிரஜைகளுக்கு அதிகார மிருப்பதைப் போலவே புதிய சட்டங்களேத் துவக்கவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. மாகாணத்திலுள்ள பிரஜைகள் சாதாரண சட்டங்களேயும் அரசியல் மாறுதல் சட்டங்களேயும் நிறைவேற்றும்படி சட்டசபையைத் தாமா கவே தூண்டலாம். ஸ்விட்ஜர்லண்டு ஐக்கிய துரைத் தனத்தின் நிர்வாகத்தில் அரசியல் மாறுதற் சட்டங்கள் யாவையும் தேசப் பிரஜைகளின் ஓட்டுக்கு அனுப்பியே தீரவேண்டும். எட்டு மாகாணங்களோ அல்லது 30,000 ஜனங்களோ விண்ணப்பம் செய்துகொண்டால் சாதாரணச் சட்டங்களேயும் பொதுஜன ஓட்டுக்கு அனுப்பியே தீர வேண்டும். மேலும் ஐம்பதாயிரம் பிரஜைகள் சேர்ந்து கையெழுத்திட்டு அரசியல் மாறுதல் சட்டத்தைத் துவக்க முடியும். இம்முறை ஸ்விட்ஜர்லண்டில் மிக நன்றாக நடை பெற்று வருகிறது. 1874-ம் வருஷத்திற்கும் 1908-ம் வரு ஷத்திற்கும் இடையில் ஸ்விட்ஜர்லண்டில் முப்பது தீர்மா னங்கள் பொதுஜன வாக்குக்கு அனுப்பப்பட்டதாகவும்

அவைகளில் பதினொன்று அங்கீகரிக்கப்பட்ட தாகவும் மற்ற பத்தொன்பது தீர்மானங்கள் நிராகரிக்கப் பட்டதாக வும் கூறப்படுகிறது. இதினின்றும் சட்ட சபையானது பொது ஜனங்களின் அபிப்பிராயத்தையே எப்பொழுதும் பிரதிபலிக்கிற தில்லையென்பது விளங்குகிற தல்லவா?

அமெரிக்காவிலும் சில மாகாணங்களில் பொதுஜன அங்கீகாரத்திற்குச் சட்டங்களை அனுப்புவதுண்டு. பிரஜை களாகவும் சட்டத்தை ஆரம்பிப்பதற்குச் சில இடங்களில் வசதி செய்யப்பட் டிருக்கிறது. அமெரிக்காவில் ஜனங் களுக்கு இன்னோர் அதிகாரமும் உண்டு. அங்கு அதி பதியையும் நியாயாதிபதிகளையும் ஜனங்களே தேர்ந் தெடுத்து உத்தியோகத்தில் நியமிப்பதாக முன்பு கூறி னோம். ஜனங்கள் விரும்பினால், அவர்களை உத்தியோகத்தி லிருந்து நீக்கிவிடலாம். ஒரு குறித்த உத்தியோகஸ்தரை நீக்கிவிட வேண்டுமென அவர்கள் ஓட் செய்யவேண்டும். அதற்குத் 'திருப்பி யழைக்கும் முறை' எனப்பெயருண்டு. அதன் கருத்து, ஜனங்களுடைய நம்பிக்கையைப் பெற் றிருக்கும் வரையில் எவரும் பொறுப்பான உத்தியோக பதவியை வகிக்கலாம் என்பதாம். அந்த வழக்கத்தைச் சிலர் ஆதரித்தும் சிலர் கண்டித்தும் வருகின்றனர். ஜன நாயக தத்துவப்படி, பிரஜைகளின் அபிப்பிராயமே மேலானதாகையால், அதை இழந்தவன் உத்தியோகத்தை யும் இழக்கவேண்டும் எனக் கூறப்படுகிறது. அநீதியாய் நடந்துகொள்ளும் நியாயாதிபதிகளையும் அக்கிரமமாக நடக்கும் உத்தியோகஸ்தர்களையும் தண்டிப்பதற்கு அதுவே சரியான வழியென்றும், தள்ளுபடி செய்யப்படுவோம் என் கிற அச்சமே உத்தியோகஸ்தர்களை நல்வழிப் படுத்தும் என்றும் சிலர் கூறுவர். ஆனால் அந்த முறையைக் கண்டிப்

பவர்கள் கூறுவதும் நியாயமாகவே இருக்கிறது. பிரஜைகள் எப்பொழுதும் பக்ஷபாத மில்லாமலும் விவேகத்துடனும் நடந்து கொள்வார்கள் எனச் சொல்ல முடியாது. நியாயாதிபதியையே பிரமிக்கச் செய்யும் பல குற்றங்களின் உண்மையை, ஓட்டுக் கொடுப்பதைக்கூட ஒழுங்காய் அறியாத சாமானிய ஜனங்கள் எவ்விதம் கண்டுபிடிப்பார்கள்? அவர்கள் உண்மையை சரிவரத் தெரிந்துகொள்ளாமல், ஆதாரமற்ற செய்திகளைக் கேட்டு ஆத்திரமடைந்து, திறமையுள்ள உத்தியோகஸ்தனையும் நீக்கி விடலாம். மேலும், உத்தியோக காலம் நிச்சயமில்லாவிடில் எந்த உத்தியோகஸதரும் சரியாக வேலை செய்வதற்கு அக்கரை ஏற்படாது. பொதுவாகப் பேசுமிடத்து அந்த வழக்கம் நன்மை பயக்காமல் அதிகமான தீமையை உண்டாக்கக் கூடியதாகவே முடியும். அதிலும், நியாயாதிபதிகளை விலக்கும் வழக்கம் நிரம்பவும் கெடுதலானது. அமெரிக்காவில் கூட வாஷிங்டன் முதலான மாகாணங்களில் நியாயாதிபதிகளை விலக்கும் உரிமை ஜனங்களுக்குக் கிடையாது. நியாயாதிபதியின் வேலை மிகவும் சிக்கலானது. அவர் பட்சபாதமின்றி நடக்கவேண்டும். ஒவ்வொரு வழக்கிலும் ஏதாவதொரு கட்சிக்கு விரோதமாகவே அவர் தீர்ப்புச் சொல்ல வேண்டும். அவ்வாறு நியாய சபையில் தோற்றுப் போனவர்கள் எல்லோரும் சேர்ந்து ஓட்கொடுத்து அந்த நியாயாதிபதியைத் துரத்த முயன்றால், அந்த நாட்டில் நீதிபரிபாலனம் அப்படியே நின்றுபோக வேண்டியதாகவே முடியும். நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கும் தமது பதவியைப் பற்றிய பயமே இருத்தல் கூடாது. குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பது அரசாங்கத்தாரின் வேலை. அதை ஜனங்கள் ஏன் தமது பொறுப்பி லெடுத்துக்கொள்

வது? பொதுஜனங்களுடைய மதிப்பை இழந்துவிடும் பயமொன்றே உத்தியோகஸ்தர்களை நல்வழிப் படுத்திவிடும். மேலும் உத்தியோகஸ்தர்கள் தமது தயவைப் பெற்றாலன்றிப் பதவியை இழக்க வேண்டியதென்ற இறுமாப்பை ஜனங்கள் கொண்டால், அவர்கள் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய மாட்டார்கள்.

10-வது அதிகாரம்

துரைத்தன நிர்வாகம்.

1. நிர்வாகஸ்தரிடம் அதிகாரம் இருப்பது அத்தியாவசியமானது:—சட்ட சபையினர் உற்பத்தி செய்யும் சட்டங்களை அநுபவத்திற்குக் கொணர்ந்து காரியங்களை நிர்வகிப்பவர்களே துரைத்தன நிர்வாகஸ்தர் எனப்படுவர். சென்னை மாகாண நிர்வாக சபையினர் என்றால் பொதுவாக நாம் கவர்னரையும் அவருக்குக் கீழ் உள்ள சட்ட மெம்பர், உள்நாட்டு மெம்பர், ரெவினியூ மெம்பர், வரவுசெலவு மெம்பர், மூன்று மந்திரிகள் ஆகியவர்களையே குறிக்கிறோம். ஆனால் அரசியலை நிர்வகிப்பவர்கள் இந்த எழெட்டு மனிதர்கள் மாத்திரமே யல்லவென்பது வெளிப்படை. அவர்களுக்குக் கீழ் எத்தனையோ காரியதரிசிகளும், உபகாரியதரிசிகளும், குமாஸ்தாக்களும் வேலை செய்து நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர். அரசை மூன்றாகப் பிரித்து, அதில் ஒருபாகம் நிர்வாகப் பிரிவு எனக்கூறினோம். கவர்னர்முதற்கொண்டு அரசியல் நிர்வாகத்தில் சம்பந்தப்படும் சேவகர்வரையில் நிர்வாகப் பிரிவைச் சேர்ந்தவர்களே யாவர். சட்ட சபை அங்கத்தினர்களும் நியாயாதிபதிகளும் இந்தப்

பிரிவைச் சேர்ந்தவர்களாகார். தபால், ரெவினியூ, ஸர்வே, கல்வி முதலான இலாகாக்களில் ஏற்பட்டுள்ள உத்தியோகஸ்தர்களெல்லோரும் இந்த நிர்வாக கோஷ்டியைச் சேர்ந்தவர்களே யாவர். அவர்களுடைய உதவியும், சேனை கப்பற் படை ஆகியவற்றின் உதவியுமின்றி கவர்னரும் மந்திரிகளும் எதையும் செய்ய இயலாது. ஆனால் நாம் இனிப் பொதுவாக 'நிர்வாக சபையினர்' என்று கூறும்பொழுது, கவர்னர், மந்திரி முதலான சிறு கோஷ்டியையே குறிப்பதாகக் கொள்ளவேண்டும். அரசியல் நிர்வாகம் நடைபெறுவதற்குக் கீழ் உத்தியோகஸ்தர்களுடைய உதவி அவசியமே யானாலும், பொதுவான கொள்கைகளை அமைப்பதும் முக்கியமான உத்தரவுகளை இடுவதும் கவர்னரும் மந்திரிகளும் நிர்வாக அங்கத்தினர்களுமே யாவர். மற்றவர் அவர்களது சொற்படி நடந்து அவர்கள் செல்லும் வழியையே பின்பற்றிப் பணிவாக நடந்துகொள்ளும் கீழ் வேலைக்காரர்களே யாவர்.

ஒவ்வொரு தேசத்திலும் சட்டசபைக்கு எத்தனையோ அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஆனால் நிர்வாக சபையோ (அதாவது முக்கிய நிர்வாக அதிகாரிகளின் கோஷ்டியோ) மிகவும் சிறியது. அதில் பத்து அல்லது அதிகமானல் இருபது பேர்களுக்கு மேல் இருக்கமாட்டார்கள். அதற்குக் காரணம் வெளிப்படை. சட்டசபையானது பிரசங்கங்களும் வாத தர்க்கங்களும் நடைபெறும் இடமாதலால், அங்கு அநேக நிபுணர்கள் இருப்பது நல்லது. நிர்வாக காரியமோ அவ்விதமாகாது. நிர்வாக சபையினர் சுறுசுறுப்பையும், உறுதியையும், சமயோசித புத்தியையும், ஒரே போக்கையும் காட்டி வரவேண்டும். வருமான வரியை அதிகப்படுத்தலாமா கூடாதா என்பதைப் பற்றிச்

சட்டசபை பத்து தினங்கள் வரையில் விவாதம் செய்தாலும் பாதகமில்லை. ஆனால் ஒரு சத்துரு நாட்டின்மீது படையெடுத்திருக்கும் சமயத்திலும், பெரும் பஞ்சமோ, கொள்ளை நோயோ, வேறுவித அபாயமோ தேசத்தைப் பீடித்திருக்கும் பொழுதும் நிர்வாக சபையினர்ஒரே விநாடியில் திட்டமான முடிவுகளைச் செய்யாமல் தயங்கி நின்றால், நாட்டின் கதி அதோகதி யாய்விடும். மேலும் சம அந்தஸ்துடைய பலர் ஒன்றுகூடினால், அவர்களுக்குள் ஒற்றுமையே ஏற்படுவது கடினம். தன்னுடைய புத்தியை யொட்டி, தான் கூறுவதே சரியென ஒவ்வொருவனும் கூறுவான். யாருக்கு யார் விட்டுக் கொடுப்பது என்பது தீர்க்க முடியாத பெரும் விஷயமாய்விடும். அதை உத்தேசித்தே நெப்போலியன் என்ற மகா யுத்தவீரர் ஒருசமயம் "பயிற்சியுள்ள இரண்டு சேனைத்தலைவரைக் காட்டிலும்பயிற்சியற்ற ஒருவனே மேலானவன்" எனக் கூறினார். அதிக துரிதத்தில் ஓர் உறுதியான தீர்மானத்திற்கு வருவது சிறு சபையினராலேயே கூடும். அதை யொட்டியே பல தேசங்களில் நிர்வாக சபையில் பத்துமுதல் இருபது மனிதர்களையே அங்கத்தினராக ஏற்படுத்தி இருக்கின்றனர்.

சிறு தொகையினரைக் கொண்ட நிர்வாக சபையிலும் கூட, எவரேனும் ஒருவரிடத்திலேயே அதிகாரம் முழுதும் அடங்கிவிடுவதை நாம் காண்கிறோம். சென்னை மாகாண நிர்வாக சபையில் ஏழெட்டு அங்கத்தினர்களே இருந்தாலும், அவர்கள் எல்லோரும் கவர்னருக்கு அடங்கியே நடப்பார்கள். அவ்வாறே உலகில் ஒரு முக்கிய இராஜ்ஜியமான அமெரிக்காவில் அதிபதி ஒருவரே சகலமான நிர்வாகங்களையும் உண்மையில் நடத்தி வருகிறார். மந்திரிகள் எல்லோரும் அவராலேயே நியமிக்கப்படவும்

நீக்கப்படவும் கூடியவர்கள். இங்கிலந்திலோ மந்திரி சபையில் இருபது பேர்கள் இருக்கிறார்களானாலும், அவர்களுக்குள் பிரதம மந்திரி, அன்னிய நாட்டு மந்திரி, பொக்கிஷ மந்திரி, உள்நாட்டு மந்திரி முதலான ஐந்தாறு பேர்களிடமே சகலமான செல்வாக்கும் இருந்து வருகிறது. அதிலும் பிரதம மந்திரியினிடமே முக்கியமான அதிகாரமெல்லாம் அடங்கி இருக்கிறது. அவ்வாறு நிர்வாக சபைக்கு எவரேனும் தலைமையதிகாரி இருப்பதே நன்மை பயக்கும். ஒவ்வொரு விஷயத்திலும் அவர் தம்முடைய இச்சைப்படியே நடக்குமாறு மற்ற மந்திரிகளை வற்புறுத்த வேண்டுமென்பதில்லை. ஆனால் சம அந்தஸ்தைக் கொண்ட பல மந்திரிகளுக்குள் போராட்டமேற்பட்டால் அதைத் தீர்ப்பதற்கு ஒருவருக்குக் கடைசியான அதிகாரம் இருப்பது அவசியமாகும். உதாரணமாக, அமெரிக்காவின் அதிபதிக்கு, யுத்த சமயத்தில் சேனைத் தலைவராக நடந்து கொள்ளும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. சட்டசபையின் குழப்பங்களை அவர் கவனியாமல் தம்முடைய முடிவான தீர்மானத்தை யொட்டி ஒரே போக்காக நடந்து கொள்வார். அந்த விஷயத்தை மனதிற்கொண்டே சிலர் சம அதிகாரமுடைய பல அங்கத்தினர்களைக் கொண்ட நிர்வாக சபை உதவாது எனச் சொல்லுகின்றனர். உதாரணமாக, நமது மாகாண சபையில் பத்து மந்திரிகள் இருப்பதாக எண்ணிக் கொள்வோம். (சாதாரணமாய், அவர்களுக்குத் தலைவராய் ஒரு பிரதம மந்திரி இருப்பது வழக்கம்) ஷை பத்துப் பேர்களும் சம அந்தஸ்துடையவர்களாயிருந்தால், அனைவரும் சேர்ந்தே நிர்வாகத்தை நடத்தவேண்டியிருக்கும். அது ஒருவிதத்தில் நலமானதே. ஒருவர்மீதொருவர் ஆதிக்கம் செலுத்தாமல், எல்லோரும் கலந்து ஆலோசித்து

ஒத்துழைப்பது சிறந்த பயனைத் தரும். ஆனால் ஏதோ அவசர சமயத்தில் அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலோ, சுறுசுறுப்பாக நிர்வாகம் நடைபெறாது. ஆதலால் சம அந்தஸ்தைக் கொண்ட பல நிர்வாக அதிகாரிகள் இருந்தாலும், ஒவ்வொருவரும் ஒரு குறித்த இலாகாவைத் தமக்கெனப் பிரித்தெடுத்துக் கொண்டு வேலை பார்ப்பதே வழக்கமாக இருக்கிறது. 1793-94-ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்தைப் பரிபாலித்த "பொதுநலக்கமிட்டி"யில் பதினேர் அங்கத்தினர் இருந்தனர். அவர்கள் மேற்கூறியவாறுதான் ஒவ்வொருவரும் ஓர் இலாகாவை மேல் பார்வை பார்த்து வந்தனர். பண்டைக் காலத்தில் கிரீஸ் தேசத்தில் இருந்த ஸ்பார்ட்டா நகரத்திலும், உரோம் இராஜ்ஜியத்திலும் சம அந்தஸ்தைக் கொண்ட நிர்வாகஸ்தர்களே இருந்து வந்தனர். ஆனால் இம்முறை சிலாக்கியமான முறை யல்லவென்றே பலரும் கூறி வருகின்றனர்.

ஸ்விட்ஜர்லந்து தேசத்தில் மட்டும் இந்தப் 'பன்மை நிர்வாகம்' (சம அந்தஸ்தைக் கொண்ட சிலரின் ஆட்சி) மிக ஒழுங்காக நடைபெறுகிறது. அங்கு முதன்மையான நிர்வாக சபைக்கு பண்டஸ்ராத் என்று பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதில் எழு மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய உத்தியோக காலம் மூன்று வருஷம். வருஷத்திற் கொருமுறை இவ்வெழுவரில் ஒருவர் ஸ்விட்ஜர்லந்து நாட்டின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் படுவார். ஆனாலும் மற்ற மந்திரிகளைக் காட்டிலும் அவருக்குச் சிறிதளவும் அதிகமான உரிமைகள் இல்லை. எழு மந்திரிகளும் ஒவ்வோர் இலாகாவை மேல்பார்வை பார்த்து வருகிறார்கள். அந்த முறையினால் ஸ்விட்ஜர்லந்தின் அரசியல் நிர்வாகம் நிரம்பவும் திறமையாக நடத்தப் படுகிறது.

உலகில் அதற்கு அதுவே திருஷ்டாந்தமாக இருக்கிறது. இங்கிலந்திலோ மந்திரி சபையில் பிரதம மந்திரியே முதன்மை ஸ்தானம் வகிப்பவர். மற்றவர்கள் அவருக்கடங்கியே நடப்பார்கள்.

2. நியமனமுறை: பரம்பரையான நிர்வாகஸ்தர்:—ஒவ்வொரு தேசத்திலும் நிர்வாக சபை வெவ்வேறு விதமாக அமைக்கப் படுகிறது. சட்டசபைக்கும் அதற்கும் உள்ள சம்பந்தமும் வேறுபடுகிறது; அதன் உத்தியோக காலமும் வெவ்வேருக இருந்து வருகிறது. சில இடங்களில் பரம்பரையாய் ஒரே குலத்தினர் நிர்வாகத்தை வகித்து வருகின்றனர். அரசர், சக்கரவர்த்தி முதலானவர்கள் இந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்களே. அவர்கள் தங்கள் ஆயுள்காலம் முழுதும் உத்தியோகம் வகிக்கலாம்; மேலும் அவர்களுடைய சந்ததியினர்களே அவர்களது காலத்திற்குப் பின் அந்தப் பதவியை வகிக்கின்றனர். ஜனநாயக தத்துவத்தைக் கொண்டு நோக்கினுல், இந்த வழக்கம் முற்றிலும் பிற்போக்கானதாகவே தோன்றும். திறமையாக அரசு செலுத்தும் ஓர் அரசனுடைய புத்திரனே சந்ததியாரோ திறமையாக நடந்துகொள்வரென்பதை நிச்சயமாகக் கூற முடியாது. ஒரு பலசாலியான அரசனுடைய சந்ததியார் திறனற்றவர்களா யிருந்ததுபற்றி எத்தனையோ அரச குலங்கள் நசித்துப் போனதை நாம் தேச சரித்திரங்களில் காண்கிறேம். ஆனுல் இங்கிலந்திலும் மற்ற சில தேசங்களிலும் இப்பொழுதும் கூட அரசர் இருந்து வருவதை நாம் அசட்டை செய்தல் கூடாது. வெகுகாலமாக இந்த தேசங்களில் அரசகுலம் இருந்து வருகிறதாகையால், அதற்கு ஒரு தனியான பெருமை ஏற்பட்டிருக்கிறது. இங்கிலந்தில் அரசரிடம் பொது ஜனங்களுக்கு அதிக

மான பிரியம் உண்டு. அமெரிக்காவிலோ அரசரே இல்லை. அமெரிக்கர்கள் அரசரை விரும்புவதே இல்லை. இங்கிலந்தின் மகா ஜனங்கள் அரசர் போய்விடுவதை விரும்புவதில்லை. ஆனால் அரசர் இருக்கும் தேசங்களிலெல்லாம் அவருக்கு உண்மையான அதிகாரம் கிடையாது. ஜனநாயகதத்துவம் ஓங்கியிருக்கும் இந்நாளில். பரம்பரையான அரசகுலத்தை சில தேசங்களில் அழிக்காமல் வைத்திருப்பதற்குக் காரணம் அரசர்களை வெறும் பதுமைகளாகச் செய்துவிட்டதே யாகும். இங்கிலந்தின் உதாரணத்தை எடுத்துக் கொண்டால், இது நன்றாக விளங்கும். இங்கிலந்தின் அரசியல் நிர்வாகம் அரசர் பெயராலேயே நடைபெற்று வருகிறது; அரசரே எல்லோருக்கும் தலைவர். ஆனால் உண்மையில் பிரதம மந்திரியும் அவருடைய சகாக்களுமே அரசர் பெயரை வைத்து நிர்வாக காரியங்களை நடத்தி வருகின்றனர். மந்திரிகளோ பொது ஜனங்களுடைய பிரதிநிதிகளே யாவர். இவ்வாறு அதிகாரம் இல்லாத ஓர் அரசரை வைத்துக்கொண்டு அவருடைய பெயராலேயே மந்திரிகள் நிர்வாகத்தை நடத்துவது சில முக்கியமான நன்மைகளை யளிக்கும். அவையாவன:

1. அரசாங்கத்தின் பல ஸ்தாபனங்களும் அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்குமானால், ஜனங்களுக்கு அவைகளிடம் மதிப்பு ஏற்படாது. அவைகள் தொடர்ச்சியாகவும், நிரந்தரமாகவும் இருக்குமானால் பிரஜைகள் தம்மை யறியாமலே ஷை புராதன ஸ்தாபனங்களை மதித்து நடப்பார்கள். அரசருடைய விஷயமும் அது போன்றதே. மந்திரிகள் ஐந்து வருஷத்திற் கொருமுறை மாறிக்கொண்டே இருப்பதனால், அரசாங்கத்தின் சமரீதியான போக்கு தடைப்பட இடமுண்டாகும். ஒரு வருஷம் தொழிற்கட்சி

யினர் அதிகாரத்தை வகித்துத் தம்முடைய கொள்கையை யொட்டி ஆட்சி நடத்துவர். மறுவருஷம் வேறு கட்சியார் அந்தப் பதவியை வகிக்கும்படி நேர்ந்தால், தொழிற் கட்சியினர் செய்ததற்கு நேர் விரோதமாய் அவர்கள் நிர்வாக பரிபாலனம் செய்யத் தொடங்குவார்கள். ஒரு கட்சியினர் வருமான வரியை விதித்தால் இன்னொரு கட்சியினர் அதை எடுத்து விடுவார்கள். அதைக் காணும் ஜனங்களுக்கு அரசாங்கம் ஸ்திரமான புத்தியற்றது என்ற எண்ணமுண்டாய் விடும். அரசர் இருப்பதாலும், அவர் பெயராலேயே நிர்வாகம் நடைபெறுவதாலும் அரசாங்கம் என்பது மாறாத ஒரு தொடர்ச்சியான ஸ்தாபனம் என்ற தோற்ற முண்டாகும். இவ்வாறு பொது ஜனங்களிடம் அபிப்பிராயம் பரவுவது இராஜ்ஜிய பரிபாலனத்திற்கு மிக அவசியமான விஷயம். (2) அன்னிய அரசுகளுடன் உறவாடுவதில் அரசர் இருப்பதால் ஒரு தேசத்திற்குப் பல நன்மைகள் உண்டாகலாம். அரசருக்கு எங்கும் பிரத்தியேகமான கௌரவம் உண்டு. இரண்டு தேசங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டால், அவைகளைத் தீர்ப்பதற்கு இருநாட்டு மந்திரிகளும் சேர்ந்து ஆலோசிப்பதைக் காட்டிலும், அரசர் அந்த விஷயத்தில் கலந்து கொண்டால், வெகு சீக்கிரத்தில் சமரஸம் ஏற்பட்டுவிடும். ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்திக்கு 'சமாதானம் செய்யும் மன்னர்' என்ற கௌரவபட்டம் கிடைத்தது இதனாலேயே. அவர் பல தேசங்களுக்கும் தாமே நேரில் சென்று இங்கிலந்துக்கும் மற்ற தேசங்களுக்கும் உள்ள பல வேற்றுமைகளைத் தீர்த்து சிநேக பாவத்தை மீண்டும் உண்டாக்கினார். ஆதலால் ஒரு தேசத்தில் அரசர் இருப்பதனால் அதற்கு அன்னியதேச வியவகாரங்களில் மிகுந்த கௌரவம் ஏற்

படுகிறது. (3) அரசர் பெயருக்கு மாத்திரம் தலைவரே யானாலும், அவரிடம் மந்திரிகளுக்கு இயற்கையாகவே பயபக்தி விசுவாஸம் தோன்றுமாதலால், அவர்கள் தங்களது கடமைகளைச் சரிவர நடத்துவார்கள். தவறாக நடக்கும் மந்திரியை அரசர் திருத்தலாம். சில மந்திரிகள் அரசியல் நிர்வாகப் பதவியைப் புதிதாய் வகிக்கும்பொழுது, அவர்களுக்கு எல்லாம் கடினமாகத் தோன்றலாம். அரசரோ வெகு காலமாய்ப் பல கட்சிகளைச் சேர்ந்த மந்திரிகளுடன் பழகி வருபவராதலால் அவருக்கு அரசியல் நிர்வாகத்தில் அதிகமான அநுபவம் ஏற்பட்டிருக்கும். மந்திரிகளுக்கு அவர் புத்திமதிகளைக் கூறலாம். (4) இங்கிலந்தின் அரசருக்கு இன்னொரு பிரத்தியேகமான கௌரவமும் உண்டு. ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு அவரே தலைவர்; அந்த சாம்ராஜ்யம் கலைந்து போகாமல் ஒற்றுமையாக நிலைத்து நிற்பதற்கும் அவரே காரணம். ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில், கனடா, ஆஸ்திரேலியா, அயர்லந்து, தென்னாப்பிரிக்கா இந்தியா முதலான பல தேசங்களும் அடங்கி இருக்கின்றன. இந்தியா சுதந்திரம் பெறாதநாடாகையால் இது ப்ரிட்டிஷ் பார்லிமென்டாருக்கு அடங்கி நடக்கிறது. கனடா முதலான மற்ற தேசங்களோ ஏறக்குறைய பூர்ண சுதந்திரம் பெற்றிருப்பவை. அவைகள் விரும்பினால் ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விட்டுப் பிரிந்துபோய் விடலாம். இங்கிலந்தின் பல தொகுதிகளி லிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளடங்கிய பார்லிமென்ட் மகாசபைக்கு அந்த சுதந்திர தேசத்தினர் கீழ்ப்படிய மாட்டார்கள். அரசரொருவரே ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் எல்லோராலும் பாராட்டப் படுகிறவர். சாம்ராஜ்யத்தின் பல பாகங்களையும் ஒன்றாகக் கூட்டிவைப்பவரும் அவரே. (5) கடைசியாக இங்

கிலந்தின் அரசரைப்பற்றி இன்னொரு விசேஷமும் உண்டு. அரசனெவ்வழி குடிகளவ்வழி என்பது அங்கு பொருந்தும். நாகரிகத்திலும் மற்ற சமூக முன்னேற்ற சம்பந்தமான விஷயங்களிலும் அரசரே முதன்மை ஸ்தானம் வகிக்கிறார். அரசரும் அரசியும் எவ்விதமான உடையை எவ்வாறு தரிக்கின்றனரோ, அவ்வுடையை அவ்விதமே கனவான்களும் மற்றவர்களும் தரிசிக்கத் தொடங்குவார்கள். விக்டோரியா மகாராணியாரின் பரிசுத்தமான வாழ்க்கை அக்காலத்தில் இங்கிலீஷ் சமூகத்தில் நிறைந்திருந்த ஆபாசம் முழுவதையும் போக்கடித்து விட்டது எனக் கூறுவர். விசேஷ சந்தர்ப்பங்களிலும், திருவிழாக் காலங்களிலும், அரசருக்கே முதன்மையான ஸ்தானம் அளிக்கப்படும். பல மகா நாடுகளுக்கும் சபைக் கூட்டங்களுக்கும் அரச குலத்தினரைத் தலைமை வகிக்கும்படி ஜனங்கள் வேண்டுவர். இவ்விதமாக இங்கிலந்தின் அரசர் அரசியல் நிர்வாகத்தை அநேக விதங்களில் இயக்கி வருகிறார். இங்கிலந்தைப்போலவே இற்றலி, பெல்ஜியம் முதலான தேசங்களிலும் அரசர் இன்னமும் இருந்து வருகிறார்.

ஆனால் இங்கிலந்தில் ஏதோ பல சம்பவங்களின் பயனாக இவ்விதநிலைமை ஏற்பட்டிருப்பதைக் கொண்டு, அரசர் இருக்குமிடமெல்லாம் இதே நிலைமையே இருக்குமெனக் கூறிவிடமுடியாது. இங்கிலந்தில் சட்டப்படி அரசர் சர்வாதிகாரியாவர். பார்லிமென்டினுடைய தீர்மானங்கள் அவருடைய கையெழுத்தைப் பெறுவிட்டால் சட்டம் ஆகமுடியாது. சட்டபூர்வமாகத் தமக்குள்ள சர்வாதிகாரத்தை அரசர்அங்கு பிரயோகிப்பதில்லை. இது ஆங்கிலேய முறையின் தனியான ஒரு சிறப்பாகும். அதைக் கொண்டு எல்லா அரசர்களும் எவ்விடத்திலும் ஜனநாயக ஆட்சியை அறு

சரித்தே நடப்பார்கள் என எவ்விதம் கூறமுடியும்? அரசர் இருப்பதனால் அபாயம் நேரிட இடமுண்டு என்றும் சிலர் கூறுவர். முக்கியமாகப் பல அமெரிக்க இராஜீய வாதிகளே இவ்வித ஆட்சேபனைகளை எடுத்துக் காட்டுகின்றனர். அவர்களுடைய காரணங்கள் பின்வருவன. (1) அரசர் இருந்தால் அவர் சர்வாதிகாரமும் வகிக்கும் கொடுங்கோன் மன்னர் ஆய்விடலாம். தம்முடைய சேனையின் உதவியைக் கொண்டும், சில கனவான்களுடைய உதவியினாலும், அரசர் ஜனங்களை அடக்கிக் கொடுமையாக அரசாளத் தொடங்கலாம். அதாவது, இப்பொழுது ஒரு வரம்பிற்குட்பட்டு நடந்துகொள்ளும் அரசர்கள் அல்லது அவர்களது சந்ததியார் அவ்வரம்பை மீறிச் சென்று விடக்கூடும். ஏனெனில் அவர்களைக் கட்டுப்படுத்தியிருக்கும் வரம்பு சட்டத்தினால் ஏற்பட்டதல்ல. அவ்விதம் செய்யத் தொடங்கினால் ஜனங்கள் அவர்களை எதிர்க்கப்போதிய பலம் பெற்றிருப்பது அரிது. (2) அன்னிய நாடுகளுடன் உறவாடுவதில் அரசர் தமதிஷ்டப்படி செய்வாரேயன்றி, ஜனங்களுடைய அபிப்பிராயத்தை யொட்டி நடந்துகொள்ள மாட்டார். தந்திரமாகவும், சாமர்த்தியமாகவும், சமயோசித புத்தியுடனும் அவர் மற்ற அரசுகளுடன் நடந்துகொள்ள வேண்டும். அவ்விஷயத்தில் அவரைக் கட்டுப்படுத்துவோர் எவருமிலர். அவர் விரும்பினால் தமது தேசத்திற்குத் தீங்கையும் விளைவித்துவிடலாம். (3) திறமையான ஓர் அரசருடைய சந்ததியார் அனைவரும் திறமையுடனிருப்பார்கள் என எதிர்பார்ப்பதும் மதியீனமே. அரசவம்சத்தில் ஒரு மூடன் ஜனித்தால் அவனையும் அரசனுக்கி மரியாதை செய்வது ஏளனத்திற்கிடமானதேயன்றி இராஜ்ய நிர்வாகமாகாது. (4) ஒரு பெரிய தேசம் முழுதையும்

தம்முடைய சொத்தைப்போலச் சந்ததியினருக்கு அளித்துவிடும் உரிமை அரசருக்கு இருப்பது விநோதமேயாகும். இப்பெரிய சொத்துரிமையை அவருக்குக் கொடுத்தது யார் என்ற கேள்விக்கு விடை கூறுவது கடினமாகும். இக்காரணங்களால் பரம்பரையான ஓர் அரசகுலம் இராஜ்ய நிர்வாகம் செலுத்துவது நியாயமுமாகாது; நன்மையையும் உண்டாக்காது; இங்கிலந்தின் திருஷ்டாந்தத்தைக் கொண்டு நாம் உலகம் முழுதையும் நோக்கக்கூடாது; இங்கிலந்தில் விக்டோரியா மகாராணியாரும் அவருக்குப் பின் வந்தவர்களும் மிகவும் திருப்திகரமாக அரசாண்டு வந்ததைக்கொண்டு இங்கிலீஷ்காரர்கள் பரம்பரையான அரசகுலத்தினால் விளையக்கூடிய தீமைகளை மறந்து விடுகின்றனர் என்று ஷி அமெரிக்க ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் அரசகுலத்தினால் விளையக்கூடிய நன்மைகள் அதிகமா அல்லது தீமைகள் அதிகமா என்பதைப்பற்றிப் பலர் பலவிதமான அபிப்பிராயங்களை வெளியிடுகின்றனர். அரசரைப்பெற்ற இங்கிலீஷ்காரர்கள் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அரசரில்லாத தேசத்தினர் அதனால் உண்டாகக்கூடிய தீமைகளையும் வற்புறுத்திக் காண்பிப்பார்கள். 'அரசன்' என்ற ஸ்தாபனத்தைக் கண்டிப்பவர் கூறுவதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் அவர்கள் கூறுவதெதுவும் பிரத்தியக்ஷத்தில் நடைபெறாது. உலகில் சில தேசங்களில் அரசகுலம் அழிக்கப்படாமல் இருந்துவந்தாலும், அவ்வரசர்கள் எல்லோரும் பொது ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு அடங்கியவர்கள்; அவர்கள் பொறுப்புள்ள இராஜ்யத் தலைவர்களாகவேயிருக்கின்றனர். அவர்களிடம் சிறிதும் விஷமம் கிடையாது. யுத்தத்திற்கு முன் ஜெர்மனியை ஆண்டுவந்த கெய்ஸர் அரசர் மட்டுமே

சுயேச்சையாக ஆண்டுவந்தார். இப்பொழுது ஜெர்மனியில் அவ்வரசரை யகற்றிவிட்டு ஜனநாயகத்தை நிலைநாட்டிவிட்டனர். பி/2ரான்ஸ் தேசத்தில் 18-ம் நூற்றுண்டிலேயே அரசகுலத்தை வேரறுத்துவிட்டனர். இங்கிலந்து (அதற்குட்பட்ட குடியேற்ற நாடுகளான கனடா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா; இந்தியா) இற்றுலி, ஜப்பான், பெல்ஜியம், கிரீஸ் முதலிய தேசங்களில் இப்பொழுதுள்ள அரசர்கள் ஜனநாயக தத்துவத்தை யொட்டி ஆண்டுவருகின்றனர். அவர்கள் பெயருக்கு மாத்திரம் நிர்வாகத் தலைவர்களேயன்றி உண்மையில் எவ்வித இராஜ்யாதிகாரமும் அற்றவாகள். சிம்மாதனத்தில் அழகாய் வீற்றிருக்கும் வேலையே அவர்களுடையது; ஜனப் பிரதிநிதிகளே மற்ற காரியங்களைச் செய்து வருகின்றனர். இங்கிலந்தில் ஏற்படுவது போல மற்ற தேசங்களிலும் அவர்களால் பெரும் நன்மை ஏற்படாமல் போனுலும் அவர்கள் எவ்விதமான தீங்கையும் செய்ய இயலாது.

3. தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகஸ்தர் :—இதுவரையில் பரம்பரையாக நிர்வகித்துவரும் அரசரைப் பற்றியும், அவர் இருப்பதனுல் விளையும் சாதக பாதகங்களையும் ஆராய்ந்தோம். அவ்வித அரசர் இல்லாத பல தேசங்களிலும் இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபையே இருந்துவருகிறது. பழைய காலங்களில் கூட தேசத்தின் தலைவனைத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் இருந்துவந்தது. ஓர் அரசர் இறந்தபிறகு, அவருடைய புத்திரன் சிறுவனுகவோ, அல்லது, பலஹீனனுகவோ இருந்தால், ஜனங்கள் அவனை நீக்கிவிட்டு, அரசகுலத்தைச் சேர்ந்த ஒரு பலவானை அரசனுகத் தேர்ந்தெடுப்பார்கள். ஏனெனில் அக்காலங்களில் போர்புரிவதே அரசருடைய முக்கியக்

கடமையாக இருந்துவந்தது. பலஹீனனையோ சிறுவனையோ அரசனாக வைத்தால், தேசத்தைப் பகைவர் அபகரித்துவிடுவார்கள் என ஜனங்கள் அஞ்சினர். ஆனாலும் அவ்விதம் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரன் அரச குலத்தைச் சேர்ந்தவனாகவே இருப்பான். அதாவது ஜனங்கள் தங்கள் ஓட்டுரிமையின்படி பரம்பரையான அரச குலத்திலிருந்து ஒருவனைத் தேர்ந்தெடுத்தது போலாகும். இப்பொழுது நிர்வாகத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் விதம் தேசங்கள்தோறும் மாறுபடுகிறது. ஒவ்வொரு தேசத்திலும் ஒரு தனிமுறை யநுஷ்டிக்கப்படுகிறது. கீழ் வரும் திருஷ்டாந்தங்களினால் அது நன்கு விளங்கும். அமெரிக்காவின் நிர்வாகத் தலைவரான அதிபதியை ஜனங்களே நேராகத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால் இந்தியாவின் நிர்வாக அதிகாரியான கவர்னர் ஜெனரல் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. கவர்னர் ஜெனரலையும் மாகாண கவர்னர்களையும் இங்கிலந்தின் அரசர் பொறுக்கியெடுத்து அப்பதவிகளுக்கு நியமிக்கிறார். அவர்களைப் போலத் தேர்ந்தெடுக்கப்படாமல் வேறு ஓர் அரசனால் நியமிக்கப்படும் நிர்வாகத் தலைவர்கள் சுதந்திர நாடுகளில் இல்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் மட்டுமே இந்த நியமன முறை அநுஷ்டிக்கப்படுகிறது. கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, அயர்லந்து முதலான நாடுகளின் கவர்னர் ஜெனரல்களையும் அவர்களுக் குள்ளடங்கிய மாகாண கவர்னர்களையும் அரசரே நியமிக்கிறார். இந்த நியமனத் தலைவர்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான அதிகாரமில்லை. இவர்களிற் சிலருக்கு உண்மையான அதிகாரம் உண்டு. இந்தியாவின் கவர்னர் ஜெனரல் உண்மையான அதிகாரம் படைத்தவர். அவர் நிர்வாக பரிபால

னத்தில் கலந்துகொண்டு வேலை செய்யவேண்டும். கனடாவிலுள்ள கவர்னர் ஜெனரல் பெயருக்கு மாத்திரம் நிர்வாகத் தலைவரேயன்றி உண்மையான அதிகாரமெல்லாம் அந்நாட்டின் மந்திரிகளிடமே இருக்கிறது. அதாவது இங்கிலந்துக்கு அரசர் எவ்விதமோ அவ்விதமே கனடாவுக்கு கவர்னர் ஜெனரல் ஆவார். இந்தியாவில் வைஸ்ராய் இராஜப் பிரதிநிதியாய் இருப்பதுடன் உண்மையில் நிர்வாகத் தலைவராகவும் இருக்கிறார். அரசரால் நியமிக்கப்படுவோரான இவர்களை விட்டு, தேர்ந்தெடுக்கப் படுவோரை நாம் கவனித்தால், அவர்கள் தேசத்திற்கு தேசம் வேற்றுமைப்படுவார்கள். (1) தேர்ந்தெடுக்கும் முறையே பல தேசங்களில் வித்தியாசப்படுகிறது. அமெரிக்காவின் அதிபதி ஜனங்களால் நியமிக்கப்பட்ட சில இராஜீய சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அந்த இராஜீய சங்கங்கள் சரியாய் வேலைசெய்யாத காரணத்தால் ஜனங்கள் நேராகவே அவரைத் தேர்ந்தெடுப்பதாகக் கூறலாம். பி/2ரான்ஸ் தேசத்தின் தலைவரோ ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஜனப் பிரதிநிதி சபையும் ஸெனட் சபையும் சேர்ந்து ஒரே சபையாக உட்கார்ந்துகொண்டு அத்தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றன. அமெரிக்காவில் சில மாகாணங்களில் ஜனங்கள் நேராகவும், சிலவற்றில் ஜனங்கள் தமது பிரதிநிதிகளின் மூலமாயும் கவர்னரை நியமிக்கின்றனர். ஸ்விட்ஜர்லந்திலில் இன்னொரு புது அநுஷ்டானம் இருந்து வருகிறது. அங்கு சட்டசபை ஏழு மந்திரிகளையே நிர்வாகசபையாக அமைத்துவிடுகிறது. அவ்வேழுபேர்கள் பிறகு தம்மில் ஒருவரைப் பிரஸிடெண்டாக வருஷத்திற்கொரு முறை தேர்ந்தெடுக்கின்றனர். நிர்வாகத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஜனங்கள் எல்

லோரும் சேர்ந்து தங்கள் ஓட்டையளித்துத் தேர்தல் செய்வதைவிட, ஜனங்களால் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட இராஜீய சங்கங்கள் அவர்களைத் தேர்ந்தெடுப்பது சிறந்ததாகும். அது ஜனநாயக தத்துவத்திற்கும் சிறிதும் விரோதமானதுமல்ல. விஷயங்களை நன்கு அறிந்த சிலரே, அதிபதியின் பதவிக்குத் தகுதியானவர் யார் என்பதை அறியமுடியும். ஆனால் அநுபவத்தில் மேற்படி இராஜீய சங்கங்கள் சரியாக வேலை செய்வதில்லை. ஏனெனில் அவைகள் ஏதோ சில சுயநலப் பிரியர்களின் வசத்தில் அகப்பட்டு அவர்களுடைய இஷ்டப்படியெல்லாம் ஆட்டிவைக்கப்படலாம். அவைகளுக்குள்ளேயே கக்ஷிப் பிரதிகக்ஷிகளும் ஏற்படலாம். (2) சில நிர்வாகத் தலைவர்களுக்கு உண்மையான அதிகாரமும் சிலருக்கு வெறும் பட்டப்பெயர்மட்டும் இருப்பதை நாம் கவனிக்கவேண்டும். அமெரிக்காவின் அதிபதிக்கு உண்மையான அதிகாரம் உண்டு; பிரான்ஸ் தேசத்தின் பிரஸிடெண்ட் வெறும் பதுமையேயாவர். இங்கிலந்தின் அரசருக்கு இராஜகௌரவம் உண்டு, நிர்வாக அதிகாரம் கிடையாது. அமெரிக்காவின் அதிபதிக்கு இராஜகௌரவம் கிடையாது, நிர்வாக அதிகாரம் உண்டு; ஆனால் பிரான்ஸ் தேசப் பிரஸிடெண்டுக்கோ இராஜகௌரவமும்கிடையாது; நிர்வாக அதிகாரமும் கிடையாது என வேடிக்கையாகக் கூறுவதுண்டு. (3) நிர்வாகத்தலைவரைப்பற்றி ஒரு விஷயத்தில் மட்டும் அநேகமாய் எல்லா தேசங்களிலும் ஒற்றுமை உண்டு. அதாவது சட்டப்படி நிர்வாக அதிகாரத்தை (அவ்வதிகாரம் உண்மையாயினும் சரியே, பெயருக்கு மாத்திரமாயினும் சரியே) ஒரே மனிதனிடமே எல்லா தேசத்தினரும் அளித்திருக்கின்றனர். அவன் பெயராலே நிர்வாகம் நடைபெறும். மற்ற நிர்வாக

உத்தியோகஸ்தர்கள் சட்டப்படி அவனுக்கு அடங்கியவர்களே. ஆனால், ஸ்விட்ஜர்லந்திலே மட்டும் மற்ற மந்திரிகளும் பிரஸிடெண்டுக்கு அடங்கியவர்களல்லர். எழு மந்திரிகளும் சமஅந்தஸ்தைக் கொண்டவர்களே. (4) நிர்வாக உத்தியோகஸ்தர்களின் உத்தியோக காலமும் எல்லா தேசங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. வெகுகாலம் ஒரு பதவியை ஒரே மனிதன் வகிப்பது ஜனநாயக தத்துவத்திற்கு விரோதமாகும். ஏனெனில் நிரந்தரமாக ஒரே பதவியை வகிப்பவன் அநீதி செலுத்த ஆரம்பித்து விடலாம். அமெரிக்காவில் பல மாகாண பிரஸிடெண்டுகளும் நான்குமுதல் ஆறு வருஷகாலம் வரையில் உத்தியோகம் வகிக்கின்றனர். இரண்டு தடவைகள் சேர்ந்தாற் போல ஒருவனே உத்தியோகம் வகிக்கக்கூடாது என்ற விதியும் சில தேசங்களில் இருந்து வருகிறது. ஐக்கியநாட்டு அதிபதியின் பதவிக்கு ஒரே நபர் சேர்ந்தாற்போல இரண்டு தடவைகளில் தேர்ந்தெடுக்கப் படலாம். ஆனால், மூன்றுவது தடவை அவர் அதே பதவியை அபேக்ஷிக்கக் கூடாது என்று பொதுஜனங்கள் அபிப்பிராயப் படுகின்றனர். சட்டப்படி ஒரே அபேக்ஷகர் மூன்றுவது தடவையிலும் அப்பதவியை வகிப்பது குற்றமாகாது. அது ஜனநாயக தத்துவத்திற்கு அபாயத்தை விளைக்கக் கூடியதென்று பயந்தே ஜனங்கள் இவ்வித வழக்கத்தை அநுஷ்டித்து வருகின்றனர். அமெரிக்கர்கள் ஜனநாயக ஆட்சி முறையை முதலாக ஸ்தாபித்த பொழுது எவராகிலும் ஓர் அபேட்சகர் சுயேச்சையாய் ஆளத் தொடங்குவதைத் தடுக்க வேண்டுமென்று அவ்விதம் ஒரு வழக்கத்தை உற்பத்தி செய்தனர். ஆனால் இப்பொழுது அமெரிக்காவில் ஜனநாயக ஆட்சி ஸ்திரமாக நிலைபெற்றுவிட்டதாகையால் அந்த வழக்கத்தை விட்டுவிட்

டால் கெடுதல் ஏற்படாது. 18-வது நூற்றுண்டின் கடைசியிலும் 19-ம் நூற்றுண்டின் ஆரம்பத்திலும், பி/2ரான்ஸ் தேசத்தில் நேப்போலியன் என்ற யுத்தவீரர் முதலில் சில வருஷங்களுக்குத் தலைவராக நியமிக்கப் பட்டார். ஆனால் அவர் தம்முடைய பலத்தினல் தாமே சக்கரவர்த்தியாய் ஆளத் தொடங்கிவிட்டார். நீண்டகாலம் ஒருவருக்கே உத்தியோகத் தலைமையை அளிப்பது அபாயகரமென்று அதனல் எல்லோரும் எண்ண இடமுண்டாயிற்று. இப்பொழுது பி/2ரான்ஸ் தேசத்தின் பிரஸிடெண்ட் ஏழு வருஷங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்; அவர் சேர்ந்தாற்போல இரண்டு தடவையும் உத்தியோகம் வகிக்கலாம். ஆனல் அந்தப் பிரஸிடெண்டுக்கு உண்மையான அதிகாரமோ சக்தியோ கிடையாதென்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். மிகுந்த திறமையைக் கொண்ட ஒருவர் மூன்றுமுறை நிர்வாகம் செலுத்துவது தேசத்திற்கு நலமாகும். இரண்டு தடவை பதவியை வகித்துவிட்டு அதன் முடிவு காலத்தில் தேசத்திற்கு ஓர் அபாயம் வந்துவிட்டால் அப்பொழுது பழைய அபேட்சகரே பதவி வகிப்பது நன்மையாகும். அவரைப் பதவியை விட்டுத் துரத்திவிட்டு வேறொரு புதிய அபேட்சகரை நியமிப்பது, நல்ல தலைவரைவிட்டுப் பயிற்சியற்ற தலைவரைப் பதவியில் வைப்பது போலவேயாகும். இங்கிலந்தில் கிளா/2டிஸ்டன், டிஸ்ரேலி (?) ஸீகன்ஸ் பீ/2ல்டு முதலான பிரதம மந்திரிகள் ஒரு தடவைக்கு அதிகமாகவே மந்திரி பதவியை வகித்து வந்திருக்கின்றனர்.

4. பார்லிமேன்டரி துரைத்தனமும் நாந் பார்லிமேன்டரிதுரைத்தனமும்:—மேலே குறிக்கப்பட்டபடி, நிர்வாகஸ்தர்களை பாரம்பரையானவர்கள், தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் என்றும், உண்மையதிகார முடையவர்கள், பெய

ருக்கு மாத்திரம் அதிகாரம் உடையவர்கள் என்றும் பிரிப்பதில் ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும். பரம்பரை வர்க்கத்தைச் சேர்ந்த நிர்வாகஸ்தர் இங்கிலந்தின் அரசரைப்போலப் பெயருக்கு மாத்திரம் அதிகாரம் வகிக்கலாம்; அல்லது, யுத்தத்திற்குமுன் ஜெர்மனியிலிருந்த அரசரைப்போல உண்மையான அதிகாரமும் பெற்றிருக்கலாம். அவ்வாறே, தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகத் தலைவர், அமெரிக்க அதிபதியைப்போல உண்மையான அதிகாரமும் பெற்றிருக்கலாம்; அல்லது பி/2ரான்ஸ் தேச பிரசிடெண்டைப் போல அதிகாரமில்லாமலும் இருக்கலாம். நிர்வாகசபைக்கும் சட்டசபைக்கும் உள்ள சம்பந்தத்தையும் நாம் ஆராய வேண்டும். அரசாங்கத்தின் பல பாகங்களையும் பற்றிக் கூறிய அத்தியாயத்திலேயே இதைப்பற்றி நாம் குறிப்பிட்டிருக்கிறோம். பொதுவாகப்பேசுமிடத்து, நிர்வாகசபைகளை இரண்டு பெரிய பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். ஒன்று சட்டசபைக்கு உத்தரவாதியானது. மற்றது சட்டசபைக்கு உத்தரவாதியாகாதது. முதல்வகைக்கு இங்கிலீஷில் பார்லிமேன்டரி (Parliamentary) துரைத்தனம் எனவும், இரண்டாவது வகைக்கு நாங் பார்லிமென்டரி (Non Parliamentary) எனவும் பெயருண்டு. பார்லிமென்டரி துரைத்தனமென்றால், நிர்வாகசபையானது சட்டசபைக்குக் கட்டுப்பட்டு நடப்பது; சட்டசபையினாலேயே அது அமைக்கப்படுவது, சட்டசபை இஷ்டப்படும் பொழுது அதனால் நீக்கப்படவும் கூடியது; அதனுடைய உயிர் சட்டசபையின் ஆதரவிலேயே அடங்கி இருக்கிறது; அந்த ஆதரவு போய்விடுமானால், அதுவும் பதவியை இழக்க வேண்டியதே முடிபு. 'நாங் பார்லிமேன்டரி' (அதாவது பார்லிமென்டரியல்லாத துரைத்தனம்) என்பது சட்டசபைக்கு உத்தரவாதமாயிராதது;

சட்டசபை அதை நியமிப்பதுமில்லை; சட்டசபையினுல் அதை விலக்கவும் இயலாது; அது சட்ட சபைக்கு உட்படாமல் சுதந்திரமாகத் தனியே நிற்கிறது. பார்லிமேன்டரி துரைத்தனம் நடைபெறும் இடங்களில் பெயருக்கு மாத்திரம் உன்னத ஸ்தானத்தை வகிக்கும் ஓர் அரசனே அல்லது அதிகாரியோ இருப்பான். இங்கிலந்திலும், பி/2ரான்ஸ் தேசத்திலும் பார்லிமென்டரி துரைத்தனமே நடைபெறுகிறது; இங்கிலந்தில் அரசரும், பி/2ரான்ஸ் தேசத்தில் பிரசிடென்டும் பெயருக்கு மாத்திரம் தலைவர்களாயிருக்கின்றனர். அமெரிக்காவில் பார்லிமேன்டரியல்லாத துரைத்தனம் நடைபெறுகிறது. அமெரிக்காவில் துரைத்தனத் தலைவர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு உண்மையதிகாரத்தையும் வகித்து வருகிறுர். யுத்தத்திற்கு முன் ஜெர்மன் துரைத்தனமும் பார்லிமேன்டரியல்லாத வகையையே சேர்ந்திருந்தது. அதன் தலைமை ஸ்தானத்தை அரசரே வகித்துவந்தார்.

ஜனநாயக ஆட்சியில் இங்கிலந்தே எல்லா தேசங்களுக்கும் வழி காட்டியாயிருந்திருக்கிறதென்பதை நாம் முன்பே குறிப்பிட்டோம். இங்கிலந்தின் அரசியல் முறையை கவனித்தால், பார்லிமென்டரி துரைத்தனத் தத்துவம் நன்ருய்ப் புலப்பட்டுவிடும். இங்கிலந்தில் பழைய காலம் முதற்கொண்டே அரசருக்கு உதவியாக சில மந்திரிகள் இருந்து, அவருடன் இராஜ்ய நிர்வாகத்தில் ஒத்துழைத்து வந்திருக்கின்றனர். ஆனுல், அக்காலத்தில் தமது மந்திரிகளை அரசராகவே பொறுக்கியெடுத்துக் கொண்டாரே யன்றி, அவர்கள் பார்லிமேன்ட் சபையால் நியமிக்கப்படவில்லை. பார்லிமென்டார் அம்மந்திரிகளை சாதாரணமாக நீக்கவும் இயலாது. ஷை மந்திரி

கள் எப்பொழுதும் ஜனங்களுக்கு விரோதமாகவும் அரசருக்கு அநுகூலமாகவும் இருந்து வந்தனர். இப்பொழுது நமது தேசத்தில் ஜனங்களுக்கு விரோதமாக நடப்பவர்களுக்கு பெரிய உத்தியோக பதவி கிடைப்பதைப் போலவே அக்காலத்தில் இங்கிலந்திலும் நடந்துவந்தது. பிறகு பதினேழாம் நூற்றுண்டின் இறுதியில் மூன்றுவது வில்லியம் என்ற அரசர் பார்லிமெண்ட் சபையில் வலுவாக இருந்த கட்சியிலிருந்து தமது மந்திரிகளைப் பொறுக்கிக் கொண்டார். அதுதான் இங்கிலந்தில் பார்லிமெண்டரி துரைத்தனத்திற்கு விதை ஊன்றியது போன்றது. ஆனால் அச்சமயத்தில் அந்த முறை பூர்த்தியாக அமைந்துவிடவில்லை. பிற்காலங்களில், படிப்படியாகவே அது விருத்தியடைந்து தற்கால நிலைமையை அடைந்திருக்கிறது. இப்பொழுது இங்கிலந்தின் மந்திரி சபை (கா/2பினெட்) இருபது அங்கத்தினர்களைக் கொண்டது. அவர்கள் காமன்ஸ் சபை, அல்லது லார்ஃஸ் சபையின் அங்கத்தினராக இருப்பர். காமன்ஸ் சபையில் எந்தக் கக்ஷி வலுவாக இருக்கிறதோ அந்தக் கட்சியினரே மந்திரிகளாவர். இவ்விருபது பேர்களும் கூட்டான பொறுப்பையுடையவர்கள்; அவர்கள் எல்லோரும் ஒரே கொள்கையையே ஆதரிக்கவேண்டும்; தங்களுக்குள் அபிப்பிராய பேதமிருந்தாலும், அதை அவர்கள் பகிரங்கப்படுத்தக் கூடாது. அவர்களுக்கு பிரதம மந்திரியே தலைவர். பார்லிமெண்டார் அவர்களை நம்பும் வரையிலேயே அவர்கள் உத்தியோகம் வகிக்கலாம். அந்த நம்பிக்கை போய்விடுமானல், அவர்கள் இராஜீநாமாச் செய்துவிடவேண்டும். பி/2ரான்ஸ் தேசத்திலும் இதே முறை அநுஷ்டிக்கப்படுகிறது. மந்திரிகளில் ஒவ்வொருவரும் ஒவ்வோர் இலாகாவை மேல்பார்வை பார்த்து வருவார். இங்கி

லந்தின் கா/-பினேட் முறையை எந்தச் சட்டமும் ஏற்படுத்த வில்லை; அது நாளடைவில் படிப்படியாக சுயமாகவே விருத்தியடைந்து வந்திருக்கிறது. ஆனால் பி/2ரான்ஸ் தேசத்தில் இம்முறை நடக்கவேண்டுமென சட்டத்தி லேயே குறிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க அரசியல் முறையை கவனித்துப் பார்த் தால், அங்கு நிர்வாகத் தலைவரான அதிபதி சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை; ஜனங்களே அவரை நேராகத் தேர்ந்தெடுக்கின்றனர். ஒரு குறித்த காலத் திற்கு அவர் பதவி வகிப்பார். அவரது உத்தியோக காலத்தைச் சட்டசபை சாதாரணமாகக் குறைக்க இய லாது. அவர்மீது பெரிய குற்றங்களைச் சுமத்தினால் ஒரு வேளை அது சாத்தியமாகலாம். அவர் இன்னவிதமே நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் சட்டசபையினர் நிர்ணயம் செய்ய இயலாது. அதிபதியினுடைய கூட் டாளிகளான மந்திரிகளும் அவராலேயே நியமிக்கப்படு கின்றனர். அவர் இஷ்டப்பட்டால் மந்திரிகளை உத்தி யோகத்திலிருந்து உடனே நீக்கிவிடலாம். யுத்தத்திற்கு முன் ஜெர்மனியிலும் இத்தகைய துரைத்தனமே நடை பெற்று வந்தது. ஜெர்மன் சக்கரவர்த்தியும் அவரால் நிய மிக்கப்பட்ட பிரதம மந்திரியுமே சர்வாதிகாரிகளாயிருந் தனர். யுத்தத்திற்குப் பிறகுமுதல் ஜெர்மனியில் பார்லி மென்டரி துரைத்தனம் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவரு கிறது. நாம் மேலே கூறியவற்றிலிருந்து, சில விஷயங்களை யூகித்துக் கொள்ளலாம். பார்லிமென்டரி பார்லிமென் டரி யல்லாதது என்ற இரண்டும் அநுபவத்தில் வெவ்வேறு உத்தேசங்களை நிறைவேற்றி யிருக்கின்றன. யுத்தத்திற்கு முன் ஜெர்மனியின் முக்கிய பாகமான பிரஷ்யா தேசத்தில்

பார்லிமென்டரியல்லாத நிர்வாக சபையே இருந்து வந்தது; ஆனால் அங்கு இரண்டு சட்டசபைகள் இருந்து வந்தன; அவற்றில் ஒரு சபை பொதுஜனப் பிரதிநிதிகளால் அமைக்கப்பட்டிருந்தது. அதோடு, அங்கு அரசர் உண்மையான சுயேச்சாதிகாரம் பெற்றிருந்தார். இங்கிலந்திலோ பார்லிமென்டரி முறையானது அரசருடைய அதிகாரத்தையும் பிரஜைகளுடைய சுதந்திரத்தையும் சமரஸப்படுத்துவதாக ஏற்பட்டது. அதாவது, அரசர் தமது ஸ்தானத்தை விட்டு நீக்கப்படவில்லை; ஆனால் உண்மையான அதிகாரம் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்டது. பிரான்ஸ் தேச ஜனங்கள் ஜனநாயக தத்துவத்தைப் பின்பற்றி பார்லிமென்டரி முறையையே ஆதரிக்கின்றனர். அதே ஜனநாயக தத்துவத்தை அநுசரித்து அமெரிக்கர்கள், பார்லிமென்டரியல்லாத முறையை ஸ்தாபித்திருக்கின்றனர். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? ஒரே இராஜீய முறையானது பல தேசங்களிலும் அந்தந்த ஜனங்களின் குணவிசேஷங்களுக்கேற்றபடி வெவ்வேறான கருத்துகளுடன் அநுஷ்டிக்கப்படுகிறது. பார்லிமென்டரி, பார்லிமென்டரியல்லாதது என்ற இருவகையான நிர்வாகங்களின் சாதகபாதகங்களையும் இனி ஆராய்வோம். பார்லிமென்டரி துரைத்தனத்தின் நன்மை தீமைகளை முதலில் கவனிப்போம்.

(1) பார்லிமென்டரி துரைத்தனம் அமைக்கப்பட்டதின் மூலமே இங்கிலந்து, ஸ்பெயின், இற்றலி முதலிய தேசங்களில் ஜனநாயக தத்துவம் பரவியதானாலும், அரசகுலம் க்ஷீணிக்காமல் நின்று வருகிறது. அரசருக்கு உண்மையான அதிகாரம் இல்லையானாலும் அவரால் ஏற்படும் நன்மைகளை முன்பே விவரித்துக் கூறினோம். பார்லிமென்டரி துரைத்தனம் வளர்ந்திராத பட்சத்தில் ஜனநாயக தத்துவ

மாகிய பெரும் வெள்ளத்தின் முன் பி/2ரேஞ்சு தேச அரசர் அடித்துக்கொண்டு போகப்பட்டதைப் போலவே எல்லா அரசர்களின் சதியும் முடிந்திருக்கும். (2) பார்லிமெண்டரி துரைத்தனம் நடைபெறும் இடங்களில் சட்ட சபைக்கும் நிர்வாக சபைக்கும் எப்பொழுதும் சிநேகப் பான்மையே இருந்துவரும். இருவருக்குள்ளும் விசேஷமான மன ஸ்தாபமோ, சச்சரவோ, விரோதமோ ஏற்படா. தன்னு லேயே அமைக்கப்பட்டுத் தன்னுடைய ஆதரவையே நாடி நிற்கும் உத்தியோகஸ்தருடன் சட்டசபை சண்டையிட அவசியமே ஏற்படாது. அரசாங்கத்தின் இவ்விரு பாகங் களும் சமரஸமாக நடந்துகொண்டால் அரசியல் சக்கரம் வெகு சுலபமாகச் சுழன்றுகொண்டே போகும். இது பார்லிமெண்டரி முறையினுல் ஏற்படும் ஒரு பெரிய அநு கூலமாகும். (3) ஆனுல், இம்முறையில் சில தீமைகளும் உண்டாக இடமிருக்கிறது. உதாரணமாக, இம்முறை அநுஷ்டிக்கப்படும் தேசங்களில் நாளடைவில் சட்டசபை யோ, அல்லது, நிர்வாக சபையோ ஒன்றினிடம் மற் ெருன்று அடங்கி நடக்க வாரம்பித்து விடுகிறது. அதா வது இரண்டும் சம அந்தஸ்துடையதாக இருப்பதற்கு மாருக, ஒன்று எஜமானனுகவும் மற்ெருன்று சேவகனுகவும் நடக்கின்றன. சாதாரணமாய் நோக்குமிடத்து, சட்ட சபையே எஜமான ஸ்தானத்தை வகிக்கவேண்டும். ஏனெ னில் நிர்வாக சபையின் உயிர் அதன் கையிலேயே இருக்கி றது. ஆனுல் இங்கிலந்திலோ காமன்ஸ் சபையே நிர்வாக சபைக்கு அடங்கி நடக்கிறது. கா/2பினெட் சபையிலுள்ள மந்திரிகளை ஆதரிக்க எப்பொழுதும் அங்கு பெரும்பான் மையான ஒரு கட்சியார் தயாராக இருக்கின்றனர். மந்திரி களே அக்கட்சியின் தலைவர்கள். ஆதலால் தங்களது விருப்

பப்படியே கா/₂பினெட் சபையினர் சட்டமியற்றி வருகின்றனர்; எதிர்க்கட்சியிலிருப்பவர்கள், வேண்டுமாயின், சிறிது வாய்ப்போர் புரிந்து பார்க்கலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மையோரே யாதலால் அவர்களால் காரியத்தைத் தடுக்க இயலாது. கா/₂பினெட் சபையே இப்பொழுது சர்வாதிகாரமும் உடையதாயிருக்கிறது. மிகப்பெரிய தவறுதல் செய்தாலன்றி, அவர்கள் எவருக்கும் அஞ்சவேண்டியதில்லை. (4) பார்லிமென்டரி முறை நடக்குமிடங்களில் சட்டசபையும் நிர்வாக சபையும் ஒன்றினுடைய அதிகாரத்தில் மற்றொன்று தலையிட ஆரம்பிக்கின்றன. மான்டேஸ்க்யூவினுடைய கொள்கையின்படி, இவ்விரு சபைகளும் தனித்தனியான வேலைகளையே செய்துவர வேண்டும் என முன்பே கூறினோம். இங்கிலந்திலோ கா/₂பினெட் சபையினரே அநேக சட்டங்களை இயற்றுவதற்கு வழி காட்டுகின்றனர். காமன்ஸ் சபையில் சாமானிய அங்கத்தினர்கள் கொண்டுவரும் தீர்மானங்கள் நிறைவேறுவது மகா துர்லபம். சட்டசபை இயற்றும் தீர்மானங்களைப் பிரயோகம் செய்வது மட்டுமே கா/₂பினெட் சபையின் நியாயமான வேலை. ஆனால் புதிய புதிய மசோதாக்களை கா/₂பினெட் சபையினரே பார்லிமென்டில் பிரேரணை செய்கின்றனர். அவர்களுடைய கட்சி பலத்தினால் அத்தீர்மானங்கள் சுலபத்தில் நிறைவேறி விடுகின்றன. இவ்விதமாயின், தங்களுக்கு சௌகரியமானபடி சட்டங்களை அவர்கள் தயாரிப்பார்கள். மேலும் நிர்வாக சபை சட்டநிர்மாண வேலை செய்வது போலவே சட்டசபையினரும் நிர்வாக அதிகாரிகளின் அதிகாரத்தில் தலையிடுகின்றனர். பல உபத்திரவமான கேள்விகளை அவர்கள் மந்திரிகளிடம் கேட்டு அவைகளுக்கு உத்தரம் கொடுக்க வேண்டுமென்று விரும்புகின்ற

னர். நிர்வாகத்தைப் பற்றிய சில விஷயங்களை பகிரங்கப் படுத்தாமலே வைத்திருப்பது நல்லது. அவைகளை யெல்லாம் சட்டசபையினர் தாட்சணிய மில்லாமல் வெளியில் இழுத்து விடுகின்றனர். அவ்வாறு அவ்விரு சபையினரும் ஒருவர் அதிகாரத்தில் மற்றவர் தலையிட்டுக் குழப்பத்தை யுண்டுபண்ணி விடக்கூடும். (5) பார்லிமென்டரி துரைத் தனம் நடைபெறும் இடங்களில், நிர்வாக சபைக்கு நிச்சய மான உத்தியோக காலம் கிடையாது. சட்டசபை இஷ்டப் படும் பொழுதெல்லாம், தங்களுக்கு நிர்வாக சபைமீது நம்பிக்கை இல்லை யென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி அந்த சபையை உடனே கலைத்து விடலாம். இவ்வாறு அந்த சபை அற்பாயுள் படைத்ததா யிருந்தால், அதன் வேலை அநேக விதங்களில் தடைப்பட்டுப் போகக் கூடும். முதலாக, ஒரு நிச்சயமான உத்தியோக காலமில் லாதவனுக்குத் தான் செய்யும் வேலையில் ஊக்கம் ஏற் படாது. அவன் தன்னுடைய கடமைகளைச் சரிவரவும் கவனிக்க மாட்டான். இரண்டாவது, தனது உத்தியோ கத்தை இழக்காமல் இருக்கும் பொருட்டு அவன் சட்ட சபையினரின் தயவைக் கோரி நிற்பானே யன்றித் தனது மனச்சாக்ஷிக் கேற்றபடி காரியத்தை நிர்த்தாக்ஷணியமாய்ச் செய்ய மாட்டான். சட்டசபையின் சந்தோஷத்தையும் ஆதரவையும் உண்டாக்கிக் கொள்வதிலேயே அவன் நாட்ட மாயிருப்பானன்றி, தேசத்தின் நிரந்தரமான நலத்தை அவன் மனதிற் கொள்ளமாட்டான். மூன்றாவதாக, நினைத்த பொழுதெல்லாம் புதிய புதிய நிர்வாக சபையை உண்டாக் கிக் கொண்டே யிருந்தால், அரசியல் முறைக்கு அவசிய மான தொடர்ச்சி இல்லாது போய்விடும். இன்று ஒரு கூட் டத்தார் ஒருவிதமாக அரசியல் நடத்தி இருக்க, நாளை

வேறொரு கூட்டத்தார் வேறொரு விதமாக அரசியல் நடத்தினால், அது தேசத்திற்குத் தீமையையே விளைவிக்கும். நீர்மேல் குமிழிபோலத் தோன்றி வெகு சீக்கிரத்தில் மறையும் நிர்வாக சபையினரிடம் ஜனங்களுக்கு அதிகமான மதிப்பும் ஏற்படாது. அத்தகைய துரைத்தனத்தை இதர தேசத்தினர் மதிப்பதும் சந்தேகமே. இங்கிலந்தில் கா/2பினெட் சபையினரின் உத்தியோக காலம் கூடிய வரையில் நீடித்தே இருக்கும். ஏனெனில் அங்கு இரண்டு முக்கியமான பெரிய கக்ஷிகளே எப்போதும் இருந்து வருகின்றன. ஆதலால் ஒரு கட்சி வலுத்தால், மற்றொன்று பலஹீனமடைந்து நிற்கும். வலுத்த கட்சியினரே அரசியல் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். பலஹீன மடைந்துள்ள கட்சியினர் அவர்களை சுலபத்தில் வெல்ல இயலாது. ஆனால், ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள மற்ற தேசங்களில் ஏழெட்டு இராஜீயக் கட்சிகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றாவது மற்றவைகளின் மொத்தத் தொகையைவிட அதிகமாய் இராது. ஆதலால் பல கட்சிகள் கூடிக்கொண்டே அங்கு அரசியல் நிர்வாகத்தை நடத்த வேண்டும். உதாரணமாக பி/2ரான்ஸ் தேசத்தில் எட்டுக் கட்சிகள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு கட்சியிலும் 40 முதல் 50 அங்கத்தினர்கள் இருப்பார்கள். எதாகிலும் ஒரு கட்சி தனியாக மந்திரி சபையை அமைத்தால், அச்சபையை 40, 50 அங்கத்தினர் மட்டுமே ஆதரிப்பார்கள். மற்ற ஏழு கட்சிகளும் சேர்ந்து மறுநாளே அந்த மந்திரிகளைத் தோற்கடித்துத் துரத்திவிடலாம். அதற்காக அந்த நாடுகளில் நாலைந்து கட்சிகள் கூடிக் கூட்டுக் கக்ஷியாக இருந்தே உத்தியோக பதவியை வகிக்கும். அங்ஙனம் பல கட்சிகள் ஒன்று படும்பொழுது ஒவ்வொன்றும் தன் தன்

கொள்கைகளில் சிலவற்றை விட்டுக் கொடுக்கவேண்டும். மேலும் கூட்டு மந்திரிசபையில் ஒவ்வொரு கட்சியினருக்கும் ஒவ்வொரு ஸ்தானமாவது அளிக்கப்பட வேண்டும். இத்தனை நிபந்தனைகளுடன் ஏற்படுத்தப்படும் கூட்டு மந்திரி சபை எவ்வளவு காலம் நிலைத்து நிற்கும்? மந்திரிகளுக்குள்ளேயே ஒற்றுமை ஏற்படுவது துர்லபம். எனவே, கூட்டுக் கட்சிகள் மறுபடி சுலபத்தில் பிரிந்தும் போய்விடலாம். உடனே ஷை நிர்வாக சபை கலைந்து போகும். இப்படி நிர்வாக சபைக்கு ஸ்திரமான உத்தியோக காலம் இல்லாமல் போனால் அரசியல் நிர்வாகத்தில் ஒற்றுமையும் தொடர்ச்சியும் நிலைத்திரா. (6) இன்னொரு விஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். பார்லிமென்டரி முறைப்படி அரசியல் நிர்வாகம் எப்பொழுதும் அதிகத் திறமையுடைய நிபுணர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. பார்லிமென்டரி முறையை யொட்டிய மந்திரி சபையினரெல்லோரும் சட்டசபை யங்கத்தினராக இருத்தல் வேண்டும். ஆனால் அறிவும் இராஜீய தந்திரமும் அநுபவமும் அதிகமாய் வாய்ந்துள்ள எத்தனையோ நிபுணர்கள் சட்டசபையின் ஸ்தானத்தை நாடாமல் வெளியில் இருந்துவிடுவர். இம்முறைப்படி அவர்களை நிர்வாக சபையில் சேர்த்துக்கொள்ள இடமில்லை. அதன் பயனாக, யுத்தப்பயிற்சி பெற்ற சேனாவீரன் ஒருவன் வெளியில் இருக்க, யுத்தகளத்தையே கண்டிராத ஒரு சுகவாஸி யுத்த இலாகாவை மேல்பார்வை பார்க்க நேரிடும்; பண நிர்வாகத்தில் பயிற்சிபெற்ற தனவந்தர் ஒருவர் வெளியில் இருக்கையில் வரவுசெலவு கணக்கைக் கண்டு நடுங்கும் ஒருவர் பொக்கிஷ மந்திரியாகி விடுவார்! அரசியல் நிர்வாகம் மிகச் சிக்கலானது; அதை வகிப்பதற்கு தேசத்திலுள்ள மேதாவிகளனைவரும் ஒன்றுகூடி

ஒத்துழைக்க வேண்டியிருக்க, சட்டசபையில் சுலபமாக ஸ்தானம் பெற்றுவிடும் பிரசங்க மேடைச் சீமான்களும், ஓட்டுகளை விலைக்கு வாங்கும் பிரபுக்களும் அரசியல் நிர்வாகத்தை எங்ஙனம் திறமையாக நடத்த முடியும்? புதிதாக வரும் மந்திரிகள் விஷயத்தை கிரகித்துக் கொள்வதற்கே இரண்டு வருஷகாலம் பிடிக்கும். அதற்குள் அவர்களுடைய உத்தியோக காலமே முடிவடைந்து போகலாம். அவர்கள் செய்து முடிக்கும் அரசியல் நிர்வாகத்திற்கு எவ்வித மதிப்பு உண்டாகப் போகிறது?

பார்லிமென்டரி துரைத்தனத்திற்கு நேர் விரோதமான 'நாந் - பார்லிமென்டரி' (அல்லது உத்தரவாதி யல்லாத) துரைத்தனத்தைப் பற்றி நாம் சிறிது ஆராய்வோம். பார்லிமென்டரி முறையின் சாதகங்கள் இதற்கு பாதகங்களாகவும், பாதகங்கள் சாதகங்களாகவும் இருக்கும். அவைகளைச் சுருக்கமாகக் கூறினாலே விளங்கிவிடும். (1) சட்ட சபைக்கும் நிர்வாக சபைக்கும் இம்முறையில் சமரஸபாவம் இருப்பது அரிது. சம அந்தஸ்தைக் கொண்ட இருவரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிய மாட்டார்கள். இதனால் பெரிய மனஸ்தாபம் ஏற்பட, அரசாட்சியே நடவாமல் நின்று விடும். சட்டசபையும் இணங்கி வராமல் நிர்வாக சபையும் இணங்கி வராமல் இரண்டும் பிடிவாதமாக நின்றால் அதற்கு முடிவு ஏற்படுவ தெப்படி? சட்ட சபையினால் நிர்வாக சபையைக் கலைக்க முடியாது; நிர்வாக சபையும் சட்ட சபையை பயமுறுத்த முடியாது. இது ஒன்றே இம்முறையினால் நேரக்கூடிய பெரிய பொல்லாங்கு. (2) மேலும் பார்லிமென்டரி யல்லாத முறை வழங்கிவரும் இடங்களில் நிர்வாகத் தலைவர் பதவி மிக கௌரவமான பதவி யாதலால், அதற்குத் தேர்தல்கள் நடக்கும் பொழுது தேசத்தில்

பெரும் அமைதியின்மை ஏற்படுகிறது. தேர்தல் முடியும் வரையில் கைத்தொழில்களும் வர்த்தகமும் குன்றிவிடுவது கூட உண்டு.(3) ஆனால் இம்முறையில் பல சௌகரியங்களும் இருக்கின்றன. முதலாக, நிர்வாக சபைக்கு ஒரு நிச்சய மான உத்தியோக காலம் ஏற்படுகிறது. அதனால், அவர் கள் அமைதியாக ஆலோசித்து இன்னின்ன காரியங்களைச் செய்யலாம் என்று தீர்மானித்துக் கொண்டு அதன்படியே தமது உத்தியோக காலத்திற்குள் அவ் வுத்தேசங்களை நிறைவேற்றி விடுவார்கள். சட்டசபையின் 'க்ஷணச்சித்தம், க்ஷணப்பித்தம்' முதலியவைகளுக்கு அவர்கள் ஆளாகமாட் டார்கள். சட்டசபையின் உபத்திரவமின்றி அவர்கள் தேசத்திற்கு நிரந்தரமான நன்மையைச் செய்யலாம். சட்ட சபையின் கடினமான கேள்விகளுக் கெல்லாம் மறுமொழி கூறவேண்டிய அவசியமும் இல்லாமல் போகும். (3)சட்ட சபையும் நிர்வாக சபையும் தனித்தனியாகப் பிரிந்து ஒரு வரை யொருவர் சார்ந்திராமையால் தம்தம் காரியங்களை அவர்கள் பூர்ணமாகச் செய்துவிடலாம். எஜமானன், சேவ கன் என்ற பேச்சே இன்றி சம அந்தஸ்துடனும் சம உரிமையுடனும் அவர்கள் வேலை செய்வார்கள். ஒருவ ருடைய காரியத்தில் மற்றவர் தலையிடுவ தில்லை. (4) இம் முறையில் அரசாங்கம் சிறந்த நிபுணர்களால் நிர்வகிக்கப் படுவதற்கும் வசதி உண்டு. உதாரணமாக, அமெரிக்காவில் பார்லிமெண்டரி யல்லாத முறையே அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அங்கு ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் அதி பதி தாமாகவே தமது சகாக்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்கிறார். அவர்கள் சட்டசபை அங்கத்தினர்களாய் இருக்கவேண்டு மென்பதில்லை. எனவே, தேசத்தில் சிறந்து விளங்கும் நிபுணர்களை அவர் தமது மந்திரிக ளாய்ப் பொறுக்கி எடுத்துக் கொள்ளலாம்.

இவ்விரண்டு முறைகளுக்கும் மத்தியமாயுள்ள வேறொரு முறையும் ஸ்விட்ஜர்லந்தில் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதை இங்கிலீஷில் ஸெமி - பார்லிமேன்டரி (Semi - Parliamentary) (அதாவது பாதி ஜவாப்தாரியானது) என்று குறிப்பார்கள். ஸ்விட்ஜர்லந்தில் நிர்வாக சபையை அமைக்கும் அதிகாரம் மட்டும் சட்டசபைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது; அதை விலக்கும் அதிகாரம் சட்டசபைக்கு இல்லை. ஒருதரம் உத்தியோக பதவியைப் பெற்றுவிட்டால் அவர்கள் குறித்த காலம் முடிய அதை வகித்திருக்கலாம். அந்த முறையிலும் நாம் மேலேகுறித்த இரண்டு வகைகளின் சாதகங்கள் முழுவதையும் காணலாம்; ஆனால் அவைகளிலுள்ள பாதகங்களிற் பல அங்கு காணப்படவில்லை. எப்பொழுதும் இருகோடிகளை விட்டு நடுவில் செல்லுவதே சிறந்தது. ஸவிட்ஜர்லந்தில் நிர்வாக சபைக்கும் சட்டசபைக்கும் சச்சர வேற்படுவதில்லை. ஏனெனில் நிர்வாக சபையினரை முதலில் அமைத்தது சட்டசபையே யாகும். அந்த நன்றிவிசுவாசம ஒருபுறமிருக்க, மறுபடியும் தமக்கே அப்பதவி கிடைக்க வேண்டுமென்ற ஆசையொன்றே அவர்களை நல்வழியி லிருத்தி வரும். மேலும், தங்கள் உத்தியோகம் ஒரு குறித்தகாலம் வரையில் நீடித்திருக்குமென்ற நிச்சயமும் உண்டு. அதற்குள் அவர்கள் செய்யவேண்டிய காரியத்தை முன்பே தீர்மானித்துக் கொள்ளலாம்.

இந்திய துரைத்தனத்தின் நிர்வாக சபை பார்லிமென்டரி யல்லாத முறையையே சேர்ந்தது. ஏனெனில் வைஸ்ராயின் நிர்வாக சபையை அமைப்பதும் நீக்குவதும் இந்திய சட்ட சபையினிடம் இல்லை. நிர்வாக சபையினரும் சட்டசபைக்கு உத்தரவாதிகள் அல்லர். ஆனால் மாகாண

(சென்னை, கல்கத்தா, பம்பாய் முதலிய) துரைத்தனத்தில் இருமுறையும் கலந்திருக்கின்றன. 1919-ம் வருஷம் முதல் இவ்விடங்களில் இரட்டையாட்சி நடைபெற்று வருகிறது. அதன்படி நிர்வாக சபையில் ஒரு பகுதியார் சட்ட சபைக்கு உத்தரவாதிக ளல்லர். அவர்களிடமே முக்கியமான அதிகாரம் இருந்து வருகிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் சில மந்திரிகள் இருக்கின்றனர். அவர்கள் சட்ட சபைக்கு உத்தரவாதி யானவர்கள். சட்ட சபையின் நம்பிக்கை இருக்கும் வரையிலேயே ஷை மந்திரிகள் உத்தியோகம் வகிக்கலாம். அவர்களுக்கு அதிகாரமும் மிகக் குறைவு. ஆனல் மாகாணங்களில் பார்லிமெண்டரி முறை இவ்வளவு சொற்பமாக அளிக்கப்பட் டிருந்தாலும், அதையும் அநுஷ்டானத்தில் சூன்யமாக்கி விட்டனர். நமது சட்டசபைகள் உலகத்தி லில்லாத புதுவிதத்தில் அமைக்கப்பட் டிருக்கின்றன வாதலாலும், வேறு பல காரணங்களாலும் சட்டசபையின் நம்பிக்கையை இழந்தவர்களே நமது மாகாணங்களில் மந்திரிகளாக யிருந்து வருகின்றனர். ஆனல் இந்த இரட்டையாட்சி முறை சீக்கிரத்தில் மறையலாம். பூர்ணமான பொறுப்புள்ள ஆட்சி ஸ்தாபிக்கப்படலாம். அப்பொழுது பார்லிமெண்டரி முறையே இங்கு பின்பற்றப்படும். எனவே, நாம் மேலே குறித்த மூன்றுமுறைகளில் எது சிறந்தது, எது அநுசிதமானது எனக் கூற முடியாது. இங்கிலந்தில் பார்லிமெண்டரி முறை நிரம்பவும் நன்றாகவே நடந்து வருகிறது. அதுபோலவே, அமெரிக்காவில் பார்லிமெண்டரி யல்லாத முறையும் திருப்திகரமாக நடைபெறுகிறது. இவையிரண்டிலும் சேராத மூன்றுவது முறையும் ஸ்விட்ஜர்லந்திில் ஒழுங்காகவே அநுஷ்டிக்கப்படுகிறது. அந்தந்த தேச சரித்திரத்தை யொட்டியும், ஜனங்

களின் குண விசேஷங்களை யொட்டியும் இராஜீய ஸ்தாபனங்கள் அமைக்கப் படுகின்றன. எல்லாவற்றிலும் சாதகங்களும் உண்டு, பாதகங்களும் உண்டு. நாம் இங்கிலந்தினால் ஆளப்பட்டு வருவதனால் அங்கு நடைபெறும் பார்லிமென்டரி முறையையே நாம் பின்பற்றுகிறோம்.

5. **நிர்வாக சபையாரும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களும்:**—இவ்வத்தியாயத் தொடக்கத்தில் அரசாங்கத்தின் 'நிர்வாகப் பிரிவு' என்பது உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கும் அரசர், மந்திரி ஆகியவர்களை மாத்திரம் குறிக்காமல் அவர்களுக்குக் கீழ் வேலை செய்யும் சகலமான உத்தியோகஸ்தர்களையும் குறிக்கும் எனக் கூறினோம். ஆனால், 'நிர்வாக சபை' என்பது தலைமை யதிகாரிகளையே குறிக்கும் எனவும் நாம் குறித்தோம். எந்த தேசத்திலும் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்குக் கீழ் எண்ணிறந்த உத்தியோகஸ்தர்கள் வேலைசெய்து வருவது சாதாரணமாக இருக்கிறது. சற்று ஊன்றிப் பார்த்தால் ஷை கீழ்த்தர உத்தியோகஸ்தர்களே உண்மையில் துரைத்தன நிர்வாகம் செய்கிறார்கள் என்பது விளங்கும். நாலைந்து வருஷகாலத்திற் கொருமுறை புதிய புதிய மந்திரிகள் வேலைக்கு வந்து கொண்டே யிருக்கின்றனர்; அவர்களுக்கு அரசாட்சியில் முன்னும் தெரியாது, பின்னும் விளங்காது. கீழ் உத்தியோகஸ்தர்களே அவர்களுக்கு வழி காட்டவேண்டும். அந்தரங்கமாகக் காரியதரிசிகள் சொல்லிக்கொடுத்த பாடத்தையே மந்திரிகள் வெளியில் ஆடம்பரமாக ஒப்புவித்து விடுகின்றனர். காரியதரிசிகளும் மற்றவர்களும் மந்திரிகளோடு வந்து போகாமல் நீடித்து உத்தியோகத்திலிருக்கிறவர்களாதலால், அவர்களுக்கு மட்டுமே அரசாங்கத்தின் பழைய கொள்கைகளும் மற்ற இரகசியமான விஷயங்க

ளும் தெரிந்திருக்கும். புதிதாக வரும் மந்திரிகளுக்கு அந்த அநுபவம் பெற்றவருடைய உதவி இல்லாமற் போனால் காரியம் நடவாது. எல்லாம் குழப்பமாகவே தோன்றும். தொடர்ச்சிக்கும் ஹானி ஏற்பட்டுவிடும். கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள அனைவரும் இங்கிலீஷில் 'ஸிவில் ஸர்விஸ்' கோஷ்டியினர் எனப்படுவர். இங்கிலந்தின் ஸிவில் ஸர்விஸ் நிரந்தரமானது. அங்கு நிர்வாக அதிகாரிகள் எல்லோரையும் (தோட்டி முதல் தொண்டமான் வரை) எடுத்துக்கொண்டால் அவர்கள் ஒருகோபுரம்போல அமைந்திருப்பர். அவர்கள் எல்லோருக்கும் உச்சியில் அரசர் வீற்றிருப்பார்; அவரிடமிருந்து தான் அதிகாரம் மற்றவருக்கு பரவுகிறது; உயரத்தில் இருக்கும் சூரியனுடைய ஒளி படிப்படியாக விரிந்து அடியில் விஸ்தாரமாய்ப் பரவுவதுபோலவே, அரசருடைய அதிகாரம் கீழதிகாரிகள் எல்லோருக்கும் பரவுகிறது. அரசரிடமிருந்து மந்திரிகளும், மந்திரிகளிடமிருந்து காரியதரிசிகளும், காரியதரிசிகளிடமிருநது உபகாரியதரிசிகளும், உபகாரியதரிசிகளிடமிருந்து சூபரின்டென்டெண்டுகளும், சூபரின்டென்டெண்டுகளிடமிருந்து குமாஸ்தாக்களும், குமாஸ்தாக்களிடமிருந்து சேவகர்களும் அதிகாரத்தைப் பெற்று நிர்வாக காரியங்களைச் செய்து வருகின்றனர். துரைத்தன பரிபாலனத்திற்கு மந்திரிகள் எவ்வளவு அவசியமானவர்களோ, அவ்வளவே மற்ற சிப்பந்திகளும் அத்யாவசியமானவராயிருக்கின்றனர். மந்திரிகள் சிறிதுகாலம் இல்லாமற் போனாலும் அரசாங்கம் தடைப்பட்டு நின்று போய்விடாது. ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் ஒருநாள் வேலையை நிறுத்திவிட்டாலோ துரைத்தன காரியமெல்லாம் நின்று போய்விடும். இங்கிலந்தில் அரசர் என்ற பொதுவான

கயிற்றினுல் மற்றவர்கள் ஒன்ருய்ப் பிணைக்கப்பட்டிருக் கின்றனர். இந்தியாவிலும் அதே முறை அநுஷ்டிக்கப் பட்டு வருகிறது. அரசனிடமிருந்து வைஸ்ராயும், அவ ரிடமிருந்து, மாகாண கவர்னர்களும் அதிகாரத்தைப் பெற்று அதைப் படிப்படியாகக் கீழே பரப்புகின்றனர். ஆனுல் அமெரிக்காவில் சில மாகாணங்களில் சில உத்தியோ கஸ்தர்களை ஜனங்களே தேர்ந் தெடுக்கின்றனர். அவ்வாறு ஜனங்களால் தனித் தனியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டா லும், அவர்களெல்லோரும் கவர்னருடைய அதிகாரத்திற் குட்பட்டவர்களாகவே நடந்துகொள்ள வேண்டும். ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களை அரசரோ அதிபதியோ அல்லது அவர்களுடைய அதிகாரத்தைப் பெற்றவர்களோ நியமிப்பதே நலமானது. அப்பொழுதுதான் உயர்ந்த அதிகாரிகளின் உத்தரவின்படி கீழ் அதிகாரிகள் நடந்து கொள்வர். அமெரிக்க மாகாணங்களில் நடப்பது போல ஜனங்களே ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந் தெடுத்தால் கீழ்ச்சிப்பந்திகளுக்கு மேலதிகாரிகளிடம் பணி வும் அச்சமும் அடக்கமும் ஏற்படா. சேனையில் தலைவனது சொற்படியே சிப்பாயிகள் நடந்தாலன்றி எப்படி வெற்றி ஏற்படாதோ அப்படியே ஸிவில் ஸர்விஸ் என்னும் பெரிய சேனு சமுத்திரத்திலும் தலைவனுக்கு மற்றவர் அடங்கி நடக்க வேண்டுமென்ற நியதி இல்லையானுல், நிர்வாகம் ஊழலாகவே இருக்கும். சில சமயங்களில் நிர்வாகம் சமரஸ மாக நடைபெருமல், சச்சரவுகளில் முடியும். தனித் தனி யாக ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு உத்தியோகம் வகித்து வருவோர்களிடம் ஒற்றுமையும் பணிவும் இருப் பது அரிதாகும்.

ஒவ்வொரு தேசத்திலும் நிர்வாகத் தலைவர் ஒருவர் எல்லோருக்கும் மேலாக வீற்றிருந்தாலும், அவரே எல்லா விஷயங்களையும் மேல்பார்வை பார்ப்பது சாத்தியமற்ற வேலை. ஆதலால் அரசாங்கத்தைப் பல இலாகாக்களாகப் பிரித்து ஒவ்வொரு மந்திரியும் ஓர் இலாகாவை மேல் பார்வை பார்த்துவருவது வழக்கம். உதாரணமாகக் கீழேயுள்ள அட்டவணையில் இங்கிலந்தின் மந்திரிகள் நிர்வகித்து வரும் பல இலாகாக்களைக் குறிப்பிட்டிருக்கிறோம். அதிலிருந்து அரசாங்கத்தினுடைய பற்பல இலாகாக்கள் என்னென்னவென்பதும் விளங்கும்.

(1) அந்நியநாட்டு மந்திரி	(அந்நியதேச சம்பந்தம்)
(2) பொக்கிஷ மந்திரி	(பண விஷயங்கள்)
(3) யுத்த மந்திரி	(சேனை)
(4) நீதிமன்றத் தலைவர்	(நீதி நிர்வாகம்)
(5) போஸ்ட்மாஸ்டர் ஜெனரல்	(தபால் இலாகா)
(6) கப்பற்படை மந்திரி	(கப்பற்படை)
(7) உள்நாட்டு மந்திரி	(பொதுவான ராஜ்ய நிர்வாகம்)
(8) வியவசாய போர்டின் தலைவர்	(வியவசாயம்)
(9) வர்த்தக போர்டின் தலைவர்	(வர்த்தகம்)
(10) கல்வி போர்டின் தலைவர்	(கல்வியைப் பரப்புதல்)
(11) குடியேற்ற நாட்டு மந்திரி	(குடியேற்ற நாடுகளுடன் சம்பந்தம்)
(12) மராமத்து இலாகா கமிஷனர்	(பொது மராமத்து வேலைகள்)
(13) ஸ்தல சுய ஆட்சி போர்டின் தலைவர்	(முனிசிபாலிடி நிர்வாகம்)

(14) தொழில் மந்திரி	(தொழிலாளிகளின் விஷயங்கள்)
(15) சுகாதார மந்திரி	(சுகாதாரம், வியாதியை தடுப்பது)
(16) போக்குவரத்து இலாகா மந்திரி	(உள்நாட்டு வியாபாரம்
(17) இந்தியா மந்திரி	(இந்தியாவின் நிர்வாகம்)
(18) ஸ்காட்லந்ஃ மந்திரி	(ஸ்காட்லந்ஃ தேச பரிபாலனம்)
(19) ஆகாயப்படை மந்திரி	(ஆகாயப்படையை விருத்தி செய்வது)

இதிலிருந்து, அரசியல் நிர்வாகம் எவ்வளவு சிக்கலான விஷயம் என்பது விளங்கும். இங்கிலந்தைப் போலவே மற்ற நாடுகளிலும் அரசியல் நிர்வாகம் பல இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தியா மந்திரி, ஸ்காட்லந்ஃ மந்திரி முதலானவர்கள் மற்ற தேசங்களில் இல்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் காப்பதற்காக மேற்படி மந்திரிகள் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு தனித்தனியான இலாகாவை மேல்பார்வை பார்த்துவரும் மந்திரிகளுடன், எந்தக் குறித்த இலாகாவையும் மேல் பார்வை பார்க்காமல், எல்லா விஷயங்களிலும் கலந்து உதவி செய்யும் சில மந்திரிகளும் இருப்பதுண்டு. அந்நிய நாட்டு மந்திரி, பொக்கிஷ மந்திரி, யுத்த மந்திரி, உள்நாட்டு மந்திரி ஆகியவர்களே முக்கியமான பதவியை வகிப்பவர்கள். யுத்த காலத்தில் சில விசேஷ இலாகாக்களும் சிருஷ்டிக்கப்படுவதுண்டு. மேற்படி மந்திரிகளுக்குக் கீழ் வேலைசெய்யும் பெரிய உத்தியோகஸ்தர்களே 'ஸிவில் ஸர்விஸ்' வர்க்கத்தார். மந்திரிகளுக்கும் ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கும் உள்ள சம்பந்தம், அவர்களுடைய நியம

னம், உத்தியோக காலம்—முதலிய விஷயங்களை நாம் ஆராயவேண்டும். ஏனெனில் ஸிவில் உத்தியோகஸ்தர்களே துரைத்தனத்தை உண்மையில் வகித்து நிற்பவர்கள். அவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டுமானல், அவர்கள் அதிருப்தியடையாமல் இருக்கவேண்டும். இந்தியர்களாகிய நாம் இராஜீய விஷயங்களில் இங்கிலந்தின் முறையையே பின்பற்றுகிறோம். இங்கிலந்தில் மகாயுத்தம் நேரிட்ட சமயத்தில் ஸிவில் ஸர்விஸில் 80000 உத்தியோகஸ்தர்களுக்கு அதிகமாகவே இருந்தனர். ஸிவில் ஸர்விஸ் நிர்வாகத்தில் முக்கியமான இரண்டு விஷயங்கள் அநுஷ்டிக்கப்படுகின்றன. (1) நிரந்தரமான உத்தியோக காலம் (2) மந்திரிகள் மாறிக்கொண்டே இருந்தாலும் அதனுல் ஸிவில் ஸர்விஸ் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பது ஆகியவைகளே. ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் எநத இராஜீயக் கட்சிகளையும் சேர்ந்தவர்களல்லர். அவர்கள் எவ்விதமான இராஜீயக் கொள்கையையுடையவராயிருந்தாலும் அதை பகிரங்கமாகவோ அல்லது உத்தியோக தோரணையிலோ வெளிப்படுத்தக் கூடாது. ஆனல் அவர்களுக்குத் தலைவர்களான மந்திரிகளும் மந்திரிகளுடைய அந்தரங்க காரியதரிசிகளும் ஒரு குறித்த இராஜீயக் கட்சிகளைச் சேர்ந்தவர்களேயாவர். ஒரு தேசத்தில் பல இராஜீயக் கட்சிகள் இருந்தாலும், அவைகள் சிற்சில விஷயங்களில் அபிப்பிராயபேதம் கொண்டிருக்குமே யன்றி, மற்ற சாதாரண விஷயங்களில் ஒற்றுமையாகவே இருக்கும். தொழிற் கட்சியாரானலும் வேறு எந்தக் கட்சியாரானலும் அடிப்படையான கொள்கைகளில் ஒற்றுமையாகவே நடந்துகொள்வர். ஆதலால்தான் ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் மந்திரி

பதவிக்கு வந்தாலும் கவலையின்றித் தங்களது கடமைகளைச் செய்து வருகின்றனர். கல்வியைப் பரப்புவது, வரி வசூலிப்பது முதலிய மாமூலான விஷயங்களைச் செய்வது எந்த மந்திரி வந்தாலும் மாறப் போகிறதில்லை. அரசியல் நிர்வாகம் என்ற பெருங்கடலில், மாறி மாறி வரும் மந்திரிகள் ஒன்றன்பின்னென்றாக வரும் அலைகளையே ஒப்பர். அவ்வலைகளுக்கு அடியில் கடல் கலக்கமின்றி அமைதியாயும் ஆழமாயும் இருந்துவருவதுபோல ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் உள்ளுக்குள் மறைந்து ஸ்திரமாக இருந்து அமைதியாகக் காரியத்தை நடத்தி வருகிறார்கள். அவர்கள் ஜனங்களுடைய கண்ணுக்குப் புலப்படுவதுகூட இல்லை. அவர்களுக்குமேல் பெருத்த இரைச்சலுடனும் குழப்பத்துடனும் இராஜீய அலைகள் எழும்பி எழும்பித் தணிகின்றன; ஓர் இராஜீயக் கட்சி ஓர் அலையின் மீதமர்ந்து உயரச் செல்கிறது;சிறிது நேரத்திற்கெல்லாம் அது தாழ்ந்துபோக வேறொன்று மேலே செல்கிறது. ஆடி அலைகளுக்கடியிலோ அமைதி நிறைந்து நிற்கிறது. மேலே உக்கிரமாக வீசும் அலைகள் அவ்வமைதியைக் குலைப்பதுமில்லை, அங்கு நடைபெறும் வேலையைத் தடுப்பதுமில்லை. இங்கிலந்தில் ஒவ்வொரு மந்திரிக்கும் இரண்டிரண்டு காரியதரிசிகள் இருப்பார்கள். அவர்களில் ஒருவர் 'பார்லிமென்டரி காரியதரிசி' எனப்படுவார். அவர் மந்திரியின் இராஜீயக் கட்சியையே சேர்ந்தவராயிருப்பார். மந்திரி உத்தியோகத்தை விட்டு நீங்கும்பொழுது அவரும் வெளியில் சென்றுவிடுவார். ஆனால் இன்னொரு காரியதரிசி 'ஸ்திரமான காரியதரிசி' எனப்படுவார்.இவர் அந்த இலாகாவில் உள்ள குமாஸ்தாக்கள்,சூபரின்டென்டுகள் முதலியோர்கள்மீது அதிகாரம்செலுத்துகிறவர்.அவர் எந்த இராஜீயக் கட்சியையும் சேர்ந்தவரல்லர்.

மந்திரியின் பதவிக்கு எவர் வந்தாலும், ஷை காரியதரிசி உத்தியோகத்திலேயே இருப்பார். அந்தக் காரியதரிசிக்குத் தான் அரசியல் நிர்வாகம் முழுதும் மிகவும் நன்ருகத் தெரியும்; புதிதாக வரும் மந்திரிகளுக்கும் அவரே வேலை கற்றுக் கொடுக்கவேண்டும். அவ்வாறு ஸ்திரமான ஸிவில் ஸர்விஸ் இருப்பதாலேயே இங்கிலந்தில் அரசாங்கம் திறமையாக நடைபெறுகிறது. அரசரோ (அல்லது அவரிடம் அதிகாரம் பெற்றவரோ) இஷ்டப்பட்டால் ஷை உத்தியோகஸ்தர்களை நீக்கிவிடலாம். ஆனல், அவ்வாறு நேருவது மிக அரிது. அவர்கள் பெரிய குற்றத்தைச் செய்துவிட்டாலோ, அல்லது, வேலை செய்யும் திறமையில்லாமலிருந்தாலோ அன்றி மற்றபடி அவர்களுக்கு அச்சமே கிடையாது. இங்கிலந்தில் போட்டிப் பரீட்சையில் தேறியவர்களே ஸிவில் ஸர்விஸுக்குப் பொறுக்கியெடுக்கப் படுகின்றனர். அந்தப் பரீட்சையிருப்பதனுல், திறமையானவர்களே ஷை உத்தியோகங்களுக்கு வருவர் என்று கருதுகிருர்கள். அமெரிக்காவின் ஸிவில் ஸர்விஸிற்கும் இங்கிலந்தின் ஸிவில் ஸர்விஸிற்கும் பல விஷயங்களில் வேற்றுமை காணப்படுகிறது. இங்கிலந்தைப் போல ஸ்திரமாக உத்தியோகம் வகிக்கும் ஸிவில் ஸர்விஸ் அதிகாரிகள் அமெரிக்காவில் மிகவும் சொற்பமானவர்களே. நிர்வாக சபையின் மந்திரிகள்கூட அதிபதியின் விருப்பத்தின்படி நீக்கப்பட்டுப் போகலாம். மற்ற அதிகாரிகள் ஒரு குறித்த காலத்திற்கு (நான்கைந்து வருஷ காலம்) நியமிக்கப்படுகின்றனர். அந்த ஏற்பாட்டினுல், தேசத்திற்குச் சில கெடுதல்கள் உண்டாகலாம். திறமையுள்ள உத்தியோகஸ்தர்களை அடிக்கடி நீக்கிவிடுவது உசிதமான காரியமாகாது. எவ்வளவுக் கெவ்வளவு அதிக காலம் ஒரு

வர் ஒரு பதவியை வகிக்கிறரோ, அவ்வளவுக்கவ்வளவு அவ ரது அநுபவமும் திறமையும் அதிகரிக்கும். மேலும் தபால் இலாகா, கல்வி இலாகா முதலான இலாகாக்களில் வேலைசெய்யும் உத்தியோகஸ்தர்கள் எந்த இராஜீயக் கட் சியைச் சேர்ந்திருந்தாலும், கெடுதல் ஒன்றுமில்லை. ஆரம் பக் கல்வியை ஜனங்களுக்குப் பரப்புவதின் அவசியத்தை எவரும் மறுக்க மாட்டார்கள். கல்வி இலாகா உத்தியோ கஸ்தர் எந்தக் கட்சியைச் சேர்ந்திருந்தவரா யிருந்தாலும் அவர் தமது வேலையைச் செய்தே தீருவார். ஆதலால், மந்திரிகள் கொண்டுள்ள இராஜீய அபிப்பிராயங்களையே ஷை உத்தியோகஸ்தர்களும் பின்பற்ற வேண்டுமென்ப தில்லை; ஆதலால் மந்திரி சபையை மாற்றியமைக்கும் பொழுதெல்லாம் ஸிவில் உத்தியோகஸ்தர்களையும் மாற்று வது உசிதமான செய்கையாகாது. அதன் பயனுகத் திற மையும் அநுபவமும் பெற்ற உத்தியோகஸ்தர்கள் வெளி யேறி விடுவார்கள்; ஜனங்களை ஏமாற்றி ஓட்டை அபகரிக் கும் உபயோகமற்ற வேறு சிலர் அப்பதவிக்கு வந்து சேரு வார்கள். ஆனல் ஒரே உத்தியோகஸ்தர் ஒரு பதவியை நீண்டகாலம் வகித்துவந்தால், அவர் தளர்வாகவும் அசி ரத்தையாகவும் வேலைசெய்யத் தொடங்குவார் என்பது அமெரிக்கர்களின் அபிப்பிராயம். ஆதலால் நான்கு வரு ஷத்திற்கொரு முறை புது நியமனங்கள் செய்யவேண்டு மென்பது அவர்களுடைய சித்தாந்தம். அப்படி நியமனம் ஆகும் உத்தியோகஸ்தர்களைத் திருப்பி யழைக்கும் உரிமை யும் அமெரிக்க ஜனங்களுக்கு உண்டு என முன்பே கூறி னேம். அவ்வழக்கத்தினல் பெருத்த ஊழல்கள் அங்கு நடந்து வந்திருக்கின்றன. அந்த முறைக்கே 'ஊழல் முறை' என்ற பெயரும் உண்டு. அம்முறையின் தீமைகளை நன்கு

அறிந்து அமெரிக்காவிலும் சில இடங்களில் இப்பொழுது போட்டிப் பரீட்சை நடத்தியே ஸிவில் உத்தியோகஸ்தர்களை நியமிக்கின்றனர். அதனால் உண்மையான திறமை உள்ளவர்களுக்கே உயர்ந்த பதவிகள் கிடைக்கின்றன. மேலும் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் எத்தகைய இராஜீய நிதிக்கும் பணம் செலுத்தக்கூடாது; தங்களுடைய அதிகார தோரணையில் எந்தக் குறித்த இராஜீயக் கட்சிக்கும் உதவிபுரியக் கூடாது என்ற கொள்கையும் அமெரிக்காவில் பரவி வருகிறது. அரசியல் நிர்வாகம் சரியாக நடைபெறுகிறதா என்பதை மட்டுமே அவர்கள் கவனித்து வர வேண்டும்.

11-வது அதிகாரம்

நீதி பரிபாலனம்.

(1) நீதிபதிகள்; அவர்களது உத்தியோக காலம் முதலிய நிபந்தனைகள்:—இனி அரசாங்கத்தின் மூன்றுவது பிரிவான நீதி இலாகாவை நாம் கவனிப்போம். வெளிப்பார்வைக்குச் சட்ட சபையும் நிர்வாக சபையும்ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களுமே அரசியல் நிர்வாகம் நடத்தி வருவதாகத் தோன்றுமானாலும், உண்மையில் நீதி இலாகாவும் முற்றிலும் அவசியமானதேயாகும். சட்டசபை, ஸிவில் ஸர்விஸ் ஆகிய இரண்டைக்காட்டிலும் நீதிஇலாகாவில் அதிகாரிகள் குறைவேயானாலும், அவர்களே தேசத்தில் நீதியை நிலைநிறுத்திவரும் பேருபகாரிகளா யிருக்கின்றனர். நீதி இலாகாவின் முக்கியமான கடமை என்னவெனில், குற்ற சம்பந்தமான வழக்குகளை தேசத்தில் அநுஷ்டிக்கப்படும் சட்டத்தின்படி பரிசீலனை செய்து குற்றவாளிகளை தண்டிப்

பதேயாகும். ஆதலால் நீதிபரிபாலனம் செய்யும் நியாயாதிபதிகளுக்கு சட்டஞானம் இன்றியமையாதது; அவ்வக்காலத்தில் அமுலில் இருந்துவரும் சட்டங்களை மட்டும் அவர்கள் படிப்பது போதாது; பழைய சட்டங்களையும் பழைய நீதிபதிகளின் தீர்ப்புகளையும் அவர்கள் நன்கு ஆராய்ந்திருக்க வேண்டும்; அதோடு ஒவ்வொரு ஜாதியினருடைய பழக்க வழக்கங்களும், அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்; ஹிந்துக்களை விசாரணை செய்யும்பொழுது அவர்களது பழக்க வழக்கங்களையும், முஸ்லீம்களை விசாரிக்கும்பொழுது அவர்களது பழக்க வழக்கங்களையும் அவர்கள் ஆராய்ந்து நீதி செலுத்தவேண்டும். நீதிபரிபாலனம் செய்வோர்கள் தேசத்தில் உள்ள சிறந்த மேதாவிகளாய் இருக்கவேண்டும்; சட்டப் பயிற்சியும் சமயோசித புத்தியும் கூர்மையான பகுத்தறிவும் அவர்களுக்கு அவசியமான இலக்ஷணங்கள். ஆனால் நியாயாதிபதிகள் ஒருவிதத்தில் கட்டுப்பட்டிருக்கின்றனர். தேசத்தினுடைய சட்டப்படியே அவர்கள் நீதிசெலுத்த வேண்டுமென்றி, அச்சட்டம் நியாயமா அநியாயமா என்று கேள்வி கேட்கும் உரிமை அவர்களுக்கில்லை. ஏனெனில் இங்கிலந்து முதலிய தேசங்களில் சட்டசபை சர்வாதிகாரமும் வாய்ந்தது. திருடுகிறவர்கள் ஆயுள் முற்றிலும் கடுங்காவல் தண்டனை அநுபவிக்க வேண்டுமென்று பார்லிமென்ட் சட்டமியற்றினால், நியாயாதிபதிகள் அதை நிறைவேற்றியே தீரவேண்டும். தேசத்தின் சட்டம் நியாயமானதா அநியாயமானதா என்ற கேள்வி இரண்டாம் பட்சமானது; சட்டம் எப்படி இருந்தாலும் அதை வைத்துக்கொண்டு தீர்ப்புச் சொல்வதே நீதிபதியின் வேலை. சட்டம் இன்னின்ன விதம் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் அதிகாரம் அவர்

களுக்கு இல்லை. ஒரு குறித்த சட்டம் அநியாயமாக இருப்பதனால், சிலரது விஷயத்தில் அநீதி செலுத்தப்பட்டால் அதிக பாதகமொன்றுமில்லை; ஆனால் தேசத்தினுடைய சட்டத்தை அங்கீகரிக்காமல் நீதிபதி அதை நிராகரித்து விட்டால், அதனால் சட்டத்திற்கு உள்ள கௌரவமே போய்விடும். ஏராளமான தீமைகளும் நேர்ந்துவிடும்.

ஆனாலும் நீதிபதிகள் உண்மையான அதிகாரமில்லாத சேவகர்கள் என நாம் எண்ணிவிடக் கூடாது; அவர்களுடைய வேலை நிரம்பவும் கடினமானது; சட்ட சபையில் இயற்றப்படும் சட்டங்கள் பொதுவாக சில கொள்கைகளை நிர்ணயிக்குமேயன்றி, மிக நுட்பமாக ஒவ்வொரு விஷயத்தையும் எடுத்துக் காட்டாது. அந்தந்த வழக்கிற்குத் தகுந்தபடி சட்டத்தை வியாக்கியானம் செய்வது நியாயாதிபதிகளின் கடமையாகும். சட்டத்தின் உத்தேசத்தை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு, அவர்கள் புதிய புதிய வியாக்கியானங்களை உண்டு பண்ணவேண்டும். நியாய ஸ்தலத்தின் முன் வரும் வழக்குகளில் பல விநோதமாயும் புதுமையாயும் இருக்கலாம். அவைகளைப் பரிசீலனை செய்வதற்கு ஏற்ற சட்டமே இராது. அப்பொழுது நியாயாதிபதி தமது சுய அறிவை உபயோகித்து நீதி செலுத்த வேண்டும். அதனாலேயே பழைய நீதிபதிகளின் தீர்ப்புகளுக்கு தனியான ஒரு கௌரவம் ஏற்படுகிறது. சட்ட புஸ்தகத்தில் உள்ள சட்டத்தை விரித்து அதைப் பூர்த்தியாக நிர்மாணம் செய்கிறவர்கள் நீதிபதிகளே. ஒரு குறித்த விஷயத்தைப்பற்றி சட்டத்தில் ஒன்றும் கூறாமல் இருக்கும்பொழுது, நீதிபதிகள் பொதுவாக தேச சட்டத்திற்கு விரோதமின்றி, அவ்வழக்குகளில் தீர்ப்புச் செய்யவேண்டும். இதில் இன்னொரு விசேஷத்தையும் நாம் காணலாம்.

ஒரு நியாயாதிபதி ஒருவழக்கை ஒருவிதமாய்த்தீர்த்துவைத்தால், அந்தத் தீர்ப்புப் பின்காலத்தில் வருவோர்களுக்கு வழிகாட்டியாயிருக்கும்; அதே மாதிரியான வழக்குகள் பிற்காலத்தில் தோன்றினால், அப்போதைய நீதிபதிகள், சாதாரணமாக, முன் தீர்ப்பை யொட்டியே நீதி செலுத்துவார்கள். எனவே சட்ட சபையினுடைய தீர்மானங்களுக்கு சமயத்திற்கேற்றபடி வியாக்கியானம் செய்து, அந்த வியாக்கியானம் நிரந்தரமாய் எந்தக் காலத்திலும் பயன்படுமாறு செய்யும் விசேஷச் சிறப்பு நீதிபதிகளுக்கு இருக்கிறது. அதாவது, துரைத்தனத்தாருடைய சட்டங்களில் குறைவாக உள்ள அம்சங்களை நீதிபதிகளே பூர்த்திசெய்து சரிப்படுத்துகின்றனர். ஆதலால் ஒரு தேசத்தின் சட்டங்களில் பெரும் பாகத்தை நீதிபதிகளே நிரூபணம் செய்திருப்பதாகக் கூறவேண்டும். நீதிபதிகளிடம் காணப்படவேண்டிய இலக்ஷணங்களில் பட்சபாதமில்லாமையே முதன்மையானது. மனித எத்தனத்தில் எவ்வளவு தூரம் சாத்தியமானதோ அவ்வளவு தூரம் நீதிபதிகள் பட்சபாதமின்றி நடுநிலைமை வகித்து வரவேண்டும். அவ்வாறு நடுநிலைமை வகிக்க வேண்டுமானால், அவர்களுக்கு துரைத்தனத்தார் சில சௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும். முதலாக, எவ்விதமான தீர்ப்பை அவர்கள் கூறினாலும், எவருக்கு அது சாதகமானாலும் பாதகமானாலும, நீதிபதிகளின் சம்பளத்திற்கோ உத்தியோகத்திற்கோ அதனால் ஹானி ஏற்படக்கூடாது. அங்ஙனம் நேரிடுமானால் பட்சபாதமாயிருக்கும்படி அவர்களை அது தூண்டுவது போலாகும்; ஏனெனில், நீதிபதிகள் தமது ஸ்தானத்தை அடைந்ததும் தர்மதேவதையின் உருவமாகவே மாறிப்போனால்கூட, அவர்களும் மனிதர்களேயாத

லால் மனிதருக்குரிய ஆசாபாசங்களும் சுயநல நாட்டமும் சிறிதளவாகிலும் அவர்களிடம் இருக்கும். அதனாலேயே தூய்மையான நடத்தையுடையவர்களே நியாயாதிபதியாக நியமிக்கப்படுகின்றனர். துரைத்தனத்தாரும் அவர்களுக்கு உதவவேண்டும். இதற்காகவே நியாயாதிபதிகளுக்கு எல்லா தேசங்களிலும் அதிகமான சம்பளம் கொடுக்கின்றனர்; இலஞ்சம்வாங்குவது முதலிய துர்க்குணங்களை அது தடுத்து விடுகிறது. சொற்ப வழக்குகளை விசாரணைக்கு வந்தாலும், அவர்கள் தமதுபெரியசம்பளத்தைப்பெற்றுக்கொண்டு விடுவார்கள். மேலும் அவர்களுக்கு நிரந்தரமான உத்தியோக கண்ணியமும் உண்டு; எந்த இராஜீயக் கட்சியார் நிர்வாகத்தைவற்றாலும், அவர்கள் தங்களிஷ்டப்படி நியாயாதிபதிகளை நீக்கிவிட முடியாது. சில சமயங்களில் துரைத்தனத்தாருக்கு விரோதமாக நியாயாதிபதிகள் தீர்ப்புச்சொல்ல வேண்டி வரும்; அதைக் கண்டு கோபங்கொண்டு துரைத்தனத்தார் அவர்களை நீக்கிவிட முயன்றால், நீதிபரிபாலனத்திற்கே தடை ஏற்பட்டுவிடும். அதன்பொருட்டே துரைத்தனத்தாருடைய சந்தோஷத்தையோ முகக்கோணலையோ கவனியாமல் நீதிபதிகள் நியாயம் நடத்துமாறு அவர்களுக்கு நிரந்தரமான உத்தியோக பதவி யளிக்கப்பட்டிருக்கிறது. இராஜீயச் சண்டைகளிலும் வியவகாரங்களிலும் அவர்கள் கலந்துகொள்ளாமல் அதன் குழப்பத்திலிருந்தும் இரைச்சலிலிருந்தும் ஒதுங்கி நின்று அமைதியாக நீதிபரிபாலனத்தை நடத்தி வருவார்கள். இங்கிலந்திலும் அமெரிக்காவிலும் நீதிபதிகள், நற்குண நன்னடத்தை தவறாது இருக்கும் வரையில் உத்தியோக பதவியை வகித்து வரலாம்; அவர்களுக்குத் தக்கபடி முதல்தரமான சம்பளம் கிடைப்பதன்றி அவர்களது உத்தியோக காலத்தில் அது

குறைக்கப்படுவதுமில்லை. இங்கிலந்தில் குற்றம் செய்யும் ஒரு நீதிபதியை வேலையிலிருந்து நீக்கவேண்டுமாயின் காமன்ஸ் சபையும், லார்ட்ஸ் சபையும் சேர்ந்து அரசருக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். அதே வழக்கம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலடங்கிய நாடுகளிலும் அநுஷ்டிக்கப்படுகிறது. அவ்வாறு நிர்வாக சபையாரின் பயமேயின்றி நீதிபதிகள் அவ்விடங்களில் நீதி செலுத்தி வருகின்றனர். அமெரிக்காவின் அரசியல் பத்திரத்திலும் நீதிபதிகளுக்குப் பின்வருமாறு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. 'மேல்நியாயஸ்தலங்களிலும் கீழ் நியாயஸ்தலங்களிலும் உள்ள நீதிபதிகள் நன்னடக்கையுடையவராயிருக்கும் வரையில் உத்தியோகம் வகிப்பார்கள். குறித்த காலங்களில் அவர்களுடைய ஊழியத்திற்கேற்றவாறு அவர்களுக்குச் சம்பளம் அளிக்கப்படும். ஆனால் அவர்களுடைய உத்தியோக காலத்தில் அச்சம்பளம் குறைக்கப்படக் கூடாது.' என்று அதில் எழுதியிருக்கிறது. பிரான்ஸ் தேசத்திலும் இவ்விதமான பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அமெரிக்காவில் சில மாகாணங்களில் மட்டும் வேறோர் அநுஷ்டானம் இருந்து வருகிறது. அங்கு நீதிபதிகள் ஸ்திரமாக நியமிக்கப்படாமல் ஒரு குறித்த காலத்திற்கு மட்டும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்கள் ஜனநாயக தத்துவத்தைத் தவறாக அர்த்தம் செய்துகொண்டதே இதற்குக் காரணம். அது மிகுந்த தீங்கை விளைவிக்கக்கூடிய முறை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஜனங்களால் நியமிக்கப்பட்டு அவர்களால் நீக்கப்படவும் கூடிய நீதிபதிகள் பட்சபாதமின்றியும் நடுவு நிலைமை வகித்தும் நடந்துகொள்ள இயலாது. இராஜீயக் கட்சிப் பிரதிகட்சிகளின் போராட்டத்தில் நீதிபதிகள் சம்பந்தப்

பட நேரிடும். அதனால் நீதிபதிகளுக்கே மதிப்புக் குறைவும் பிரஜைகளுக்கு நீதிபரிபாலனத்தில் அவநம்பிக்கையும் உண்டாய் விடுகின்றன.

(2) நீதிஸ்தலம்; நிர்வாகசபை, சட்டசபை இவைகளுக்குள்ளசம்பந்தம்: நீதிபதிகளை சாதாரணமாக, சட்டசபையினரும் கண்டிக்கமுடியாது, நிர்வாக சபையும் பயமுறுத்த முடியாது என்பதை கவனித்தோம். ஏனெனில் நிச்சயமான உத்தியோக காலமும் நிச்சயமானசம்பளமும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியானால், அரசாங்கத்தில் ஓர் அம்சமான நீதிபதிகளிடமிருந்தும் மற்ற இரு அம்சங்களான சட்ட, நிர்வாகசபைகளை எவ்விதம் இரக்ஷிப்பது என்ற கேள்வியுண்டாகும். நீதிபதிகள் சட்ட, நிர்வாக சபைகளை அமைப்பதிலோ கலைப்பதிலோ எவ்வித அதிகாரமுமில்லாதவர்கள் என்பது தெளிவான விஷயம். ஆனால் சட்ட இலாகாவும் நிர்வாக இலாகாவும் அதிக்கிரமமாக நடந்துகொண்டால், அவைகளைக் கண்டிக்கும் அதிகாரம் நீதிபதிக்கு உண்டா? அவ்வித அதிகாரம் இருந்தால், சம அந்தஸ்தைக் கொண்ட மூன்று வகுப்பாரில் நீதிபதிகளே உயர்ந்தவர்களென்றுய்விட மாட்டார்களா? சட்டசபையினரோ நிர்வாகத் தலைவர்களோ செய்யும் காரியங்கள் நியாயமா அநியாயமா என்பதை நீதிபதிகள் தீர்மானிக்கலாமா? தனது அதிகாரத்தை நிறைவேற்றும் ஹோதாவில் ஓர் அதிகாரிக்கும் சாமனிய மனிதனுக்கும் சச்சரவேற்பட்டால் அதை நீதிபதிகள் விசாரித்துத் தீர்மானிக்கலாமா என்ற முக்கியமான சந்தேகத்தை உலகத்தில் உள்ள அரசுகள் இருவிதமாகத் தீர்த்திருக்கின்றன. இங்கிலந்து, விரிட்டிஷ் குடியேற்ற நாடுகள், இந்தியா, அமெரிக்கா முதலிய தேசங்க

ளில் தவறு செய்யும் துரைத்தன உத்தியோகஸ்தர்கள் நீதிபதிகளின் முன் ஆஜராகி விசாரணைக் குட்பட்டேயாக வேண்டும். இங்கிலந்தின் அரசரும் அமெரிக்காவின் அதிபதியும் இந்தப் பொதுவான விதிக்கு உள்பட்டவர்களல்லர். ஏனெனில் இங்கிலந்தில் அரசரது பெயராலேயே நிர்வாகம் நடந்தாலும், அவர் எதிலும் சம்பந்தப்படுவதில்லை. மந்திரிகளும் மற்ற காரியதரிசிகளுமே நிர்வாகத்தை நடத்திச் செல்கின்றனர். ஆதலால், இங்கிலந்தில் "அரசர் நிஷ்களங்கமானவர்" எனக் கூறுவதுண்டு; அவரது பெயரைக் கொண்டு நிர்வாகத்தை நடத்துவோர்களே எல்லா தவறுகளுக்கும் உத்தரவாதிகளாவர். அவ்விதமே அமெரிக்காவின் அதிபதிக்கும் பாதுகாப்பு உண்டு. அவர்மீது பெரிய குற்றம் சுமத்தப்பட்டாலன்றி அவர் ஷை விதிக்கு உள்படாதவரேயாவார். இங்கிலந்தில் நடப்பதற்கு நேர் விரோதமான முறையே பி/2ரான்ஸ் முதலான சில தேசங்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. அங்கு துரைத்தன அதிகாரிகளை தண்டிக்கவோ, அவர்களது காரியங்களின் நியாய அநியாயத்தை எடுத்துரைக்கவோ கீழ் நியாயஸ்தலங்களுக்கு அதிகாரம் கிடையாது. இந்த இரு முறைகளும் அநுஷ்டிக்கப்படும் தேசங்களில் சிலவற்றை எடுத்து உதாரணமாகக் காட்டினுல் அந்த இருமுறைகளின் நன்மை தீமைகள் விளங்கிவிடும்.

இங்கிலந்தில் (அரசர் நீங்கலாக) மற்ற எல்லா துரைத்தன உத்தியோகஸ்தர்களும் தாம் செய்யும் காரியங்களுக்கு நியாயஸ்தலத்தார் முன் ஆஜராகி உத்தரம் சொல்லத் தயாராய் இருக்கவேண்டும். பிரதம மந்திரி முதற்கொண்டு போலீஸ் சேவகன் வரையிலுள்ள எவரும் சட்டத்தை மீறி நடந்தால், சாமானிய ஜனங்களைப் போலவே நியாயாதிபதி

களால் நடத்தப்படுவார்கள். தங்களுடைய அதிகாரத்தை துர்விநியோகப் படுத்துவோரும், தமது வரம்பைமீறி நடப்போரும் சாமானிய ஜனங்களைப்போலவே தண்டனை பெறவேண்டும். நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு, நீதிபதிகள் எவ்விதமான விசேஷ உரிமையையும் அளிக்கமாட்டார்கள். இவ்வாறு இங்கிலந்தில் பிரஜைகளின் சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது. அதிகாரிகள் சிறிதளவேனும் அக்கிரமமாக நடந்துகொண்டால், எந்த மனிதனுனாலும் உடனே அவர்கள்மீது வழக்குத் தொடங்கிவிடலாம். அதனாலேயே இங்கிலந்தில் தருமதேவதை தாண்டவமாடுவதாகக் கூறப்படுகிறது. முனிசிபாலிடிகளும் மற்ற நகரசபைகளும் தங்களுடைய வரம்பை மீறிக் காரியங்களைச் செய்தால் அவைகளையும் கண்டிக்கும் அதிகாரம் நியாயஸ்தலங்களுக்கு உண்டு. பார்லிமென்ட் சபையும் அரசருமே நீதிபதிகளின் வசப்படாதவர்கள். ஏனெனில் முன்பு கூறியபடி அரசர் எவ்விதத் தவறையும் செய்யமுடியாது; பார்லிமென்ட் சபையோ சர்வாதிகாரமும் உடையது.

ஆனால் அமெரிக்காவின் நீதிஸ்தலங்களுக்கு இன்னும் அதிகமான அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கும் இங்கிலந்தில் நடப்பதுபோலவே, குற்றம் புரியும் துரைத்தன உத்தியோகஸ்தர்கள் நீதிபதிகளால் தண்டிக்கப் படக்கூடியவர்களே யாவர். அத்துடன் நீதிபதிகளுக்கு இன்னுமொரு விசேஷ அதிகாரமும் உண்டு. அமெரிக்கா ஐக்கிய அரசாகையால், அதில் பல சிறிய நாடுகள் அடங்கியிருக்கின்றன. அமெரிக்கா முழுவதையும் ஆளுவதற்கு ஓர் ஐக்கிய துரைத்தனமும் தேசியசட்டசபைகளும் இருப்பதைப் போலவே ஒவ்வொரு நாட்டிலும் தனியான துரைத்தனமும் சட்ட சபையும் இருக்கின்றன. அமெரிக்காவின்

அரசியல் பத்திரத்தில் ஐக்கிய துரைத்தனத்திற்கு சில இலாகாக்களும், மாகாண துரைத்தனத்திற்கு சில இலாகாக்களும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றின் இலாகாக்களில் மற்றொன்று தலையிடக்கூடாது. உதாரணமாக, வருமான வரி விதிக்கும் அதிகாரம் ஐக்கிய துரைத்தனத்தினிடம் இருப்பதாகவும், மாகாண துரைத்தனங்கள் அவ்வரியை விதிக்கக் கூடாதென்று தடுத்திருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். இப்பொழுது அந்தப் பிரிவினைக்கு விரோதமாக ஒரு மாகாண துரைத்தனத்தார் வருமான வரியை விதித்தால் அது சட்டவரம்பை மீறிய செய்கையாகும். அத்தகைய வரியை ஒரு மனிதன் கொடுக்க மறுக்க, அது சம்பந்தமாக நீதிஸ்தலத்தில் ஒரு வழக்கு ஏற்பட்டால், நீதிபதிகள் மாகாண துரைத்தனத்தாருக்கு அந்த வரியை விதிக்க அதிகாரமில்லை எனக் கூறி அம்மனிதனுக்கு சாதகமாகவே தீர்ப்புச் சொல்லிவிடுவார்கள். சட்டசபையில் நிறைவேறிய சட்டத்தை தள்ளுபடிசெய்துவிடும் அதிகாரம் நீதிபதிகளுக்கு இல்லையானாலும் ஷெ சட்டசபைகள் தங்கள் அதிகார வரம்பைக் கடந்துசெய்யும் சட்டங்களை நீதிபதிகள் கவனிக்கமாட்டார்கள். அவ்வாறு அமெரிக்காவில் சட்ட சபையினுடைய காரியங்களையும் பரிசீலனை செய்யும் விசேஷ அதிகாரம் நீதிபதிகளுக்கு இருந்து வருகிறது.

இவ்விதமான பாதுகாப்பு இல்லாமற் போனால் துரைத்தனத்தாரும் சட்டசபையும் தங்கள் வரம்பிற்குள்ளடங்கி நடக்கும்படி செய்வது துர்லபம் என்று அமெரிக்கர்கள் கூறுகின்றனர். ஆனால் அமெரிக்காவைப்போல அரசியல் பத்திரங்களைப் பெற்றுள்ள எல்லா தேசங்களிலும் நீதிபதிகளுக்கு மேற்படி பரிசீலனை அதிகாரம் அளிக்கப்பட

வில்லை என்பது பின்னால் விளங்கும். இது அமெரிக்காவின் துரைத்தனத்தில் ஒரு விசேஷ அம்சமாகும். முதலில் இங்கிலந்திலிருந்து பலர் புறப்பட்டுச் சென்று குடியேறி அமெரிக்காவில் அரசுகளை ஸ்தாபித்ததாகவும், 18-வது நூற்றாண்டு வரையில் அவர்கள் இங்கிலந்தின் அரசருக்கு உட்பட்டு இருந்ததாகவும் முன்பு கூறினோமல்லவா. அக்காலத்தில் அமெரிக்காவில் குடியேறியவர்கள் தங்களுடைய துரைத்தனத்தார் அக்கிரமமாக நடந்துகொண்டால் அதைப்பற்றி இங்கிலந்தின் அரசருக்கு விண்ணப்பித்துக் கொள்வார்கள். ஆனால் 18-வது நூற்றாண்டில் அமெரிக்கா இங்கிலந்தின் ஆதிக்கத்தை மீறி சுயாதீனம் அடைந்தபொழுது, அரசரிடம் விண்ணப்பித்துக் கொள்ளும் உரிமைக்கு சமமாக, நீதிஸ்தலத்திற்கு இவ்வித உரிமையை அளித்துவிட்டனர். அமெரிக்காவில் நடப்பது போலவே கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் சட்டத்தைப் பரிசீலனை செய்யும் அதிகாரம் நீதிபதிகளுக்கு ஓரளவு அளிக்கப் பட்டிருக்கிறது.

ஆனால் ஐரோப்பாக்கண்டத்திலுள்ள பலதேசங்களிலோ இதற்கு நேர்விரோதமான முறை அநுஷ்டானத்தில் இருந்துவருகிறது. மேற்படி தேசங்களில் பல, எழுதப் பட்ட கான்ஸ்டிட்யூஷனைப் பெற்றிருக்கின்றன. ஆனாலும் அங்கு நீதிசபைகளுக்கு சட்டங்களை நிராகரிக்கும் அதிகாரம் கிடையாது; பி/₂ரான்ஸ், இற்றலி முதலிய தேசங்களில் சட்டசபையும் துரைத்தனத்தாரும் இயற்றும் சட்டங்களுக்கு நீதிபதிகள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். ஆனால் அதிக்கிரமமான சட்டங்களை துரைத்தனத்தார் இயற்றுவது துர்லபமானதே. இதில் ஒரு விசேஷத்தை கவனிக்கவேண்டும். பி/²ரான்ஸ் தேசம் ஐக்கிய அரசாங்கம்

அல்ல; அமெரிக்காவைப்போல ஐக்கிய அரசும் மாகாண அரசுகளும் இராஜ்ஜியாதிகாரத்தைப் பிரித்துக்கொள்ள வேண்டிய அவசியம் பிரான்ஸில் கிடையாது; அங்கு ஒரு மத்திய அரசாங்கமே இருக்கிறது. அதனால் அமெரிக்காவில் நடப்பதுபோல ஐக்கிய அரசுகளும் மாகாண அரசுகளும் ஒருவருடைய இலாகாவில் மற்றவர் தலையிடாதபடி கவனித்துக்கொள்ளும் வேலை பிரான்ஸில் உள்ள நீதிபதிகளுக்குக் கிடையாது. பிரஜா உரிமையைக் காப்பதொன்றே பிரான்ஸின் நீதிபதிகளுடைய வேலையாகும். ஆனால் அமெரிக்காவைப் போலவே ஐக்கிய அரசாங்கத்தைப் பெற்றிருக்கும் ஸ்விட்ஜர்லந்து தேசத்திலும் கூட நீதிபதிகளுக்கு மேற்படி விசேஷ அதிகாரம் அளிக்கப்படவில்லை. ஸ்விட்ஜர்லந்திலும் ஐக்கிய சட்டசபை இயற்றும் சட்டங்கள் எவ்விதமாக இருந்தாலும் நியாயமான சட்டங்களாகவே கருதப்படவேண்டும். யுத்தத்திற்கு முன் ஜெர்மனியும் ஐக்கிய அரசாங்கமாக இருந்ததானாலும், அங்கு நீதிபதிகளுக்கு அமெரிக்காவில் இருப்பதுபோல சட்ட பரிசீலனையதிகாரம் அளிக்கப்படவில்லை.

3. **துரைத்தன அதிகாரிகளைப் பற்றிய தனியான சட்டம்:—** அமெரிக்காவின் துரைத்தன முறையும் பிரான்ஸின் துரைத்தன முறையும் இன்னுமொரு விதத்தில் வித்தியாசப்படுகின்றன. சட்டங்களைமீறும் அதிகாரம் பிரான்ஸின் நீதிபதிகளுக்கு இல்லாமற்போனதுடன், அவர்களுடைய அதிகாரம் இன்னுமொரு விதத்திலும் குறைக்கப்பட்டிருக்கிறது. இங்கிலந்தில் துரைத்தன அதிகாரியும் சாமானியப் பிரஜையும் சட்டத்தின்படி ஒரே மாதிரியாக நடத்தப்படுவதாகக் கூறினோமல்லவா. இங்கிலந்தில் சட்டத்திற்குமுன் எல்லோரும் சமமானவர்களே; ஒருவருக்கொருவர் ஏற்றத்

தாழ்ச்சி இல்லை. ஆனால் பி/ரான்ஸில் இரண்டுவிதமான சட்டங்கள் இருக்கின்றன. சாதாரணமான குற்றவாளிகளுக்கு ஒரு சட்டமும், உத்தியோகஸ்தர்கள் குற்றவாளியானால் அவர்களுக்கு வேறொரு சட்டமும் அங்கு அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. உத்தியோக தோரணையில் குற்றம் செய்யும் அதிகாரிகளை பி/ரான்ஸ் தேசத்தில் சாதாரண நீதிபதிகள் விசாரித்து தண்டிக்க முடியாது. அவர்களுக்கு பிரத்தியேகமான விதிகளும் தனியான நீதிஸ்தலங்களும் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஷை நீதிஸ்தலங்களே உத்தியோகஸ்தர்களான குற்றவாளிகளை விசாரணை செய்யும். ஷை நீதிஸ்தலங்களில் நிர்வாக அதிகாரிகளே நீதிபதிகளாக வீற்றிருப்பார்கள். பி/ரான்ஸ் தேசத்தில் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் இம்மாதிரியான துரைத்தன நீதிஸ்தலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது பிரஜைகளுக்கும் அரசாங்கத்தாருக்கும் சச்சரவேற்பட்டால் அரசாங்கத்தாரே அந்தச் சச்சரவைத் தீர்க்கும் வழக்கமே பி/ரான்ஸ் முதலான ஐரோப்பிய தேசங்களில் இருந்துவருகிறது. மான்டேஸ்க்யூவினுடைய அரசியலதிகாரப் பிரிவினைக் கொள்கையின்படி சட்டசபை, நிர்வாகசபை, நீதிஸ்தலம் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று தலையிடாமல் இருக்கவேண்டுமெனவும், அவ்விதமில்லாவிடில் பிரஜையின் சுதந்தரத்திற்கு பங்கம் ஏற்பட்டு விடும் என்றும் கூறப்படுவதை முன்னொரு அதிகாரத்தில் விளக்கினோமல்லவா? அக்கொள்கையையொட்டியே பி/ரான்ஸ் தேசத்தினர்பின் வருமாறு வாதம் செய்கின்றனர். 'நீதிபதிகள் துரைத்தன வியவகாரங்களில் தலையிட்டு துரைத்தன அதிகாரிகளை உபத்திரவிப்பார்களானல், அப்பொழுதும் அரசியல் நிர்வாகத்திற்கு பங்கம் விளைந்துவிடும். ஆதலால் துரைத்தன

அதிகாரிகளை எதிர்த்துத் தடைப்படுத்தும் எந்த நீதிஸ்தல நடவடிக்கையும் அரசியல் ஸ்தாபனத்திற்கு விரோதமாதலால் அது பயனற்றுக்கிடக்கவேண்டியதே.' என்று அவர்கள் கூறி நீதிபதிகளின் அதிகாரத்திலிருந்து துரைத்தன அதிகாரிகளைப் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். நியாயமாக நோக்கும்பொழுது இந்த ஏற்பாடு சரியாகத் தோன்றினாலும், அநுபவத்தில் இதனால் பிரஜைகளுக்கு அநேகமான கெடுதல்கள் விளைகின்றன. அநீதியாக நடக்கும் அதிகாரியின் மீது பிரஜைகள் வழக்குத் தொடர்ந்தால், அதை அதிகாரிகளடங்கிய கோஷ்டியாரே முடிவுசெய்தால், பிரஜைகளுக்கு நியாயம் கிடைக்குமென எதிர்பார்க்க இயலாது. தங்களுடைய சகோதர உத்தியோகஸ்தரை தண்டித்தாகிலும்,பிரஜைகளுக்கு நியாயம் வழங்கவேண்டுமென ஷை நீதிஸ்தலத்தார் எண்ணுவது துர்லபமான விஷயம். தம்முடைய குற்றத்தைத் தாமே விசாரித்து நியாயமாகத் தீர்ப்புசெய்யும் விசேஷ நற்குணம்பெற்ற மனிதர் தொகுதியைக் காண்பது அரிதினும் அரிது. ஆகவே ஷை நீதிஸ்தலங்களில் எப்பொழுதும் துரைத்தனக் கட்சிக்கே ஜயம் ஏற்படும். அதனால் அதிகாரிகள் அக்கிரமம் செய்வதற்கு ஒரு பெரும் தூண்டுதல் ஏற்படுவது போலாகும். துரைத்தன நீதிஸ்தலங்கள் இருப்பதொன்றே பிரஜையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் கருவியாகும் என்று சில நூலாசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் சரித்திர பூர்வமாகப் பார்த்தால் குற்றம் செய்யும் துரைத்தனத்தாரே, தீர்ப்புச் செய்யும் நீதிபதியாகவும் இருக்கும் முறையில் பிரஜையின் சுதந்திரத்திற்கு ஹானி ஏற்படுவதே சாதாரணமாக இருக்குமென்பது விளங்குகிறது. இங்கிலந்திலோ துரைத்தனத்தார் பிரஜைகளை வருத்தி நிர்வாகம் நடத்துவதைத்

தடுப்பதற்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. பி/2ரான்ஸிலோ துரைத்தனத்தாருடைய அதிகாரத்திற்கு எவ்வித மான தடையும் எதிர்ப்பும் இருக்கக் கூடாதென்ற கொள்கையே பரவியிருக்கிறது. இங்கிலந்தில் பிரஜைகளின் சுதந்திரம் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்படுகிறது. பி/2ரான்ஸ் முதலான தேசங்களில் சில பிரஜைகளுடைய சுதந்திரத்திற்குப் பாதகமேற்பட்டாலும் அரசியல் நிர்வாகத்தின் வேகம் மட்டுப்படக் கூடாது என்ற நம்பிக்கையே ஓங்கிநிற்கிறது. இங்கிலீஷ்காரரின் நோக்கம் தர்மத்தை நிலைநாட்டுவது; பி/2ரெஞ்சுக்காரர் முதலானவர்களுடைய நோக்கம் துரைத்தனத்தைப் பலப்படுத்துவது.

12-வது அதிகாரம்.

ஓட்டுரிமையும் பிரதிநிதித்துவமும்.

(1) ஓட்டர்களின் தொகுதி; ஓட்டுரிமை அளிக்கப்பட்ட முறை:—நம் தேசத்தில் உள்ள சாமானிய ஜனங்களும் 'ஓட்' 'தேர்தல்' என்னும் விஷயங்கள் என்னவென்பதை இப்பொழுது ஓரளவு தெரிந்து கொண்டிருக்கின்றனர். சட்டசபைக்கும் முனிசிபல் சபைக்கும் எல்லா நகரங்களிலும் தேர்தல் நடப்பதையும் பல அபேட்சகர்கள் 'ஓட்' என்று பலரையும் கெஞ்சி வேண்டுவதையும் ஜனங்கள் கண்டிருக்கின்றனர். 'ஓட்' என்பது சட்டசபைக்கு இன்னாரைத்தான் அங்கத்தினராய் நியமிக்கவேண்டும் என்று தெரிவிக்கும் உரிமை. அந்த உரிமையை ஆண்மக்கள் பெண்மக்கள் ஆகிய எல்லோரும் பெற்றிருக்கவில்லை. சிலரே அந்த உரிமையைப் பெற்று ஒருவிதமான இராஜீய அதிகாரத்தை யடைந்திருக்கின்றனர். மற்றவர்கள் இராஜீய

வியவகாரங்களில் சிறிதளவும் சம்பந்தம் பெருதவர்கள்; அவர்கள் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்து அமைதியாக இருந்து, வரிசெலுத்தி, அரசினுல் பாதுகாக்கப்படுகிருர்கள். ஆதலால் ஒரு தேசத்தில் உள்ள பிரஜைகளின் தொகையைக் காட்டிலும் ஓட்டர்களின் தொகை குறைவாகவே இருக்கும். ஓர் அரசின் ஆதிக்கத்திற்குள்பட்டு இருப்பவர்கள் யாவரும் பிரஜைகள் என அழைக்கப்படுவோர்கள். ஆனுல் ஓட்டர்கள் மட்டுமே அரசியல் நிர்வாகத்தில் சிறிதளவு சம்பந்தத்தையாவது பெற்றிருக்கின்றனர். ஆதலால் அரசியல் நிர்வாகத்தில் சட்டபூர்வமாக ஓரளவு கலந்துகொள்ளும் ஜனங்களை 'இராஜீய ஜனங்கள்' என்று கூறுவது வழக்கம். ஆனுல் பிரான்ஸ் தேசத்தில் 1791-ம் வருஷத்தில் தயாரிக்கப்பட்ட அரசியல் பத்திரத்தில் ஜனநாயக தத்துவத்திற்கு விரோதமேற்படாமல் இருக்கும் பொருட்டு, ஓட்டர்கள் 'இயங்கும் பிரஜைகள்' என்றும், ஓட்டுரிமை பெருத சாமானிய ஜனங்கள் 'இயங்காப் பிரஜைகள்' என்றும் குறிக்கப்பட்டனர். ஓட்டுரிமை பிரஜைகளுடைய சிறந்த பூஷணமாக மதிக்கப்படுகிறது. அவ்வுரிமையைப் பிரஜைகள் தவருன வழியில் உபயோகப்படுத்தாமல் ஒழுங்காகப் பயன்படுத்த வேண்டும். பிறருடைய தயவையோ திரவியத்தையோ நாடி அந்த உரிமையை விக்கிரயம் செய்தல் கூடாது. பிறருடைய உபத்திரவம் ஏற்படும் என்பதைப் பற்றியே, இப்பொழுது எந்தத் தேர்தல் நடைபெற்றுலும், இரகசியமாக ஓட் செய்வதற்கு வசதி யளிக்கப்படுகிறது. ஒருவர் இன்னுருக்கு ஓட் கொடுக்கிருரென்பது பகிரங்கமாய் விட்டால், அதனுல் கெடுதல் ஏற்படலாம். கிராமத்தில் தலைவனுயிருப்பவனுக்கு ஓட் கொடுக்க ஒருவருக்கு இஷ்டமில்லாதிருக்

கலாம்; அந்தரங்கமாய் ஓட்செய்ய வசதி இருந்தால், அவர் யாருக்கு ஓட்செய்தார் என்பதை எவரும் அறிய இடமில்லை. எவருடைய பயமுமின்றி அவர் தமக்கிஷ்டமானவருக்கு ஓட்டையளிக்கலாம்; அவர் செய்யும் காரியம் வெளியில் தெரிந்துவிடுமென்ற பயமிருந்தால் அவர் தமது மனச்சாட்சிக்கு விரோதமாக அந்த ஊர்த் தலைவனுக்கே ஓட்செய்ய நேரிடும்; ஏனெனில் அவனது பகைமையை சம்பாதித்துக்கொண்டால், அதனால் பின்பு கெடுதி நேரிடலாம்.

நமது கிராமங்களில் இருக்கும் ஜனங்கள் அடிக்கடி ஒன்றுகூடி பஞ்சாயத்து சபையை நியமிப்பது பழையகால வழக்கமாயிருந்து வந்தது. இதுவும் ஒரு தேர்தலேயாகும்; ஜனங்களுடைய அபிப்பிராயம் ஓட்டுரிமை போன்றதே. தமது ஓட்டைக்கொடுத்து, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களை இராஜ்ய பரிபாலனம் செய்யுமாறு அனுப்பும் அதிகாரம் ஜனங்களிடம் இருப்பது ஒரு பெரிய கௌரவமே. இங்கிலந்து, அமெரிக்கா முதலான தேசங்களின் அரசியல் அமைப்பில், ஜனங்கள் ஓட்கொடுத்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதும், அதே பிரதிநிதிகள் இராஜ்ஜியாதிகாரத்தை வகிப்பதுமே முக்கிய அம்சங்களாய் இருந்து வருகின்றன. இங்கிலந்தில் பழையகாலம் முதலே இம்முறை வழக்கத்தில் இருந்திருக்கிறது. ஆனால் அக்காலத்தில் பூஸ்திதி யுடையவர்களுக்கே ஓட்டுரிமை யளிக்கப்பட்டது. ஏனெனில் அவர்களுக்கே அப்பொழுது சமூகத்தில் மதிப்பும் கௌரவமும் இருந்துவந்தன. பிறகு நாளடைவில் பூஸ்திதியில்லாது, வேறு ஆஸ்தி பெற்றவர்களும் அவ்வுரிமையை அடைந்தார்கள். சொத்துரிமை இருந்தவர்களுக்கே அரசியலில் சிரத்தையும் கவனமும் தோன்றும் என்பது அக்காலத்தவர்களுடைய கொள்கை. அதா

வது, ஒரு தேசத்தில் ஒருவனுக்கு உள்ள சொத்துரிமைக்கு மட்டுமே 'ஓட்' தரப்பட்டது; எல்லாப் பிரஜைகளுக்கும் அது அளிக்கப்படவில்லை. பிரான்ஸ் தேசத்தில் ஜனநாயக தத்துவ வெள்ளம் புரண்டோடிய 18-ம் நூற்றுண்டின் கடைசியில், 1791-ம் வருஷத்திய அரசியல் பத்திரத்தில் 'மூன்று நாட்கள் வேலைசெய்து சம்பாதிக்கும் கூலிக்கு சமமான தொகையையாவது வரியாகச் செலுத்துவோர்களுக்கே' ஓட்டுரிமை அளிக்கப்பட்டது. ஆனால் இவ்வாறு ஓட்டுரிமை சிலருக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருப்பதுதான் ஜனநாயக தத்துவத்திற்கு ஏற்றதாகாது. ஏதோ ஒரு குறித்த தொகையை அரசாங்கத்தாருக்கு வரியாகச் செலுத்துவோர்களே இப்பொழுதும் ஓட்டுரிமையைப் பெற்றிருக்கிறார்கள். இங்கிலந்திலும் பழைய காலங்களில் ஓட்டுரிமை வெகு சிலருக்கே இருந்துவந்தது; நாளடைவிலேயே அது கொஞ்சம் கொஞ்சமாக விரிந்து பரவிற்று. ஓட்டுரிமையைச் சிலருக்குமட்டும் அளித்து விட்டு மற்றவருக்கு மறுத்துவிடுவது அநீதியாகும். உலகத்தின் ஜனங்களில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கினர் மட்டுமே ஓட்டுரிமையைப் பெற்றிருக்கின்றனர். இந்தியாவிலோ அது மிக மிகக் குறைவு.

ஆனால் பதினெட்டாவது நூற்றுண்டில் அமெரிக்காவிலும் பிரான்ஸிலும் ஏற்பட்ட இராஜீயப் புரட்சிகளாலும், அக்காலத்தில் பிரபலமடைந்திருந்த அரசியல் கொள்கைகளாலும் ஓட்டுரிமை என்பது யாவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் பரவலாயிற்று. சொத்துரிமை இருந்தாலும், இல்லாவிடினும், பிரஜைகளாக இருப்போர் எல்லோருக்கும் ஓட்டுரிமையைத் தரவேண்டுமென்று பலர் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். முக்

கியமாக பிரான்ஸ் தேசத்தில் 18-வது நூற்றாண்டில் ஜேகோபின்ஸ் என்ற தீவிரக் கட்சியினரே அதற்காகப் போராட ஆரம்பித்தனர். ஆனால் அந்தக் கட்சியில் கூட வெகு சிலரே ஸ்திரீகளுக்கும் சமமான உரிமையளிக்கப் படவேண்டுமென வற்புறுத்தினர். இக்கொள்கைகள் பிரபலமானவுடனே இங்கிலந்திலும் அமெரிக்காவிலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சீர்திருத்தம் செய்து அதிகமான ஜனங்களுக்கு இதே உரிமையை ஏற்படுத்தினர்.

ஜனநாயக தத்துவம் பரவ ஆரம்பித்தபொழுது ஸ்திரீகளுக்கும் சமமான அரசியல் அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று அநேகர் எண்ணவில்லை. ஏனெனில், ஸ்திரீகளுடைய வேலை அரசியல் சம்பந்தமானதல்ல என்றே அக்காலத்தவர்கள் நினைத்திருந்தனர். 18-வது நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் இருந்த கார்விலியர்ஸ் என்ற கட்சிக்காரர்களும், ஸ்திரீகளுடைய உரிமைகளைத்தாங்கி எழுதிய மேரீ வோல்ஸ்டன் க்ராப்ட் என்ற மாதைப் போன்ற சில ஆசிரியர்களுமே பெண்மக்களுக்கும் இராஜீய உரிமைகள் வேண்டுமென வாதம் செய்துவந்தனர். ஆனால் 19-ம் நூற்றாண்டின் மத்தியில் மேனாடுகளில் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாறுதல்களினால் இயந்திரங்களும் தொழிற்சாலைகளும் பெருகிவிட்டதன் பயனாக, ஸ்திரீகளும் தமது வீட்டைவிட்டு தொழிற்சாலை சென்று கூலி வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டனர். இதனால் புருஷர்களுக்கு சமமாக அவர்களும் கிளர்ச்சி செய்யலாயினர். 1869-வது வருஷத்தில் ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவர் 'ஸ்திரீகளின் அடிமை நிலை' என்ற ஒரு நூலை இயற்றி வெளியிட்டது ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்கியதாகக் கூறலாம். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புருஷர்களுக்கும்

ஸ்திரீகளுக்கும் இராஜீய விஷயங்களில் சமமான உரிமைகளை இருக்கவேண்டுமென்ற சித்தாந்தம் பலமாக ஊன்றி விட்டது.

இங்கிலந்தில், இதையொட்டியே புருஷருக்குச் சமமாக ஸ்திரீகளுக்கும் இந்த உரிமையளிக்கப் பட்டிருக்கிறது. 1918-ம் வருஷத்திலேயே இச்சீர்திருத்தம் செய்யப் பட்டது. ஐரோப்பிய மகாயுத்தத்தின்பொழுது ஸ்திரீகள் செய்த உதவியை மெய்ச்சி அவர்களுக்கு இந்த உரிமை சன்மானமாக அளிக்கப்பட்டது என்று கூறுவார்கள். ஆனால் உண்மையில் இங்கிலந்தின் ஸ்திரீகள் இவ்வுரிமையைப் பெறுவதற்காகச் செய்த கிளர்ச்சியின் பயனாகவே அது அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இப்பொழுது (1928-வது வருஷத்தில்) மறுபடி ஒரு சட்டமியற்றி ஆண்பாலரைப் போலவே இருபத்தொரு வயதிற்கு மேலான பெண் பாலாரனைவருக்கும் இங்கிலந்தில் சமமான ஓட்டுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற பெருத்த இராஜீய முன்னேற்றம். சுதந்திர நாடுகளில் ஓட்முறை நடைபெறும் விதத்தில் இன்னும் சில விசேஷங்களையும் குறிப்பிடலாம். ஜாதி, மதம், நிறம் இவைகள் ஒருவனுடைய ஓட்டுரிமையை பாதிக்கக்கூடாது. எந்த ஜாதியானாலும், அவன் இராஜீய சம்பந்தமான விஷயங்களில் சமமான உரிமையைப் பெற்றேயாகவேண்டும். பைத்தியக்காரர்கள், மூடர்கள், குற்றவாளிகள் முதலானவர்கள் இவ்வுரிமையை வகிக்க யோக்கியதையற்றவர்கள். மேனாட்டு சம்பந்தத்தால் அங்குள்ள முறையையே இந்தியர்களும் பின்பற்றவேண்டி யிருக்கிறது. புருஷரும் ஸ்திரீகளும் சமமான அந்தஸ்தைக் கொண்டவர்கள் என்ற கொள்கையை இராஜீய உலகில் அநுஷ்டித்துக் காட்டியதே இந்த நூற்றாண்டின் பெரிய

சம்பவமாகும். இப்பொழுது இங்கிலந்தின் பார்லிமெண்டிலும் மற்ற சில தேசங்களின் சட்ட சபைகளிலும் ஸ்திரீ அங்கத்தினர்களும் இருக்கின்றனர்.

(2) சிறுபான்மையோருக்குப்பிரதிநிதித்துவம்:—ஜனங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கே தமது ஓட்டுரிமையை உபயோகிக்கவேண்டும். இதற்காக தேசத்தைப் பல தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதியில் உள்ள ஓட்டர்களும் இரண்டொரு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது வழக்கமாக இருக்கிறது. ஷை தொகுதிகளோடு வேறு சில விசேஷத் தொகுதிகளும் இருப்பதுண்டு. அதாவது ஸர்வ கலாசாலைப் பட்டம் பெற்றவர்களும், வர்த்தகச் சங்கங்களும், நிலச்சுவான்தாரர்களும் தனித்தனியாக ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். இந்தியாவில் இப்பொழுது ஹிந்துக்கள் தொகுதி வேருகவும் முஸ்லீம்கள் தொகுதி வேருகவும் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இதனுல் ஹிந்து முஸ்லீம்களுக்குள் ஒற்றுமையும் சமரஸபாவமும் ஏற்படுவதில்லையென்ற அபிப்பிராயத்துடன் பல நிபுணர்கள் கலப்புத் தொகுதிகளே தேவையெனக் கூறி வருகின்றனர். மற்றும் சிலர் தனித்தனியான தொகுதிகளே இருக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்கின்றனர். தேர்தல் முறை பலதேசத்திலும் பலவிதமாக இருந்து வருகிறது. நம் தேசத்தில் தாழ்ந்த ஜாதியினர் தங்களுக்கெனத் தனியான பிரதிநிதித்துவம் வேண்டுமெனக் கேட்டுவருவதை நாம் அறிந்திருக்கிறேம். அதாவது ஒரு தேசத்தில் 50000 ஓட்டர்கள் இருப்பதாகவும், அவர்களில் 1000 பேர்களே தாழ்ந்த ஜாதியினர் எனவும் வைத்துக்கொள்வோம். பொதுத் தேர்தலில் இந்த 50000 பேர்களும் பத்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டி

வரும். அந்தப் பத்து ஸ்தானங்களுக்காக இருபது அபேட்சகர்களும் அதில் இரண்டு அல்லது மூன்று தாழ்ந்த ஜாதி அபேட்சகர்களும் இருப்பதாகவைத்துக்கொள்வோம். பொதுத் தேர்தலில் உயர்ந்த ஜாதியினர் உயர்ந்தஜாதி அபேட்சகர்களுக்கே ஓட் கொடுப்பாராதலால், இவ்விரண்டு மூன்று கீழ் ஜாதி அபேட்சகரும் தோற்றுப் போய்விடுவர். அதாவது சமூகத்தில் ஒரு முக்கிய பிரிவான 1000 தாழ்ந்த ஜாதியினருக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமற் போய்விடுகிறது; அவர்களுக்கு உயர்ந்த ஜாதிப் பிரதிநிதிகளிடம் பூர்ண நம்பிக்கை இல்லாது போகலாம்; அவ்விதம் நம்பிக்கை இருந்தாலும் தங்கள் ஜாதியைச்சேர்ந்த மனிதனொருவன் பிரதிநிதியாயில்லாதது அவர்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்கும். அந்தச் சிறுபான்மையோருடைய மனவருத்தத்தை நீக்குவதெப்படி? அதற்காகவே ஷை 1000 பேர்களையும், பொதுஜனங்களுடன் சேர்க்காமல் அவர்களை ஒரு தனியான தொகுதியாகச் செய்து அவர்கள் ஒரு பிரதிநிதியை அனுப்புமாறு செய்வது வழக்கம். அல்லது அவர்களுள் ஒருவரைப் பிரதிநிதியாக கவர்னரோ கவர்னர் ஜெனரலோ நியமனம் செய்வதுமுண்டு. அல்லது சிறுபான்மையோராயுள்ள முஸ்லீம்கள் முதலானவர்களுக்குச் சட்டசபையில் சில ஸ்தானங்களை ஒதுக்கிவைத்துவிடுவதுமுண்டு. ஷை ஸ்தானங்களை முஸ்லீம்களே நிரப்ப வேண்டும். ஆனால் அத்தகைய தனித்தொகுதிகள் தேசத்தின் பல ஜாதிகளுக்குள் ஒருவருக்கொருவர் ஒற்றுமை ஏற்படுவதைத் தடுக்கும் என்பதை மறக்கக்கூடாது. ஹிந்துப் பிரதிநிதியிடம் முஸ்லீம்களுக்கு நம்பிக்கையும், முஸ்லீம் பிரதிநிதிக்கு ஹிந்துக்களுடைய ஆதரவும், உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்றபேதமின்றி யாவரையும் தனது

தேச சகோதரனாக நோக்கும் மனப்பான்மையும் உண்டானாலன்றி தேசத்தில் பூர்ண ஒற்றுமை இருப்பதாகக் கூற முடியாது. மத வேற்றுமையும் ஜாதி வேற்றுமையும் இராஜீய விஷயங்களில் தலையிடுவது பெரும் அநர்த்தங்களை விளைவிக்கக் கூடியது.

பிரதிநிதிகளைச் சட்டசபைக்கு அனுப்புவதைப் பற்றியும் 'ஓட்' செய்யும் விதத்தைப் பற்றியும் இன்னும் சில சிக்கலான விஷயங்கள் இருக்கின்றன. (1) இப்பொழுது நமது தேசத்தைப் பல ஜில்லாக்களாகப் பிரித்து ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இரண்டொரு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது வழக்கமாக இருக்கிறது. அங்ஙனமின்றி, நமது மாகாணம் முழுவதையும் ஒரே தேர்தல் தொகுதியாகச் செய்து பொதுவாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்குமாறு செய்தால், சில ஜில்லாக்களுக்குப் பிரதிநிதித்துவமே இல்லாது போய்விடலாம். உதாரணமாக, நமது மாகாணம் முழுவதற்கும் ஐம்பது பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென வைத்துக்கொள்வோம். இதற்கு 150 அபேட்சகர்கள் இருக்கலாம்; இந்த 150 பேர்களின் பெயரையும் ஒரு காகிதத்தில் எழுதி அதில் ஏதோ ஐம்பது பேர்களுக்கு ஓட் அளிக்குமாறு ஓட்டர்களுக்கு அக்காகிதம் அனுப்பப்படும். அதில் தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் கடைசியாக உள்ள ஐம்பதுபேர்களுக்கு ஓட் கொடுக்கலாம். ஆனால் இன்னும் பல ஜில்லாக்கள் சேர்ந்து முதல் ஐம்பது பேர்களுக்கு ஓட் கொடுத்து அவர்களை ஜயமடையும்படி செய்துவிடலாம்; இவ்வைம்பது பேர்களும் சேர்ந்து தம்மை சென்னை மாகாணப் பிரதிநிதிகளெனக் கூறிக் கொள்வார்கள்; ஆனால் தஞ்சாவூர் ஜில்லாவாசிகளுக்கு அவர்களிடம் பூர்ண நம்பிக்கை இருக்க நியாயமில்லை. இவ்விதமாக, சிறு

பான்மையினருக்குப் பிரதிநிதித்துவமே இல்லாமற் போவதைத்தடுக்கவே நமதுமாகாணத்தை ஜில்லாக்களாகப்பிரித்து ஒவ்வொரு ஜில்லாவிற்கும்(அல்லது ஒவ்வொருபெரிய நகரத்திற்கும்) தனித்தனியாகப் பிரதிநிதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். இந்த ஏற்பாட்டில் எந்த ஜில்லாவும் பூரணமாகப் பிரதிநிதித்துவமே பெருமல் போவதில்லை. ஒரு ஜில்லாவில் உள்ள சில ஓட்டர்களாவது தங்களுக்கிஷ்டமான ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து விடுகின்றனர். (2) ஒரு ஜில்லாவில் இரண்டு பிரதிநிதி ஸ்தானங்கள் இருப்பதாகவும் அவைகளுக்கு நான்கு அபேட்சகர்கள் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அந்த ஜில்லாவில் உள்ள 3000 ஓட்டர்களில் 1600 பேர்கள் முதலிரண்டு அபேட்சகர்களுக்கும் மீதியுள்ள 1400 பேர்கள் கடைசி இருவருக்கும் ஓட் செய்தால் முதலிரண்டு பேர்கள் வெற்றிபெறுவர். அதனுல் ஜில்லாவிலுள்ள ஓட்டர்களில் ஏறக்குறைய பாதிப் பேர்களுக்கு பிரதிநிதித்துவமே இல்லாமல் போகிறது. முதலிரண்டு அபேட்சகர்களிடம் 1400 ஓட்டர்களுக்குப் பூர்ணமான நம்பிக்கையே யிராது. எனவே தேசத்தை ஜில்லாக்களாகப் பிரித்து ஒருவிதமான துன்பத்தை அகற்றியபோதிலும், இன்னொரு விதமான துன்பம் குறுக்கிடுகிறது. ஒரு ஜில்லாவின் பிரதிநிதிகளென ஆடம்பரமாகச் சொல்லிக்கொண்டு அந்த ஜில்லாவின் மகா ஜனங்களின் சார்பாகச் சட்டசபையில் பிரசங்கம் செய்கிறவர்கள் அங்குள்ள பாதி ஜனங்களுடைய நம்பிக்கையை மட்டுமே பெற்றிருக்கின்றனர். அவ்விதமானுல் அந்த ஜில்லா முழுதையும் குறித்துப்பேச அவர்களுக்கு என்ன உரிமையிருக்கிறது? (3) ஒரு மாகாணத்தில் 50000 ஓட்டர்கள் இருப்பதாகவும், அது 20 ஜில்லாக்களாகப் பிரிக்கப் பட்டிருப்ப

தாகவும் வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு ஜில்லாவிலி ருந்தும் மூன்று பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படலாம். பொதுத்தேர்தல் நடைபெறும் பொழுது சுயராஜ்யக் கட்சிக் காரர்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் முதன்மையாகத் தேர்ந் தெடுக்கப்படுவதாகக் கொள்வோம். அதாவது ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள 2500 ஓட்டர்களில் 1600பேர்சுயராஜ்யக் கட்சிக்காரருக்கும் மற்றவர்கள் வேறு கட்சிக்காரருக்கும் ஓட்செய்வதாக எண்ணிக்கொள்வோம். இந்த 1600ஓட்டுகள் சுயராஜ்யக் கட்சிக்காரருக்கு அவசியமான ஓட்டுகளுக்கும் அதிகமானவை. 1300 ஓட்டுகள் இருந்தாலே அவர்களுக்கு வெற்றி கிடைத்துவிடும். அப்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் சுயராஜ்யக் கட்சிக்காரருக்குத் தேவைக்கதிகமான ஓட்டுகள் கிடைக்கின்றன. எனவே மாகாணத்தில் உள்ள 50000ஓட்டு களில் 32000 பேர்களுக்கு அதிகமாக சுயராஜ்யக் கட்சிக் காரருக்கே ஓட் கொடுப்பார்கள்; அதாவது தேச ஜனங் களில் பெரும் பான்மையோர் சுயராஜ்யக் கட்சியை ஆத ரிப்பதாக அர்த்தம் ஆகும்; ஆதலால் நியாயமாகப் பார்த் தால் ஜனப் பிரதிநிதிகளடங்கிய சட்டசபையும் சுயராஜ் யக் கட்சியினரின் கொள்கையையே பின்பற்ற வேண்டும். ஆனல் கடைசியில் பார்க்கும்பொழுது சட்ட சபையில் உள்ள அறுபது ஸ்தானங்களில் இருபது மட்டுமே சுய ராஜ்யக் கட்சிக்குக் கிடைத்திருக்கலாம். மாகாணத்திலுள்ள ஓட்டர்களில் பெரும்பாலோர் அவர்களை ஆதரித்தாலும் சட்டசபையில் அவர்களுக்கு மதிப்பு இல்லாது போய்விடு கிறது. மற்ற நாற்பது அங்கத்தினர்களும் சேர்ந்து இவர்களு டைய உத்தேசத்தைத் தடுத்துவிடலாம். மாகாணத்தை ஜில்லாக்களாகப் பிரித்துத் தேர்தல் நடத்துவதாலும் ஒரே அபேட்சகருக்குத் தேவைக்கு அதிகமான பல ஓட்டுகள்

கிடைப்பதனுலும் இந்தத் தீங்கு ஏற்படுகிறது. தேச ஜனங்களிற் பெரும்பாலோர் ஒரு கொள்கையைப் பின்பற்றினுலும் அக்கொள்கை சட்டசபையில் ஆதரிக்கப்படாமல் போகிறது. மேனுடுகளில் துரைத்தனம் வகித்திருக்கும் இராஜீயக் கட்சியினர் தேர்தல் நடக்கும்பொழுது தங்களுக்கிஷ்டமானபடி தேர்தல் தொகுதிகளைப் பிரித்துக் கடைசியில் தங்களுடைய கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்களே சட்டசபையில் அதிகமான ஸ்தானம் பெறும்படியும், மற்ற கட்சிக்கு பொதுவான ஆதரவு இருந்தபோதிலும் அது சட்டசபையில் பலஹீனமாக இருக்கும்படியும் செய்ய முற்படுவது சகஜமான காரியமாக இருக்கிறது.

அத்தகைய கெடுதல்களை விலக்கும்பொருட்டும், 'மைனுரிடி' எனப்படும் சிறு பான்மையோருக்கும், அதாவது பிரஜைகள் யாவருக்கும் பிரதிநிதித்துவம் ஏற்படுவதன் பொருட்டும் பல தேசத்தினர் பலவித முறைகளை அநுஷ்டித்து வருகின்றனர். அவையாவன:-(1) நமது தேசத்தில் சிறுபான்மையோராய் இருக்கும் சில தனி ஜாதிகளுக்குப் பிரதிநிதித்துவம் ஏற்படும்பொருட்டு அவர்களது சமூகத்தை ஒரு தனித் தொகுதியாகச் செய்திருப்பதையும், அல்லது, அச்சமூகத்திலிருந்து சிலரை நியமனம் செய்வதையும், அம்முறை தேசத்தின் ஒற்றுமையைக் குலைக்கும்விதத்தையும் முன்பே விவரித்துக் கூறினேம். (2) பத்தொன்பதாம் நூற்றுண்டில் தாமஸ் ஹேர் என்பவர் ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்தார். அது பின்வருமாறு:-தேசத்தைப் பல ஜில்லாக்களாகப் பிரித்துத் தனியாகப் பிரதிநிதிகளை அனுப்புவது கூடாது. தேசம் முழுதும் ஒரே தொகுதியாகும். எந்த அபேட்சகரும் எங்கு வேண்டுமானுலும் ஓட் பெறலாம். சட்டசபைக்குள்ள ஸ்தானங்களைக் கொண்டு ஓட்டர்களின் மொத்தத்

தொகையை வகுத்து அதனுடைய ஈவு எண்ணுக்கும் அதிக மன ஓட்டுகள் பெறுவோர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். சட்டசபைக்கு நாற்பது ஸ்தானங்களும், 40000 ஓட்டர் களும் இருந்தால், ஆயிரத்திற்கதிகமான ஓட் பெறு வோர்களில் முதல் நாற்பது பேர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். அதனால் எந்தக் கட்சியினரும் தேசம் முழுதிலும் ஓட் பெறலாம். ஒவ்வொரு ஜில்லாவிலும் தனி யாகக் கணக்குப் பார்த்தால் சிறுபான்மையோராக இருக் கும் ஓட்டர்கள் சேர்ந்து ஒற்றுமையாக ஓட்செய்து தங்க ளுக்கென சில பிரதிநிதிகளைப் பெற்றுவிடலாம். தனித் தனி ஜில்லாவாக இருந்து ஓட்செய்தால் இச்சிறுபான்மை யோர் ஒவ்வோர் இடத்திலும் பின் தள்ளப்பட்டுப் போவ தால் அவர்களுக்கு பிரதிநிதித்துவமே இல்லாமல் போய் விடும் என்பதே ஷேயாருடைய கொள்கை. அந்தமுறை (அதாவது பிரஜைகளே தங்களை ஸ்வபாவமான தொகுதி களாகப் பிரித்துக்கொண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப் பது) மிகவும் சிறந்ததேயானாலும் அதை அநுஷ்டானத் தில் நடத்திக் காட்டுவது நிரம்பவும் கடினமானது. உதா ரணமாக, நமது தேசத்திலுள்ள தீண்டாத ஜாதியினரை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் அவர் கள் சிறுபான்மையோராக இருப்பதனால் அவர்கள் தங்களு டைய பிரதிநிதிகளை வெற்றியடையுமாறு செய்ய முடிவ தில்லை. ஹேரினுடைய முறையை அநுசரித்தால், மாகா ணத்திலுள்ள தீண்டாத ஜாதியினர் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுக்கென இரண்டொருபிரதிநிதிகளைத்தேர்ந் தெடுக்கலாம். ஆனால் அம்முறை நன்றாக நடக்கவேண்டு மானால் தீண்டாத ஜாதியினருக்கு மிகுந்த இராஜீய அறிவும் பொறுப்பும் உண்டாகவேண்டும். ஆதலால் ஒவ்வோர் ஓட்

ட்டரும் இராஜ்ய விஷயங்களில் அதிகமான ஊக்கம் கொண்டாலன்றி அம்முறை சரியாக நடைபெருது. (3) மைனரிடி (சிறுபான்மை) கட்சியினருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு இன்னொரு முறையும் சில இடங்களில் அநுஷ்டிக்கப் படுகிறது. முனிசிபல் சபைக்கோ அல்லது வேறு கமிட்டிகளுக்கோ தேர்தல் நடைபெறும்பொழுது, அம்முறை அநுசரிக்கப்படலாம். அதன்படி பன்னிரண்டு ஸ்தானங்களுக்கு அபேட்சகர்கள் நின்ருர்களானல், ஒவ்வோர் ஓட்டரும் ஏழு பேர்களுக்கே ஓட்கொடுக்க அநுமதிக்கப்படுவார். அதனல் வலுவாயுள்ள கட்சியினர் பன்னிரண்டு ஸ்தானங்களையும் அபகரிக்க முடியாமல் சிறுபான்மையினருக்கு ஐந்து ஸ்தானங்களாவது விட்டுத்தான் ஆகவேண்டும். ஆனல் ஒரே ஒரு ஸ்தானத்திற்கே தேர்தல் நடக்கவேண்டுமானல், அம்முறை பயன்படாது. அதிகமான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமானல், அவ்வாறு ஓட்டர்களுடைய சுதந்திரத்தைச் சிறிதளவு கட்டுப்படுத்தி மைனரிடி கட்சியினருக்கு சாதகமாகத் தேர்தல் நடக்கும்படி வழிசெய்யலாம். (4) இன்னும் சில இடங்களில் வேருெரு முறை அநுசரிக்கப்படுகிறது. அதாவது பன்னிரண்டு அங்கத்தினர்கள் நியமிக்கப்பட வேண்டுமானல், ஒவ்வோர் ஓட்டருக்கும் பன்னிரண்டு ஓட்டுகள் உண்டல்லவா? அம்முறைப்படி ஓர் ஓட்டர் தன்னுடைய பன்னிரண்டு ஓட்டுகளையும் பன்னிரண்டு பேர்களுக்குக் கொடுக்காமல் ஒருவனுக்கே கொடுத்துவிடலாம். சிறுபான்மையோரா யிருக்கும் கட்சியினர் தம்முடைய ஓட்டுகளையெல்லாம் முன் யோசனை செய்து ஒருவருக்கே கொடுத்தால், அவர் கடைசியில் ஜயம் பெற்றுவிடுவார். (5) முன்பு விவரிக்கப்பட்ட தாமஸ் ஹேர் என்பவருடைய முறையை அடிப்படையாகக் கொண்டு பலர் புது

விதமான தேர்தல் முறைகளை ஆதரித்து வருகின்றனர். உதாரணமாக, ஒரு ஜில்லாவில் ஐந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். அவ்வூரில் 20000 ஓட்டர்கள் இருந்தால்,ஒவ்வோர் அபேட்சகருக்கும் குறைந்தது 4000 ஓட்டுகள் கிடைத்தாலன்றி வெற்றி உண்டாகாது. சாதாரணமாய் ஓட் கொடுக்கும் முறையில் பல அபேட்சகர்களுடைய பெயர்களுமடங்கிய ஒரு காகிதத்தில் நமக்கு இஷ்டமான நபர்களுக்கு எதிராக ஒரு குறியை நாம் போட்டு விடுகிறோம். ஆனால் இப்புதிய முறையில் ஒவ்வோர் ஓட்டரும் ஷை குறியைப் போடுவதுடன் நிற்காமல், தன்னுடைய முதல் ஓட்டை யாருக்குக் கொடுக்கிறாரென்பதையும், அங்ஙனமே இரண்டாவது மூன்றாவது நான்காவது ஐந்தாவது ஓட்டுகளை வரிசையாக யார் யாருக்குக் கொடுக்கிறாரென்பதையும் குறிப்பிடவேண்டும். அதாவது, தமக்கு நிரம்பவும் இஷ்டமாயிருப்பவருக்கு முதன்மையான ஓட்டையும், அதற்கடுத்தபடியானவருக்கு இரண்டாவது ஓட்டையும், அதுபோலத் தமது பிரியத்தின் ஏற்றத் தாழ்வின்படி ஓட் கொடுக்கவேண்டும். இராமன் என்கிற அபேட்சகனுக்கு இங்ஙனம் 5000 ஓட்டர்கள் தம்முடைய முதல் ஓட்டைக் கொடுக்கலாம். அவனுக்கு அவசியமான ஓட்டுகளோ 4000 தான். எனவே அவனுக்கு அவசியமில்லாமல் அதிகமாயுள்ள 1000 ஓட்டுகளும், ஓட்டர்களினுடைய இரண்டாவது ஓட்டைப் பெறுகிறவனுக்கும் அங்ஙனமே வரிசைக் கிரமமாக மற்ற மூன்று அபேட்சகர்களுக்கும் வீதாசாரப்படி பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. இதனால் எந்த ஓட்டும் வீணாகப் போவதில்லை. இதில் இன்னொரு முக்கியமான இலாபம் என்னவெனில், வலுத்த

கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்களுக்குத் தேவைக் கதிக மாகக் கிடைக்கும் ஓட்டுகள் மைனுரிடிக் கட்சியின் அபேட்ச கர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிடும். ஆனல் இம்முறையில் ஒரேயொரு குறைமட்டும் உண்டு. அதாவது ஒரே பிரதி நிதியைத் தேர்ந்தெடுக்கும் தொகுதிகளில் இது பயன் படாது. இம்முறை விகிதாசாரப்படி பிரதிநிதித்துவம் அளிக்கும் முறை என்று குறிக்கப்படுகிறது. (Proportional Representation.) இதைச் சுருக்கமாக ஹேர்முறை என்றும் 'ஹேர்ஸ்பென்ஸ் முறை' என்றும் குறிப்பதுண்டு.

(6) ஒரு பிரதிநிதியை மட்டும் பெற்றுள்ள தொகுதிகளி லும், மேற்கூறிய முறையை அநுஷ்டிப்பதற்காகச் சிலர் ஒரு புதிய வகையாகத் தேர்தல் நடத்துகின்றனர். தஞ்சாவூர் ஜில்லாவுக்கு ஒரே பிரதிநிதிமட்டும் அளிக்கப்பட்டிருப்ப தாக வைத்துக் கொள்வோம். அந்த ஸ்தானத்திற்கு நான்கு அபேட்சகர்கள் நிற்கலாம். அந்த ஜில்லாவிலுள்ள ஓட்டர்களின் மொத்தம்20000 என வைத்துக்கொள்வோம். ஓட்டர்கள் நான்கு அபேட்சகர்களுக்குள் ஒருவ னுக்கு மட்டும் ஓட்கொடுத்து நின்றுவிடுவதற்குப் பதிலாக, தமக்கு இஷ்டமானவனுக்கு முதல் ஓட்டையும், அவன் இல் லாது போனல், தனக்கு மிகப் பிரியமாயுள்ளவனுக்கு இரண்டாவது ஓட்டையும், இங்ஙனமே படிப்படியாகவும் கொடுத்துவிட வேண்டும். எதாவதொருவனுக்கு 4000 ஓட்டுகளுக்கதிகமாக முதல் ஓட்டுகள் கிடைத்துவிட்டால் அவனே ஜயம் பெறுவான். அங்ஙனமின்றி 4000 முதல் ஓட்டுகள் எவனுக்கும் கிடைக்காமல் போனல், மிகக் குறை வான முதல் ஓட்டுகளைப் பெற்றவனைக் கணக்கிலிருந்து தள்ளிவிடுவார்கள். பிறகு தள்ளப்பட்டுப் போனவனுக்கு முதல் ஓட் அளிக்கப்பட்ட காகிதங்களில், இரண்டாவது

ஓட்டைப் பெற்றுள்ளவன் ஒருவனிருப்பா னல்லவா? அங்ஙனம் தள்ளப்பட்டுப் போன காகிதத்தில் உள்ள இரண்டாவது ஓட்டுகள் முதல் ஓட்டுகளாகக் கணக்கிடப்பட்டு, அந்தந்த நபர்களுக்குச் சேர்க்கப்படும். இங்ஙனமே செய்துகொண்டு போகக் கடைசியில் தேவையான ஓட்டுகளைப் பெற்றவன் தேர்ந்தெடுக்கப்படுவான். ஆனால் அநுஷ்டானத்தில் இந்த முறை அவ்வளவு திருப்திகரமாக மைனரிடிகளைக் காப்பதாகத் தெரியவில்லை. இப்பொழுது எல்லா தேசங்களிலும் மேலே ஐந்தாவதாகக் கூறப்பட்ட முறையே வெகுவாகப் பின்பற்றப்படுகிறது.

(3) ஜன நாயக ஆட்சி எவ்வளவு தூரம் சாத்தியமானது? இவ்விடத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை நாம் ஆராய வேண்டும். உலகில் எங்கு பார்த்தாலும் ஜனநாயக ஆட்சியைப்பற்றிய விவாதமே இப்பொழுது நடந்து வருகிறது. ஜனநாயக ஆட்சி எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதையும், அது எவ்வளவு தூரம்வெறும் பொய்த் தோற்றமென்பதையும் நாம் கவனிக்கவேண்டும். ஜனநாயக ஆட்சியை விளக்கிக் கூறினால் அது 'ஜனங்களால் ஜனங்களின் நன்மைக்காக நடத்தப்படும்ஜனங்களுடையஆட்சி முறை' என்று பொருள்படும். அதாவது இராஜ்ய நிர்வாகத்தில் ஜனங்கள் நேராகக் கலந்து கொள்வது என்ற அர்த்தம் ஏற்படும். ஒரு வீட்டின் காரியத்தை வீட்டிலுள்ளோ ரனைவரும் சேர்ந்து செய்து வருவதைப் போலவே இராஜ்ஜிய நிர்வாகத்தையும் பிரஜைகள் அனைவரும் சேர்ந்து கவனித்து வரவேண்டியவர்கள். ஆனால் அநுபவத்தில் அது சிறிதும் சாத்தியமானதாகத் தோன்றவில்லை. அத்தகைய ஜனநாயக ஆட்சிக்கும் இப்பொழுது நடைபெற்று வரும் ஆட்சி முறைக்கும் அதிக வேறுபாடு இருப்பது நமக்கு தெளிவாகத் தெரிகிறது.

முதலாக இக்காலத்து இராஜ்ஜியங்கள் விஸ்தீரணத்தில் பெரியவை ஆய்விட்டமையால், ஜனங்களனைவரும் கோடிக் கணக்காய் ஒன்றுகூடி நிர்வாகம் நடத்துவது முற்றிலும் அசாத்தியமாகி விட்டது. பழைய காலங்களில் சிறியதேசங்களில் மட்டுமே அது சாத்தியமாக இருந்திருக்கலாம். ஸ்விட்ஜர்லந்திலில் நான்கு சிறு மாகாணங்கள் இந்தப் பூர்ண ஜனநாயக முறையை அநுஷ்டித்து வருவதாக முன்னேரிடத்தில் கூறினேம். இந்தியா போன்ற பெரிய கண்டங்களில் எல்லாப் பிரஜைகளும் எப்படி ஒன்று கூடுவது? அப்படி ஒன்று கூடினுல் கூட, எப்படி நிர்வாகம் நடைபெறச் செய்வது? அந்த நிர்வாகத்தில் குழப்பமும் இறைச்சலுமே வலுத்து நிற்கும். இரண்டாவதாக, இவ்வாறு கூட்டம் கூடி நிர்வாகம் நடத்தும் வசதி இருந்தால் கூட, இராஜீய விஷயங்களில் சிரத்தை கொண்டுள்ள பிரஜைகள் மிகச் சிலரே இருப்பார்கள். மற்றவர்கள் பசி தீர உண்பதும் உறங்குவதுமாகவே இருக்கின்றனர்; ஏழை மக்களுக்கு வாழ்க்கைப் போராட்டமே பெரிய போராட்டமாய் இருக்கையில், இராஜீயப் போராட்டத்தில் அவர்களுக்கு எப்படி அக்கரை உண்டாகும்? எனவே எல்லாப் பிரஜைகளையும் நாம் வற்புறுத்தி அரசியல் நடவடிக்கைகளிற் கலந்து கொள்ளுமாறு செய்வது நிரம்பவும் கடினமான காரியம். மூன்ருவதாக இராஜீய நிர்வாகத்திற்குத் தனியான மூளையும் விசேஷப் பயிற்சியும் அவசியமானவை. அவைகளைப் பெருதமாந்தர் ஒன்று கூடினுலும், எவ்வித பயனுமேற்படாது. இவ்வித உபத்திரவங்களைக் கருதியே இப்பொழுது எந்த நாட்டிலும் குறைவற்ற பரிபூரணமான ஜனநாயக ஆட்சியானது அநுஷ்டானத்தில் சாத்தியமானதல்ல என்று எல்லோரும் அபிப்பிராயப் படுகின்றனர். ஜனநாயக

தத்துவம் தவறென எவரும் கூறவில்லை; அது சாத்திய மில்லை என்றே எல்லோரும் கூறி வருந்துகின்றனர். எனவே ஜனநாயக ஆட்சிக்கு அடுத்தபடி சிறந்ததாக உள்ள 'பிரதி நிதிகளின் ஆட்சி' முறையை இக்காலத்தில் அனைவரும் அநுஷ்டித்து வருகின்றனர். அதாவது, தாமே நேராக அரசியல் நிர்வாகம் செய்வதற்கு பதிலாக, ஜனங்கள் தமக்கு நம்பிக்கையான சில பிரதிநிதிகளின் மூலம் ஆட்சியை நடத்தி வருவதாகக் கருதவேண்டும். ஆனால் இந்தப் 'பிரதிநிதிநாயக முறை' எவ்வளவு தூரம் ஜனநாயக தத்துவத்தைக் கொண்டிருக்கிறதென்பதை கவனித்துப் பார்த்தால், நமக்கு ஆச்சரியம் உண்டாகும். வெளிக்குத் தோன்றாமல் உள் மறைந்து கிடக்கும் சில ஊழல்களை எடுத்து விரித்தால் அதன் உண்மை விளங்கிவிடும். முதலாக, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமைகூட எல்லா ஜனங்களுக்கும் கிடைப்பதில்லை. ஏதோ குறித்த வரியைச் செலுத்துவோர்களுக்கு மட்டுமே அந்த உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. ஓட்டுரிமையைப் பெறாத ஏழை மக்களே அதிகமாக இருக்கின்றனர். அவர்கள் யாவரும் 'பிரஜைகள்' என்ற வகுப்பில் சேரவில்லையா? ஓட்டுரிமை பெறாதவர்களில் எத்தனையோ புத்திமான்களும் அறிஞர்களும் இராஜீய உணர்ச்சியும் அக்கரையும் உடையவர்களும் இருக்கின்றனர். பொருளிலார்க் கிவ்வுலகமில்லை என்பது இங்கும் மெய்யாகிவிட்டது போலும்! 'பிரதிநிதி ஆட்சிமுறை' சிறிதளவாகிலும் பணம் படைத்தவர்களுடைய ஆட்சியாகவே தோன்றுகிறது. தேசத்தின் பொதுவான மதிப்பை அதிகப்படுத்தும் தொழிலாளிகளுக்கும், தேசத்தின் தொகையில் பாதிக்குமேலான ஸ்திரீகளுக்கும் இந்த 'ஓட்' டுரிமை கொடுக்கப்படுவது அரிதாகஇருக்கிறது. அதிலும்

இந்தியாவில் ஓட்டுரிமை பெற்றவர்களின் தொகை மிகமிக சொற்பமானதே. இவ்வழியில் பிரஜைகளில் பெரும்பான்மையோர் இராஜீய உலகிற்குள் நுழையவும் அநுமதிக்கப் படுவதில்லை. இந்த முதல் குறையை நீக்குவதற்காக அறிவு வந்த ஆண் பெண் ஆகிய எல்லோருக்கும் ஓட்டுரிமை யளிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுதும், பலன் இவ்விதமேதான் இருக்கும். 'ஓட்டுரிமையே பிரஜைகளின் உயர்ந்த பூஷணம்; அதுவே அவர்களுடைய ஒப்பற்ற இராஜீயப் பொக்கிஷம்' என அரசியல் சாஸ்திரக்ஞர்கள் தங்கள் நூல்களில் நிரம்பவும் அழகாகக் கூறியிருக்கின்றனராஞலும், உண்மையில் அதை அவ்வாறு கருதுவோர் மிகவும் சிலரே யாவர். பலருக்கு இந்த ஓட்டுரிமை பெருத்த உபத்திரவமாய் இருப்பதை நாம் கண்டிருக்கிறோம். கல்வியறிவற்ற பலருக்கு இந்த ஓட்டுரிமை துன்பமாகவே இருக்கிறது. அதனுடைய கருத்தும் உத்தேசமும் இன்னவென்பதே பலருக்குத் தெரிவதில்லை; அதை உபயோகிக்கும் விதமும் அவர்களுக்குப் புலப்படுவதில்லை. யாவற்றையும் தெரிந்துகொண்ட ஓட்டர்களும் கூடத் தங்கள் மனச்சாட்சியின்படி அதை உபயோகிப்பதில்லை. பொதுத் தேர்தல் நடக்கும் சமயத்தில் பலரும் பலவித நோக்கங்களால் தூண்டப்படுகின்றனர். தங்களுடைய ஓட்டைப் பணத்திற்கு விற்போரும் இருக்கின்றனர்; அதை துர்வினியோகம் செய்வோரும் இருக்கின்றனர்; தங்களது ஓட்டை எவருக்கும் அளிக்காமல், சிலர் வீட்டிலேயே இருந்து விடுவதும் உண்டு. தேர்தல் சமயத்தில், பிரதிநிதியாக விரும்பும் ஒவ்வோர் அபேட்சகரும் தமது தூதர்களை வைத்துக்கொண்டு ஜனங்களை வஞ்சிக்கின்றனர்; பொய்களையும் புரட்டுகளையும் கூறிப்

பொதுமக்களை ஏமாற்றுகின்றனர்; 'என்னை அனுப்பினால்
உனக்கு அதைச் செய்வேன்; இதைத் தருவேன்' என்று
ஆசை வார்த்தைகள் கூறுகின்றனர்; நுட்பமான இரா
ஜீய விஷயங்களைக் கற்றுணர்ந்து அதன் சாதகபாதகங்க
ளைத் தெரிந்துகொண்டு தமது ஓட்டை நியாயமாக விநி
யோகம் செய்வோர் மிக மிகச் சிலரே இருப்பர். எல்லா
தேசங்களிலும் காரியங்கள் இவ்வாறே நடக்கின்றனவாத
லால், அவை நம் தேசத்திற்கு மாத்திரம் புதியவை
யல்ல. இங்ஙனம் தேசத்தில் உள்ள மொத்த ஜனங்களில்
ஓட்டுரிமையைப் பெற்ற சிலரும் அதைச் சரிவர விநியோ
கிப்பதில்லை. ஓட்டுகொடுக்கும் விதம் இவ்வளவு மோசமாயிருப்
பது சீக்கிரத்தில் மறைந்துபோகும் எனச் சிலர் கூறலாம்.
அது உண்மையே. நாளடைவில் அறிவுப்பெருக்கின்பயனாய்
ஓட்டர்கள் தங்களுடைய கடமையைத் திறமையாய்ச்
செய்து முடிப்பார்களெனவே நாம் எதிர்பார்க்க வேண்டும்.
ஓட்டர்கள் கற்றறிந்தவர்களாயிருந்தாலும், பிரதிநிதிநாயக
முறையில் உள்ள குறைகள் தீர்ந்துபோய் விடுமெனக்
கூறமுடியாது. உதாரணமாக, ஒரு ஜில்லாவில் ஏறக்குறைய
10000 ஓட்டர்கள் இருப்பதாகவும், அவர்கள் ஒரு பிரதி
நிதியைத் தேர்ந்தெடுப்பதாகவும், அந்த ஒரு ஸ்தானத்
திற்கு இரண்டு அபேட்சகர்கள் இருப்பதாகவும் வைத்துக்
கொள்வோம். அப்பொழுது ஒருவனுக்கு 5001 ஓட்டு
களும் மற்றவனுக்கு 4999 ஓட்டுகளும் கிடைத்தால் முந்தி
யவனே அந்த ஜில்லா முழுமைக்கும் பிரதிநிதி ஆய்
விடுவான். அவனை ஏறக்குறைய பாதிப்பேர்கள் நிராக
ரித்துவிட்டாலும், அது பயன்படுவதில்லை. ஒருவேளை
உண்மையில் அந்த ஜில்லாவின் பொது ஜனங்களுக்கு
இரண்டாவது அபேட்சகரிடத்திலேயே நம்பிக்கை இருக்க

லாம். ஆனால் அவ்விஷயங்கள் யாவும் அசட்டை செய்யப் படுகின்றன. பிரசங்க மேடை ஆடம்பரத்தினாலும், தமது தூதர்களின் சாமர்த்தியத்தினாலும், பணம், செல்வாக்கு, அதிகாரிகளின் உதவி முதலியவற்றாலும், 5001 ஓட் டர்களை ஏமாற்றி ஷீ அபேட்சகர் வெற்றி பெறுகிறார். இது போலிப் பிரதிநிதித்துவமேயன்றி வேறல்ல. அநு பவமும் இராஜீயப் பயிற்சியும் பெற்ற பல நிபுணர்கள் வெளியிலிருக்க, ஆகாயக் கோட்டை கட்டி வாய்ப்பந்தல் போடும் பிரபுக்கள் நம்முடைய பிரதிநிதிகளெனக் கூறிக் கொண்டு சட்டசபை யரங்கத்தின்மீதேறி அங்கு நடிக்கத் தொடங்கி விடுகின்றனர். இது எந்த தேசத்திலும் நடக் கக்கூடிய பொதுவான அநுபவமே. எதார்த்தமாகவும், மௌனமாகவும் தேசத்தின் நன்மைக்காகப் பாடுபடும் புண்ணியவான்கள் இன்னார் என்பதைப் பொது ஜனங்கள் தெரிந்துகொள்ளாது ஏமாறிப் போகின்றனர். எனவே, பிரதி நிதி சபையென்பது உண்மையான பிரதிநிதிகளைக் கொண் டே நிரப்பப்படுகிறது என நாம் எண்ண இடமில்லை. ஆனால், ஷீ போலிப் பிரதிநிதிகளும் தாங்கள் பொதுமக்க ளால் ஆதரிக்கப் படுகிறவர்களெனவும், பொது மக்களு டைய அபிப்பிராயத்தையே தாமும் கொண்டிருப்பதாக வும், பொது ஜனங்களுடைய நம்பிக்கையை எப்பொழுதும் பெற்றிருப்பதாகவும் கூறிக் கொள்ளுகின்றனர். புதிதாக சட்டசபைக்கு வரும் பிரதிநிதி அங்கு எவ்விதமான காரி யத்தையும் செய்யமுடியாது. சட்டசபையின் விதிகளை அவர் அறிந்து கொள்வதற்கே நீண்டகாலம் பிடிக்கும். மேலும் தேர்தல் நடப்பதற்கு முன்னால் ஜனங்களுக்கு அவர் செய்துகொடுத்த வாக்குறுதிகளும் காற்றில் பறக்க விடப்படுகின்றன. அதன்பிறகு சில வருஷகாலம் வரையில்

சட்டசபையிலிருந்து தம்மை எவரும் அசைக்கமுடியாதென்ற நம்பிக்கை அவருக்கு உண்டாய் விடுகிறது. அதற்கு முன்னால் ஓட்டர்களின் வீடு வீடாகச் சென்றலைந்த அந்தச் சீமான் இப்பால் அந்தப் பக்கமே திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. உலகத்தின் சட்டசபைகளுக்கெல்லாம் தாய் என்கிற கௌரவம் படைத்த பிரிட்டிஷ் பார்லிமென்டிலேயே காரியம் இவ்விதம் நடைபெறுகிறது. எங்கோ ஒரு மூலையிலுள்ள சிற்றூரிலிருந்து வரும் பிரதிநிதி சட்டசபையில் ஸ்தானம் பெற்றுத் தலைமை நகரத்தை அடைந்துவிட்டால், அந்நகரத்தின் விநோதங்களைப் பார்ப்பதிலேயே அவருடைய பொழுது போய்விடுகிறது. லண்டன்மா நகரத்தின் அழகைக் கண்டு ஆநந்திப்பதிலேயே அவரது கவனம் செல்லுகிறது. சட்டசபைக் காரியம் அவ்வளவு முக்கியமாகத் தோன்றுவதில்லை. அதுவுமன்றி புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிக்கு மேற்படி சட்டசபையில் விசேஷ கௌரவமும் ஏற்படுவதில்லை. அவர் தம்முடைய கட்சியின் கூட்டத்தை அதிகப்படுத்துவதைத் தவிர வேறு உண்மையான அதிகாரத்தைப் பெறுவதில்லை. மேலும் கட்சித் தலைவரது சொற்படியே அவர் நடந்தாக வேண்டும். கட்சியை விட்டுத் தனியாக நின்றாலோ, அவருக்கு உள்ள சொற்ப கௌரவமும் போய்விடும்; கட்சியிலிருந்தாலோ அதனுடைய தீர்மானங்களுக்கு உட்பட்டே நடக்கவேண்டும். சட்டசபை யங்கத்தினர் உண்மையாகப் பாடுபட்டு உழைத்தாலும் கூட, அவர் தனியாக நின்றால் எவ்வித விசேஷ பயனையும் அடையமுடியாது. உதாரணமாக, இங்கிலந்தின் பார்லிமென்டில் கூட, சாதாரண அங்கத்தினர்கள் கொண்டுவரும் தீர்மானங்கள் நிறைவேறுவது மகா துர்லபமானது. துரைத்தனத்தாருக்கு மட்டுமே தேவை

யான பக்கபலம் இருக்கிறது. மேலும் சட்டசபையில் பல கட்சிகள் இருப்பதனால் வலுவாயுள்ள கட்சிமட்டுமே மந்திரி பதவியை வகிக்கும் என முன்பே கூறினோம். மற்ற கட்சியோ கட்சிகளோ அந்தக் கட்சியை எதிர்த்து நிற்கும். எதிர்ப்புக் கட்சிக்கு எப்பொழுதும் பலம் குறைவாகையால், அதன் அபிப்பிராயத்திற்கு உண்மையான மதிப்பு ஏற்படாது. இன்னுமொரு விநோதத்தையும் நாம் கவனிக்கவேண்டும். 600 அங்கத்தினர்களடங்கிய ஒரு சபையின் முன்வரும் தீர்மானத்தை, 301 அங்கத்தினர்கள் ஆதரிக்க, மீதியுள்ள 299 அங்கத்தினர்கள் எதிர்த்தாலும், அது சட்டமாக நிறைவேறி விடுகிறது. உண்மையிலோ தேசத்தின் ஜனங்களிற் பெரும்பாலோர் அந்தச் சட்டத்திற்கு விரோதமாகவே இருக்கலாம். எனவே, உண்மையில் சட்டசபை யென்பது வெறும் தோற்றமே யெனவும், அரசாங்கத்தாரே சகலமான அதிகாரங்களையும் வகித்து வருவதாகவும் நாம் கருதவேண்டும்.

இவ்வாறு நடத்தப்படும் ஆதிக்கம் சுயேச்சாதிகாரமா அல்லது ஜனநாயக ஆட்சியா என்பது கூறாமலே விளங்கிவிடும். ஜனங்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் சம்பந்தமே கிடையாது; பிரதிநிதிகளுடைய அபிப்பிராயத்திற்கும் பொதுஜன அபிப்பிராயத்திற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை இருக்கிறது; பிரதிநிதிகளுக்கும் உண்மையான அதிகாரமும் கிடையாது. அவர்கள் தம்முடைய கட்சித் தலைவர்களாலும் அரசாங்கத்தாராலும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

ஷை இடையூறுகளை விலக்கும் வழிதான் என்ன என்று வினவலாம். நாம் இதுகாறும் கூறிவந்தது உண்மையேயானாலும் ஒரு விஷயத்தை நாம் மறக்கக்கூடாது. ஜன

நாயக தத்துவமென்பது பூர்ணமாய் அநுஷ்டிக்கப்படுவது முற்றிலும் அசாத்தியமானது. ஏனெனில் எல்லா ஜனங்களுக்கும் அறிவும் ஆற்றலும் ஒரே மாதிரியாய் அமைந்திருக்கவில்லை. கடவுளுடைய சிருஷ்டியில் வேற்றுமையே நிறைந்திருக்கிறது. அறிவும் ஆற்றலும் படைத்தவர்களிடம் அறிவிலிகளும் மூடர்களும் அடங்கி நடக்கவேண்டியதென்பது இயற்கைச் சட்டமாகவே இருந்துவருகிறது. அதை நாம் மீறமுடியாது. ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு காலத்திலும் சில புத்திமான்கள் தோன்றி மற்றவரை அடக்கி ஆண்டு வந்திருக்கின்றனர். எல்லோரும் பல்லக்கில் ஏற ஆசைகொண்டால், அது சாத்தியமாகாதல்லவா? ஆதலால் இராஜ்ய நிர்வாகம் எனப்படும் கடினமான காரியத்தை சிலரே திறமையாய் வகிக்க இயலும். அவர்களே அதைச் செய்தாலன்றி, நாட்டில் அமைதியும் வளமும் குன்றிவிடும். கடவுளின் சிருஷ்டியில் பரிபூரணமான வஸ்துவே கிடையாது. ஒவ்வொன்றிலும் ஒரு குறை இருந்துகொண்டுதா னிருக்கும். எந்த முறையினால் கூடிய மட்டில் அதிக நலம் ஏற்படுமோ அதையே நாம் பின்பற்ற வேண்டும்; பூர்ணமான ஜனநாயக முறையோ அசாத்தியமானது; அதற்காகவே நாம் பிரதிநிதி முறையைப் பின்பற்றி வருகிறோம். அம்முறையிலேயே ஜனநாயக ஆட்சி கூடியவரையில் நன்றாக நடைபெறும்; பழைய காலங்களில் நடந்ததுபோல சுயேச்சாதிகாரமோ, வகுப்பாட்சியோ நடைபெறுவது இன்னும் அதிகமானகேட்டைத் தருமல்லவா? அரசாங்கத்தார் சர்வாதிகாரமும் படைத்திருப்பது உண்மையானாலும், அவர்களுக்குச் சட்டசபையாரிடம் மதிப்பும் பயமும் இருக்கும். சட்டசபையார் தம்முடைய கேள்விகளின் மூலம் அரசாங்கத்தாரை நிரம்பவும்

வதைத்துவிடலாம். பிரதிநிதிகளுக்கும் ஓட்டர்களிடம் அச்சமிருக்கும். ஏனெனில் மறுபடியும் பொதுத் தேர்தல் வரும்பொழுது, அவர்கள் ஜனங்களின் ஆதரிப்பையே கோரவேண்டிவரும். அப்பொழுது ஜனங்கள் தமக்குத் தீங்கிழைத்த பிரதிநிதிகளை மறந்துவிட மாட்டார்கள்; அவர்களுக்கேற்ற மரியாதையையே செய்தனுப்புவார்கள். மேலும், இக்காலத்தில் ஓட்டர்கள் அடிக்கடி மகாநாடுகள் கூட்டிப் பல தீர்மானங்களின் மூலம் தமது எண்ணங்களை வெளியிடுகின்றனர். அவர்களுக்கு உதவி செய்ய பத்திரிகைகளும் இக்காலத்தில் தோன்றிப் பெருகிவிட்டன. பத்திரிகைகளும் பொதுஜன அபிப்பிராயமும் துரைத்தனத்தாரால் அசட்டை செய்யப்படக் கூடாத விஷயங்களாக அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. சட்டசபையில் இருக்கும் பிரதிநிதிகளும் அடிக்கடி ஓட்டர்களின் கூட்டத்தில் வந்து பிரசங்கம் செய்து அவர்களுடைய நம்பிக்கையைப் பெறுகின்றனர். இவ்வாறு அரசியல் நிர்வாகம் சில புத்திமான்களிடத்திலும் சாமர்த்தியசாலிக ளிடத்திலுமே இருந்து வந்தாலும், அவர்களும் பொது ஜனங்களிடம் பொறுப்புள்ளவர்களாகவே நடந்து வருகின்றனர். பிரதிநிதித்துவ முறை பரிபூர்ணமானது என்று எவரும் கூறவில்லை. ஆனால் கூடியவரையில் திருப்திகரமாக நடந்து வரும் முறை அதுவேயாகும். சட்டசபை இயற்றும் தீர்மானங்களை ஸ்விட்ஜர்லந்து முதலான தேசங்களில் ஜனங்களுடைய ஓட்டுக்கு அனுப்பும் வழக்கத்தையும் முன்பு ஆராய்ந்தோம். அது ஓரளவுக்கு ஜனநாயக முறையை ஏற்படுத்துவது போலாகும். நாகரிகமடைந்துள்ள தேசங்கள் முழுதிலும் இப்பொழுது பிரதிநிதித்துவ முறையே சாத்தியமான அரசியல் முறைகள் யாவற்றிலும் சிறந்த

தென ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. 'கூடியவரையில் அதிகமானவர்களுக்குக் கூடியவரையில் அதிகமானநன்மை' ஏற்படுவதற்கு அதிலும் இடமிருக்கிறது.

13-வது அதிகாரம்.

இராஜீயக் கட்சிகள்.

(1) இராஜீயக் கட்சிகள் அரசியல் நிர்வாகத்தை நடத்துவதால் விளையும் சாதகபாதகங்கள்; அவைகளைப் பற்றிய அபிப்பிராய பேதம்:—நமது தேசத்தில் இராஜீயப் போராட்டத்தைக் கவனித்து வருவோர்களுக்கு, இங்கும் பல இராஜீயக் கட்சிகள் இருப்பது தெரியவரும். சுயராஜ்யக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, ஒத்துழையாதார் கட்சி, பரஸ்பர ஒத்துழைப்புக்காரர் கட்சி, சுயேச்சைக் கட்சி—என்ற பல கட்சிகளைப் பற்றி நாம் கேள்வியுறுகிறோம். தற்காலத்து அரசியல் முறையில் மேற்படி இராஜீயக் கட்சிகள் முக்கியமாய் இருந்து வருவதால், அவைகளை நாம் நன்ருய் ஆராயவேண்டும். நாம் முன்னரே கூறியபடி, மேனுட்டாரைப் பின்பற்றியே, நமது தற்கால அரசியல் முறை அமைக்கப்பட்டு வருகிறது; நமது தேசத்தில் இருப்பது போலவே, மற்ற எல்லா தேசங்களிலும் பல இராஜீயக் கட்சிகள் இருக்கின்றன. இராஜீயக் கட்சி என்ருல் அரசியல் விஷயங்களில் கூடியவரையில் ஒரே மாதிரியான அபிப்பிராயங்களைக் கொண்டு, ஒரே கட்டுப்பாட்டுக்குள்பட்ட மனிதரடங்கிய தொகுதி என்று அர்த்தமாகும். இவ்வுலகத்தில் இரண்டு மனிதர்கள் எல்லா விஷயங்களிலும் ஒரே மாதிரியாய் அபிப்பிராயங் கூறுவது மிகமிக அரிதாகும். ஆதலால் கூடியவரையில் ஒரே மாதிரியான இராஜீய நோக்கத்தைக் கொண்டவர்கள் ஒரு கட்சியாகச்

சேர்ந்துகொண்டு தங்களுடைய ஓட்டுகளை ஒரேமாதிரியாக உபயோகித்து துரைத்தன நிர்வாகத்தைத் தாமே நடத்த முற்படுகின்றனர். தனிப்பட்ட பல மனிதர்கள் சொற்ப முதல்போட்டு, ஒரு கூட்டு வர்த்தகச் சங்கத்தை ஸ்தாபிப்பது போலவே, பல மனிதர்கள் தங்களுடைய இராஜீய உரிமையை மூலதனமாக வைத்துக்கொண்டு ஒரு கட்சியை ஸ்தாபிக்கின்றனர். தனித்தனியாகப் பிரிந்து நின்றால் எந்த இராஜீய வாதியும் உத்தியோக பதவியையோ வேறு அதிகார ஸ்தானத்தையோ அடையமுடியாது; பலர் ஒன்று கூடித் தங்களுடைய ஒற்றுமையின் பலத்தினால் அதிகாரத்தைப் பெற்று வகிக்கின்றனர். எந்த இராஜீயச் சட்டத்திலும், இத்தகைய கட்சிகள் இன்னின்ன முறையில் ஏற்படவேண்டுமென்ற நியதி ஏற்படுத்தப்பட்டிருக்கப்படவில்லை; ஆதலால்இராஜீயக்கட்சிகள்சட்டப்படி ஏற்பட்டவைகளல்ல. ஆனாலும்இக்காலத்துஅரசியல்கள்நடைபெறுவதற்கு அவைகளேமுக்கிய சாதனங்களாய் இருந்து வருகின்றன. அமெரிக்கா,அல்லது,இங்கிலந்து தேசத்தின் அரசியல்முறையைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அத்தேசச் சட்ட புஸ்தகத்தைப் படிக்கும் ஒருவன் இவ்வித இராஜீயக் கட்சிகளின் இருப்பைப் பற்றிய பிரஸ்தாபத்தையே காணமாட்டான். இக்கட்சிகள் சிறுகச்சிறுக வளர்ந்து பெருத்துக் கடைசியில் இராஜீயத் துறையில் முதன்மையான செல்வாக்கை அடைந்திருக்கின்றன. மேற்படி கட்சிகள் இருக்கின்றன என்பதை வைத்துக்கொண்டே, ஒவ்வொரு தேசத்திலும் அரசியல் முறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கிலந்தில் காபினெட் என்னும் மந்திரி சபையானது பார்லிமென்டில் பெரிதாயுள்ள கட்சியைச் சேர்ந்தோராலேயே அமைக்கப்படுகிறதென முன்பே கூறினோம். பார்லிமென்டரி

முறையைச் சேர்ந்த மந்திரிசபை உள்ள இடங்களிலெல்லாம் இம்மாதிரியான இராஜீயக் கட்சிகளும் இருப்பது அவசியம். அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் அமைப்பை விவரிக்கும் பத்திரத்தில் இராஜீயக் கட்சிகள் ஒருகாலத்தில் ஏற்படுமென்பது எதிர்பார்க்கப்படவேயில்லை. ஆனால் 19-வது நூற்றாண்டிலேயே அமெரிக்காவில் இக்கட்சிகள் பிரபலமடைந்து விட்டன. பி/₂ரான்ஸ், இற்றாலி, கனடா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களின் அரசியல் முறை இராஜீயக் கட்சிகள் வேலைசெய்வதை எதிர்பார்த்தே அமைக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் இராஜீயக் கட்சிகள் ஏற்படவேண்டுமென்று பகிரங்கமாகக் கூறுவிட்டாலும், அக்கட்சிகள் இல்லாவிடில் நடைபெற முடியாத பல ஸ்தாபனங்களை உண்டாக்கலாம். இக்காலத்தில் இவ்வளவு முக்கியமான நிலைமையை அடைந்துள்ள இராஜீயக் கட்சிகளால் விளையும் சாதகபாதகங்களையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இராஜீயக் கட்சிகளின் மூலம் அரசியல் நடத்துவதைப் பலர் புகழ்ந்தும் பலர் இகழ்ந்தும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர். அது இயற்கையாக வளர்ந்து பூர்த்தியடைந்துள்ள ஸ்தாபனம் என்று சிலரும், அது இயற்கைக்கு விரோதமான வெறும் புல்லுருவிச்செடி போன்ற வளர்ச்சியேயாகும் என்று மற்றும் சிலரும் கூறியிருக்கின்றனர். இம்முறையைக் கண்டிப்பவர்களின் வாதம் பின்வருமாறு:—நாம் முன்பே கூறியபடி பல மனிதர்கள் எல்லா விஷயங்களிலும் ஒத்துப்போவது மிக அரிது; ஒரு கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் உண்மையான ஒற்றுமையைப் பெறுமல் செயற்கையான ஒற்றுமையையோ அல்லது ஒற்றுமைத் தோற்றத்தையோ கொண்டிருக்கலாம். அவ்வாறே

ஒரு கட்சியிலிருப்போரனைவரும் எதிர்க்கட்சியிலுள்ள எல்லோருடனும் அபிப்பிராய வேற்றுமை கொண்டிருப்பதும் அசம்பாவிதமாகும். இங்கிலந்தில் கன்ஸர்வேடிவ்கட்சியென்றும், லிபரல்கட்சியென்றும், தொழிற்கட்சியென்றும் மூன்று கட்சிகள் இருக்கின்றன. அவைகளுள் லிபரல் கட்சி இப்பொழுது பலம் குன்றிப் போயிருக்கிறது. கன்ஸர்வேடிவ் கட்சியிலுள்ள எல்லோரும் தொழிற் கட்சியினருடன் எல்லா விஷயங்களிலும் வேற்றுமைப்படுவர் என்று நாம் எப்படி நினைக்கிறது? கன்ஸர்வேடிவ் கட்சியினர் ஏற்றுமதி வரி விதிக்கலாமென்றால், உடனே தொழிற்கட்சியாரெல்லோரும் கூடி, அது வேண்டாமென்று கூக்குரலிடுவார்கள். ஒருகால் கன்ஸர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த பதின்மர் அவ்வரி தீங்கிழைக்கக் கூடியது என்றும் எண்ணலாம்; ஆனாலும் அவர்கள் தமது கட்சிக்கு சாதகமாகவும், தம்முடைய சொந்த அபிப்பிராயத்தையே கொண்டுள்ள தொழிற் கட்சிக்கு விரோதமாகவும் ஓட் செய்வார்கள். ஒரு கட்சியினர் கூறுவதை மற்றவர் கேட்பதில்லை. எதிர்க் கட்சியினருடைய கொள்கைகளை எவ்விதமேனும் கண்டிப்பதே அவர்களுடைய நோக்கம். இவ்வாறு ஒரு கட்சியினரிடையே ஏற்படும் ஒற்றுமையும், அவர்களுக்கும் இன்னொரு கட்சியினருக்கும் ஏற்படும் வேற்றுமையும் இயற்கைக்கு விரோதமானவையென்பதும், அவை வெறும் தோற்றமே என்பதும் மேலே குறித்த கண்டனக்காரர்களின் சித்தாந்தம். மேலும் கட்சிகளால் நடத்தப்படும் துரைத்தனம் ஜனநாயக தத்துவத்திற் கொவ்வாததென்றும் அவர்கள் கூறுவர். ஜனநாயக தத்துவத்திற்கு அடிப்படையான விஷயம் கட்டுப்பாடில்லாமல் ஒவ்வொரு பிரஜையும்தன்னுடைய மனச்சாட்சிப்படி நடக்கவேண்டுமென்பது. ஆனால் இக்கட்சிகளோ

தனிப்பட்ட மனிதருடைய மனச்சாட்சியை அடக்கி ஒடுக்கி வைத்துவிடுகின்றன. இருகட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒருவர் கூறுவதை மற்றவர் நம்பாமல் அது தமது மனதிற்கு சரியெனத் தோன்றினாலும் அதை அலட்சியம் செய்து தமது சொந்தஅபிப்பிராயத்தை கௌரவிக்காமல் விட்டு விடுகின்றனர். இரண்டு கட்சிகள் ஒன்றையொன்று தீவிரமாக எதிர்க்கும்பொழுது, மனித இயற்கையே பரஸ்பர விரோதமான இரண்டு பிரிவுகளாகப் பிரிந்திருப்பது போலத் தோன்றுகிறது. இத்தகைய பிரிவு உண்மையில் இருக்கவேமுடியாது. ஒரு கூட்டத்தார் வேறொரு கூட்டத்தாருடன் எல்லா விஷயங்களிலும் வேற்றுமைப்படுவது அசம்பாவிதமேயன்றி வாஸ்தவத்தில் ஏற்படக் கூடியதல்ல.

ஆனாலும் இராஜீயக் கட்சிகள் நிரம்பவும் திறமையாக வேலைசெய்து வருவதொன்றே மேற்கூறிய வாதங்களுக்குத் திருப்திகரமான மறுப்பென நாம் எண்ணவேண்டும். மனிதர்களை சாதாரணமாக நான்கு வகுப்பினராகப் பிரிக்கலாம். (1) பழையகால ஸ்தாபனங்களைத் திரும்பவும் நிலைநிறுத்தி பூர்வாநுஷ்டானங்களையே கைக்கொள்ள வேண்டுமென்று வாதாடும் பிற்போக்கான அபிப்பிராயமுடையவர்கள் (2) இப்பொழுது இருக்கும் விஷயங்களை மாற்றியமைக்காமல் இதே நிலைமையில் வைத்துக் காரியங்களைநடத்திக்கொண்டு போகவேண்டுமென்று கூறும் குறுகிய நோக்குடையவர்கள் (3) தற்காலஅநுஷ்டானங்களை சமயத்திற்கேற்றபடிநிதானமாக மாற்றி யமைக்கவேண்டுமென்று விரும்பும் மிதமான முற்போக்கைக்கோருகிறவர்கள். (4) எல்லாவற்றையும் அடியோடுஅழித்துவிடவும், குற்றமற்ற சிறந்த புதிய ஸ்தாபனங்களை உற்பத்திசெய்யவும் பாடுபடும் தீவிரமான புரட்சிக்காரர்கள். இந்த நான்கு பிரிவுகளைமேலும் சுருக்கி, முதல்

இரண்டையும் ஒரு கட்சியாகவும் பின்னிரண்டையும் ஒரு கட்சியாகவும் வைத்துக்கொண்டு பார்த்தால் மனிதஇயற்கை உண்மையாகவே இரண்டு பாகங்களாகப் பிரிந்திருப்பது விளங்கும். ஆதலால் இராஜீயக் கட்சிகள் இருப்பது மனித இயற்கைக்கு விரோதமானவிஷயமாகாது; ஏனெனில்மனிதர்கள்இயற்கையாகவே முற்போக்கைவிரும்புகிறவர்களாகவும் பிற்போக்கை ஆதரிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும் ஜனநாயக ஆட்சி நடைபெற வேண்டுமானல் இந்த இராஜீயக் கட்சிகள் இன்றியமையாதவை யாகும். சென்ற அதிகாரத்தில் விவரித்தபடி ஜனநாயக ஆட்சி என்பது பிரதிநிதிகளின் ஆட்சியாகவும், பிரதிநிதிகளின் ஆட்சி என்பது பெரும்பான்மையாயிருப்பவரின் ஆட்சியாகவும்இப்பொழுது மாறிவிட்டனவல்லவா ? பலர் ஒன்றுசேர்ந்து ஒருகட்சி ஆனலன்றி எங்ஙனம் 'மெஜாரிடி' சாத்தியமாகும்? ஆகவே ஸ்திரமான அரசு நடைபெறுவதற்கு ஒரு கட்சி வலுத்துநிற்பது அவசியமாய் இருக்கிறது. நவீன அரசியல் முறையில் இத்தகைய கட்சிகள் அமையாவிட்டால் சட்டசபையென்பது நினைத்தவர் நினைத்தபடி நடக்கும் பைத்தியக்காரக் கும்பலாக மாறிவிடக்கூடும். ஓர் இராஜீயக் கட்சியாகச் சேர்ந்துகொள்ள விரும்புவோர் தங்களுடைய கொள்கைகளில் சிலவற்றை விட்டுக்கொடுத்து 'நாம் எல்லோரும் ஒன்றுபட்டு வேலைசெய்வோம்' என்று உடன்படிக்கை செய்துகொள்வார்கள். இராஜீயக் கட்சிகள் தோன்றுவது பல தேசங்களின் சமய சந்தர்ப்பத்திற்கேற்றபடி மாறுபடும். தேசத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கிளர்ச்சி ஏற்படும்பொழுது, புதிய கட்சிகள் தோன்றலாம். உதாரணமாக, நமது தேசத்தில் 1919-ம் வருஷத்தில் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்

திருத்தங்கள் அமுலுக்கு வந்த சமயத்தில், சிலர் அடி சீர் திருத்தங்களை ஆதரிக்கவேண்டுமெனவும், சிலர் அவைகளை எதிர்க்க வேண்டுமெனவும் அபிப்பிராயப் பட்டனராதலால், தேசத்தினர் இரண்டு பெரிய கட்சிகளாகப் பிரிந்து ஒத்துழையாதார் எனவும் ஒத்துழைப்பவர் எனவும் வேறுபட்டு நின்றனர். இதில் ஒரு விசேஷத்தை நாம் கவனிக்க வேண்டும். சீர்திருத்தங்களை ஒப்புக் கொள்ளலாமா கூடாதா என்ற கேள்வியில் மட்டுமே அவ்விரு கட்சிகளும் அபிப்பிராயபேதம் கொண்டிருந்தனவேயன்றி, மற்ற எத்தனையோ விஷயங்களில் ஏகமனதாக இருந்திருக்கக் கூடும். நமது மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சியினரும், ஜஸ்டிஸ் கட்சியினரும் வெவ்வேறான இராஜீயக் கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்களானாலும், சுயராஜ்யக் கட்சியில் பலரும் ஜஸ்டிஸ் கட்சியில் பலரும் இதர விஷயங்களில் ஏகமனதுடன் நடந்துகொள்ளலாம். உதாரணமாக, பெண்களின் விவாக வயதை உயர்த்துவதா வேண்டாமா என்ற விஷயத்தை எடுத்துக்கொள்வோம். சுயராஜ்யக் கட்சியில்சிலரும் ஜஸ்டிஸ் கட்சியில் சிலரும் அதை உயர்த்தவேண்டுமெனக் கூறலாம். மிகுதியான சுயராஜ்யக் கட்சியினரும், ஜஸ்டிஸ் கட்சியினரும்அதை உயர்த்த வேண்டாமெனப் போராடிவரலாம். இங்ஙனம் ஏதாவதொரு விஷயத்தில் கட்சிகளுக்குள் பாதி ஒற்றுமையும் பாதி வேற்றுமையும் ஏற்படலாம். இத்தகைய விஷயங்களில் இராஜீயக் கட்சிகளின் அங்கத்தினர்கள் தம் தம் சுயேச்சைப்படி ஓட்செய்ய சுதந்திரம் கொடுக்கப்படும். ஏதாவதொரு முக்கியமான இராஜீய இலாபத்தை அடைவதற்குப் பலர் தம்முடைய சிறிய வேற்றுமைகளை அசட்டைசெய்து, ஒரே நோக்கத்துடன் ஒத்துழைப்பதற்கு இந்தக் கட்சிமுறை நிரம்பவும் சௌகரியமாகும்.

19-வது நூற்றாண்டில் இங்கிலந்திலும் அமெரிக்காவிலும் இத்தகைய முக்கியமான இராஜீய விஷயங்கள் ஏற்பட்டதனாலேயே இராஜீயக் கட்சிகள் அங்கு தோன்றி விருத்தியடைந்தன. ஆனால் இத்தகைய பெருத்த இராஜீய விஷயங்கள் ஒரு தேசத்தில் இல்லாமல்போனால், இராஜீயக் கட்சிகள் ஒரு குறித்த கொள்கையைத் தம்முன் வைத்துக்கொண்டு வேலைசெய்ய ஆரம்பிக்கவேண்டும். முக்கியமான விஷயம் தோன்றுமிடங்களில் மட்டுமே இராஜீயக் கட்சிகள் கலையாமல் தொடர்ச்சியாக நின்று வேலைசெய்யும். தினந்தோறும் மாறிக்கொண்டிருக்கும் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு தோன்றும் கட்சிகள் நிரந்தரமாய் இல்லாமல் அடிக்கடி கலைந்து மறுபடி மறுபடி கூடிக்கொண்டே இருக்கும். இது இராஜீய வாழ்வைக் குழப்பிவிடக்கூடும். இப்பொழுது பி/²ரான்ஸ், இற்றாலி முதலிய சில தேசங்களில் இவ்வித நிலைமையே இருந்துவருகிறது. ஸ்திரமான மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றிராத புதிய புதிய கட்சிகள் அடிக்கடி தோன்றி அரசியல் நிர்வாகத்தைச் சிறிதுகாலம் நடத்திவிட்டு மறுபடி மலினமடைந்து போய் விடுகின்றன.

(2) மேனாடுகளில் இராஜீயக் கட்சிகள்:—உலகில் புகழும் செல்வமும் செல்வாக்கும் பலமும் அடைந்துநிற்கும் அமெரிக்கா, இங்கிலந்து ஆகிய இரண்டு தேசங்களிலும் உள்ள இராஜீயக் கட்சிகளின் அமைப்பை நாம் ஆராய்ந்து பார்த்தால், சில விசேஷங்கள் புலப்படும். இங்கிலந்தில் 16, 17-ம் நூற்றாண்டுகளில் முதல் முதலாக இராஜீயக் கட்சிகள் தோன்றின. அக்காலத்தில் அரசனுடைய சுயேச்சாதிபத்யத்தை எதிர்ப்பதற்காகவே ஜனங்களுடைய பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து கட்சியாய் மாறினார். அர

சனை ஆதரித்தவர்கள் ஒரு கட்சியாராகவும், பார்லிமென்டின் உரிமைகளுக்காகப் போராடியவர்கள் ஒரு கட்சியாராகவும் அமைந்தார்கள். அவர்களுக்கு முறையே டோரி என்றும், விக் என்றும் பெயர்கள். விக்டோரி என்ற பதங்களுக்கு அப்பொழுது இழிவான அர்த்தமே இருந்து வந்தது; ஆனால் நாளடைவில் மேற்படி இரண்டு கட்சிகளே பார்லிமென்டில் முக்கிய நிலைமையை யடைந்து வந்தன. விக் கட்சியினர் சாதாரணமாக முற்போக்கான கொள்கையைக் கொண்டவர்கள்; டோரி கட்சியினர் விஷயங்களை நிதானமாக கவனிப்பவர்கள். ஆனால் சிலசமயங்களில் டோரி கட்சியினர் முற்போக்கினராகவும் விக் கட்சியினர் பிற்போக்கினராகவும் மாறுவதும் உண்டு. 18-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விக் கட்சியினர் அரச வம்சத்தை ஆதரிப்பவர்களாகவும், டோரி கட்சியினர் எதிர்க்கட்சியினராகவும் மாறினர். அதனால் அவர்களுக்குள் ஆரம்பத்தில் இருந்த பரஸ்பர விரோதபாவம் அழிய, சமரஸமான வழியில் ஒருவரையொருவர் எதிர்த்து வரத் தொடங்கினர். மேலும் நாளடைவில் பார்லிமென்டின் அதிகாரம் விருத்தியடைந்து கொண்டே போயிற்று. விக் கட்சியினர் பார்லிமென்ட் முதலான ஸ்தாபனங்களைச் சீர்திருத்த வேண்டுமெனவும், டோரி கட்சியினர் பழைய முறையே தொடர்ந்துவர வேண்டுமெனவும் கூறி வந்தனர். இதிலிருந்து விக் கட்சியினருக்கு லிபரல் கட்சியினர் என்றும், டோரிகளுக்கு 'கன்ஸர்வேடிவ்' கட்சியினர் என்றும் பெயர்கள் வழங்கலாயின. முற்போக்கினர் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் லிபரல்கள் சிலசமயம் பிற்போக்காகவும், கன்ஸர்வேடிவ் கட்சியினர் முற்போக்காகவும் நடந்துகொள்வதுண்டு. பொதுவாக, லிபரல் கட்சி

யினர் ஜனநாயக தத்துவத்தைப் பரப்புவது, எல்லோருக்கும் சமமான உரிமைகளை யளிப்பது, வர்த்தகநிபந்தனைகளை அகற்றுவது, சமாதானம், சிக்கனம், சீர்திருத்தம் முதலியவற்றை உண்டாக்குவது முதலியவைகளுக்காகப் போராடுகின்றனர். ஒரே அடியாகச் சீர்திருத்தங்கள் செய்யக் கூடாதென கன்ஸர்வேடிவ் கட்சியினர் மறுப்பர். ஆனால் முன்பே கூறியபடி கன்ஸர்வேடிவ் கட்சியினரும் எவ்வளவோ சீர்திருத்தங்களைச் செய்தும் ஆதரித்தும் வந்திருக்கின்றனர். 19-ம் நூற்றாண்டின் இறுதியில் இன்னொரு பெரிய கட்சி இங்கிலந்தில் தோன்றியது. அதுதான் தொழிற்கட்சி எனப்படுவது. தொழிலாளர்கள் முன்போலத் தனியாக நிற்காமல் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கும்பொருட்டுப் பெரிய சங்கங்களை அமைத்து துரைத்தனத்தாருடனும் முதலாளிகளுடனும் போராடத் தொடங்கினர். அதன் மூலம் தொழிலாளருக்கு அவ்விடத்தில் கௌரவமும் மதிப்பும் ஏற்பட்டன. சிறுகச் சிறுகத் தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெற்று வந்தனர். கடைசியில் அவர்கள் பார்லிமென்டிலும் தமக்கென சில ஸ்தானங்கள் வேண்டுமெனப் பொதுத் தேர்தலில் அபேட்சகர்களை நிறுத்தி ஓரளவு வெற்றியடைந்தனர். நாளடைவில் அவர்களது கட்சி வலுத்துவிட்டது. இப்பொழுது இங்கிலந்தில் கன்ஸர்வேடிவ், லிபரல், தொழிற்கட்சி என மூன்று கட்சிகள் இருக்கின்றன; ஆனால் லிபரல் கட்சியினர் பலஹீனமடைந்து போயிருக்கின்றனர். தொழிற்கட்சியினர் சில வருஷங்களுக்குமுன் சிறிதுகாலம் அரசியல் நிர்வாகத்தையும் வகித்து நடத்தினார்கள். இப்பொழுது கன்ஸர்வேடிவ் கட்சியினரிடமே அதிகாரம் இருந்துவருகிறது. இந்த ஒவ்வொரு கட்சியினரும் ஒரு தேசிய மகாசபையை

ஸ்தாபித்திருக்கின்றனர். மேற்படி சபையைச் சேர்ந்த கிளைச்சபைகள் ஒவ்வொரு நகரத்திலும் இருக்கும். வருஷந்தோறும் மகாநாடுகளும் கூட்டங்களும் நடைபெறும்; அவைகளில் பல விஷயங்களைப்பற்றிய தீர்மானங்கள் நிறைவேறும். பொதுத் தேர்தல் நடக்கும்பொழுது ஷை கிளைச் சபைகள் ஏராளமான பணத்தைச் செலவிட்டுப் பிரசங்கங்கள் புரிந்து தம்தம் கட்சியின் அபேட்சகருக்கு ஓட் சேகரித்துக் கொடுக்கும். பார்லிமெண்டில் இப்பொழுது கன்ஸர்வேடிவ் கட்சியினரே பலத்திருப்பதனால், அவர்களே மந்திரிபதவிகளை வகித்து அதிகாரத்தை நடத்திவருகின்றனர். தொழிற் கட்சியினரும் லிபரல் கட்சியினரும் 'அரசருடைய எதிர்க்கட்சியார்' என்ற மரியாதைப் பெயரால் குறிக்கப்படுவர். பார்லிமெண்டில் ஒவ்வொரு கட்சிக்கும் தனித்தனியான இடங்கள் அளிக்கப்படும். அதிகார பதவியை வகிக்கும் கட்சியைத் தோற்கடித்துத் தாம் நிர்வாகத்தை நடத்துவதற்கே எப்பொழுதும் எதிர்கட்சியினர் முயன்று கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு கட்சிக்கும் 'கோறடாக்கள்' என்று கூறப்படும் உத்தியோகஸ்தர்கள் சிலர் இருப்பார்கள். அவர்களுடைய வேலை அந்தந்தக் கட்சியிலுள்ள அங்கத்தினர்களை 'ஓட்' எடுக்கும் சமயத்தில் சரியாக ஓட் செய்யுமாறு தூண்டுவதேயாகும். அதிகாரக் கட்சித் தலைவரே பிரதம மந்திரியின் பதவியை ஏற்றுக் கொள்வார்; எதிர்க்கட்சித் தலைவருக்கும் விசேஷ கௌரவம் உண்டு.

அமெரிக்காவிலும் இப்படியே கட்சிகள் முதலில் தோன்றிப் பிறகு எத்தனையோ மாறுதல்களை யடைந்து வந்திருக்கின்றன. இப்பொழுது அங்கு 'டேமோக்ரட்' 'ரிபப்ளிகன்' என்று இரண்டு முக்கியமான கட்சிகள்

இருக்கின்றன. அவ்விரு கட்சியினரும் ஜனநாயகத்தை ஆதரிப்பவர்களே; ஏதோ சில விஷயங்களில் மட்டுமே அவர்களுக்குள் வேற்றுமை ஏற்படும். கட்சிகளின் அமைப்பைப் பற்றிப் பேசும்பொழுது, அமெரிக்காவிற்கும் இங்கிலந்திற்கும் உள்ள ஒரு பெருத்த வித்தியாசத்தை நாம் கவனிக்கவேண்டும். இங்கிலந்தில் பார்லிமென்டரி துரைத்தனம் நடைபெறுவதால், வலுவாயுள்ள கட்சிக்கு அரசியலை நடத்தும் உரிமை கிடைத்துவிடுகிறது; அந்தக் கட்சியாரே மந்திரிகளாகின்றனர். அரசியலை நடத்த வேண்டுமென்ற ஆசையொன்றே தம்தம் கட்சியை பலப்படுத்துமாறு இங்கிலீஷ்காரரைத் தூண்டுகிறது. அமெரிக்காவிலோ சட்டசபையும் நிர்வாக சபையும் தனித்தனியாக இருப்பதனுல், சட்டசபைக் கட்சியினருக்கு அரசியலதிகாரம் கிடைக்காது. அங்கு நிர்வாக அங்கத்தினர் சட்டசபைக்கே வரமாட்டார்கள். எனவே சட்டசபையில் வலுவாயுள்ள கட்சி செய்யக் கூடியதெல்லாம் தன் கையிலுள்ள ஓட்டுகளைக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றுவது தான். ஆனுலும் அமெரிக்காவிலும் ஒவ்வொரு கட்சியினரும் தேசிய சபைகளேயும் அவைகளின் கீழ்ப் பல கிளைச்சங்கங்களையும் ஏற்படுத்தி, ஓட்டர்களுக்கு இராஜீயப் பயிற்சியளித்து வருகின்றனர். கிளைச்சபைகளும் தேசிய சபைகளும் அடிக்கடி கூட்டம்கூடி அபேட்சகர்களை நியமிப்பதும், தீர்மானங்களை நிறைவேற்றுவதும், இராஜீய விஷயங்களைப் பற்றி விவாதம் செய்வதும் உண்டு. மேற்படி சபைகள் பொதுமக்களுக்கிடையே இராஜீய அறிவைப் பரப்புவதற்கு முக்கிய சாதனமாயிருக்கின்றன. இவ்வாறே ஐரோப்பாக் கண்டத்திலுள்ள மற்ற தேசங்களிலும் அநேக இராஜீயக் கட்சிகள் இருந்து வரு

கின்றன. இரண்டு கட்சிகள் மட்டும் இருக்குமிடங்களில் சாதாரணமாய் ஒரு கட்சி வலுத்தும் ஒரு கட்சி இளைத்தும் இருக்கும்; வலுத்துள்ள கட்சியே மந்திரிசபையை அமைக்கும். அநேக கட்சிகள் இருந்தால், ஒவ்வொரு கட்சியும் மற்றவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்த மொத்தத்தைவிட வலுவாக இருக்க முடியாதாகையால், பல கட்சிகள் ஒன்று சேர்ந்தாலன்றி மந்திரிசபையை அமைக்க இயலுவதில்லை. இவ்வாறுஒன்று சேர்ந்து அரசியல் நடத்தும் கூட்டுக் கட்சிகள் வெகு சீக்கிரத்தில் பிரிந்தும் போய்விடும். இங்கிலாந்தில் மந்திரிசபையை அமைப்பது வெகுசுலபம். பிரான்ஸ் முதலான தேசங்களிலோ அது பகீரதப்பிரயத்தனமாகவே முடிகிறது. மற்ற கட்சிகளுடைய உதவியைப் பெற்ற பின்னர் சிறிது பலமுள்ள கட்சி அரசியல் நிர்வாகத்தை ஏற்று வகிக்க ஒப்புக் கொள்ளுகின்றது. அதனாலேயே பிரான்ஸ் முதலான தேசங்களில் அடிக்கடி மந்திரிசபை மாற்றி யமைக்கப்பட வேண்டி வருகிறது.

(3) **இந்தியாவின் இராஜீயக் கட்சிகள்.**—இனி நம் நாடாகிய இந்தியாவின் நிலைமையை கவனிப்போம். மேனாட்டு முறையைப் பின்பற்றி இங்கும் பல இராஜீயக் கட்சிகள் தோன்றி யிருக்கின்றன. ஆனால் இராஜீய விஷயங்களை மட்டும் காரணமாகக் கொண்டு இக்கட்சிகள் உண்டாகாமல், ஜாதி, மதம் என்ற காரணங்களால் உண்டாயிருக்கின்றன. இது தேசத்தின் ஒற்றுமைக்குத் தீங்கிழைக்கக் கூடியது. முன்பே கூறியபடி இராஜீய விஷயங்களில் மத வேற்றுமையையோ ஜாதி வித்தியாசத்தையோ புக விடுவது உசிதமானதாகாது. இந்திய சட்டசபையில் இப்பொழுது மூன்று முக்கியமான கட்சிகள் இருப்பதாகக் கூறலாம். ஒன்று அரசாங்கக் கட்சி; மற்

றவை சுயராஜ்யக் கட்சியும் சுயேச்சைக் கட்சியுமாம். இந்தியாவில் நாம் இன்னும் அன்னியதேச அரசாங்கத்துடன் போராடி வருகிறோமாதலால் இங்கு வலுவாயுள்ள எதிர்க் கட்சிக்கு அதிகார பதவி கிடைப்பதில்லை. பார்லிமென்டரி துரைத்தனமுறை நம்தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டால், உண்மையான இராஜீயக் கட்சிகள் தோன்றுவதற்கு இடமுண்டாகும். சென்னை மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, சுயேச்சைக் கட்சி என மூன்று முக்கியமான கட்சிகள் இருக்கின்றன. நம் தேசம் சுயராஜ்யம் பெறுங்காலையில் கட்சிகள் வேறு விதமாக அமைக்கப்படும். இப்பொழுதோ சுயராஜ்யப் போரில் இறங்கி இருப்பதனுல் துரைத்தனத்தாரின் பிற்போக்கை எதிர்ப்பதற்காகவே தேசீயக் கட்சிகள் வேலைசெய்து வருகின்றன. ஆனுல் நம் நாடும் சுதந்திரம் பெற்ற நாடாக மாறிவிட்டால், பிரிட்டிஷ் துரைத்தனத்தார் அளிக்கும் சீர்திருத்தங்களை ஒப்புக் கொள்வதா, நிராகரிப்பதா என்ற கேள்விகள் உண்டாக இடமில்லாது போய்விடும். ஆகவே அப்பொழுது பொருளாதார சம்பந்தமாகவே கட்சிகள் ஏற்படும் என இராஜீய நிபுணர்கள் கூறுகின்றனர். நம் நாட்டில் இராஜீயக் கட்சிகள் இன்னும் சுறு சுறுப்பாக வேலைசெய்யவேண்டும். ஒவ்வொரு நகரத்திலும் கிளைச் சங்கங்களை ஸ்தாபித்து இன்னும் அதிகமான மகாநாடுகளைக் கூட்டித் தம் தம் கொள்கைகளை ஜனங்களுக்குப் பரப்பவேண்டும். அப்பொழுதே ஓட்டர்களுக்கும் இராஜீய அறிவு பெருக, இராஜீய விஷயங்களில் சிரத்தை தோன்றும். இராஜீயப் பயிற்சியடைந்த ஓட்டர்களே ஜனநாயக ஆட்சிக்குச் சிறந்த அஸ்திவாரமாவர்.

14-வது அதிகாரம்.

பெடரல் அல்லது ஐக்கிய அரசாங்கம்.

(1) ஐக்கிய அரசின் உற்பத்தி:—அமெரிக்காவானது ஐக்கிய அரசாங்கமென்றும், பல சிறு அரசுகள் ஒன்று சேர்ந்து பொதுவான அரசாங்கத்தை ஸ்தாபித்ததனாலேயே அது தோன்றியதென்றும் முன்பு கூறினோம். ஐக்கிய அரசாங்கத்தின் அமைப்பையும் அதன் விசேஷ குணங்களையும் அதனாலேற்படும் சாதக பாதகங்களையும் நாம் ஆராய வேண்டும். ஐக்கிய அரசாங்கம் ஆதியில் தோன்றி வளர்ந்த சரித்திரம் மிக சுவாரஸ்யமானது. தற்காலத்தில் அரசியல் விஷயங்களில் ஐக்கிய அரசின் அமைப்பே முக்கியமாகக் கருதப்படுகிறது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய அரசு ஏறக்குறைய சம அந்தஸ்தைக்கொண்ட பல தேசங்களின் சேர்க்கையாகும். யுத்தத்திற்கு முன் ஜெர்மனியும் ஐக்கிய அரசாகவே இருந்தது. ஆனால் அதில் அடங்கியிருந்த சிறு மாகாணங்கள் அளவிலும் அந்தஸ்திலும் வேற்றுமைப்பட்டன. ஸ்விட்ஜர்லண்ட் வெகுகாலமாக ஐக்கிய அரசாய் இருந்து வருகிறது. சென்ற நூற்றாண்டில் கனடாவும் ஆஸ்திரேலியாவும் ஐக்கிய அரசை ஸ்தாபித்துக்கொண்டன. இவ்வாறு உலக சரித்திரத்தில் ஐக்கிய அரசையமைக்கும் வழக்கம் வரவர முக்கியமாய்க் கருதப்படுகிறது. ஒன்றிற்கொன்று சமீபத்திலுள்ள பல சிறிய அரசுகள் பொதுவான சத்துருக்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டோ அல்லது வேறு நன்மைகளை உத்தேசித்தோ ஒன்றுசேர்ந்து தங்களுக்கு மேலாக ஒரு பொது அரசை ஏற்படுத்தினால், அதுவே ஐக்கிய அரசாங்கமெனப்படுவது. இங்கிலந்தி

விருந்து பலர் அமெரிக்காவில் குடியேறி பதின்மூன்று தனித்தனியான சிறு மாகாணங்களை ஸ்தாபித்தனர். நாளடைவில் மேற்படி மாகாணங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து, தம்முடைய சுதந்திரத்தையும் சர்வாதிகாரத்தையும் சிறிது சிறிது விட்டுக்கொடுத்து, ஓர் ஐக்கிய அரசாங்கத்தை ஸ்தாபித்து அதற்குக் கீழ்ப்படிவதாக ஒப்புக்கொண்டன. அதனால் அநேக நன்மைகள் விளையலாம். ஒவ்வொன்றும் சிறுசிறு மாகாணமாய்ப் பிரிந்து நின்றால், பலமுள்ள சத்துரு ஒருவன் அவைகளைத் தனித்தனியாக வென்று விடலாம்; அவைகளெல்லாம் ஒன்று சேர்ந்துவிட்டால், அவ்வாறு வெல்வது சாத்தியமல்ல. இரண்டாவதாக, சிறு மாகாணங்கள் ஒன்று சேர்ந்தால் பொதுவாகவே பொருளாதார விருத்தி ஏற்படும். ஒரேவிதமான வளப்பமுள்ள தேசத்தைச்சிறுதுண்டுகளாக வெட்டுவதைவிட ஒன்றாகவே வைத்திருப்பது மேலல்லவா? மூன்றாவது, ஜனங்களிடையே கல்வியும் ஒற்றுமையும் பரஸ்பர அபிமானமும்அதன்மூலம் பெருகும். இங்ஙனம் ஒன்றுசேரும் சிறு மாகாணங்கள் தங்களைப் பூர்த்தியாக அழித்துக்கொண்டு விடுவதுமில்லை; அல்லது, ஐக்கிய அரசாங்கத்திற்குப் பூர்ண அடிமைகளாகவும் மாறிவிடுவதில்லை. அவைகள் தங்களுடைய சொந்த அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் நிரம்பவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக் கொள்ளுகின்றன. அவைகள் வேண்டுவது ஒற்றுமையும் ஒத்துழைப்புமே யன்றி இரண்டறக்கலந்து உருவழிந்து போவதல்ல. ஐக்கிய அரசாங்கம் உண்டானதே மேற்படி சிறிய சிறிய மாகாணங்களின் தயவினாலல்லவா; அதனால் ஐக்கிய அரசாங்கம் மேலானதா மாகாண அரசுகள் மேலானவையா என்ற கேள்விகள் பிறக்கும். ஆதலால் ஐக்கிய அரசாங்கத்தைப்பற்றிய முக்

கிய விஷயம் என்னவெனில், ஐக்கிய அரசாங்கத்திற்கும் மாகாண அரசுகளுக்கும் உள்ள அதிகாரப்பிரிவினையேயாம். அதைப்பற்றிப் பின்னால் விவரமாகக் கூறுவோம். இங்கிலாந்து ஐக்கிய அரசாங்கமல்ல; அதாவது பல சிறு மாகாணங்கள் ஒன்றுசேர்ந்து சிருஷ்டிசெய்த அரசல்ல. இங்கிலந்து தேசம் ஒரே யொரு அரசாட்சிக்கு உட்பட்டது. அதன்கீழ்ப் பல கார்ப்பொரேஷன்களும், முனிசிபாலிடிகளும் அதிகாரம் நடத்திவரலாம். ஆனால் மேற்படி ஸ்தாபனங்கள் யாவும் மத்திய அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டவைகளேயாகும். மத்திய அரசாங்கமே அவைகளுக்கு அதிகாரத்தையும் அந்தஸ்தையும் அளித்திருக்கிறது. அதை ஏகத்துவ அரசாங்கம் என்று குறிக்கலாம். ஏகத்துவ அரசாங்கம் சூரியனைப்போன்றது; அதிலிருந்து அதிகாரக்கிரணங்கள் வெளிப்பட்டு முனிசிபாலிடிகள் முதலான நகரசபைகளுக்கு அந்தஸ்தாகிய ஒளியை யளிக்கின்றன. ஐக்கிய அரசாங்கமோ ஒரு குளத்தையொத்தது. அக்குளத்திற்கு பல வாய்க்கால்களின் மூலம் ஜலம் வருகிறது. வாய்க்கால்கள் இல்லாவிடில் குளமும் இல்லை. மேற்படி வாய்க்கால்களே மாகாண அரசுகளாகும்.

முன்னோர் அதிகாரத்தில் இக்காலத்து அரசுகளின் விசேஷங்களில் ஒன்று, அவைகள் ஆண்டுவரும் பிரதேசங்களின் விஸ்தாரமேயாகும் எனக் கூறினோம். முன்காலத்தில் (ஏதோ சில பெருத்த இராஜ்ஜியங்களைத் தவிர) பற்பல சிறு தேசங்கள் தனித்தனியான அரசைப்பெற்று, அதிகமான சம்பந்தமின்றி இருந்துவந்தன. அச்சிறு அரசுகள் மறைந்துபோய்ப் பெரிய பிரதேசத்தைக் கொண்ட இராஜ்ஜியங்கள் தோன்றியதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். ஒரு வலுவான பகையரசு ஏனைய சிறு தேசங்களை வென்று

அவைகளைத் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தியது ஒரு வழியாகும். மற்றொன்று, பக்கம் பக்கமாயுள்ள பற்பல சிறு தேசங்கள் தாமாகவே ஓர் ஐக்கிய அரசாங்கத்தை உண்டாக்கி அதற்குத் தம்மை உட்படுத்திக் கொள்வதாகும். ஒரே பாஷையைப் பேசியும், ஒரே வழக்கத்தை யநுசரித்தும், ஒன்றிற்கொன்று சமீபத்திலும் இருந்துவருகின்ற பல தேசங்கள் தம்மை முழுமையும் அழித்துக் கொள்ள மனமில்லாமலும், முழுவதும் உருமாறிவிட இஷ்டமில்லாமலும், தமது சர்வாதிகாரத்தையும் இழந்து அடிமையாய் விட விரும்பாமலும், இத்தகைய ஐக்கிய அரசாங்கத்தை ஸ்தாபிக்கின்றன. மேற்படி இரண்டு வழிகளில் முதலில் கூறியது யுத்தமுறை; பின்கூறியது சமாதானமுறை; இப்பொழுது யுத்தமுறையினால் இராஜ்ஜியப் பெருக்கு ஏற்படுவது அநேகமாக முடியாதென்றே கூறலாம். சமாதான முறையாலும் சொந்த இஷ்டத்தினாலுமே இப்பொழுது பலதேசங்கள் ஒன்றுபட வழியுண்டு.

(2) பலவகையான ஐக்கிய அரசுகள்:—பொதுவாகப் பேசுமிடத்து, சுதந்திரமுள்ள இரண்டு தேசங்கள் ஒன்று சேர்ந்தால், அதுவும் ஒருவித ஐக்கியமேயாகும். உலக சரித்திரத்தில் பல காரணங்களை முன்னிட்டு இத்தகைய ஐக்கியம் பலதடவைகளில் ஏற்பட்டிருக்கிறது. (1) முதலாக, பரஸ்பரம் யுத்தத்திலும் சத்துருவை எதிர்ப்பதிலும் உதவி செய்யும்பொருட்டு பல தேசங்கள் ஒன்றுபடலாம். இத்தகைய கூட்டுறவு வெகுநாள் தங்காமல் அவ்வபாயம் அகன்றவுடனே மறைந்து போகக்கூடியது; ஏனெனில் அவ்விதம் ஒன்றுகூடிய அரசுகளையும் கட்டுப்படுத்தக்கூடிய சாதனமெதுவும் கிடையாது. (2) இரண்டாவதாக, பல தேசங்கள் ஒரு பொதுவான உத்தேசத்தை அடைவதற்காக

ஒன்று கூடலாம். பழைபகாலத்து கிரேக்கர்கள் இத்தகைய ஐக்கிய சபையொன்றை ஏற்படுத்தியிருந்தனர். இச்சபையில் அங்கத்தினராயிருப்பவர்கள் தமது சுதந்திரத்தைச் சிறிதளவும் இழப்பதில்லை; இஷ்டப்படும் பொழுது அவர்கள் இச்சபையை விட்டு நீங்கிவிடலாம். (3) மூன்றாவதாக, அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தைக் கூறலாம். அதாவது முன்பு சுதந்திரமாக இருந்த தேசங்கள் தம்முடைய சுதந்திரத்தைச் சிறிதளவுமட்டும் விட்டுக் கொடுத்துப் பொதுவான அரசிற்குள் அடங்குவதாகும். (4) நான்காவதாக, சிறு தேசங்கள் தாமாகவே இன்னோர் இராஜ்ஜியத்துடன் முழுதும் ஒன்றுபட்டுவிடலாம். உதாரணமாக இங்கிலந்தின் வடக்கிலுள்ள ஸ்காட்லண்ட் தேசத்தினர் இங்கிலந்தின் அரசாங்கத்திற்கு 1707-ம் வருஷத்தில் உட்பட்டுவிட்டதைக் கூறலாம். அதற்குமுன் ஸ்காட்லண்டுக்கும் தனியான பார்லிமென்ட் இருந்து வந்தது; இந்த ஏற்பாட்டிற்குப் பிறகு இங்கிலந்தின் பார்லிமென்டுக்கே ஸ்காட்லண்ட் தேசத்தார் பிரதிநிதிகளை அனுப்பத் தொடங்கினர். இவ்விதம் ஸ்காட்லண்ட் தேசம் இங்கிலந்துடன் ஒன்று சேர்ந்ததால் அங்கு ஐக்கிய அரசு ஏற்படவில்லை என்பதை கவனிக்கவேண்டும். ஸ்காட்லண்ட் தேசம் தன்னுடைய தனியான அரசை இழந்து, இங்கிலந்தின் அரசில் ஓர் இணை பிரியாத பாகமாய்விட்டது. பல தேசங்கள் பல காரணங்களை முன்னிட்டு ஒன்று கூடுவதை நாம் இரண்டு முக்கியப் பிரிவுகளாக வகுத்துக் கூறலாம். ஒன்று சமராஜ்ஜியங்களின் சேர்க்கை; மற்றொன்று ஐக்கிய அரசாங்கம். இவ்விரண்டுக்கும் வேற்றுமை உண்டு. அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தை நாம் ஒரே அரசாகவே கருதுகிறோம். அதாவது இந்திய அரசாங்கத்திற்கு கீழ்ப் பல மாகாண

அரசுகள் இருக்கின்றனவானாலும் இந்தியாவை ஓரே அரசாகக் கூறுவதைப் போலவே அமெரிக்காவையும் கூறுகிறோம். ஆனால் அங்கு ஒரு மத்திய அரசிற்குள் பல தனி அரசுகள் இருக்கும். குறிப்பான சில காரியங்களைச் செய்துமுடிக்க மட்டுமே அவைகள் ஒன்று கூடுகின்றன. உதாரணமாக, யுத்தத்திற்குப் பின் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச மகாசபை இது போன்றதே. அதில் அங்கத்தினராயிருப்பவர்கள் எப்பொழுது விரும்பினாலும், அதை விட்டு நீங்கிக் கொள்ளலாம். அவர்களை சட்டப்படி எவரும் தடுக்க இயலாது. இத்தகைய சேர்க்கை சீக்கிரத்தில் விலகிப்போகலாம். ஆனால் ஐக்கிய அரசாங்கமோ ஸ்திரமாக ஏற்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக நடந்து வருகிறது. அதனுடைய ஆதிக்கத்தை மாகாண அரசுகளால் சாதாரணமாக எதிர்க்கமுடியாது. ஐக்கிய அரசாங்கம் அமைக்கப் பெற்றபொழுதே, அதை யமைப்பதற்குக் காரணமாயிருந்த சிறு அரசுகள் தம்முடைய சுயேச்சையான சுதந்திரத்தைச் சிறிதளவு இழந்து ஒரு கட்டுப்பாட்டுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டுவிட்டன. ஐக்கிய அரசாங்கத்தை அழித்து, அதிலுள்ள மாகாண அரசுகளுக்கு மீண்டும் சுதந்திரத்தை யளிக்க ஐக்கிய அரசாலும் முடியாது; மாகாண அரசுகளாலும் முடியாது. அரசியலமைப்பை மாற்றும் சக்தியைக்கொண்ட ஸ்தாபனத்தினாலேயே அது முடியும்.

பல தனி அரசுகளின் சேர்க்கையை மேற்கூறியவாறு இருவிதமாகப் பிரிப்பதற்குப் பதிலாக ஜெல்லினேக் என்ற ஆசிரியர் வெகு நுட்பமான பிரிவைச் செய்திருக்கிறார். அவர் பொதுவாக, சட்டபூர்வமாய் ஏற்பட்ட ஐக்கிய அரசென்றும், அவ்விதமின்றி ஐக்கிய அரசின் குணங்களை மட்

டும் கொண்டவை யென்றும் பிரிக்கிருர். இரண்டாவது வகைக்கு உதாரணமாக ஐக்கிய அரசல்லாத பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு உட்பட்டு ஐக்கியமுறையைத் தழுவியுள்ள கனடா, ஆஸ்திரேலியா இவைகளைக் கூறலாம். முதற்கூறிய வகையை ஜேல்லிநேக் இன்னும் நுட்பமாகப் பிரித்து வைக்கிருர். (1) ஓர் அரசு மற்ருென்றினுடைய பாதுகாப்பில் இருப்பது. (2) ஒரு பெரிய அரசு வேருெரு சிறிய அரசுடன் சேருவது. (3) ஒரே அரசனுல் ஆளப்படும் இருதேசங்களின் சேர்க்கை. (4) பொதுவான சில உத்தேசங்களின்பொருட்டு ஒன்றுகூடும் சமராஜ்ஜியங்கள். (5) ஐக்கிய அரசாங்கம்—என்று ஜெல்லிநெக் வகுத்திருக்கிருர். ஆனுல் நவீன நூலாசிரியர்கள் இவ்வளவு நுட்பமான வேறறுமையைத் தள்ளி மேற்கூறிய இரண்டு முக்கியமான வகைகளையே வற்புறுத்திக் கூறுகின்றனர்.

(3) ஐக்கிய அரசில் இராஜ்யாதிகாரம் யாருடையது:— அரசினுடைய இயற்கையைப் பற்றி ஆராய்ந்தபொழுது சர்வாதிகாரமும், சுயேச்சையும், பாராதீனமின்மையும் பெற்றிருப்பவைகளே பூர்ண அரசுகள் என்று கருதத்தக்கவை என்று கூறினேம். ஐக்கிய அரசாங்கத்தில் இத்தகைய சர்வாதிகாரம் எங்கிருக்கிறதென்பதை நாம் கவனிக்க வேண்டும். முன்பு விளக்கியபடி ஐக்கிய அரசாங்கம் அமைக்கப் பெறும்பொழுது அதனுடைய அமைப்பிற்குக் காரணமாயிருந்த மாகாண அரசுகள் தமது சர்வாதிகாரத்தை இழந்து விடுகின்றன. ஐக்கிய அரசாங்கமானது தனக்குள்ளடங்கிய மாகாண அரசுகளின் பூர்த்தியான சுதந்திரத்தை அழித்துவிடுகிறது; அதைக் குறைப்பதையோ அல்லது ஓர் எல்லைக் குள்படுத்துவதையோ மாத்திரம் செய்கிறது என எண்ணக்கூடாது ; அதைப் பூரணமாகவே இல்லையெனச்

செய்து விடுகிறது. ஏனெனில் சர்வாதிகாரமென்பது பூர்ணமாக இருக்கவேண்டும், அல்லது அடியோடு இல்லாமல் போய்விடவேண்டும். இந்த இரண்டு வழிகளைத்தவிர வேறு நடுவழி இருக்கமுடியாது. சர்வாதிகாரம் குறைக்கப்பட்டோ வரம்பிற்குள் அடங்கப்பட்டோ போனால் அதை எப்படி சர்வாதிகாரமென்று குறிப்பது? ஆனால், ஐக்கிய அரசாங்க அமைப்பில் எல்லாவற்றிற்கும் மேலான மத்திய அரசுக்கும் சர்வாதிகாரம் கிடையாது. அந்த அரசின் அதிகாரத்திற்கும் ஓர் எல்லை ஏற்பட்டிருக்கிறது; உதாரணமாக, மாகாண அரசுகளை அழித்துவிடும் உரிமை ஐக்கிய அரசுக்குக் கிடையாது. இங்கிலந்தில் உள்ள அரசோ எந்த முனிசிபாலிடியையும் அழித்து விடக்கூடிய அதிகாரம் வாய்ந்தது. ஆதலால் ஐக்கிய நாடுகளில், மாகாண அரசுக்கும ஐக்கிய அரசுக்கும் சர்வசுதந்திரம் கிடையாது. அரசியல் முறையை மாற்றக்கூடிய ஸ்தாபனத்திற்கே ஷை சர்வாதிகாரமும்உண்டெனக் கூறவேண்டும். அமெரிக்காவில் இவ்வித ஸ்தாபனம் பிரத்தியக்ஷமாயிருந்து நிரந்தரமாக வேலைசெய்துவரவில்லையென்றும், ஆனால் அது சட்டப்படி தொடர்ச்சியாக இருந்து வருகிறதென்றும் முன்பே கூறினோம். அந்த அரசியல் மாற்றத்தைச் செய்யக்கூடிய ஸ்தாபனம் ஐக்கிய அரசாங்கத்தைக்கூடக் கலைத்துவிடத் தகுந்த அதிகாரம் வாய்ந்தது. ஐக்கிய அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு மாகாண அரசுகளைப் பழைய சுதந்திரத்தைப் பெறும்படி அது செய்துவிடக் கூடுமானாலும், உண்மையில் அவ்வாறு காரியம் நடக்கப்போவதில்லை என்பதுநிச்சயம். ஆனாலும்சட்டப்படி மட்டும் பார்க்கும்பொழுது ஐக்கிய அரசாங்கமும் கலைக்கப் படக் கூடியதென்பதைக் காட்டுவதற்கே ஷை உதாரணத்தைக் குறிப்பிட்டோம். சமராஜ்ஜியங்களின் சேர்க்கை

யில் எந்த அரசும் தான் விரும்பும்பொழுது அதிலிருந்து நீங்கிக்கொள்ளலாம். ஐக்கிய அரசாங்கத்தைக் கலைப்பதற்கு சட்டமியற்றவேண்டுவது போல, சமராஜ்ஜியங்கள் பிரிவதற்கு அது வேண்டியதில்லை. சமராஜ்ஜியங்களின் சேர்க்கையில் ஒவ்வோர் அரசும் சர்வாதிகாரமும் பெற்றது. அவைகளைக் கட்டுப்படுத்தும் சட்டம் கிடையாது. அந்த ஏற்பாட்டில், பலரால் ஒப்புக்கொள்ளப்படும் சில தீர்மானங்களே நிறைவேற்றப்படுகின்றன. நியாயமாகப் பார்த்தால் அவைகளைச் சட்டமெனக் கூறுதல் தகாது. சட்டமிருக்குமிடத்தில் அச்சட்டத்தை மீறுவோரை தண்டிக்கும் பலவந்தமான அதிகாரம் படைத்த ஓர் அதிகாரி இருக்கவேண்டும். அவ்வாறு ஓர் அதிகாரி இருந்தால் அவருடைய அதிகாரத்திற்குள்ளடங்கிய அரசுகளுக்கு சர்வாதிகாரமும் இல்லையென்று பொருள்படும்.

இந்த விஷயத்தைப்பற்றி அமெரிக்காவில் நீண்டகாலமாய்ப் பல விவாதங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. சில மாகாணங்களில் இருந்த ஜனங்கள் அமெரிக்க ஐக்கிய அரசாங்கம் என்பது சமராஜ்ஜியங்களின் சேர்க்கையேயென்றும், அதனால் மாகாண அரசுகள் தங்களுடைய சர்வாதிகாரத்தையும் இழக்கவில்லையென்றும் கூறினார்கள். சிலர் இதற்கு எதிரிடையான அபிப்பிராயத்தைக் கூறி, ஐக்கிய அரசுக்கே சர்வாதிகாரம் உண்டென்று கூறி வாதித்துவந்தனர். கடைசியில் சில அறிவாளிகள் ஒரு புதிய சித்தாந்தத்தை ஏற்படுத்தினர். அதன்படி அமெரிக்காவில் அரசின் சர்வாதிகாரம் ஒருவரிடம் மட்டும் இல்லாமல், பிரிந்து இருக்கிறது எனச் சொல்லப்படுகிறது. ஐக்கிய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் ஷை சர்வாதிகாரத்தைத் தமக்குள் பிரித்து வைத்துக்கொண்

டிருக்கின்றன. சர்வாதிகார மென்பது பிரிக்கமுடியாத வஸ்துவாதலால், ஷை ஏற்பாடு அசம்பாவிதமாகத் தோன்றலாம். ஆனாலும், பல நிபுணர்கள் இக்கொள்கையையே ஆதரித்திருக்கின்றனர். இதில் ஓரளவு உண்மை இருக்கிறதென்பதும் பின்னால் விளங்கும்.

(4) ஐக்கிய முறையில் பல அரசுகளுக்குள் சமரஸ பாவம் ஏற்படும் வழி:—ஐக்கிய அரசாங்கம் பல சிறுதேசங்களின் சம்மதியையும் பெற்றே அமைக்கப்பட வேண்டும்; ஆதலால் அதில் அடங்கியுள்ள மாகாண அரசுகள் ஒரு விதமான பற்றையும், ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுத்து நட்பாக நடந்துகொள்ளும் குணத்தையும் பெற்றிருக்கின்றன. பொதுவான அபாயம் எதையேனும் தடுக்கும் பொருட்டோ, அல்லது, பொதுவான நலத்தையடையும் பொருட்டோ பல சிறு அரசுகள் ஒன்றுசேர்வது உலக சரித்திரத்தில் சாதாரணமான வழக்கமாயிருந்து வந்தாலும், அத்தகைய சேர்க்கையால் தனது தனிப்பட்ட வாழ்க்கைக்கோ, சுதந்திரத்திற்கோ கெடுதல் ஏற்படுமென்ற சந்தேகமிருந்தால் சிறு அரசுகள் அதற்கு இணங்கமாட்டா. இந்த பயத்தை அகற்றும்பொருட்டே ஐக்கிய அரசாங்கத்தில் எல்லா மாகாண துரைத்தனங்களும் சமமான அந்தஸ்துடையனவைகளெனக் கருதப்படுகின்றன. ஐக்கிய அரசின் அமைப்பில் சிறு மாகாணங்களுக்குப் பெரிய மாகாணங்களால் தீங்கேற்படாதபடி பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது. மேலும் சமூக வழக்கங்களிலுள்ள வேற்றுமையும் கௌரவிக்கப்படுகிறது. இவ்வாறு பொதுவான உத்தேசங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுப் பல அரசுகள் பயமின்றி ஒன்று சேருவதற்கு ஐக்கிய முறையே சிறந்த முறையாக இருக்கிறது.

(5) ஐக்கிய அரசில் அதிகாரப் பிரிவினை:—மாகாண அரசுகள் தம்முடைய அதிகாரத்தில் சிறிதளவை ஐக்கிய அரசினிடம் ஒப்படைப்பதாக முன்பு கூறினோமல்லவா? இப்பொழுது மாகாண, ஐக்கிய அரசுகளுக்குள் ஏற்படும் அதிகாரப் பிரிவினை எத்தகையதென்பதை ஆராய்வோம். (1) சுருங்கச் சொல்லுமிடத்து, தேசம் முழுவதையும் பாதிக்கக்கூடிய விஷயங்களை ஐக்கிய அரசும், மாகாணங்களை மட்டும் பாதிக்கக்கூடிய விஷயங்களை மாகாண அரசுகளும் நிர்வகித்து வருவதாகக் கூறலாம். ஐக்கிய அரசாங்கம் உண்டாவது முக்கியமாய்ப் பகையரசுகளின் பயத்தினாலேயே. அதைக் கருதியே மாகாணங்கள் ஒன்றுசேர்ந்து தமது பலத்தை அதிகப்படுத்திக் கொள்ளுகின்றன. ஆதலால் தேசத்தை பகையரசுகளின் அபாயத்திலிருந்து காப்பதும், யுத்தம் நடத்துவதும், சமாதானம் செய்துகொள்வதும் ஐக்கிய அரசின் கடமைகள். அதற்கநுகூலமாக, சேனை, கப்பற்படை, ஆகாயப்படை முதலிய யுத்த சாதனங்களும் அதன் ஆதிக்கத்திலேயே இருக்கவேண்டும். அன்னிய நாட்டு சம்பந்தமும் ஐக்கிய அரசைச் சேர்ந்ததே யாகும். யுத்தம் செய்வதற்குப் பணம் அவசியமாதலால், சில வரிகளை விதித்துப் பணம் சேர்க்கும் உரிமையும் ஐக்கிய அரசுக்கு அளிக்கப்பட்டிருக்கும். வரியின் மூலமாய் வசூலான பணம் போதாவிடில், வேறு தேசத்தினிடமிருந்து கடன் வாங்கும் அதிகாரமும் அவர்களுக்கு அவசியமாகும். எனவே ஐக்கிய அரசின் முதன்மையான கடமைகள், யுத்தம்செய்வது, தேசத்தைக் காப்பது, அந்நிய நாட்டு சம்பந்தமான விவகாரங்களையெல்லாம் நடத்துவது, தேவையான அளவுக்கு வரிவிதிப்பது ஆகியவைகளே. (2) ஐக்கிய நாடுகள்

முழுவதையும் பாதிக்கக்கூடிய சில விஷயங்களையும் ஐக்கிய அரசே மேல்பார்வை பார்த்து வருவது நலமாகும். உதாரணமாக, நாணயங்களை அச்சிடுவது, தந்தி தபால் முதலியவைகள் மாகாணங்கள் தோறும் வெவ்வேறு யிருந்தால், அது ஜனங்களுக்குத் துன்பமாகவும் அசௌகரியமாகவும் முடியும். ஆதலால் தேசம் முழுதும் ஒரே மாதிரியாகவோ; பொதுவாகவோ நடத்தப்பட வேண்டிய இலாகாக்களை ஐக்கிய அரசு நிர்வாகம் செய்வதே சிறந்த வழி. (3) இரண்டு மாகாணங்களையோ அதற் கதிகமானவைகளையோ பாதிக்கக் கூடிய விஷயங்களை மாகாண அரசுகளைக் காட்டிலும் ஐக்கிய அரசாங்கமே ஒழுங்காகப் பரிசீலனை செய்யும். இரயில்வே, நீர்ப்பாசனம், சுங்கவரி முதலியவை இம் மாதிரியானவை. இரண்டு மாகாணங்களுக்குள் சச்சரவேற்பட்டால், அதைத் தீர்த்துவைக்கும் கடமை ஐக்கிய அரசைச் சேர்ந்தது. (4) அரசியல் பத்திரத்தின்படி இரண்டிலும் சேராமல், சில புதிய இலாகாக்கள் ஏற்பட்டால், அவைகளை சமயோசிதப்படி சில இடங்களில் ஐக்கிய அரசாங்கமும், சில இடங்களில் மாகாண அரசுகளும் நிர்வகித்து வரும். பொதுஜனக் கல்வி முதலான இலாகாக்களை மாகாண அரசோ அல்லது ஐக்கிய அரசோ அல்லது இரண்டும் சேர்ந்தோ கவனித்து வரலாம். (5) மாகாணத்தின் வியவகாரங்கள் விஷயத்தில் ஐக்கிய அரசாங்கம் தலையிடவே கூடாது. முனிசிபல் நிர்வாகம், சத்திரம் கட்டுதல், மராமத்து முதலான விஷயங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஐக்கிய அரசாங்கம் தேசத்திற்குப் பொதுவான சட்டமியற்றும் பொழுதும்கூட, பல மாகாணங்களின் தனித்தனியான பழக்க வழக்கங்களுக்கு சிறிதும் பங்கமேற்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். எனவே ஐக்

கியப் பத்திரத்தில், ஐக்கிய அரசுக்கு இன்னின்ன இலாகாக்கள், மாகாணங்களுக்கு இன்னின்ன இலாகாக்கள் என்று பிரிக்கப்பட் டிருக்குமாதலால், அந்தந்த இலாகாவில் அதது சர்வாதிகாரம் படைத்த தென்றே கருதவேண்டும். ஐக்கிய அமெரிக்காவில் அரசின் சர்வாதிகாரம் இரண்டாக வகுத்து வைக்கப்பட் டிருக்கிறதென முன்பு கூறினோம். உலகில் ஐக்கிய அரசுகளாய் உள்ள அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஸ்விட்ஜர்லந்து, ஜெர்மனி முதலிய தேசங்களின் திருஷ்டாந்தத்தைக் கொண்டு பொதுவாகப் பார்த்தால் கீழ்க்கண்ட இலாகாக்கள் ஐக்கிய அரசாங்கத்தால் நிர்வகிக்கப் படுவதாகத் தெரியவரும்.

வரியைவிதித்து வசூலிப்பது; கடன் வாங்குவது; கடனைத்தீர்ப்பது; தேசத்தைப் பகைவரிடமிருந்து பாதுகாப்பது; தேச க்ஷேமத்தைப் பெருக்குவது; அந்நிய தேசங்களுடன் வர்த்தக சம்பந்தமான உடன்படிக்கைகளைச் செய்து கொள்வது; காசு பணம் முதலிய நாணயங்களை அச்சிடுவது; நிறுத்த லளவைத் தீர்மானிப்பது; பொய் நாணயம் அச்சிடுவோரை தண்டிப்பது; தபாலாபீசுகளை ஸ்தாபித்தல்; சாஸ்திரங்கள், கலைகள் ஆகியவைகளின் முன்னேற்றத்திற்கு வழி செய்வது; கப்பற்கொள்ளை நடத்துவோரையும், பிறதேசங்களை அகாரணமாய் அவமதிப்போரையும் தண்டித்தல்; யுத்தம்நடத்துவது; போரில் சிறைபிடித்த பொருளை கிரமப்படி வினியோகம் செய்தல்; சேனையைத் திறமையாக வைத்துக் கொள்ளுதல்; கப்பற்படையைத் தயாரித்தல், கிரிமினல் சட்டம்; பாங்குகளின் நிர்வாகம்; இரயில்வே; வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவது, தொழிலாளரின் க்ஷேமத்தைப் பாதுகாத்தல் முதலியனவாம்.

ஐக்கிய அரசாங்கம் அதனுடைய இலாகாக்களில் திருப்திகரமான சீர்திருத்தங்களைச் செய்யாவிடில் மாகாண அரசுகள் தம்தம் பிரதேசத்திற்கு மட்டும் அத்தகைய அவசியமான சீர்திருத்தங்களைச் செய்து கொள்ளலாம் என்று ஜெர்மனி முதலான சில தேசங்களில் அநுமதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாகாண அரசுகள் இயற்றும் சட்டங்கள் ஐக்கிய அரசின் சட்டத்திற்கு முரண்படுவதாய் இருக்கக் கூடாது. கனடா ஓர் ஐக்கிய அரசேயானாலும் அதில் ஒரு விசேஷம் உண்டு. அங்கு மாகாணங்களுக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட இலாகாக்களைத்தவிர, மற்றவைகள் ஐக்கிய அரசையே சேருகின்றன. உதாரணமாக, வருமானவரி விதிப்பதைப் பற்றிச் சட்டத்தில் பிரஸ்தாபமே இல்லையானால், அதை விதிக்கும் உரிமை ஐக்கிய அரசைச் சேருமேயன்றி மாகாண அரசுகளைச் சேராது. வேறு சில ஐக்கிய நாடுகளில் இவ்வாறு சட்டத்தில் குறிப்பிடப்படாமல் விடப்பட்டிருக்கும் அதிகப்படியான இலாகாக்கள் மாகாண அரசுகளையே சேர்ந்தவை என்ற அநுஷ்டானம் இருந்து வருகிறது. கனடாவில் ஐக்கிய அரசாங்கத்திற்கு அதிகாரம் சிறிது அதிகமாகவே அளிக்கப்பட்டிருக்கிறது.

(6) சில பொதுவான குறிப்புகள்:—உலகிலுள்ள ஐக்கிய அரசாங்கங்களின் திருஷ்டாந்தங்களிலிருந்து அநுபவத்தில் சில முக்கியமான விஷயங்கள் தெரிகின்றன. ஐக்கிய அரசுகளின் அதிகாரம் படிப்படியாக விருத்தியடைந்து அதிகப்பட்டுக்கொண்டு போவது நன்றாகத் தெரிகிறது. முதன்முதலில் ஐக்கிய அரசாங்கம் உற்பத்தியான காலத்தில் மாகாணங்கள் ஒன்றினிடத்தொன்று சந்தேகமும் அவநம்பிக்கையும் கொண்டு நடந்துவந்தன.

ஒருகால் பெரிய மாகாணங்கள் தம்மை நாளடைவில் தங்களது ஆதிக்கத்திற் குட்படுத்தி விடக்கூடுமோ என்ற பயம் சிறு மாகாணங்களுக்கு இருந்துவந்தது. ஆனல் நாளடைவில் அந்த பயம் அற்றுப்போயிற்று; நெருங்கிப் பழகிய மாகாணங்களுக்குள் அன்னியோன்னியமும், பற்றும் ஏற்பட்டுப் போயின. மாகாண வாசிகளும் பெருந்தன்மையாக நடந்துகொள்ளத் தெரிந்து கொண்டனர். தேசீய அபிமானமும் வளர்ந்தது. 'நமது மாகாணம்' என்ற குறுகிய எண்ணம் மனிதரது மனதை விட்டகன்றது. வரவர, ஐக்கிய அரசை பிரஜைகள் அதிகமாக கௌரவிக்கலாயினர். இயற்கையான இந்த வளர்ச்சிக்கு உதவியாக நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்ட பல கருவிகளும் உதவிசெய்தன. தந்தி, தபால், இரயில்வே, போக்குவரத்து வசதிகள் ஆகியவைகளால், ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஏற்பட்டிருந்த செயற்கையான குறுகிய எல்லைகள் ஒழிந்துவிட்டன. ஒரு மாகாணத்தின் உணவுப் பொருள்களை நம்பியே மற்றொரு மாகாணம் ஜீவிக்கும்படியாயிற்று. ஒவ்வொருவரது தேவையைப் பூர்த்திசெய்வதற்கும் மற்றவரது உதவி இன்றியமையாததாகிவிட்டது. ஆதலால் வர்த்தகமும் கைத்தொழிலும் மாகாண அரசின் நிர்வாகத்திலிருந்து ஐக்கிய அரசிற்கே போய்ச் சேர்ந்துவிட்டன. கைத்தொழில் பெருக்காகிய பெருத்த வெள்ளத்தின் முன் சிறு சிறு மாகாணங்களின் வரம்புகளும் எல்லைகளும் மறைந்து போய்விட்டன. ஐக்கிய அரசு ஒன்றே ஜனங்களின் கௌரவத்தையும் மதிப்பையும் பெற்று, எல்லா மாகாணங்களிலும் உள்ள பிரஜைகளின் பொதுவான க்ஷேமத்தை விருத்திசெய்யும் நோக்கத்துடன் பரிபாலனம் செய்துவருகிறது.

இந்திய துரைத்தனம் ஐக்கிய அரசாங்கமல்ல. அது ஏகத்துவ அரசாங்கமேயானாலும் அது பலவிதங்களில் ஐக்கிய அரசையே ஒத்திருக்கிறது. முதலாக இந்திய அரசாங்கத்தின் கீழ்ப் பல மாகாண அரசுகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் தனித் தனியான சட்டசபைகளும் இருக்கின்றன. ஆனால் பல மாகாணங்களும் சேர்ந்துகொண்டு இந்திய துரைத்தனத்தை ஸ்தாபிக்கவில்லை. நாளடைவில் படிப்படியாக இப்பல மாகாணங்களும் இந்திய அரசாங்கத்தின் ஆளுகைக்குள்சேர்ந்துவிட்டன. ஒவ்வொரு மாகாணத்தின் பாஷையும் பழக்க வழக்கங்களும் வெவ்வேறாகவே இருக்கின்றனவானாலும், இந்தியா முழுதும் இயற்கையான ஒற்றுமை உண்டாயிருக்கிறது. இந்தியாவின் மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரிப்பதென்பதும் அசம்பாவிதமாகும். பல மாகாணங்களிலுள்ள வித்தியாசங்களுக்கு இடங்கொடுத்து அவைகளுக்குள் ஏற்கெனவே இருக்கும் ஒற்றுமையையும் கெடாமல் அரசியலை நடத்துவதே உசிதமான காரியம். இப்பொழுது பலர் மாகாண சுயாதீனம் வேண்டும் எனக் கேட்டுவருகின்றனர். தேசம் முழுவதையும் பாதிக்கும் விஷயங்களை இந்திய அரசாங்கத்தாரும், மாகாணத்தைப் பற்றிய வியவகாரங்களை மாகாண அரசாங்கத்தாரும் நிர்வகித்து வருவதே சிலாக்கியமான முறையாகும். கனடாவைப் போலவே மாகாண அரசுகளுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்கள் மத்திய அரசுக்குச் சேரவேண்டும். மேலும் இந்தியாவில் சுதேச மன்னர்களால் பரிபாலிக்கப்படும் இராஜ்ஜியங்கள் அரசியல் விஷயங்களில் தனியாகவே நின்றபோதிலும், பொருளாதார விஷயங்களில் இந்திய அரசாங்கத்தாருடன் பலவகைகளில் ஒத்துழைக்கலாம். அப்

படியானால், இந்தியாவிலுள்ள பல தனி மாகாணங்களும் தம் தம் வீட்டைத் தாமே பரிபாலித்துக் கொண்டும், எல்லா மாகாணங்களும் சேர்ந்ததான ஒரு பொதுவான அரசின் கீழ் சம அந்தஸ்துடன் இருந்துகொண்டும், தம் தம் தனித்தன்மையை அழித்துக் கொள்ளாமலும் உரு மாறாமலும், தமது பரஸ்பர ஒற்றுமையினால் பல விருத்தி செய்துகொண்டும் பொது நன்மையை அதிகரித்து வாழ்ந்து வரலாம்.

15-வது அதிகாரம்
குடியேற்ற நாடுகள்.

(1) ஓர் அரசு இதர நாடுகளைத் தனக்குக் கீழ்ப்படுத்தும் விதம்:—இந்தியா முதலிய பல தேசங்களை ஆண்டுவரும் நமது விரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப்போல இதுவரையில் உலகில் எங்கும் ஏகசக்ராதிபத்யம் இருந்ததில்லையெனப் பெருமையாகக் கூறப்படுவதை நாம் கேள்வியுறுகிறோம். விரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியாஸ்தமனமே ஆவதில்லையெனவும் புகழ்ச்சியாய்ச் சொல்லிக் கொள்ளுகின்றனர். அதாவது பூகோளத்தின் மேல்பாகம் கீழ்பாகம் ஆகிய இரண்டிலும், இந்த அரசின் ஆதிக்கம் பரவியிருக்கிறது என்பது அதன் அர்த்தம். விரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ள கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்/2ரிக்கா முதலிய தேசங்கள் குடியேற்ற நாடுகள் என்று குறிக்கப்படுகின்றன. இங்கிலீஷ்காரர் ஷை தேசங்களில் குடியேறி காலக்கிரமத்தில் அவ்விடத்து சுதேச ஜனங்களை வென்று அந்த நாடுகளைத் தமது இராஜ்ஜியமாகச் செய்துகொண்டு விட்டனர். இந்தியா முழுதும் இங்கி

லீஷ்காரர் குடியேறிய நாடு ஆகவில்லையானாலும், இது இங்கிலந்தின் ஆளுகைக் குள்பட்டே இருக்கிறது. விரிட்டிஷ் சாம்ராஜ்யந்தான் அளவில் மிக மிகப் பெரியது. விரிட்டிஷாருக் குட்பட்ட குடியேற்ற நாடுகளில் 372,000,000 ஜனங்கள் இருக்கின்றனர். பிரெஞ்சு குடியேற்ற நாடுகளில் ஏறக்குறைய 44,600,000 ஜனங்களே இருக்கின்றனர். சட்டப்படி மேற்படி குடியேற்ற நாடுகள் தம் தம்முடைய தாய் நாட்டின் அரசாங்கத்தாருக்கு உள்பட்டவைகளே. விரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் குடியேற்ற நாடுகளுக்குத் தாய் நாடு இங்கிலந்தாகும். ஆனால் அநுஷ்டானத்தில் கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா முதலிய குடியேற்ற நாடுகள் சர்வ சுதந்திரத்தையும் பெற்று விட்டன. பெயருக்குமட்டுமே அவை இஙகிலந்தின் அரசுக்குட்பட்டவைகள். பெண்களுக்கு வயது வந்தபிறகு அவர்கள் தாமே தம்முடைய நிர்வாகத்தை நடத்தி வருவதைப்போலவே, இங்கிலந்தினுடைய பெண்களான குடியேற்ற நாடுகள் குழந்தைப் பருவத்தைத் தாண்டியவுடனே சுதந்திர மளிக்கப்பட்டு விட்டன. ஆனால் இங்கிலந்தினால் சுவீகாரம் செய்து கொள்ளப்பட்டுள்ள பெண்ணான இந்தியா இன்னும் சரியான வயதை யடையாததால் தன்னுடைய நிர்வாகத்தைத் தானே நடத்திக் கொள்ளும் திறமையையும் உரிமையையும் பெறவில்லையென்று விரிட்டிஷார் கூறித் தாமே ஆண்டு வருகின்றனர். இந்தியாவின் நிலைமை ஒருபுறம் இருக்க. இதைப்போல இன்னும் சில குடியேற்ற நாடுகளும் தாய் நாட்டின் நேரான அதிகாரத்திலேயே இருந்து வருகின்றன. உதாரணமாக, ஜிப்ரால்டர், மடமாஸ்கர் முதலிய நாடுகளைக் கூறலாம். இப்பொழுது பூமியின் விஸ்தீரணத்தில் ஐந்தில் இரண்டு பாகம்

குடியேற்ற நாடுகளேயாகும். குடியேற்ற நாடுகளைப் பரிபாலிக்கும் விதம் அரசியல் தத்துவத்தில் ஒரு முக்கிய அம்சம் ஆய்விட்டது. குடியேற்ற நாடுகளைப் பெற்றிருக்கும் அரசுகளில் கிரேட் பிரிட்டனே மிகவும் முக்கியமானது.

ஓர் அரசாங்கத்தார் வேறு நாடுகளைத் தமது ஸாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொள்வதற்கு மூன்று வழிகள் உண்டு. (1) முதலாவது, யுத்தத்தில் ஜெயம் பெறுவதால், தோற்றுப்போன தேசத்தைத் தமது இராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்வது. இதற்கு உதாரணமாக இந்தியாவைக் கூறலாம். முதலில் வர்த்தகம் செய்யும் உத்தேசத்துடன் வந்த இங்கிலீஷ்காரர்கள் படிப்படியாகப் பரவிக் கடைசியில் பழைய மொகலாய அரசர்களையும், ஹிந்து மன்னர்களையும் தோற்கடித்து இந்தியாவை சுவாதீனப்படுத்திக் கொண்டனர். (2) பிறருடைய ஆதீனத்தில் இருக்கும் ஒரு தேசத்தை தானமாகப் பெறுவது இரண்டாவது வழியாகும். கனடா தேசம் முதலில் பிரெஞ்சு தேசத்தாரின் ஆதீனத்தில் இருந்தது. அது ஒரு யுத்தத்திற்கு பிறகு இங்கிலீஷ்காரருக்கு அளிக்கப்பட்டு விட்டது. அங்ஙனமே பம்பாய் நகரத்தை இங்கிலாந்தின் அரசர் ஒருவர் போர்ச்சுகீஸியரிடமிருந்து விவாக சீதனமாகப் பெற்றார். அதே மாதிரி யுத்தத்தில் தோற்றுப்போகும் அரசு தன் கீழ் உள்ள ஆதீன தேசங்களைத் தன்னை வெற்றிகொண்ட அரசுக்கு அளித்து விடலாம். அல்லது தன் கீழ் உள்ள தேசத்தை வேறு அரசுக்கு விற்று விடலாம். (3) அநாகரிகமான ஜனங்கள் வசிக்கும் நாடுகளில் ஒரு தேசத்தார் குடியேறி அதை வியாபித்துக் கொண்டு கடைசியில் அதைத் தமது இராஜ்ஜியமாகச் செய்துகொண்டு விடக்கூடும்.

ஆஸ்திரேலியாவில் முதன்முதலாக இங்கிலீஷ்காரர் குடியேறி இவ்வாறு அதை அபகரித்துக் கொண்டனர். அங்கிருந்த பூர்விகக் குடிகள் நிரந்தரமாய் ஓரிடத்திலேயே இருந்து வாழாமலும், ஊரூராகத் திரிந்துகொண்டுமிருந்தமையால், அன்னியர் அவர்களை நிரம்பவும்சுலபத்தில்அடக்கி தேசத்தைத் தமது சுவாதீனப்படுத்திக் கொண்டனர். இவ்விதம் அநாகரிக ஜனங்கள் வாழ்ந்துவந்த தேசங்களில் நாகரிகமடைந்த ஜாதியார் குடியேறி அத்தேசங்களை ஆளத் தொடங்குவது குற்றமாகாது என்று இங்கிலீஷ்காரரும் அமெரிக்கரும் கூறுகிறார்கள்.

(2) பண்டைக்காலத்துக் குடியேற்ற நாடுகள்:—புராதன காலத்திலேயே கிரீஸ், உரோம் முதலிய அரசுகள் குடியேற்ற நாடுகளையும் ஆண்டுவந்தன. போ/2னீஷியர்கள் என்ற புராதன ஜாதியார் வர்த்தகத்தில் பெயர் பெற்றவர்கள். அவர்கள் ஆப்/2ரிக்காவுக்கு வடக்கேயுள்ள மத்திய தரைக் கடலோரமாக அநேக வர்த்தக ஸ்தலங்களை ஸ்தாபித்தனர். அவர்களிற் சிலர் கார்த்தேஜ் முதலான சில நகரங்களில் ஸ்திரமாகவும் குடியேறி யிருந்தனர். கிரீஸ் தேச சரித்திரத்தில் ஒரு தேசத்தார் வேறிடம் சென்று குடியேறும் வழக்கம் நன்றாகப் பரவி யிருந்ததென்பது தெரியவருகிறது. கிரீஸ் தேசத்தின்மீது அன்னியர் படையெடுத்து வந்த காரணத்தாலும், தேசத்திற்குள் சில சமயங்களில் அமைதியில்லாத காரணத்தாலும், சில கிரேக்கர்கள் தமது தாய்நாட்டை விட்டு வெளியேறி வேறிடம் சென்று வாழலாயினர். ஆனால் கிரேக்க குடியேற்ற நாடுகள் தற்காலத்துக் குடியேற்ற நாடுகளைப்போல இல்லை. அவைகள் தாய்நாட்டின் ஆதீனத்தில் உட்படாமல் சுதந்திரமான நாடுகளாகவே இருந்து வந்தன. உரோம் இராஜ்ஜியம்

பெருகிய காலத்திலும் புதிதாக ஜயிக்கப்பட்ட தேசங்களில் சில சேனுவீரர்கள் சென்று குடியேறி அங்கு வாழ்ந்துவந்தனர். ஆனால் அவர்களது முக்கிய நோக்கம் உரோம் இராஜ்ஜியத்தின் எல்லையைப் பாதுகாப்பதேயாகும்.

(3) பிரிட்டிஷ் ஏக சக்கராதிபத்யம்:—ஆனால் ஐரோப்பியர்கள் 16-வது நூற்றுண்டிலேதான் குடியேற்ற நாடுகளைத் தம் வசப்படுத்த எண்ணம் கொண்டார்கள். 16-ம் நூற்றுண்டிற்கு முன்புதான் அமெரிக்காக் கண்டம் கோலம்பஸ் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. அப்பொழுதே வாஸ்கோடிகாமா என்பவர் இந்தியாவுக்கு வர கடலில் ஒரு வழி கண்டுபிடித்தார். ஐரோப்பிய ஜனங்களுக்குப் புதிய உலகம் பெரும் தங்கச் சுரங்கமாகத் தோன்றிற்று. எவராலும் ஆக்கிரமிக்கப்படாத விஸ்தாரமான காட்டுப் பிரதேசங்களைக் கண்டு அவர்கள் பேரானந்தமடைந்தனர். ஐரோப்பாவிலுள்ள பல தேசத்தாரும் தம் தம் மன்னருக்குப் புதிய இராஜ்ஜியங்களைப் பிடித்துக் கொடுக்கவும், கிரிஸ்துவமதத்தைப் பரப்பவும் அமெரிக்கா ஒரு வசதியான இடம் என ஆதியில் எண்ணினர். அங்ஙனமே இந்தியா முதலான கிழக்கு நாடுகளுடன் இலாபகரமாக வியாபாரம் செய்ய வேண்டுமென்ற ஆசையும் அவர்களுக்குத் தோன்றியது. முதலாக ஸ்பெயின் தேசத்தவரும் போர்ச்சுகீசியரும் தைரியமாக முன் வந்தனர். ஸ்பெயின் தேசத்தார் மேற்கு தேசமாகிய அமெரிக்காவைத் தங்கள் பாகமாகவும், போர்ச்சுகீசியர் கிழக்கு தேசங்களைத் தமது பாகமாகவும் பிரித்துக் கொண்டனர். கிரிஸ்துவ மத குருவான போப் என்பவர் உலகம் முழுதையும் ஸ்பெயின் தேசத்திற்குப் பாதியும், போர்ச்சுகல் தேசத்

திற்குப் பாதியுமாகப் பிரித்துக் கொடுத்துவிட்டார். தான் கடவுளுடைய இகலோகப் பிரதிநிதியென்று எண்ணிக் கொண்டே அவர் அவ்விதம் செய்தார். ஆனால் அவரது ஆக்ஞையை எவரும் மதிக்கவில்லை. தைரியமாக முன்சென்றவர்கள் கடைசியில் பின்னுக்குத் தள்ளப்பட்டுப்போயினர். ஸ்பெயின் தேசத்தினர் தமக்குட்பட்ட குடியேற்ற நாடுகளை நிரம்பவும் கொடுமையாக நடத்தி வந்தமையால் ஸ்பெயின் சாம்ராஜ்யம் சீக்கிரத்திலேயே சீர்குலைந்து போக நேர்ந்தது. ஸ்பெயின் தேசத்தினரைப் பின்பற்றி இங்கிலீஷ்காரரும் பி/ரெஞ்சுக்காரரும் அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் உறவாடத் தொடங்கினார்கள். இங்கிலந்தில் மதக்கொடுமையைப் பொறுக்கலாற்றாத சில தைரியசாலிகள் தாய்நாட்டை விட்டுப் புறப்பட்டு அமெரிக்காவில் சென்று குடியேறியதைப்பற்றி முன்பே கூறியுள்ளோம். அங்கு காடுகளை வெட்டியும் நதிகளைக் கடந்தும் அவர்கள் சிரமப்பட்டு வேலைசெய்தே தேசத்தைத் தங்கள் ஆதீனமாக்கிக் கொண்டனர். ஆனால் இங்கிலந்தில் உள்ள அரசாங்கத்தார் முதலில் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. அமெரிக்காவில் தாம் ஒரு பெருத்த இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கலாம் என்ற எண்ணமும் அவர்களுக்கு உண்டாகவில்லை. ஆனால் பி/ரெஞ்சு அரசாங்கத்தாரோ முதலிலிருந்தே இராஜ்ஜியம் ஸ்தாபிப்பதிலேயே கண்ணாயிருந்தனர். இந்தியாவிலும் அமெரிக்காவிலும் அவர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த பகீரதப் பிரயத்தனம் செய்தனர். ஆனால் கடைசியில் அவர்கள் எல்லாவற்றையும் அதிர்ஷ்டசாலியான இங்கிலந்தின் வசம் ஒப்புவிக்க நேர்ந்தது.

வட அமெரிக்காவில் குடியேறிய இங்கிலீஷ்காரர் சிறுகச் சிறுக கிழக்குபாகம் முழுதையும் ஆக்கிரமித்துக் கொண்டனர். அவர்கள் அப்பொழுது இங்கிலந்தின் ஆட்சியிலேயே இருந்துவந்தனர். ஆனால் எவ்வளவோ தூரத்திற்கப்பால் இருந்த இங்கிலீஷ் துரைத்தனத்தார் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யாதிருந்தாலும், பளுவான வரியை மாத்திரம் விதித்துவந்தனர். ஏனெனில் தமக்கு இடைவிடாத வருமானத்தை யளித்துக் கொண்டிருக்க வேண்டிய பொக்கிஷமாகவே அவர்கள் அமெரிக்காவை மதித்துவந்தனர். அமெரிக்காவில் குடியேறிய இங்கிலீஷ்காரர்கள் கடைசியில் தமது தாய்நாடாகிய இங்கிலந்துடன் போர் புரிந்து கத்திமுனையால் வெற்றிபெற்று தமது நாட்டிற்கு சுதந்திரத்தை ஏற்படுத்திக்கொண்டு, தங்களுக்கெனத் தனியான பிரஜாதிபத்திய முறையையும் அமைத்துக்கொண்டனர். இப்பொழுது உலகிற்கெல்லாம் முதன் பெற்று நிற்பதான அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒருகாலத்தில் இங்கிலீஷ் சாம்ராஜ்யத்திலேயே அடங்கியிருந்தன. தக்க வயது வந்தவுடன் தனது தாய்நாட்டை விலக்கிவிட்டு அமெரிக்கா அதைக்காட்டிலும் அதிகமான கௌரவத்தையும் புகழையும் பெற்றுவிட்டது. அமெரிக்காவை இழந்த பின் இங்கிலந்து ஒரு விஷயத்தை உணர்ந்தது. அதாவது தனக்குட் பட்டிருக்கும் கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிக்கா முதலிய தேசங்களுக்கும் தான் கூடியவரையில் சுதந்திரம் அளித்துவிட வேண்டியது அவசியம் என இங்கிலந்து தெரிந்துகொண்டது. ஆனாலும், அதற்குப்பின் வெகுகாலம் வரையிலும் கனடா முதலிய தேசங்கள் சுதந்திரத்தைப் பெறவில்லை. அவைகள் இங்கிலந்தின் நேரான ஆட்சியிலேயே இருந்துவந்தன. பத்தொன்பதாம் நூற்-

ற்றாண்டின் இறுதியில், இனியும் குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுக்காமலிருப்பது அபாயகரமாகும் என அனைவரும் உணர்ந்தனர். தாய்நாட்டின் வேலையெல்லாம் தனது ஆதீனத்திற்குள்பட்ட நாட்டினருக்கு இராஜீயப் பயிற்சி செய்விப்பதே. இராஜீய அறிவு அவர்களுக்கு ஏற்பட்டதும் அவர்களைச் சுயாதீனர்களாக்க வேண்டியதே நியாயமான காரியம். அதன்படியே கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்ரிக்கா முதலிய நாடுகள் சுயாதீனம்பெற்றன; பெயருக்கு மாத்திரம் அவை இங்கிலந்தின் அரசரது ஆட்சிக்குட்பட்டிருக்கின்றனவேயன்றி, உண்மையில் சர்வ சுவாதீனமும் பெற்றிருக்கின்றன.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ள பல குடியேற்ற நாடுகளிலும் வழங்கிவரும் அரசியல் முறையை இனி கவனிப்போம். பொதுவாக, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது, சுயாதீனமே பெறுமல் முற்றிலும் பராதீனமாக இருக்கும் நாடுகள்; இரண்டாவது, சிறிதளவு சுயாட்சியைப் பெற்றவைகள்; கடைசியாக பூர்ணமான சுயாட்சியைப் பெற்றவைகள். முற்றிலும் பராதீனமான நாடுகளில் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் ஆங்கிலேய துரைத்தனத்தாராலேயே நியமிக்கப்படுகின்றனர். ஜிப்ரால்டர், பிஜித் தீவுகள், ஹாங்காங், ஸியராலியோன், ஹாண்டுராஸ், ஸெயின்ட் ஹெலினு முதலியவை இந்த வகையையே சேர்ந்தவை. ஜிப்ரால்டர் என்பது மிகவும் முக்கியமான துறைமுகப் பட்டணமாதலால், அது இங்கிலீஷ்காரரால் பத்திரமாகப் பாதுகாக்கப் படுகிறது. இரண்டாவது வகையைச் சேர்ந்த தேசங்களில் ஜனங்களுக்குச் சிறிதளவு ஓட்டுரிமை [illegible]டுகிறது. ஆனால் அவர்களால் தேர்ந்தெடுக்கப்

படும் பிரதிநிதிகளுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. இந்தியா, இலங்கைத்தீவு, ஜமயிகா, மௌரீஷஸ், ஹாமா, பார்படாஸ், பிரிட்டிஷ் கயானா முதலிய தேசங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். மூன்றுவதாகப் பூர்ண சுய ஆட்சியைப்பெற்ற நாடுகளான கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, நியூஜிலாந்து, நியூபௌண்ட்லண்டு, முதலியவை. இங்கிலந்தின் பார்லிமென்டரி முறையையே மேற்கூறிய மூன்றுவது வகுப்பைச் சேர்ந்த நாடுகள் பின்பற்றியிருக்கின்றன. அவைகளின் ஆட்சியை மேல்பார்வை பார்த்துக்கொள்ளும் பொருட்டு ஒரு கவர்னர் ஜெனரலை இங்கிலந்தின் அரசர் நியமிக்கிறார். அந்த கவர்னர் ஜெனராலுக்கு இந்திய கவர்னர் ஜெனராலுக்கு இருப்பதைப் போன்ற சுயேச்சாதிகாரம் இல்லை.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விதம் இதுவரை உலகத்திலேயே நிகழ்ந்திராத புதுமையென முன்பு கூறினோம். உண்மையில், இங்கிலீஷ்காரரே இப்பொழுது உலகம் முழுதையும் ஆண்டு வருகின்றனர் என்று கூறுவது மிகையாகாது. பல கடல்களுக்கப்பால் தனித் தனியாயிருக்கின்ற பல தேசங்கள் ஓரே குடையின் கீழ் ஆளப்பட்டு வருவது அத்யாச்சரியகரமானதே. நவீன காலத்தில் ஏற்பட்டுள்ள தந்தி, தபால், ஆகாயக் கப்பல் முதலிய பல சாதனங்கள், தேசங்கள் ஒன்றுக்கொன்று மிக சமீபத்தில் இருப்பனபோலச் செய்துவிட்டன. பண்டைக்காலத்தில் ஏகசக்ராதிபத்தியத்தை ஸ்தாபிப்பதற்குப் பெரும் தடையாயிருந்த விஷயம் இப்பொழுது மேற்கூறிய சாதனங்களால் நீக்கப்பட்டுப் போயிற்று. இத்தகைய சர்வ வியாபியான பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை இதே நிலைமையில் நிலை நிறுத்துவதற்கு வேண்டிய வழிகளைப் பலர் பத்

தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் ஆராயத் தொடங்கினர். ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யம் முழுவதற்கும் பொதுவான ஒரு பார்லிமென்டை ஸ்தாபிக்க வேண்டுமெனவும், பொதுவான வரிகளை விதிக்க வேண்டுமெனவும் ஒருசாரார் கூறினர். ஆனால் அந்தக் கொள்கையைக் குடியேற்ற நாடுகள் ஒப்புக் கொள்ளவில்லை. சுயாதீனமுடைய பல தனி தேசங்கள் ஒற்றுமையாகச் சேர்ந்த ஒரு தொகுதியே ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யமென இப்பொழுது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஒன்றுகச் சேர்த்துக்கொண் டிருப்பதற்கு அரசரே பெரிய உதவியா யிருக்கிறுரென்று முன்பு கூறினேம். ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யம் முழுதையும் ஒரே சக்கரவர்த்தி பரிபாலித்து வருகிறுர். இரண்டாவதாக, குடியேற்ற நாடுகளின் சேனையும் கப்பற்படையும் இங்கிலந்தின் சேனை, கப்பற்படை முதலியவற்றைப் போலவே அதேவிதமாய்ப் பயிற்சி செய்விக்கப் படுகின்றன; பொதுவான அபாயம் வரும்பொழுது எல்லா சேனைகளும் ஒன்றுசேர்ந்து யுத்தம் செய்வதற்கு இது அநுகூலமா யிருக்கிறது. சாம்ராஜ்யத்தில் ஏதாவதொரு பாகத்திற்கு மட்டும் அபாயம் நேர்ந்தாலும், மற்ற குடியேற்ற நாடுகளும் அதற்கு உதவிசெய்யும். மூன்றுவதாக, வருஷந்தோறும் குடியேற்ற நாட்டு மந்திரிகள் ப்ரிட்டிஷ் மந்திரிகளுடன் கலந்து யோசித்துப்பல பொதுவான விஷயங்களைப் பற்றி ஒரே மாதிரியான முடிவுக்கு வருகின்றனர். இவ்வாறு ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யமே ஓர் ஐக்கிய அரசாங்கம்போ லிருந்து வருகிறது. மேலும் சமீபகாலத்தில் அமைக்கப்பட்ட சர்வதேச மகாசபையில் உலகத்தின் சகல தேசங்களும் சம அந்தஸ்துடன் ஒன்றுபட்டுழைத்து வருகின்றன. அச்சபை ஸ்தாபிக்கப்படு

வதற்கு முன்பே, விரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒரு 'குட்டி சர்வதேச சபை'யாக இருந்து வந்தது. இப்பொழுது விரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் எவ்விதமான நிபந்தனைக்கும் கட்டுப்படாத சுதந்திர நாடுகளாக இருந்துகொண்டு, சாம்ராஜ்யத்திலும் அடங்கி யிருப்பதால் உண்டாகும் நன்மைகளையும் பெற்று வருகின்றன. இவ்வளவு அழகாய் அமைக்கப்பட்டுள்ள விரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா மட்டும் ஒரு பெருத்த களங்கமாக இருந்து வருகிறது. இந்தியாவிற்கு, மற்ற குடியேற்ற நாடுகளுக் களிக்கப்பட்டுள்ள அந்தஸ்து இன்னும் அளிக்கப்படவில்லை. குடியேற்ற நாடுகளும் இந்தியாவும் சர்வதேச மகாசபையில் சம அந்தஸ்தான பதவிகளை வகிக்கின்றன. ஆனாலும், இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை.

(4) இதர ஏகசக்கராதிபத்யங்கள் :—பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களும் தங்களுக்குச் சொந்தமான சில அன்னிய நாடுகளைப் பரிபாலித்து வருகின்றன; பிரான்ஸ் தேசத்தின் ஆதிக்கத்தில் மொத்தத்தில் 4,000,000 சதுரமைல் விஸ்தீரணம் உள்ள பிரதேசம் அடங்கி யிருக்கிறது. அப் பிரதேசத்தில் ஏறக்குறைய 44,600,000 ஜனங்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் விரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் போல் மற்றவை அவ்வளவு பெரிதாய் இல்லை. 'எல்லா மனிதரும் சமமானவர்களே' என்ற கொள்கையைக் குன்றின்மேல் விளக்கென பகிரங்கப்படுத்திக் கொண்டிருக்கும் அமெரிக்கர்களும் பிரெஞ்சுக்காரரும் வேறு தேசத்தினரைத் தம்முடைய ஆதிக்கத்தில் அடக்கி வைத்துக்கொண் டிருப்பதன் அநீதியை உணராமலில்லை. ஆனால் அவர்களது பேராசைப் பேய் ஷி அழகான கொள்கைகளையும் சித்தாந்தங்களையும்

வெறும் எட்டுச் சுரைக்காயாகச் செய்துவிடுகிற தென்பது பிரத்தியக்ஷமான விஷயம். ஒருவன் மேலான தத்துவங்களைக் கூறுவது எளிது. அதை அநுஷ்டித்துக் காட்டுவது நிரம்பவும் பிரயாசையான காரியமல்லவா. ஆனால் வல்லரசுகள் தமது ஆதீனத்திலுள்ள மற்ற தேசத்தினரைத் தம்முடன் சம பாத்தியதை யுடையவர்களாகவாவது எண்ணி நடந்து வந்தால் அது பேருபகாரமாகும்.

---

16 - வது அதிகாரம்

ஸ்தல சுய ஆட்சி.

(1) மத்திய துரைத்தனமும் ஸ்தல ஸ்தாபனங்களும்:— முன்னதிகாரங்களில் ஓர் அரசாங்கத்தினுடைய மூன்று பாகங்களான சட்டசபை, நிர்வாக சபை, நீதிஸ்தலம் ஆகியவைகளைப் பற்றியும், ஒவ்வொன்றின் அமைப்பு, கடமை முதலியவற்றைப் பற்றியும் விரிவாக ஆராய்ந்தோம். அம்மூன்றுபிரிவுகளையும்கொண்ட அரசை மத்தியஅரசு என்று குறிப்பது வழக்கம். ஒரு தேசத்தின் எல்லா வியவகாரங்களையும் மத்திய அரசாங்கத்தாரே நிர்வாகம் செய்ய முடியாதாகையால், அவர்களுக்கு உதவியாகப் பல சிறிய சிறிய அதிகாரிகளும் இருந்து வருகின்றனர். ஒவ்வொரு நகரத்தின் சுகாதாரத்தை கவனிப்பதற்கோ, அல்லது, அங்கு பாடசாலைகளை ஏற்படுத்தி நிர்வகிக்கவோ மத்திய துரைத்தனத்தாரை நாம் எதிர்பார்ப்பது சாத்தியமானதல்ல. அவர்களின் கீழ் ஏராளமான நகரங்கள் நம் தேசத்தில் இருக்கின்றன; ஒவ்வொரு [illegible]கின் விஷயங்களை அந்த நகரத்திலுள்ளவர்களே கவனித்துக் கொள்ளவேண்டும். அதற்காகவே நமது நகரங்களி லெல்லாம் முனிசி

பாலிடிகளும், ஜில்லா போர்டுகளும், தாலூக்கா போர்டு களும் யூனியன்களும், கிராமப் பஞ்சாயத்துக்களும், அமைக்கப்பட் டிருக்கின்றன. அவைகளின் நிர்வாகத் தையே ஸ்தல சுய ஆட்சி இலாகா எனக்கூறுவது வழக்கம். அதாவது அந்தந்த ஸ்தலத்திலிருப்பவர் சுயமாக ஆட்சியை நடத்துவது. இவ்வாறு ஏற்படும் ஸ்தல சுய ஆட்சி ஸ்தாப னங்கள் யாவும் மத்திய துரைத்தனத்திற் குட்பட் டவையே. மத்திய துரைத்தனத்தி னிடமிருந்தே அவை தமது அதிகாரத்தைப் பெறுகின்றன. மத்திய துரைத் தனத்தார் இஷ்டப்பட்டால் எந்த முனிசிபாலிடியையும் பஞ்சாயத்தையும் எடுத்து விடலாம். மேலும் மத்திய துரைத்தனத்தார் செய்யும் வேலையும் ஸ்தல சுயாட்சி ஸ்தா பனங்களான தாலூகாபோர்டு,முனிசிபாலிடி முதலியவை செய்யும் காரியங்களும் வெவ்வேறானவை. தேசம் முழுதை யும் பாதிக்கக் கூடிய விஷயங்களையே மத்திய துரைத் தனத்தார் கவனித்து வருகின்றனர். உதாரணமாக, எதிரி களைத் தடுப்பது, சட்டமியற்றுவது இவைகள் முனிசிபா லிடிகளால் செய்யக்கூடிய விஷயங்களாகா. ஆனால் நகரத் தில் ரஸ்தாக்களை உண்டாக்கி, அடிக்கடி செப்பனிடுவது, விளக்குப் போடுவது, சுகாதாரத்தை விருத்தி செய்வது, குழாய்மூலம் தண்ணீர்விடுவது, சாக்கடைகளை சுத்தி செய் வது, சந்தை கடை முதலியவைகளை மேல்பார்வை பார்ப் பது முதலான சில்லரை வேலைகளை நகர சபைகளே கவ னித்துக் கொள்வது நலமானது. சில விஷயங்களை மத்திய துரைத்தனம் ஸ்தல ஸ்தாபனங்கள் இரண்டும் சேர்ந்து நிர்வகிப்பதும் உண்டு. உதாரணமாக, மக்களுக்குக் கல்வி யளிப்பது அரசாங்கத்தினுடைய வேலையே யானாலும், ஒவ்வொரு கிராமத்திலும் சமய சந்தர்ப்பத்திற் கேற்றபடி

யும் மற்ற சௌகரியா சௌகரியங்களைக் கருதியும் பாடசாலைகளை ஸ்தாபிப்பதற்கு முனிசிபாலிடியாரே தக்க அதிகாரிகள். ஆதலால் கல்விப்பரப்பை முனிசிபாலிடிகளே கவனித்து வருவதும் அதற்கு ஐந்தய துரைத்தனத்தார் ஒரு பாகம் பண உதவி செய்வதும் வழக்கமாய் இருந்து வருகிறது.

(2) ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகம்:—ஸ்தல சுய ஆட்சி சரியாக நடைபெறும் பொருட்டு தேசத்தைப் பல சிறுபாகங்களாகப் பிரிப்பது அவசியமாகும். சென்னை, கல்கத்தா, பம்பாய் முதலிய பிரதான நகரங்களிலுள்ள முனிசிபாலிடிகளுக்கு கார்ப்போரேஷன் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற நகரஙகளி லுள்ளவை முனிசிபாலிடிகள் எனப்படுகின்றன. அவைகளைத் தவிர, தேசத்தைப் பல ஜில்லாக்களாகவும் தாலூக்காக்க ளாகவும், கிராமத் தொகுதிக ளாகவும் பிரித்து முறையே ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, பஞ்சாயத்து ஆகியவைகளைஏற்படுத்தியிருக்கின்றனர். ஜில்லா முழுதுக்கும் சம்பந்தப்படும் விஷயங்களை ஜில்லா போர்டும் ஒரு தாலூகாவிற்கு மட்டும் சம்பந்தமான விஷங்களைத் தாலூகா போர்டும், அப்படியே கிராம சம்பந்தமான நிர்வாகத்தைப் பஞ்சாயத்தாரும் கவனித்து வருகின்றனர். ஒரு சிறிய பாடசாலையை ஏற்படுத்துவது பஞ்சாயத்தாராலேயே செய்துவிடக் கூடிய காரியமாகும்; வாய்க்கால்கள் வெட்டுவது, சத்திரம் கட்டுவது இவைபோன்ற விஷயங்களைத் தாலூகா போர்டாரும், ஆஸ்பத்திரி, பல தாலூகாக்களின் வழியாய்ச் செல்லும் ரஸ்தாக்கள், ஆற்றுப் பாலங்கள் முதலிய பெரிய காரியங்களை ஜில்லா போர்டாரும் கவனிக்கவேண்டும். இந்தியாவைப் போன்ற புராதன தேசங்களில் பஞ்சாயத்துக்கள்

அமைப்பதற் கேற்ற கிராமங்கள் இயற்கையாகவே யமைந்திருக்கின்றன. தொன்று தொட்டு கிராமங்களில் பல குடும்பங்கள் சமரஸமாக வாழ்ந்து வந்திருக்கின்றன. நவீன நாகரிக விருத்தியால் பல புதிய நகரங்கள் இப்பொழுது உற்பத்தியாகி வந்திருந்தாலும், இந்தியாவின் உயிர் அதன் கிராமங்களிலேயே இருப்பதாய்க் கூறலாம். ஆனால் இங்கிலீஷ்காரர் சென்று புதிதாகக் குடியேறிய அமெரிக்கா போன்ற நாடுகளில் இத்தகைய இயற்கையான புராதன கிராமங்களும் தாலூக்காக்களும் இல்லை. இராஜ்ய பரிபாலனத்தின் பொருட்டு அத்தகைய சிறு பிரதேசங்கள் பின்னரே நிர்மாணிக்கப்பட் டிருக்கவேண்டும். புராதன கிராமங்களில் பரம்பரையாக இருந்துவரும் அநுஷ்டானங்களுக்கு ஒரு தனியான கௌரவம் இருப்பது சகஜமே. மேலும் பழைய காலத்தில் ஏற்பட்ட கிராமங்கள் தேகாரோக்கியத்திற்கு அநுகூலமான இடங்களிலும் நதிகளின் ஓரங்களிலும் காணப்படலாம். புதிய கிராமங்களை நிர்மாணித்தால் அவ்வித இயற்கையழகும் சுகவசதிகளும் அமைவது அரிது. இதைக்கொண்டே ஆங்கிலத்தில் 'கடவுள் கிராமத்தை சிருஷ்டித்தார்; மனிதன் நகரங்களைக் கட்டினன்' என்று ஒரு பழமொழி சொல்லப்படுகிறது.

ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களை அமைப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே முனிசிபல் நிர்வாகத்தை நடத்துவது; மற்றொன்று மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட சில உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தை நடத்துவது. முதலாவது முறையில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் சில பொதுவான விதிகளை மட்டும் மீருமல் நடந்துகொண்டு மற்ற உள் விஷயங்களில் சுயாதீனமாய்

அதிகாரம் செலுத்தி வருவார்கள். இம்முறையே அமெரிக்காவிலும் இங்கிலந்திலும் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இரண்டாவது முறையின்படி ஸ்தல ஸ்தாபனங்கள் மத்திய துரைத்தனத்தின் ஆளுகைக் குட்பட்டு அவர்களுடைய கருவிகளாகவே இருந்து வருகின்றன. பி/2ரான்ஸ் தேசத்தில் இம்முறையே பின்பற்றப்படுகிறது. இந்தியாவிலோ இவ்விரண்டு முறைகளும் கலந்துள்ளதாகக் கூறலாம். முனிசிபாலிடிகளுக்கு பொதுத் தேர்தல் நடப்பது உண்மையே யாயினும், சில அங்கத்தினர்களை அரசாங்கத்தாரே நியமனம் செய்கின்றனர். சில இடங்களில் ஜில்லா போர்டுகளின் தலைவரையும் துரைத்தனத்தாரே நியமனம் செய்து வந்தனர். இங்ஙனம் ஸ்தல ஸ்தாபனங்களின் விஷயத்தில் அரசாங்கத்தார் தலையிடுவது பிரஜைகளின் சுதந்திரத்தைக் குறைப்பது போன்றதே. எப்பொழுதும ஸ்தல ஸ்தாபனங்களில் இராஜீயக் கட்சிச் சண்டைகள் தோன்றவே கூடாது. எந்த இராஜீயக் கொள்கையை ஆதரித்த போதிலும், நகரத்தினுடைய சுகாதார விருத்தி, கல்வியபிவிருத்தி முதலான விஷயங்களில் அபிப்பிராய பேதமேற்படுவது கூடாது. கட்சிபேதங்களை அங்கும் கொண்டுவந்து புகுத்தி ஒருவர் செய்யும் நல்ல காரியத்தை மற்றவர் எதிர்த்து சூன்யமாகச் செய்துவிட்டால், நமது நகரங்கள் வசிக்க யோக்கிய மற்றதாய்ப் போய்விடும். மேலும் ஏதோ ஒரு இராஜீயக் கட்சியைச் சேர்ந்த மந்திரியோ நிர்வாக உத்தியோகஸ்தரோ தம்மை ஆதரிப்போர்களையே முனிசிபாலிடிகளிலும் லோகல் போர்டுகளிலும் நியமனம் செய்ய முற்படுவது கூடாது. அப்படிச் செய்தால் நியமனம் பெற்றவர்கள் எப்பொழுதும் அரசாங்கத்தாருக்கு சார்பாகவே இருக்க நேரிடும். அரசாங்கத்தாருக்கும் ஸ்தல

சுய ஆட்சி ஸ்தாபனங்களுக்கும் அடிக்கடி ஏற்படும் சச்சரவுகளில் அத்தகைய அங்கத்தினர் ஜனங்களுடைய கட்சியை எடுத்து விளக்குவது அரிதாய்விடும். ஷை ஊழல்களைத் தடுப்பதற்கு, ஸ்தல ஸ்தாபனங்கள் யாவற்றிற்கும் பொதுத் தேர்தல்களில் வெற்றிபெறும் பிரதிநிதிகளே அனுப்பப்பட வேண்டும். ஸ்தல சுய ஆட்சி இலாகாவை நிர்வகிப்பது, பின்னால் மத்திய அரசாங்கத்தை நிர்வகிப்பதற்கு ஒரு பயிற்சியாய் இருக்கும். அவை ஜனங்களுக்கும் இராஜீய அறிவையளிக்கும். இராஜீய அறிவு விருத்தியினால் ஜனங்கள் எல்லோரும் தம்தம் கடமைகள் இன்னின்னவென்று தெரிந்துகொண்டு அவைகளைச் சரிவரச் செய்து முடித்து கிராமங்களையும் நகரங்களையும் ஆரோக்கிய முள்ளதாகச் செய்வார்கள். தொலைதூரத்தி லுள்ளதான டெல்வியில் இருந்துகொண்டு நம் கண்ணிற் படாமல் நம்மை ஆண்டுவரும் மத்திய துரைத்தனத்தாரிடம் இருப்பதைவிட அதிகமான அக்கரையையும் கௌரவத்தையும் வெகு சமீபத்திலிருந்து நமது காரியங்களை நிர்வகித்து வரும் முனிசிபாலிடிகளிடமும் பஞ்சாயத்துக்களிடமும் காண்பிக்க வேண்டும். முனிசிபல் சபைகளும் ஜில்லா போர்டுகளும் சிறிய அரசாங்கமெனக் கூறலாம். ஷை சபைகளும் நகரத்தின் நலத்தை அதிகப்படுத்தும் பல தீர்மானங்களைச் செய்யலாம். வரவுசெலவு கணக்கையும் அவர்கள் வருஷந்தோறும் தயாரித்து வரவேண்டும். முனிசிபல் வேலையைச் செய்வதற்கு பல உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். முனிசிபல் நிர்வாகமும் ரெவினியூ, சுகாதாரம் மராமத்து, வடிகால் முதலிய பல இலாகாக்களாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது.

ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்கள் தமது காரியத்தைச் சரிவரச் செய்வதற்குப் பணம் அவசியமாதலால் வரி வசூல்செய்யும் உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் வரி, விளக்கு வரி, சுங்கவரி முதலான வழிகளால் வசூலிக்கப்படும் தொகை அவைகளையே சேருகிறது. அதைத் தவிர மத்திய துரைத்தனத்தார் அவைகளுக்கு அதிகப் படியான பண உதவியையும் செய்யலாம். முனிசிபாலிடிகளுக்கு இன்னொரு விதமாகவும் வருமானம் ஏற்பட இடமுண்டு. போக்குவரத்துக்காக உள்ள மோட்டார், டிராம், இரயில்வே ஆகியவைகளை வேறொருவருடைய கையில் விடாமல் தாமே வைத்துக் கொள்ளலாம். நகரத்திற்குத் தாமே சுத்தமான பால் விற்றுவரலாம். ஸ்தல சுயாட்சியை நிர்வகிப்பவர்களே ஜனங்களுக்கு அத்தியாவசியமான ஆரோக்கியத்தையும், சுத்த ஜலத்தையும், போக்குவரத்து வசதிகளையும் உதவுகிறவர்கள். ஜனங்களுடைய அன்பையும் ஆதரவையும் பெறுவதற்கு அவர்கள் முழுமனதுடன் உழைத்து வரவேண்டும். ஜனங்களுக்கு அவர்களே தாய் தந்தையர்போன்றவர்.

17-வது அதிகாரம்.

இராஜ்ய பரிபாலனம்.

(1) அரசாங்கத்தின் கடமைகள் யாவை ?:—அரசின் அமைப்பையும், அதனுடைய பல பாகங்களின் இலக்ஷணங்களையும் பற்றி இதுவரை எழுதி வந்தோம். இனி அரசாங்கத்தார் இராஜ்ய பரிபாலனம் செய்யவேண்டியது எங்ஙனமென்பதை கவனிப்போம். ஜனநாயக தத்துவமும் பொறுப்புள்ள ஆட்சியும் அவசியமானவை என்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால் சில நூற்றுண்டுகளுக்கு முன்னர் மன்னர்களோ பிரபுக்களோ செலுத்தி வந்த சுயேச்சாதிகாரத்தினுல் பெருந்துன்பத்தை யடைந்து வந்த ஜனங்கள் ஜனநாயக ஆட்சியொன்றே எல்லாக் குறைகளையும் நீக்கும் என எண்ணினுர்கள். ஆனுல், உண்மையில் அது பலிதமாகவில்லை. இராஜீய உலகிலும், பொருளாதார உலகிலும் முன்னிலும் இப்பொழுது அதிக துன்பங்களே இருந்து வருகின்றன. இன்னமும் பணக்காரருக்குப் பணமும் ஏழைகளுக்கு ஏழ்மையுமே அதிகரித்து வருகின்றன. பொது மக்களிடம் அதிருப்தி நிறைந்து நிற்கிறது. அப்படியானுல், ஜனநாயக ஆட்சி ஓரளவுக்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும், உலகின் குறைகள் நீங்காது போனுல், அவ்வாட்சி முறையிலும் ஏதோ தவறு இருப்பதாகவே நாம் கருதவேண்டி வருகிறது: அரசாங்கத்தார் பிரஜைகளைப் பரிபாலிக்கும் முறையில் என்னென்ன கோளாறுகள் இருக்கின்றன என்பதை நாம் அறிந்து, அதை நீக்க முயலவேண்டும். துரைத்தனத்தாருடைய ஆதிக்கம் எதுவரையில் செல்லக்கூடும் என்பதையும் அதன் வரம்புகளும் எல்லைகளும் எங்குள்ளன என்பதையும் நாமறிய வேண்டும்.

உதாரணமாய், இரயில்வே நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால், அதிலுள்ள குறைகள் நீங்குவதற்கு அரசாங்கத்தாரே அந்த நிர்வாகத்தை வகிக்க வேண்டுமெனச் சிலர் கூறுவர்; பழைய காலத்தில் பலரும் இக்காலத்தில் சிலரும் அக்கொள்கையைக் கண்டித்துத் தனியான கம்பெனிகளே இரயில்வே நிர்வாகத்தை நடத்த வேண்டுமெனக் கூறியிருக்கின்றனர். இப்படியே ஒரு சாரார் அரசாங்கத்தினுடைய கடமைகள் யாவையும் சொற்பமாக்கி விடுகின்றனர். பிறருடைய பலவந்தத்திலிருந்து பிரஜைகளைக் காப்பதொன்றே அரசின் கடமையெனவும், மற்ற விஷயங்களில் பிரஜைகள் சர்வ சுதந்திரத்தையும் பெற்றிருக்க வேண்டுமெனவும் அவர்கள் சொல்லுகின்றனர். அப்படியானால், பிரஜைகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் யாவும் அதிக்கிரமமானவைகளே; ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகளும், வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் பல விதிகளும் பிரஜைகளின் நலத்தைக் கெடுக்கும் பெரும் அல்லல்களே. அரசாங்கத்தின் கடமைகளெல்லாம், சேனை, போலீஸ், நீதிஸ்தலம், கிரிமனல் சட்டம் இவைகளுக்குள்ளேயே அடங்கிவிடுவதாகவும், தபாலாபீஸ், இரயில்வே, வைத்தியசாலை முதலியவற்றிற்கும் அரசாங்கத்தாருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதும் அவர்களுடைய சித்தாந்தம். பிரஜைகள் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளாமல் மட்டும் அரசாங்கத்தார் கவனித்துக் கொண்டால், மற்ற விஷயங்களை பிரஜைகளே சிறப்பாக நடத்திக் கொள்வார்கள் என்றும், அதன் மூலமே தேசக்ஷேமம் பெருகும் எனவும் அக்காலத்தவர் எண்ணி வந்தனர். இவ்வாறு அரசாங்கத்தை வெறும் போலீஸ் சேவகராகவும் இராணுவ சிப்பாயிகளாகவும் மட்டும் செய்துவிடும் கொள்கையை இக்காலத்

தில் எவரும் ஆதரிக்கமாட்டார்களானாலும், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இக்கொள்கையே வெகுவாகப் பரவியிருந்தது. இதை யநுசரித்தே இராஜ்ய பரிபாலனம் நடந்து வந்தது. எனவே, நாம் ஷை கொள்கையை ஓரளவு ஆராய்ந்து பார்ப்போம். இக்கொள்கையை யாதரிப்பவர்கள் மூன்று விதங்களில் தமது சித்தாந்தத்தை ஸ்தாபிக்கின்றனர். முதலாக, பிரஜைகளுடைய சுதந்திரத்தில் அவசியமான அளவிற்கு மேலாக அரசாங்கத்தார் தலையிடுவது நியாயமாகாது. இரண்டாவது, பிரஜைகளைக் கட்டுப்படுத்தினால் அவர்கள் தமது விருப்பப்படியும் சாமர்த்தியப்படியும் வியாபாரம் செய்ய முடியாமல் போவதனால் இலாபத்தை இழந்துவிடுகிறார்கள். மூன்றாவது, பிரஜைகள் தம் தம் திறனையொட்டியும் புத்தியை யொட்டியும் வாழ்க்கைப் போரை நடத்தி, வெற்றியையும் தோல்வியையும் அடைய வேண்டுமே யன்றித் திறனில்லாதவரை அரசாங்கத்தார் தாங்கி நிற்பது பட்சபாதமே யாகும். ஆகிய இம்மூன்று வாதங்களையும் ஆராய்ந்து பார்த்து [illegible] களை எடுத்துக் காட்டுவோம்.

(1) பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சில நிபுணர்கள் தனி மனிதருடைய அந்தரங்க விஷயங்களிலும் அரசாங்கத்தார் நுழைவதைக் கண்டு வெறுப்படைந்து பிரஜைகளுடைய சர்வ சுதந்திரத்தையே வற்புறுத்திக் கூறலாயினர். மனிதனுடைய சுதந்திரமே நமது முடிவான நோக்கமாய் இருக்க வேண்டுமென்றி, அந்த சுதந்திரத்திற்கு பங்கம் விளைவித்தாவது வேறொரு பலனை அடைவது யுக்தமாகாது எனவும் 'ஒருவருடைய சுதந்திரத்தில் மற்றவர் தலையிடுவதை யகற்றிவிடுவதே' அரசாங்கத்தின் வேலையெனவும்

அவர்கள் சொல்லி வந்தனர். கல்வியைப் பரப்புவதும் ஏழைகளுக் குதவுவதும்கூட அரசாங்கத்தார் செய்யத்தக்க காரியங்களல்ல வென்பது அவர்களது அபிப்பிராயம். ஜன நாயக தத்துவமென்பது பிரஜைகள் யாவரும் கூடியவரை யில் அதிகமான சுயேச்சையைப் பெற்றிருப்பதே என அக்காலத்து இராஜீய விற்பன்னர்கள் நம்பிவந்தனர். இத் தகைய நம்பிக்கைகள் யாவும் இக்காலத்தில் உதறி எறி யப்பட்டுப்போயின. ஏழை மக்களைப் பாதுகாப்பதும், அநா தைக் குழந்தைகளை வளர்ப்பதும், கல்வியைப் பரப்புவதும் அரசாங்கத்தாரால் நியாயமாகச் செய்யப்பட வேண்டிய காரியங்களே என்பதை எல்லோரும் அங்கீகரிக்கின்றனர்.

(2) ஷை இராஜீய விற்பன்னர்கள் பொருளாதாரத் துறையிலும் பிரஜைகளுக்கு எவ்விதமான கட்டுப்பாடும் இருக்கக் கூடாதென்றும் கூறிவந்தனர். மனிதர் தமக்குத் தேவையான பொருள்களைத் தமக்கு யுக்தமான வழியில் உற்பத்திசெய்து தமது விருப்பத்தின்படி விலைவைத்து விற்கும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும்; விற்பவர் களும் வாங்குவோரும் சாமான்களுடைய குணத்திற்குத் தக்கபடி விலையை ஏற்றுவதையோ குறைப்பதையோ தமக் குத் தாமே செய்துகொள்ள வேண்டுமேயன்றி அரசாங் கத்தார் நடுவில் தலையிட்டு சாமான்களின் விலையையோ, உற் பத்தி முறையையோ கட்டுப்படுத்துவது பலவந்தம் போல வே யாகும் என்பது ஷை விற்பன்னர்களின் எண்ணம். மனிதர்கள் ஒவ்வொருவரும் தம்முடைய நலத்தையே அதிகப்படுத்திக் கொள்ள ஆசைப்படுவார்கள். சாமான்களை உற்பத்திசெய்கிறவன் இலாபத்தை யடையவும், சாமான் களை வாங்குவோன் மலிவாக வாங்கவுமே கருதுவார்கள். இது அவ்விருவர்களுக்குள் நடக்கவேண்டிய போராட்

டம்; அவர்கள் மேலேறிக் கீழிறங்கி முடிவில் சமரஸத்திற்கு வந்துவிடுவார்கள். இதில் அரசாங்கம் ஏன் தலையிடவேண்டும்? ஓர் அருமையான வஸ்துவை அவசரமாகப் பெறவேண்டுமானால், நாம் அதிக விலை கொடுத்தே யாகவேண்டும்; அந்த வஸ்துவினுடைய விலையை, சமய சந்தர்ப்பங்களை கவனிக்காமல் அரசாங்கத்தார் முன்பே கட்டுப்படுத்துவது உசிதமாகாது. தமது பணத்தை உபயோகிப்பதிலும், தமது கூரிய புத்தியைப் பயன்படுத்துவதிலும் மனிதருக்கு சுதந்திரம் இருந்தால் அது எல்லோருக்கும் நன்மை பயக்கும்; ஒவ்வொருவருக்கும் திருப்தியையும் தரும். தமக்கு எந்தத் தொழிலில் அதிக லாபம் கிடைக்குமோ அதைச் செய்யவே முதலாளிகள் ஆசைப்படுவார்கள்; தமக்கு அதிகமான கூலி கிடைக்கக்கூடிய வேலைக்கே தொழிலாளிகள் செல்வார்கள். சாமான்களின் விலையைக் கட்டுப்படுத்தாமல் தனக்குத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளட்டுமென்று விட்டு விட்டால் விற்பவர்களும் வாங்குகிறவர்களும் தாம் அறியாமலே ஒரு நியாயமான விலையைத் தீர்மானித்துக்கொண்டு விடுவார்கள். உதாரணமாக, 1000 நாற்காலிகள் ஒவ்வொன்று இரண்டு ரூபாய் விலைக்கு விற்கத் தயாராயிருப்பதாகவும், அதை வாங்குவதற்கு 2000 மனிதர்கள் முன் வருவதாகவும் வைத்துக் கொள்வோம். தனது சாமான்களுக்கு அதிகத் தேவையிருப்பதை உத்தேசித்து கடைக்காரர் நாற்காலியின் விலையை மூன்று ரூபாயாய் உயர்த்திவிடலாம். ஆனால் இதற்குள் மற்ற கடைக்காரர்கள் சும்மா இராமல் புதிய நாற்காலிகளைச் செய்துகொண்டு போனால், கடைசியில் கடைகளில் 2000 பேர்களுக்குத் தேவையான 2000 நாற்காலிகளும் சேர்ந்துவிடும். உடனே மறுபடி விலை குறைக்கப்

பட்டு இரண்டு ரூபாயே ஆய்விடும். இப்படியே பல தேசங்களுக்குள் நடக்கும் வியாபாரத்திற்கும் ஏற்றுமதி இறக்குமதித் தீர்வை விதிக்காமலும், மற்ற கட்டுப்பாடுகளை ஏற்படுத்தாமலும் இருந்தால், உலகத்திற்கெல்லாம் அது நன்மையாக முடியும். இந்தியாவானது தனது செழுமையான நிலங்களில் தானியங்களைப் பயிர்செய்து மற்ற நாடுகளுக்கனுப்பலாம்; அமெரிக்கா முதலிய தேசங்கள் இரும்பு சாமான்களை உற்பத்திசெய்து நமது தேசத்திற்கு அனுப்பலாம். எங்கெந்த தேசத்தில் எங்கெந்தப் பொருள் இலாபகரமாய் உற்பத்தி செய்யப்படலாமோ அதை அங்கங்கே செய்துகொண்டு, மற்ற பொருள்களை வேறு நாட்டிலிருந்து தருவித்துக்கொள்ளலாம். இங்கிலந்து நெற்பயிர் விளைவிக்கவேண்டாம். இந்தியா நிலக்கரியைத் தோண்டவேண்டாம். இவ்வித ஏற்பாட்டை செய்துவிட்டால், உலகம் முழுதும் சமரஸமாகவும் ஒன்றுக்கொன்று உதவியாகவும் இருந்துவரும்; அதை விட்டு, விலையையும் கூலியையும் வேலை போக்கையும் அரசாங்கத்தார் தீர்மானிப்பதும், பணத்தின் வட்டி விகிதத்தை நிர்ணயிப்பதும், ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகளை விதிப்பதும், அதிக்கிரமமான செய்கைகளேயாகும் என்பது இந்த கொள்கையினரின் அபிப்பிராயம். அக்கொள்கையையே அரசாங்கத்தார் பின்பற்றி 19-ம் நூற்றாண்டில் பொருளாதாரத் துறையில் ஜனங்களுக்கு பூர்ணசுதந்திரம் அளித்து வந்தனர். ஆனால் அம்முறை வலியாரை எளியார் வருத்துவதிலும், பணக்காரர் ஏழைகளை ஏமாற்றுவதிலுமே போய் முடிந்தது. அக்கொள்கையினால் விளைந்த பல அநர்த்தங்களின் பயனாய் அது தள்ளுபடி செய்யப்பட்டுப் போயிற்று. இப்பொழுது பொருளாதாரத் துறையிலும் மற்றெல்லாத் துறைகளிலும்

அரசாங்கத்தார் பிரஜைகளைக் கட்டுப்படுத்தி அதன்மூலம் பொதுநலத்தை அதிகப்படுத்தி வருகின்றனர்.

(3) தகுதியுடையவர்களே மிஞ்சிநிற்பர் என்ற ஒரு கொள்கையைச் சிலர் ஆதரித்து வருகின்றனர். அதாவது வாழ்க்கை யென்பதே ஒரு போராட்டம்; அதில் வல்லமை யுடையவரும் அறிவுடையவருமே வெற்றியடைய முடியும்; திறனில்லாதவர் பின்னுக்குப் போகவேண்டியதே; இதுவே சிருஷ்டிக்கிரமம் எனச் சிலர் கூறுவர். ஆகவே, தேச ஜனங்கள் ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு தம் தம் வெற்றியையோ தோல்வியையோ தாமே அநுபவிக்க வேண்டுமேயன்றி, அரசாங்கத்தார் சிலருக்கு சாதகமாகவும் மற்றவருக்கு விரோதமாகவும் அதில் தலையிடுவது அதிக்கிரமச் செய்கையாகும் என்பது அவர்களது அபிப்பிராயமாகும். தன்னுடைய தீய ஒழுக்கத்தாலோ, வேறு தவறினாலோ, பலமழிந்து திறனற்றுப்போகும் தொழிலாளியையும், திடகாத்திரமாயுள்ள தொழிலாளியையும் ஒரே மாதிரியாக அரசாங்கத்தார் செய்துவிடுவது அநீதியேயாகும் என்பது அவர்களின் கூற்று. ஆனால் அக்கொள்கை சிறிதளவு உண்மையே யானாலும் அது மனிதரை மிருகமாகச் செய்துவிடுகிறது. மிருக உலகிலேதான், பலமுள்ளது பலமற்றதைத் தாக்குவதும் உண்பதும் நியதியாய் இருக்கிறது. மனிதன் விவேகமுடையவன், தயாளகுண முடையவன் என்பதற்கு அடையாளமென்ன? ஏழை விதவைகளும் ஏழைத் தொழிலாளிகளும் பிச்சையெடுக்கவும் அநாதைகளாய் நடுத்தெருவில் இறந்து நாறிக்கிடக்கவும் செய்து பணக்காரர் மேன்மேலும் பொருளைத் திரட்டிக்கொண்டே போகும்படி விடுப்பது தர்மமாகுமா? அதைத் தடுப்பது துரைத்தனத்தாரின்

கடமையல்லவா? 19-ம் நூற்றுண்டின் இறுதியிலேயே மேனுட்டினர் இந்த அக்கிரமத்தைக் கண்டித்து விலக்கினர். அப்பொழுதே இங்கிலந்து முதலிய தேசங்களில் பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டன. ஷை சாலைகளில் ஸ்திரீகளையும் சிறுவரையும் வேலைக்கு அமர்த்திக்கொண்டு அவர்களை வதைத்து வந்தனர்; தொழிலாளிகளின் நிலைமை நிரம்பவும் பரிதாபமாய் முடியவே, அரசாங்கத்தார் தக்க விசாரணை நடத்தி ஷை கொடுமைகளை நீக்கவேண்டியதாயிற்று. வரவர அரசாங்கத்தார் தமது அதிகார எல்லையை அதிகப்படுத்திக் கொண்டே வந்து, தம்முடைய பொது நலத்திற்கே சரியான வழியை அறியாத பிரஜைகளைப் பல விதத்தில் இப்பொழுது கட்டுப்படுத்தி வருகின்றனர். குழந்தைகளைத் தாய் எவ்விதமாகவேனும் போஷிப்பதைப் போலவே இதுவுமாகும். குழந்தைகளைத் தனியாக விட்டு விட்டால் அவைகள் பிழைத்து வளர்வது துர்லபம். ஆனல் நாம் இதுவரையில் ஆராய்ந்த கொள்கையோ பிரஜைகளின் சுதந்திரம் என்ற பெயரால் அவர்களின் சுயநலத்தையே அதிகப்படுத்த வழிதேடுவது போலாயிற்று. ஜனங்கள் பலர் ஒன்றுகூடி ஒழுங்காகவும் ஒரு கட்டுப்பாட்டிலடங்கியும் வேலை செய்வதால் எவ்வளவோ நன்மை விளையும் என்பதை அக்கொள்கையினர் கவனிக்கவில்லை.

(2) சமூக சமத்துவக் கோள்கை:—துரைத்தனத்தாரின் கடமையை அநேகமாய்ச் சுருக்கிவிடும் ஷை கொள்கைக்கு முற்றிலும் மாறுன இன்னொரு கொள்கையும் உண்டு. துரைத்தனத்தாரின் கடமையை அது நிரம்பவும் அதிகப்படுத்துகிறது. அதை சமூக சமத்துவ வாதமென்று கூறலாம். அதில் பல சிறு பிரிவுகளும் உண்டு. இக்காலத்தைய அரசுகள் அறிந்தோ அறியாமலோ சமூக சமத்துவக்

கொள்கையையே பின்பற்றி துரைத்தனம் நடத்தி வருவதால், அதை நாம் விரிவாக ஆராயவேண்டும். சுருங்கக்கூறுமிடத்து, சமூக சமத்துவவாதிகள் வேண்டுமென்பது இதுவேயாம். இப்பொழுது உலகில் இருக்கும் அபாரமான ஏற்றத் தாழ்வுகளையும் வேற்றுமைகளையும் சிறிதளவு அகற்றிவிட்டாலன்றி, உலகின் துயரம் அதிகரித்துக் கொண்டே போகும். இப்பொழுது மனித சமூகத்தில் காணப்படும் துன்பங்களுக்கும் துயரத்திற்கும் நமது சமூகத்தினுடைய தற்கால அமைப்பே காரணம். உலகத்தாரின் நிலைமை சிறிதளவாகிலும் திருந்தவேண்டுமானால், சமூக அமைப்பு ஒழுங்காகத் திருத்தியமைக்கப்பட வேண்டும்: இதை அரசாங்கத்தாரே செய்யக்கூடும். எனவே சமூக சமத்துவ வாதம் இரு பாகங்களாகப் பிரிக்கப்படும். முதல் பாகத்தில் தற்கால சமூக அமைப்பு கண்டிக்கப்படும். இரண்டாவது பாகத்தில் நூதனமான சமூக அமைப்பு எப்படி இருக்கவேண்டுமென்பது விவரிக்கப்படும்.

இப்பொழுது பரவி நிற்கும் சமூக ஏற்பாடு முற்றிலும் கொடுமையானது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இதை முதலாளிகளின் கொடுங்கோன்மை எனக் கூறலாம். உலக சுகம் முழுதும் தனவந்தரே யடைகின்றனரன்றி அதில் அணுவளவும் ஏழை மக்களுக்குக் கிடைப்பதில்லை. முதலாளிகள் அநுபவிக்கும் இராஜபோகமும் தொழிலாளிகளுடைய தரித்திரமும் மலையும் மடுவும்போல் இருக்கின்றன. சமூக சமத்துவ வாதத்தை முதன்முதலில் உற்பத்தி செய்தவர் கார்ல்மார்க்ஸ் என்கிற ஜெர்மன் தேசத்தார். தொழிலாளிகளின் பரிதாப நிலைமையைக் கண்டு சகியாதவராய், அவர் தமது கொள்கையைப் பின்வருமாறு சித்தாந்தப்படுத்தினார். முன்காலத்

தில் ஏழைமக்களை வருத்தி ஏமாற்றிச் சம்பாதித்த பணத்தைக்கொண்டே முதலாளிகள் சுகமநுபவித்து வருகின்றனர். வேலை முழுதையும் செய்து முடிப்பவர் தொழிலாளிகள்; அதனால் ஏற்படும் இலாபம் முழுதையும் அடைகிறவன் ஒரு முதலாளி. நாள் முழுதும் வயலில் வேலைசெய்து நெற்பயிர் செய்யும் குடியானவனுடைய வீட்டில் ஒருமணி நெல் இருப்பதில்லை; நாள் முழுதும் துணிநூற்கும் தொழிலாளியிடம் ஒரு முழம் நல்ல துணி இருப்பதில்லை. தொழிலாளிகள் யாவரும் கூலியைப் பெறும் அடிமைகளாகவே இருக்கின்றனர் என்று மார்க்ஸ் கூறுகிறார். பெரிய இயந்திரங்களும் தொழிற்சாலைகளும் ஏற்பட்டிருப்பதன் பயனாக பழையகாலத்தி லிருந்துவந்த வீட்டுக் கைத்தொழில்கள் நசித்துப்போய்விட்டன. தமது சௌகரியப்படி வீட்டில் கைத் தொழில் செய்து ஜீவித்து வந்தவர்கள் வீட்டை விட்டுப் போய் ஒருவனிடம் வேலைக்கு அமர நேர்ந்தது. தினந்தோறும் அவர்களது நிலைமை பரிதாபமாக மாறிக்கொண்டே போகிறது. இயந்திரங்களை வாங்கும் திறமை அவர்களுக்குக் கிடையாது. கொடுத்த கூலியைப்பெற்று வேலை செய்தாலன்றி அவர்கள் பட்டினி கிடந்து இறக்கவேண்டியதாயிருக்கிறது. வயிறு நிறையக்கூடிய ஆகாரமும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. வேலையில்லாத் திண்டாட்டமோ விவரிக்க இயலாததாயிருக்கிறது. ஒருவன் எட்டணா கூலி கேட்டால் இன்னொருவன் தான் நாலணாவுக்கு வருவதாகக் கூறி முன்னால் வந்து விழுகிறான். இதன் பயனாக காலக்கிரமத்தில் முதலாளிகளுக்கு முதலும், தொழிலாளிகளுக்கு ஏழ்மையுமே அதிகரித்து வருகின்றன. கடவுள் சிருஷ்டியான இந்த உலகத்தில் மனிதர் எல்லோருக்கும் போதிய உணவு இல்லாமற் போகவில்லை. அப்படி இருக்

தும் ஏன் இவ்வளவு துயரமும் துன்பமும் பரவியிருக்கின்றன? ஒருவன் குபேரனுய்விட்டால், ஆயிரம் பேர்கள் அவனுக்குக் கீழ் குசேலர்களாக வேண்டியிருப்பதாலேயே இந்த நிலைமை ஏற்படுகிறது. பிரஜைகள் எல்லோருடைய க்ஷேமத்தையும் பட்சபாதமின்றிக் காத்து வர வேண்டிய அரசாங்கத்தார் இந்தப் பரிதாபமான நிலைமையை ஒழிக்க முன் வரவேண்டியது அத்தியாவசியமான காரியமென்பதே நாம் தெரிந்துகொள்ளத் தக்க விஷயம். அந்த மாறுதலேற்படும் பொருட்டே சமூக சமத்துவ வாதிகள் அரசாங்கத்தாரே தொழிற் சாலைகளையும் வர்த்தகங்களையும் மேல்பார்வை பார்த்துவர வேண்டுமென வற்புறுத்திக் கூறி வருகின்றனர். மேற்படி வியவகாரங்களை தனிப்பட்ட முதலாளிகளின் வசத்தில் விட்டு வைத்திருப்பதனுலேயே இத்தனை அநர்த்தங்களும் உண்டாகின்றன. அரசாங்கத்தாரே தேசிய முதலாளியாக ஆய்விட்டால், அவர்கள் நியாயமாக நடந்துகொண்டு எல்லோருக்கும் தேவையான அளவு ஊதியம் அளித்து வரக்கூடும். சமூக சமத்துவ வாதத்தில் பல சிறு பிரிவுகள் இருக்கின்றன என்று முன்பு கூறினேம். அதைக் கண்டு பலர் நடுங்குகின்றனர்; அது பெருத்த இராஜீயப் புரட்சியையே ஆதரிக்கிறதெனச் சிலர் கூறுகின்றனர். உருஷியா தேசத்தில் சில வருஷங்களுக்கு முன் போல்ஷிவிக் என்ற பெயர்கொண்ட கட்சியினர் பெருத்த கலகம் செய்து அரசனைக் கொன்று, தொழிலாளிகளுடைய அரசை ஸ்தாபித்தனர். அந்தக் கலகத்தால் உருஷியா முழுதிலும் குழப்பமேற்பட்டது. ஏராளமான மனிதர் மடிந்தனர். அவ்விடத்தில் நடந்தது போலவே மற்ற தேசங்களிலும் கலகம் நடக்குமெனப் பலர் அஞ்சுகின்றனர். முதலாக போல்ஷிவிக் அரசாட்சியின்கீழ் உருஷியா

தேசம் இப்பொழுது விருத்தி யடைந்துகொண்டே வருகிறது. பழைய குழப்பம் அடங்கி வெகுநாளாய் விட்டது. இரண்டாவதாக, சமூக சமத்துவ வாதம் செய்கிறவர்களெல்லோரும் போல்ஷிவிக் கட்சியினரல்லர். அவர்கள் பலவந்தச் செய்கைகளையோ குழப்பத்தையோ ஆதரிப்பதுமில்லை. ஒரே இரவில் தனவந்தர் வீட்டில் புகுந்து கொள்ளையடித்து அந்தப் பணத்தை வாரிச் சூறையிட வேண்டுமென எவரும் கூறுவதில்லை. இப்பொழுதுள்ள விபரீதமான ஏற்றத்தாழ்வுகளைப் படிப்படியாகவும் அமைதியாகவும் நீக்க வேண்டுமென்பதே அவர்களது நோக்கம். கத்தியையும துப்பாக்கியையும் கொண்டு முதலாளிகளும் தொழிலாளிகளும் யுத்தம் செய்ய வேண்டுமென்று எவரும் கூறவில்லை. அல்லது, எல்லோரையும் சமமாகச் செய்து புத்தியுள்ளவனும் மூடனும் ஒரே அந்தஸ்தையும் ஒரே ஊதியத்தையும் அடையும்படி கட்டாயப்படுத்த வேண்டுமென்றும் எவரும்கூறவில்லை.உண்ண உணவின்றிக் கோடிக் கணக்கான ஜனங்கள்வாடவும்,ஒருவர் தமது பணக்குவியலை என்ன செய்வதென்றறியாமல் தவிப்பதும் இனி வேண்டாமெனவே அவர்கள் கூறுகின்றனர். அதனுல் இரயில்வே, தொழிற்சாலை,சுரங்கம் முதலியவைகள்தனியான முதலாளிகளிடம் விடப்படாமல் துரைத்தனத்தாரின் கைக்கு மாறிவிடும். சமூகசமுத்துவ வாதத்தை யொட்டிய பூர்ணமான அரசுகள் உருஷியாவில் தவிர வேறெங்கும் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை யானுலும், நவீன அரசுகள் அறிந்தோ அறியாமலோ அவ்வழியையே பின்பற்றுகின்றன. உதாரணமாய், உப்பு உற்பத்தியையும், தபால் இலாகாவையும், இரயில்வேக்களையும், சுரங்கங்களையும் துரைத்தனத்தாரே கவனித்து வருகின்றனர். மேற்படி தொழில்களைத்

தனிப்பட்ட முதலாளிகளிடம் விட்டால், பொது ஜனங்களுக்குப் பிரயாசை ஏற்படும் என்றே அரசாங்கத்தார் அவைகளைத் தாங்களே பரிபாலித்து வருகின்றனர். உதாரணமாய், இரயில்வேக்களை எடுத்துக் கொள்வோம். கம்பெனிகளுடைய நிர்வாகத்தில்நடந்துவரும் இரயில்வேக்கள் அதிகமான கட்டணங்களை வசூல் செய்கின்றனவானாலும், ஜனங்களுக்கு அவசியமான சௌகரியங்களைச் செய்து கொடுப்பதில்லை. இரயில் பிரயாணத்தை ஜனங்கள் விலக்கி விடவும் இயலவில்லை. அதனால் கம்பெனிக்காரர்களுக்கு ஏராளமான இலாபம் கிடைக்கிறதன்றி, அரசாங்கத்தாரே இரயில்வேக்களை நடத்திவருவதால் பிரயாணிகளுக்கு சௌகரியங்களைச் செய்து கொடுப்பதோடு ஏராளமான இலாபத்தைப் பெற்று அதன்மூலம் ஜனங்களுடைய இதர வரிபளுவையும் நீக்கலாம். இங்ஙனமே தபால் இலாகாவை தனிக் கம்பெனிகளிடம் விட்டால், பெரும் குழப்பமாய் விடும். மேலும் முதலாளிகள் இஷ்டப்படியெல்லாம் தொழிலாளிகளை நடத்த இப்பொழுது அரசாங்கத்தார் அநுமதிப்பதில்லை. தினந்தோறும் இத்தனை மணி நேரந்தான் வேலை செய்ய வேண்டுமெனவும், ஸ்திரீகள் குழந்தைகள் முதலியோருக்கு ஏற்றவசதிகளைச்செய்து கொடுக்கவேண்டுமெனவும் சட்டமியற்றப் படுகின்றது. இயந்திரத்தில் வேலைசெய்யும் தொழிலாளிக்கு அபாயமேற்பட்டால் அவனுக்கு முதலாளி தக்க உதவியைச் செய்யவேண்டும். தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் உண்டாகும் சச்சரவுகளிலும், அரசாங்கத்தார் தலையிட்டு சமாதானம் செய்து வைக்கின்றனர். அபினி முதலான இலாகிரி வஸ்துக்களை உற்பத்தி செய்வதையும் கட்டுப் படுத்துகின்றனர். அதிகமான பணமிருப்பவருக்கு அதிகமான வரியைப்

போட்டு அதைக்கொண்டு, பொதுநலத்தை யதிகரிக்கத்தக்க காரியங்களைச் செய்கின்றனர்; அதுபோல, வெளி தேசத்திலிருந்து வரும் சாமான்களுக்கு இறக்குமதித் தீர்வைகளும், உள்ளிருந்து வெளியில் செல்லும் வஸ்துக்களுக்கு ஏற்றுமதி வரிகளும் விதித்து, நாட்டிலுள்ள சுதேசத் தொழில்களை அபிவிருத்தி செய்கின்றனர். அரசாங்கத்தார் தலையிடக் கூடாத விஷயம் எதுவுமே இப்பொழுது இல்லையெனக் கூறலாம். நமது வீட்டின் வழியாக ஒரு ரஸ்தா ஏற்படுத்த வேண்டுமானல், நமது வீட்டை இடிக்க நாம் சம்மதித்தேயாகவேண்டும். ஏனெனில் நமக்கு அதனல் அசௌகரியம் ஏற்படுமானலும், பொதுநலத்தை அது அதிகப்படுத்துகிறதென்பதே அரசாங்கத்தின் கருத்தாகும். முனிசிபாலிடிகளும் இப்படியே தமக்குட்பட்ட இலாகாக்களைத் தாமே நிர்வகிக்கலாம். சுத்தமான பால் விற்பது, டிராம் வண்டி, மோட்டார் வண்டியோட்டுவது, மின்சாரம் உற்பத்தி செய்வது, தண்ணீர்க் குழாய் வைப்பது, சினிமாக்காக்ஷிகள் காட்டுவது—முதலிய விஷயங்களை முனிசிபாலிடிகள் தாமே நேராக நடத்தி வந்தால் இரண்டுவித நன்மைகள் உண்டாகும். முதலாக ஜனங்களுக்கு சௌகரியமும், இரண்டாவது முனிசிபாலிடிக்கு வருமானமும் உண்டாகும்.

இவ்வாறு படிப்படியாய் அரசாங்கத்தாரின் ஆதிக்கம் விஸ்தரித்துக் கொண்டே போகிறது. இதையே சமூக சமத்துவ வாதிகள் இன்னும் அதிகமாய் துரிதப்படுத்த வேண்டுமென்று ஆத்திரப் படுகின்றனர். சமூக சமத்துவ வாதிகளென்றுலே இக்காலத்தில் துரைத்தனத்தார் நடுங்குகிறதற்கு எத்தகைய காரணமும் இல்லை. பொது ஜனங்களின் வாக்கே தெய்வ வாக்கெனக் கூறுவதுண்டு; அங்ஙனமாயின், பசிப்பிணியாலும் வியாதிகளாலும் வாடி வதங்கிக்

கதறும் ஏழை மக்களின் வாக்கை அரசாங்கத்தார் கவனிக்க வேண்டாமா? ஒருவன் நாற்காலியிலிருந்தபடி, தனது முன்னோர்கள் சேர்த்துவைத்த முதலைக்கொண்டு அதிகமான இலாபத்தை யடைவதும், நாள் முழுதும் வேலை செய்தும் சௌகரியமாக வாழப் போதிய கூலியைப் பெருமல் பலர் வருந்துவதும், இனி உதவா. இதன் பொருட்டே அரசாங்கத்தார் நேராய் எல்லா விஷயங்களையும் நிர்வகித்துக் கூடியவரையில், கடவுளின் மக்களுக்குள் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டுமென அவர்கள் வேண்டுகின்றனர். மாளிகையி லுள்ளவர்கள் அதை விட்டுக் குடிசைக்கு வந்துவிட வேண்டுமென எவரும் சொல்லவில்லை; ஆனல் எட்டு மாளிகை யுள்ளவர்கள் தமது ஒரு மாளிகையை யாவது தெருவில் கிடந்து பரிதபிக்கும் ஏழைத் தொழிலாளிகளுக்கு விடுதியாகத் தரவேண்டுமென்பதே அவர்களது கோரிக்கை. ஆனல் இக்காலத்திலோ முதலாளிகளே அரசாங்கத்தையும் கைப்பற்றிக் கொள்வதனல், இந்தச் சீர்திருத்தம் ஏற்படுவதுகூடப் பெரிய பிரயாசையா யிருக்கிறது. ஆனலும், முதலாளிகளின் சுயநலமென்ற கோட்டை முற்றுகை போடப்பட் டிருக்கிறது; அது இடித்தெறியப்படுவது நிச்சயம். பெருந்தன்மை வாய்ந்த பல தனவந்தர்கள் இதைத் தாமாகவே உணர்ந்து தொழிலாளிகளுக்குத் தக்க உதவிகளைச் செய்ய முயல்கின்றனர். சமூக சமத்துவ வாதிகளிலேயே பலர் பெரிய தனவந்தர்கள். முதலாளிகளும் தொழிலாளிகளும், தனவந்தரும் ஏழைகளும் ஒருவருக்கொருவர் சத்துருக்க ளல்லர். ஒரு கொடிய சமூக ஏற்பாட்டில் அகப்பட்டு இரு திறத்தாரும் துன்புறுகின்றனர். அந்த ஏற்பாட்டை மாற்றுவது அத்தியாவசியமான காரியம். அரசாங்கத்தார் ஒரு சமூகத்

தினரிடம் மாத்திரம் பட்சபாதமாக நடந்து கொள்ளாமல், எல்லோரையும் சமமாக நடத்தவேண்டும். அத்தகைய ஏற்பாட்டினாலேயே தேசத்தில் எல்லா வளமும் பெருகும்; கூரிய வாளையொத்த ஏழைகளின் கண்ணீர் பெருகா தொழியும்; கல்வி யபிவிருத்தி யடையும்; சகல கலைகளும் ஓங்கி வளரும். இகலோகத்தில் காணப்படும் துயரம் குறையும். தனிப்பட்ட முதலாளிகளே இவ்வளவு பெரிய காரியங்களைச் செய்வதென்பது சாத்தியமான தல்ல. பல நூதன இயந்திரங்களையும் கருவிகளையும் கண்டுபிடித்து, கைத்தொழில் அபிவிருத்தியைச் செய்வது முதலாளிகளே யானாலும், அதன்பயனாகத் தோன்றிய சிக்கலான ஏற்பாட்டை அவர்கள் சுமக்க முடியவில்லை. அவ்வேற்பாடு நன்மையை உண்டாக்காமல் அதிகமான துயரையே உண்டாக்கி விட்டது. இனி அப்பெரும் ஏற்பாட்டைத் திருத்தியமைத்து, அதன் மூலம் முதலாளி, தொழிலாளி ஆகிய இருவருக்கும் மற்றவருக்கும் நன்மை பெருகுமாறு செய்வது அரசாங்கத்தாரால் மட்டுமே கூடும். இதையே சமூக சமத்துவ வாதிகள் சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று கூறி வருகின்றனர். எனவே பலவந்தத்தை ஆதரிக்காத சமூக சமுத்துவ வாதத்தில் எவ்விதத் தவறும் அபாயமும் இல்லை என்பது விளங்கும்.

18-வது அதிகாரம்

ஐரோப்பிய அரசியலின் சரித்திரம்.

(1) பண்டைக்கால அரசுகள்: கிரீஸ்தேச அரசியல் முறைகளின் விவரம்:—முன் சென்ற பதினேழு அத்தியாயங்களிலும் அரசின் இலக்ஷணங்களை விரித்துக் கூறினோம்; தற்காலத்தில் இராஜீய விஷயங்களில் முதன்மை பெற்று விளங்கும் ஐரோப்பாக் கண்டத்தில் தோன்றிய பல நிபுணர்களின் கொள்கைகளையும் நாம் ஆராய்ந்தோம். ஷை தேசங்களின் சம்பந்தத்தால் நமது இந்தியா அவர்களது இராஜீய முறைகளையே தழுவி வருவதாலும், உண்மையாகவே இராஜீய சாஸ்திரம் ஐரோப்பாக் கண்டத்திலேயே வெகு நுட்பமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாலும், நாம் ஐரோப்பாக் கண்டத்தில் தொன்றுதொட்டு ஏற்பட்ட இராஜீய மாறுதல்களையும் தெரிந்து கொள்வது அவசியமான காரியம். பாரமார்த்திக விஷயங்களிலேயே சிரத்தை கொண்டிருந்த நமது பூர்விகர்கள் தற்காலத்தில் நமக்கு உபயோகப்படக் கூடிய இராஜீய நூல்களை இயற்றவில்லை. அவ்வாறு அவர்கள் இயற்றவும் அவசியம் ஏற்படவில்லை. ஐரோப்பாக் கண்டத்திலோ சென்ற 2500 வருஷங்களாகப் பல மேதாவிகள் அரசியல் தத்துவத்தைப் பற்றிய பல ஆராய்ச்சிகளைச் செய்து அரைத்தன முறைகளெவ்விதம் அமைய வேண்டுமென்பதைப் பற்றித் தீர்மானமாகக் கூறியிருக்கின்றனர். ஐரோப்பாக் கண்டத்தில் பழைய காலத்தில் கிரீஸ் தேசமே நாகரிகமும் அறிவுப்பெருக்கு மடைந்திருந்தது. அப்பொழுது இங்கிலந்து தேச ஜனங்கள் காட்டு மனிதர்களாகவே இருந்தனர். கிரீஸ் தேசத்தில் பல தத்துவ சாஸ்திரிகள் தோன்றினர்; பல இராஜ தந்திரிகளும்

அதை ஆண்டு வந்தனர். அந்த தேசத்தின் பெருமை அழிந்த பின்னர், இற்றலி தேசத்திலுள்ள உரோம் என்ற பட்டணம் பெரிய இராஜ்ஜியத்திற்குத் தலை நகரமாயிற்று. உரோம் இராஜ்ஜியம் பிற்காலத்தில்அநாகரிகர்களானகாட்டு மனிதர்களால் தாக்கப்பட்டுச் சீர்குலைந்தது. ஐரோப்பாக் கண்டம் அப்பொழுது தாறுமாருய்ப் பிரிந்து நாளடைவில் பல சிறுசிறு இராஜ்ஜியங்களாக மாறியது. அவ் இராஜ்ஜியங்கள் சொற்பகாலம் சுயேச்சாதிபத்தியத்திற்கு உட்பட்டிருந்தன. பிறகுதான் ஜனநாயக ஆட்சிக்கு வேரூன்றப்பட்டது. இங்ஙனம் ஐரோப்பாக் கண்டத்தின் தேசங்கள் பலவேறு மாறுதல்களை அடைந்திருந்தாலும், அம் மாறுதல்களிலும் இடைவிடாத ஒரு தொடர்ச்சியை நாம் காணலாம். மேலும் கிரீஸ், உரோம் முதலியவற்றின் இராஜீய முறையை ஆதாரமாக வைத்தே மற்ற தேசங்களின் தற்கால இராஜீய முறைகள் அமைக்கப்பட் டிருக்கின்றனவாதலால், ஐரோப்பாவின் புராதன சரித்திரத்தையும் நாம் சிறிதளவு தெரிந்து கொள்வது அவசியமானது. நாம் முன்பு கூறியபடி ஐரோப்பாவின் அரசியல மாறுபாட்டில் இடைவிடாத தொடர்ச்சி ஒன்று காணப்படுகிறது. உலகில் வசிக்கும் மனிதர்களுக்குள் எவ்வளவோ வேற்றுமைகள் காணப்படினும் அவைகளுக்குப் பின்னுல் ஒற்றுமையையும் ஒரே தன்மையையும் நாம் காண்கிருேமல்லவா? அதுபோல, கிரேக்கர்களையும் உரோமர்களையும் காட்டிலும் நாம் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருந்தாலும், அவர்களுக்கும இக்காலத்தோருக்கும் இடையில் பெருங் கடல் ஒன்று இருப்பதாக எண்ணக் கூடாது. சமய சந்தர்ப்பங்களையொட்டியும், பல சரித்திர சம்பவங்களுக் கேற்றவாறும் நேரிட்ட பல மாறுதல்களுக்கு உட்பட்டுக் கொண்டே

சிறிது சிறிதாக மாறிவந்து மனித சமூகம் தற்கால நிலைமையை யடைந்திருக்கிறது. குழந்தைப் பருவத்தை விட்டு யௌவனத்தை யடைவதற்கு இதை ஒப்பிடலாம்.

ஐரோப்பாவின் பூர்வ சரித்திரத்தில்—அதாவது சுமார் 2500 வருஷங்களுக்கு முன்—முக்கியமான மூன்று தேசங்களை நாம் கவனிக்க வேண்டும்: அவையாவன:—கிரீஸ், உரோம், ஜெர்மனி. இம்மூன்று இராஜ்ஜியங்களும் ஒரே சமயத்தில் பிரபல மடைந்திருக்கவில்லை யாயினும், நாம் இராஜீய சரித்திரத்தை விஸ்தாரமாகப் பரிசீலனை செய்யும் பொழுது, சொற்பகால வேற்றுமைகளைப் பொருட் படுத்தாமல் விட்டு, இம்மூன்றையும் பூர்விககால இராஜ்ஜியங்கள் என்றே கருதவேண்டும். கிரீஸ், உரோம், ஜெர்மனி என்ற மூன்று தேசங்களின் இராஜீய முறையும் ஆரம்பத்தில் ஏறக்குறைய ஒரே மாதிரியாய் இருந்ததெனக் கூறலாம். ஷெடி இராஜ்ஜியங்களுக்குத் தலைவனாக ஓர் அரசன் இருப்பான்; சேனாதிபதியும் அவனே; யுத்த சமயத்தில் அவனே முன்னின்று போர்புரிய வேண்டும். ஆனால் அவன் தன்னுடைய இஷ்டப்படி அரசியற்ற முடியாது. அவனுக்கு நீதி நியாயம் எடுத்துரைப்பதற்கு ஒரு சிறு சபையும் இருந்தது. அந்த சபையில் வயதுமுதிர்ந்த அறிஞர்களும் நிபுணர்களும் ஸ்தானம் வகித்தனர். அதுவன்றி, சாதாரண ஜனங்களடங்கிய ஒரு மகா சபையும் இருந்தது. அந்த மகா சபையில் யுத்தம் செய்யும் திறமை வாய்ந்தவர்களே ஸ்தானம் வகித்து வந்தார்கள். மகா சபைக்கு எவ்வித மான அதிகாரமும் கிடையாது. அரசனும் அறிஞர் சபையும் செய்த தீர்மானங்களை அங்கீகரிப்பதே மகாஜன சபையின் வேலை. அக்காலத்தில் போர்புரிவ தொன்றே முக்கிய தொழிலாகக் கருதப்பட்டு வந்தது. கிரீஸ் தேசத்திலும்

அரசன், அறிஞர் சபையார், மகா சபையார் ஆகிய மூவரும் இருந்தனராஞலும், அங்கு ஆதியில் அரசனுக்கு அதிக கௌரவமும் அதிகாரமும் இருந்ததாக நாம் காண்கிறோம். பொதுவாகப் பேசுமிடத்து, கிரீஸ் தேசத்திலும் அரச குலம் ஒன்று பரம்பரையாக இருந்து வந்தது; ஆனல் ஓர் அரசன் திறனற்றவனுய் இருந்தால் அரசகுலத்தைச் சேர்ந்த வேறொருவன் சிம்மாதன மேறுவான். ஏனெனில் போர்புரியும் திறமையுடையவனே அக்காலத்தில் அரசை வகிக்க முடியும். அரசன் மற்ற நாட்டினருடன் யுத்தம் புரியலாம்; சமாதானம் செய்து கொள்ளலாம்; உள்நாட்டின் சச்சரவுகளையும் தீர்த்து வைக்கலாம். அவன் தனது தீர்மானங்களைப் பிரஜைகளிடம் எடுத்துக்கூறி, அவர்களது அங்கீகாரத்தைப் பெறுவான். பெரிய குற்றம் செய்வோரை தண்டிக்கும் அதிகாரமும் அவனுக்கு இருந்தது; அவனுடைய தீர்மானத்தைப் பொதுமக்க ளடங்கிய மகாஜன சபை அங்கீகரிக்க வேண்டும். அக்காலத்து இராஜ்ஜியங்கள் மிகச் சிறியவையா யிருந்தமையால், பொது மக்கள் (ஆண்பாலர்) எல்லோரும் சுலபத்தில் ஒன்றுகூட முடிந்தது. கிரீஸ் தேசம் பல சிறு இராஜ்ஜியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது எனக் கூறினேம்; ஆனல் ஒவ்வோர் இராஜ்ஜியத்தையும் தற்காலத்திலுள்ள நமது பெரியபட்டணங்களுக்கே ஒப்பிட்டுக் கூறலாம். ஷை 'நகர இராஜ்ஜியங்கள்' எவ்வாறு தோன்றின என்பது நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளக் கூடாத விஷயமாய் இருந்து வருகிறது. முன்னேர் அத்தியாயத்தில் நாம் சமூக ஒப்பந்தக் கொள்கையை விரிவாக ஆராய்ந்தோம். தனி மனிதர்கள் ஒன்றுகூடியே அரசை நியமித்தார்கள் என்பது அதன் சித்தாந்த மல்லவா? கிரீஸ் தேசத்தில் இருந்த பல தனிக்குடும்பங்கள் ஒன்றுசேர்ந்தே

ஷை நகர இராஜ்ஜியங்களாய் அமைந்திருக்கலாம். அவ்வாறு அவர்கள், ஒன்று கூடுவதற்குக் காரணம் என்னவென்பதை நாம் ஆராய்வோம். தனியான குடும்பங்களுக்குள் அடிக்கடி சண்டை நேரிட, அதன்பயனுக ஒரு குடும்பம் மேன்மையடைந் திருக்கலாம்; அல்லது பொதுவான பகைவனை எதிர்க்கும் பொருட்டு எல்லாக் குடும்பத்தினரும் சேர்ந்து தம்முள் வல்லமையுடைய ஒருவனைத் தலைவனுக நியமித்துக்கொண் டிருக்கலாம்; பிற்காலத்தில் அந்த மனிதனுடைய குடும்பம் அரச குடும்பமாக மாறியிருக்கலாம்; அதிலிருந்து இராஜ்ஜியம் பரம்பரையாகத் தந்தையிடமிருந்து மகனுக்குச் சென்றுகொண்டே வந்திருக்கலாம். அரசகுலத்தில் ஜனித்துச் சிம்மாதனம் ஏறுகிறவன் பலாட்டியனுய் இராவிடில், ஜனங்கள் அவனை யகற்றிவிட்டு ஷை குலத்தானுன வேருெருவனைத் தமது தலைவனுக நியமித்து விடலாம்.

நீண்டகாலம் வரையில் கிரீஸ் தேசத்தில் ஷை 'நகர இராஜ்ஜியங்கள்' பிரபல மடைந்திருந்தன. அரசியல் சரியாக நடைபெற வேண்டுமானுல், ஷை நகர இராஜ்ஜியங்களில் மட்டுமே அது சாத்தியமென்று கிரேக்கர்கள் எண்ணினர். ஷை நகரங்களுள் ஏதேன்ஸ், ஸ்பார்ட்டாஎன்பவை முக்கியமானவை. கிரீஸில் சிறு இராஜ்ஜியங்கள் அபிவிருத்தியடைந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. (1) வர்த்தகமும் கைத்தொழிலும் பெருகியதன் பயனுக கிரேக்கர்கள் கிராமங்களைவிட்டுப் பட்டணங்களில் குடியேறினர். பட்டணங்களிலேயே வர்த்தகம் பெருகுவதற்கு ஏராளமான வசதிகள் இருந்தன. (2) நாகரிகம் பெருகப் பெருக, கிரேக்கர்கள் நகரங்களில் ஒன்றுகூடிக் கலைகளை அநுஷ்டித்தும் பல மேதாவிகளை அடுத்து அறிவைப் பெருக்கிக்

கொள்ளவும் ஆரம்பித்தனர். அச்சு இயந்திரம், போக்கு வரத்து சௌகரியங்கள் முதலியவை இல்லாத அக்காலத்தில் நகரங்களே நாகரிக வாழ்க்கைக்கேற்ற இடங்களாகத் தோன்றின. (3) பகைவரின் பயமின்றி அமைதியாக வாழ்வதற்கும் நகரங்களே ஏற்ற இடமாய்த் தோன்றின. கிராமங்களில் போதிய பாதுகாப்புக் கிடைப்பது அரிதாக இருந்தது. (4) நகரங்களில் ஒன்றுசேர்ந்த கிரேக்கர்கள் படிப்படியாய் இராஜீய விஷயங்களில் அக்கரை கொள்ளலாயினர். ஒரு மனிதர் தவறுமல் எல்லோரும் மகாஜன சபையின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டு நேராய் இராஜீய விஷயங்களை கவனித்து வந்தனர். அதனுலேயே இக்காலத்தில் இருப்பதைப் போன்ற விஸ்தாரமான இராஜ்ஜியங்கள் கிரேக்கர்களுக்கு சாத்திய மற்றவையாய்த் தோன்றின. ஒவ்வொரு பிரஜையும் நேராய் இராஜீயக் கடமைகளைச் செய்யவேண்டுமென்பதே கிரேக்கர்களுடைய முக்கிய நோக்கமாக இருந்தது.

கிரீஸ் தேசத்தில் இருந்த பல நகர இராஜ்ஜியங்களிலும் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களையும் நாம் கவனிக்க வேண்டும். முன்பு கூறியபடி அரசன், அறிஞர் சபையார், மகாஜனசபையார்என்ற மூன்றுவகுப்பாரும்இருந்துவந்தனராஞலும், ஆதியில் அரசன் அநேகமாகத் தனது இச்சைப்படியே நடந்து வந்தானெனக் கூறலாம். ஜனங்கள் சாதாரணமாக அவனுக்குக் கீழ்ப்படிந்தே நடந்து வந்தனர். ஆனுல் நாளடைவில் அரசகுலத்தில் ஜனித்தவர்கள் பூர்விக அரசர்களுக்கு இருந்ததைப் போன்ற திறமையுடையவராயிருக்கவில்லை. இராஜ்ய நிர்வாகத்தை அவர்களால் வகித்துச் செல்ல இயலவில்லை. எனவே அரசருக்குதவி வந்த அறிஞர் சபை (அல்லது பிரபுக்கள் சபை) தானே அரசி

யல் நடத்த ஆரம்பித்தது. அந்த மாறுதலினுல் நகரத்திற்கு எவ்விதத் துன்பமும் ஏற்படவில்லை. அரசன் ஒரு பதுமையாகவே இருந்து வந்தான்; வியவகாரங்கள் முன்போலவே நடந்து வந்தன. பதுமைபோல இருந்த அரசனும் நாளடைவில் அடியோடு மறைந்து போனுன். "ஒன்றுக்கும் உதவாதவனுக்கு நாம் ஏன் மரியாதை செய்கிறது" என்று கிரேக்கர்கள் எண்ணினர். அவ்வாறு ஓர் இராஜ்யத்தில் அரசன் அழியவே அதே முடிவு இன்னேர் இராஜ்ய அரசனுக்கும் ஏற்பட்டது. ஸ்பார்ட்டா என்ற நகரத்தில் மட்டும் அரசன் அடியோடு விலக்கப்பட வில்லை. அவனுடைய அதிகாரம் மாத்திரம் பூர்ணமாகப் பிடுங்கப்பட்டுப் போயிற்று. இவ்வாறு ஒருகாலத்தில், கிரீஸ் தேசத்தில் இருந்த பல இராஜ்ஜியங்களிலெல்லாம் அரசனுடைய அதிகாரம் மறைய, அறிஞர் அல்லது பிரபுக்களின் ஆட்சி தோன்றலாயிற்று. பெரும் புரட்சியும் கிளர்ச்சியும் ஏற்படாமல், எளிதிலேயே அந்த மாறுதல் ஏற்பட்டது. பிரபுக்களின் ஆட்சி சிறிது காலம் வரையில் நிலைத்துப் பிரபலமாக இருந்து வந்தது. பிரபுக்கள் சுயேச்சையாய் ஆண்டு வந்த காலத்திலும்கூட முன்பு கூறிய மகாஜன சபை இருந்து வந்தது; ஆனுல் அதன் அதிகாரம் அநேகமாய் ஒடுங்கிப்போயிருந்தது. நிலத்தைப் பயிரிடுவதிலேயே நிரம்பவும் அக்கரை கொண்டிருந்த கிரேக்கர்கள் ஷ சபையின் கூட்டங்களுக்கு வருவதையே நிறுத்திவிட்டனர். அக்காலத்தில் நடத்தப்பட்ட யுத்தங்களில் குதிரைப்படையே முக்கியமான சேனையாகக் கருதப்பட்டது; குதிரைப்படையைச் சேர்ந்தோரனைவரும் பிரபுக்களாகவே இருந்தனர். பிரபுக்களின் ஆட்சி எல்லா இடங்களிலும் கொடுங்கோலாட்சியாக இருந்ததென்று நாம் கூறுதல் சரியாகாது. அநேகமாய்

அவர்கள் ஜனங்களது நலத்தையே முதன்மையாய்க் கருதி இராஜ்ஜிய நிர்வாகம் நடத்திவந்தனர்.

ஆனல் உலகத்தில் எந்த ஸ்தாபனத்தை எடுத்து ஆராய்ந்து பார்த்தாலும், அது ஆரம்பத்தில் மிகவும் திறமையாக வேலைசெய்வதும் பிறகு நாளடைவில் கெட்டுப் போவதுமே வழக்கமாய் இருந்து வருகின்றன. அவ்வாறே கிரீஸ் தேசத்தில் பொது ஜனங்களின் ஆதரவைப்பெற்று, அவர்களுடைய நன்மைக்காக உழைத்துவந்த பிரபுக்களின் ஆதிக்கம் நாளடைவில் சீர்குலைந்து கொடுங்கோலாட்சியாக மாறியது. எனவே இயற்கைக் கிரமப்படி அந்த ஆட்சியுட் [illegible]றைபலாயிற்று. அவ்வாறு பிரபுக்களின் ஆட்சி [illegible]த்துப் [illegible]னதற்குப் பல காரணங்கள் கூறலாம். (1) தனவந்தர்கள் [illegible]வும் ஏழையாயிருந்தவர்களைப் பல விதங்களில் வருத்தத் [illegible]ங்கினர். உதாரணமாக, ஏழை வியவசாயிகளுக்குக் கடன்கொடுத்து, பின்னர் அவர்களை வதைப்பது. (2) பழைய குடும்பங்கள் வரவர க்ஷீணித்துப்போக, அவைகளுக்கு பதிலாகப் புதிய குடும்பங்கள் தோன்றின. புதிய குடும்பத்தினரும் தங்களுக்கு எல்லா உரிமைகளும் வேண்டுமெனப் போராடத் தலைப்பட்டனர். அதனல் சிறிதளவு குழப்பம் ஏற்பட்டது. (3) வர்த்தகமும் கைத்தொழிலும் விருத்தியடைவதற்கேற்ப, ஜனங்களுடைய பழைய நிலைமையும் குணதிசயங்களும் போக்கு போக்கியங்களும் மாறுபடலாயின. அதனல் தனவந்தரிடம் ஏழை வியவசாயிகளுக்குப் பொறாமை ஏற்பட இடமுண்டாயிற்று. (4) அதுவரையில் கிரேக்கர்கள், எழுதப்பட்ட சட்டமெதையும் உபயோகித்து வரவில்லை. பழைய பழக்க வழக்கங்களைக் கொண்டே நீதிசெலுத்தி வந்தனர். ஆனல் பிரபுக்களின் ஆட்சியிலோ நீதிசெலுத்

தும் அதிகாரிகள் நடுநிலைமையாய் நடந்து கொள்ளாமல் தனவந்தர் விஷயத்தில் ஒருதலைச்சார்பாய்த் தீர்ப்புச்செய் யலாயினர். இக்காரணங்களினால் பொதுமக்கள் வெறுப் படைந்து, சில பிரபுக்கள் சேர்ந்து ஆட்சி நடத்துவதை விட ஒருவன் அதை நடத்துவதே மேலானதெனவும் பல ரின் கொடுமையைவிட ஒருவனது சுயேச்சாதிபத்தியமே சகிக்கத்தக்கதெனவும் எண்ணினர். கிரீஸ் தேசத்தின் பற்பல நகரங்களிலும் வெவ்வேறு காலங்களில் இவ்வித மான சுயேச்சாதிபதிகள் ஆண்டுவந்தனர். ஆனால் அதில் ஒரு முக்கியமான சங்கதியை நாம் கவனிக்கவேண்டும்; மேற்படி சுயேச்சாதிபதிக ளெல்லோரும் கொடுங்கோன் மையாக நடந்துகொள்ளவில்லை; அவர்களிற் [illegible] மங் காகவே தேசத்தைப் பரிபாலித்து [illegible]ந்தனர்; அன்னிய தேசத்திலிருந்து வந்த பகைவ[illegible] நிரம்பவும் சௌரிய மாய் எதிர்த்துக் கோ[illegible]து குடிமக்களுக்கு அத்தியா வசியமான அமைதியையும் பாதுகாப்பையும் அளித்தனர். தங்கள் தேசத்திற்கும் அதிகமான கௌரவத்தை உண் டாக்கினர்; கல்வியையும் கலைகளையும் அபிவிருத்தி செய்த னர். ஆனாலும், கிரீஸ் தேசப் பிரமுகர்களுக்கு அந்த சுயேச்சாதிபத்தியம் திருப்திகரமாக இல்லை. ஏனெ னில் பிரபுக்களின் ஆட்சியை ஒழித்துவிட்டுத் தானாகவே சுயேச்சாதிபதி ஆன மனிதனை ஏழைமக்களே விரும்பினர். தனவந்தரோ அவனால் தமக்குத் துன்பமும் கட்டுப்பாடு களுமே ஏற்படுமென்று எதிர்பார்த்தனர். சுயேச்சாதி பதியோ முன்பு ஆண்ட அரசனைப் போன்றவனன்று. அரசகுலத்தைச் சேராதவனான எவனோ ஒருவன் தனது பலத்தினாலும் திறமையினாலுமே அந்தப் பதவியை அடைந்து வந்தானாதலால் அவ்வாறு பலவந்தத்தாலும் சட்

ஐரோ

ாகவும் மேன்மையடைந்தவன் நீடித்து டத்திற்கு விரோ்பாயிற்று. அரச வம்சத்தைச் சேர்ந்த நிலைக்கமுடியாங்கள் இயற்கையாகவே மரியாதை செலுத் தலைவனுக்ச்சாதிபதியின் விஷயம் அப்படிப்பட்டதல்ல. துவர்; ங்களுக்கு இனி எவ்விதமான உதவியும் தேவை அவரின்பதை உணர உணர பொது ஜனங்களே அவ யில் வெறுப்புக் கொள்ளலாயினர். ஆதலால் நாளடை, ி சுயேச்சாதிபதிகளின் ஆதிக்கமும் ஒழிந்தது. ஆனு யும் அவர்களால் அந்த தேசத்திற்கு விளைந்த நன்மை களை நாம் மறக்கக்கூடாது; கிரீஸ் தேசத்தின் க்ஷேமத் திற்கும் பொதுஜனங்களின் க்ஷேமத்திற்கும் அவசியமா யிருந்த வரையில் அவர்களை எவரும் அசைக்கமுடியவில்லை; அந்த அவசியம் தீர்ந்தவுடனே அவர்களும் மறையலாயினர்.

சுயேச்சாதிபதிகள் விலக்கப்பட்ட பின்னர் கிரீஸ் தேச அரசியலில் மறுபடி ஒரு மாறுதலேற்பட்டது. அப் பொழுது கிரீஸ் முழுவதும் ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக் கப்பட்டது. இவ்வாட்சி முக்கியமாக எதென்ஸ் நகரத்தி லேயே பிரபலமடைந்திருந்தது. அதுவரையில் உண்மை யான அதிகாரம் பெருமல் இருந்துவந்த மகாஜனசபைக்கு அப்பொழுது சகலமான உரிமைகளும் உண்டாயின. அது வே சில உத்தியோகஸ்தர்களை நியமித்தது. எல்லா ஜனங் களுக்கும் அந்த நகரத்தில் ஒரேவிதமான சுதந்திரம் அளிக் கப்பட்டது. மேற்படி மகாஜன சபையார் வருஷத்தில் ாற்பது தடவைகளுக்குக் குறையாமல் கூட்டம் கூடி இரா ங்க விஷயங்களைப்பற்றி விவாதம் செய்தும், தங்களால் நிய ிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களின் செய்கைகளை மேல ார்வை பார்த்தும் வந்தார்கள். அரசாட்சியின் வரவு செலவு கணக்குகளையும் அவர்களே பரிசீலனை செய்துவந்

தனர். மேலும், ஏழைகளாயிருட...
வலை நிறுத்திவிட்டு மேற்படி சபைகளும், தமது அலு...
வேண்டியிருந்தமையால், மேற்படி சங்கங்களுக்கும் வர...
களுக்கு 'சம்பளமும் கொடுக்கப்பட்டு... அங்கத்தினர்
சட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால், ... பெரிய
சபையினர் ஒரு சிறு கமிட்டியையும் நியம...காக அச்
மேற்படி சபையினர் சில சந்தர்ப்பங்களில் குற்ற...ண்டு.
யும் விசாரித்துத் தீர்ப்புச் சொல்வதுண்டு. கிருஸ்து...ளை
பதற்கு நாலைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் அத்த...
ஜனநாயக ஆட்சி—ஒவ்வொரு பிரஜையும் நேராக இராஜ்
நிர்வாகத்தில் கலந்துகொள்வது—கிரீஸ் தேசத்தில் பரவி
யிருந்தது.

ஆனால் ஜனங்களால் அதிகமாக விரும்பப்பட்டு வந்த மேற்படி ஜனநாயக ஆட்சியை கிரேக்க நிபுணர்களிற் பலர் ஆதரிக்காமல் கண்டித்திருக்கின்றனர். சாமானிய ஜனங்களும் குடிமக்களும் பிரபுக்களுடனும் மேதாவிகளுடனும் சமமாக உட்கார்ந்து சட்டமியற்றுவதும் ஆட்சி நடத்துவதும் மேற்படி நிபுணர்களுக்கு சம்மதியாயில்லை. அரிஸ்டாடில், பிளேடோ, க்ஸெனோபன் முதலானவர்கள் அந்த ஆட்சிமுறையைக் கண்டித்தெழுதி இருக்கின்றனர். சட்டஞானம் சிறிதுமில்லா மூடர்களின் கூட்டம் இராஜீய நிர்வாகத்தை நடத்த முடியாதென்பதே அவர்களின் அபிப்பிராயம். அவர்கள் கூறியதும் ஒருவிதத்தில் நியாமாகவே இருந்தது. ஏனெனில் இலஞ்சம் கொடுத்துப் த...
வியைப் பெறுவதுபோன்ற கெட்ட வழக்கங்கள் நாட்டி...
வில் ஜனநாயக ஆட்சியில் தோன்ற ஆரம்பித்தன. வரிச்
சுமை அதிகமாயிற்று; முக்கியமாக, மகாஜன சபையினர்
அன்னிய நாட்டுவிஷயங்களை நிர்வகிப்பதில் அநேகத்தவறு...

களைச் செய்யலாயினர். நீதி பரிபாலனமும் பட்சபாதமாகவே நடந்தேறியது. அந்த நிலைமையைக் கண்டே அறிஞர்கள் பலர் ஜனநாயக ஆட்சியென்பது உண்மையான ஆட்சியே யாகாதெனக் கூறினர்.

கிரேக்க அறிஞர்களான அரிஸ்டாடிலையும் பிளோடோவையும் பற்றி நாம் முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். அவ்விருவரும் எழுதியுள்ள நூல்களில் அக்காலத்து அரசியல் முறைகளின் குண தோஷங்களை எடுத்துக் காட்டிவிட்டு, உத்தமமான அரசியல் முறை எப்படி இருக்கவேண்டுமென்பதையும் கூறியிருக்கின்றனர். அரசாட்சி செய்வோரிடத்தில் முக்கியமாய் இருக்கவேண்டிய சிறப்பு, அரசியல் ஞானம்; அந்த ஞானம் வாய்ந்தவர் ஆட்சி நடத்தினாலன்றி, தேசத்திற்கு நன்மையுண்டாகாது; அந்தச் சிறப்பு வாய்ந்தவர் தீர்க்கதரிசிபோல சகலமான விஷயங்களையும் அறிந்து நடந்துகொள்வார்என்பது பிளேடோவின் கருத்து. எனவே, தத்துவஞானியே அரசை வகிக்கவேண்டுமெனவும், வீரர்கள் அவனுக்குதவியாக இருக்கவேண்டுமெனவும் அவர் கூறியிருக்கிறார். ஏதேன்ஸ் போன்ற சிறு நகர இராஜ்ஜியங்களிலேயே உத்தமமான ஆட்சி நடைபெறக் கூடும் என்று பிளேடோவும் அரிஸ்டாடிலும் கூறியிருக்கின்றனர். ஏனெனில் தேசம் விஸ்தாரமாய்ப் பரவியதாயிருந்தால், அக்காலத்தில் எல்லா ஜனங்களையும் ஒரே ஆதிக்கத்திற்குட் படுத்துவது கடினமாகத் தோன்றியது. நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள தற்கால வசதிகளை அவர்கள் கனவிலும் கண்டவர்களல்லாராதலால், அரசாட்சியென்பது ஒரு நகரத்தின் எல்லைக்குள் மட்டுமே சாத்தியமாகும் என அவர்கள் எண்ணினர். அந்த நகரத்திலும் ஜனங்கள் அமைதியாக வியவசாயம் செய்துகொண்டும் யுத்

தப்பயிற்சி செய்துகொண்டும் இருக்கவேண்டுமாம்; ஆனால் சில்லரை வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பூரணப் பிரஜா உரிமை இல்லையாம். இராஜ்ஜிய நிர்வாகம், நீதி நிர்வாகம் முதலியவற்றை நடத்தும் அதிகாரிகள் ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென பிளேடோ கூறுகிறார். அரிஸ்டாடிலோ பிரபுக்களின் ஆட்சியும் ஜனங்களின் ஆட்சியும் கலந்திருந்தால் ஒருவரையொருவர் அக்கிரமமாக நடத்தாமல் இருப்பதற்கு அது ஒரு பாதுகாப்பாக இருக்கும் எனக் கூறியிருக்கிறார். ஆனால் அரசியல் நிர்வாகத்திற்கு அரசன் ஒருவன் அவசியம் இருந்துதான் தீர வேண்டுமென்று அரிஸ்டாடில் எண்ணவில்லை.

நாம் இதுவரை கூறி வந்ததினின்றும் கிரீஸ் தேசத்தில் அரசியல் எப்படி வளர்ச்சியடைந்ததென்பது விளங்கியிருக்கலாம். (1) ஆதிகாலத்தில் எல்லா நகர இராஜ்ஜியங்களிலும் அரசனும் அவனுக்குதவியாக இருசபைகளும் இருந்தன. (2) பிறகு பிரபுக்கள் செங்கோல் செலுத்தலாயினர் (3) பிரபுக்களின் ஆட்சியழிந்த பின்னர் சுயேச்சாதிபத்தியம் தொடங்கிற்று. (4) கடைசியாக ஜனநாயக ஆட்சி நிலைபெற்றதையும் அரிஸ்டாடில் முதலான பிரமுகர்களுடைய அபிப்பிராயத்தையும் கவனித்தோம். இதுவரை கிரேக்க நகரங்களின் தனியான ஆட்சியைப் பற்றியே கூறினோம்; ஆனால் நாளடைவில் பல கிரேக்க அரசுகள் ஒன்று சேர்ந்து சில பொதுவான வியவகாரங்களை நிறைவேற்றும் பொருட்டு ஐக்கியமான ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தின. அத்தகைய ஒற்றுமை கி. மு. மூன்றாவது நூற்றாண்டிலேயே ஏற்பட்டது; சத்துரு பயத்தைக் கருதியே அது ஏற்பட்டது. எல்லா நகரங்களுக்கும் பொதுவாகத் தோன்றிய பகைவர்களை எதிர்ப்பதற்கே பல கிரேக்க நகர

அரசுகள் அவ்வாறு ஒன்றுகூடின. உள்நாட்டு விஷயங்களைப் பற்றிய வரையில் அவைகள் சுதந்திரமாகவே இருந்து வந்தன; ஐக்கியசங்கத்துடன் சேராமல் விலகிநின்ற நாட்டுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளும்பொழுது ஐக்கிய நாடுகள் ஒற்றுமையாக நடந்துகொண்டன. ஒவ்வொரு நகரத்தினரும் மற்ற நகரங்களில் பல உரிமைகளையும் பெற்றுவந்தனர். நவீனகாலத்தில் அமெரிக்கா முதலிய இடங்களில் ஐக்கிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதைப் பற்றி முன்பு கூறினோம்; கிரேக்க அரசுகளே அதற்கு ஒருவிதத்தில் வழிகாட்டிகளாக இருந்திருக்கின்றன. இராஜீய சரித்திரத்தில் கிரேக்கர்கள் மிக முக்கியமான ஸ்தானத்தைப் பெற்றுள்ளனர். பண்டைக் காலத்திலேயே அவர்கள் எல்லா விதமான இராஜீய முறைகளையும் அநுஷ்டித்துப் பார்த்து, அவைகளின் குண தோஷங்களைக் கண்டு விளக்கிவிட்டனர். கிரேக்க ஞானிகளே அரசியல் தத்துவத்தை முதன் முதலில் ஒரு சாஸ்திரமாக அமைத்தெழுதினவர்கள். அவர்களது நூல்களை அஸ்திவாரமாகக் கொண்டே பல இராஜீய விற்பன்னர்கள் பின்னால் தமது நூல்களை எழுதியிருக்கிறார்கள்; மேனாட்டு நாகரிகத்திற்கும் கல்விக்கும் கிரீஸ் தேசமே உற்பத்தி ஸ்தானமென்று எல்லோரும் அதைக் கொண்டாடுவது வழக்கம்.

(2) உரோம் இராஜ்ஜியம்; பண்டைக்கால அரசுகளின் சில விசேஷ குணங்கள்:—கிரிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் கிரீஸ் தேசத்தின் மேன்மையழிந்து போய்விட்டது. ஐரோப்பாவின் பூர்வ சரித்திரத்தில் ஒருபாகம் முடிவடைந்துபோக, புதிய சகாப்தம் தொடங்கியது. அப்புதிய சகாப்தத்தில் இற்றாலியிலுள்ள உரோம் தேசமே ஓங்கியது. அது முதலில்

சிறு நகரமாயிருந்து படிப்படியாக விருத்தியடைந்து ஐரோப்பாக் கண்டத்தின் மேற்குப் பாதி முழுதிற்கும் தலைமை நகரமாயிற்று. உரோம் தேசத்தின் சரித்திராரம்ப காலத்தில் அரசனும் பிரபுக்கள் சபையும் மகாஜன சபையும் இருந்ததாக முன்பே கூறினோம். ஆனால் அங்கும் சிறிது காலத்திற்குப் பின் அரசகுலம் அழிக்கப் பட்டுப் போயிற்று. அதன்பின் பிரபுக்களின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது. நீண்டகாலம் வரையில் பிரபுக்களுக்கும் சாதாரண ஜனங்களுக்கும் தீவிரமான சச்சரவுகள் நடந்த பின் பொது ஜனங்களுக்கு இராஜீய உரிமைகள் அளிக்கப் பட்டன. அப்பொழுது பொதுஜன சபை யொன்றும் பிரபுக்களின் சபை யொன்றும் உண்டாயின. தங்கள் உத்தியோக காலத்தில் தவறுகள் செய்யும் அதிகாரிகளைக் கண்டிக்கும் அதிகாரம்கூடப் பொதுஜன சபைக்கு இருந்து வந்தது. மேலும் பொதுஜனங்களின் உரிமைகளைக் காக்கும் பொருட்டு அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு அதிகாரிகளும் அரசியல் நிர்வாகத்தை மேல் பார்வை பார்த்து வந்தனர்.

பொது ஜனங்கள் உரிமைகளைப் பெற்றிருந்தாலும் உண்மையான துரைத்தனம் பிரபுக்களின் வசத்திலேயே இருந்துவந்தது. ஏனெனில் பொது மக்களிற் பலர் விவசாயிகளா யிருந்தனர்; அவர்கள் விரும்பியதெல்லாம் நியாயமான ஆட்சியேயன்றி, அரசியலதிகாரம் தம்மிடமிருக்க வேண்டுமென்பதல்ல. மேலும் விவசாயத் தொழிலை விட்டுவிட்டு மகாஜன சபையின் கூட்டங்களுக்கு அடிக்கடி செல்வதும் அவர்களால் கூடவில்லை. அத்துடன் பொது ஜனங்களுக்கு இராஜீய உரிமைகள் கிடைத்தவுடனே, பிரபுக்கள் முன்போல அவர்களை வெறுப்புடன்

நோக்காமல் அவர்களுடன் கலந்துகொள்ளத் தொடங்கினர். அந்தக் கலப்பினால், பிரபுக்களிடத்தில் ஜனங்களுக்கும் விரோதம் இல்லாது போயிற்று. உரோம் தேசத்தின் சேனையானது வெளியில் சென்று புதிய புதிய தேசங்களை ஜயித்துக்கொண்டே வந்தது; உள்நாட்டு விஷயங்களை மேற்படி பிரபுக்களே கவனித்து வந்தனர். ஏழைகளுக்கும் தனவந்தர்களுக்கும் இருந்துவந்த வேற்றுமைகள் நீங்குவதற்கு வேறொரு வழியும் ஏற்பட்டது. புதிய தேசங்கள் உரோம் இராஜ்ஜியத்திற்குச் சேரச் சேர, ஏழைமக்கள் உரோமை விட்டுச்சென்று வேறிடங்களில் குடியேறலாயினர்; புதிய தேசங்களில் அவர்களுக்கு விஸ்தாரமான நிலங்கள் கிடைத்தன. அவ்வாறு பண்டைக் காலத்தில் கிரேக்கர்கள் எண்ணியதற்கு மாறாக, ஒரு பெருத்த இராஜ்ஜியம் ஐரோப்பாவில் தோன்றியது.

உரோம் இராஜ்ஜியத்தின் விஸ்தீரணமே, அதுவரையில் நிகழ்ந்துவந்த அரசியல்முறை மாறுவதற்குக் காரணமாயிருந்தது. அதுவரையில் உரோமில் நடைபெற்ற ஆட்சி பிரபுக்களின் ஆதிக்கமும் ஜனங்களின் ஆட்சியும் கலந்ததெனக் கூறினோம். ஆனால் புதிய தேசங்களை ஜயிப்பதற்கு மட்டும் உரோமின் அதிகாரிகளுக்குத் திறனிருந்ததேயன்றி அந்த இராஜ்ஜியத்தைப் பரிபாலிக்கும் திறமை இல்லாமற் போய்விட்டது. ஐரோப்பாவின் மேற்குப்பாகம் முழுதையும் பிடித்துக்கொண்டபின் மேலும் பிடிப்பதற்கு வேறு தேசங்கள் இல்லாமற்போகவே, ஏழைமக்கள் அதிருப்தியடைந்தனர். அதனால் உரோம் இராஜ்ஜியத்தில் பழைய ஆட்சிமுறை மறைய, சுயேச்சாதிபதிகளான அரசர்கள் மறுபடி தோன்றலாயினர். ஆதியில் உரோமின் அரசர்கள் விலக்கப்பட்ட பிறகு பிரபுக்களின் ஆட்சி ஸ்தாபிக்கப் பட்

டது; ஐந்தாறு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அரசர்களே மறுபடியும் ஆட்சி செய்யலாயினர். ஜூலியஸ் ஸீஸர், அகஸ்டஸ் என்ற உரோம் இராஜ்ஜியத்தைப் பரிபாலித்து வந்த சக்கரவர்த்திகள் ஐரோப்பிய சரித்திரத்தில் என்றுமழியாத கீர்த்தியைப் பெற்றிருக்கிறார்கள்.

கிரீஸ், உரோம் ஆகிய இரண்டின் சரித்திரங்கள் பொதுவாக ஐரோப்பாவின் பூர்வீக சரித்திரமாக இருந்து வருகின்றன. அவற்றின் பின்னர் பதினாறுவது நூற்றாண்டு வரையில் நிகழ்ந்த வரலாறு மத்தியகால சரித்திரமெனவும் பிறகு இக்காலம்வரை நிகழ்ந்த வரலாறு நவீன கால சரித்திரமெனவும் குறிக்கப்படுகின்றன. பூர்வீக சரித்திரத்தைப் பற்றி இன்னும் சில விசேஷங்களையும் நாம் அறிந்துகொள்ளலாம். அக்காலத்தில் பிரஜைகளின் உரிமைகள் வெகுவாகக் கட்டுப்படுத்தப் பட்டிருந்தனவென்றும், பிரஜைகள் அரசாங்கத்தினுடைய அடிமைகளாகவே இருந்து வந்தனரென்றும் சிலர் கூறுவர். ஆனால் ஸ்பார்ட்டா என்ற கிரேக்க நகரத்தில் தவிர, வேறிடங்களில் இவ்வித நிலைமை இருந்ததாகத் தெரியவில்லை. ஸ்பார்ட்டா நகரத்தில் மட்டும் ஜனங்கள் மும்முரமாகப் போர்த்தொழிலுக்குப் பயிற்றப்பட்டனர். மேலும் பழைய காலத்தில் சட்டமியற்றும் வழக்கமே கிடையாதெனக் கூறலாம். இக்காலத்தில்சட்டசபை செய்துவரும் வேலையை அக்காலத்திய மகாஜனசபை செய்யவில்லை. பழைய வழக்கங்களை யொட்டியும் முன்னோர்களின் வழியைப் பின்பற்றியுமே இராஜீய நிர்வாகம் அப்பொழுது நடைபெற்றது. உரோம் இராஜ்ஜியம் பெருகியவுடன் தான் சட்டமியற்றும் வழக்கம் முதன்முதலில் உண்டானதாய்த் தோன்றுகிறது. ஏனெனில் உரோமர்களல்லாத ஜாதியினருக்கும் பொருந்து

மாறு இராஜ்ய முறையானது பல சட்டங்களாக வரையப் படவேண்டி யிருந்தது. உரோமின் சக்கரவர்த்திகளே அத் தகைய சட்டங்களை இயற்றி அவைகளை யொட்டி நிர்வாகம் நடத்தலாயினர்.

3. ஜெமீந்தார்களின் ஆதிக்கம்:உரோமை ஆண்டு வந்த பிரபலமான சக்கரவர்த்திகளின் காலத்திற்குப் பின்னர் சில அநாகரிக ஜாதியினர் அதன்மீது படையெடுத்து வந்து ஐரோப்பாவையே தாறுமாறுக்கி விட்டனர்; அதனால் பெயருக்கு மாத்திரம் உரோம் இராஜ்ஜியம் இருந்து வந்ததேயன்றி உண்மையில் ஐரோப்பா முழுதும் பல சிறு ஜெமீந்தார்களின் வசமாய்விட்டது. மேற்படி ஜெமீந்தார்கள் சுமார் பத்து நூற்றுண்டுகளுக்கு அதிகமாகவே ஐரோப்பாவில் அதிகாரம் செலுத்தி வந்தனர்; அரசர்களுடைய அதிகாரத்தைக்கூட அவர்கள் எதிர்த்து வரலாயினர்

அவ்வாறு ஜெமீந்தார்களின் வசம் அதிகாரம் சென்றதற்குப் பல காரணங்கள் இருந்தன. நிலத்தைப் பயிரிட்டு வந்த வியவசாயிகள் அடிக்கடி நேரிட்ட போர்களிலிருந்தும் உள்நாட்டுக் கலகங்களிலிருந்தும் தங்களைக் காக்கவல்ல ஒரு பிரபுவினிடம் அடைக்கலம் புகுந்து அவருக்குத் தாம் உதவுவதாகவும், அவர் தம்மைக் காப்பாற்ற வேண்டுமென்றும் ஏற்பாடு செய்துகொண்டனர். அதனால் நாளடைவில் ஒரு பிரபுவினிடம் பலர் அண்டிப் பிழைப்பது வழக்கமாய் விட்டது; தமது பண்ணையாட்களுக்குத் தம்மால் இயன்ற உதவியை மேற்படி ஜெமீந்தார் செய்துவருவார். மேலும் அக்காலத்தில் நிலத்தைப் பெற்றிருந்தவரிடமே அரசியலதிகாரம் இருந்து வந்தது. ஒவ்வோர் இராஜ்ஜியத்திலும் ஓர் அரசனுக்குக் கீழ் இத்தகைய பல ஜெமீந்தார்கள் இருந்தனர். ஒவ்வொரு ஜெமீந்தாருக்கும் கீழ் ஏராளமான

பண்ணையாட்கள் இருந்தனர். ஜெமீந்தார்களனைவரும் அரசருக்கு அபாய சமயத்தில் உதவுவதாக வாக்குதத்தம் செய்துகொடுப்பர்; அவ்வாறே பண்ணையாட்கள் தமது எஜமானருக்கு உயிரையும் கொடுப்பதாக பிரதிக்ஞை செய்து கொடுப்பார்கள். ஆனால் பண்ணையாட்களோ அரசருக்குக் கீழ்ப் படிந்தவர்களல்லர்; தங்களது எஜமானரைப் பின்பற்றி, அரசரையும் அவர்கள் எதிர்க்கத் தொடங்குவார்கள். அவ்வித சமூக ஏற்பாட்டின் பயனாகவே மத்திய காலங்களில் ஐரோப்பாக் கண்டத்தில் அரசருடைய ஆட்சி நிலைத்திராமல் எப்பொழுதும் நிச்சயமற்றதாயிருந்தது. அந்த அபாயத்தை இங்கிலந்தின் அரசரான வில்லியம் என்பவர் 11-ம் நூற்றாண்டில் அகற்றிவிட்டார். அவர் எல்லா ஜெமீந்தார்களையும் அண்டி வாழும் பண்ணையாள் ஒவ்வொருவனும் தமக்கும் நேராகப் பிரதிக்ஞை செய்துகொடுக்க வேண்டுமென வற்புறுத்தினார். அதனால் தேசத்தில் ஒவ்வொரு பண்ணையாளும் முதலில் அரசரையும் பின்னரே தமது எஜமானரான ஜெமீந்தாரையும் கௌரவிக்க வேண்டியதாயிற்று; அரசருக்கு விரோதமாய் அவர்கள் தமது எஜமானருடன்சேர்ந்து கொள்ள மறுத்துவிட வேண்டியதாயிற்று. ஆனால் ஐரோப்பாக் கண்டத்திலிருந்த மற்ற நாடுகளிலோ மேற்படி ஜெமீந்தார்கள் தங்களிஷ்டப்படி யெல்லாம் நடந்து வந்தனர். பதினாறுவது நூற்றாண்டிலேயே அவர்களுடைய செல்வாக்கு அடியோடு குறைந்து ஒரு வரம்பிற்குட்பட்டது. ஆனாலும் அவர்கள் ஐரோப்பாவிற்கு அநேக நன்மைகளையும் செய்திருக்கின்றனர். உதாரணமாக, தேசிய உணர்ச்சியையும் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் குணத்தையும் ஜனங்களிடை அவர்கள்தான் பரப்பி வந்தவர்கள்.

(4) **ஐரோப்பாவில் மதஸ்தாபனத்தின் ஆதிக்கம்:—** ஐரோப்பாவின் சரித்திரத்தில் முக்கியமான நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்டு வந்த இன்னொரு ஸ்தாபனத்தைப்பற்றியும் நாம் சில சங்கதிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். அது கிரிஸ்துமதப் பாதிரிமார்களைப் பற்றிய ஸ்தாபனம். ஐரோப்பாவில் கிரிஸ்துமதம் பரவியவுடன் மடங்கள் ஏற்பட, அவைகளுக்காக மடாதிபதிகளும் நியமிக்கப்பட்டனர். அவர்களது தலைவரான போப் என்பவர் உரோம் தேசத்தில் இருந்துவந்தார். மேற்படித் தலைவரும் மடாதிபதிகளும் ஐரோப்பாவின் இராஜீய விஷயங்களில் நீண்டகாலம் வரையில் சம்பந்தப்பட்டு வந்தனர். ஆனால் அவர்களே எந்த இராஜ்ஜியத்தையும் பூர்த்தியாய் ஆண்டுவரவில்லை. அவ்விதமான ஆட்சியொன்று ஏற்பட்டிருந்தால், அதை மதாசிரியர்களது ஆட்சி எனக் கூறலாம். கிரீஸ் தேசத்திலும் உரோம் தேசத்திலும் மதாசிரியர்கள் இராஜீய விஷயங்களில் அதிகமாய்த் தலையிட்டதாகத் தெரியவில்லை. ஆனால், கிரிஸ்துமதம் பரவியபின்னர் அவர்களுக்கும் அதிகமான மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டன. அவர்கள் முதலில் உலக விஷயங்களில் தலையிடாமல் பரிசுத்தமாகத் தனித்துநின்றனர்; அவர்களது புத்திமதியைக்கேட்க அநேகமாய் அரசர்களே அவர்களை நாடிவந்தனர். அதனால் காலக்கிரமத்தில் அவர்கள் இராஜீய விஷயங்களில் அக்கரை கொள்ள நேர்ந்தது. ஏசுகிரிஸ்துவின் உபதேசங்களில் அத்தகைய மதஸ்தாபனம் ஒன்று அவசியமெனக் கூறப்படவில்லை யானாலும், அது விருத்தி யடைந்துகொண்டுபோகப் போக, அதன் மடாதிபதிகளுக்கு இகலோக விஷயங்களிலும் பற்றுத லேற்பட்டது. எல்லா அரசர்களும் தங்களது அதிகாரத்தின் கீழே இருக்கவேண்டுமென்று கிரிஸ்து

மதத் தலைவரான போப் கூறினர்; அரசர்களுக்குள் சண்டையேற்பட்டால் அதைத் தாமே தீர்த்துவைக்கவேண்டுமென்ற உரிமையையும் அவர் வகித்து வந்தார். போப்பினுடைய வாக்கும் தெய்வ வாக்காக ஒரு காலத்தில் மதிக்கப்பட்டு வந்தது. அரசர்களும் அவரை வழிபட்டு வந்தனர். ஒரு பெரிய சக்கரவர்த்தியை மூன்று தினங்கள் வரையில் பனியில் காத்து நிற்கும்படி கூட ஒரு போப் செய்து விட்டார். இவ்வாறு மதஸ்தாபனத்திற்கு கௌரவம் ஏற்பட்டதற்குக் காரணங்கள் பல இருந்தன. முன்பு கூறியபடி அநாகரிக மனிதர்கள் வந்தபின் ஐரோப்பா முழுதும் சீர்குலைந்த பொழுது, மேற்படி மதஸ்தாபனம் மட்டும் அதனல் பாதிக்கப்படாமல் தனித்து நின்றது. மேலும் மடாதிபதிகளே கல்வியையும் கலைகளையும் பாதுகாத்து வந்தனர். அந்த நிலைமை பதினறும் நூற்றண்டு வரையில் இருந்து வந்தது; அதன் பின்னர் கிரிஸ்துமத ஸ்தாபனத்திற்கு ஒரு பெருத்த இடி வீழ்ந்ததுபோல ஒரு மாறுதல் ஏற்பட்டது. போப்பினுடைய ஆதிக்கத்தை உதறி எறிந்துவிட்டு அநேகக் கிரிஸ்துவர்கள் பிரிந்து தனியான கோஷ்டியாராய்விட்டனர். போப் இராஜீய வியவகாரங்களில் தலையிடுவதை அடியோடு மறந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதையே கவனிக்கும்படியான காலம் வந்துவிட்டது. பழைய மூட நம்பிக்கைகள் மறைய மறைய, ஜனங்களுக்கு மத ஸ்தாபனத்தினிடம் இருந்த பயபக்தியும் குறையத் தொடங்கின. உலகத்து அரசர்க ளெல்லோரையும் தமது கீழதிகாரிகளாகச் செய்து தாமே தெய்வாக்ஞை பெற்றவர்போல உலக இரக்ஷணம்செய்துவரக் கடமைப்பட்ட தெய்வப்பிரதிநிதிகள் என்று சில போப்மார்கள் எண்ணி வந்தது கனவு ஆய்விட்டது. இராஜீய ஸ்தாபனமும் மத ஸ்தாபனமும் வெவ்வேறாய்ப் பிரிக்கப்பட்டுப் போயின.

(5) ஐரோப்பாவில் மத்திய காலத்தில் தோன்றி வளர்ந்த நகரங்கள்:—ஐரோப்பிய சரித்திரத்தில் மத்திய காலங்களில் பல தனி நகரங்கள் பிரபலமடைந்து ஓங்கியிருந்தன. ஓர் இராஜ்ஜியத்திற்குள் அம்மாதிரியான பல தனி நகரங்கள் இருந்தன. கிரீஸ்தேச சரித்திரத்தி லிருந்த ஏதென்ஸ் முதலான நகரங்களைப் போல் அவைகள் தனித் தனியான இராஜ்ஜியங்களா யிருக்கவில்லை யானாலும், சுதந்திரமும் விசேஷ உரிமைகளையும் பெற்று இராஜ்ஜியத்தின் முக்கிய அம்சமாக இருந்து வந்தன. ஐரோப்பா முழுதும் ஒரே மாதிரியாகவும் ஒரே முறையைப் பின்பற்றியும் இருந்த அத்தகைய நகரங்கள் ஏராளமாகக் கிடந்தன. கிரேக்கர்களின் நகரங்களுக்கும் மேற்படி மத்தியகால நகரங்களுக்கும் பல வித்தியாசங்கள் இருந்தன. (1) கிரீஸ் தேசத்தில் மனிதரை அடிமையாய் விலைக்கு வாங்கும் வழக்கம் பரவியிருந்தது. கிரீஸ் தேசத்தின் அநுஷ்டானத்தில் அந்த வழக்கம் ஒன்றே ஒரு பெருத்த களங்கமாய் இருந்து வந்தது. சாதாரணமான கைத் தொழில்களை அடிமைகளே செய்துவர வேண்டுமெனவும், பிரபுக்களும் கௌரவம் வாய்ந்த சுதந்திரப் பிரஜைகளும், மேற்படி தொழில்களைச் செய்வது ஈனமான காரியம் எனவும் கிரேக்கர்கள் எண்ணினர். ஆனால் ஐரோப்பாவில் மத்திய காலத்தில் தோன்றிய நகரங்களிலோ கைத்தொழிலுக்கு விசேஷ கௌரவம் ஏற்பட்டது; அங்கு தொழிலாளிகள் படிப்படியாய்ப் பல உரிமைகளைப்பெற்று வந்தனர்.(2) கிரீஸ் தேசத்தின் நகரங்களில் வியவசாயமே முக்கியத் தொழிலாக இருந்ததாகையால், நிலம் வைத்திருந்தவர்களே முக்கியமான பிரஜைகளாய்க்கருதப்பட்டனர். ஆனால் புதிதாய் உண்டான நகரங்களிலோ சொந்தமாக நிலம் படைத்தவர் எவரு

மில்லை. அங்கிருந்தோ ரனைவரும் கைத்தொழில் செய்து வந்த சாமானிய மனிதரே. நிலத்திற்கு உரியவர்களாயிருந்த ஜெமீந்தார்கள் மேற்படி நகரங்களுக்கு வெளியில் இருந்த தமது புராதனக் கோட்டைகளிலேயே இருந்து வந்தனரன்றி, புதியவையாய் உண்டான நகரங்களில் வசிக்கவில்லை. அதுவும் ஒரு விதத்தில் நன்மையாகவே இருந்தது. செருக்கும் ஆணவமும் கொண்டிருந்த ஜெமீந்தார்களின் உபத்திரவமின்றி மேற்படி நகரங்களில் தொழிலாளிகள் அபிவிருத்தி யடைந்து புதிய முறைகளில் தமது வியவகாரங்களை நடத்திவரலாயினர். அவ்வாறே நகரங்களுக்கும், நாட்டுப் பிரதேசங்களுக்கும் வேற்றுமை ஏற்பட்டது. நாட்டுப்புறத்தில் இருந்த ஜெமீந்தார்களே இராஜ்ஜியத்தில் முக்கிய பதவிகளை வகித்துவந்தனர்; நகர ஜனங்களோ பிறரது உபத்திரவமின்றித் தமது வியவகாரங்களை நடத்தி வந்தனர். அவ்வாறு அபிவிருத்தி யடைந்த தொழிலாளிகளினாலேயே பட்டணங்கள் பிற்காலத்தில் பெயரும் புகழும் பெற்ற தலைமை நகரங்களாக மாறின. அரசாங்கத்தார் முதலில் மேற்படி நகரங்களின் வளர்ச்சியையும் சுயாதீனத்தையும் தடுக்க சக்தியற்றவராயிருந்தனர். அவர்களது ஆதரவின்றியும், தமது சுயேச்சைப்படியும் நகர ஜனங்கள் முனிசிபல் நிர்வாகத்தை நடத்தி வந்தனர். ஆனால் அந்த நகரங்களில் முதலில் எல்லோரும் சமமாயிருந்த நிலைமை நாளடைவில் மாறிப்போக, அதிகப் பணம் பெற்றவரும் வேலைத் திறமை யுடையவரும் ஒரு ஜாதியினராகவும், மற்றவர்கள் கீழ் ஜாதியினராகவும் கருதப்படலாயினர். மேல் ஜாதியினர் ஒரு சங்கமேற்படுத்தி அதன் பலத்தினால் அரசாங்கத்தாரிடமிருந்து பல உரிமைகளைப் பெற்று வந்தனர். நகரத்திற்குள் நடந்த வியாபாரத்தை அவர்களே

மேல் பார்வை பார்த்து வந்தனர். அவர்கள் முதலில் சாதாரணத் தொழிலாளிகளா யிருந்து பிறகு படிப்படியாக முன்னேற்ற மடைந்து எஜமான ஸ்தானத்தை அடைந்தனர். ஆனால் நாளடைவில் அவர்களுக்கும் கீழ்த் தொழிலாளிகளுக்கும் சச்சரவுகளும் மனஸ்தாபங்களும் ஏற்படலாயின. கீழ்த் தொழிலாளிகளும் தனியான சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்கத்தி னிடமிருந்து சிற்சில சுதந்திரங்களைப்பெற்று வந்தனர். ஆனால் 16,17-ம் நூற்றூண்டுகளில், அத்தகைய நகரச் சங்கங்கள் சுயாதீனமாக நடந்துகொண்டதுபற்றி, மத்திய துரைத்தனத்தின் அதிகாரத்திற்கு பங்கம் ஏற்படவே, அவைகளின் சுதந்திரங்கள் பிடுங்கப்பட்டுப் போயின. அதன்பிறகு ஷை நகரங்கள் தனியான ஸ்தாபனங்களாய் இல்லாமல் மத்திய துரைத்தனத்தின் ஆதிக்கத்திற் குட்பட்டு விட்டன.

(6) மத்தியகால அரசுகள்; பொதுஜன சபைகள் :— ஐரோப்பிய சரித்திரத்தில் மத்தியகாலம் எனப்படும் (13 முதல் 16 வரையிலுள்ள) நூற்றூண்டுகளில் பொதுவாய் அரசாங்கம் எவ்வாறு நடைபெற்று வந்ததென்பதை நாம் கவனிப்போம். அப்பொழுது எல்லா தேசங்களிலும் அரசன் ஒருவன் இருந்தான் ; ஆனால் அவன் மதாசிரியர்களும், பிரபுக்களும், நகரப் பிரதிநிதிகளும் அடங்கிய சபைக்கு சிறிதளவு கட்டுப்பட்டு நடந்துவந்தான். தற்காலத்து அரசாங்கத்தாரது வருமானம் முக்கியமாக வரிகளின் மூலமே வருகிறது. ஜனங்களுக்கு எவ்வளவு வரி விதிக்கவேண்டுமென்பதை இக்காலத்தில் சட்டசபையே தீர்மானிக்கிறது ; அக்கிரமமான வரியை விதிக்காமலும், வரிப்பளுவு அதிகம் ஆய்விடாமலும் சட்டசபையார் கவனித்துக் கொள்ளுகின்றனர். ஆனால் பண்டைக் காலத்தில் கிரீஸ் தேசத்

தில் வரிவிதிக்கும் விஷயம் அரசாங்கத்தின் முக்கியமான கடமையாய்க் கருதப்படவில்லை எனத் தெரியவருகிறது. அரிஸ்டாடில் என்னும் ஆசிரியர் தமது நூலில் வரியைப் பற்றிய பிரஸ்தாபத்தையே எடுத்துக் கூறவில்லை. எவ்விதமாகிலும் பொருள்தேடி அரசாங்கத்தைத் திறமையாக நடத்த வேண்டுமென்றே அவர் கருதினார்போலும். ஆனால் 15, 16-ம் நூற்றாண்டுகளில் ஜனங்களுக்கு வரி விதிக்க வேண்டிய முறையைப் பற்றிப் பல முக்கியஸ்தர்கள் அபிப்பிராயம் கூறத் தொடங்கினர். 10-ம் நூற்றாண்டில் ஜெமீந்தாரர்கள் அரசனுக்குக் குறித்த அளவு பணமோ பொருளோ கொடுத்துதவுவதாகவும், யுத்தகாலத்தில் தாம் உதவுவதாகவும் வாக்குறுதி செய்து கொடுத்தனர். அப்பொழுது அரசனுக்கெனத் தனியாக சில நிலங்களும் இருந்தன. ஆனால் நாளடைவில் அந்த வருமானம் அரசனுக்குப் போதவில்லை. அவன் ஏராளமான சம்பளம் கொடுத்து சிப்பாய்களை நியமிக்க வேண்டியதாயிற்று. அதிகமான கப்பம் செலுத்துவதற்கு ஜெமீந்தார்கள் இணங்கவில்லை. எனவே பிரபுக்களும், ஜனப் பிரதிநிதிகளும் அடங்கிய சபையின் உதவியைக் கொண்டு அரசன் வரி விதிக்கவேண்டியது அவசியமாயிற்று. அவர்களது சம்மதமின்றி அரசன் வரி வசூலிப்பது சாத்தியமற்றதாயிற்று. அதனால் பொது ஜன சபைக்கு கௌரவம் ஏற்பட வழியுண்டாயிற்று. ஷை சபைகளில் பிரபுக்களும் கிரிஸ்துவ மடாதிபதிகளும் ஸ்தானம் வகித்து வந்தனரெனக் கூறினோமல்லவா? அதில் புதுமையொன்றும் இல்லை. ஏனெனில் பழைபகாலம் முதற்கொண்டே பிரபுக்களும் ஜெமீந்தார்களும் அரசனது மந்திராலோசனை சபையில் சம்பந்தப்பட்டு வந்திருக்கின்றனர். ஆனால் மத்தியகாலத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டு

கைத்தொழிலில் அபிவிருத்தி யடைந்திருந்த நகரங்களி லிருந்தும் சில பிரதிநிதிகள் ஷை சபையில் ஸ்தானம் பெறலாயினர். ஜனப் பிரதிநிதிகள் இராஜ்ஜிய நிர்வாகத் தில் கலந்துகொள்ள ஆரம்பித்தது அரசனுக்கு அநுகூல மாகவே இருந்தது. ஏனெனில் பிரதிநிதிகளின் சம்மதி யைப்பெற்று, அவன் புதிய வரிகளை விதிப்பதும் வசூலிப் பதும் எளிதாயிருந்தன. மற்றும் சில இடங்களில் அரச னது முயற்சியின்றி, ஜனங்கள் தாமாகவே இராஜீய விஷ யங்களில் கலந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் ஷை சபைகளில் ஸ்தானம்பெற விரும்பினர். தற்காலத் தில் பார்லிமென்டுகளும் சட்டசபைகளும் இராஜ்ஜிய நிர்வாகத்தை நடத்திவரும் முறை அப்பொழுதே தொடங்கி விட்டது எனக் கூறலாம். ஆனால் இங்கிலந்தைத் தவிர மற்ற தேசங்களில் மேற்படி பிரதிநிதி சபை கள் தொடர்ச்சியாய் அபிவிருத்தி யடைந்து வராமல் நடுவில் சக்தியிழந்து மலினமடைந்து போயின. பிரதிநிதி சபை யில் பிரபுக்களுக்கும் சாதாரண அங்கத்தினர்களுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டதே அதற்குக் காரணம். இங்கி லந்தில் மட்டும் 10, 11-ம் நூற்றுண்டுமுதல் பார்லிமென்டு சபை தொடர்ச்சியாய் இருந்து வந்திருக்கிறது. ஆனுலும் பொதுவாகப் பேசுமிடத்து ஐரோப்பா முழுதும் மத்திய காலங்களில் பரவியிருந்த மேற்படி பிரதிநிதி சபைகள், தேசத்தினரிடையே சகோதரபாவத்தையும் ஒற்றுமையை யும் தாமெல்லோரும் ஒரே தேசத்தினர் என்ற பற்றையும் உண்டாக்கின.

(7) சுயேச்சாதிபதிகளான அரசர்களின் காலம் :— 15-ம் நூற்றுண்டுமுதல் ஐரோப்பிய சரித்திரத்தில் இன்னு மொரு புதிய மாறுதல் தொடங்கியது. அதற்குமுன்

ஆறேழு நூற்றுண்டுகளாயிருந்து வந்த சமூக ஏற்பாடும் இராஜீய அமைப்பும் பலவாருக மாறிவிட்டன. 15-ம் நூற்றுண்டில் ஐரோப்பா முழுதும் ஒரு புத்துயிரும் புத்துணர்ச்சியும் தோன்றின. ஜனங்களெல்லோரும் அறிவுப் பெருக்கை யடைந்தனர்; அப்பொழுதுதான் அச்சுயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது; அமெரிக்கா என்ற கண்டம் இருந்தது அப்பொழுதே ஐரோப்பியருக்குத் தெரிந்தது. ஐரோப்பாக் கண்டத்தின் ஜனங்கள் அதுவரையில் தூங்கி அப்பொழுதே விழித்தவர்கள் போலத் தெளிவாகவும் ஊக்கத்தோடும் உலக வியவகாரங்களை நடத்தலாயினர். அப்பொழுது கிரிஸ்துமதத்தில் இரண்டு பிளவுகள் தோன்றியதென நாம் முன்பே கூறியிருக்கிறேம். போப் என்ற மதகுருவின் ஆதிக்கத்தை மீறி ஒரு பகுதியினர் பிரிந்து போயினர். அதுநிற்க, 16-ம் நூற்றுண்டிலும் ஜெமீந்தார்களின் அதிகாரம் முழுதும் குன்றிவிட வில்லை; அது படிப்படியாக மலினமடைந்து கொண்டே வந்தது. அப்போதைக்கு ஆறேழு நூற்றுண்டுகளாய் ஐரோப்பிய தேசங்களில் அரசர்கள் இருந்து வந்தனராலும், அவர்கள் ஜெமீந்தார்களுடனும் நகர ஜனங்களுடனும் அடிக்கடி போராட்டம் நடத்துவதே வழக்கமாயிருந்தது. ஒரு சமயம் அரசனும், மறுசமயம் பிரபுக்களும் வலுத்து நின்றனர். நிரந்தரமானதும் அமைதியுள்ளதுமான தொடர்ச்சியான போக்கு அப்பொழுது காணப்படவில்லை. ஆனல் 17-ம் நூற்றுண்டிலோ அந்த நிலைமை மாறியது. ஐரோப்பா முழுதிலும் திறமைசாலிகளான அரசர்கள் இருந்தனர். அதைக்கொண்டு 18-ம் நூற்றுண்டுகளை 'சுயேச்சாதிபதிகளான அரசர்களின் காலம்' என நாம் குறிக்கலாம். இங்கு நாம் இன்னொரு விஷயத்தை கவனிக்கவேண்டும். ஐரோப்-

பாவிலுள்ள பற்பல தேசங்களிலும் பண்டைக்காலம் முதலே அரசகுலம் பரம்பரையாய் இருந்து வந்திருக்கிறது. இங்கிலந்தில் 1000 வருஷங்களுக்கு முன் அரசாண்ட அரசருடைய இரத்தமே நமது ஜார்ஜ் சக்கரவர்த்தியின் தேகத்திலும் இருந்துவருகிறது. ஆனால் ஐரோப்பிய தேசங்களின் அரசர் குலத்தில் சிலர் புகழுடையோராகவும், சிலர் பலஹீனர்களாகவும் இருந்திருக்கின்றனர். அரசர் குலத்தை வேரறுக்க அப்பொழுது எவரும் துணியவில்லை; இப்பொழுதும் கூட ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய சில தேசங்களில் தவிர ஏனைய இடங்களில் அரசர் குலம் இருந்தே வருகிறது. இப்பொழுது அரசர்களுக்கு உண்மையான அதிகாரம் கிடையாது; பண்டைக் காலங்களிலோ ஜெமீந்தார்கள் அவர்களை எதிர்த்து வந்தனர். ஆதலால் ஐரோப்பிய சரித்திரத்தில் 17, 18-ம் நூற்றுண்டுகள் சுயேச்சாதிபதிகளான அரசர்களின் காலம் என்றால்,ஐரோப்பிய இராஜீய வாழ்க்கையில் அந்தக் காலத்தில் ஏதோ புரட்சி ஏற்பட்டதாக எண்ணிவிடக் கூடாது. பழைய அரசியல் முறையில் அத்தியாவசியமாயிருந்து வந்த அரசன் அப்பொழுது பிரபலமாக விளங்கினான் என்பதே கருத்து;அவ்வாறே இருபதாம் நூற்றுண்டில் மறுபடி சக்கரம் சுழன்று அரசியல் முறையின் மற்றோர் அம்சமான சட்டசபை (பார்லிமென்டு) பிரபலமடைந்து நிற்கிறது.

17-ம் நூற்றுண்டில் சுயேச்சாதிபதிகளான அரசர்கள் பிரபலமாக விளங்கியதற்குப் பல காரணங்கள் கூறலாம். (1) ஒரு தேசத்தில் இருந்த ஜனங்கள் முன்போலத் தனியாய் இல்லாமல் ஒற்றுமையடைந்ததனால் தம்மெல்லோரையும் சமமாய் ஆளும் ஒரு தலைவன் வேண்டுமென விரும்

பலாயினர். (2) பழைய காலத்து பல ஜெமீந்தார்களுடைய கொடுமையிலிருந்து நீங்கவேண்டுமென்ற ஓர் அவா ஜனங்களுக்குத் தோன்றியது. தங்களுடைய எஜமானர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடுவதும் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. பழைய முரட்டுக் குணம் மறைய மறைய அமைதியான வாழ்க்கையையே குடிகள் விரும்பலாயினர். அவ்வமைதியை உண்டாக்கக் கூடியவன் பலவானான அரசனேயாவான். (3) கிரிஸ்துமதம் 16-ம் நூற்றாண்டில் இரண்டு பிரிவுகள் ஆனவுடன் ஒவ்வொரு மதப்பிரிவையும் சேர்ந்தவர்கள் தம் தம் அரசனையே சார்ந்துநின்று அவனது அன்பு ஆதரவுகளைப் பெறலாயினர். இரண்டு மதக் கட்சிகளுக்கும் பலமான போர்கள் ஏற்பட்டன. அந்த போர்களில் ஒரு தலைவன் அவசியம் இருந்தேயாக வேண்டுமென்று ஜனங்கள் நன்குணர்ந்தனர். இவ்வாறு தேசத்திற்கு நடுநாயகமாயும், ஜனங்களுடைய எஜமானனாகவும் அரசன் ஆய்விட்டான். ஸ்பெயின், பி/[2]ரான்ஸ், இங்கிலந்து, ஜெர்மனி முதலிய எல்லா தேசங்களிலும் 16, 17, 18-ம் நூற்றாண்டுகளில் நிரம்பவும் பிரபலமான அரசர்கள் ஆண்டு வந்தனர். முக்கியமாக பி/[2]ரான்ஸ் தேசத்தில் அரசர் குலம் அப்பொழுது ஒளிமிகுந்து இருந்துவந்தது; ஐரோப்பா முழுதும் பி/[2]ரான்ஸ்தேசத்தின் நாகரிகத்தையே பின்பற்றலாயிற்று; இன்னும்கூட பி/[2]ரான்ஸ் தேசமே மேனாட்டு நாகரிகத்திற்கு உறைவிடமாய் உள்ளது. இவ்வாறு அரசர்கள் ஆண்டுவந்தபொழுதும் ஜனப்பிரதிநிதிகளின் சபை தனது வேலையைச் செய்துவந்தது. ஆனால் அதற்கு அக்காலத்தில் அதிக முக்கியமான வேலை இல்லையென்றே கூறவேண்டும். உதாரணமாக, பி/[2]ரான்ஸ் தேசத்தில் 150 வருஷகாலம் சட்டசபையே கூடவில்லை. அரசர்கள்

ஜனங்களுடைய நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்று சுயேச்சையாய் இருந்து வந்தனர். ஷை அரசர்களுள் முக்கியமானவர்கள் பி/2ரான்ஸ் தேசத்தில் பதினான்காம் லூயீ; ஜெர்மனியில் மகா பி/2ரஷரிக்; ஸ்பெயின் தேசத்தில் இரண்டாம் பி/2லிப் முதலியவர்களாவர்.

(8) 18-வது நூற்றாண்டின் இராஜீயப் புரட்சிகள்:— ஆனால் அரசியல் முறைச் சக்கரம் மறுபடியும் 18-ம் நூற்றாண்டில் ஒரு தடவை சுழன்று ஒரு புதிய மாறுதலை உண்டாக்கியது. அப்பொழுது அரசர்களுடைய பெருமை மறைந்துபோக, ஜனப்பிரதிநிதிகளும் அவர்கள் மூலம் ஜனங்களும் முக்கியமான உரிமைகளையும் அதிகாரத்தையும் அடையலாயினர். அந்த மாறுபாடே இப்பொழுதும்நடந்து கொண்டு போகிறது. அரசர்கள் மகத்துவம் பெற்றிருந்த காலத்தில், பி/2ரான்ஸ் தேசமே முதன்மையாக நின்றதெனக் கூறினோமல்லவா? அந்த பி/2ரான்ஸ் தேசத்திலேயே அரசர் குலம் அடியோடு வேரறுத்து விடப்பட்டது. பகலுக்குப் பின் இரவும் இருளும் தொடர்ந்து வருவதுபோல பதினான்காம் லூயீஎன்ற அரசன் ஆண்டபின் சிறிதுகாலத்திற்கெல்லாம் பி/2ரெஞ்சுதேசத்தின் அரசர்குலம்இராஜீயப் புரட்சியென்னும் வெள்ளத்தில் அகப்பட்டுமீளமுடியாதபடி அடித்துக்கொண்டு போகப்பட்டது. ஐரோப்பாவின் மற்ற தேசங்களில் அரசர்குலம் வேரறுக்கப்படாமற் போனாலும், அங்கும்அரசருடைய விஷப்பற்கள் பிடுங்கப்பட்டுவிட்டன. இத்தகைய பெரிய மாறுதல்கள் ஏற்பட்டதற்கான காரணங்களை நாம் இனி ஆராய்வோம். உலகத்தில் பொது நலத்திற்கு அவசியமானபொழுது ஒரு புது ஸ்தாபனம் தோன்றுவதும், அந்த அவசியம் தீர்ந்தவுடன், அது அழிந்துவிடுவதும் அநுபவ திருஷ்டாந்தமான இயற்கை

விதியாய் இருந்து வருகிறது. அதற்கேற்ப, மத்திய காலங்களில் பல ஜெமீந்தார்களினுடைய ஆதிக்கத்திற்குட்பட்டுத் தவித்துவந்த ஜனங்களைக் காப்பாற்றும் பொருட்டு சுயேச்சாதிபதிகளான அரசர்கள் ஐரோப்பாவில் தோன்றினர்; அவர்களது உதவியினால், தேசத்தில் ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட்டவுடன், அவர்கள் வந்தவேலை தீர்ந்துவிட்டது; எனவே, அவர்களுக்கு அழிவோ அதிகாரக்குறைவோ ஏற்பட்டது. 18-ம் நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் வால்டேர், ரூஸோ முதலிய பல நிபுணர்களும் நூலாசிரியர்களும் தோன்றி ஜனங்களுக்குப் பல புதிய கொள்கைகளை ஊட்டிவந்தனர். அவர்கள் சுயேச்சாதிபதியான அரசர்களைக் கண்டித்தும் வந்தனர். முதலாக சுயேச்சாதிபதிகளின் இராஜ்ஜியத்தில் ஒரு பெரிய அபாயம் இருந்தது. அரசனே சட்டங்களை உண்டாக்கினான்; ஒரு மனிதனுடைய கையிலேயே சட்டமியற்றும் அதிகாரம் இருந்தால், அவன் அவ்வதிகாரத்தை துன்மார்க்கத்தில் உபயோகப்படுத்தலாம். இரண்டாவதாக, தான்செய்யும்சட்டங்களுக்குத் தானே கீழ்ப்படிந்து நடக்கும்படி அவனைக் கட்டுப்படுத்தக் கூடியவர் இல்லாதிருந்தனர். சட்டமியற்றும் அதிகாரம் ஒரு சபையினிடம் இருந்து அச்சட்டத்தைப் பிரயோகம் செய்யும் அதிகாரம் வேறொரு (நிர்வாக) சபையினிடம் இருந்தால், அதில் ஓர் அநுகூலம் உண்டு. அதாவது, தாங்கள் பிரயோகம் செய்யும் சட்டத்திற்கு நிர்வாக சபையினரும் கீழ்ப்பட்டவர்களே யாவர்; அவ்வாறே சட்டசபை யங்கத்தினர்களும் தங்களுடைய சொந்த ஹோதாவில் அவைகளுக்குக் கீழ்ப்பட்டே யாக வேண்டும். இந்த நோக்கத்தைக் கொண்டே மான்டேஸ்க்யூ என்பவர், அரசியலதிகாரமானது சட்டசபை, நிர்வாகசபை, நீதி

ஸ்தலம் ஆகிய மூன்றிற்குள் பிரிந்திருக்க வேண்டுமென்று கூறியிருப்பதை முன்பே கவனித்தோம்.

பி/2ரான்ஸ் தேசத்தில் 18-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த பெரிய புரட்சியில், அரசனும் அரசியும் கொல்லப்பட்டுப் போயினர். அதற்கு விசேஷமான பலகாரணங்களும் இருந்தன. பி/2ரான்ஸ் துரைத்தனத்தில் பொக்கிஷம் காலியாய் விட்டது; ஜனங்களோ வறுமையில் உழன்றுவந்தனர்; அரசனும் அரசியுமோ சமயத்திற்குத் தக்கபடி நடந்துகொள்ள வேண்டுமென்னும் விவேகமற்றவர்களாய் இருந்தனர். ஜனங்களுக்குக் கட்டிலங்காத கோபமும் ஆவேசமும் உண்டாக, அவர்கள்பெருத்த கலகம் விளைத்து அரசனில்லாத ஜனநாயகத்தை நிலைநாட்டி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று அரிய தத்துவங்களையும் அவர்கள் உலகத்தாருக்கு எடுத்து விளக்கினர். இந்த இராஜீயப்புரட்சி நடந்த காலத்தில் ஓடிய இரத்தவெள்ளம் ஏழுகடலையும் நிரப்பக் கூடியதாயிருந்தது. அதைக் கண்டு ஐரோப்பாக் கண்டம் முழுதும்குலைநடுக்கங் கொண்டது. ஆனால் அவ்வாறு அரும்பாடுகள் பட்டுத் தேடிய சுதந்திரத்தை பி/2ரெஞ்சுக்காரர்கள் மறுபடியும் சொற்பகாலம் இழக்க நேர்ந்தது. நெப்போலியன் என்ற யுத்தவீரர் தமது பராக்கிரமத்தினால், அந்த தேசத்திற்கு சக்கரவர்த்தியாய் விட்டார். ஆனாலும் கடைசியாய் அந்த தேச ஜனங்கள் ஜனநாயகத்தையே நிலைநாட்டி விட்டனர். பி/2ரான்ஸ் தேசத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்ற நாடுகளிலும் ஏராளமான துன்பங்களை விளைவித்தன. 19-ம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டம் முழுதிலும் அரசர்களுடைய அதிகாரம் குறைந்து போயிற்று. ஜனப் பிரதிநிதிகளே அரசு செலுத்தி வரலாயினர். சமீப காலத்தில் நடந்த பெரும் போருக்குப் பின் ஜெர்மனியிலும்

ஜனநாயக அரசாட்சி ஸ்தாபிக்கப்பட்டுப் போயிற்று. இப்பொழுது ஜனப் பிரதிநிதிகளே எல்லா தேசங்களிலும் உண்மையான அதிகாரத்தை வகித்திருக்கின்றனர்.

(9) இங்கிலந்தின் அரசியல் முறை யாவருக்கும் வழி காட்டியாய் இருப்பது :—ஐரோப்பாக் கண்டத்திலுள்ள எல்லா தேசங்களும் அமெரிக்காவும், கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா போன்ற குடியேற்ற நாடுகளும் இங்கிலந்தின் அரசிய லமைப்பைப் பார்த்தே தங்கள் இராஜீய வியவகாரங்களை மாற்றி வந்துள்ளன. இதனால்தான் இங்கிலந்தின் பார்லிமெண்டுக்கு "உலகத்து சட்டசபைகளின் தாய்" என்ற பெயர் வழங்கி வருகிறது. இங்கிலந்தின் ஜனங்களுடைய சில விசேஷ குணங்களே அவர்களுக்கு இவ்வித கௌரவத்தை உண்டாக்கி யிருக்கின்றன. இங்கிலீஷ்காரர் எப்பொழுதும் சாவதானமாகவே முன் செல்லுகிறவர்கள்; பழைய விஷயங்களை அடியோடு தள்ளிவிட மாட்டார்கள்; புதிய கொள்கைகளையும் உடனே ஏற்றுக்கொண்டு விட மாட்டார்கள். பிரெஞ்சுக்காரரோ அம்மாதிரியானவரன்று. "எல்லா மனிதர்களும் சமமானவர்களே" என்று யாராகிலும் ஒருவர் கூறிவிட்டால், அதை வீட்டின் உச்சியிலிருந்து கூவிப் பரப்பிக்கொண்டே பிரெஞ்சுக்காரர்கள் அரசனையும் பிரபுக்களையும் உடனே தரைமட்ட மாக்கி விடுவார்கள். இங்கிலீஷ்காரருக்குப் பெருத்த புரட்சிகளில் விருப்பம் கிடையாது; எதையும் மெதுவாக மாற்றியமைக்க வேண்டுமென்பதே அவர்களது சித்தாந்தம். அதனாலேயே இங்கிலந்தின் அரசியல் முறை சிறிதளவும் சிதறிப்போகாமல் தொடர்ச்சியாக வளர்ந்து வந்திருக்கிறது. இங்கிலந்தின் அரசரும் லார்ட்ஸ் சபையும் காமன்ஸ் சட்டசபையும் பழைய காலத்து ஸ்தாபனங்களே; ஆனால் அவைகள் அநேகமாய் மாற்றி யமைக்கப்பட் டிருக்கின்றன. 17-ம்

நூற்றுண்டின் நடுவில் கொஞ்சகாலம் இங்கிலந்தில் அரச னில்லாத ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது; அதைக் கூட ஜனங்கள் விரும்பாமல் மறுபடி அரசனைச் சிம்மாதன மேற்றி விட்டனர். திடீரென்று அரசியல் முறையைப் புதிப்பிப்பது இங்கிலீஷ்காரருக்கு ஒவ்வாத காரியம். அவர் கள் படிப்படியாக சமய சந்தர்ப்பங்களுக்கேற்றபடி அதைத் திருத்தி யமைத்துக்கொண்டே வந்திருக்கின்றனர். அத ஞல்தான் இங்கிலந்தின் இராஜீய ஸ்தாபனங்களி னிடத் தில் வயோதிகருக்குரிய கௌரவமும் அறிவு முதிர்ச்சியும் இருப்பதுடன், வாலிபர்களுக்குரிய வலுவும் திடமும் இருப்பதாகக் கூறுவதுண்டு. இரண்டாவதாக, இங்கிலீஷ் காரர் தங்களுடையஉரிமைகளை விட்டுக் கொடுக்காமல் பாது காப்பதில் கண்ணுங் கருத்துமா யிருப்பவர்கள். ஜனங்க ளுடைய சம்மதியில்லாமல் வரி விதிப்பதை அவர்கள் எந்த நாளிலும் ஒப்புக் கொண்டதே இல்லை. தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுவதில் அவர்கள் மகா சமர்த்தர் கள். பார்லிமெண்ட் சபை அத்தகைய வரி விதிப்பதையும் நீதி தவருன காரியங்களைச் செய்வதையும் அவர்கள் தயை தாக்ஷண்ய மின்றிக் கண்டித்து வருவார்கள். அதனு லேயே இங்கிலந்தின் அரசர்கள் பார்லிமெண்டின் தயவையே நாடி வந்தனர். பார்லிமெண்டினுடைய அதி காரம் படிப்படியாகப் பெருகிக் கடைசியாய் அதனுல் தேர்ந்தெடுக்கப்படும் மந்திரிகளே அரசியல் நிர்வாகத்தை நடத்துவதென்ற ஐதிகத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். மூன்ருவதாக, இங்கிலீஷ்காரருக்கு இன்னுமொரு சௌகரிய மும் உண்டு. இங்கிலந்து தேசம் ஐரோப்பாவுக்கு சமீபத் திலும் ஆனுல் ஐரோப்பாவை ஒட்டாமலும் இருக்கும் ஒரு தீவாதலால், ஐரோப்பாவில்நடக்கும் விஷயங்களை யெல்லாம்

இங்கிலீஷ்காரர்கள் கவனித்து வருவதற்கு வசதி உண்டு; ஆனால் ஐரோப்பாக் கண்டத்தில் நடக்கும் போர்களிலும் புரட்சிகளிலும் அவர்கள சம்பந்தப்படாமல் தனித்து நிற்பதற்கும் சௌகரியம் உண்டு. இவ்வாறு இயற்கையாகவே ஏற்பட்ட வசதியினாலும், இங்கிலீஷ்காரருடைய பிரத்தியேகமான சில குண விசேஷங்களினாலும், உலக சரித்திரத்தில் நேரிட்ட எதிர்பாராத சில சம்பவங்களாலும் இங்கிலந்தின் அரசியல் முறை உலகோருக்கு ஒரு வழிகாட்டியாய் அமைந்தது. அதைப் பின்பற்றித் தம்தம் தேசத்திற்கேற்ற அவசியமான சில மாறுதல்களைச்செய்து, மற்ற தேசத்தார் இராஜ்ஜிய நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர். உதாரணமாய், ஒரு தேசத்தில் பார்லிமென்டரி முறையைச் சேர்ந்த நிர்வாக சபையும், சில தேசங்களில் வேறு விதமான நிர்வாக சபையும் இருக்கின்றன; சில தேசங்களில் அரசன் இருக்கிறான்; சில தேசங்களில் அரசனற்ற ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது. சில தேசங்களில் துரைத்தன உத்தியோகஸ்தர்களும் சாதாரண ஜனங்களும் நீதிஸ்தலத்தில் ஒரேவிதமாக நடத்தப் படுகின்றனர்; சில நாடுகளிலோ துரைத்தன உத்தியோகஸ்தர்களுக் கென்று தனியான நீதிஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. அவ்வாறே மேல் சட்ட சபையை அமைப்பதிலும் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வோர் அநுஷ்டானம் இருந்து வருகிறது. இவ்வித வேற்றுமைகளை யெல்லாம் நாம் இதற்குமுன் வந்துள்ள அதிகாரங்களில் விவரித்திருக்கிறோம். ஆனால், மேற்படி வேற்றுமைகள் ஒருபுறமிருக்க, எல்லா தேசத்தினரும் கூடிய வரையில், பொதுவான பல கொள்கைகளை அநுஷ்டித்து வருவதை நாம் கவனிக்க வேண்டும். உண்மையான அதிகாரம் மகா ஜனங்க

ளுடையதே யாகும்; அவர்களுடைய அநுமதியின் மேலேயே ஆட்சி நடைபெற வேண்டும்; பிரஜைகளது உரிமைகளைக் காப்பதே அரசாங்கத்தின் முக்கிய நோக்க மாகும் என்ற இவைபோன்ற அடிப்படையான கொள்கை களைப் பின்பற்றியே எந்த தேசத்திலும் இக்கால அரசியல் நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

(10) ஐக்கிய அரசாங்கம் : சர்வதேச மகாசங்கம் :— மேனாட்டு அரசியல் சரித்திரத்தில், இன்னுமொரு புதிய நிகழ்ச்சியையும் நாம் கவனிக்க வேண்டும். அதாவது பல சிறு தேசங்கள் ஒன்றுகூடி ஐக்கிய அரசாங்கத்தை ஸ்தா பிக்கும் சம்பவமே யாகும். முன்னோர் அதிகாரத்தில், ஐக்கிய அரசாங்கத்தின் அமைப்பைப் பற்றி விரிவாகக் கூறியிருக்கிறோம். ஐக்கிய அரசாங்கம் என்பது பல தனி அரசுகள் ஒன்றுசேர்ந்து பரஸ்பர நம்பிக்கையுடன் ஸ்தா பித்துள்ள பொது அரசேயாகும். பொதுவான பல நன்மை களை அடைவதற்கும், பொதுவான அபாயத்தை அகற்று வதற்குமே இவ்வித ஐக்கிய அரசுகள் ஏற்படுத்தப்படுகின் றன. ஜெர்மனி, ஸ்விட்ஜர்லந்து, அமெரிக்கா ஆகிய தேசங் களில் ஐக்கிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. அவைகளுள் ஸ்விட்ஜர்லந்து வெகு காலமாகவே தொடர்ச்சி யான ஐக்கிய நாடாய் இருந்து வந்திருக்கிறது. நிரம்பவும் சமீப காலத்தில் உலகத்தின் அரசுகளிற் பல ஒன்று சேர்ந்து சர்வதேச மகா சங்க மொன்றை ஸ்தாபித்திருப் பதையும், அதன் குண தோஷங்களையும் நாம் முன்னரே ஆராய்ந்தோம். உலகம் முழுதும் மனித ஜாதியினர் சம மானவர்கள் என்பதையும், அவர்களிடம் காணப்படும் வேற் றுமைகளுக் கடியில் ஒற்றுமையே நிறைந்து நிற்பதையும் எல்லோரும் உணர்ந்தால், உலகத்தின் க்ஷேமத்தை அது

பெரும்பாலும் பெருகச் செய்யும். அந்த உணர்ச்சி எல்லோரிடமும் நன்கு பரவி, சர்வதேச மகாசபை உருப்பட்டுவிட்டால், அது உண்மையிலேயே நன்மையையளிக்கத்தக்க ஸ்தாபனமாகும். அவ்வாறின்றி அச்சபையின் மூலம் தங்கள் தங்கள் ஏக சக்ராதிபத்திய வேட்கையை மறைத்து வைக்கும் ஒரு வெளி வேஷமாய் மேனாட்டு வல்லரசுகள் அதை வைத்துக் கொண்டாலோ, அந்த சபை உதவியற்றதாய்ப் போவதுடன் உலகிற்குப் பெருந் தீங்கையும் விளைவிக்கும். கடவுளது சிருஷ்டியில் சில மிருக ஜாதிகளுக்குள் காணப்படும் ஒற்றுமைகூட மனிதவகுப்பாரிடம் இன்னும் தோன்றவில்லை. மேனாட்டார், கீழ் தேசத்தார், வெள்ளையன், கருப்பன் என்ற வேற்றுமைப் புத்தியினால் உண்டாகும் ஆவேஷத்தை நீக்கி, உலகத்தோ ரனைவரும் பொதுவான க்ஷேமத்தை அபிவிருத்தி செய்ய முனைந்து முன்வர வேண்டும். அப்பொழுது உலகத்தில் பொறாமையினாலும், பேராசையினாலும் விளையும் யுத்தங்கள் நின்றுபோம்; யுத்தங்களினால் விளையும் ஏராளமான சேதமும் நாசங்களும் இல்லாமல் போகும்; உலகத்தின் வறுமைப்பிணியும் ஒருவாறு நீங்கும். இந்த ஏற்பாடு வெறும் பகற்கனவு என எண்ணுவது சரியல்ல. சரித்திராரம்பம் முதற்கொண்டு மனித ஜாதியானது சிறுகச் சிறுக முன்னேற்ற மடைந்து வருகிறது. பண்டைக் காலத்தில் இருந்ததைவிட இப்பொழுது அதிக நம்பிக்கையும் விசாலபுத்தியும் ஏற்பட் டிருக்கின்றன. இன்னும் சில அரசுகள் பழைய வழியிலேயே சென்றுகொண்டிருக்கின்றன. ஆனால் சர்வதேச மகாசபை ஸ்தாபிக்கப்பட்டுள்ள விஷயமொன்றே நமது முன்னேற்றத்திற்கு ஏற்ற அறிகுறியாகும்; ஏனெனில் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் இத்தகைய அகில உலக ஸ்தாப

ணம் ஒன்று சாத்திய மென்பதையே எவரும் மனதால்கூட நினைத்திரார். அது இப்பொழுது சாத்தியமாய் விட்டது. அவ்வாறே இன்னும் சொற்பகாலத்தில் உலகத்தின் அரசுகள் யாவும் ஒருவர் மீதொருவர் ஏறி நிற்காமல், சமஅந்தஸ்துடன் கூடி சில பொதுவான விஷயங்களை ஆலோசித்து இகலோக சுகசௌகரியங்களை அதிகப்படுத்துவதும் சாத்தியமே யாகும். அத்தகைய உலகஸ்தாபனம் ஏற்படுவது ஐக்கிய அரசாங்கங்களின் போக்கை அநுசரித்தே ஆகவேண்டும். ஏனெனில், ஐக்கிய முறையிலேயே பல தனி தேசங்கள் தம்முடைய சுயவடிவத்தை யழித்துக் கொள்ளாமல், சம அந்தஸ்துடன் ஒன்றுபட்டு உழைக்க முடியும்.

இது வரையில் நாம்கூறிவந்த மேனாட்டு அரசியல்சரித்திரத்தின் முக்கிய மாறுபாடுகளைக் கீழ்வருமாறு சுருங்கக் கூறுவோம்:—

(1) கிரீஸ்தேசம்; அரசனுடைய ஆட்சி; பிறகு பிரபுக்களின் ஆதிக்கம்; பிறகு சுயேச்சாதிபத்தியம்; கடைசியாக ஜனநாயக ஆட்சி; அரிஸ்டாடில், பிளேடோ முதலியோருடைய சித்தாந்தங்கள்; கிரேக்க நாடுகளின் கூட்டுறவு.

(2) உரோம் தேசத்தின் பண்டைக்கால நிலைமை; பிரபுக்களுக்கும் ஏழை ஜனங்களுக்கும் நடந்த போராட்டம்; ஜனங்கள் பெற்றுக்கொண்ட உரிமைகள்; உரோம் இராஜ்ஜியம் பரிமாணத்தில் விருத்தியடைந்தது; அரசர்களின் ஆதிக்கம் திரும்பவும் ஸ்தாபிக்கப்படுவது; கிரீஸ், உரோம் இராஜ்ஜியங்களின் விசேஷகுணங்கள்.

(3) உரோம் இராஜ்ஜியத்தை அநாகரிக மனிதர்கள் தாக்கிச் சீர்குலையச் செய்தல்—ஜமீந்தார்களின் ஆளுகை—

நகரங்களின் உற்பத்தி—அவைகள் அபிவிருத்தி யடைந்த காரணம்—மதஸ்தாபனமும் அரசாங்கமும்.

(4) ஜெமீந்தாரர்களின் கொடுமை; மத்திய காலங்கள் முடிவடைய, புதிய மாறுபாடு தோன்றுவது; சுயேச்சாதிபதிகளான அரசர்களின் ஆதிக்கம்.

(5) புதிய இராஜீய சித்தாந்தங்கள்—பிரான்ஸ் தேசத்தில் இராஜீயப் புரட்சி—அரசர்களின் அதிகாரம் குறைவது—பிரதிநிதிகளின் ஆட்சிமுறை—இங்கிலந்தைப் பின்பற்றி அரசியல் முறைகள் எங்கும் அமைக்கப்படுவது—ஐக்கிய அரசாங்கங்கள், சர்வதேச மகாசபை—உலகின் பிற்காலம்.

19-வது அதிகாரம்

இந்தியாவின் பரிபாலனம்.

இதுவரையில் நாம் அரசைப்பற்றிய பொது விவரங்களைத் தெரிந்துகொண்டோம். இனி, நமது நாடாகிய இந்தியா எவ்வாறு பரிபாலிக்கப்பட்டு வருகிறது என்பதை சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம். 16-ம் நூற்றுண்டில் ஐரோப்பியர்கள் முதன் முதலாகக் கடல் மார்க்கமாய் இந்தியாவிற்கு வர ஆரம்பித்தனர். போர்ச்சுகல், ஹாலண்டு, பிரான்ஸ், இங்கிலந்து முதலிய தேசங்களிலிருந்து பல வியாபாரிகள் நமது தேசத்தில் வந்திறங்கி வர்த்தகம் செய்யத் தொடங்கினர். ஆனால் வியாபார நிமித்தம் வந்திறங்கிய அவர்கள் அதோடு நிற்காமல் உள்நாட்டு வியவகாரங்களிலும் தலையிடலாயினர். பிரெஞ்சு வர்த்தகக் கம்பெனியார் ஒரு சிற்றரசனுடன் சேர்ந்து மற்றவரை எதிர்த்தும் தங்களுடைய இராஜ்ஜியத்தை இந்தியாவில் ஸ்தாபிக்க முயன்ற

னர். அவ்வாறே இங்கிலீஷ் வர்த்தகக் கம்பெனியாரும் தமது இராஜ்ஜியத்தை இந்தியாவில் நிலைநாட்டத் தலைப்பட்டனர். பிரெஞ்சுக்காரர்கள் முதலில் சிறிதளவு ஜயமடைந்தனராஹுலும், கடைசியில் இங்கிலீஷ்காரரால் தோற்கடிக்கப்பட்டுத் தாங்கள் சம்பாதித்திருந்த இடங்களையும் இழந்துவிட்டனர். இங்கிலீஷ் வர்த்தகக் கம்பெனிக்கு கிழக்கிந்தியக் கம்பேனி என்பது பெயர். படிப்படியாகக் கிழக்கிந்தியக் கம்பெனியார் தங்களது இராஜ்ஜியத்தைப் பெருக்கிக் கொண்டே போய், பலவிதங்களில் சுதேச அரசர்களை வென்று இந்தியா முழுதையும் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டனர். கிழக்கிந்தியக் கம்பெனியின் வியவகாரங்களை கவனித்துக்கொள்ள இங்கிலந்தில் ஒரு சிறுசபை இருந்தது. வர்த்தகத்தின் பொருட்டுச் சென்றவர்களுக்கு இராஜ்ஜியாதிகாரம் கிடைத்தவுடனே, அச்சபையினர் மவர்னர்களையனுப்பி இராஜ்ஜிய நிர்வாகத்தையும் நடத்தி வரலாயினர். ஆனுல் இம்மாதிரி ஒரு நூற்றாண்டு கழிந்த பின்னர் வடஇந்தியாவில்ஒரு கலகம் உண்டாய் இங்கிலீஷ் ஆதிக்கத்தைக் கலக்கிவிட்டது. அந்தக் கலகத்தைக் கம்பெனியின் நிர்வாகிகளும் மவர்னர்களும் அடக்கிவிட்டனராஹுலும்,அது முதல் இங்கிலந்தின் அரசரே இந்தியாவை ஆண்டுவர வேண்டுமென்று பார்லிமென்டு சபையார் தீர்மானித்தனர். அதன்படி 1858-ம் வருஷத்தில் விக்டோரியா மகாராணியார் இந்தியாவின் அரசியலை ஏற்றுக்கொண்டார்.அதுமுதல் இந்தியாவானது இங்கிலந்தின் அரசர் பெயரால் ப்ரிட்டிஷ் பார்லிமெண்டாரால் அவர்களது மந்திரிகளின் மூலம் ஆளப்பட்டு வருகிறது.

விக்டோரியா மகாராணியார் இந்தியாவின் சக்கரவர்த்தினி யானவுடனே இந்திய மகா ஜனங்களுக்கு ஒரு வாக்

குறுதி அறிக்கை வெளியிட்டார். அவர் அதில் "இந்தியா தேசத்திலுள்ள ஜாதிமத வேற்றுமைகளில் நாங்கள் தலையிடுவதுமில்லை, மேற்படி காரணங்களினுல் எவருடைய இராஜீயசுதந்திரமும் பாதிக்காமல் பாதுகாக்கிறோம்" எனக் கூறியிருக்கிறுர். இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பம் வரையில் இந்தியாவின் துரைத்தனம் முழுதும் இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களின் வசத்திலேயே இருந்து வந்திருக்கிறது. இந்தியருக்கும், துரைத்தன அதிகாரம் கிடைக்கவேண்டுமென்றும், சட்டசபைகளைச் சரிவர அமைக்கவேண்டுமென்றும் இந்தியா காங்கிரஸ் சபையின் மூலம், நமது தேசத் தலைவர்கள் போராடி வந்திருக்கின்றனர். 1914-ம் வருஷத்தில் தொடங்கிய ஜெர்மன் யுத்தம் நடந்துவந்தபொழுது 1917-ம் வருஷத்தில் ஆகஸ்டு மாதத்தில் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அதன்படி இந்தியாவுக்குப் பூர்ணமான பொறுப்பாட்சியை அளிப்பதே பிரிட்டிஷாருடைய நோக்கமென்றும், ஆனுல் அது படிப்படியாகவே அளிக்கப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டது. யுத்தம் முடிந்தவுடன் அந்த அறிக்கையையொட்டி பிரிட்டிஷ் பார்லிமென்டார் நமது தேசத்திற்குச் சில இராஜீயச் சீர்திருத்தங்களை யளித்தனர். அச்சீர்திருத்தங்களை மாண்டேகு செம்ஸ்போர்டு திருத்தங்கள் என்று குறிக்கிறுர்கள். 1919-ம் வருஷத்தில் மாண்டேகு என்பவர் இந்தியாமந்திரியாகவும், செம்ஸ்போர்டு என்பவர் கவர்னர் ஜெனரலாகவும் இருந்தார்கள். அவர்களிருவரும் சேர்ந்து அவைகளை உண்டாக்கினராதலால், அவைகள் அவர்களுடைய பெயரால் குறிக்கப்படுகின்றன. அச் சீர்திருத்தங்களை யொட்டியே இப்பொழுது நமது தேச பரிபாலனம் நடைபெற்று வருகிறது. இந்த ஏற்பாடு

முதற்படியானதென்றும், இனி பூர்ணமான சுயஆட்சி ஏற்படுவதற்கு இது இந்தியர்களைப் பழக்கி விடுமென்றும் பிரிட்டிஷர்கள் கூறினார்கள். நம் நாட்டுத் தலைவர்களிற் பலரோ இந்தப் புதிய ஏற்பாடு வெறும் மாயை என்று கூறி இதை ஏற்றுக்கொள்ளாமல் அசட்டைசெய்து விலகி நின்றுவிட்டனர். ஆனாலும் இச்சீர்திருத்தங்கள் அநுஷ்டானத்திற்கு வந்து சுமார் எட்டு, ஒன்பது வருஷ காலமாகிறது. இன்னமும் அதிகமான அதிகாரத்தை இந்தியருக்குக் கொடுக்கலாமா என்பதை ஆலோசித்துத் தங்களது அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமாறே ஸைமன் கமிஷன் இப்பொழுது நியமிக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் விசாரணை செய்து முடிவைத் தெரிவித்தபின், பிரிட்டிஷ் பார்லிமென்டார் இப்பொழுதைய அரசியல் முறையை அவர்களுக்கு உசிதமாகத் தோன்றுகிறபடி மாற்றி யமைக்கலாம்.

இந்தியா மந்திரி, இந்தியா சபை.

நம்முடைய தேசமானது பிரிட்டிஷ் அரசர் பெயரால் ஆளப்பட்டு வருகிறது. இங்கிலந்தின் அரசியல் வியவகாரங்களை நடத்தும்பொருட்டு அமைக்கப்படும் கா/2பினெட் எனப்படும் மந்திரிசபையைச் சேர்ந்த ஒருவர் இந்தியா மந்திரியாய் நியமிக்கப்படுகிறார். அவரே இந்தியாவைப்பற்றிய எல்லா விஷயங்களையும் கவனித்து வரவேண்டும். இந்தியாவின் சேனை, வருமானம் முதலிய சகலமான விஷயங்களையும் அவரே மேல்பார்வை பார்த்து முக்கியப் பொறுப்பை வகித்து வரவேண்டும். அவர் இங்கிலந்திலேயே இருக்கிறார். இந்தியா மந்திரியின் சம்பளம் பிரிட்டிஷ் அரசாங்கத்தாராலேயே கொடுக்கப்படுகிறது. இந்தியா மந்திரியை சர்வாதிகாரமும் படைத்தவரென்றே கூறவேண்டும். இந்தியாவைப் பற்றிய வரையில் அவரது

சொற்படியே கா/$_2$பினட் சபையும் பார்லிமெண்ட் சபையும் நடந்து கொள்வார்கள். அவருக்குக் கீழ் உதவி இந்தியா மந்திரியென்று இன்னொருவரும் இருக்கிறார். இந்தியா மந்திரியின் காரியாலயத்தின் செலவு நமது தேசத்திலிருந்தே கொடுக்கப்படுகிறது.

இந்தியா மந்திரிக்கு உதவியாய் ஒரு சிறு சபையும் லண்டன் நகரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் எட்டு முதல் பன்னிரண்டு அங்கத்தினர்கள் இருப்பார்கள். அதற்கு இந்தியா கவுன்ஸில், அல்லது, இந்தியா சபை என்று பெயர். அதன் அங்கத்தினரின் ஸ்தானம் காலியானால், அதற்கு இந்தியா மந்திரியே எவரையேனும் நியமிப்பார். ஒவ்வோர் அங்கத்தினரும் சபையில் ஐந்து வருஷகாலம் ஸ்தானம் வகிக்கலாம். அவ்வாறு ஐந்துவருஷ காலம் உத்தியோகம் பார்த்தபின் அதே அங்கத்தினர் திரும்பவும் ஐந்து வருஷகாலம் இந்தியா மந்திரியால் ஏதோ விசேஷ காரணத்தை முன்னிட்டு நியமிக்கப்படலாம். ஆனால் அந்தப் புனர்நியமனத்திற்கான காரணத்தை உடனே இந்தியா மந்திரியானவர் பார்லிமெண்டு சபைக்குத் தெரியப்படுத்தி விடவேண்டும். இவ்வாறு செய்யப்படாமல் வேறு விதத்தில், ஒரு தடவை இந்தியா சபையில் இருந்தவர் மறுபடி அங்கு ஸ்தானம் வகிக்கமுடியாது. இந்தியா சபையின் அங்கத்தினர் எவராயினும் எழுத்து மூலமாய்த் தமது பதவியை இராஜீநாமாச் செய்துவிடலாம். பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி இந்தியாசபை யங்கத்தினரில் எவரையும் விலக்கிவிடலாம்; ஆனால் அத்தகைய சந்தர்ப்பங்கள் நேருவது நிரம்பவும் அரிதாகவே இருக்கும். சபையங்கத்தினருக்கு வருஷத்திற்கு 1200 பவுன்கள் சம்பளம்

கொடுக்கப்படுகிறது. இந்தச் செலவும் இந்தியாவின் கணக்கிலேயே சேர்க்கப்படுகிறது. இந்தியா சபையில் ஸ்தானம் வகிப்பவர் எவரும் அதே சமயத்தில் பார்லிமென்டிலும் ஸ்தானம் வகிக்கக்கூடாது. இந்தியாவின் வியவகாரங்களை அச்சிறு சபையினர் நிர்வகித்து வரவேண்டும். அந்த சபைக்கு இந்தியா மந்திரியே தலைவர். அவரே உபதலைவரையும் நியமிப்பார். அவசியமான பொழுதெல்லாம் கூட்டம் நடைபெறும்; ஆனால் மாதத்திற்கொரு முறையேனும் அது அவசியம் கூடவேண்டும். அக்கிராசனருக்கு இரண்டு ஓட்டுகள் உண்டு. அதாவது ஒரு தீர்மானத்திற்குச் சாதகமாய் ஆறுபேர்களும் விரோதமாய் ஆறுபேர்களும் ஓட்கொடுத்தால், அக்கிராசனர் தமது அதிகப்படி ஓட்டைச் சேர்த்து அத்தீர்மானம் நிறைவேறும்படியோ அல்லது தோற்றுப் போகும்படியோ செய்துவிடலாம். இந்தியா மந்திரி இல்லாத சமயத்தில் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் அவருடைய அங்கீகாரத்தைப்பெற வேண்டும்.

இந்தியாவின் வருமானம் முழுதும் அரசர் பெயராலேயே வசூலிக்கப்பட்டு இந்தியாவின் பரிபாலனத்தின் பொருட்டு செலவிடப்படுகிறது. இந்திய துரைத்தனத்திற்கு பலவகைகளில் வருமானம் உண்டு—சிற்றரசர்களின் கப்பம், ஜனங்கள் செலுத்தும் வரி, நியாயஸ்தலங்களில் விதிக்கப்படும் அபராதத்தொகை, வார்சு இல்லாமல்போகும் சொத்துக்கள் ஆகியவை யாவும் துரைத்தனத்தையே சேரும். இந்தியா மந்திரியே தமது சபையின் உதவியைக் கொண்டு நமது தேச வருமானத்தைப்பெற்று தக்கபடி செலவுசெய்து வரவேண்டும். இந்தியாவின் பொருட்டு இங்கிலந்திலுள்ள பாங்க் ஒன்றில் துரைத்தனத்தாரு

டைய கொடுக்கல் வாங்கல் கணக்கு இருக்கிறது. இந்தியா மந்திரியும், இந்தியா சபையின் இரண்டு மெம்பர்களும் அல்லது அவருடைய அதிகாரத்தைப் பெற்ற வேறு யாராயினும் 'செக்' எழுதியனுப்பி பாங்கியிலிருந்து தொகையைப் பெறலாம். ஒவ்வொரு வருஷமும் மே மாத முடிவுக்குள் இந்திய துரைத்தனத்தின் வரவு செலவு கணக்கை இந்தியா மந்திரியானவர் பார்லிமெண்ட் சபையின்முன் ஆஜர் செய்யவேண்டும். அவர் அந்தக் கணக்கில் இந்தியாவிலுள்ள பல மாகாணங்களின் வரவு செலவுகளையும் பொதுவான அபிவிருத்தியையும் விளக்கிக் காட்ட வேண்டும். இந்தியா மந்திரியின் வரவு செலவு கணக்கைப் பரிசோதிப்பதற்கு ஒரு பரிசோதகரை அரசர் நியமிப்பது வழக்கம். அவர் வரவு செலவு கணக்கிலுள்ள தவறுகளை எடுத்துக்காட்டி எச்சரிக்கை செய்வதுடன், தமது அறிக்கையை பார்லிமெண்டு சபைக்கு அனுப்பி விடுவார்.

இந்தியா மந்திரிக் குதவியாக ஹை கமிஷனர் என்ற ஓர் உத்தியோகஸ்தரும் நியமிக்கப்படுகிறார். அவரும் இங்கிலந்திலேயே இருந்துகொண்டு இந்தியாவின் பொருளாதார சம்பந்தமான விஷயங்களை கவனித்து வருகிறார்.

கவர்னர் ஜெனரல் அல்லது வைஸ்ராய்

நமது தேச வியவகாரங்களை இந்தியா மந்திரியே மேல் பார்வை பார்த்துவருகிறாராயினும், அவர் 6000 மைல் தூரத்திற்கு அப்பால் இருந்து நிர்வாகம்நடத்தவேண்டியதை உத்தேசித்து, நமது தேசத்திலேயே இருந்துகொண்டு விஷயங்களை கவனிக்கும் பொருட்டு கவர்னர் ஜெனரல் அல்லது வைஸ்ராய் எனப்படுபவர் நியமிக்கப்படுகிறார். ஒவ்வொரு வைஸ்ராயும் ஐந்துவருஷகாலம் உத்தியோகம் வகிக்கலாம். நமதுதேச

பரிபாலனம் முழுதும் அவருடைய பொறுப்பே யானாலும், இந்தியா மந்திரியின் அதிகாரத்திற் குட்பட்டே அவர் நடந்துகொள்ள வேண்டும். அவர் வெயில் காலத்தில் ஸிம்லாவிலும், மற்ற காலங்களில் டெல்லியிலும் இருந்து வருகிறார். இந்தியா மந்திரிக் குதவியாக ஒரு சிறு சபையிருப்பதைப் போலவே, வைஸ்ராய்க் குதவியாகவும் ஒரு நிர்வாக சபை இருந்து வருகிறது. அதில் எழெட்டு அங்கத்தினர்கள் இருப்பார்கள்; அனைவரும் ப்ரிட்டிஷ் கா/$_2$பினெட் சபையாருடைய ஆலோசனைப்படி அரசரால் நியமிக்கப்படுகிறவர்கள். அரசியல் நிர்வாகத்தில் அநுபவம் பெற்றவரையும், சட்ட ஞானமுள்ளவரையுமே அதற்கு நியமிப்பார்கள். அந்த நிர்வாக சபைக்கு வைஸ்ராய்தான் தலைவரும் அக்கிராசனரும் ஆவார். அவர் தமக்குக் கீழ் ஓர் உபதலைவரையும் நியமித்துக் கொள்வார். ஷை நிர்வாக சபையின் கூட்டங்கள் அவசியமான பொழுதெல்லாம் சௌகரியமான இடங்களில் கூடும். அங்கு நிறைவேறும் தீர்மானங்களெல்லாம் 'சபையுடன் கூடிய மவர்னர் ஜெனரலு'டைய தீர்மானங்களெனக் குறிக்கப்படுகின்றன. நிர்வாக சபையில் ஒரு விஷயத்தைப் பற்றி அபிப்பிராய பேத மேற்பட்டால் மெஜாரிடியா (பெரும்பாலா)ருடைய அபிப்பிராயமே நிறைவேறிவிடும்; சபை யங்கத்தினர்கள் சம எண்ணிக்கையான இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து நின்றால், சபைத்தலைவர் தமது அதிகப்படிஓட்டைக் கொண்டு தீர்மானத்தைத் தோற்கும்படியோ நிறைவேறும் படியோ செய்துவிடலாம். ஆனால் நிர்வாக சபையில் நிறைவேறும் ஒரு தீர்மானம் தேசத்திற்குப் பெருத்த தீங்கை விளைவிக்கக் கூடியதென வைஸ்ராய் கருதினால், அத்தீர்மானத்தை அவர் தமது விசேஷ அதிகாரத்தினால், அதன் முழு பாகத்தையோ, அல்லது, ஒரு பாகத்தையோ தள்ளும்படி

செய்து விடலாம். ஏதோ அசௌகரியத்தினால் வைஸ்ராய் ஷை சபையின் கூட்டத்திற்கு வர இயலாமற் போனால், உபதலைவரோ அல்லது சபையில் அதிக காலம் ஸ்தானம் வகித்திருப்பவரோ அக்கிராசனம் வகித்து சபையை நடத்தலாம்; ஆனால் சபையில் நிறைவேறும் தீர்மானங்கள் வைஸ்ராயினுடைய எழுத்து மூலமான அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

ஒரு தேசத்துடன் சண்டை செய்யவோ, சுதேச மன்னர்களுடன் உடன்படிக்கை செய்யவோ வைஸ்ராய்க்கே சொந்தமான அதிகாரம் கிடையாது. அவ் விஷயங்களில் அவர் பிரிட்டிஷ் துரைத்தனத்தாருடைய உத்தரவைப் பெற்று அதன்படியே நடந்துகொள்ள வேண்டும்.

கவர்னர்.

நமது இந்தியாவானது ஒரு பெரிய கண்டமாதலாலும், இதற்குள் பல மாகாணங்களும் வெவ்வேறு பாஷையைப் பேசும் தனித்தனியான ஜாதியாரும் இருப்பதனாலும், ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியான ஒரு துரைத்தனம் இருந்து வருகிறது. ஷை மாகாண துரைத்தனங்கள் கவர்னர் ஜெனரலினுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்தே நடந்துகொள்ள வேண்டும்; அரசியல் சம்பந்தமான அடிப்படையான முக்கிய விஷயங்களை மாகாண துரைத்தனத்தார் கவர்னர் ஜெனரலுக்குத் தெரியப்படுத்தி அவருடைய அபிப்பிராயத்தை அநுசரித்தே நடந்துகொள்ள வேண்டும். இந்திய துரைத்தனமும் மாகாண துரைத்தனங்களும் தங்களுக்கென சில இலாகாக்களைப் பிரித்து வைத்துக்கொண்டு நிர்வாகம் நடத்துகின்றன. முன்பு (ஐக்கிய அரசாங்கத்தைப் பற்றிக் கூறுகையில், மத்திய துரைத்தனமும் மாகாண துரைத்தனங்களும்

அதிகாரப் பிரிவினை செய்துகொள்வதைப் பற்றி விரிவாகக் கூறியிருக்கிறோம்.) உதாரணமாக, வியவசாயம் என்பது மாகாண துரைத்தனத்தைச் சேர்ந்த இலாகா; தபால் இலாகாவோ இந்திய துரைத்தனத்தைச் சேர்ந்த இலாகா. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி இன்னுமொரு விசேஷ அதிகாரப் பிரிவினையும் செய்யப்பட்டிருக்கிறது. அதையே இரட்டையாட்சி முறை (Dyarchy) என சாதாரணமாகக் குறிக்கிறார்கள். அதாவது சுய ஆட்சித் துறையில் இந்தியர்களையும் பழக்க வேண்டுமென்றநோக்கத்துடன்சில இலாகாக்கள் ஜனப் பிரதிநிதிகளான மந்திரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. மிகுதியாயுள்ள இலாகாக்களை நிர்வாகசபையின் யங்கத்தினர்களே (இவர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் கவர்னருடையசிபார்சின்மேல் அரசரால் நியமிக்கப் படுகிறவர்கள்) பார்த்துவருகின்றனர். மந்திரிகளின்வசம்ஒப்புவிக்கப்பட்டுள்ள இலாகாக்களை 'மாற்றப்பட்ட இலாகாக்கள்' என்றும், மீதியுள்ளவைகளை தாமே "வைத்துக்கொண்டிருக்கும் இலாகாக்கள்" என்றும் குறிக்கிறார்கள். மந்திரிகள் சட்டசபைக்கு உத்தரம் சொல்ல வேண்டியவர்கள். மற்ற நிர்வாக சபையினர் அவ்வாறு உத்தரம் சொல்லக் கடமைப்பட்டவரல்லர். மந்திரிகளைப் பற்றி பின்னால் விரிவாய் கூறுவோம். வங்காளம், மதராஸ், பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப், பீஹார் ஓரிஸ்ஸா, மத்திய மாகாணங்கள், அஸ்ஸாம் ஆகிய மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கவர்னர் இருக்கிறார். அவைகள் 'கவர்னர் ஆளும் மாகாணங்கள்' என்று குறிக்கப்படும். வைஸ்ராயினுடைய அபிப்பிராயத்தைக் கலந்துகொண்டு, அரசர் தக்க கனவான் ஒருவரை கவர்னர் பதவிக்கு நியமிப்பார். ஒவ்வொரு கவர்னருக்கும் உதவியாய்

ஒவ்வொரு நிர்வாக சபை யுண்டு; ஒவ்வொரு சபையிலும் சாதாரணமாக நான்கு அங்கத்தினர் இருப்பார்கள். அவர்களில் ஒருவர் நிர்வாக சபையின் உபதலைவராக கவர்னரால் நியமிக்கப்படுவார். மாற்றப்படாத இலாகாக்களை 'சபையுடன் கூடிய கவர்னர்' நிர்வகிப்பதாகவும், மாற்றப்பட்ட இலாகாக்களை 'மந்திரிகளுடன் கூடிய கவர்னர்' நிர்வகிப்பதாகவும் கூறுவது வழக்கம். நிர்வாக சபைக்கூட்டம் அவசியமான பொழுதெல்லாம் நடைபெறும். சாதாரணமாய் கூட்டத்தில் பெரும்பாலோருடைய அபிப்பிராயத்திற்கு கவர்னர் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். ஆனால் ஒரு தீர்மானத்திற்கு இரண்டு பேர் சாதகமாயும் இரண்டுபேர் பாதகமாகவும் இருந்தால், கவர்னர் தமது அதிகப்படி ஓட்டைக் கொண்டு, இரண்டில் ஒன்றை நிறைவேற்றலாம். மேலும் தமது விசேஷ அதிகாரத்தினால் நிர்வாக சபையின் எந்தத் தீர்மானத்தையும் கவர்னர் தள்ளுபடி செய்துவிடலாம்; அல்லது, அச்சபையாரால் தள்ளுபடி செய்யப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றியும் விடலாம். ஏதோ அசௌகரியத்தினால் சபைக் கூட்டத்திற்கு கவர்னர் வரமுடியாமற் போனால், உபதலைவர் அக்கிராசனம் வகிப்பர். ஆனாலும் சபையின் தீர்மானங்கள் கவர்னருடைய எழுத்துமூலமான அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

சட்டசபையில் எந்தக் கட்சியானது மெஜாரிடியாய் இருக்கிறதோ, அந்தக் கட்சியிலிருந்தே சிலரை கவர்னர் மந்திரிகளாக நியமிப்பது வழக்கம். அதாவது சட்டசபைக்கு ஜனங்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் அங்கத்தினர்கள் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களாயிருப்பார்களாதலால், அவர்களில் எந்தக் கட்சியார் அதிகத் தொகையினரா யிருக்கிறார்களோ, அவர்களிலிருந்தே மந்-

திரிகள் பொறுக்கப்படுவார்கள். மாற்றப்பட்ட இலாகாக்களை மந்திரிகளே நிர்வகித்து வரவேண்டும். மந்திரிகள் சட்டசபையின் நம்பிக்கையை இழக்காமல் இருக்கும் வரையில் உத்தியோகம் வகிக்கலாம். அதுவுமன்றி, அவர்கள் கவர்னருடைய மனப் போக்கின்படியும் அவருக்கு அதிருப்தி ஏற்படாமலும் நடந்து கொள்ளவேண்டும். மாற்றப்பட்ட இலாகாக்களின் நிர்வாகத்தில் கவர்னர் சாதாரணமாய் மந்திரிகளின் அபிப்பிராயத்தை அநுசரித்தே நடந்துவருவார்; ஆனால் மந்திரிகளின் கொள்கையை அவர் ஒப்புக்கொள்ளமாற் போனால், தமது சுயேச்சைப்படி காரியத்தை நடத்தலாம். ஏதோ காரணத்தினால் மந்திரிகளின் ஸ்தானம் சொற்ப காலத்திற்குக் காலியாய் இருக்க நேர்ந்தால், அவர்களுடைய வேலையை கவர்னரே ஏற்று நடத்தலாம். நிர்வாகசபை யங்கத்தினரும் மந்திரிகளும் அடிக்கடி பல பொதுவான நிர்வாகங்களைப் பற்றி ஒருவரையொருவர் கலந்து யோசனை செய்து கொள்வார்கள். பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்தை மந்திரிகள் எடுத்துக் கூறவும், நிர்வாக ஒழுங்கு இன்னதென்பதை மற்றவர் விளக்கிக் காட்டவும் இந்த ஏற்பாடு அநுகூலமாயிருக்கும். நிர்வாக சபையினரும் மந்திரிகளும் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க வேண்டுமேயன்றி ஒருவர்மீது மற்றவர் அதிகாரம் செலுத்துவது கூடாதென்பதே இந்த இரட்டையாட்சியை உற்பத்தி செய்தவர்களின் உத்தேசம். கவர்னருடைய கொள்கைகளை மந்திரிகள் அங்கீகரிக்க முடியாமற் போனால், அவர்கள் தங்களதுபதவியை இராஜீநாமாச்செய்து விட்டு விலகிக் கொள்ளலாம். சட்டசபையின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக நடக்க எண்ணும் மந்திரிகளை கவர்னர் உத்தியோகத்திலிருந்து நீக்கி விடலாம். மாற்றப்பட்ட

இலாகாக்களுக்குத் தேவையான பணத்தைத் தனியாக ஒதுக்கி வைப்பது வழக்கம். மந்திரிகளுக்குதவியாகச் சில காரியதரிசிகளை சட்டசபை யங்கத்தினர்களிலிருந்து கவர்னர் பொறுக்கியெடுப்பார். பர்மா, வடமேற்கு மாகாணம் ஆகியவை போன்ற சில மாகாணங்களில் லெப்டினன்ட் கவர்னர் அல்லது கமிஷனர் என்ற அதிகாரிகளே இருந்து, அநேகமாய் சுயேச்சையாக சகல நிர்வாகத்தையும் நடத்தி வருகின்றனர். அவ்விடங்களில் கவர்னர் ஸ்தானம் இல்லை. ஒரு மாகாணத்திற்கு கவர்னராக நியமிக்கப்படுகிறவர்களுக்கு அரசர் ஓர் அதிகாரப் பத்திரம் பிறப்பிப்பது வழக்கம். அதில் கவர்னர் நடந்துகொள்ள வேண்டிய தோரணைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அதிலிருந்து கவர்னருடைய வேலைகள் இன்னின்னவென்பது விளங்கி விடுமாதலால், அதைச் சுருக்கமாய்க் கீழே காண்க:—அரசர் கவர்னருக்குக் கூறுவதாவது:—

"நமது ஏக சக்ராதிபத்தியத்தில் ஒரு முக்கிய பாகமான பிரிட்டிஷ் இந்தியாவில் ஜனங்களுக்கு உத்தரவாதமுள்ள ஆட்சியை மேன்மேலும் படிப்படியாக ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் சுயாட்சி சம்பந்தமான ஏற்பாடுகள் சிறுகச்சிறுக விருத்தியடைய வேண்டுமென இந்திய துரைத்தனச் சட்டத்தில் வழி ஏற்படுத்தப்பட்டிருப்பதாலும், மாகாண கவர்னர் பதவியை வகிக்கும்பொழுது நீங்கள் அச்சட்டத்தின் உத்தேசத்தை நிறைவேற்றவும், அதன் பயனாய் அச்சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஸ்தாபனங்களும் முறைகளும் நிச்சயமாகவும் உறுதியாகவும் ஸ்தாபிக்கப்படவும், இராஜதானியிலுள்ள பொதுஜனங்கள் தங்களைச் சீக்கிரத்தில் சுயாட்சிக்குத் தகுதியாக்கிக்கொள்ளும்படியான இராஜீய காரியங்களைச் செய்யும் வழக்கத்

த்தையும் இராஜீய முறைகளை கௌரவிக்கும் குணத்தையும் பெறவும், நம்முடைய அதிகாரமும் நம்முடைய கவர்னர் ஜெனரலின் அதிகாரமும் சரிவர மதிக்கப்படும்படியும் செய்ய வேண்டுமென்பது நமது விருப்பமாதலாலும், நாம் உங்களுக்குக் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டு அடியில் வருபவைகளே நமக்கு உகந்தவைகளென்பதையும், அவைகளே நமக்கு விருப்பமானவைக ளென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்:—

(1) அரசியல் நிர்வாகமுறை சரிவர நடக்கும்படியும், மத துவேஷத்தைக் குறைக்கவும், எல்லா ஜாதி வகுப்புகளுக்குள்ளும் நம்பிக்கையையும் கூட்டுறவையும அதிகப்படுத்தவும், பொது வருமான நிலைமை சீர்கெடாமலிருக்கவும், ஜனங்களுக்கு சகலவிதமான துறைகளிலும் நலம் ஏற்படும்படியும், எல்லா ஜனங்களையும் வித்தியாசமின்றி தேசத்தினுடைய பொது விஷயங்களிலும் அரசாங்கத்திலும் ஈடுபடும்படியும் செய்வதற்கு நீங்கள் உங்களால் இயன்றவரை முனைந்து நிர்வாகம் நடத்தவேண்டும்.

(2) இப்பொழுது ஓட்டுரிமை பெற்றவர்களும், இனி பெறப்போகிறவர்களும் ஓட்டுரிமையினால் ஏற்படும் கடமைகளையும் பொறுப்புகளையும் நன்மைகளையும் அறிந்துணருவது அவசியமாகும்—அதாவது சட்டசபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை உபயோகிப்பவர்கள் தங்களுடைய பிரதிநிதித்தேர்தலினால் விளையும் பலாபலன்களை உணரவேண்டும்; அங்ஙனமே பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் படுவோர்கள் தங்களுக்குக் கிடைத்த ஓட்டுகளுடைய கருத்தையும் அறியவேண்டும் ; இதனால் மட்டுமே ஜனங்கள் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ளவும், தங்கள் நிலைமையை அபிவிருத்தி செய்துகொள்ளவும் பிரதிநிதி

ஸ்தாபனங்களை நாடுவது சாத்தியமாகும் என்பதை நீங்கள் கருத்திற் கொள்ளவேண்டும்.

(3) சபையுடன் கூடிய கவர்னரின் சட்டபூர்வமான நிர்வாகத்திற்கென சில விஷயங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாலும், அதைப்பற்றிய வரையில் நம்முடைய கவர்னர் ஜெனரலுடைய அதிகாரம் குறைவுபடாமல் இருப்பதனாலும், மற்றும் சில இலாகாக்கள் மந்திரியுடன் கூடிய கவர்னரின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டிருப்பதனாலும், இவ்விரு பிரிவுகளைச் சேர்ந்த இலாகாக்களின் பொறுப்பானது தெளிவாகவும் தனியாகவும் பிரிந்து நிற்கும்படி துரைத்தன நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்திக் கொள்வது உங்களுடைய கடமை.

(4) ஆனாலும் நீங்களும் உங்களது நிர்வாக சபையினரும் உங்களது மந்திரிகளும் சேர்ந்து ஆலோசனை செய்யும் வழக்கத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்; ஏனெனில் அதனால் உங்களது நிர்வாகசபை யங்கத்தினரின் அநுபவத்தினால் மந்திரிகளும், பொது ஜனங்களுடைய விருப்பத்தை அறிந்துள்ள மந்திரிகளின் சம்பந்தத்தால், நிர்வாக சபை யங்கத்தினரும் மற்ற உத்தியோகஸ்தர்களும் நன்மையடையலாம்.

(5) மாற்றப்பட்ட இலாகாக்களை நிர்வகிப்பதில், உங்களால் கூடியவரையில், மந்திரிகளுக்கு உதவிபுரிந்து சட்ட சபையின் முன் அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய விதத்தைப்பற்றி புத்திமதிகள் கூறி வரவேண்டும்.

(6) ஒரு மந்திரியின் அபிப்பிராயத்தை ஆராய்ந்து பார்க்கையிலும் அவ்வபிப்பிராயத்தை அநுசரிப்பதா கூடாதா என்பதைத் தீர்மானிப்பதிலும் நீங்கள் சட்ட

சபைக்கும் மந்திரிக்கும் உள்ள முறைமையையும். பிரதிநிதிகளின் மூலம் தெரிவிக்கப்படும் பொதுஜன அபிப்பிராயத்தையும் சரிவர கௌரவிக்க முயலவேண்டும்.

(7) சட்டத்தின்படியும், இந்தக் கட்டளையின் மூலமும் உங்களுக்கு இடப்பட்டிருக்கும் பொதுவான கடமைகளை நீங்கள் செய்வதுடன், நாம் அளிக்கும் வேறு சில விசேஷப் பொறுப்புகளையும் நீங்கள் ஏற்கவேண்டும். அவையாவன :—

(i) உங்கள் இராஜதானியின் எல்லா பாகங்களிலும் அமைதியும் சமாதானமும் நிலைத்திருக்கவும், மத வேற்றுமையாலோ, ஜாதி வேற்றுமையாலோ சச்சரவுகள் ஏற்படாதிருக்கவும் அவசியமான காரியங்களை நீங்கள் செய்ய வேண்டும். நம்முடைய பெயரால் நமது இந்தியா மந்திரியினுலோ, அல்லது கவர்னர் ஜெனரலினுலோ பிறப்பிக்கப்படும் கட்டளைகள் யாவும் சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா வென்பதை நீங்கள் கவனித்துக் கொள்ளவேண்டும்.

(ii) உங்கள் பாதுகாப்பின் கீழ் விடப்பட்டிருக்கும் ஜனங்களில், சிறு தொகையினராயிருப்பதாலோ, அல்லது, கல்வி முதலான பல சௌகரியங்கள் இல்லாமையாலோ, அல்லது, வேறு எக்காரணத்தினுலோ, நம்முடைய விசேஷப் பாதுகாப்பை அபேட்சிப்பவர்களாயும், இராஜ்யத்துறையில் மற்றவருடன் கூட்டாக ஒத்துழைப்பதால் தங்கள் நலத்தை விருத்திசெய்து கொள்ளலாமென்ற நம்பிக்கையற்றவர்களாயும் உள்ள சில வகுப்பாரின் சமூக அபிவிருத்திக்கு அவசியமான காரியங்களைச் செய்யவும், அவ்வகுப்பினர் அநாதரவு செய்யப்படாமலும் துன்புறுத்தப்படாமலும் அத்தகைய பயமேயில்லாமலும் வாழும்படி கவ

னித்துக் கொள்ளவும் எப்பொழுதும் நீங்கள் வழிகாட்டியாக இருந்து உதவிபுரியவேண்டும்.

(iii) உங்கள் அரசாங்கத்தாரின் உத்தரவோ அல்லது சட்டசபையின் தீர்மானமோ, ஜாதி, மதம், கல்வி, சமூக நிலைமை, சொத்துடைமை முதலான காரணங்களால் வேற்றுமைப்படும் இனத்தாருக்குள் பட்சபாதமாக நன்மை தீமைகளைச் செய்யக் கூடியதாகவோ, அல்லது, இதுவரை எவரேனும் அநுபவித்துவந்த உரிமைகளையும் சௌகரியங்களையும் அநியாயமாகக் குறைக்கக் கூடியதாகவோ, அல்லது, இனி ஜனங்களுக் களிக்கப்படப்போகும் நன்மைகளைத் தடுத்துவிடக் கூடியதாகவோ இல்லாதபடி நீங்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(iv) உங்கள் மாகாணத்தில் பல உத்தியோகங்களை வகிக்கும் அதிகாரிகள் தமது நியாயமான கடமைகளைச் செய்வதற்கும், தமது நியாயமான உரிமைகளை அநுபவிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுப்பதுடன், அவர்களது விஷயத்தில் உங்களது துரைத்தனத்தார் பட்சபாதமற்ற உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்களா வென்றும் நீங்கள் கவனித்துக் கொள்ளவேண்டும். மேலும் துரைத்தனத்தாருடைய நியாயமான கட்டளைகளுக்கு எல்லோரும் கீழ்ப்படிந்து நடக்கும்படியும் அரசாங்க உத்தரவுகளைப் பிரயோகம் செய்வதில் திறமையாய் நடந்துகொள்ளும்படியும் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(v) வர்த்தகமும் கைத்தொழிலும் விருத்தியடைவதற்கான எல்லா வசதிகளையும் ஜனங்களுக்குச் செய்து கொடுப்பதுடன், பொது நலத்திற்கு விரோதமான வகையில் ஒருவரோ சிலரோ விசேஷ உரிமைகளைப் பெறாத

படியும் வியாபார விஷயங்களில் பட்சபாதமான வேறுபாடுகள் இல்லாமலும் நீங்கள் செய்து வரவேண்டும்.

(8) இந்த நமது அறிக்கையை நீங்கள் உங்களது நிர்வாக சபை யங்கத்தினருக்கும் மந்திரிகளுக்கும் அனுப்பி வைத்தும் உங்களது மாகாணத்தில் யுக்தப்படி இதை வெளிப்படுத்தியும் எல்லோரும் இவைகளைத் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டும்.''

சட்ட சபைகள்.

அகில இந்தியாவுக்கு இரண்டு சபைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று இந்தியா சட்டசபை (Legislative Assembly) என்றும், மற்றொன்று இராஜாங்க சபை (Council of State) என்றும் குறிக்கப்படும். அவ்விரு சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்று ஗வர்னர் ஜெனரலுடைய அங்கீகாரத்தையும் பெற்றால்தான் ஒரு தீர்மானம் சட்டம் ஆகும். இராஜாங்க சபை சாதாரணமாய் அறுபது அங்கத்தினர்களைக் கொண்டது. அதில் மூன்றிலொரு பாகம் துரைத்தன உத்தியோகஸ்தர்களால் நிரப்பப்படுகின்றன. இந்தியா சட்டசபையில் ஏறக்குறைய 140-அங்கத்தினர்கள் இருக்கின்றனர். அதில் ஏறக்குறைய நூறு பேர்கள் வரையில் ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் துரைத்தனத்தாரால் நியமனம் செய்யப்படுகிறார்கள். நியமனம் செய்யப்படும் அங்கத்தினருள் சிலர் உத்தியோகஸ்தர்களாகவும் சிலர் உத்தியோகஸ்தரல்லாத கனவான்களாகவும் இருக்கிறார்கள். சட்டசபைக் கூட்டங்களின் நடவடிக்கைகளில் ஗வர்னர் ஜெனரல் கலந்து கொள்ளமாட்டார். ஆனால் அவர் தூரத்திலிருந்து நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருக்கலாம்;

புதிதாகச் சபைகூடும் சமயத்தில் அவர் சபையங்கத்தினர்களுக்கு ஒரு பிரசங்கம் செய்துவிட்டுப் போவதும் உண்டு.

இவ்விதச் சீர்திருத்தங்கள் அமுலுக்கு வந்த பின் நான்கு வருஷகாலம் வரையில் ௸வர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்ட ஒருவரே இந்தியா சட்டசபைக்கு அக்கிராசனராயிருந்து வந்தார். (இப்பதவி முதன்முதலாக ஸர் ப்/²ரேடிரிக் ஒயிட் என்பவருக்குக் கிடைத்தது) அதன்பின்பு சட்டசபை யங்கத்தினர்களே தமக்குள் ஒருவரைத் தலைவராய்த் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டியது. இந்திய சரித்திரத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் பதவியை முதன் முதலாக ஸ்ரீமான் வி. ஜே. படேல் என்பவர் பெற்று நிரம்பவும் திறமையாக வகித்துவருகிறார். தலைவர் கூட்டத்திற்கு வரமுடியாமற் போனால் அவருக்கு பதிலாக உபதலைவர் அக்கிராசனம் வகிப்பார். உபதலைவரும் சட்டசபை யங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்.

இந்தியா சட்டசபை மூன்று வருஷத்திற்கொருமுறை புதுப்பிக்கப்படுகிறது. இராஜாங்க சபை ஐந்து வருஷகாலம் நிலைத்திருக்கும். ஆனால் ஏதாவதொரு விசேஷ காரணத்தை முன்னிட்டு ௸வர்னர் ஜெனரல் இச்சபைகளை அவைகளுடைய காலத்திற்கு முன் கலைக்கவோ, அல்லது, அதிக காலம் நீடித்திருக்கச் செய்யவோ அதிகாரம் உடையவர். சட்ட சபையில் ஒரு தீர்மானத்திற்கு சாதகமாக பெரும்பான்மையினர் ஓட் கொடுத்தால், அது நிறைவேறி விட்டதாகக் கருதப்படும். எங்கும் இருப்பதுபோல, அக்கிராசனருக்கு ஓர் அதிகப்படி ஓட்டும் உண்டு. இவ்விரு சபைகளிலும் அங்கத்தினர் பதவியை அபேட்சிக்கிறவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாய் இருக்கக் கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினரில் எவராகிலும் சர்க்கார் உத்தி

யோகத்தை ஒப்புக்கொண்டுவிட்டால், அவருடைய ஸ்தானம் உடனே காலியாய்விடும். கவர்னர் ஜெனரலுடைய் நிர்வாக சபை யங்கத்தினர்கள் இவ்விருசபைகளுக்குள் ஏதாவதொன்றின் அங்கத்தினராக நியமிக்கப்படுவார்கள். விரிட்டிஷ் இந்தியாவிலுள்ள மனிதர்கள், நியாயஸ்தலங்கள், ஸ்தாபனங்கள் முதலியவைகளை பாதிக்கின்ற சட்டங்களை இயற்றவும் தள்ளுபடி செய்யவும் ஷை இரண்டு சட்ட சபைகளுக்கும் அதிகாரம்உண்டு. ஆனால் விரிட்டிஷ் பார்லிமெண்டினுடைய உரிமைகளையோ அதிகாரத்தையோ பாதிக்கும் சட்டங்களைச் செய்ய ஷை சபைகளுக்கு அதிகாரம் இல்லை. சட்ட சபைக் கூட்டங்கள் நடக்கவேண்டிய ஒழுங்கு முறையைப் பற்றிய விதிகளை ஷை சபைகளே செய்துகொள்ளலாம்.

சட்ட சபைகளில் கொண்டுவரப்படும் தீர்மானங்களில் எவையேனும் தேசத்தின் பொது நலத்திற்குத் தீமை விளைவிக்கக்கூடியவையென கவர்னர் ஜெனரல் கருதினால், அத்தீர்மானங்கள்மீது விவாதமே நடக்கக்கூடாதென அவர் உத்தரவுசெய்து விடலாம். இந்தியா சட்டசபை, இராஜாங்க சபை ஆகிய இரண்டு சபைகளில் ஒன்றில் ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேறி ஆறுமாத காலமாயும் கூட, அது மற்ற சபையில் நிறைவேறாது நின்றால், கவர்னர்ஜெனரல் இவ்விருசபைகளையும் ஒன்று சேர்த்து ஒரேகூட்டமாகச்செய்து அதில் அந்தத் தீர்மானத்தைப் பற்றிய விவாதம் நடக்கும்படி செய்யலாம். அல்லது ஒவ்வொரு சபையிலிருந்தும் நியமிக்கப்பட்ட சில கனவான்கள் ஒன்றுகூடியும் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரக்கூடும். சட்டசபை நடவடிக்கைகள் சம்பந்தமாக சில நிரந்தரமான விதிகளை கவர்னர் ஜெனரல் தமது சபையினருடன் கலந்துகொண்டு ஏற்படுத்தி யிருக்கிறார். சமய சந்தர்ப்பங்களுக் கேற்றபடி ஷை விதி

களை மாற்றும் அதிகாரம் சட்டசபைக்கு உண்டு; மாற்றப் பட்ட விதிகளை கவர்னர் ஜெனரல் அங்கீகரிக்க வேண்டும். வருஷந்தோறும் இந்திய துரைத்தனத்தினுடைய வரவு செலவு கணக்கை பொக்கிஷ மெம்பர் சட்டசபைகளின் முன்பு ஆஜர் செய்யவேண்டும். சுதந்திர தேசங்களின் பார்லிமென்டுகள் தமதிஷ்டப்படியே வரவுசெலவுகணக்கை அங்கீகரிக்கும். ஓர் இலாகாவிற்கு இவ்வளவுதான் செலவிட வேண்டுமென்று அவை நிர்ணயம் செய்துவிடும். ஆனால் இந்திய சட்டசபைகளுக்கு அவ்வித பூர்ணமான அதிகாரம் கிடையாது. இராணுவச் செலவுகள், அரசராலோ அல்லது இந்தியா மந்திரியாலோ நேராய் நியமிக்கப்படும் துரைத்தன உத்தியோகஸ்தர்களின் சம்பளம், இராஜீய இலாகா, மதஇலாகா முதலியவற்றின் செலவுகள் ஆகிய முக்கிய விஷயங்களைப்பற்றி விவாதம் செய்யும் அதிகாரம் சட்டசபைக்கு இப்பொழுது கொடுக்கப்படவில்லை. மற்ற இலாகாக்கள் சம்பந்தப்பட்ட வரையிலும்கூட, சட்டசபை ஒரு செலவு இனத்தை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டாலும், அது அரசாங்க நிர்வாகத்திற்கு அத்தியாவசியமென கவர்னர் ஜெனரல் கருதினால் அச்செலவை அவரே அநுமதித்து விடலாம். மேலும் ஏதோ எதிர்பார்க்கப் படாத செலவு திடீரென்று நேரிட்டாலும் சட்டசபையின் அநுமதியைப் பெறுமலேயே கவர்னர் ஜெனரல் அவசர நிமித்தம் அந்தச் செலவை நியாயமான செலவாகச்செய்து விடலாம். இவ்வாறு சட்டப்படி நமது கவர்னர் ஜெனராலுக்கு ஏறக்குறைய சுயேச்சாதிகாரமே கொடுக்கப்பட்டிருக்கிறதெனக் கூறவேண்டும். ஆனால் அவ்வித சுயேச்சாதிகாரத்தை அவர் கூடியவரையில் பிரயோகம் செய்யக் கூடாது என்பதே மான்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்களைச் செய்தவர்களது நோக்கம்.

சட்டசபையில் நிறைவேறும் தீர்மானங்கள் கவர்னர் ஜெனாலுடைய கையெழுத்தைப் பெற்றாலன்றிச் சட்டங்களாகா. தமக்கு இஷ்டமில்லையாகில் கவர்னர் ஜெனரல் ஒரு தீர்மானத்தை நிராகரித்துவிடலாம்; அல்லது, அதை அரசருக்கு அனுப்பி அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்கலாம். கவர்னர் ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களும் இந்தியாமந்திரியினுடைய பார்வைக்கு அனுப்பப்படவேண்டும்; அச்சட்டங்களையும்கூட பிரிட்டிஷ் துரைத்தனத்தார் இஷ்டப்பட்டால் தள்ளுபடி செய்துவிடலாம்.

இந்தியா சட்டசபைகள் இயற்றும் சட்டத்தைத் தவிர இந்திய துரைத்தனத்தாரும் தாமாகவோ அல்லது மாகாண துரைத்தனங்களின் தூண்டுதலின்மேலோ சட்டங்கள் போன்ற உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம். தேசத்தில் பெருத்த கிளர்ச்சிகள் ஏற்படும் காலங்களிலோ யுத்த சமயத்திலோ கவர்னர் ஜெனரல் அவசரச் சட்டங்களையும் தாமே உண்டுபண்ணி அவைகளையும் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரலாம்.

மாகாண சட்டசபை.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியான ஒவ்வொரு சட்டசபை உண்டு. இந்தியா முழுதிற்கும் இரண்டு சபைகள் இருப்பதற்கு மாறாக, ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரே ஒரு சபைதான் உண்டு. மாகாண சட்டசபையில் ஜனங்களால் ஓட்டுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், நியமனம் ஆனவர்களும், நிர்வாக சபையினரும் அங்கத்தினராய் இருப்பார்கள். கவர்னர் சட்டசபையில் ஸ்தானம் வகிக்க முடியாது. ஆனால் அவர் சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஒவ்வொரு சமயத்தில் பிரசங்கம் செய்ய

லாம்; நடவடிக்கைகளையும் கவனித்து வரலாம். சட்டசபையில் ஏதாவதொரு சிக்கலான விஷயம் விவாதத்திற்கு வரும்பொழுது தேர்ச்சிபெற்ற இருவரை கவர்னர் சட்டசபை யங்கத்தினராக நியமிக்கலாம். உதாரணமாக சென்னை சர்வகலாசாலைச் சட்டத்திருத்த மசோதாவைப்பற்றி விவாதம் நடக்கும்பொழுது, சர்வகலாசாலையின் உத்தியோகஸ்தர்களில் இருவரை நியமிப்பது வழக்கம். மாகாண சட்டசபை மூன்று வருஷத்திற் கொருமுறை புதுப்பிக்கப்படும். ஆனால் கவர்னர் ஏதோ காரணத்தை முன்னிட்டு அதைக் காலத்திற்கு முன்னர் கலைத்து விடலாம்; அல்லது, ஒருவருஷ காலம் வரையில் அதிகமாக நீடித்திருக்கச் செய்யலாம். சட்டசபையின் தலைவர், அதன் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். (ஆனால் இச்சீர்திருத்தங்கள் அமுலுக்கு வந்த நான்கு வருஷங்கள் வரை ஷை தலைவர் தேர்ந்தெடுக்கப்படாமல் நியமனம் ஆனவராயிருந்தார்) தலைவருக்குக் கீழ் ஓர் உபதலைவரும் உண்டு. வருஷந்தோறும் மாகாண துரைத்தனத்தின் வரவுசெலவு கணக்கு சட்டசபையின் முன்பு பொக்கிஷ மெம்பரால் ஆஜர் செய்யப்படும். சட்டசபை விரும்பினால் சில செலவு இனங்களை நிராகரித்துவிடலாம்; ஆனால் அச்செலவு அத்தியாவசியமென கவர்னருக்குத் தோன்றினால், அவர் அதை அநுமதித்து விடலாம். சட்டசபையில் பிரேரணை செய்யப்படும் மசோதாக்களில் எதுவாயினும் அபாயகரமானதென கவர்னர் எண்ணினால் அதைப்பற்றிய விவாதமே நடக்கக்கூடாதெனத் தடுத்து விடலாம். சட்டசபையின் நடவடிக்கைகளைப் பற்றிப் பொதுவான சில விதிகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. ஆனால் ஷை விதிகளுக்குட்பட்டு, அங்கத்தினர்களுக்கு பூர்ணமான சுதந்திரம் உண்டு. சட்டசபையில் பேசியதைக்

கொண்டு ஓர் அங்கத்தினர் மீது எந்த நீதிஸ்தலமும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாது. இது இந்தியா சட்ட சபையினருக்கும் மாகாண சட்ட சபையினருக்கும் உள்ள விசேஷ உரிமையாகும். உலகத்திலுள்ள பார்லிமெண்டுகளில் அநேகமாக யாவற்றிலும் இந்த உரிமையளிக்கப்பட் டிருக்கிறது. ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றிச் சரியானபடி சட்டமியற்ற இச்சபையினர் தவறி விட்டாலும் சரி, அல்லது, அச்சட்டத்தைத் தள்ளுபடி செய்துவிட்டாலும் சரி, கவர்னர் விரும்பினால், அது அத்தியாவசியமான சட்டமென்ற காரணத்தைக் கொண்டு, அவர் அதைத் தமது விசேஷ அதிகாரத்தால் நிறைவேற்றி விடலாம். இந்தியாவிலுள்ள மாகாணங்களில் சில கவர்னராலும், சில லெப்டினன்ட் கவர்னராலும் ஆளப்படுவதாக முன்பு கூறினோமல்லவா? லெப்டினன்ட் கவர்னருடைய மாகாணங்களிலும் சிறிய சட்டசபைகள் உண்டு. ஆனால் அவைகளது அதிகாரம் மிகக் குறைவானதே.

மாகாண சட்டசபைகள் ஜனங்களுடைய பொதுவான நன்மையைக் கருதிச் சட்டமியற்றலாம். ஆனால் இந்திய துரைத்தனத்தாருடைய வியவகாரங்களையோ, பிரிட்டிஷ் பார்லிமென்டாருடைய ஆதிக்கத்தையோ அச்சட்டங்கள் பாதிக்காமலிருக்க வேண்டும். ஸர்க்கார் உத்தியோகத்திலிருப்பவர்கள் சட்டசபைக்கு அபேட்சகர்களாக நிற்கக் கூடாது. சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யாராவது ஸர்க்கார் உத்தியோகத்தைப் பெற்றுவிட்டால் அவருடைய ஸ்தானம் காலியாகிவிடும். (ஆனால் மந்திரி பதவியை ஏற்போருக்கு இந்த விதியானது பிரயோகம் ஆகாது) சட்ட சபையில் நிறைவேறும் தீர்மானங்கள் கவர்னருடைய கையெழுத்தைப் பெறவேண்டும். ஆனால் கவர்னருக்கும் சுயேச்-

சாதிகாரம் உண்டு. அவர் ஒரு தீர்மானத்தைத் தள்ளுபடி செய்துவிடலாம்; அல்லது மறு விவாதத்திற்காகச் சட்ட சபைக்கே திருப்பியனுப்பி விடலாம்; அல்லது, கவர்னர் ஜெனரலுடைய பார்வைக்கு அனுப்பி வைக்கலாம்.

1919-ம் வருஷத்து இந்திய துரைத்தன சட்டத்திலேயே (84 ஏ) என்ற பிரிவில் இப்பொழுது நமது தேசத்தில் விசாரணை நடத்தும் அரசியல் (ஸைமன்) கமிஷனைப் பற்றிக் கூறியிருக்கிறது. இந்தியருக்கு அளிக்கப்பட்ட அற்ப சுயாட்சியை அவர்கள் சரியானபடி வகித்து வந்திருக்கின்றனரா என்பதையும், இன்னும் அதிகமான சுயாட்சியை அளிக்கலாமா அல்லது ஏற்கனவே அளித்ததையும் பிடுங்கிவிடலாமா என்பதையும் அவர்கள் ஆராய்ந்து அறிக்கை செய்துகொள்ள வேண்டும்.

கவர்னர் ஜெனரல், சேனாதிபதி, கவர்னர்கள், நிர்வாக சபை மெம்பர்கள் - ஆகியவர்களுக்கு ஏதோ அவசர காரணத்தை முன்னிட்டு நான்குமாத காலம் ரஜா கொடுக்கும் அதிகாரம் இந்தியா மந்திரிக்கு உண்டு. இந்தியா மந்திரி விரும்பினால் ரஜாக்காலத்தை அதிகப் படுத்தலாம். ரஜா எடுத்துக் கொண்டவர்களுடைய ஸ்தானத்திற்கு வேறு ஒருவரை அரசர் நியமிப்பார். கவர்னர் ஜெனரல் ரஜா எடுத்துக் கொண்டால் அதிககாலம் கவர்னர் பதவியைப் பார்த்து வருபவரே ஷை உத்தியோகத்தைப் பெறுவது வழக்கம். அவ்வாறே கவர்னருக்கு ரஜா அளிக்கப்பட்டாலும், அந்த மாகாண நிர்வாக சபையின் உபதலைவரே சொற்பகாலம் வேலை பார்த்து வருவது வழக்கம்.

ஸிவில் ஸர்விஸ்.

இந்தியாவில் துரைத்தன உத்தியோகத்தில் இருப்பவரைப் பற்றிப் பல விதிகளை ஏற்படுத்தி, அவர்க

ருடைய சம்பளம், உத்தியோக காலம், ஒழுக்கம் முதலான விஷயங்களைத் தீர்மானப்படுத்தி விதிகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். துரைத்தன உத்தியோகங்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்வோரைப் பார்வையிட்டு, அவர்களில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஒரு பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் இருக்கிறது. அந்தக் கமிஷனில் ஐந்து பேர்களுக்கதிகப்படாத அங்கத்தினர்கள் ஸ்தானம் வகித்து வேலை செய்கின்றனர். ஷை கமிஷன் கவர்னர் ஜெனராலுக்கு அவசியமான சமயங்களில் யோசனை கூறும். ஏதோ ஓர் உத்தியோகஸ்தரை நியமிக்க வேண்டுமானால், அதற்கு விண்ணப்பதார்களாக முன்வரும் நபர்களுக்கு அவசியமான கல்வி, அவர்களைப் பரீட்சிக்கும் முறை, உத்தியோக நிபந்தனைகள், முதலியவைகளை ஷை கமிஷன் நிச்சயித்துப் பரீட்சை நடத்திச் சிறந்த நபர்களைப் பொறுக்கியெடுக்கும். துரைத்தன உத்தியோகஸ்தரை தண்டிக்கும் பொழுதும் கவர்னர் ஜெனரல் ஷை கமிஷனைக் கலந்து கொள்ள வேண்டும்.

மேலும் துரைத்தன உத்தியோகங்களுக்கு நியமிக்கப் படும் பொருட்டு சில விண்ணப்பதார்கள் 'இந்தியன் ஸிவில் ஸர்விஸ்' பரீக்ஷைக்கும் போவதுண்டு. அவர்களையே ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களென நாம் சுருக்கிக் கூறுகிறோம். ஸிவில் ஸர்விஸ்காரர்களே இந்திய துரைத்தனத்தின் இரும்புத் தூண்கள் என்றும், சுவர்க்கத்தி லிருந்து குதித்த இன,்தார் என்றும் குறிப்பதுண்டு. இது சம்பந்தமாக 'துரை,்தன நிர்வாகம்' என்ற அதிகாரத்தில் ஸிவில் உத்தியோகஸ்தரைப் பற்றிக் கூறியுள்ளதை கவனிக்கவும்.

ஹைகோர்ட்டுகள் அல்லது உயர்தர நீதிஸ்தலங்கள் இந்திய அரசின் முதலிரண்டு பாகங்களான சட்டசபை,

நிர்வாக சபைகளைக் கவனித்த பின்பு மூன்றாவது பாகமான நீதிஸ்தலத்தைக் கவனிப்போம். சென்னை, கல்கத்தா, பம்பாய் முதலான இடங்களில் ஒவ்வொரு ஹைகோர்ட் அல்லது உயர்தர நீதிஸ்தலம் இருக்கிறது. ஒவ்வொன்றிலும் ஒரு முக்கிய நீதிபதியும் (சீப் ஜஸ்டிஸ்) வேறு சில நீதிபதிகளும் இருப்பார்கள்; ஆனால் மொத்தத் தொகை இருபதுக்குமேல் போகவே கூடாது. வேலைமிகுதியினால் கவர்னர் ஜெனரல் தற்காலிகமான சில நீதிபதிகளை இரண்டு வருஷகாலத்திற்கு நியமிக்கலாம். நீதிபதிகளை அரசரே நியமிப்பதாய் அர்த்தம்; அதாவது மாகாண துரைத்தனத்தாருடைய சிபார்சின்மேல் அந் நியமனம் நடைபெறும். அப்படியே அரசரால் மட்டும் ஒரு நீதிபதியை வேலையை விட்டு நீக்கமுடியும். ஆனாலும் ஏதோ பெருத்த குற்றம் செய்தாலன்றி நீதிபதிகளுக்கு வேலை போய்விடுமென்ற அச்சமே இல்லை. உயர்தர நீதிஸ்தலத்தில் முக்கிய நீதிபதிக்கே முதன்மையான கௌரவம் உண்டு. எந்த நீதிபதியும் தமது விருப்பப்படி வேலையை இராஜீநாமாச் செய்து விடலாம். ஒவ்வொரு மாகாணத்தின் நீதி இலாகா முழுதும் உயர்தர நீதிஸ்தலத்தாருடைய வசத்திலேயே இருக்கிறது.

சில மாகாண சட்ட சபைகளின் அங்கத்தினர்களின் மொத்தத் தொகை.

சென்னை	....	....	118
பம்பாய்	....	....	111
வங்காளம்	...	....	125
ஐக்கிய மாகாணம்	....	...	118
பஞ்ஜாப்	....	....	83
பீஹார் ஒரிஸ்ஸா	....	...	98
மத்திய மாகாணம்	....	....	70
அஸ்ஸாம்	....	....	53

(1919-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்டில் குறிக்கப்பட்டுள்ளபடி எழுதியது.)

சில உத்தியோகஸ்தர்களின் வருஷச் சம்பளம்.

கவர்னர் ஜெனரல் ...	ரூ.	2,56,000
வங்காளம், பம்பாய், சென்னை, ஐக்கிய மாகாணம் ஆகிய மாகாணங்களின் கவர்னர்கள்	ரூ.	128,000
பஞ்சாப், பீஹார் ஒரிஸ்ஸா ஆகிய இரண்டின் கவர்னர்கள் ...	ரூ.	100,000
சேனாதிபதி	ரூ.	100,000
மத்திய மாகாண கவர்னர்	ரூ.	72,000
அஸ்ஸாம் கவர்னர் ...	ரூ.	66,000
லெப்டினன்ட் கவர்னர்	ரூ.	100,000
இந்தியா துரைத்தனத்தின் நிர்வாகசபை யங்கத்தினர்	ரூ.	80,000
வங்காளம், பம்பாய், சென்னை, ஐக்கிய மாகாணம் ஆகியவைகளின் நிர்வாகசபை யங்கத்தினர் ...	ரூ.	64,000
பஞ்சாப், பீஹாரும் ஒரிஸ்ஸாவும் ஆகியவைகளின் நிர்வாக சபையினர் ...	ரூ.	60,000
மத்திய மாகாண நிர்வாக சபையினர்	ரூ.	48,000
அஸ்ஸாம் நிர்வாக சபையினர் ...	ரூ.	42,000

இந்திய துரைத்தனத்தாரால் நிர்வகிக்கப்படும் சில இலாகாக்கள்.

(1) இந்தியாவின் பாதுகாப்பு—சேனை, கப்பற்படை, ஆகாயப்படை ஆகியவைகளின் பரிபாலனம்.

(2) அன்னிய நாட்டு சம்பந்தம்.

(3) சுதேச இராஜ்ஜியங்களுடன் சம்பந்தம்.

(4) இராஜீய இலாகாச் செலவுகள்.

(5) இரயில்வே முதலிய போக்குவரத்து சாதனங்களில் சில குறித்த அதிகாரங்கள்.

(6) கப்பல் தொழிலபிவிருத்தி.

(7) கடற்கரை தீபஸ்தம்பங்கள் முதலியவை.

(8) துறைமுகப் பரிசோதக வைத்திய இலாகா, கப்பல் உத்தியோகஸ்தரின் வைத்தியசாலைகள்.

(9) முக்கியமான குறித்த சில துறைமுகங்கள்.

(10) தபால், தந்தி, டெலிபோன், சம்பியில்லாத் தந்தி.

(11) வருமானவரி, பருத்திவரி, கடற்சுங்கவரி, உப்பளஇலாகா, இந்தியா முழுதிற்கும் பொதுவான வரி இனங்கள்.

(12) நாணயச் செலாவணி, நாணயம் பொரித்தல்.

(13) இந்தியாவின் பொதுக் கடன்.

(14) ஸேவிங்ஸ் பாங்கிகள்.

(15) இந்தியக் கணக்குப் பரிசோதக இலாகாக்கள்.

(16) ஸிவில் சட்டங்கள்.

(17) வர்த்தகம், பாங்கிகள், இன்ஷியூர் செய்யும் கம்பெனிகள்.

(18) வர்த்தகக் கம்பெனிகளும், மற்ற சங்கங்களும்.

(19) பொதுஜன நன்மையின் பொருட்டு கவர்னர் ஜெனரலால் குறிக்கப்படும் சிலமுக்கியமான பண்டங்களின் உற்பத்தி, வியாபாரம், முதலியவற்றைக் கட்டுப்படுத்துதல்.

(20) பொது ஜன நன்மையைக் கருதி கவர்னர் ஜெனரலால் குறிக்கப்படும் சிலகைத்தொழில்களின் அபிவிருத்தி.

(21) அபினி பயிராக்கித் தயாரிப்பதையும், அதை ஏற்றுமதிசெய்து விற்பதையும் கட்டுப்படுத்துவது.

(22) இந்திய துரைத்தனத்தாருக்கு வேண்டிய காகிதம், முதலிய எழுதுகருவிகள்.

(23) பெட்ரோலியம், வெடிமருந்து முதலிய சாமான்கள்.

(24) பூமிஸார ஆராய்ச்சி இலாகா.

(25) சில சுரங்கங்கள்.

(26) ஸ்தாவர சாஸ்திர ஆராய்ச்சி.

(27) நூதன கற்பிதங்கள், சிற்பங்கள்.

(28) காபிரைட்.

(29) பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் குடிபுகுதல், வெளியில் குடியேறுதல், ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்தில் குடிபுகுதல்.

(30) கிரிமினல் சட்டம், கிரிமினல் நடவடிக்கைகள்.

(31) மத்திய போலீஸ் இலாகா.

(32) யுத்த சம்பந்தமான ஆயுதங்கள், ஆயுத மருந்து சாமான்கள்.

(33) பிரத்தியேக ஆராய்ச்சி சாலைகள்.

(34) கிரிஸ்துவ மத ஸ்தாபனங்களின் நிர்வாகம். (ஐரோப்பியர் கல்லறை யுள்பட)

(35) இந்தியாவின் ஸர்வே.

(36) புராதன சிலாசாசன ஆராய்ச்சி.

(37) ஜீவநூல் ஆராய்ச்சி.

(38) வாயு சாஸ்திரம்.

(39) ஜனத்தொகைக் கணக்கெடுத்தல், அது சம்பந்தமான புள்ளிகள் வைத்தல்.

(40) அகில இந்திய உத்தியோகங்களின் நிர்வாகம்.

(41) மாகாண இலாகாக்கள் சம்பந்தமான சில குறித்த சட்டங்கள்.

(42) எல்லை மாறுதல்கள்.

(43) மரியாதைக் கிரமங்கள், பட்டங்கள் முதலியவை சம்பந்தமான ஒழுங்கு முறைகள்.

(44) கவர்னர் ஜெனரலால், அவரது சொந்தச் செலவில் நிர்வகிக்கப்படும் ஸ்தாவரசொத்துகள்.

(45) பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.

(46) மாகாண துரைத்தனத்தாருக்கு சம்பந்தமான இலாகாக்களில் சேர்க்கப்படாமல் விலக்கி வைக்கப்பட்டிருப்பவை.

(47) மாகாண துரைத்தனத்தாருக்கு சம்பந்தமான இலாகாக்களில் சேர்க்கப்படாத புதிய இலாகாக்கள் யாவும்.

மாகாண துரைத்தனங்களின் நிர்வாகத்திலுள்ள இலாகாக்கள்.

(1) ஸ்தல சுய ஆட்சி இலாகா—முனிஸிபாலிடி முதலியவற்றின் நிர்வாகம்.

(2) வைத்திய சம்பந்தமான ஸ்தாபனங்களின் நிர்வாகம்.

(3) சுகாதார இலாகா நிர்வாகம்.

(4) புண்யஸ்தல யாத்திரை (பிரிட்டிஷ் இந்தியாவிற்குள்.)

(5) கல்வி இலாகா நிர்வாகம்.

(6) பொது மராமத்து இலாகா.

(7) நீர்ப்பாசன சாதனங்கள்.

(8) நிலவரி.

(9) பஞ்ச நிவாரணம்.

(10) வியவசாயம்.

(11) கால்நடை வைத்திய இலாகா.

(12) மச்ச இலாகா.

(13) ஐக்கிய சங்கங்கள்.

(14) காடுகள்.

(15) நில ஆக்கிரமம்.

(16) கலால் இலாகா.

(17) நீதி பரிபாலனம்.

(18) நியாயஸ்தலத் தீர்ப்பு வியாக்கியானங்கள்.

(19) அசக்தர்களின் சொத்துகளை துரைத்தனத்தார் நிர்வகித்தல்.

(20) முத்திரைக் காகிதங்கள், தலைகள் முதலியவை.

(21) பத்திரப் பதிவு இலாகா.

(22) ஜனனம் மரணம் கலியாணம் முதலியவைகளின் பதிவு இலாகா.

(23) மதஸ்தாபனங்கள், தர்ம ஸ்தாபனங்கள்.

(24) சுரங்கங்களின் அபிவிருத்தி.

(25) கைத்தொழில் அபிவிருத்தி இலாகா.

(26) தொழிற்சாலைகள் முதலியவை.

(27) துரைத்தனத்தாருக்கு அவசியமான காகிதம் முதலிய எழுது கருவிகள்.

(28) உணவுப் பொருள்கள் முதலியவற்றோடு கெடுதலான வஸ்துக்களை சேர்த்து விற்பனை செய்தல் முதலியவை.

(29) நிரைகள் படிகள் முதலிய அளவுகள்.

(30) சிறு துறைமுகங்கள்.

(31) மாகாணத்திற்குள் ஆறுகளின் வழியாய் வர்த்தக சாமான்களை ஏற்றுமதி இறக்குமதி செய்தல்.

(32) போலீஸ் இலாகா.

(33) சூதாட்டம் ஜீவவதை முதலியவற்றைத் தடுத்தல்.

(34) பத்திரிகைகள், புஸ்தகங்கள், அச்சியந்திரசாலைகள் முதலியவற்றைக் கட்டுப்படுத்தல்.

(35) துர்மரணம் முதலியவற்றைப் பற்றி விசாரித்து முடிவு செய்யும் ஸ்தலப் பஞ்சாயத்து.

(36) மாகாண எல்லைக்குப் புறம்பான சில பிரதேசங்கள்.

(37) பரம்பரையாய்த் திருட்டு முதலிய குற்றங்களைச் செய்யும் வகுப்பார்.

(38) ஐரோப்பிய நாடோடிகள்.

(39) சிறைச்சாலை நிர்வாகம்.

(40) கால்நடைப் பட்டிகள்.

(41) புதையல்.

(42) புஸ்தகசாலைகள், காட்சிசாலைகள், மிருகசாலைத் தோட்டங்கள் முதலியவை.

(43) மாகாண துரைத்தன அச்சுக்கூடங்கள்.
(44) சட்டசபைத் தேர்தல்கள்.
(45) வைத்தியம் முதலிய தொழில் இலாகா உத்தியோக நியமனத்திற்கு அவசியமான யோக்கியதாம்சங்களை நிர்ணயிப்பது (இந்தியா துரைத்தனத்திற்கும் உட்பட்டது.)
(46) ஸ்தல ஸ்தாபனங்களின் வரவு செலவு கணக்கு பரிசோதனை.
(47) மாகாணத்திற்குள் உத்தியோகம் பார்க்கும், அகில இந்திய, மாகாண உத்தியோகஸ்தர்களைக் கண்காணித்தல்.
(48) மேலே குறிக்கப்படாத இதர மாகாண வரிகள்.
(49) மாகாண ஈட்டின்மேல் கடன் வாங்குவது.
(50) மாகாணச் சட்டங்களை மீறுவோரைத்தண்டித்தல்
(51) கவர்னர் ஜெனரலால் மாகாண துரைத்தனங்களுக்குத் தள்ளப்படும் இலாகாக்கள்.

மேலே குறிக்கப்பட்ட மாகாண இலாகாக்களில் மந்திரிகளின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளவைகள்.

(1) ஸ்தல சுய ஆட்சி—முனிஸிபல் சபைகள், ஜில்லா போர்டுகள், அபிவிருத்தி இலாகா.
(2) வைத்திய இலாகா—ஆஸ்பத்திரி முதலியவை.
(3) சுகாதாரம், ஆரோக்கியம், ஜனனமரணக் கணக்குகள் முதலியவை.
(4) பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் புண்யஸ்தல யாத்திரை.

(5) பொதுக்கல்வி (ஐரோப்பா தேசத்தார், இந்தியாவில் குடியேறியுள்ள ஐரோப்பியர்கள் ஆகியோரது கல்வி நீங்கலாக)
(6) பொது மராமத்து இலாகா.
(7) வியவசாயம்.
(8 கால்நடை வைத்திய இலாகா.
(9) மச்ச இலாகா.
(10) ஐக்கிய சங்கங்கள்
(11) காடுகள்.
(12) கலால் இலாகா.
(13) பத்திரப் பதிவு இலாகா.
(14) ஜனனம் மரணம் கல்யாணம் முதலியவற்றைப் பதிவு செய்யும் இலாகா.
(15) மத ஸ்தாபனங்கள், தர்ம ஸ்தாபனங்கள்.
(16) கைத்தொழில் அபிவிருத்தி இலாகா.
(17) மாற்றப்பட்ட இலாகாக்களுக்கு காகிதம் முதலிய அவசியமான எழுது கருவிகள்.
(18) உணவுப் பொருள்கள் முதலியவற்றோடு கெடுதலான வஸ்துக்களைச் சேர்த்து விற்பனை செய்தலைத்தடுப்பது முதலியவை.
(19) நிறைகள் படிகள் முதலிய அளவுகள்.
(20) புஸ்தக சாலைகள், காட்சி சாலைகள் முதலியவைகள்.
(21) சூதாட்டம், ஜீவஹிம்ஸை நிவாரணம், ஸினிமா, நாடகச் சாலைகளின் நிர்வாகம் முதலியவை.
(22) கால்நடைப் பட்டிகள் முதலியவை.

Printed at the Noble Press, Triplicane, Madras.

வடூவூர். கே. துரைஸாமி ஐயங்காரவர்கள் பி. ஏ., யால் எழுதப்பட்ட நாவல்கள்

		ரூ.	அ.
கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பரசாமியார்	1-வது பாகம்	1	8
	2-வது பாகம்	1	8
மாயாவிநோதப்பரதேசி அல்லது திகம்பரசாமியார்	3-வது பாகம்	2	8
	4-வது பாகம்	2	8
திகம்பரசாமியார் பால்யலீலை	1-வது பாகம்	2	8
	2-வது பாகம்	2	8
மதன கல்யாணி	1-வது பாகம்	1	8
	2-வது பாகம்	1	8
	3-வது பாகம்	1	8
பூர்ண சந்திரோதயம்	1-வது பாகம்	1	12
	2-வது பாகம்	1	12
	3-வது பாகம்	2	0
	4-வது பாகம்	2	0
மேனகா	1-வது பாகம்	1	8
	2-வது பாகம்	1	8
விலாஸவதி	1-வது பாகம்	1	8
	2-வது பாகம்	1	8
பாலாமணி		2	8
சௌந்தர கோகிலம்	1-வது பாகம்	1	8
	2-வது பாகம்	2	4
	3-வது பாகம்	2	4
வஸந்த மல்லிகா		1	8
வித்தியாசாகரி		1	4
திலோத்தமா		0	12
மாணிக்க வாசகர்		0	8
திவான் லொடபடசிங் பகதூர்		0	12
காளிங்கராயன் கோட்டை ரகசியம்	1-வது பாகம்	2	0
	2-வது பாகம்	2	0
கனகாம்புஜம் 1,2-பாகம்		2	12
வஸந்தகோகிலம்		1	0
மாயசுந்தரி		0	12

12/11/60

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

கே. விஜயம் கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

னர் தங்களுடைய உச்சஸ்தானத்திலிருந்து கீழிறங்கி ஜனப் பிரதிநிதிகள் கூறுவதைக் கேட்கவேண்டியதுதான். பி/2ரான்ஸ், இற்றுலி, கனடா முதலான இடங்களில் மேல் சபைக்கு எவ்வித மதிப்பும் கிடையாது. ஆனால அமெரிக்காவில் இருக்கும் ஸெனட் என்ற மேல்சபைக்கு சில விசேஷ உரிமைகள் உண்டு. முன்கூறியபடி அமெரிக்காவானது ஐக்கிய அரசாங்கமானதால் மாகாண அரசாங்கங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவே மேல் சபை அங்கு தனிவிதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் அது வெகு நாளைய ஸ்தாபனமாதலால் சிறிது மதிப்பையும் பெற்றிருக்கிறது. ஆனால் இங்கிலந்திலோ மேல் சபைக்குச் சிறிதும் அதிகாரம் கிடையாது. லார்ஃஸ் சபையில் ஒரு ஜனப்பிரதிநிதியாவது கிடையாது. பரம்பரையாக ஸ்தானம் வகிக்கும் சீமான்களும் சில நியமனமான அங்கத்தினருமே அதில் இருக்கின்றனர், ஜனப்பிரதிநிதிகளடங்கிய காமன்ஸ் சபையினர் தீர்மானிக்கும் விஷயத்தை எதிர்ப்பதற்கும் நிராகரிப்பதற்கும் அவர்களுக்கு என்ன உரிமை உண்டு? காமன்ஸ் சபைக்கும் லார்ஃஸ் சபைக்கும அபிப்பிராய பேத மேற்பட்டால் சிறிது காலம் சச்சரவிட்டபின் லார்ஃஸ் சபையினரே முன் வைத்த காலைப் பின்னுக் கிழுத்துக் கொள்ள வேண்டும். அங்ஙனம் அவர்கள் செய்யாதிருந்து, காமன்ஸ் சபையினரும் தேச ஜனங்களால் நல்லஆதரவளிக்கப்பட்டால், உடனே அரசன் ஜனங்களுடைய உதவிக்கு வரவேண்டும். லார்ஃஸ் சபைக்குப் புதிய அங்கத்தினர்களை நியமித்தோ அல்லது நியமிப்பதாக அச்சுறுத்தியோ அச்சபையினது பலவந்தமான அங்கீகாரத்தையும் பெற்றுவிடலாம். இங்ஙனம் சச்சரவிடப்படும் விஷயம் மிக முக்கியமானதாக இருந்தால் காமன்ஸ் சபையைக் கலைத்துவிட்டுப்